தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அண்ணாமலை, திரு. எஸ்.	ஆலந்தூர்
2.	அபரஞ்சி, திரு. பெ.	அரூர் (செ.வ)
3.	அபுல்ஹசன், திரு.எம்.எம்.எஸ்	மயிலாடுதுறை
4.	அப்பு நடேசன், திரு. இரா.	திருவட்டாறு
5.	அமர்நாத், திரு. ஓ.எஸ்.	மதுரை கிழக்கு
6.	அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு.	கன்னியாகுமரி
7.	அரங்கநாதன், திரு. ஆர்.டி.	விருத்தாசலம்
8.	அரங்கநாயகம், டாக்டர் செ.	தொண்டாமுத்தூர்
9.	அர்ச்சுனன், திரு. க.	வீரபாண்டி
10.	அழகிரி, திரு. ச.	சிதம்பரம்
11.	அழகு திருநாவுக்கரசு, திரு.	ஒரத்தநாடு
12.	அறிவழகன், திரு. ஆ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
13.	அன்பழகன், திரு. எஸ்.	நாமக்கல் (செ.வ.)
14.	ஆசைமணி, திரு. எஸ்.	குத்தாலம்
15.	ஆண்டி அம்பலம், திரு. எம்.	நத்தம்
16.	ஆண்டித் தேவர், திரு. எஸ்.	திருப்பரங்குன்றம்
17.	ஆரோக்கியசாமி, டாக்டர் ச.	திருச்சிராப்பள்ளி-1
18.	ஆறுமுகம், திரு. செ.	வானூர் (செ.வ.)
19.	ஆனந்தன், திரு. எம்.	உளுந்தூர்பேட்டை (செ.வ.)

20.	இந்திரகுமாரி, திருமதி இரா. ..	நாட்ராம்பள்ளி
21.	இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ...	மேலூர்
22.	இராசாராமன், திரு. சோ. ..	பாபநாசம்
23.	இராசாராம், திரு. க. ..	பனமரத்துப்பட்டி
24.	இராதாகிருஷ்ணன், திரு. த. க. ..	திருமங்கலம்
25.	இராமகிருஷ்ணன், டாக்டர் இ. ..	அச்சரப்பாக்கம் (செ.வ)
26.	இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். ..	திருவாடனை
27.	இராமசுவாமி, திரு. சி. ..	சங்கராபுரம்
28.	இராமச்சந்திரன், திரு ஓ. ஆர். ..	கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ..	சாத்தூர்
30.	இராமச்சந்திரன், திரு. ச. ..	பண்ருட்டி
31.	இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. ..	இளையாங்குடி
32.	இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர்.	செஞ்சி
33.	இராமநாதன், திரு. இராம. ..	கும்பகோணம்
34.	இராம வீரப்பன், திரு. ..	காங்கேயம்
35.	இராஜமன்னார், திரு. சூ. சே. ..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
36.	இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. ..	திருத்தணி
37.	இராஜேந்திரன், திரு. பி. வி. ..	வேதாரண்யம்
38.	இலதா பிரியகுமார், திருமதி ..	அரக்கோணம் (செ.வ.)
39.	இளம்வழுதி, திரு. ..	எழும்பூர் (செ.வ.)
40.	ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. ..	தாராபுரம் (செ.வ.)
41.	ஈஸ்வரன், திரு. ஆர். ..	வாசுதேவநல்லூர் (செ.வ.)
42.	ஏகாம்பர ரெட்டி, திரு. எ. ..	பள்ளிப்பட்டு
43.	கண்ணப்பன், திரு. எஸ். ..	திருப்பத்தூர்

44. கண்ணன், திரு. வே. .. திருவண்ணாமலை
45. கந்தசாமி, திரு. கே. .. தலைவாசல் (செ.வ.)
46. கருப்புசாமி, டாக்டர் எம். .. குன்னூர் (செ.வ.)
47. கலியபெருமாள், திரு. ப. .. திருவையாறு
48. கலைச்செல்வி, திருமதி கே.எம். .. காட்பாடி
49. கவிநிலவு தர்மராஜ், திருமதி .. மொடக்குறிச்சி
50. கற்பகம் இளங்கோ, திருமதி .. காரைக்குடி
51. கனகவல்லி, திருமதி என். .. விளாத்திகுளம்
52. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. .. உத்திரமேரூர்
53. காந்திராஜன், திரு. ச. .. வேடசந்தூர்
54. காளன், திரு. கோ. .. வில்லிவாக்கம்
55. காளிராஜன், டாக்டர் மு. .. சமயநல்லூர் (செ.வ.)
56. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. .. ஆயிரம் விளக்கு
57. கிருஷ்ணன், திரு. எஸ்.எம். .. தாம்பரம்
58. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஸ்ரீரங்கம்
59. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
60. குப்பன், திரு. க. .. திருவொற்றியூர்
61. குமரி அனந்தன், திரு. .. சாத்தான்குளம்
62. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
63. குழந்தைவேலு, திரு. சி. .. குளத்தூர் (செ.வ.)
64. கோடிமாரி, திரு. ஆர். .. நாகப்பட்டினம்
65. கோபாலகிருஷ்ணன், திரு. வே. .. சங்கரநயினார் கோவில் (செ.வ.)
66. கோபால், டாக்டர் க. .. நன்னிலம் (செ.வ.)
67. கோவிந்தராசு, திரு. மா. .. ரிஷிவந்தியம்

68. சக்குபாய், திருமதி ரா. .. கும்மிடிப்பூண்டி
69. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. திருவள்ளூர்
70. சஞ்சய் ராமசாமி, திரு. .. விருதுநகர்
71. சண்முகநாதன், திரு. எஸ். .. ஆலங்குடி
72. சண்முகம், திரு. எஸ்.வி. .. மதுரை மேற்கு
73. சத்தியமூர்த்தி, திரு. வ. .. கடலாடி
74. சந்திரசேகர், திரு. வி.பி. .. பொள்ளாச்சி
75. சம்பத், திரு. எ. .. வாணியம்பாடி
76. சரஸ்வதி, திருமதி அ.தி. .. சத்தியமங்கலம்
77. சரஸ்வதி, திருமதி ப. .. கபிலர்மலை
78. சரோஜா, டாக்டர் வெ. .. சங்கரி (செ.வ.)
79. சாத்தையா, திரு. தி. .. இராஜபாளையம் (செ.வ.)
80. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். முகையூர்
81. சிங்காரம், திரு. ஆர். .. பேராவூரணி
82. சிங்காரம், திரு. கே. .. மொரப்பூர்
83. சிங்கை கோவிந்தராசு, திரு. .. சிங்காநல்லூர்
84. சியாமளா, திருமதி ரெ. .. கோவில்பட்டி
85. சிவசுப்பிரமணியன், திரு. கு. .. குறிஞ்சிப்பாடி
86. சிவபதி, திரு. என். ஆர். .. தொட்டியம்
87. சின்னசாமி, திரு. கா. .. சேந்தமங்கலம் (ம.ப.)
88. சின்னசாமி, திரு. ம. .. கரூர்
89. சின்னசாமி, திரு. வி. கே. .. பவானிசாகர்
90. சின்னப்பன், திரு. கே. கே. .. ஜெயங்கொண்டம்
91. சீனியம்மாள், டாக்டர் மு. .. அவினாசி (செ.வ.)
92. சீனிவாசன், திரு. ஆ. கு. .. பெரணமல்லூர்
93. சீனிவாசன், திரு. கு. .. மன்னார்குடி

94. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

95. சுந்தரசாமி, திரு. எம். .. கலசப்பாக்கம்

96. சுந்தரதாஸ், திரு. மா. .. விளவன்கோடு

97. சுந்தரம், திரு. எம்.கே. .. தண்டராம்பட்டு

98. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. பரமக்குடி (செ.வ.)

99. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. .. திருப்பத்தூர்

100. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

101. சுப்பிரமணியம், திரு. வ. மு. .. மானாமதுரை (செ.வ.)

102. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

103. சுப்புரத்தினம், திரு. அ. .. பழனி (செ.வ.)

104. சுலோசனா, செல்வி எல். .. மேட்டுப்பாளையம்

105. சுவாமிநாதன், திரு. சி. .. புதுக்கோட்டை

106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. கோபிசெட்டிபாளையம்

107. செல்லக்குமார், டாக்டர் அ. .. அண்ணா நகர்

108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. ஒட்டன்சத்திரம்

109. செல்லதுரை, திரு. அ. .. திருச்செந்தூர்

110. செல்வகணபதி, திரு. டி. எம். .. திருச்செங்கோடு

111. செல்வராசன், திரு. அ. .. துறைமுகம்

112. செல்வராஜ், திரு. கே. .. கோயம்புத்தூர் மேற்கு

113. செழியன், திரு. தா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. சேகர், டாக்டர் எம்.பி. .. பெரம்பூர் (செ.வ.)

115. சேகர், திரு. எம். ஜி. .. பாலக்கோடு

116. சொக்கலிங்கம், திரு. பி. .. மதுராந்தகம்

117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. .. தஞ்சாவூர்

53/112–1c

118. ஞானசேகரன், திரு. சி.	..	வேலூர்
119. டேனியல்ராஜ், திரு. எஸ்.	..	ஸ்ரீவைகுண்டம்
120. தங்கமுத்து, திரு. கு.	..	திருவோணம்
121. தங்கராஜ், திரு. ஆர்.	..	ஆண்டிமடம்
122. தங்கவேல், திரு. எம்.	..	முசிறி
123. தண்டாயுதபாணி, திரு. வி.	..	குடியாத்தம்
124. தமிழரசன், திரு. செ. கு.	..	வந்தவாசி (செ.வ.)
125. தமிழரசு, திரு. வெ.	..	ஆத்தூர்
126. தம்புசாமி, திரு. வே.	..	திருவாரூர் (செ.வ.)
127. தருமலிங்கம், திரு. கி.	..	அணைக்கட்டு
128. தர்மலிங்கம், திரு. பே.	..	பாளையங்கோட்டை
129. தவசி, திரு. கே.	..	ஆண்டிப்பட்டி
130. தனபால், திரு. ம.	..	திருப்போரூர் (செ.வ.)
131. தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிப்புத்தூர்
132. தாமோதரன், திரு. எம். சி.	..	நெல்லிக்குப்பம்
133. திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
134. துரை, திரு. எஸ். எம்.	..	ஆத்தூர்
135. துரைமுருகன், திரு. கே .எஸ்.	..	பல்லடம்
136. துரை ராமசாமி, திரு.	..	வெள்ளக்கோவில்
137. தெய்வநாயகம், திரு. எ.	..	மதுரை மத்தி
138. தென்னவன், திரு. மு.	..	இராமநாதபுரம்
139. தேவராஜ், திரு அ.	..	செய்யாறு
140. தேனி பன்னீர்செல்வம், திரு.	..	போடிநாயக்கனூர்
141. நடேசன், திரு. மு.	..	சேலம்-2
142. நடேசன் .பால்ராஜ், திரு. வெ.	..	நாங்குநேரி

143. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்
144. நிர்மலா, திருமதி பி. .. திண்டுக்கல்
145. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. தேனி
146. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ.வ.)
147. பட்டாபிராமன், திரு. கா.ப. .. காஞ்சிபுரம்
148. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
149. பரமசிவம், திரு. ஆர் .பி. .. சின்னசேலம்
150. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்
151. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்
152. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்
153. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி
154. பழனிசாமி, திரு. நா. சா. .. கிணத்துக்கடவு
155. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்
156. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
157. பழனியம்மாள், திருமதி க. .. ராசிபுரம்
158. பன்னீர்செல்வம் திரு. என். .. திருவிடைமருதூர்
159. பன்னீர்செல்வம், திரு. சா. .. திண்டிவனம்
160. பன்னீர்செல்வம், திரு. ஜெ. .. திருநாவலூர்
161. பாண்டியம்மாள், திருமதி இரா. .. உசிலம்பட்டி
162. பாப்பா சுந்தரம் திரு. அ. .. குளித்தலை
163. பாலகங்காதரன், திரு. ஜெ. .. சிவகாசி
164. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
165. பாலசுப்பிரமணியன், திரு. கி. .. பட்டுக்கோட்டை
166. பாலசுப்பிரமணியன், திரு. வெ. .. மயிலாப்பூர்

167.	பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். ..	பொங்கலூர்
168.	பாலன், திரு. எம். கே. ..	சைதாப்பேட்டை
169.	பாலையா, திரு. ஆ. ..	குளச்சல்
170.	பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ்.	தென்காசி
171.	புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. ..	சேரன்மகாதேவி
172.	புரட்சிமணி, திரு. ச. ..	மங்களூர் (செ.வ.)
173.	புருஷோத்தமன், டாக்டர் ஆ. வெ.	பெண்ணகரம்
174.	பூராசாமி, திரு. எம். ..	பூம்புகார்
175.	பெரியசாமி, திரு. ப. ..	பெருந்துறை
176.	பெரியசாமி, திரு. வே. ..	அந்தியூர் (செ.வ.)
177.	பெரியவீரன், திரு. எம். ..	பெரியகுளம்
178.	பெருமாள், திரு. செ. ..	ஏற்காடு(ம.ப.)
179.	பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.	நிலக்கோட்டை (செ.வ.)
180.	பொன்னுசாமி, பேராசிரியர் க. ..	மருங்காபுரி
181.	பொன்னுசாமி, திரு. பெ. ..	தருமபுரி
182.	பொன்னுவேலு, திரு. ஏ.தா. ..	வரகூர் (செ.வ.)
183.	போளூர் வரதன், திரு. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
184.	மணிமேகலை, டாக்டர் சு. ..	அரியலூர்
185.	மணிமேகலை, திருமதி வி.ஜி. ..	அருப்புக்கோட்டை
186.	மணிவாசகம், திரு. கே.பி. ..	உடுமலைப்பேட்டை
187.	மதுசூதனன், திரு. இ. ..	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
188.	மரியம் உல் ஆசியா, திருமதி கே. ..	அரவக்குறிச்சி

189. மல்லிகா, செல்வி கோ.	..	புவனகிரி
190. மனோகரன், திரு. கே. ஏ.	..	ஓசூர்
191. மாணிக்கம், திரு. சி.	..	ஈரோடு
192. மாலா, டாக்டர் ஜி. ஆர்.	..	திருச்சிராப்பள்ளி-2
193. முத்துசாமி, திரு. சு.	..	பவானி
194. முத்தையா, திரு. இரா.	..	சேடப்பட்டி
195. முருகானந்தம், திரு. கே. ஆர்.	..	சிவகங்கை
196. முருகையா பாண்டியன், திரு. ஆர்.		அம்பாசமுத்திரம்
197. முனிரத்தினம், திரு. ஏ. எம்.	..	சோளிங்கர்
198. முனிவெங்கடப்பன், திரு. கே.	..	கிருஷ்ணகிரி
199. முனுசாமி, திரு. கா. பூ.	..	காவேரிப்பட்டினம்
200. முஹமது ஆசிப், திரு.	..	திருவல்லிக்கேணி
201. மூர்த்தி, திரு. து.	..	சீர்காழி (செ.வ.)
202. மோகனன், திரு. கோவி .எஸ்.	..	இராணிப்பேட்டை
203. மோசஸ், டாக்டர் எம்.	..	நாகர்கோவில்
204. ரகுபதி, திரு. சே.	..	திருமயம்
205. ரங்கநாதன், திரு. ப.	..	புரசைவாக்கம்
206. ரத்தினவேல், திரு. த.	..	திருவெறும்பூர்
207. ரமணி நல்லதம்பி, திருமதி	..	ராதாபுரம்
208. ரமேஷ், திரு. வி. பி. ஆர்.	..	தூத்துக்குடி
209. ரவிக்குமார், திரு. ஏ.	..	பொன்னேரி (செ.வ.)
210. ரவிச்சந்திரன், திரு. வி.	..	உப்பிலியாபுரம் (ம.ப.)
211. ராமசுப்பு, திரு. எஸ் .எஸ்.	-	ஆலங்குளம்
212. ராஜு, திரு. எச். எம்.	..	உதகமண்டலம்

213. ராஜு, திரு. கே. ஆர்.	..	கூடலூர்
214. ராஜு, திரு. கே .பி	..	பேரூர்
215. ராஜேந்திரன், திரு. என். ஆர்.	..	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
216. லட்சுமணன், திரு. வி. கே.	..	கோயம்புத்தூர் கிழக்கு
217. லாரன்ஸ், திரு. கு.	..	பத்மநாபபுரம்
218. லோகாம்பாள், திருமதி ஜெ.	..	லால்குடி
219. வரதராஜன், திரு. செ. து.	..	செங்கல்பட்டு
220. விசுவநாதன், திரு. ஜி.	..	ஆற்காடு
221. வீரபாண்டியன், டாக்டர் பெ.	..	செங்கம் (செ.வ.)
222. வெங்கடராம ரெட்டி, திரு. மு.	..	தளி
223. வெங்கடேசன், திரு. பி. ஆர் .எஸ்.	..	கடலூர்
224. வேடியப்பன், திரு. தா.	..	போளூர்
225. வேலையா, திரு. டி.	..	திருநெல்வேலி
226. ஜனார்தனன், திரு. தே.	..	விழுப்புரம்
227. ஜானகிராமன், திரு. கோ.	..	மேல்மலையனூர்
228. ஜீனத் சர்புதீன், திருமதி	..	சேப்பாக்கம்
229. ஜெயகுமார், திரு. டி.	..	ராயபுரம்
230. ஜெயக்குமார், திரு. எஸ்.	..	தியாகராயநகர்
231. ஜெயராமன், திரு. எஸ். ஆர்.	..	சேலம்-1
232. ஜெயலலிதா, டாக்டர் ஜெ.	..	பர்கூர்
233. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்	..	ஆரணி
234. ஸ்ரீதரன், டாக்டர் அ.	..	வால்பாறை (செ.வ.)
235. பிட்ரிக்ஸ் டி' சோசா, டாக்டர்	..	நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர்.	..	தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 6, யுவ – திருவள்ளுவர் ஆண்டு 2026

1995 ஏப்ரல் 19, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது”

பொறாமை உடையவர்களுக்கு வேறு பகையே வேண்டாம். ஏனெனில், அவர்களுக்கு கேடு பயப்பதற்கு அவர்தம் பொறாமை ஒன்றே போதுமானது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 341, திரு. தா. வேடியப்பன், இருக்கையில் இல்லை.

வினா எண் 342, டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

342—

பரமக்குடியில் விருந்தினர் இல்லம் கட்டுதல்

***35497—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி வட்ட அலுவலகத்தில் விருந்தினர் இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டு, மக்களை மதிக்கின்ற அதிகாரிகளை மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஊக்குவித்து, மக்களுக்காக செயல்படுகின்ற அதிகாரிகளுக்கு பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து வந்துள்ளதை, மக்கள் மனதாரப் பாராட்டுகிற இந்த வேளையில், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், அதிகாரிகள் வந்து தங்குகின்ற வகையில் பரமக்குடி வட்ட அலுவலகத்தில், விருந்தினர் இல்லம் கட்ட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், வட்டாட்சியர் அவர்களும் அரசுக்கு பரிந்துரை செய்து, அது பொதுப் பணித்துறை மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே ஒரு விருந்தினர் இல்லம் கட்ட முன்னுரிமை அளித்து, கட்ட முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் விருந்தினர் மாளிகை கட்டவேண்டும் என்றும், எந்தெந்த விருந்தினர் மாளிகைகள் யார் யாருடைய மேற்பார்வையில் இருக்கவேண்டும் என்றும் விதிமுறைகள் இருக்கின்றன. அப்படி விதிமுறைகள் இருக்கிறபோது, சில விருந்தினர் மாளிகைகள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய மேற்பார்வையில் இருக்கின்றன. சில விருந்தினர் மாளிகைகள் பொதுப்பணித்துறையினுடைய மேற்பார்வையில் இருக்கின்றன. அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, விருந்தினர் மாளிகையினுடைய தகுதிக்கு ஏற்றவாறு, சில விருந்தினர் மாளிகைகள் நெடுஞ்சாலைத் துறையினுடைய மேற்பார்வையில் இருக்கின்றன. எல்லா விருந்தினர் மாளிகையும் நேரடியாக அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது. தேவையான இடங்களில் விருந்தினர் மாளிகைகள் கட்டப்படும். விருந்தினர் மாளிகைகள் அலுவலகங்களுக்கு அருகாமையில் கட்டவேண்டும் என்பது அல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆனாலும் சரி, கோட்ட வருவாய்த்துறை அதிகாரி அலுவலகம் ஆனாலும் சரி, கோட்ட வளர்ச்சித் துறை அலுவலகம் ஆனாலும் சரி, அதேபோன்று வருவாய்த் துறையினுடைய வட்ட வருவாய்த்துறை அலுவலகம் ஆனாலும் சரி, பொதுப்பணித் துறையானாலும் சரி, அலுவலகங்களுக்கு அருகாமையில் கட்ட வேண்டும் என்பது அல்ல. இருக்கிற விருந்தினர் மாளிகைகள் யாருடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, அரசினுடைய அதிகாரிகள் யார் வேண்டுமானாலும் அங்கே போகிறபோது அவர்களுடைய

1995 ஏப்ரல் 19]

தகுதிக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தங்குவதற்கு விருந்தினர் மாளிகை அளிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற, புதுப்புது திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், பரமக்குடி நகரம் மாவட்டத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும், தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் அமைந்திருப்பதாலும், பல்வேறு அதிகாரிகள் அங்கே வருகிறபோது — அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித் துறையினுடைய விருந்தினர் இல்லங்கள் கொடுக்கப்பட்டு விடுவதால் — அதிகாரிகள் மிகவும் அல்லல்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இன்றையதினம் புதுப்புது திட்டங்களை வகுத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புதுத் திட்டமாக, கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் அருகாமையில், அதிகாரிகள் தங்குவதற்காக தங்கும் விடுதிகள் – விருந்தினர் இல்லங்கள் – அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லாமல் இருந்தால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும். விருந்தினர் மாளிகைகள் கட்டியிருக்கிறபோது, அது பொதுப்பணித்துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, அது எல்லோருக்கும், எல்லா அதிகாரிகளுக்கும் சொந்தம். அவை இந்தந்தத் துறைகளுக்கு என்று அல்ல. எனவே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லை என்றால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 343, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343—

மனநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்

***21483—**திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது மனநோய் மருத்துவமனைகளில் நோயாளிகளை அனுமதிக்கப்படுவதில் சில வரைமுறைகளை வைத்திருப்பதைத் தவிர்த்து சிகிச்சை பெற விரும்புபவர்களுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்கப்படுமா?

தகுதிக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தங்குவதற்கு விருந்தினர் மாளிகை அளிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற, புதுப்புது திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், பரமக்குடி நகரம் மாவட்டத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும், தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் அமைந்திருப்பதாலும், பல்வேறு அதிகாரிகள் அங்கே வருகிறபோது — அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித் துறையினுடைய விருந்தினர் இல்லங்கள் கொடுக்கப்பட்டு விடுவதால் — அதிகாரிகள் மிகவும் அல்லல்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இன்றையதினம் புதுப்புது திட்டங்களை வகுத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புதுத் திட்டமாக, கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் அருகாமையில், அதிகாரிகள் தங்குவதற்காக தங்கும் விடுதிகள் — விருந்தினர் இல்லங்கள் — அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லாமல் இருந்தால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும். விருந்தினர் மாளிகைகள் கட்டியிருக்கிறபோது, அது பொதுப்பணித்துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, அது எல்லோருக்கும், எல்லா அதிகாரிகளுக்கும் சொந்தம். அவை இந்தந்தத் துறைகளுக்கு என்று அல்ல. எனவே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லை என்றால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 343, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343—

மனநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்

***21483—**திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது மனநோய் மருத்துவமனைகளில் நோயாளிகளை அனுமதிக்கப்படுவதில் சில வரைமுறைகளை வைத்திருப்பதைத் தவிர்த்து சிகிச்சை பெற விரும்புபவர்களுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்கப்படுமா?

(ஆ) காவல் துறையினர், சில குறிப்பிட்ட மனநோயாளியால் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்று கருதி, மனநோயாளர் சட்டத்தின் கீழ் (Lunatic Act) வழக்கு பதிவு செய்து கோர்ட் மூலம் அனுப்பப்படுகிற மனநோயாளிகளை மட்டும்தான் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை. எல்லா மன நோயாளிகளுக்கும் மற்ற பொது மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிப்பது போல் மனநோய் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முற்பகல் 10.05

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நோயாளிகளுக்கும் மருத்துவம் அளிப்பது என்பது வேறு. ஆனால் இந்த மன நோயாளிகளுக்கு மருத்துவம் அளிப்பது என்பது வேறு இப்போது உடனடியாக அந்த மன நோயாளிகளை ஒரு முறையோ அல்லது இரு முறையோ டிரீட்மெண்ட் செய்வதன் மூலமாக அவர்களுக்கு மன நோய் தீர்ந்து விடுவதில்லை. அப்படிப்பட்ட நோயாளிகளை வீட்டிலே கொண்டுபோய் வைத்திருப்பதோடு அவர்களுக்கு பாதுகாப்பிற்கு ஒருவரையோ அல்லது இருவரையோ நியமிக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வீட்டிலே அவர்களை வைத்துக்கொண்டிருப்பது, சமுதாயத்திலே அப்படிப்பட்ட நோயாளிகளை வீட்டிலே வைத்துக் கொண்டிருப்பது, சங்கடமான ஒரு சூழ்நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நோயாளிகளை தெருவிலே விட்டுவிடுகிற நிலைமையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பொதுமக்கள் கல்லை எடுத்து அடிப்பது போன்ற நிலைமைகளினால் காவல்துறையும் இந்த மாதிரி டேஞ்ஜரஸ் மன நோயாளிகளைத்தான் அவர்கள் வழக்கு பதிவு செய்து அரசு மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். எல்லா மன நோயாளிகளையும் கொண்டுபோன உடனே அவர்கள் அனுமதிப்பதில்லை. எனவே இதை ஒரு சமூகப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, மன நோயாளிகள் யாரை வேண்டுமானாலும் கொண்டுபோய் டிரீட்மென்டிற்கு அட்மிட் பண்ணும்போது மருத்துவமனையில் அனுமதித்து, அவர்கள் விரும்புகிற வரை அந்த மருத்துவமனையிலேயே அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட வேண்டிய அளவிற்கு மன நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். யாராவது அவர்களை அழைத்து வரவேண்டும். அவர்களுடைய குடும்பத்திலே இருக்கக் கூடியவர்களோ, அல்லது உறவினர்களோ யாராவது அந்த மன நோயாளியை அழைத்து வந்தால் எந்தத் தடையும் இல்லாமல் உள் நோயாளியாக சேர்த்துக் கொள்கிறார்கள். ஒருவேளை அவர்களுக்கு அப்படி உறவினர்களோ, வேண்டப்பட்டவர்களோ இல்லாமல் வீதிகளிலே திரிகின்றவர்களாக இருந்தால் நீதிமன்றத்தின் மூலமாகவோ அல்லது காவல்துறையின் மூலமாகவோ அழைத்து வரப்படுகின்றபோது அவர்களையும், தேவைப்பட்டால், அவசியம் இருந்தால் உள் நோயாளிகளாக சேர்த்துக்கொள்கிறார்கள். குடும்பத்திலே இருப்பவர்கள் விரும்பினால் புற நோயாளிகளாக வைத்து இப்போது டிரீட்மென்ட் கொடுக்கப்படுகிறது. எனவே அந்த வகையிலேதான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே காவல்துறை மூலமாகவோ, நீதிமன்றத்தின் மூலமாகவோ வந்தால், உள் நோயாளிகளாக இப்போது அனுமதிக்கப்பட்டு வருகிறது.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய முறை முழுமையாக பின்பற்றப்படாத காரணத்தால்தானோ, என்னவோ தற்போது கூட தெருக்களிலே இந்த மன நோயாளிகள் உலாவி வருவதைப் பார்க்கிறோம். எனவே இதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடித்து இப்படிப்பட்ட மன நோயாளிகளை மருத்துவமனையிலே அனுமதித்து, அவர்கள் முழு சிகிச்சை பெறுகின்ற வரையில், அவர்களை டிஸ்சார்ஜ் செய்யாமல் அங்கேயே வைத்து பாதுகாக்கப்படுவார்களா? சில ஏழை எளியவர்கள் வந்து கீழ்பாக்கம் மருத்துவமனையில் கொண்டுவந்து விடுகிறார்கள். அவர்கள் சற்று குணமடைந்த உடனே அந்தப் பெற்றோருக்குக் கடிதம் வருகிறது, வந்து அழைத்துக்கொண்டு போய்விடுங்கள் என்று சொல்லி. திரும்ப அழைத்துக்கொண்டு போய் அந்த டிரீட்மெண்டை தொடராத சூழ்நிலையில் மீண்டும் அந்த மன நோய் வந்துவிடுகிறது. அதற்குப் பிறகு இப்படி தொடர்ந்து சில ஏழைகளால் அவர்களைப் பராமரிக்க முடியாத சூழ்நிலை எல்லாம் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பெற்றோர்கள் விரும்பவில்லை என்று சொன்னால், அந்த மன நோயாளிகளை அங்கேயே, அந்த மருத்துவமனையிலேயே வைத்துக் கொள்வதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயாளியாக இருக்கிற வரையில்தான் மருத்துவமனையில் வைத்துக் கொள்ளமுடியும். அதற்குப் பிறகு அவர்கள் குணமடைந்த பிறகு, மருத்துவமனையிலே அவர்களை வைத்துக்கொள்வது இயலாத காரியம். இப்போதுகூட பல நோயாளிகள் நார்மலான சூழ்நிலைக்கு வந்த பின்னாலே,

அவர்கள் வெளியிலே போகவேண்டுமென்று கருதுகிறார்கள், கேட்கிறார்கள். அதோடு, பெற்றோர்களுக்கோ, மற்றவர்களுக்கோ, உறவினர்களுக்கோ தெரிவிக்கவேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். சில நேரங்களில் அப்படி தெரிவிக்கப்பட்டால்கூட அவர்கள் வராமலேகூட போய்விடுகிறார்கள் அல்லது சேர்க்கிறபோதே தவறான விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் இப்போதே அந்த மருத்துவமனை சந்தித்துக் கொண்டிருக்கிறது. பல நேரங்களிலே கொண்டுவந்து சேர்க்கிறபோது ஒரு விலாசத்தைக் கொடுக்கிறார்கள். அதற்குப் பின்னாலே தேடிப் போனாலும், ஆளை அனுப்பினாலும், கடிதம் போட்டாலும் அங்கேயிருந்து எந்த ரெஸ்பான்சும் இருப்பதில்லை. அப்படிப்பட்ட நோயாளிகள்கூட அந்த மருத்துவமனையில் இப்போது இருந்துகொண்டிருக்கிறார்கள். ஓரளவிற்கு நிலைமை சீரடைந்துவிட்டால் அவர்கள் அந்த மருத்துவச் சிகிச்சை பெற்று, குணமாகிவிட்டால், அதற்குப் பின்னால் பெற்றோர்களோ அல்லது உறவினர்களோ கொண்டுபோய் பராமரிப்பதுதான் சிறப்பாக இருக்கும். தொடர்ந்து நாமே வைத்துக்கொண்டிருப்பது அவ்வளவு சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இது எல்லாம் வேண்டாம். மனநோயாளிகளைப் பற்றிக் கேளுங்கள். ** என்றெல்லாம் வேண்டாம். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சி. இராமசுவாமி: ** என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் யாரைக் குறிப்பிடுகிறார், எப்படிக் குறிப்பிடுகிறார் என்று தெரியாது உங்களுக்கும். பதில் வேண்டாம். உட்காருங்கள். திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, அதற்கு பதில் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். இது அதை விட மோசமாக இருக்கிறது. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநோயாளி யார் என்பது நாட்டுக்கு தெரியும். அதேநேரத்தில் மன நோயாளி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்றவுடன் அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய் எப்ஐஆர். போட்டு கோர்ட்டிலே புரொட்டியூஸ் செய்து அதன் பிறகு கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கோ மற்ற ஆஸ்பத்திரிக்கோ அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஒருவர் மன நோயாளி என்றவுடன் பார்த்த உடனே நமக்கெல்லாம் தெரிகிறது. நன்றாகவே அவர் மன நோயாளிதான் என்று நமக்கே தெரிகிறது. அப்படி தெரிந்ததற்குப் பிறகு போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டிய நிலை, எப்ஐஆர். போட வேண்டிய நிலை. அவரை நேரடியாக டாக்டருக்கு அனுப்பி, ஹாஸ்பிடலில் அட்மிஷன் கொடுத்து டிரீட்மென்ட் செய்து அவரைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மனநோயாளி என்று தெரிந்தாலும் கூட அவரை மருத்துவ மனைக்கு அழைத்து வரக்கூடியவர்கள் யாராவது ஒருவர் அவரை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். காரணம், அதற்குப்பின்னாலே அவர் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொடுப்பதற்கோ அல்லது வேறு எதற்கோ அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவேதான் பெற்றோர்களோ உறவினர்களோ யாராவது வரவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுகிறது. இன்னொன்று அவருக்கு யாரும் உறவினர்கள் இல்லை என்ற நிலை வருகிறபொழுது காவல்துறை அதிகாரிகளிடத்திலே போய் எப்.ஐ.ஆர். போடப்பட்டால்தான் பின்னாலே அவர் ஏதாவது தவறு செய்தவர்களாக இருக்கலாம், வேறு ஏதாவது குற்றத்தைச் செய்துவிட்டு வந்தவர்களாக இருக்கலாம். இப்படிப்பட்ட தன்மைகள் இருக்கின்றன என்ற காரணத்தினால்தான் அனாதைகள் என்று சொல்லக்கூடியவர்கள் அல்லது அவர்களுக்கு யாரும் இல்லை என்ற நிலையிலே காவல் நிலையத்திலே போய் எப்.ஐ.ஆர். போட்டு வந்தால்தான் சரியாக இருக்கும். பின்னாலே வருகிற பிரச்சினைகளுக்கு ஒரு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு சுலபமாக இருக்கும் என்ற காரணத்தினால்தான் இந்த முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மருத்துவர்கள் ஒரு மனநோயாளிக்கு சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எத்தனை மருத்துவர்கள் சர்டிபிகேட் கொடுத்தாலும் கூட, இங்கே வந்து இந்த மருத்துவமனையில் பரிசீலிக்கிறபொழுது இது உண்மை என்று கண்டறியப்படுகிறபொழுதுதான் சேர்க்கப்படுகிறது. எனவே அதற்கான வழி முறைகள் இருக்கின்றன. அதற்காக பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைகளாக இருக்கும் மனநோயாளிகள் தெருவிலே ஆடை இல்லாமல் திரிவது அந்த நேரத்தில் பார்ப்பவர்களுக்கும் ஒரு அறுவறுப்பாக இருக்கிறது. எனவே அரசே அவர்களை பிடித்துச் சென்று அவர்களை ஒரு இல்லம் மூலமாக வைத்து அவர்களுக்கு போதிய சிகிச்சை அளிக்கவேண்டும் என்று கோருகிறேன். அத்தோடு அந்த சிகிச்சைக்கு அவர்கள் தெளியவில்லை என்றால் ஒரு கருணை கொர்லை என்று சொல்வார்களே அந்த வகையில் கருணை கொலை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக அவர் சொன்னது நிச்சயமாக அரசு செய்வதற்கு தயாராக இல்லை. இதுபோன்ற நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. ஆனால் அதேநேரத்தில் தெருவிலே அனாதையாக இருக்கக் கூடிய நோயாளிகள் பிடிக்கப்பட்டு இப்போது மருத்துவ மனைகளுக்கு கொண்டு வரப்படுகிறார்கள். மருத்துவமனையிலும் இந்த வேலை செய்யப்படுவது இல்லை. ஆனால் எங்கே இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கிறதோ அவர்கள் உடனடியாக காவல் துறையினரால் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். கடந்த காலத்தில் இருந்ததை விட நீங்கள் இப்பொழுது பார்த்தால் அப்படிப்பட்டவர்கள் தொந்தரவு கொடுக்கிற வகையிலே அவர்கள் வீதியிலே திரிவது என்ற நிலைமையைப் பார்க்க முடியாது. எனவே அவர்களை அழைத்து வந்து மருத்துவமனையிலே எவ்வளவு நாட்கள் சிகிச்சை தேவைப்படுகிறதோ அவ்வளவு நாட்கள் வைத்திருக்கிறார்கள். பலர் அந்த மருத்துவமனையிலேயே வயது ஆகி இறந்து விடுகிற சூழ்நிலைமையும் கூட ஏற்படுகிறது. பலபேர் நன்றாக குணம் ஆன பிறகும் கூட அங்கேயே வைத்திருக்கக் கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் அனேகமாக இந்தியாவிலேயே நம்முடைய இந்த மெண்டல் ஆஸ்பத்திரி தான் மிகச் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு மிகச் சிறப்பாக பராமரித்து வருகிறார்கள். சமீபத்திலே நான் அங்கே போயிருந்தபோது அங்கே இருக்கிற நோயாளிகளே எல்லா பணிகளையும் எடுத்து செய்வதற்கு முன்வந்து மருத்துவர்களோடு இருப்பதையெல்லாம் என்னால் பார்க்க முடிந்தது. எனவே, அந்த அளவுக்கு அது சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, எவ்வளவு நாள் அவர்கள் உயிரோடு இருந்தாலும் அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. வேறுவிதமான நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசாங்கம் எடுக்காது.

1995 ஏப்ரல் 19]

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் தொழுநோயாளிகளுக்கென சிகிச்சை அளித்து, அதற்கு சிகிச்சை முடிந்த பின்னர் அவர்களுக்கு காப்பகம் அமைத்து ரீஹேபிளிடேஷன் முறையில் அவர்களுக்கென்று தொழில் வழங்கி அவர்களை காத்துக் கொண்டிருப்பது போல் இந்த மன நோயாளிகளுக்கும் அவர்கள் இந்த சமுதாயத்திலே வந்தால் திருப்பி மறுவாழ்வு அடைய முடியாது என்கின்ற அடிப்படையில் இந்த அரசாங்கமே அவர்களுக்கு ஒரு காப்பகம் அமைத்து ரீஹேபிளிடேஷன் முறையில் தொழில் செய்வதன் மூலமாக ஒரு வாழ்வளிப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, மனநோயாளிகளாக வருகிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கப்பட்டு ஓரளவிற்கு தெளிவு பெற்றவர்கள் அவர்களுடைய பெற்றோர்களுடனோ, அல்லது உறவினர்களுடனோ போகிறார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் யாராவது ஒருவருடைய பாதுகாப்பிலே இருப்பது தான் சரியாக இருக்குமேயொழிய, தனியாக அவர்களுக்கு தொழிலைத் துவங்கிக் கொடுப்பதென்பது அவ்வளவு வெற்றிகரமாக இருக்குமா என்று நம்மால் கருதமுடியாது. எனவே, அப்படிப்பட்ட நிலைக்கு போகாமல் அந்த சிகிச்சை கொடுப்பதற்கு பொறுப்பு நாம் ஏற்கலாம். அதற்குப் பின்னாலே தொடர்ந்து அவர்களை கண்காணிப்பதற்கு வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அந்தக் குடும்பம் ஏற்றுக்கொள்வது நல்லது. ஒருவருமே இல்லாத அநாதைகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 344, திருமதி வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

344—

காரியாப்பட்டி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***35690—**திருமதி வி. ஜி. மணிமேகலை:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியத்தில் உள்ள மறைக்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 ஏப்ரல் 19]

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் தொழுநோயாளிகளுக்கென சிகிச்சை அளித்து, அதற்கு சிகிச்சை முடிந்த பின்னர் அவர்களுக்கு காப்பகம் அமைத்து ரீஹேபிளிடேஷன் முறையில் அவர்களுக்கென்று தொழில் வழங்கி அவர்களை காத்துக் கொண்டிருப்பது போல் இந்த மன நோயாளிகளுக்கும் அவர்கள் இந்த சமுதாயத்திலே வந்தால் திருப்பி மறுவாழ்வு அடைய முடியாது என்கின்ற அடிப்படையில் இந்த அரசாங்கமே அவர்களுக்கு ஒரு காப்பகம் அமைத்து ரீஹேபிளிடேஷன் முறையில் தொழில் செய்வதன் மூலமாக ஒரு வாழ்வளிப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, மனநோயாளிகளாக வருகிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கப்பட்டு ஓரளவிற்கு தெளிவு பெற்றவர்கள் அவர்களுடைய பெற்றோர்களுடனோ, அல்லது உறவினர்களுடனோ போகிறார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் யாராவது ஒருவருடைய பாதுகாப்பிலே இருப்பது தான் சரியாக இருக்குமேயொழிய, தனியாக அவர்களுக்கு தொழிலைத் துவங்கிக் கொடுப்பதென்பது அவ்வளவு வெற்றிகரமாக இருக்குமா என்று நம்மால் கருதமுடியாது. எனவே, அப்படிப்பட்ட நிலைக்கு போகாமல் அந்த சிகிச்சை கொடுப்பதற்கு பொறுப்பு நாம் ஏற்கலாம். அதற்குப் பின்னாலே தொடர்ந்து அவர்களை கண்காணிப்பதற்கு வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அந்தக் குடும்பம் ஏற்றுக்கொள்வது நல்லது. ஒருவருமே இல்லாத அநாதைகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 344, திருமதி வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

344—

காரியாப்பட்டி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***35690—**திருமதி வி. ஜி. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியத்தில் உள்ள மறைக்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவரின் குறளுக்கு எடுத்துக்காட்டாக இன்றைய தினம் 6½ கோடி தமிழக மக்களின் குல விளக்காக, கலங்கரை விளக்காக, விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியிலே, கற்பகத் தருவின் அடியிலே இருக்கக் கூடிய காகமும் அமுதுண்ணும், என்று விவேக சிந்தாமணியிலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறி விட்டார்கள். அப்படி கற்பகத் தருவினில் இருக்கக் கூடிய காகமும் அமுதுண்ணும் என்கின்ற நிலைமையில் இன்றைக்கு தமிழக ஆட்சியில் புரட்சித் தலைவியின் கீழ் பலபேர் பயன் அடைந்து இருக்கக் கூடிய அரசிலே எங்கள் அருப்புக்கோட்டை தொகுதியில் இருக்கக் கூடிய மக்கள் மிகவும் பாமர மக்கள், வசதி வாய்ப்புகள் இல்லாதவர்கள். அவர்களுக்கு எந்த இடத்திலும், மறைக்குளம் என்ற கிராமத்திலே கூட மருத்துவ வசதிகள் சிறிதும் இல்லை. கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரத்திலுள்ள நரிக்குடிக்கு செல்லவேண்டியிருக்கிறது. காரியாப்பட்டிக்குச் செல்லவேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு போக்குவரத்து வசதியும் அடிக்கடி கிடையாது. கட்டிலிலே தான் அவர்கள் உடல்நலம் அற்றவர்களை தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற அங்கு இருக்கக் கூடிய பலர் மருத்துவமனைகளை அமைப்பதற்குண்டான உதவிகளை செய்வதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நேரடியாக வந்தபோது, மனு கொடுத்து இருக்கின்றார்கள். நிலத்தையும் அங்கு இருக்கக் கூடியவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் என்னென்ன வசதி வேண்டுமென்றாலும் அரசுக்கு உதவுவதற்காக தயாராக இருக்கின்றார்கள். இந்த நிலைமையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இல்லை என்பதற்கு பதில் வேறு ஒரு வார்த்தையை தேடிக் கொடுத்தால் அதை வேண்டுமானால் நான் சொல்கிறேன். ஆனால், இப்போது இருக்கிற நிலை அங்கேயிருக்கிற மக்கள் தொகையின்

1995 ஏப்ரல் 19]

அடிப்படையிலே தான் எவ்வளவு மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களை கொடுப்பது என்பது முடிவெடுக்கப்பட்டு அந்த மக்கள் தொகையின் அடிப்படையிலே பார்க்கிறபொழுது ஏற்கனவே இரண்டு மருத்துவமனைகள் உங்களுக்கு இருக்கிற காரணத்தினால் கூடுதலாகக் கொடுக்கமுடியாது என்ற நிலை இருக்கிறது. ஆனால், நீங்கள் டிஸ்டென்சைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். நீண்டதூரமாக இருந்தால் அதைப்பற்றி அரசு தனியாக பரிசீலித்து முடிவெடுக்கும். இப்போது என்னால் உறுதியாக சொல்ல முடியாது. போக்குவரத்து வசதி பற்றி சொன்னார்கள். தனியாகப் போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கு ஒரு கேள்வியைப் போட்டால் உடனடியாக அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். எனவே, கட்டிடம் கட்டி உங்களுக்கு மருத்துவமனை கொண்டு வருவதற்கு கொஞ்சம் காலம் ஆகும். ஆனால், உடனடியாக ஒரு பஸ்ஸை அவர்களால் விட்டுவிட முடியும். அந்தப் பிரச்சினையை நீங்கள் தீர்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் காலம் கடந்துதான் செய்து முடிப்பார்கள். ஆனால் போக்குவரத்துத் துறை அமைச்சர் உடனடியாகச் செய்து முடிப்பார் என்பது போல அது வரப்போகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொஞ்சம் கஷ்டமான காரியம் தான். அதற்கு இடம் பார்க்க வேண்டும். கட்டிடம் கட்ட வேண்டும். அதற்கு ஒரு பஸ்ஸை விட்டு விட்டால் சுலபமாக இருக்கும் என்பதற்காகத் தான் சொன்னேன்.

முற்பகல் 10-20

திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து இன்றைக்கு மருத்துவ துறையிலே பல புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் உருவாக்கி அதற்கு செயல் வடிவம் கொடுத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதைப் போல இடத்தை நாங்களே, அந்த கிராமத்தைச் சேர்ந்த மக்களே தரத் தயாராக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மருத்துவரை மட்டும் அங்கு தந்தார்கள் என்றால் அதுவே போதுமானதாக இருக்கும். அதைப்போல போக்குவரத்துத்துறை பற்றி கூறினார்கள். போக்குவரத்துத்துறை எங்களுக்கு 2 பஸ்களை ஏற்கனவே வழங்கியுள்ளது. அங்கு மக்கள்தொகை குறைவாக இருக்கின்றதால் போக்குவரத்து வசதி நன்றாக இருக்கிறது. இரவு நேரங்களிலே அடிக்கடி செல்லமுடியாத சூழ்நிலையில் அங்கே மருத்துவர்கள் இருந்தால் அங்கு உடனடியாக சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட்டேன் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லிக் கொண்டு

அமைச்சர் அவர்கள் மருத்துவரையாவது அங்கு டெபுடேஷனில் காரியாப்பட்டியில் இருக்கக்கூடிய அரசு மருத்துவரை அங்கு வாரத்திற்கு 2 நாட்களோ 3 நாட்களோ-போடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். நாங்களே -அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களே இடத்தையும் தருகின்றோம். அதற்குண்டான வசதியும் செய்து தருகிறோம் என்பதையும் தங்கள் வாயிலாக அவரிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனைக்கு இடம் வாங்குவதோ அல்லது கட்டிடம் கட்டுவதோ அரசாங்கத்திற்கு கொஞ்சம் சுலபம்தான். ஆனால் அதற்கு மருத்துவர்கள் போடுவது என்பதுதான் ரெக்கரிங் காஸ்ட் அதிலேதான் கூடுதலாக வருகிறது. எனவேதான் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இருந்தாலும் இவ்வளவு அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே முயற்சி எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே உடனடியாக நீங்கள் அதற்கு ஏற்பாட்டைச் செய்யுங்கள். முதல் கட்டமாக டெபுடேஷனிலே மருத்துவர் ஒரு நாள் 2 நாள் அங்கே வருவதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி நாங்கள் ஆய்வு செய்கிறோம். அடுத்த ஆண்டு இதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 345, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

345—

பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமித்தல்

***35802—**திரு. வி. கே. சின்னசாமி:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர், சிறார்க்கென இயக்கப்படும் பேருந்துகளில் பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மகளிர், சிறார்க்கென முழுநேரமும் பேருந்துகள் இயக்கப்படவில்லை. அவ்வாறு பேருந்துகள் இயக்கப்படும் பொழுது, பெண்களை ஓட்டுநர்களாகவும், நடத்துனர்களாகவும் நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

அமைச்சர் அவர்கள் மருத்துவரையாவது அங்கு டெபுடேஷனில் காரியாப்பட்டியில் இருக்கக்கூடிய அரசு மருத்துவரை அங்கு வாரத்திற்கு 2 நாட்களோ 3 நாட்களோ-போடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். நாங்களே -அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களே இடத்தையும் தருகின்றோம். அதற்குண்டான வசதியும் செய்து தருகிறோம் என்பதையும் தங்கள் வாயிலாக அவரிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனைக்கு இடம் வாங்குவதோ அல்லது கட்டிடம் கட்டுவதோ அரசாங்கத்திற்கு கொஞ்சம் சுலபம்தான். ஆனால் அதற்கு மருத்துவர்கள் போடுவது என்பதுதான் ரெக்கரிங் காஸ்ட் அதிலேதான் கூடுதலாக வருகிறது. எனவேதான் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இருந்தாலும் இவ்வளவு அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே முயற்சி எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே உடனடியாக நீங்கள் அதற்கு ஏற்பாட்டைச் செய்யுங்கள். முதல் கட்டமாக டெபுடேஷனிலே மருத்துவர் ஒரு நாள் 2 நாள் அங்கே வருவதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி நாங்கள் ஆய்வு செய்கிறோம். அடுத்த ஆண்டு இதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 345, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

345—

பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமித்தல்

***35802—**திரு. வி. கே. சின்னசாமி:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர், சிறார்க்கென இயக்கப்படும் பேருந்துகளில் பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மகளிர், சிறார்க்கென முழுநேரமும் பேருந்துகள் இயக்கப்படவில்லை. அவ்வாறு பேருந்துகள் இயக்கப்படும் பொழுது, பெண்களை ஓட்டுநர்களாகவும், நடத்துனர்களாகவும் நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே இருந்தாலும் எத்தனையோ பேர் பள்ளங்களை, குழிகளை வெட்ட நினைத்தாலும் அத்தனையும் தாண்டி அஞ்சாமல் காலை முன் வையடா என்ற அடிப்படையில் இன்றைக்கு சிறந்த ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த காவல்துறை மானிய கோரிக்கையின்போது காவல்துறையிலே 30% பெண்களை நியமிப்போம் என்ற அறிவிப்பை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். ஆக அந்த அடிப்படையிலே அரசு அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஓட்டுநர், நடத்துநர் பணிகளை எதிர்காலத்தில் இந்த 30 சதவிகிதத்தை பெண்களைக் கொண்டு நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா? அப்படி ஏதும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புவதோடு பெண்கள் ஓட்டுகின்ற வாகனங்கள் 2 சக்கர வாகனங்கள் ஆனாலும் சரி, கார், ஜீப் போன்ற எல்லா வாகனங்களையும் இப்போது நகரங்களிலும் கிராமங்களிலும் கூட ஓட்டுகிறார்கள். விபத்து ஏற்படுகின்ற நேரத்திலேகூட அப்படி பெண்கள் ஓட்டுகின்ற வாகனங்கள் விபத்தே இல்லாமல் ஓட்டுகின்ற அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. பக்கத்திலே எல்லாம் ஆண்கள் ஓட்டிச்சென்ற வாகனங்கள் எல்லாம் பள்ளத்திலே குழியிலே விழுந்து இன்றைக்கு அடையாளம் தெரியாமல் போய்விட்டது. ஆனால் தமிழகத்திலே மட்டும்தான் எந்த விபத்தும் ஏற்படாமல் விபத்து இல்லாமல் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவாரா பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது காவல்துறையைப் போல இதிலே 30% பெண்களை நியமிக்கமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் விடையளிக்கின்ற போதே அதை குறிப்பிட்டிருக்கிறேன். முழு நேரமாக பேருந்துகளை இப்போது இயக்கவில்லை. பெண்களுக்கும் சிறார்களுக்கும் முழு நேர பேருந்துகள் இயக்குவதில்லை. காலையில் பீக் ஹவர்ஸ் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் ஒரு முறையும் மாலையில் பீக் ஹவர்ஸ் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் இரண்டாவது முறையும் இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதிலே இருக்கின்ற பிரச்சினைகளே வேறு. காவல்துறையிலே இருக்கின்ற பிரச்சினைகள் வேறு. வேறு அலுவலகத்திற்கு செல்கின்ற பிரச்சினைகள் வேறு. அதிலே காலையிலே 10 மணிக்கு வந்தால்கூட போதும். ஆனால் ஓட்டுநர், நடத்துநர்களாக இருக்கின்றவர்கள் பர்ஸ்ட் ஷிப்ட் என்று சொல்லப்படுகின்றபோது காலை 4 மணிக்கே அவர்கள் அந்த பணிக்கு

வரவேண்டும். அதேபோல இரண்டாவது ஷிப்ட் என்று சொன்னால் இரவு நேரம் 11 மணிக்கு தனியாக செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவேதான் அது சாத்தியக் கூறு இல்லை என்று சொன்னேன்.

முற்பகல் 10-25

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையின் பணி மிக கடுமையான ஒரு காரியம். திருடர்களைப் பிடிக்கவேண்டும், கொலைகாரர்களை, கொள்ளை செய்கின்றவர்களைப் பிடிக்கவேண்டும்; கடத்தல்காரர்கள் போன்ற குற்றவாளிகளை எல்லாம் பிடிக்கின்ற வேலைக்கு பெண்களை நியமிக்கின்றபோது இந்த பேருந்துகளை இப்போது ஓட்டுகிறார்கள், லாரி, பஸ் போன்ற பேருந்துகளைத் தான் இயக்குவதைத் தான் நாம் பார்க்க முடியவில்லையே தவிர காரணம் அவர்களுக்கு லைசன்ஸ் கொடுப்பது இல்லை. ஆனால் கார் ஓட்டுகிறார்கள், ஜீப் ஓட்டுகிறார்கள், மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறார்கள், ஸ்கூட்டர் ஓட்டுகிறார்கள், இன்னும் கவனமாக ஓட்டுகிறார்கள். இப்போது நடந்து கொண்டிருக்கிற விபத்துக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் கூட - அமைச்சர் அவர்கள் ஆர்.டி.ஓ. மூலம் அல்லது காவல்துறை மூலம் பெற்றால் கூட - பெண்கள் ஓட்டிய வாகனங்களால் ஏற்பட்ட விபத்துக்கள் குறைவு, விபத்து ஆனதாக தகவல் இல்லை. ஆகவே தான் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். சில தாய்மார்கள் என்னிடத்தில் சொல்லுகிறார்கள், பெண்களுக்கு ஓட்டுநராக லைசன்ஸ் கொடுத்து பேருந்துகளில் ஆண்களுக்கு சமமாக நியமித்தால் அல்லது 30 சதவீதம் நியமித்தால் இந்த பேருந்துகளில் நடக்கின்ற விபத்துக்களைக் கூட தடுக்கலாம், தடுக்கப்படும், எண்ணிக்கையும் குறையும் என்று கூட அவர்கள் சொல்லுகிறார்கள். சில பேர் குறிப்பிடுகிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு டிரையலாக ஒரு வருடம், இந்த ஆண்டு 500 டிரைவர் அல்லது 1000 டிரைவர், 1000 நடத்துனர் எடுத்துப் போட்டால் இந்த நஷ்டத்தைக் கூட, இந்த பேருந்துகளில் ஏற்படும் நஷ்டத்தைக் கூட போக்கி லாபத்தில் கூட ஓட்டலாம், என்ற நம்பிக்கைக் கூட ஏற்படுகிறது. காரணம் ஆண்கள் எவ்வளவு சம்பளம் வாங்கினாலும் 1000, 5000 ரூபாய் சம்பளம் வாங்கினாலும் வீட்டில் உள்ள பெண்கள் இடத்தில் தான் கொடுக்கிறார்கள். அந்தப் பெண்கள் முறையாக, பக்குவமாக வரவுக்கு ஏற்ற செலவு செய்து குடும்பத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கிறீர்களா; கேள்வி வேண்டாம் என்று பார்க்கிறீர்களா? கேள்வி கேட்பது என்றால் கேளுங்கள்; வேண்டாம் என்றால் உட்காருங்கள்.

திரு.வி.கே. சின்னசாமி: அமைச்சருக்கு கொஞ்சம் விளக்கம் சொல்லுகிறேன்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை விட அமைச்சருக்கு நல்ல விளக்கம் எல்லாம் தெரியும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த பெண்களை மீண்டும் ஓட்டுநராக, நடத்துனராக, அதிக அளவில் இந்த 30 சதவீதத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும் பரிசீலனைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக நேரமாக பல்வேறு வண்டிகளை இங்கே ஓட்டிக்கொண்டு இருந்தார்கள். இருந்தாலும் கூட லைட் வெகிகிள்ஸ் என்பது வேறு, தனியாக பெண்கள் தங்களுடைய வாகனங்களை எடுத்துச் சொல்வது வேறு; மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டரில் செல்வது வேறு; ஆனால் இதில் ஓட்டுநராகச் செல்வது வேறு; இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொண்டு ஆகவேண்டும். கேள்விபோடும் போதே புரிந்து கொண்டு இருக்கவேண்டும். இருந்தாலும் பஸ்ஸில் பெண்கள் ஓட்டுநராக, நடத்துனராக நியமிக்கிறபோது பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. காலை நேர ஷிப்ட் என்று சொன்னால் காலை 4.00 மணிக்கு அவர்கள் பணிக்கு வரவேண்டும். மாலை நேர ஷிப்ட் என்று சொன்னால் இரண்டாவது ஷிப்ட்டு முடித்து செல்கிறபோது இரவு 11.00 மணிக்கு தனியாக அவர்கள் வீட்டுக்கு செல்லவேண்டும் காவல்துறையில் அப்படி அல்ல, ஒருவரைப் பிடிக்கவேண்டுமென்று சொன்னால் 4, 5 பெண் காவலர்களாகச் செல்கிறார்கள். அது வேறு; இது வேறு; ஆகவே தான் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. இரண்டாவது அவர்களுக்கு பாதுகாப்புக்கு துப்பாக்கியும் கையில் தந்திருக்கிறார்கள். இவர்களிடம் இல்லை. இரவு நேரத்தில் தனியாகச் செல்லவேண்டும், காலை நேரத்திலே வரவேண்டும். அதே நேரத்தில் பெண்கள் அங்கே நடத்துனராக இருக்கிறபோது பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்றன. நாம் முதலிலே நடத்துனராகப் போட்டோம். அவர்கள் அத்தனைப் பேரும் அதற்கு பிறகு நடத்துனராக தங்களுடைய பணியினை மேற்கொள்ள முடியாது என்று பல்வேறு உடல் கூறுகள் காரணமாக மென்மையானவர்கள் பெண்கள். ஆகவே தான் நாங்கள் அந்தப் பணிகளைச் செய்ய முடியாது என்று அவர்கள் எடுத்துச் சொன்னதன் வாயிலாக ஸ்டாண்டிங் கண்டக்டர் என்று அவர்களுக்கு அந்தப் பணியை மாற்றி தந்திருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிற காரணத்தால் பெண்களை அதிலே அமர்த்த முடியாது. இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலே ஒரே ஒரு பெண் ஓட்டுநரை மட்டும் தான் நம்முடைய நாகர்கோயிலில் நாங்கள் நியமித்தோம். அங்கே பல்வேறு வழித் தடங்களில் பேருந்தை அவரால் இயக்க முடியவில்லை. அவ்வளவு சிக்கல்கள்

இருக்கின்றன. ஆகவே தான் அவரால் இயக்க முடியாத காரணத்தால் இப்போது டெப்போவில் அவருக்கு அந்தப் பணிகளைச் செய்யச் சொல்லி நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் பெண் சிசு பாதுகாப்புத் திட்டம்; 2 பெண் குழந்தைகள் பிறந்தால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு சலுகைகள்; தொடக்கப் பள்ளியில் ஒன்றிலிருந்து 5 வகுப்பு வரை பெண் ஆசிரியர்களை நியமித்தல்; அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தல்; இப்படி பெண்களுக்காகவே நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் நகர பேருந்துகளில் மட்டுமாவது மகளிர் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்தை ஓட்டுவது தான் கடினம். அடிக்கடி நிறுத்த வேண்டும்; அடிக்கடி கியர்களை மாற்ற வேண்டும்; அடிக்கடி மக்களால் இடர்பாடுகள் வருகிறபோது அந்த இடர்பாடுகளில் இங்கே அந்தப் பேருந்துகளை இயக்குவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதைப்போல நகரப் பேருந்துகளில் பெண்கள் சென்று ஆண்கள் அங்கே இருக்கின்றபோது, நூற்றுக்கணக்கான ஆண்கள் ஸ்டாண்டிங்கில் அங்கே நின்று கொண்டு இருக்கிறபோது அதிலே அவர்களிடத்திலே சென்று டிக்கெட் வழங்குவது அவ்வளவு சரியான சாத்தியக் கூறுகளாக இருக்காது. ஆகவே நகரப் பேருந்துகளில் மற்றும் புற நகர் பேருந்துகளில் பெண்களை வைத்து இயக்குவது அவ்வளவு சாத்திய கூறுகளாக இல்லை.தனியாகவே பெண்களுக்காகவே முழு நேரமாக பேருந்துகளை இயக்குகின்ற காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 346, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

346—

சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து இயக்குதல்

***37369—**திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இருக்கின்றன. ஆகவே தான் அவரால் இயக்க முடியாத காரணத்தால் இப்போது டெப்போவில் அவருக்கு அந்தப் பணிகளைச் செய்யச் சொல்லி நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் பெண் சிசு பாதுகாப்புத் திட்டம்; 2 பெண் குழந்தைகள் பிறந்தால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு சலுகைகள்; தொடக்கப் பள்ளியில் ஒன்றிலிருந்து 5 வகுப்பு வரை பெண் ஆசிரியர்களை நியமித்தல்; அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தல்; இப்படி பெண்களுக்காகவே நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் நகர பேருந்துகளில் மட்டுமாவது மகளிர் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்தை ஓட்டுவது தான் கடினம். அடிக்கடி நிறுத்த வேண்டும்; அடிக்கடி கியர்களை மாற்ற வேண்டும்; அடிக்கடி மக்களால் இடர்பாடுகள் வருகிறபோது அந்த இடர்பாடுகளில் இங்கே அந்தப் பேருந்துகளை இயக்குவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதைப்போல நகரப் பேருந்துகளில் பெண்கள் சென்று ஆண்கள் அங்கே இருக்கின்றபோது, நூற்றுக்கணக்கான ஆண்கள் ஸ்டாண்டிங்கில் அங்கே நின்று கொண்டு இருக்கிறபோது அதிலே அவர்களிடத்திலே சென்று டிக்கெட் வழங்குவது அவ்வளவு சரியான சாத்தியக் கூறுகளாக இருக்காது. ஆகவே நகரப் பேருந்துகளில் மற்றும் புற நகர் பேருந்துகளில் பெண்களை வைத்து இயக்குவது அவ்வளவு சாத்திய கூறுகளாக இல்லை.தனியாகவே பெண்களுக்காகவே முழு நேரமாக பேருந்துகளை இயக்குகின்ற காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 346, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

346—

சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து இயக்குதல்

***37369—**திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 19]

சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையத்திற்கு இரயில் வரும் நேரங்களில் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அவசியம் எழவில்லை.

முற்பகல் 10-30

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து உள்ளார்கள். பல்வேறு சோதனைகளை சாதனைகளாக ஆக்கி நெஞ்சை உயர்த்தி பொற்கால ஆட்சி நடத்திவரும், நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாத மலர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வினாவில் குறிப்பிட்டுள்ள அந்த 3 கிராமங்களும் பஞ்சமாதேவி மற்றும் பூவரசன் குப்பம் ஆகிய இரண்டு

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் உள்ள கல்லூரி அரசர் கல்லூரி; அது அரசு கல்லூரி அல்ல. அது ஒரு உதவி பெறும் தனியார் கல்லூரியாக இருக்கிறது. கல்லூரி நிர்வாகம் மாணவர்களுக்கு தங்கும் உணவு விடுதி அமைக்க முன் வந்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால், தேவைப்படும் மொத்தத் தொகையில் பாதித் தொகையை அரசு இரு தவணைகளில் அளிக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இது குறித்த விண்ணப்பம், கல்லூரி நிர்வாகத்திடம் இருந்து உரிய முறையில் கிடைக்கப்பெற்றால், தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

356—

கண்டமங்கலம் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***22664—**திரு. வீ. சுப்பிரமணியன் :*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் ஒன்றியம், சின்னகுப்பம், பக்கிரிமேடு, உப்புமுத்தாம்பாளையம் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கண்டமங்கலம் ஒன்றியம், சின்னகுப்பம், பக்கிரிமேடு, உப்புமுத்தாம்பாளையம் ஆகிய இடங்களுக்குக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து உள்ளார்கள். பல்வேறு சோதனைகளை சாதனைகளாக ஆக்கி நெஞ்சை உயர்த்தி பொற்கால ஆட்சி நடத்திவரும், நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாத மலர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வினாவில் குறிப்பிட்டுள்ள அந்த 3 கிராமங்களும் பஞ்சமாதேவி மற்றும் பூவரசன் குப்பம் ஆகிய இரண்டு

ஊராட்சிகளைச் சேர்ந்த கிராமங்கள் ஆகும். மேலும் உப்புநீர் உள்ளதால்தான் அந்தக் கிராமம் உப்புமுத்தாம்பாளையம் என்று அழைக்கப்படுகிறது. பக்கிரிமேடு கிராமத்திலும் அதே உப்புநீர் தான். உப்புநீராக உள்ளதால்தான் குடிநீர்ப் பிரச்சினையில் அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, சின்னக்குப்பம் கிராமத்தில் புதிதாக போர்வெல்லும் அமைக்கப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்தி, முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த 1995-96 ஆம் நிதி ஆண்டிலேயே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.15

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்த சின்னகுப்பம் கிராமத்தில் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பாகத்தான் சுமார் 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் 92 மீட்டர் அடி ஆழம் உள்ள ஆழ்குழாய்க் கிணறு ஒன்று போடப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால் இந்த இரண்டு கிராமங்களுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்க வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் பேரிலே, அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு மனுவை அடிப்படையாக வைத்து அவர்கள் இட்ட கட்டளையின் பேரில் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பாக இந்த ஆழ்குழாய்க் கிணறு போடப்பட்டிருக்கிறது. அந்த ஆழ்குழாய்க் கிணற்றிலே நீர் வரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த சின்னகுப்பம் கிராமத்திற்கு அருகாமையில் இருக்கின்ற இந்த பக்கிரிமேடும் மற்றும் சின்னக்குப்பத்தையும் சேர்த்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டியாக வேண்டுமென்ற அந்த கோரிக்கையையும் ஏற்று இந்த நிதி ஆண்டிலே திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 357, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்தமடை பற்றியது. இடம் தெரியும் என்றால் நீங்கள் கேட்கலாம். இப்போதே பதில் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 19]

357—

பத்தமடை கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***25245—**திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம், நாங்குனேரி, சாத்தான்குளம் ஆகிய தொகுதிகள் பயனடைய தாமிரபரணிக் கூட்டுக் குடிநீர் பத்தமடைத் திட்டத்திற்கு அரசின் தொழில் நுட்ப அனுமதி கிடைத்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 358, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

358—

மேலவன்னியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***21650—**திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், மேலவன்னியூரில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், மேலவன்னியூரிலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தி 10-11-1994 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியபோது, அங்கே உயர்நிலைப்

1995 ஏப்ரல் 19]

357—

பத்தமடை கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***25245—**திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம், நாங்குனேரி, சாத்தான்குளம் ஆகிய தொகுதிகள் பயனடைய தாமிரபரணிக் கூட்டுக் குடிநீர் பத்தமடைத் திட்டத்திற்கு அரசின் தொழில் நுட்ப அனுமதி கிடைத்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 358, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

358—

மேலவன்னியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***21650—**திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், மேலவன்னியூரில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், மேலவன்னியூரிலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தி 10-11-1994 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியபோது, அங்கே உயர்நிலைப்

பள்ளியாக இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் நேரடியாக கோரிக்கை வைத்தவுடனே மாணவர் மாணவிகளின் அவசியம் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு உடனே மேல்நிலைப் பள்ளியாக உருவாக்கினார். இப்பள்ளிக்கு மாணவர் விடுதி வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடனே மாணவர் விடுதி ஒன்று துவக்கினார்கள். அத்துடன் மாணவர் விடுதிக்கு ரூபாய் 25 லட்சம் பணம் ஒதுக்கி தற்போது கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இருக்கும்போதே அவசியம் கருதி கூடுதல் கட்டிடம் வேண்டுமென கோரிக்கை வைத்தேன். தற்போது ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதுவரையில் எந்த அரசும் செய்ய முன்வராத கோரிக்கைகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தான் மக்கள் கோரிக்கைகளை தங்களின் சாதனைகளாக ஆக்கி செய்து முடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஆட்சியில் அரசு பொதுத் தேர்வில் 100 சதவிகித வெற்றியை பெற்றுத் தந்துள்ள அப்பள்ளி தற்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளதால் அப்பள்ளிக்கு மீண்டும் ஒரு கூடுதல் கட்டிடம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நிறைய கொடுத்திருக்கிறோம். மேலும் கேட்கின்ற இந்தச் சூழ்நிலையில், இதுபோன்று பல பள்ளிகள்-தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 1225 பள்ளிகள்-இருக்கின்றன. அதையும் கருத்தில் கொண்டு நிதிநிலையையும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 359, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

359—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் மீனவர்கள் குடியிருப்பு கட்டுதல்

***33151—**திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளியாக இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் நேரடியாக கோரிக்கை வைத்தவுடனே மாணவர் மாணவிகளின் அவசியம் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு உடனே மேல்நிலைப் பள்ளியாக உருவாக்கினார். இப்பள்ளிக்கு மாணவர் விடுதி வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடனே மாணவர் விடுதி ஒன்று துவக்கினார்கள். அத்துடன் மாணவர் விடுதிக்கு ரூபாய் 25 லட்சம் பணம் ஒதுக்கி தற்போது கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இருக்கும்போதே அவசியம் கருதி கூடுதல் கட்டிடம் வேண்டுமென கோரிக்கை வைத்தேன். தற்போது ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதுவரையில் எந்த அரசும் செய்ய முன்வராத கோரிக்கைகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தான் மக்கள் கோரிக்கைகளை தங்களின் சாதனைகளாக ஆக்கி செய்து முடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஆட்சியில் அரசு பொதுத் தேர்வில் 100 சதவிகித வெற்றியை பெற்றுத் தந்துள்ள அப்பள்ளி தற்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளதால் அப்பள்ளிக்கு மீண்டும் ஒரு கூடுதல் கட்டிடம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நிறைய கொடுத்திருக்கிறோம். மேலும் கேட்கின்ற இந்தச் சூழ்நிலையில், இதுபோன்று பல பள்ளிகள்-தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 1225 பள்ளிகள்-இருக்கின்றன. அதையும் கருத்தில் கொண்டு நிதிநிலையையும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 359, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

359—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் மீனவர்கள் குடியிருப்பு கட்டுதல்

***33151—**திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 19]

குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள நஞ்சலிங்கம்பேட்டை, நாச்சியார் பேட்டை, பேட்டோடை, மானியார்பேட்டை ஆகிய கிராமங்களில் மீனவர்கள் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள நஞ்சலிங்கம் பேட்டையில் 47 வீடுகளும், பேட்டோடையில் 50 வீடுகளும் 1994-95 ஆம் ஆண்டில் கட்டித் தரப்படவுள்ளன. மீதமுள்ள கிராமங்களில் அரசு வீடுகள் கட்டித்தர தகுதியுள்ள கடல் மீனவர்கள், தலா 3 செண்ட் நிலம் வீதம் அரசுக்கு ஒப்படைத்தால், அடுத்துவரும் ஆண்டில் அவர்களுக்கும் வீடு கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

முற்பகல் 11.20

திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கான மயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து தானும் தன் பொல்லாச் சிறகுதனை விரித்து ஆடியது போல, இன்று தமிழகத்திலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து யார் யாரோ வாய்நீளம் காட்டி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்த ஆதரவைப் பெற்ற புரட்சித் தலைவி அவர்கள் இந்த 3¾ ஆண்டுக் காலத்தில் பல்வேறு நலத் திட்டங்களை செயலாக்கி, இன்று சாதனை படைத்திருக்கிறார்கள். மரம்வெட்டி தலைவன் எல்லாம் நான்தான் இந்தச் சமுதாயத்தினுடைய வழிக்காட்டி என்று சொல்லி வந்த நேரத்தில் இன்று சரித்திரத்திலே இடம் பெற்றுவிட்ட நம்முடைய சரித்திரநாயகி புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் அமைப்புச் சட்டத்திலே 20 சதவிகிதத்தைப் பெற்றுத் தந்து, அந்தச் சமுதாய மக்களை வாழ வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமூக நீதி காத்த எங்களுடைய தாயே, தமிழே, நீங்கள் வாழ வேண்டும். நீங்கள் வாழ்வதனால் இந்தத் தமிழகம் வாழும் என்று சொல்லி, எங்களுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் இன்றைக்கு 600 வீடுகளை மீனவச் சமுதாய மக்களுக்காக இந்தக் குறுகிய காலத்திலே, பொற்கால ஆட்சியில், புரட்சித் தலைவியினுடைய ஆட்சி கட்டி தந்திருக்கிறது. அவர்களுக்கு நான் நன்றி சொல்லி, இந்தத் துறையினுடைய அமைச்சராக விளங்குகின்றவர் நல்ல செயல்பாடு மிக்க இளைஞராக இருந்து, எங்களுடைய மீனவச் சமுதாயத்திற்கு நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். இந்த நிதியாண்டிலும் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அவர்கள் சமுதாய நலக் கூடங்களைக்கட்டியும் மற்றும் இதர காரியங்களையும் செய்து தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மீனவர்களே அவர்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு புதிய உத்தரவை வழங்கி, ஒவ்வொரு ஆண்டும் 5½கோடி ரூபாய் செலவில் 2 ஆயிரம் வீடுகளை கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 24 கோடி ரூபாய்க்கு 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய மீனவ மக்களுக்காக கட்டித் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டும் கூட 5½ கோடி ரூபாய் செலவில் நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். மேலும் மீனவ கிராமங்களில் அணுகு சாலைகள் (approach roads) மற்றும் இணைப்புச் சாலைகள் (link roads) போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துவதற்காக உள்ளாட்சித் துறையுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 360, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

360—

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைத்தல்

***25695—**திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் சூரிய உதயம், சூரியன் மறையும் காட்சிகளைக் காண்பதற்கு காட்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எந்த அளவிலே உள்ளது ? எப்பொழுது அமுலுக்கு வரும்? அதற்குரிய பணம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மீனவர்களே அவர்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு புதிய உத்தரவை வழங்கி, ஒவ்வொரு ஆண்டும் 5½கோடி ரூபாய் செலவில் 2 ஆயிரம் வீடுகளை கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 24 கோடி ரூபாய்க்கு 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய மீனவ மக்களுக்காக கட்டித் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டும் கூட 5½ கோடி ரூபாய் செலவில் நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். மேலும் மீனவ கிராமங்களில் அணுகு சாலைகள் (approach roads) மற்றும் இணைப்புச் சாலைகள் (link roads) போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துவதற்காக உள்ளாட்சித் துறையுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 360, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

360—

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைத்தல்

***25695—**திரு. *மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் சூரிய உதயம், சூரியன் மறையும் காட்சிகளைக் காண்பதற்கு காட்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எந்த அளவிலே உள்ளது ? எப்பொழுது அமுலுக்கு வரும்? அதற்குரிய பணம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

1995 ஏப்ரல் 19]

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் அவர்களே இந்த சுற்றுலாத் துறைக்கும் பொறுப்பேற்று சுற்றுலாத் துறைக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் 1991-92-ஆம் ஆண்டு 49 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மைய அரசு எவ்வளவு ரூபாய் வேண்டுமென்று கேட்டதற்கு, 6 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டத்தை மைய அரசுக்கு மாநில அரசு அனுப்பியது என்றும், அந்தத் திட்டத்தை 6 லட்சம் ரூபாயில் மாநில அரசே செய்யலாம் என்று மாநில அரசுக்கு மைய அரசு திருப்பி அனுப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா? இப்பொழுது பல லட்சம் பேர்கள் இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகிறார்கள். சூரியன் உதிப்பதையும், சூரியன் அஸ்தமனம் ஆவதையும் ஓர் இடத்தில் நின்று பார்ப்பதற்கு ஓர் இடம் இல்லாமல் ஆங்காங்கே இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதை நிவர்த்திச் செய்வதற்காக, பல லட்சம் பேர் வருகின்ற கன்னியாகுமரியில் மிகவும் முக்கியமான இடத்தில் ஒரு வியூ பாயிண்ட் வைப்பதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா? அதற்கு மாநில அரசினால் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா? பணி எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 லட்சம் ரூபாய் செலவில் அப்படி எந்தக் கருத்துருவும் மத்திய அரசுக்கு அனுப்பவில்லை. அங்கே வருகிற அதிகமான சுற்றுலாப் பயணிகளின் நலனைக் கருத்திலே கொண்டு ஒரு பெரிய அரங்கம் அமைப்பதற்கும், காட்சி மையம் அமைப்பதற்கும் 49 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசுக்குத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. மாநில அரசு உரிய பங்கைச் செலுத்துவதற்குத் தயாராக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் இரண்டு இடங்களில் மட்டும் சூரியன் உதயம், சூரியன் மறையும் காட்சிகளைக் காணலாம். ஒன்று கன்னியாகுமரி, மற்றொன்று கேப் ஆப் குட் ஹோப் என்ற நன்னம்பிக்கை முனை. இது ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென் கோடியில் உள்ள இடம். இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உதயசூரியனை நிரந்தரமாக அஸ்தமனம் செய்த பெருமைக்குரிய (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் ஒப்பற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் உலகத்தில் மிகச் சிறந்த சுற்றுலா மையமான கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் சூரியன் உதயத்தையும், சூரியன் மறையும் காட்சியையும்

நன்றாகக் காண்பதற்காக இன்று ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கருத்தருவை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதாக அறிகிறேன். அதை விரைவில் பெற்று, இந்த ஆண்டிலேயே செய்து தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து 47 ஆண்டுகாலம் ஆகியும், மாண்புமிகு தமிழக முதல்வர் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், 1992-93-ஆம் ஆண்டிலே மத்திய அரசுக்கு 49 இலட்சம் ரூபாய் செலவிலே காட்சி மையமும், அரங்கமும் அமைக்க நாம் கருத்துரு அனுப்பியும், மத்திய அரசு இதுவரையில் அந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கவில்லை. நாங்கள் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். மாநில அரசினுடைய பங்கைச் செலுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தயாராக உள்ளது என்பதையும், இது குறித்து நாங்கள் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

341—

கணேசபுரத்தில் வாக்குச்சாவடி அமைத்தல்

***23952**—*திரு. தா. வேடியப்பன்:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியம், கணேசபுரம் கிராமத்தில் தனியாக வாக்குச்சாவடி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

நன்றாகக் காண்பதற்காக இன்று ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கருத்தருவை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதாக அறிகிறேன். அதை விரைவில் பெற்று, இந்த ஆண்டிலேயே செய்து தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து 47 ஆண்டுகாலம் ஆகியும், மாண்புமிகு தமிழக முதல்வர் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், 1992-93-ஆம் ஆண்டிலே மத்திய அரசுக்கு 49 இலட்சம் ரூபாய் செலவிலே காட்சி மையமும், அரங்கமும் அமைக்க நாம் கருத்துரு அனுப்பியும், மத்திய அரசு இதுவரையில் அந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கவில்லை. நாங்கள் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். மாநில அரசினுடைய பங்கைச் செலுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தயாராக உள்ளது என்பதையும், இது குறித்து நாங்கள் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

341—

கணேசபுரத்தில் வாக்குச்சாவடி அமைத்தல்

***23952**—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியம், கணேசபுரம் கிராமத்தில் தனியாக வாக்குச்சாவடி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஆளுநர் பயணத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பன்னீர்செல்வம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் பேரவை விதி 56-ன் கீழ் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி மறுத்திருந்தேன். ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அதை எழுப்ப வேண்டுமென்று இங்கு பேரவையில் வலியுறுத்திய காரணத்தாலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கத் தயார் எனத் தெரிவித்திருந்ததாலும், அதைத் தொடர்ந்து இங்கு ஏற்பட்ட விவாதத்தின் காரணத்தாலும், அது இன்று எடுத்துக்கொள்ளப்படும் என அறிவித்திருந்தேன். ஆளுநர் நடத்தை பற்றியோ, விவாதத்தை உருவாக்கும் வகையில் அவர் பெயரை இழுத்தோ பேசக் கூடாது என்று பேரவை விதி 92 (vii)-ல் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஆளுநர் அவர்களை விவாதத்திற்குரிய பொருளாக ஆக்கக்கூடாது என்பதால் அவர்களுக்கு அனுமதி மறுத்திருந்தேன். ஆனால் நேற்று ஏற்பட்ட விவாதத்தைத் தொடர்ந்து இன்று நான் அனுமதிப்பதாக அறிவித்திருந்தேன். இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரின் முன்னறிவிப்பை, மற்றும் உறுப்பினர்களுடைய முன்னறிவிப்பை ஏற்று அவர்களைப் பேச அனுமதித்தால் ஆளுநர் பற்றியும், அவருடைய நடத்தை பற்றியும் பேச வாய்ப்பு உண்டாகும். எனவே பேரவை விதி 92(vii) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பெற்றதற்குப் பிறகுதான் இப்பொருள் குறித்து விவாதிக்க முடியும். எனவே அவ்விதியை நிறுத்தி வைக்க வேண்டுமெனில், பேரவை விதிகளின்படி, பேரவைத் தலைவரின் இசைவுடன் ஒரு தீர்மானம் முன்மொழியப்பெற வேண்டும். எனவே இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அதற்கான தீர்மானத்தை முன் மொழியலாம். (குறுக்கீடு) திரு.ஜி. பழனிசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி, திண்டிவனம் பற்றி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) இன்று நீங்கள் கொடுத்தது வேறு. (குறுக்கீடு) அதில் நீங்கள் கொடுக்கவில்லை. இது நேற்றுக் கொடுத்தது.

3. அரசினர் தீர்மானம்

பேரவை விதி **92(vii)–ல்** *உள்ள சில பதங்களின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்தல் (பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. ச. அழகிரி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் தற்காலிகமாக நீக்கிவைக்கப் பெறுதல் — பேரவைத் தலைவரின் அறிவிப்பு உள்பட)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையிலே இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களாலும் மற்றும் சில உறுப்பினர்களாலும் பேரவை விதி 56-ன்கீழ் பேரவையின் ஒப்புதலைக் கோரி விவாதிக்கக் கொடுத்திருக்கும் தீர்மான விவாதத்தின்போது பேரவை விதி 92 (vii)-*ல் அடங்கியுள்ள* `conduct of any Governor' *என்னும் பதங்கள் மற்றும்* `use the Governor's name for the purpose of influencing a debate' *என்னும் பதங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகளை நிறுத்தி வைக்க வேண்டும்"*
என்ற தீர்மானத்தை பேரவை விதி 287*–ன்படி முன்மொழிகிறேன்.*

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கமும், பேரவையும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது. It is a creation of the Constitution. *எனவே அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இந்தச் சபையில் எந்தப் பிரச்சினையையும் எழுப்ப முடியாது. இதைப் பற்றித் தீர்மானிக்க முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் எந்த வகையிலும் அரசியல் சட்டத்திற்கு வேறுபாடு என்பது கிடையாது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: எப்படி என்று சொல்லுகிறேன், விடுங்கள். ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். ஆளுநருடைய பதவிக் காலம் ஜனாதிபதியினுடைய விருப்பத்தைப் பொறுத்தது. During the pleasure of the President. Article - *361-ன்படி ஜனாதிபதிக்கும், ஆளுநருக்கும் சில விசேஷ சலுகைகளும் பாதுகாப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.* Immunity for the actions of the President and the Governor—*ஜனாதிபதி எடுக்கின்ற சில நடவடிக்கைகளைப் பற்றி இங்கே விவாதிக்க முடியாது என்று தெளிவாக இருக்கிறது. நீங்களே...... (குறுக்கீடு)*

முற்பகல் 11.30

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதிகள் எல்லாம் ஏதோ பேரவைத் தலைவருக்குத் தெரியாததைப் போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீண்டதொரு*

விளக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது இந்த அவையின் நேரத்தை வீணடிப்பதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) Constitution-ல் கொடுத்திருக்கிற Immunity என்பது இந்தப் பேரவையில் அதைப்பற்றி பேசக்கூடாது என்று கவர்னர்களுக்குக் கொடுக்கப்பட்டது அல்ல. குடியரசுத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவருடைய conduct-ஐப் பற்றி இந்தப் பேரவையில் பேசக்கூடாது என்பது அரசியல் சட்டம் வகுத்துக் கொடுத்திருக்கிற நெறிமுறை. ஆனால் கவர்னரைப் பற்றிப் பேசக்கூடாது என்று இருக்கிற விதி, நம்முடைய பேரவை விதிகளில் இருப்பதுதான். பேரவையின் அந்த விதிகளுக்கு, இந்தப் பேரவை சில நேரங்களில் திருத்தங்கள் கொண்டு வரலாம். இதைப்போல் குறிப்பிட்ட ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு, விதியை சஸ்பெண்ட் செய்யலாம் என்பதற்கும், விதிமுறைகளில் வழிவகுக்கப்பட்டிருக்கின்றன. அதன்படிதான் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்கள். அவர்கள் முன்மொழிந்ததே கூட—நான் நேற்றே சொன்னேன், இது இந்த விவாதத்தை உருவாக்கும், அப்படி நீங்கள் இதை எழுப்பித்தான் தீரவேண்டுமென்று வற்புறுத்தினால், நான் அதை, பேரவை விதியைத் தளர்த்தி எடுத்துக் கொள்ளத் தயார் என்றுதான் சொன்னேன்—அதன்படி முன்மொழியப் பெற்றுள்ளது. (குறுக்கீடு) நீங்கள் முடியாது என்று சொன்னால், இதைக் கிளப்பவும் வேண்டும், விதியையும் தளர்த்தக் கூடாது என்றால், நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) இதைக் கிளப்பக் கூடாது, விதியில் அதற்கு இடம் இல்லையென்றும் சொன்னேன். நீங்கள்தான் அதை எழுப்பியே தீரவேண்டும் என்றீர்கள். நீங்கள் எழுப்பியே தீரவேண்டுமென்றால், நான் விதியைத் தளர்த்தி வேண்டுமானால் எடுத்துக் கொள்கிறேன் என்று இப்போது விதியைத் தளர்த்த, பேரவை முன்னவரைத் தீர்மானம் முன்மொழியக் கேட்டு அவர்களும் முன்மொழிந்திருக்கிறார்கள். அதையும் வேண்டாம் என்கிறீர்கள். பிறகு என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி). என்னை வற்புறுத்துகிறீர்கள். (குறுக்கீடு) என்னை வற்புறுத்துகிறீர்கள். நான் எடுத்துதான் தீரவேண்டுமென்று நேற்று வற்புறுத்தினீர்கள். இதைச் சொல்லித்தான் நான் அனுமதி மறுத்தேன். எடுத்துதான் தீரவேண்டும் என்று நீங்கள் வற்புறுத்திய நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தான் பதில் சொல்லத் தயார் என்று சொல்லிவிட்ட இந்நிலையில், (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேருமே சொல்லி விட்ட பிறகு, நான் பேரவை விதியைத் தளர்த்துவதற்குத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை முன்னவரை நான் இப்போது அனுமதித்திருக்கிறேன். அதையும் கூடாது என்கிறீர்கள். (குறுக்கீடு) பிறகு எந்த வகையிலும் இது ஒழுங்காக நடக்கக்கூடாது

என்று சொல்வதாகத்தான் பொருள்படுமே தவிர வேறல்ல. (குறுக்கீடு) இதை எழுப்பியே தீரவேண்டுமென்று நீங்கள்தான் கேட்டீர்கள். பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலேயே, 'நீங்களும் மற்ற உறுப்பினர்களும் கொடுத்திருக்கிற அந்தத் தீர்மானத்தை இங்கே எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக' என்றுதான் அவர் முன்மொழிந்திருக்கிறார். எனவே நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை அல்லது வற்புறுத்தவில்லை என்று சொன்னால், இந்தப் பிரச்சினையே எழாது அல்லவா? (குறுக்கீடு) அதற்குப் பிறகு அரசியல் சட்டம் என்கிறீர்கள். அரசியல் சட்டம் பற்றி நீங்கள் சொன்ன விதியில், இங்கே கவர்னரைப் பற்றிப் பேசக்கூடாது என்று இல்லை. அந்த விதி, குடியரசுத் தலைவருக்கு மட்டும்தான் பொருந்தும். கவர்னருக்குப் பொருந்துகிற விதி என்பது நாம் வகுத்திருக்கிற விதிமுறை. அந்த விதிமுறையை இப்போது நிறுத்தி வைக்கவேண்டுமென்று அவர் முன்மொழிந்திருக்கிறார். (குறுக்கீடு) அதில் இருப்பதைத்தானே சொல்லமுடியும். (குறுக்கீடு) அப்படியானால் ஒரே வரியில் சொல்லி விடுங்கள், என்னுடைய தீர்மானமும் வேண்டாம், இதுவும் வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்வது அப்படித்தான் இருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தினுடைய விதிமுறைகளை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் கிருஷ்ணன், ஒருமையில் பேசிப் பழகாதீர்கள். நன்றாக இல்லை. (குறுக்கீடு) கிருஷ்ணன், முறையற்ற முறையில் நடந்துகொள்ளாதீர்கள். ஒருமையில் பேசிப் பழகாதீர்கள். இது எல்லாம் உங்களுக்கு நல்லதில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11.35

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் பேசுகின்றபோது வேறு யாருக்கும் மைக் கொடுக்கமுடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த அவையின் நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறக்கூடாது என்பதற்காக கங்கணம் கட்டிக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் தினமும் எல்லா விதிமுறைகளையும் மீறி, பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ஒரு உறுப்பினர் உட்காரவேண்டும் என்பதையும் மறந்து, வேண்டுமென்றே நின்றுகொண்டு குறுக்கே குறுக்கே பேசிக் கொண்டிருந்தால் இதைப் பார்த்துக்கொண்டு இந்த அவையில் உள்ள மற்ற உறுப்பினர்கள் எல்லாம் சகித்துக்கொண்டிருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை நேற்று எழுப்பவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். இன்று அதற்கு நான் பதில் சொல்லத் தயார் என்று தெரிவித்தேன். இன்று அதை

அனுமதிப்பதாக பேரவைத் தலைவர் - நீங்கள் தெரிவித்தீர்கள். அதற்காக இந்தப் பேரவையின் ஒரு விதியைத் தளர்த்தியாக வேண்டும். அதைச் சொன்னால் அதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எதிர்க்கிறார் என்று சொன்னால், அவர் நேற்று வெளிநடப்புச் செய்வதற்காக இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். இன்று அவருடைய வாதங்கள் எல்லாம் தவிடுபொடியாகி விடும் என்பதைத் தெரிந்து, என்னுடைய பதிலை இங்கே அவர் கேட்க விரும்பவில்லை. அதற்காகத்தான் ஒரு தடையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். மீண்டும் வெளி நடப்புச் செய்ய ஒரு காரணத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்பதுதான் புலப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள், அவர் பேசட்டும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. நான் இங்கேயிருக்கிற அரசியல் சட்ட விதிகளை எடுத்துக் காட்டுகிறேன். (குறுக்கீடுகள்) அது உள்நோக்கம்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) அரசியல் சட்ட விதிகள் நீங்கள் சொல்வது போல இல்லை. (குறுக்கீடு) சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தெளிவாக, திட்டவட்டமாக . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, முறைகேடாக நடக்காதீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நீங்கள் வெளியேறுகிற வரை முடிக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) அரசியல் சட்டத்தில் தெளிவாக, திட்டவட்டமாக நீங்கள் கவர்னரைப் பற்றி எழுப்பலாம் என்று இருக்கிறபோது (குறுக்கீடுகள்) அதற்கு சொல்ல வேண்டும். அரசியல் சட்டத்தையே கையில் வைத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, உட்கார வேண்டும். (குறுக்கீடு) திரு. அழகிரி, உட்காரவேண்டும். (குறுக்கீடு) I name you; I name you; Thiru Alagiri, sit down. (குறுக்கீடு) திரு. அழகிரி. அத்துமீறி நடக்காதீர்கள். (குறுக்கீடு) அழகிரி அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) அழகிரி அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) அழகிரி அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) அழகிரியை அவையை விட்டு வெளியேற்ற மார்ஷலுக்கு உத்தரவிடுகிறேன். சார்ஜண்ட் மற்றும் காவலர்கள் அழகிரியை வெளியேற்றலாம். (கூச்சல்-குழப்பம்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்)

(திரு. அழகிரி அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

உங்களைப் பேச அனுமதித்து, சட்ட அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசியதற்கு சட்ட அமைச்சர் பதில் சொல்கிறார். நான் ஏற்கனவே சட்ட அமைச்சரைத்தான் அழைத்தேன். (குறுக்கீடுகள்) சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது. கவர்னரைப் பற்றி சட்ட விதிகளைத் தளர்த்தினால் பேசலாம் என்று. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசியல் சட்டத்தில் கவர்னரைப் பற்றி பேசக் கூடாது என்று இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காட்டுங்கள். எந்த விதி, காண்பியுங்கள்.

மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி : In the Constitution, it is silent.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் எந்த விதி என்று சொல்லுங்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன். அரசியல் சட்டத்தில் எந்தப் பிரிவு, கவர்னரைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்று இருக்கிறது, சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: Article 361:- The President, or the Governor or Rajpramukh of a State, shall not be answerable to any Court for the exercise and performance....

மாண்புமிகு பேரவைத் தலைவர். 'any Court' (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கிற அந்தப் பிரிவு கோர்ட்டில் அவர்களை இழுக்க முடியாது. அவ்வளவுதான். (குறுக்கீடு) நான் நேற்றைக்கே சொன்னேன். (குறுக்கீடு) இங்கே வந்து குழப்பம் -செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் முடிவு செய்தால் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவர், உட்கார வேண்டும். (குறுக்கீடு) உட்கார வேண்டும். (குறுக்கீடு) I name you, Mr. Leader of the Opposition, please sit down.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக, திட்டவட்டமாக, without ambiquity, it has been stated in Article 361, Clause (I) ``The President, or the Governor or Rajpramukh of a State, shall not be answerable to any Court for the exercise and performance of the powers and duties of his office or for any act done or purporting to be done by him in the exercise and performance of those powers...." என்று நீதிமன்றத்தைப் பற்றித்தான் சொல்லி இருக்கிறதே தவிர,

இந்தச் சட்டப் பேரவையை பற்றித் தெளிவாகச் சொல்லவில்லை. It is silent. எனவே, பேசலாம் என்பதுதான் அதனுடைய பொருள். (குறுக்கீடு) சொல்லவே இல்லை, தெளிவாக. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரை அனுமதிக்கிறேன். அவர் சொல்லட்டும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: It is very clear. It is an immunity to the President of India. It is an immunity to the Governors and the Rajpramukhs. Of course, there are no Rajpramukhs now. It is an immunity. The immunity has been given by the Constitution. அதை நீங்கள் தளர்த்த வேண்டுமென்று சொன்னால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தளர்த்தச் சொல்லி கேட்கவே இல்லை. நீங்கள் சொல்வது, வழக்கு மன்றங்களுக்கு, அவர்களுக்கு கொடுத்திருக்கிற இம்யூனிட்டி. இந்தப் பேரவையைப் பொறுத்தமட்டில், நம்முடைய விதிகளிலேதான், கவர்னரைப் பற்றி, conduct of the Governor பற்றிப் பேசக் கூடாது என்று இருக்கிறது. (குறுக்கீடு)

முற்பகல் 11.40

Thiru S. R. BALASUBRAMONIYAN: I have got a Ruling given in the Parliament.

Hon. SPEAKER: This House is governed by this rule.

Thiru S.R. BALASUBRAMONIYAN: We have got any number of rulings here.

Hon. SPEAKER: It is governed only by this rule. அதற்குத்தான் விதிவிலக்கு. நீங்கள் எழுப்பிய பிரச்சினையினாலேதான் வருகிறது. (குறுக்கீடு). எனவே, இதுபற்றி பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு.கா.ப. பட்டாபிராமன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய விதிகளே இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. ஆக, இன்றைக்கு இந்திய அரசியல் சட்டத்திலே ஆளுநரைப் பற்றியோ அல்லது குடியரசுத் தலைவரைப் பற்றியோ பேசக்கூடாது என்று சொன்னால், 361 பிரிவிலே, நீதிமன்றங்களிலே அவர்களைப் பற்றி, அவர்களுடைய விவகாரங்களைப் பற்றி, அல்லது அவர்களுடைய நடத்தையைப் பற்றிப் பேசக்கூடாது என்றுதான் இருக்கிறதே தவிர,

இந்த மன்றத்தினுடைய விதிமுறைகள் அதே இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு இருப்பதாலே, இன்றைக்கு ஆளுநரைப் பற்றிப் பேசவேண்டும் என்று சொன்னால், இந்த விதி 287-ன்படி ஒரு விதிவிலக்கு அளிக்கவேண்டும். நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொண்டு, அதற்குப் பின்னால்.. (குறுக்கீடுகள்) ஒப்புக்கொண்டுதான் போனார். (குறுக்கீடு) ஒப்புக்கொண்டுதான் போனார் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, This House is governed by the Tamil Nadu Legislative Assembly Rules. Rule 287 says very clearly. `` Any member may, with the consent of the Speaker move that any rule may be suspended–any rule may be suspended — in its application to a particular motion before the House and if the motion is carried by three fourth of the total number of members present and voting at the meeting, the rule in question shall be suspended for the time being" என்று தெளிவாக–இந்தச் சட்டப் பேரவை விதிமுறைகளிலேயே, இந்தச் சட்டப் பேரவையில் எந்த விதியையும், இங்குள்ள முக்கால் பங்கு உறுப்பினர்கள் ஆதரித்தால் அதை தற்போதைக்குத் தளர்த்தலாம் என்று விதி இருக்கிறது. அதன்படிதான் பேரவைத் தலைவர் அவர்களும் இந்த விதியைத் தளர்த்தி, இன்று விவாதத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதித்து இருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எந்த விதியையும் தளர்த்த முடியும் என்பதே தவறு. (குறுக்கீடு) எந்த விதியையும் நாம் தளர்த்த முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன், அதற்கு விதி இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: நான் சொல்கிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையில்லாத விவாதத்தை நீங்கள் கிளப்புகிறபோது நான் என்ன செய்ய முடியும் ? (குறுக்கீடு) இல்லை. இது தேவையில்லாத விவாதம். (குறுக்கீடு) என்னைப் பார்த்து இப்படிப் பேச எதிர்க் கட்சித் தலைவருக்கு உரிமை இல்லை. வெளியேற வேண்டும். அவையை விட்டு எதிர்க்கட்சித் தலைவர் வெளியேறவேண்டும். (குறுக்கீடு) அவையைவிட்டு வெளியேறவேண்டும்.

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவையைவிட்டு வெளியேறினார்)

ஒன்றுக்கு மேற்பட்ட முறை எதிர்க்கட்சித் தலைவரை இந்த அவையை விட்டு வெளியேற்றி இருக்கிறேன். எனவே, இந்தப் பேரவையின் எஞ்சிய காலத்திற்கும் அவரைப் பேரவையிலிருந்து தள்ளி வைக்கிறேன். (குறுக்கீடுகள்)

முறைகேடாக இவர்தான் நேற்று ஆரம்பித்தார், இந்தப் பிரச்சினையை கிளப்பியாகவேண்டும் என்று. அதற்கு இன்றைக்கு நான் வழி வகுத்தால், முறைகேடாகத் தொடர்ந்து நடந்து கொண்டு இருப்பதை எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்)

(திருமதி ஜீனத் சர்புதீன், திரு. ஆர். சிங்காரம், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. இரா. அப்பு நடேசன், திரு.கே. கே. சின்னப்பன், திரு.கே. செல்வராஜ், திரு. வே. கண்ணன் ஆகியோரைத் தவிர ஏனைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

ஒழுங்கற்றவர்களும் முறைகேடானவர்களும் ஒழுங்கின்றி எழுப்புகிற குரலுக்கு இந்த நாட்டு மக்கள் எந்த வகையிலேயும் செவிசாய்க்க மாட்டார்கள். முறைகேடானவர்கள், முறைகேடான ஒரு கட்சித் தலைவரை, தலைவராக ஏற்றுக் கொண்டவர்கள், இப்படிப்பட்டவர்களை நாட்டு மக்கள் எந்த வகையிலேயும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பேரவை முன்னவர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நேற்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இன்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இப்போது இருக்கிற பிரச்சினை, அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பொறுத்து, இந்தியக் குடியரசுத் தலைவரைப் பற்றிப் பேசக்கூடாது என்று இருக்கிறது. மாநில அவையிலும் இந்தியக் குடியரசுத் தலைவரைப் பற்றிப் பேசக்கூடாது என்றுதான் இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டப்படி பாராளுமன்றத்திலே பேசுகின்றபோது, அங்கேயும் குடியரசுத் தலைவரைப் பற்றிப் பேசக்கூடாது. இங்கேயும் குடியரசுத் தலைவரைப் பற்றிப் பேசக்கூடாது. ஆனால் கவர்னரைப் பற்றிப் பேசக்கூடாது என்பதை நாம்தான் வகுத்து வைத்திருக்கிறோமே தவிர, பார்லிமெண்டிலோ அல்லது அரசியல் அமைப்புச் சட்டத்திலோ இல்லை. அதைத்தான் தாங்கள் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுக் காட்டினீர்கள். அதைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்றால், அந்த விதியைத் தளர்த்தவேண்டும் என்று நேற்றே சொல்லியிருக்கிறீர்கள். அந்த அடிப்படையிலேதான், இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, அவர்களுடைய வற்புறுத்தலுக்கு ஏற்ப, இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. நாமே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்தியதன் காரணமாக, நான் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை தாங்கள் அவை முடிவுக்கு விட்டு, வாக்கெடுப்பு எடுக்கலாம்.

முற்பகல் 11.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேற்றும் திட்டவட்டமாக அறிவித்தேன். இதை எடுப்பதாக இருந்தால் விதிவிலக்கு அளித்துத்தான் எடுக்க

முடியும் என்று. நேற்றும் இவர்கள் வற்புறுத்திக் கொண்டே இருந்தபோதும், நான் அறிவித்தேன். ஆனால் திட்டமிட்டு, இங்கே ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்றே அவர்கள் முடிவு எடுத்து வைத்துக் கொண்டு, இங்கே வந்து எல்லாப் பிரச்சினைகளையும் எழுப்புகிறார்கள் என்கிறபோதுதான், நான் இவ்வளவு நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருக்கிறது. நேற்றும் அறிவித்து இருக்கிறேன். (குறுக்கீடு) அப்படியானால் அவர்கள் உடனடியாகச் சொல்லியிருக்கலாம். என்னுடைய தீர்மானத்தின் அடிப்படையில் இந்த விதியைத் தளர்த்தியிருக்கிறீர்கள் என்றால், என்னுடைய தீர்மானத்தை நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்றால் அதேகூட பிரச்சினை முடிய ஏதுவாயிருக்கும். அவர் இதை எடுக்கக் கூடாது என்று நினைத்தார். ஆனால் திட்டமிட்டு ஒரு கலவரச் சூழ்நிலையை இங்கே உண்டாக்கிக் கொண்டே இருக்கவேண்டுமென்று நாள்தோறும் திட்டமிட்டு அவர்கள் ஈடுபட்ட காரணத்தால்தான் நான் இவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தது. அழகிரியையும் இன்று இரண்டாவது முறையாக வெளியேற்றியிருக்கிறேன். அந்த உறுப்பினரும் இந்தப் பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு அவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்று தள்ளிவைக்கப்படுகிறார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவை விதி 287-ன்கீழ் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு பேரவையின் முடிவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போதும்கூட எந்த உறுப்பினரிடமிருந்தும் பேரவை முன்னவருடைய தீர்மானத்திற்கு மறுப்பு இல்லையென்றால் அதை நான் நேரடியாக குரல் வாக்குக்கே விடலாம். எனவே முதலில் குரல் வாக்குக்கே விடுகிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானத்தை

ஏற்போர் . 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் . 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50.

பேரவையைப் பொறுத்தமட்டில் குரல் வாக்கெடுப்பில் ஒருமனதாக நிறைவேறுவதற்குரிய தோற்றம் இருந்தாலும், பேரவை விதி 287 - "3/4th of the Members present and voting"- என்ற முறையில் அதை ஆதரித்திருக்க வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லியிருக்கிற காரணத்தால் பேரவையில் எண்ணிக் கணிக்கும் முடிவுப்படியே இந்தத் தீர்மானத்தின் மீது முடிவு எடுக்க

விரும்புகிறேன். இப்போது எண்ணிக் கணிக்கும் முறைப்படி தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட இருக்கிறது. அதற்கு, முதலாவதாக டிவிஷன் பெல்லை அழுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அழைப்பு மணி இரண்டு நிமிடங்கள் அடிக்கப்பெற்றது)

(திரு. ஜி. பழனிசாமி அவையை விட்டு வெளியேறினார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் வெளிவாயில்களை மூடக் கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவை நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன)

வாக்கெடுப்பு நேரத்தில் உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் இருக்கையில் இருந்திட வேண்டும். உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலேயிருந்து இன்னொருவர் இடத்திற்குச் செல்லக் கூடாது. வாக்கு எண்ணி முடிக்கும்வரை அவரவர் இருக்கையில் இருக்க வேண்டுமென்பது விதி.

இப்போது எண்ணிக் கணிக்கும் முறைப்படி வாக்கெடுப்பு.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேரவை விதி 287-ன்படி முன்மொழிந்த கீழ்க்கண்ட தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி:

“பேரவையிலே இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களாலும் மற்றும் சில உறுப்பினர்களாலும் பேரவை விதி 56-ன்கீழ் பேரவையின் ஒப்புதலைக் கோரி விவாதிக்கக் கொடுத்திருக்கும் தீர்மான விவாதத்தின்போது பேரவை விதி 92(vii)-ல் அடங்கியுள்ள 'conduct of any Governor' என்னும் பதங்கள் மற்றும் 'use the Governor's name for the purpose of influencing a debate' என்னும் பதங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகளை நிறுத்தி வைக்க வேண்டும்”.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஏற்கெனவே அறிவித்தபடி அவையின் முடிவிற்கு விடப்படுகிறது. பேரவைச் செயலாளர் தற்பொழுது பிளாக் வாரியாக உறுப்பினர்களைப் பெயர் குறிப்பிட்டுப் படிப்பார்.

பிளாக் 1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. எஸ். ஜெயக்குமார்
2. மாண்புமிகு திரு. ச. காந்திராஜன்
3. திரு. ஓ.எஸ். அமர்நாத்
4. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை
5. திரு. வி.கே. சின்னசாமி
6. திரு. ஆர்.டி. அரங்கநாதன்
7. திரு. க. அர்ச்சுனன்
8. திரு. ஆ. அறிவழகன்
9. திரு. எஸ். அன்பழகன்
10. திரு. எஸ். ஆசைமணி
11. டாக்டர் ச. ஆரோக்கியசாமி
12. திரு. த.க. இராதாகிருஷ்ணன்
13. திரு. சி. இராமசுவாமி
14. திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்
15. திரு. இராம. இராமநாதன்
16. திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு
17. திரு. ப. கலியபெருமாள்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11-55

பிளாக் 2

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

18. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா
19. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
20. மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி
21. மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
22. மாண்புமிகு திரு. இராம வீரப்பன்
23. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
24. மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி
25. மாண்புமிகு திரு. ம. சின்னசாமி
26. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி
27. மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்
28. மாண்புமிகு திரு. மு. தென்னவன்
29. மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி
30. மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்
31. திரு. காஞ்சி பன்னீர்செல்வம்
32. டாக்டர் மு. காளிராஜன்
33. திரு. சி. கிருஷ்ணன்
34. திரு. க. குப்பன்
35. திரு. சி. குழந்தைவேலு
36. திரு. ஆர். கோடிமாரி
37. திரு. வே. கோபாலகிருஷ்ணன்
38. டாக்டர் க. கோபால்
39. திரு. மா. கோவிந்தராசு

40. திரு. சிங்கை கோவிந்தராசு

41. திரு. எஸ். சண்முகநாதன்

42. திரு. கு. தங்கமுத்து

43. திரு. தி. சாத்தையா

44. திரு. கே. சிங்காரம்

45. திரு. கு. சிவசுப்பிரமணியன்

46. திரு. என்.ஆர். சிவபதி

47. திரு. வெ. தமிழரசு

48. திரு. கா. சின்னசாமி

49. திரு. ஆ. கு. சீனிவாசன்

50. திரு. எம்.கே. சுந்தரம்

51. டாக்டர் எஸ். சுந்தரராஜ்

52. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்

53. திரு. வ.மு. சுப்பிரமணியம்

54. திரு. கி. தருமலிங்கம்

55. திரு. வீ. சுப்பிரமணியன்

56. திரு. ஆ. சுப்புரத்தினம்

57. திரு. ஏ.டி. செல்லசாமி

58. திரு. ஆ. செல்லதுரை

59. திரு. தா. செழியன்

60. டாக்டர் எம்.பி. சேகர்

61. திரு. பி. சொக்கலிங்கம்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்குபடி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிளாக் 3

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

62. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்

63. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்

64. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்

65. மாண்புமிகு திரு. சே. ரகுபதி

66. மாண்புமிகு திரு. துரை ராமசாமி

67. மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்

68. மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்

69. மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்

70. மாண்புமிகு திரு. டிஎம். செல்வகணபதி

71. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்

72. மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்

73. மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்

74. மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்

75. மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி

76. திருமதி ப. சரஸ்வதி

77. டாக்டர் வெ. சரோஜா

78. திருமதி ரெ. சியாமளா

79. திருமதி செ. சுந்தராம்பாள்

80. செல்வி எல். சுலோசனா

81. திருமதி பி. நிர்மலா

82. டாக்டர் ஜி.ஆர். மாலா

83. திருமதி கே.எம். கலைச்செல்வி

84. திருமதி கவிநிலவு தர்மராஜ்

85. திருமதி கற்பகம் இளங்கோ

86. திருமதி என். கனகவல்லி

87. திருமதி இரா. சக்குபாய்

88. திருமதி டி. சக்குபாய் தேவராஜ்

89. திருமதி அ.தி. சரஸ்வதி

90. திரு. எஸ்.எம். துரை

91. திரு. கே.எஸ். துரைமுருகன்

92. திரு. பே. தர்மலிங்கம்

93. திரு. மு. நடேசன்

94. திரு. கே. தவசி

95. திரு. ம. தனபால்

96. திரு. ஆர்.பி. பரமசிவம்

97. திரு. ப. பெரியசாமி

98. திரு. எம்.சி. தாமோதரன்

99. திரு. க. பழனிசாமி

100. திரு. வெ. பழனிசாமி

101. திரு. தேனி பன்னீர்செல்வம்

102. திரு. ஜெ. பன்னீர்செல்வம்

103. திரு. அ. பாப்பா சுந்தரம்

104. திரு. ஜெ. பாலகங்காதரன்

105. திரு. கி. பாலசுப்பிரமணியன்

106. திரு. எம்.கே. பாலன்

107. டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிளாக் 4

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

108. திரு. எஸ். ஆண்டித்தேவர்

109. திரு. செ.கு. தமிழரசன்

110. திரு. நா.சா. பழனிசாமி

111. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

112. டாக்டர் இ. இராமகிருஷ்ணன்

113. திருமதி கே. பஞ்சவர்ணம்

114. திருமதி க. பழனியம்மாள்

115. திருமதி இரா. பாண்டியம்மாள்

116. டாக்டர் சு. மணிமேகலை

117. திருமதி வி.ஜி. மணிமேகலை

118. திருமதி கே. மரியம் உல் ஆசியா

119. டாக்டர் மு. சீனியம்மாள்

@120. டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா

121. திரு. எம். பூராசாமி

122. திரு. வே. பெரியசாமி

123. திரு. எம். பெரியவீரன்

124. திரு. செ. பெருமாள்

125. திரு. ஏ.தா. பொன்னுவேலு

126. திரு. கே.பி. மணிவாசகம்

@**24-4-1995**-ஆம் நாளன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவையில் அறிவித்ததற்கிணங்க, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' டிசோசாவின் பெயர் வாக்கெடுப்பில் வாசிக்கப்பட்டவாறு வைத்துக் கொள்ளப்பட்டு எண்ணிக்கையிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

127. திரு. சி. மாணிக்கம்

128. திரு. கே.ஆர். முருகானந்தம்

129. திரு. ஆர். முருகையா பாண்டியன்

130. திரு. கே. முனிவெங்கடப்பன்

131. திரு. கா.பூ. முனுசாமி

132. திரு. து. மூர்த்தி

133. திரு. என். ஆர். ராஜேந்திரன்

134. திரு. வெ. பாலசுப்பிரமணியன்

135. திரு. த. ரத்தினவேல்

136. திரு. வி.பி.ஆர். ரமேஷ்

137. திரு. ஏ. ரவிக்குமார்

138. திரு. கே.ஆர். ராஜு

139. திரு. கே.பி. ராஜு

140. திரு. செ.து. வரதராஜன்

141. திரு. செ. ஆறுமுகம்

142. டாக்டர் பெ. வீரபாண்டியன்

143. திரு. தா. வேடியப்பன்

144. திரு. சோ.வி.எஸ். மோகனன்

145. திரு. டி. வேலையா

146. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்

147. டாக்டர் அ. ஸ்ரீதரன்

148. திரு. இரா. தாமரைக்கனி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

நண்பகல் 12-00

பிளாக் 5

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

149. திரு. வே. கண்ணன்

150. திரு. சஞ்சய் ராமசாமி

151. திரு. ஆர். சிங்காரம்

152. திரு. கே.கே. சின்னப்பன்

153. திரு. கே. செல்வராஜ்

154. திரு. இரா. அப்பு நடேசன்

155. திரு. எஸ்.வி. சண்முகம்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. வே. தம்புசாமி

பிளாக் 6

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

156. திருமதி ஜீனத் சர்புதீன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- எவருமில்லை -

(வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன)

வாக்கு எண்ணிக்கையின் முடிவு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரித்தோர் 156. தீர்மானத்தை எதிர்த்தோர் எவருமில்லை, நடுநிலை வகித்தோர் ஒருவர். (மேசையைத் தட்டும் ஒலி)

@ டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா அவர்களுடைய பெயர் வாசிக்கப்பட்டிருந்தாலும், சட்டத்தின்படி அவருக்கு வாக்குரிமை கிடையாது. எனவே அது எண்ணிக்கையில் விடப்பட்டுள்ளது.

எனவே மொத்தம் இருந்து வாக்களித்த 157 உறுப்பினர்களில் 156 உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆதரித்து இருக்கிற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை விதி 287-ன்படி இது நான்கில் மூன்று பங்குக்கும் அதிகமாகவே இருக்கிற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிற தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே பேரவை விதி 92 (vii)-ன்படி குறிப்பிடப்பட்டிருக்கிற அந்த நிபந்தனை இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில் தளர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்-தொடர்ச்சி

ஆளுநர் பயணத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய முறைகேடான நடவடிக்கைகளின் காரணமாக வெளியேற்றப்பட்டுவிட்டார். எஞ்சிய உறுப்பினர்களான திரு. சி. ஞானசேகரன், திரு. சா. பன்னீர்செல்வம் ஆகியோர் இருக்கையில் இல்லை.

அடுத்த உறுப்பினர், திரு. இரா. தாமரைக்கனி, எப்படி இது அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு இன்றியமையாதது என்பதை விளக்கி, சுருக்கமாகப் பேசக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.05

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10.4.1995-ஆம் தேதி திண்டிவனத்திற்கு ஒரே நேரத்தில், ஒரே நாளில், இரண்டு வி.ஐ.பி.கள் வருகிறார்கள். ஒருவர் கவர்னர். ஒருவர் சுப்பிரமணியன் சுவாமி. ஆனால் வரும்போது ஜனநாயக முறையில் ஒரு கூட்டம் எதிர்ப்புத் தெரிவிக்க இருக்கின்றது. ஒரு கூட்டம் சுப்பிரமணியசாமியை வரவேற்பதற்காக இருக்கிறது. அவர்கள் இரண்டுபேருமே பாண்டிச்சேரிக்குப் போகிறவர்கள்தான். (சிரிப்பு). ஆனால் வரும்போது அவர்களில் ஒரு கூட்டத்தினர், அதாவது இவர்களுக்கு

@ 24.4.1995-ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவையில் அறிவித்ததற்கிணங்க, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசாவின் பெயர் வாக்கெடுப்பில் வாசிக்கப்பட்டவாறு சேர்க்கப்பட்டு எண்ணிக்கையிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதுதான் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் நான் எழுதி அனுப்பியுள்ள கடிதத்தின் விவரம். எனவே இத்தனை தெளிவாக நான் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் எழுதியுள்ள கடிதங்களின் விவரத்தை அறிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திண்டிவனத்தில் 10-4-1995 அன்று நடைபெற்ற சம்பவத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். இனிமேலாவது இது போன்ற நெருடலான பிரச்சினைகளை இந்த அவையில் விவாதிக்கின்ற ஒரு சங்கடமான சூழ்நிலையை எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உருவாக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு இதற்கு மேல் இந்தப் பிரச்சினையை விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இவ்வளவு விளக்கத்திற்குப் பின்னர் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, பேரவையின் இசைவை இந்தத் தீர்மானத்திற்கு மறுக்கிறேன்.

இங்கிருந்து வெளியே போன உறுப்பினர்கள் பேரவைக் கட்டிடத்திற்கு வெளியே போய் தங்களுடைய வாய்களில் கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு போட்டோ எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியே போய் வாயைக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டியவர்கள் என்று அவர்களே காட்டியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே முன்னேற்பாடாக அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. (குறுக்கீடு) எப்படி திடீரென்று இத்தனை பேருக்கும் எங்கிருந்து கறுப்புக் கொடி வந்தது. அதெல்லாம் முன்னேற்பாடு செய்து படம் எடுப்பதற்கென்றே சில ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

எல்.டி.டி.ஈ யைப் பற்றிக் குறிப்பிடும்போது திரு. சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்த சொல் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் வகையில் உள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. செ.கு. தமிழரசன் அவர்கள், சமீபத்தில் சுப்பிரமணியன் சுவாமி என்பவர் தாழ்த்தப்பட்ட மக்களுடைய ஒரு பிரிவின் பெயரைச் சொல்லி ஒரு பேட்டியில் இழிவுபடுத்துகிற

வகையில் அவர்களை இலங்கைப் போராளி அமைப்பைச் சேர்ந்த எல்டிடிஈ-யுடன் ஒப்பிட்டு அவர்களை அழைத்தபோது இந்தத் தாழ்த்தப்பட்ட பிரிவினருடைய அந்தக் குறிப்பிட்ட பெயரைச் சொல்லி அழைத்து இழிவுபடுத்துகிற வகையில் செய்திருப்பது இந்திய அரசியல் சட்டத்திற்கும், இங்கே தீண்டாமையை ஒழிப்பதற்காக நாம் கொண்டிருக்கிற சிலபல சட்ட விதிமுறைகளுக்கும் மாறானது என்பதைக் குறிப்பிட்டு அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினையைக் கொண்டுவர என்னிடத்தில் அனுமதி கோரியிருக்கிறார். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் அனுமதித்து இருக்கிறேன். திரு. செ.கு. தமிழரசன் (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி, நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள், எல்லாப் பிரச்சினைகளிலும் உங்கள் பெயர் இருக்கும். திரு. தாமரைக்கனியும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்துகிற வகையில் கடந்த மாதத்தில் மதுரையில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி என்பவர் எல்டிடிஈ. இயக்கத்தின் தலைவராக விளங்குகிற பிரபாகரனைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, நான் அந்த வார்த்தையை இங்கே சொல்வதற்கு தடுமாறுகிறேன். அப்படிப்பட்ட ஒரு இழிவான வார்த்தையை, எந்த வார்த்தையை ஒழிக்கவேண்டுமென்று எங்கள் வணக்கத்திற்குரிய இரட்சகர் பாபாசாகேப் அம்பேத்கார் அவர்களும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும் காலமெல்லாம் போராடினார்களோ அந்த வார்த்தையை இழிவுபடக் கூறியிருக்கிற வேதனையை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரபாகரனைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய சுப்பிரமணியசுவாமி, அவர் ஒரு சர்வதேசப் பறையர் என்று சொல்லியிருக்கிறார். அதை அவர் சொல்லுவதற்கு முன்னாலே எல்டிடிஈ-யின் அலுவலகம் முழுவதும்-இன்டர்நேஷனல் பறையா என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே வந்திருப்பது இதுதான். Swamy alleges that though the L.T.T.E. had become an International Pariah leading to the closure of its offices in many countries, it was still active in Tamil Nadu. மற்ற இடத்திலெல்லாம் அவர்களுடைய அலுவலகத்தை மூடிவிட்டார்கள், இங்கு மட்டும் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதில் இருந்து இங்கும் அவர்கள் நடமாடக் கூடாதவர்கள் என்று இந்தக் குறிப்பிட்ட பிரிவினரைப்பற்றி இழிவாகப் பேசியதைத்தான் குறிப்பிட்டார்கள். திரு. செ.கு. தமிழரசன்.

பிற்பகல் 12-45

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவர்கள் சொல்கிறபோது, உலகம் முழுவதும் அவர்கள் அலுவலகம் மூடப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டிலே மட்டும் அவர்கள் நடமாட வேண்டுமா என்று அவர்கள் கேட்பதிலே ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட., நலிந்த மக்கள் நடமாடக் கூடாதவர்கள் என்கிற வகையில் கொச்சைப்படுத்தி சொல்லியிருக்கிறார். இதைத் தொடர்ந்து அவர் சொல்கிறபோது, இலங்கை அதிபர் சந்திரிகா அவரோடு பேசத் தேவையில்லை என்று சொல்கிறார். ஆக அதை அவர் ஒப்புதலோடு சொல்கிறபோது தாழ்த்தப்பட்ட மக்கள் பேசக்கூடாதவர்கள், பேசத் தகுதியற்றவர்கள், அவர்களைப் போல பிரபாகரனிடமும் பேசக்கூடாது என்பதை வலியுறுத்தும் வண்ணம் அவர் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜாதியும், ஜாதி உணர்வுகளும், அதன் போக்கும், செயல்பாடுகளும் எல்லா வகையிலும் அழிக்கப்பட்டு விட்டதாக அரசியல் சட்டம் சொல்கிறது. அதை மனதிலே நினைத்து ஒருவர் குறிப்பிட்டால்கூட, அவர் தண்டனைக்குரியவர் ஆவார் என்று அரசியல் சட்டம் சொல்கிறது. இப்படிச் சொல்லுகிறபோது, அரசமைப்புச் சட்டத்தின் பெயராலே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர், மத்திய அமைச்சரவையில் ஒரு அமைச்சர் பதவியின் அந்தஸ்திலே இருக்கிறவர் இதை எப்படிப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை எங்களால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. இது தாழ்த்தப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின், 1½ கோடி மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தும் வண்ணம் மனதை புண்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கிறது. ஒரு சாதாரண குடிமகன் இத்தகைய இழிவான வார்த்தையைப் பயன்படுத்தினால் பீப்பிள்ஸ் சிவில் ரைட் என்று சொல்லப்படுகிற குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் பெயராலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். மிக உயரிய பொறுப்பிலே இருக்கிற ஒருவர் பத்திரிகைக்காரர்களை வைத்துக் கொண்டு பகிரங்கமாக அதைச் சொல்லி, அதுவும் கடந்த 6-3-1995 ஆம் தேதி இந்து நாளிதழிலே 14-ஆம் பக்கத்திலே வந்திருக்கிறது. இப்படி பார்க்கிறபோது ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை, உரிமைகளை கொச்சைப்படுத்தும் வண்ணம் அது இருக்கிறது. காலங்காலமாக இருக்கின்ற அரிச்சந்திரா நாடகத்திலே ஒரு பாடல் வரும். அந்தப்பாடலை பாடக்கூடாது என்று நாம் சட்டம் போட்டு இருக்கிறோம். அந்தப் பாடலை காலங்காலமாக பாடியவர்கள் பாடினால்கூட அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி பழைய பாடலையே தூக்கி எறிந்திருக்கிற நேரத்தில், இப்போது ஒரு புதிய பிரமுகர் ஒடுக்கப்பட்ட மக்களை அசிங்கப்படுத்தி இருக்கிறார். அவர்களுடைய உணர்வுகளை கொச்சைப்படுத்தி இருக்கிறார் என்றால் பி.சி.ஆர். நடவடிக்கைகளிலே மிகவும் கடும் தண்டனை அளிக்கலாம் என்று இருக்கிறது— தண்டனை வழங்க வேண்டுமென்று புகார்

மனுக்கள் காவல் துறைக்கு தரப்பட்டிருக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்திலேகூட ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலே எங்களுடைய உணர்வுகளை, எங்களுடைய உரிமைகளை பாதுகாத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கின்ற 1½ கோடி ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளை, உரிமைகளை கொச்சைப்படுத்தும் அந்த மனிதரை கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்க வேண்டுமென்பதை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லிவிட்டார் அல்லவா? ஸ்பெஷல் மென்சனாக அவர் சொல்லிய உணர்வுகளுக்கெல்லாம் நீங்களும் சொந்தம். சரி, திரு. தாமரைக்கனி, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே, பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே சுப்பிரமணியன் சுவாமி என்ற ஒரு பெரிய மனிதர் ஒரு சமுதாயத்தைப் பற்றி 1½ கோடி மக்கள் இந்த தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள், இந்தியாவிலும் வாழ்கிறார்கள். அந்தச் சமுதாயத்தைப் பற்றி—மிகவும் தரக்குறைவாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் சொன்னதுபோல் இந்து பத்திரிகையிலே வந்ததை நானும் பார்த்தேன். அது சம்பந்தமாக அந்தச் சமுதாயத்து மக்கள் காவல் துறையிலே மனு கொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக, டாக்டர் அம்பேத்கார் பேரவையில் இருந்த கந்தசாமி சிங், பி.ஏ., பி.எல்., என்ற வழக்கறிஞர் தலைமையில் அந்தச் சமுதாயத்து மக்கள் சேப்பாக்கம் அருகில் உண்ணாவிரதம் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல சாதாரண ஒரு பாமரன், விவரம் ஒன்றும் இல்லாதவன், ஏதாவது ஒரு சமுதாயத்தைப் பற்றி, அந்தச் சமுதாயத்தைப் பற்றி சொன்னால் தீண்டாமை வழக்கு போடுகிறார்கள். ஒரு மந்திரி அந்தஸ்திலே உள்ளவர் என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய மனிதர் எப்படி ஒரு சமுதாயத்தைப் பற்றி இழித்துப் பேசலாம், எப்படி நாட்டிலே நடமாட மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அனுமதி கொடுக்கின்றன என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆகவே 7-சி பிரிவின்படி, தீண்டாமை சட்டத்தின்கீழ், இப்படி தவறு செய்பவர்கள் மீது 6 மாத சிறை தண்டனை, 3 மாத சிறை தண்டனை, 500 ரூபாய் அபராதம் என்று இருக்கிறது. இப்படி பெரிய பொறுப்பிலே உள்ளவர்கள் மீது சட்டம் பாயலாமா என்று நினைக்கலாம். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும், உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் இருக்கின்றன. பாராளுமன்றத்திலும், பல மாநில சட்டமன்றங்களிலும் எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. ஆகவே தயவு

தாட்சண்யம் இருக்கக்கூடாது. எல்லோரும் இந்த நாட்டின் மனிதர்கள்தான், எல்லோரும் இந்த நாட்டின் பிரதிநிதிகள்தான். என் இரத்தம் கொதிக்கிறது. எப்படி ஒரு சமுதாயத்தைப் பற்றி பேசலாம். தமிழக அரசு ஏன் அவரை கைது செய்வதற்கு தயங்குகிறது ? உடனே கைது செய்ய வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு பிரதமருக்கு தெரியப்படுத்த வேண்டும். கண்டனத் தீர்மானம் போட்டு எம்.பி. பதவியிலிருந்து நீக்க வேண்டும.'காட்' ஒப்பந்தத்தின் தலைவராக இருக்கக்கூடாது. அந்தப் பதவியிலிருந்தும் காலி செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தமிழகத்தில் நுழையக் கூடாது. நுழைந்தால் மக்கள் சரியான பாடத்தை புகட்டுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எம். பி. பதவியை ஏற்கெனவே இழந்து விட்டார். நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12.50

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்களின் உணர்வுகளை நான் மதிக்கிறேன். இந்த அரசு மதிக்கின்றது. இந்த மாநிலத்தில் கோடிக்கணக்கில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள், இவர்களைக் கேவலப்படுத்துகின்ற வகையிலே டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி பேசியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நாடெங்கிலும் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களை அசிங்கப்படுத்துகின்ற வகையில் இந்தப் பேச்சு அமைந்திருக்கிறது. இது மிகவும் வேதனைக்குரியதாகும். காலம் காலமாக இந்த மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தூக்கி விட வேண்டுமென்று சமுதாயத்தில் மற்றவரோடு சரிநிகர் அந்தஸ்தை அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்பதற்காக தமிழக அரசு எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. இதற்காக பல சட்டங்களையும் இயற்றி இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் பழைய நாடகம், அரிச்சந்திரா நாடகத்தில் காலம் காலமாக, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட ஒரு பாடல். அதில் வரும் 'ஆதியிலும் பறையன் இல்லை. பாதியிலும் பறையன் இல்லை' என்ற பாடலைக் கூட அந்த நாடகத்தில் பாடக்கூடாது என்று அரசு தடுத்துள்ளது. அப்படிப் பாடியவர்கள்மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அண்மையில்கூட அரசு ஆவணங்களிலும், காவல் துறை அறிக்கைகளிலும், கோப்புகளிலும் வழக்கமாக இங்கே பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள் ஆதி-திராவிடர்கள் மற்றும் ஜாதி இந்துக்கள் என்று குறிப்பிடுவார்கள். அதைக்கூட மாற்ற வேண்டுமென்று நான்

உத்தரவிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி-திராவிடர்கள் மற்றும் ஜாதி இந்துக்கள் என்றோ அல்லது உயர்ஜாதி இந்துக்கள் என்றோ குறிப்பிடக்கூடாது என்று நான் தெளிவாக ஆணையிட்டு அதற்கு மாறாக ஆதி-திராவிடர்களும் மற்ற ஜாதியினரும் என்றுதான் குறிப்பிட வேண்டுமென்று அவ்வளவு ஆணித்தரமாக உத்தரவிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் சுப்பிரமணியன் சுவாமி போன்ற ஒருவர், ஒரு மத்திய அமைச்சருக்குச் சமமான அந்தஸ்து வகிக்கும் ஒருவர் இப்படி நாடெங்கிலும், வாழும் ஆதி திராவிட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துகின்ற, கேவலப்படுத்துகின்ற வகையில் பேசியிருப்பதை இந்த அரசு மிகவும் கவனமாக எடுத்துக் கொண்டுள்ளது. இதன்மீது அரசு, சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்டவர்களுக்கு நாட்டு மக்களும் சரியான தண்டனை தருவார்கள் என்றே நம்புகிறேன்.

5. கவன ஈர்ப்பு

போளூர் வட்டம், வாழியூர் கிராமத்திற்கு சில பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் படும் அவதி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்.

**திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் வட்டம் வாழியூர் கிராமத்திற்கு தடம் எண்22 மற்றும் 24 பேருந்துகள் 2 நாட்களாக நிறுத்தப்பட்டு இருப்பதால் மக்கள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பெற்றிருக்கிறது.

உத்தரவிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி-திராவிடர்கள் மற்றும் ஜாதி இந்துக்கள் என்றோ அல்லது உயர்ஜாதி இந்துக்கள் என்றோ குறிப்பிடக்கூடாது என்று நான் தெளிவாக ஆணையிட்டு அதற்கு மாறாக ஆதி-திராவிடர்களும் மற்ற ஜாதியினரும் என்றுதான் குறிப்பிட வேண்டுமென்று அவ்வளவு ஆணித்தரமாக உத்தரவிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் சுப்பிரமணியன் சுவாமி போன்ற ஒருவர், ஒரு மத்திய அமைச்சருக்குச் சமமான அந்தஸ்து வகிக்கும் ஒருவர் இப்படி நாடெங்கிலும், வாழும் ஆதி திராவிட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துகின்ற, கேவலப்படுத்துகின்ற வகையில் பேசியிருப்பதை இந்த அரசு மிகவும் கவனமாக எடுத்துக் கொண்டுள்ளது. இதன்மீது அரசு, சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்டவர்களுக்கு நாட்டு மக்களும் சரியான தண்டனை தருவார்கள் என்றே நம்புகிறேன்.

5. கவன ஈர்ப்பு

போளூர் வட்டம், வாழியூர் கிராமத்திற்கு சில பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் படும் அவதி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்.

**திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “போளூர் வட்டம் வாழியூர் கிராமத்திற்கு தடம் எண்22 மற்றும் 24 பேருந்துகள் 2 நாட்களாக நிறுத்தப்பட்டு இருப்பதால் மக்கள் படும் அவதி குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பெற்றிருக்கிறது.

அறிக்கை

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் வேலூரிலிருந்து வாழியூருக்கு இயக்கப்படும் 22 மற்றும் 24 நகரத் தடங்கள் 200 மீட்டர் தூரத்திலுள்ள சின்னபுத்தூர் கிராமத்திற்கு நீட்டிக்கக்கோரி வற்புறுத்தி 26-3-1995 அன்று சின்னப்புத்தூர் கிராம பொதுமக்களால் பஸ் மறியல் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக ஆரணி வட்டாட்சியர் அவர்களால் 25-3-1995 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆரணி தாலுக்கா அலுவலகத்தில் ஆரணி வட்டாட்சியர் தலைமையில் சமாதனக் குழு கூட்டம் நடைபெற்றது.

(2) மேற்படி கூட்டத்தில் ஆரணி வட்டாட்சியர், காவல் துறை ஆய்வாளர், கண்டமங்கலம் காவல் நிலையம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் சின்னபுத்தூர் கிராமப் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் மேற்படி 2 நகர தடங்களில் (22,24) தடம் எண் 24-ஐ மட்டும் 29-3-1995 முதல் சின்னபுத்தூருக்கு நீட்டிப்பது என்று முடிவுவெடுக்கப்பட்டது.

(3) மேற்கண்ட முடிவிற்கிணங்க பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து தடம் எண் 24-ஐ வாழியூர் கிராமத்தை அடுத்துள்ள சின்னபுத்தூருக்கு இயக்க முயன்றபோது வாழியூர் கிராம மக்கள் வாழியூர் கிராமத்தைக் கடந்து பேருந்து செல்லக்கூடாதென சாலையை மறித்து பேருந்தை நிறுத்திவிட்டார்கள். அதற்குப்பிறகு, சின்னபுத்தூர் கிராம மக்கள் வாழியூருக்கு முன் உள்ள ஆண்டிப்பாளையத்தில் பேருந்தை மறித்து வாழியூர் செல்லவிடாமல் பேருந்தை நிறுத்திவிட்டனர். இதற்கிடையில் சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டதால், ஆரணி வட்டாட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரில், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்துத் தடங்கள் 22 மற்றும் 24 ஆகிய இரண்டு பிரதான சாலையிலுள்ள வண்ணான்குளம் கிராமத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

(4) இரு கிராம மக்களிடையே சமரச உடன்பாடு ஏற்பட்டபிறகு மீண்டும் வாழியூர் வரை பேருந்து இயக்க பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையை பார்த்தேன். இந்தப் போக்குவரத்து ஏறத்தாழ 20 நாட்களாக இயங்கவில்லை. இரண்டுமுறை ஆரணி வட் அவர்களும், திருவண்ணாமலை ஆர்.டி.ஓ. அவர்களும், இரண்டு கிராம

மக்களையும் அழைத்துப் பல முறை உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இருப்பினும், இவர்களுக்குள், பல நாட்களாகவே, ஏறத்தாழ ஓராண்டு காலமாகவே, இயற்கையாகவே இரண்டு கிராமங்களுக்கும் அடிப்படையாக கருத்து வேறுபாடுகள் இருந்து வருகிறது. இருப்பினும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வேலூர் வருகை தந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகிவிட்டது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 24 நெம்பர் பஸ்ஸை என்னுடைய போளூர் தொகுதியிலே கனியாம்பாடி ஒன்றியத்திலே மோத்தக்கல் என்ற கிராமத்திற்கும் வாழியூர் கிராமத்திற்கும் விட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்பகுதி மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சின்னபுத்தூர் கிராமத்திற்குத் தேவையான ஒரு பேருந்தை இயக்கினால் அந்த இரண்டு பகுதி மக்களும் ஒன்றாகிவிடுவார்கள். எனவே, அந்தப் பேருந்தை இயக்கி, இந்த 22, 24 வாழியூர் மற்றும் தனியாக சின்னப்புத்தூருக்கு தனி பேருந்தை இயக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12.55

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, இன்று காலையிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அரசு, அங்கே பேருந்துகளைத் தனியாக இயக்கிக் கொண்டிருக்கிறது.

திரு.தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பஸ்ஸை இயக்குவதற்கு ஆவன செய்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என். பன்னீர் செல்வம், இருக்கையில் இல்லை.

6. அறிக்கை அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார். மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994-95-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 37,38 மற்றும் 39 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20-வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

(இ) கோரிக்கை எண் 10-பால்வழங்கு திட்டங்கள்

(ஈ) கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு

(அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்-விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 20 – வேளாண்மை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 753,48,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்” எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2463. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கூட்டுறவுச் சங்கக் கடன் பெற்றவர்களுக்கு பூச்சி மருந்துடன் பூசானக்

6. அறிக்கை அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார். மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994-95-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 37,38 மற்றும் 39 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20-வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

(இ) கோரிக்கை எண் 10-பால்வழங்கு திட்டங்கள்

(ஈ) கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு

(அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்-விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 20 – வேளாண்மை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 753,48,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2463. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவுச் சங்கக் கடன் பெற்றவர்களுக்கு பூச்சி மருந்துடன் பூசானக்

கொல்லி மருந்தும் விற்பனை செய்ய வேண்டும் என்பதுடன், குறிப்பிட்ட சில மருந்து வகைகள் மட்டுமே விவசாயிகளுக்குத் தரப்படுவது தவிர்த்து, தேவையான மருந்துகள் அனைத்தும் கிடைக்க வகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 753,48,84,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 11,37,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2283, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி தொகுதி, குறிச்சியில் விவசாயக் கிடங்கு ஒன்று புதிதாகத் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,37,82,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, அவை மாண்புமிகு உறுப்பினர்களுடைய பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழில்

1995 ஏப்ரல் 19] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவையின் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன் மீது தெரிவிக்கின்ற கருத்துக்களையும், நல்ல ஆலோசனைகளையும் தெரிந்து கொண்டு, இறுதியில் பதில் அளிக்கும்போது அரசின் சிந்தனைகளையும், செயலாக்கத்தையும் வேளாண்மைத் துறை சிறப்புற, உழவர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்க, புதிய அறிவிப்புகளையும் தருவேன் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற இதே நேரத்தில் அதன் தொடர்புடைய துறைகளாக இருக்கிற காரணத்தால், 'பால் வழங்கு திட்டங்கள்' 'கால்நடை வளர்ப்பு' ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளும் சேர்ந்தே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கிணங்க, அந்த மானியக் கோரிக்கைகளையும் பேரவைமுன் வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(இ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1.00

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 6,44,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2195, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பேராவூரணி ஒன்றியம், மடத்திக்காடு—பூவலூர், கலிவலம் பாலத்தளி—குறிச்சி, ஏனாதிகரம்பை, கொன்றைக்காடு ஆகிய கிராமங்களில் பால் பண்ணை தொடங்குவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,44,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டு

@ 227 முதல் 404 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3087, திரு. வே. தம்புசாமி; இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை.

(ஈ) கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 22-கால்நடை வளர்ப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 95,31,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2352, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டையில் கால்நடை மருத்துவமனை தொடங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,31,95,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3098, திரு. வே. தம்புசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை.

இரண்டு மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டு பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அதிலே, தமிழிலே இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்யுமாறு கோருகிறேன். இந்தத் துறையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைக்கும்

@ 405 முதல் 429 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

கருத்துகளுக்கும் நல்ல ஆலோசனைகளுக்கும், இறுதியாக என்னுடைய பதிலுரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும், புதிதாக எடுக்கப்பட உள்ள முடிவுகளையும் அவையில் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மேலான முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற கருத்துகளையும் ஆலோசனைகளையும் ஏற்று, இறுதியாக தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சார்பில் தரவேண்டிய விளக்கங்களையும் கருத்துக்களையும் தருவோம் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதோ, சின்ன சின்ன பாக்கெட்டுக்களாக கொடுத்து இருக்கிறீர்களே, அதைப் பற்றி உறுப்பினர்களுக்கு ஏதாவது சொல்கிறீர்களா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய வீடுகளை நாடி முட்டை வரும்; கோழி இறைச்சி வரும் (குறுக்கீடுகள்) அவை ஹாஸ்டலை நாடி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்களுடைய அறையிலே கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று, அந்த அளவுக்கு உரிமை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சிற்றுண்டியும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மூன்று

@ *431* முதல் *477* வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

அமைச்சர்களும் கோரியுள்ள மானியக் கோரிக்கைகள் மீது விவாதத்தில் பங்குகொள்கிற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவிக்கலாம். எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர்கள் மூவரும்—ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பதிலுரையை வழங்குவார்கள். அதன் பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று 1.30 வரையிலேயும் பேரவையின் காலை நிகழ்ச்சிகள் நடைபெறும்; மாலை 4 மணியிலிருந்து மீண்டும் தொடங்கி மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரை வரையிலே நடைபெறும். எனவே உறுப்பினர்கள் நேரத்தின் அருமை கருதி தங்களுடைய மேலான கருத்துக்களை வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையிலும், பால் வளத் துறையிலும், கால்நடைத் துறையிலும் பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் விவசாயத் துறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நான்கு ஆண்டுக்கால ஆட்சியில் சிறந்த முறையில் பல புதுமைகளை அறிமுகப்படுத்தி, இன்றைக்கு அரிசி உற்பத்தியில் 85 மெட்ரிக் டன் என்கிற ஒரு பெரிய இலக்கை இந்தியாவிலேயே முதலிடமாக தமிழகம் வகிக்கச் செய்கின்ற நல்ல பல சாதனைகளைப் புகுத்தி உள்ள இந்தத் துறையை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 1.05

இன்றைக்கு விவசாயிகளுடைய உயிர்நாடி பிரச்சினையான மின்சாரப் பிரச்சினையில் இலவச மின்சாரத்தை இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் வழங்காமல் இருக்கிறபோது தமிழக அரசு மட்டும் தொடர்ந்து விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கி வருகிறது. முன்பு ஒரு பைசா மின்சாரக் கட்டணத்தை இறக்கவேண்டும் என்பதற்காக விவசாயிகள் போராடிய போது 14 விவசாயிகளைச் சுட்டுக்கொன்ற ஆட்சியும் இருந்தது. ஆனால் இன்றைக்கு மத்திய அரசை பலமுறை வற்புறுத்தியும்கூட விவசாயிகளுக்கு எந்த ஒரு இலவச மின்சாரத்தையும் வழங்க இசையவில்லை. ஆனாலுங்கூட அந்த இலவச மின்சாரத்தை மாநில அரசு தவறாமல் தொடர்ந்து வழங்கிவருகிறது. இதை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தனித்தனி கம்பெனிகளாக செயல்பட்டு வந்த ஒரு சில கட்சிகள் இப்போது லட்சியங்களை லட்சத்திற்கு விற்றும், கொள்கைகளை கோடிக்கு விற்றும் ஒரு சிலர் ஒன்று சேர்ந்து இன்றைக்கு செயல்படுகிறார்கள். இந்த

நேரத்தில் அந்த தவறான பிரச்சாரங்களை சிங்கக் கூட்டங்களின் தலைவியாக சிங்க நிகர் தலைவியின் கர்ஜனைக்குப் பயந்துகொண்டு, தினசரி வெளிநடப்புச் செய்கின்ற ஒரு சிலர் தொடர்ந்து வெளியேறுகின்ற கட்டத்திற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் முடிவெடுத்ததற்கு இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றிப் பேசுவதாக இருந்தால், அந்த நேரத்திலேதான் நாம் விதிவிலக்கு வைத்து இருக்கிறோம். எல்லா நேரத்திற்கும் விதிவிலக்கு அல்ல. அந்தத் தீர்மானத்தின் போதுதான் விதிவிலக்கு. எனவே எல்லா நேரத்திலேயும் அதைப் பற்றி பேசிக் கொண்டே இருக்கமுடியாது. அதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிடுகிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாக ஒருசிலர் கூறுகிறார்கள். எந்தவிதத்திலும் சட்டம் ஒழுங்கு கெடவில்லை. தமிழ் மக்களுக்காக தன்னுடைய உயிர்மூச்சு உள்ளவரை பாடுபடுவேன் என்று இன்றைக்கு உறுதியாக உழைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 69 சதவிகிதத்தைப் பெற்றுக் கொடுத்தார். இன்றைக்கு ஹரிஜன மக்களின் வாழ்க்கையில் அவர்களின் தரத்தை உயர்த்துவதற்காக பல அரிய திட்டங்களைக் கொண்டுவந்து இருக்கிறார்கள்.

அரிசி விலையையும் ஒரு ரூபாய் குறைத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அவர்களைப் பற்றி தவறாக யாராவது கருத்து தெரிவித்தால், மக்களே பொங்கி எழுந்து போராடுகிறார்களேயொழிய வேறு யாரும் போராடவில்லை என்பதைக் கூட இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத் துறையில் இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்புக்கு மத்திய அரசு 391 ரூபாய் கொடுத்தாலும் மாநில அரசு 134 ரூபாயை அதிகமாக கொடுத்து 525 ரூபாயை நீங்கள் கரும்புக்கு டன்னுக்கு விலை கொடுக்கிறீர்கள். அந்த விலையை 600 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய விளை பொருட்களை நியாயமான விலைக்கு விற்கவும், உற்பத்தியாகும் பொருட்களை வருடம் முழுவதும் கடன் வாங்கி சிரமப்பட்டு விவசாயிகள் விவசாயம் செய்து உற்பத்தியாகின்ற பொருள்களை விலைக்குக் கொண்டு வருகின்றபோது, மார்க்கெட்டுக்குக் கொண்டு வருகின்றபோது, அந்த நேரத்தில் திடீரென்று ஒருசில வியாபாரிகள் ஒன்று சேர்ந்து இடைத்தரகர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து குறைந்த விலைக்கு அதை வாங்கி அங்கே அதிக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

விலைக்கு விற்கிறார்கள். அதைத் தடுப்பதற்காக இப்போது இருக்கின்ற அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மாநில முழுவதும் விவசாயிகளுடைய விளைபொருட்களை ஒரே விலையில் வாங்கி ஒரே விலையில் விற்பனை செய்து, அந்த விவசாயிகளுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது ஒன்றிய அளவில் வேளாண்மைத் துறையின் மூலம் விதைகள், உரங்கள் விற்பனைச் செய்யப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விதைகள் உரங்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதை மாற்றி ஒரே சீராக விவசாயத் துறையின் மூலமாகவே கிராமங்கள்தோறும் அவர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்காக நடைமுறையை மாற்றியமைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய விதை இப்போது தரம் இல்லாத விதைகளாக ஒருசில தனியார் கம்பெனிகள் தயார் செய்து விற்பனை செய்கின்றன. அதை வாங்கிச் சென்று விவசாயிகள் விவசாயம் செய்கின்றபோது அதிலே அவர்களுடைய விளைச்சல் பாதிக்கப்படுகிறது. அரசினுடைய விதைகளை மட்டும் வாங்கவேண்டுமென்றும், தனியார் இப்படி தவறு செய்கின்றபோது அந்த விதைப் பண்ணைகளுக்குத் தடை விதித்து, அரசே முழுமையாக விதைகளை உற்பத்தி செய்து விற்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய விவசாயிகளுக்கு இப்போது அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அட்டைகளுக்கு விதைகள் வழங்குகின்றபோது அந்த விதைகளை, உரங்களை வாங்குகிறபோது இந்த அட்டைகளை தவறாகப் பயன் படுத்தி பெரிய விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அதைத் தடுத்து சிறிய விவசாயிகளே பயன்படுத்துகின்ற அளவிற்கு இந்த நடைமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த எண்ணெய் வித்துக்கள் பெருக்கத் திட்டம், இன்றைக்கு பாமாயில், உலகநாடுகள் முழுவதும் கொழுப்புச் சத்து இல்லாத எண்ணெய் என்று பயன்படுத்துகிறார்கள். இன்றைக்கு நாடு முழுவதும் பார்த்தாலும் மக்கள் உபயோகிக்கின்றதாக இருப்பதால், அது ஒரு நல்ல திட்டமாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாமாயில் உற்பத்தியில் அதிக அக்கறை செலுத்தவேண்டும். தமிழக அரசு, இந்தியாவிலேயே அதிக உற்பத்தி ஆகும் பாமாயில்தரும் மரங்களை வளர்ப்பதற்காக, பனை

மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த வேளையில் தமிழகம் முழுவதும் தரிசு நிலங்களாக உள்ள இடங்களில் விவசாயிகளுக்கு இலவசமாக அந்தப் பனை மரக் கன்றுகளை கொடுத்து பனை மரங்களை வளர்த்து பாமாயில் உற்பத்தி செய்வதில் முழுக்கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.10

விவசாயப் பொருள்களுக்கு, குறிப்பாக பச்சைக் காய்கறிகள், காளான்கள், மிளகாய் போன்ற பொருள்களுக்கு வெளிநாடுகளில் அதிகம் தேவையிருப்பதால் இந்த விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்ய அரசே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த வேண்டும். வேளாண்மைத் துறை மூலமாக வெளிநாடுகளில் வாங்கும் இந்த விவசாயப் பொருள்களுக்கு எங்கே தேவை இருக்கிறது, யார் வாங்குகிறார்கள் என்கின்ற அந்த விலாசங்களோடு, விவரங்களோடு விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தி ஏற்றுமதி செய்கின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தால், விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு அதிக விலையும் கிடைக்கும். அவர்களும் அந்தத் துறையில் சிறந்து விளங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறையில் பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கையை வலியுறுத்தி 10 நாட்களுக்கு முன்பாக அவர்கள் போராட்டம் நடத்துவதாக அறிவித்தார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து அவர்களை அழைத்துப் பேசி இன்றைக்கு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்திருப்பதை, பால் உற்பத்தியாளர்கள் சார்பாக இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் பால் விலை குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களில் 11 ரூபாய், 12 ரூபாய் என்று வழங்குகின்ற இந்த நேரத்தில், தமிழ்நாட்டில் 8 ரூபாய், 7 ரூபாய் 50 பைசா என்று பால் வழங்குவதை பாராட்டுகிறேன். பால் உற்பத்தியாளர்களுக்கு தமிழ்நாட்டில் அதிகமான பலன் தருகின்ற விதத்தில், அவர்களுடைய அந்த கிராமங்கள் தோறும் இருக்கின்ற அந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு தமிழக அரசின் சார்பில் இன்றைக்கு கடன் வசதிகளை அதிகமாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பால் பூத்துகளில் எல்லாம் இப்பொழுது பெரும்பான்மையாக பெண்களே காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் பால் வாங்க வருவதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பால் பூத்துகளில் பணியில்

அமர்த்துகின்றபோது பெண்களையே, பூத்துகளுக்கு, படித்து வேலை இல்லாதவர்களை அமர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் உள்ளது போல் தானியங்கி பால் பூத்துகளை கோவை, மதுரை, சேலம், நெல்லை, திருச்சி போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் படிப்படியாக, அந்தத் தானியங்கி பால் பூத்துகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பால் சேகரிக்கிறபோது இரண்டு மணி நேரம் அல்லது 3 மணி நேரத்தில் அந்த பாலை கொண்டுசென்று பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில், பால் குளிரூட்டும் சாதனத்தில் பாலைக் கொட்ட வேண்டும். இல்லாவிட்டால் அந்த பால் கெட்டுவிடுகிறது. அந்தப் பாலை இரண்டு, மூன்று மணி நேரத்தில் கொண்டு செல்வதற்குள் பால் கெட்டுவிடுவதாக ஒருசில இடங்களில் அறிவித்திருக்கிறார்கள். ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பாலை கொண்டு செல்கின்ற அந்த லாரிகளில் பால் குளிரூட்டும் டாங்குகளை எல்லா லாரிகளுக்கும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கிராம நியாயவிலைக் கடைகளில் ஆவின் நிறுவனத்தினுடைய பால் பவுடர், பால் கோவா, நெய் போன்ற பொருள்களை விற்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்கள் இல்லாத கிராமங்களில் வாரத்திற்கு ஒரு நாளாவது கால்நடை மருத்துவர்கள் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். கால்நடைகள் இன்றைக்கு நோய்வாய்ப்படுகின்றபொழுது அவைகளுக்கு நோய்க்கு மருந்து கொடுப்பதற்கு, அந்தக் கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கும் அதுபற்றி தெரிவதில்லை. அந்த கால்நடைகளுக்கு மருத்துவர்களும் இல்லாத காரணத்தால்-அந்த மருத்துவர்கள் வாரத்திற்கு ஒரு நாளாவது செல்கின்ற நேரத்தில்-அந்தக் கிராமங்களிலும் இன்றைக்கு கிராம அலுவலகங்கள் உள்ள இடங்களில் மருந்துகளை வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வெளிநாடுகளில் ஒரு மாடு ஒரு நாளைக்கு சுமார்40 லிட்டர் பால் தருகிறது. ஆனால் நம்முடைய நாட்டில் 5 லிட்டர், 10 லிட்டர். அதிகமாகப்போனால் 15 லிட்டருக்கு மேல் எந்த மாடும் பால் கொடுப்பதில்லை. ஆதலால், வெளிநாட்டு பசுக்களைப் போல இங்கும் வளர்ப்பதற்கு கால்நடைத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகள் மூலம் இன்றைக்கு மந்தை ஆடுகள் வளர்க்கும் கிராமத்தில் உள்ளவர்கள் நிதியுதவி கொடுத்து அந்த மந்தை ஆடுகளை வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டு, இம்மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. மாணிக்கம்.

பிற்பகல் 1.15

திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின்மீது கருத்துக்களைக் கூற வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தமாமன்றத்தில் உரையாற்றும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த ஏழு கோடி தமிழ் மக்களின் இதயமே, உலகத்தில் யாரும் சாதிக்க முடியாத சாதனைகள் படைத்து இந்திய அரசியலில் இமயமாய் உயர்ந்து நிற்கும் சமூக நீதி காத்த வீராங்கனையே! அன்னை தெரசாவின் ஆசியைப் பெற்ற அரசியல் தீர்க்கதரிசினியே; பெண்ணினத்தின் பெருமைகள் உயர்ந்திட எண்ணற்ற திட்டங்கள் தந்த பாரதி கண்ட புதுமைப் பெண்ணே; மக்கள் சக்தியைப் பெற்ற மகா சக்தியே, திராவிட இனத்தின் வரலாற்றை அழியாக் காவியமாகப் பொன்வரிகளால் தீட்டிக் கொண்டிருக்கும் தியாகத்தின் திருவிளக்கே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி இம்மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பைக் கொடுத்த நான் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களை வணங்கி, ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

ஒரு நாட்டினுடைய முன்னேற்றம் அந்த நாட்டினுடைய விவசாயிகளின் கையிலேதான் உள்ளது. அதனால்தான் நம்முடைய தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைக்காகப் பல புதிய திட்டங்களை ஆண்டுதோறும் அறிமுகப்படுத்துகிறார்கள். விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவினைக் குறைத்து, விளைபொருள்களுக்கு அதிக விலை கிடைக்கத்தக்க வகையில் உரிய அணுகுமுறைகளை உருவாக்கியுள்ளது நம்முடைய கழக அரசு. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களுக்கு விற்பனைக் கட்டுப்பாட்டினை நீக்கி நல்ல முறையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்வது போன்றவைகள் மூலமாக வேளாண்மையில் முன்னேற்றம் கண்டுள்ளது நம்முடைய கழக அரசு. தரமான வேளாண் இடு பொருட்களை வழங்குதல், கிராமப்புற விவசாயிகளுக்கு கடன் வசதிகள், வேளாண் விரிவாக்கம் மூலம் நவீன தொழில் நுட்பங்களைப் பரவலாக்குதல், வேளாண்மையைச் சார்ந்த தொழில்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி

செய்யும் வகையில் ரூ. 764.88 கோடி செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்., வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

1994-95-ஆம் ஆண்டு மொத்த உணவு தானிய உற்பத்தி 105 இலட்சம் மெட்ரிக் டன்னை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்., பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். 1995-96-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 5000 ஏக்கர் களர் மற்றும் உவர் நிலங்களைச் சீர்திருத்தும் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஏற்றுமதி வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு புதியதாக வெளியிடப்பட்டுள்ள ஜே.ஜே. 92 வாசனை நெல் பரவலாக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

வேளாண்மையை இயந்திர மயமாக்கும் முயற்சியில் 975 டிராக்டர்கள், 3468 பவர் டில்லர்கள், 67,026 விசைத் தெளிப்பான்கள், அதிக அளவில் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, விவசாயிகளுக்கு நமது அரசு மானிய விலையில் வழங்கியுள்ளதை தமிழக விவசாயிகள் வரவேற்கின்றனர், பாராட்டுகின்றனர்.

அடுத்து ஈரோடு தொகுதியில் சில பணிகளைச் செய்து கொடுக்குமாறு பேரவைத் துணைத் தலைவர் மூலம் கேட்டுக் கொள்கிறேன். ஈரோடு நகரின் முக்கிய சாலைகளில் ஒன்றான ஈ.வி.என். சாலையில் மேற்குப் பகுதியிலிருந்து மழைக் காலத்தில் மழை நீர் மற்றும் சாக்கடை நீர் அனைத்தும் நகரின் மையப் பகுதியான தெப்பக்குளம், தில்லை நகர், அகில்மேடு வீதி, முனியப்பன் கோவில் வீதி ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் உட்புகுந்து சுமார் 3,000 குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. போக்குவரத்து தடைப்படுகிறது. மழைநீர் வடிகால் அமைக்க ரூ. 1.70 இலட்சம் செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் திட்ட மேலாண்மை இயக்குநர், உலக வங்கித் திட்டம், சென்னை அவர்களுக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் இப்பணியை முடித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நகரின் முக்கிய தெருக்களின் நடுவில் மின் விளக்குகள்—சோடியம் வேப்பர் மின் விளக்குகள்—அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நகரத்தில் வாழும் மக்களுக்கு தேவையான குடிநீர் கிடைக்க 120 எச்.பி. புதிய பம்ப்செட் பொருத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு சாதனை படைத்த எங்கள் இதய தெய்வமே, தங்கத் தட்டிலே வைரத்தைக் கொட்டி அழகு பார்ப்பதுபோல் இந்தத் தமிழகத்தின் தங்க சிம்மாசனத்தில் உங்களை அமர வைத்து இந்த நாடு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறது. இதைத் தாங்கிக் கொள்ள முடியாத சில மன நோயாளிகள், தங்கள் புகழுக்குக் களங்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். இந்த நாடு நலம்

பெற வேண்டும் என்பதற்காக துன்பங்களையும், துயரங்களையும். சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்துதான் யாராலும் அசைக்க முடியாத இமயமாக உயர்ந்திருக்கிறீர்கள். யாராலும் அழிக்க முடியாத வெற்றிச் சரித்திரத்தைப் படைத்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்கள் மீது காழ்ப்புணர்ச்சியின் காரணத்தால் களங்கத்தை ஏற்படுத்த முயல்வோரை இந்த நாடு அனுமதிக்காது. இழந்துவிட்ட அரசியல் வாழ்வைப் பெற உங்களை வசை பாடித் திரிவோரை மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். உங்கள் வெற்றிப் பாதையில் தடைக் கற்களை உருவாக்க நினைப்போரை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நியாயத்தின் பக்கம், நியாயத்தின் மேல் நம்பிக்கை உள்ளவர்கள் இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்று சொல்வார்கள். எங்களுக்காக வாழும் இதய தெய்வமே, இந்த தர்ம யுத்தத்தில் இறுதி வெற்றி உங்களுக்குத்தான். அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். எவ்வளவு பெரிய சோதனைகள் வந்தாலும் அவைகளைச் சந்திப்போம்., அந்த வெற்றியை நீங்கள் பெற எங்கள் உயிரையும் காணிக்கையாக்குவோம் என்று சொல்லி, மீண்டும் ஈடு இணையற்ற எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1.20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ப. பெரியசாமி.

திரு. ப. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி மக்களுடைய இதயத் துடிப்பாய், புதிய பொற்காலம் படைக்கும் புத்துலகச் சிற்பியாய், சென்ற இடம் எல்லாம் வெற்றிவாகை சூடும் வீரத் திருமகளாய், காவிரித் தண்ணீர் விட மறுத்த கர்நாடக அரசை எதிர்த்து 4 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வெற்றிகள் பல கண்டு சரித்திரத்தை உருவாக்கிய இலட்சியத் தலைவியாய், அறிவால், ஆற்றலால், திடமான முடிவால், தீர்க்கதரிசனத்தால் ஆயிரம் ஆயிரம் அரசியல் சோதனைகள் வந்தாலும் அவைகளையெல்லாம் தூள்தூள் ஆக்கிவிட்டு இந்திய அரசியலில் இமயமாய உயர்ந்து நிற்கும் எங்கள் வழிபாட்டிற்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

சாதாரண விவசாயக்குடும்பத்தில் பிறந்த எனக்கு, ஆன்றோர்களும் சான்றோர்களும் அரசியல் வல்லுநர்களும் அலங்கரிக்கும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மாமன்றத்தில் பேசுகின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றி

மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீது பாராட்டிப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவையின் துணைத்தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகிலும் தேக்கும் அழியா குன்றம், அழகாய் முத்துக் குவியல், முல்லைக்காடு கடல்கள், முகிலும் செந்நெல்லும் முழங்கும் நஞ்சை மணக்கும் நாடு என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ஒரு நாடு எப்படிச் சிறப்பாக அமையவேண்டும் என்று பாடியதற்கிணங்க, அரசியல் வானில் ஒரு விடிவெள்ளியாகவும் சமுதாயப் பாலைவனத்தில் ஒரு சுனை நீர் ஊற்றாகவும் விளங்குகிற எங்களுடைய அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அன்னைத் தமிழகத்தை வலிவோடும் பொலிவோடும் உருவாக்கி வருகின்றார்கள். நலிந்தோர் துயர் துடைக்கும் பாட்டுடைத் தலைவியாகவும், தீபகற்ப திருவிளக்குத் தீபமாகவும் விளங்கிவருகின்ற எங்கள் அன்னை, ஏழை எளிய குறு விவசாயிகளுக்கு கருணை ஒளி காட்டி மாதாமாதம் ரூபாய் 100 உதவித்தொகை வழங்கி அவர்களுடைய வாழ்வு மலர வழங்கும் வள்ளலின் மறுபிறப்பாக இன்றையதினம் நம்மிடையே விளங்கி வருகின்றார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது நாட்டிலே எங்கு பார்த்தாலும் வறட்சி, குடிநீர்ப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, ரேஷன் கடைகளில் அரிசி இல்லை என்ற நிலை. காவிரியில் தண்ணீர் இல்லையென்ற சூழ்நிலை. ஆனால் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு எங்கு பார்த்தாலும் எப்போது பார்த்தாலும் மழை. காவிரியிலும் மற்ற நதிகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அணைகளும் ஏரிகளும் குளங்களும் நிரம்பி வழிகின்றன. தமிழக விவசாயிகள் மனம் குளிர, மகிழ்ச்சி பொங்க தீவிர விவசாயத்தில் ஈடுபட்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சலுகைகளோடு கூடிய பல திட்டங்கள் அனைத்தினாலும் இன்றையதினம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் உணவு தானிய உற்பத்தியில் 1994-95-ம் ஆண்டில் என்றுமே அடைந்திராத உயர் அளவான 105 லட்சம் மெட்ரிக் டன்னை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி உற்பத்தியில் மாபெரும் சாதனை அளவாக 85 லட்சம் மெட்ரிக் டன் அளவை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு உற்பத்தியிலும் மாபெரும் சாதனை படைத்திருக்கிறது. எண்ணெய் வித்து உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியத் துணைக்கண்டத்தில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள எம்.ஜி.ஆர். வீரிய நெல் மூலம் உற்பத்தியை மேலும் பெருக்கப் பெரும் வாய்ப்பு இருக்கிறது. இந்த நெல்லின் அரிசி உற்பத்தித் திறனை வெளிக்கொணர்வதற்காக மாநில அளவில் அதிக உற்பத்தித் திறன் எடுக்கும் விவசாயிகளுக்கு 10,000 ரூபாய் பரிசாக வழங்கப்பட இருக்கிறது.

தொழில் நுட்ப அலுவலர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தொழில் நுட்ப அலுவலர்களுக்கான விருது வழங்கப்பட இருக்கிறது. ஏற்றுமதி வாய்ப்பினை கருத்திற்கொண்டு புதியதாக வெளியிடப்பட்ட ஜே.ஜே.92 வாசனை நெல் ரகம் பரவலாக்கப்படுகிறது என்ற இந்தச் செய்தி தமிழக மக்களுக்கு இனிப்பான செய்தியாக இருக்கிறது. அதிகரித்து வரும் பருத்தித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1.25

விவசாயிகளுடைய வாழ்க்கை வளமாக இருந்தால் தான் இந்த நாட்டிலுள்ள கோடானுகோடி மக்கள் சிறப்பாக வாழ முடியும் என்று விவசாயிகளுடைய காவலராக விளங்கி வருகிற, தாய் உள்ளம் கொண்ட நம்முடைய தங்கத் தலைவி அவர்கள் தமிழக விவசாயிகளுக்கு கோடானு கோடி ரூபாய்க்கான சலுகைகளை வாரி வழங்கி வருகிறார்கள். சுமார் ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை ஏற்று 14 லட்சம் விவசாய பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி உள்ளார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். 25,000 ரூபாய் கட்டினால் உடனே மின் இணைப்பு என்ற சூழ்நிலையை மாற்றி ஏழை விவசாயிகள் பயனடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு ரூபாய் 10,000 கட்டினால் உடனே மின் இணைப்பு என்று ஒரு சலுகையை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பயன்படும் ட்ராக்டர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை வாங்கப்பட்டு வந்த தகுதிச் சான்றுகளை இனி வரும் காலத்தில் 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாங்கினால் போதும் என்ற ஒரு சலுகையை அறிவித்து இருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறை மூலமாக டிராக்டர்கள், பவர் டில்லர்கள், டயர் மாட்டு வண்டிகள், விசைத் தெளிப்பான்கள், தார்ப்பாய்கள், உயிரின உரப் பொட்டலங்கள், வேளாண் கருவிகள், தரமான விதைகள், தரமான நாற்றுகள், இன்னும் விவசாயத்திற்குத் தேவையான அத்தனை கருவிகளும் விவசாயப் பெருமக்களுக்கு தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, புரட்சிப் பெண்ணாக, அன்னைத் தமிழகத்தில் நல்லாட்சி செய்து வரும் நம்முடைய அன்னையின் ஆட்சிக் காலத்தில் தான் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சுற்றுப்புறச் சூழல் நல்லிணக்கத்தினை கருத்தில் கொண்டு இயற்கை முறை விவசாயம் சிபாரிசு செய்யப்படுகிறது. இயற்கை உரத்தின் உபயோகம் பரவலாக்கப்பட்டு வருகிறது. உயிரியல் கொல்லிகள், பயிர் உண்ணிகள், மற்றும் தாவர பூச்சிக் கொல்லிகள் ஆகியவை வளர்க்கப்பட்டு

விவசாயிகளுக்கு வழங்கப்படுவதன் மூலம் பூச்சிக் கொல்லி மருந்தின் உபயோகம் வெகுவாக குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகராசி வேளாண்மை 2000. எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி என்று புரட்சிகரமான ஆட்சியை அன்னைத் தமிழகத்தில் நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் அன்னையின் ஆட்சியில் வேளாண்மைக் கொள்கையை உருவாக்குவதற்காக வேளாண்மை 2000 என்ற மாநாடு திருச்சியில் மூன்று நாட்கள் முக்கிய நோக்கத்தோடு நடத்தப்பட்டு, முன்னோடி விவசாயிகள், விவசாயப் பிரதிநிதிகள், வேளாண் வல்லுநர்கள், வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு விவாதித்து புதிய வேளாண்மை கொள்கைத் திட்டம் உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மையை ஒரு தொழில் துறையாக அறிவிப்பது போல நல்லபல திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியோடு ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் உழவர் தினம் என்ற நிகழ்ச்சியை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெகு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இனிய நேரத்தில் இந்த மாமன்றத்தில் இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களை மனமார மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மை விற்பனையில், இடைத்தரகர்களிடத்திலும், வெளிச் சந்தையிலும் வேளாண்மைப் பொருள்களை குறைந்த விலையில் விற்று வந்த விவசாயிகளைக் காப்பதற்காக இன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களையும், விற்பனைக் குழுக்களையும் சிறந்த முறையில் உருவாக்கி, விவசாயப் பொருள்களை உரிய விலையில் விற்பதற்காக ஆவன செய்து வருகிறது. பெரியார் மாவட்டத்தில் முத்தூர், அவல்பூந்துறை, தாராபுரம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு நிலம் வாங்கப்பட்டு, வரும் மாதங்களில் கட்டிடம் கட்டப்பட உத்திரவிட்டிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருப்பதற்காக பெரியார் மாவட்ட மக்களுடைய சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றி மலர்களை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

தாய் உள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு பிரச்சினையை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மழைக் காலங்களில் உபரியாக வருகின்ற பவானி ஆற்றுத் தண்ணீரை, கோவை, பெரியார் மாவட்டங்களில் மிகவும் வறண்ட பகுதிகளாக இருக்கிற அவினாசி, நம்பியூர், ஊத்துக்குளி, குன்னத்தூர், பெருந்துறை, ஆகிய பகுதிகளுக்கு...............

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பெரியசாமி, உங்களுடைய பேச்சை இத்தோடு இப்போது முடித்துக் கொள்ளலாம். மீண்டும் நீங்கள் மாலை 4 மணிக்கு உங்களுடைய உரையைத் தொடரலாம்.

பேரவையின் ஒப்புதலோடு பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்பட்டு, பேரவை மீண்டும் மாலை 4.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 4.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. பெரியசாமி, தொடர்ந்து பேசலாம்.

திரு. ப. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு சில பிரச்சினைகளை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். அவற்றை முடித்துக் கொடுக்குமாறு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மழைக் காலங்களில் உபரியாக வருகின்ற பவானி ஆற்றுத் தண்ணீர் கோவை, பெரியார் மாவட்டங்களில் மிகவும் வறண்ட பகுதிகளாக இருக்கின்ற அவினாசி, நம்பியூர், ஊத்துக்குளி, குன்னத்தூர், பெருந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள ஏரி, குளங்களுக்குத் திருப்பி விடப்பட்டால், மேற்கண்ட பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து குடிதண்ணீர் பிரச்சினையும் தீர்ந்து கிணற்றுத் தண்ணீர் மூலமாக விவசாயம் சிறந்த முறையில் முன்னேற வாய்ப்பு உண்டு எனக்கூறி மேற்படி திட்டத்தினை விரைந்து செயல்படுத்த ஆணை பிறப்பித்து உதவுமாறு தமிழகத்தின் நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பெருந்துறையில் உரிமையியல் நடுவர் நீதிமன்றம் விரைவில் அமைத்துக் கொடுக்குமாறும், பெருந்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற பழைய மோட்டார்களை மாற்றி, அதிக திறன் கொண்ட புதிய மோட்டார்களை மாற்றித் தருமாறு எங்கள் தங்கத் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் 'தரிசு நில மேம்பாட்டு திட்டம்' சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுகிறது. சாகுபடிக்கு

உகந்த தரிசு நிலங்களை சாகுபடி செய்து பசுமையாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. மரவகைகளும், தீவனப் புல்களும், ஊடுபயிர்களாக தானிய, பயறு வகைகளும் பயிர்செய்யப்படுகின்றன. இப்படி பயிர் செய்வதற்கு ஒரு எக்டேருக்கு ரூ.1,500 விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. 1991-92 முதல் 1993-94 வரை சுமார் 25,000 எக்டேர் இந்த சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றுகின்ற இத்திட்டத்தை மனதாரப் பாராட்டி, அதே நேரத்தில் தமிழகத்தில் சுமார் 25 லட்சம் ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்கள் தரிசு நிலங்களாக இருப்பதாக அறிகிறேன். அந்த நிலங்களையும் சாகுபடி நிலங்களாக மாற்றி, அந்த நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்கு குத்தகை ரீதியில் அல்லது வருகின்ற வருமானத்தில் அரசிற்குப் பாதி, தனியாருக்குப் பாதி என்ற அடிப்படையில் கொடுத்து, மரக்கன்றுகளையும், நாற்றுகளையும் கொடுத்து பயிர் செய்வதற்கு அந்த ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுத்தால், வருமானத்தை அரசும் பெறலாம், ஏழை எளிய மக்களும் பயன்பெறலாம் என்று என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதற்காக பல்கலைக் கழக விஞ்ஞானப் பெருமக்கள் வருடந்தோறும் புதிய வீரிய விதைகளையும், தரமிக்க நாற்றுகளையும் உருவாக்கி விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்கள். புதிய பண்ணை இயந்திரங்களை உருவாக்கித் தருகிறார்கள். விவசாயத் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு பயிற்றுவித்து வேகமான முன்னேற்றம் வேளாண்மையில் வளர்வதற்கு உறுதுணை செய்கிறார்கள். அவர்களை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் வேளாண்மைப் பட்டம் பெற்ற வேளாண்மை அலுவலர்களின் பெயரை 'பயிர் உதவி மருத்துவர்' எனவும் வேளாண்மை உதவி இயக்குநர் அந்தஸ்தில் உள்ளவர்களை 'பயிர் மருத்துவர்' எனவும் அழைக்கப்படவேண்டுமென்ற தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகளுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வேளாண்மை விரிவாக்க மையம் என்ற பெயரை, 'பயிர் மருத்துவ மையம்' என்று மாற்றும் கோரிக்கையினையும், பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல இன்று தமிழகம் முழுவதும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்துவது போல் தமிழகத்தில் இருக்கின்ற வேளாண் பெருங்குடி மக்களுக்கு கிராமங்கள் தோறும் பயிர் மருத்துவர்களைக் கொண்டு, இலவச பயிர் மருத்துவ

முகாம்கள் நடத்தும் திட்டத்தையும் அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு உலகத்தில் பல்வேறு கொள்கைகள் காலத்தால் அழிக்கப்பட்டிருக்கிறது. உலகத்தில் பல்வேறு சிந்தனைகள் நடைமுறைகளால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற எந்த முடிவும் எந்த காலத்திலும் தோற்றதும் இல்லை, இனி தோற்கப்போவதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களின் காலடிச் சுவடுகள் காலத்தால் அழிக்கமுடியாத கல்வெட்டுகள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளும் என்றென்றும் நிலைத்து நிற்கும் நினைவுச் சின்னங்கள்.

புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சி ஒடுக்கப்பட்ட மக்களின் நினைவுகளில் நீங்காத பசுமைக் கோலங்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய காலம் தான் திராவிட இனத்திற்கே பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களே, உங்களால் இந்த நாடு பெருமைப் படுகிறது. உங்கள் காலத்தில் வாழ்வதால் நாங்களும் பெருமை அடைகிறோம். உங்களுடைய வெண்கலக் குரல் கேட்டு இந்த மாமன்றமும் பெருமைப்படுகிறது என்று கூறி இந்த பொன்னான வாய்ப்பை உருவாக்கித் தந்த நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 4.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறையின் மீது, பால்வளத் துறையின் மீது பேசுவதற்கு அனுமதி தந்த உங்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) கால்நடைத் துறை என்று முன்னாடியே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால்நடைகளை விட்டுவிடாதீர்கள். (சிரிப்பு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் தமிழகம் ஒரு முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. காரணம் தொழில் ரீதியாக விஞ்ஞான பூர்வமான சாகுபடிகளை இன்றைக்கு மேற்கொண்டு இருப்பதன் மூலமாக உணவு தானியம் உற்பத்தி செய்வதிலே விவசாயிகளும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று நவீனமான உரங்கள் மூலமாக அதிகமாக உணவு தானியங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளில் இன்றைக்கு தமிழகமும் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் விவசாயிகளுக்கு விதைகள் வழங்குவதில் காலங்களை, பருவங்களை உணர்ந்து

செய்ய வேண்டிய கடமையை சரியாக அந்த காலத்திற்குள்ளாக செய்வதற்கு நம்முடைய வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக நேர்த்தி செய்யப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு காலம் கடந்து வழங்கப்படுவதை தவிர்த்து குறித்த காலத்திற்கு முன்பாகவே நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக விவசாயிகளுக்கு காலம் கடந்து நேர்த்தி செய்த விதைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, வேளாண்மைத் துறை மூலமாக வழங்கப்படுவதன் மூலமாக, விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படக் கூடிய விதைகள் என்பது காலம் கடந்து கொடுக்கப்படுகிறது. அதுவும் உண்மையான விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவது இல்லை. ஆகவே விவசாயிகள் வாங்க முடியாத...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடித்து விட்டீடும். கடைசியில் கூடச் சொல்லலாம்.

திரு. ஜி. பழனிசாமி : சீக்கிரம் முடித்து விடுகிறேன். காலம் கடந்து கொடுக்கப்படுவதன் மூலமாக அந்த விவசாயிகளுக்கு தேவையான விதைகளை வேளாண்மைத் துறையிலிருந்து பெற்றுக் கொள்ள முடிவது இல்லை. அதற்கு மேலாக சிறு குறு விவசாயிகள் பயன்படக் கூடிய வகையில் மானிய விலையில் வழங்கப்படக் கூடிய விதைகள் கிடைப்பதிலேயும் தாமதம் ஏற்படுகிறது. இன்னும் சொன்னால் செல்வாக்கு படைத்த மனிதர்கள் மட்டுமே இதிலே பயன்பெறுகிறார்கள். அதே போல...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய வாதத்தை எடுத்து வைப்பார்கள், அதற்கு நான் இறுதியிலே பதில் சொல்லலாம் என்று தான் இருந்தேன். ஆனால் அவர் இந்த வாய்ப்பை எடுத்துக் கொண்டு ஏதேதோ அரசின் மீது உள்நோக்கத்தை புகுத்துவது போன்ற வகையிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். விதைகள் என்பதில் இன்றைக்கு சுத்திகரிக்கப்பட்ட விதைகள், சான்றளிக்கப்பட்ட விதைகள் தகுந்த நேரத்திலே வழங்கப் பட வேண்டும் என்று அரசு ஆணை வெளியிட்ட ஒரே ஒரு அரசு டாக்டர் புரட்சித் தலைவி அரசு தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆடிப்பட்டம் தேடி விதை என்ற அடிச்சுவட்டை அரிச்சுவடியாக ஏற்றுக் கொண்டு நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அது மட்டும் அல்ல, சிறு குறு விவசாயிகளுக்கு நாங்கள்

அடையாள அட்டை தந்திருக்கிறோம். அவருடைய நிலப்பரப்பு, அவர் எவ்வளவு குறுவை சாகுபடி செய்யப்போகிறார், எவ்வளவு சம்பா சாகுபடி செய்யப்போகிறார், அதற்குரிய பரிந்துரை என்ன என்று அடையாள அட்டையிலேயே எல்லாம் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு தான், அவர் பதிவு செய்ததற்கு பின்னாலேதான் வழங்குகிறார்கள். எனவே குறு சிறு விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய எந்த சலுகையையும் யாரும் தட்டிப் பறித்து விட முடியாது, தமிழகத்தினுடைய பொற்கால ஆட்சியில், டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே.

பிற்பகல் 4.10

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மையிலேயே குற்றச்சாட்டாக சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. அந்த உரிய விவசாயிகளுக்கு, சிறு, குறு, விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். தாங்கள் ஆதாரம் எல்லாம் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்கான ஆதாரங்களைக் கூட நான் கொண்டு வந்திருக்கிறேன். தேவைப்பட்டால் அமைச்சரிடத்திலே கூட நேரில் கொடுக்க தயாராக இருக்கிறேன். ஆனால், அதே போன்று விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய உரங்கள். இன்றைக்கு என்னுடைய நாகை மாவட்டத்தில் குறுவை மகசூல் என்பது ஜூன் மாதம் 12-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்ட பின்னால் ஆர்வத்தோடு விவசாயிகள் சம்பா பருவத்திலே செய்யக் கூடிய சாகுபடியைக் கூட குறுவை சாகுபடியில் செய்தார்கள். பல ரக நெல்களை சாகுபடி செய்தார்கள். தாளடி கூட, இயற்கை ஒத்துழைத்த காரணத்தினால் பரவலாக இரண்டாவது போக சாகுபடி கூட, உழவு செய்தார்கள். ஆனால் அந்த சாகுபடி செய்யப்பட்ட 15 தினங்களுக்குள்ளாக யூரியாவை விவசாயிகள் பயன்படுத்தவில்லை என்று சொன்னால் உண்மையிலேயே அந்த விவசாயம் அத்தனையும் எதிர்பார்க்கிற அளவுக்கு விவசாய மகசூலில் நெல் கண்டுமுதல் செய்ய முடியாது. அரசாங்கம் நிர்ணயித்திருக்கக் கூடிய அந்த 105 மெட்ரிக் டன் நெல்லை அவர்கள் கண்டுமுதல் செய்ய முடியாத அளவுக்கு பாதகம் ஏற்படும். ஆக, இந்த ஆண்டைப் பொறுத்த மட்டில் விவசாயிகளுக்கு யூரியாவை நம்முடைய வேளாண்மைத் துறை மூலமாக வழங்குவதிலே முற்றிலும் கிடைக்காத ஒரு நிலைமை ஏற்பட்டது. கிடைக்காதது மட்டும் அல்ல. தனியாரிடத்திலே கிடைத்தது. தட்டுப்பாடு ஏற்பட்டதன் மூலமாக யூரியாவினுடைய விலை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு விற்கக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. விவசாயிகளே ஒன்று திரண்டு பதுக்கப்பட்டிருக்கிற உரங்களை எடுத்து விவசாயிகளுக்கு.....

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு முறை இந்த அவையிலே உரப் பிரச்சினையைப் பற்றி நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். இந்திய துணைக்கண்டத்திலேயே இந்திய அரசாங்கத்தினுடைய கையிலே தான் இருக்கிறது உரத்தை வழங்குகின்ற அந்த தகுதி. ஆனால், இன்றைக்கு மாநில அரசு தன்னுடைய மாநிலத்தின் தேவையாக எவ்வளவு உரங்கள் வேண்டுமென்ற ஒதுக்கீட்டை மத்திய அரசிடம் நாம் கேட்கிறோம். அதன் அடிப்படையிலே தான் உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் குறிப்பாக சொல்லவேண்டுமானால் வேளாண்மைத் துறை உர வியாபாரத்தை எங்கேயுமே செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மத்திய அரசு ஒதுக்கக் கூடிய இரசாயன உரங்கள் தனியாருக்கு ஒதுக்கப்படுகிறது, கூட்டுறவுத் துறைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. குறுவைப் பருவத்திலே யூரியா உரம் பெறுவதில் பிரச்சினைகள் எத்தனை என்பதை மத்திய அரசிற்கு நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். பத்திரிகையில் எல்லாம் வந்திருக்கிறது. கடுமையான கண்டனத்தைக் கூட நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசிற்கு தெரிவித்திருக்கிறார்கள். அதன் பயனாக இந்திய துணைக் கண்டத்திலேயே நமக்கு ஓரளவு யூரியா உரம் கிடைத்தது. மற்ற மாநிலங்களிலே நிலைமை இதைவிட மோசம். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால். இரண்டு இடைத் தேர்தல்கள். ஆந்திராவிலே ஒரு தேர்தல், கர்நாடகத்திலே ஒரு தேர்தல். இந்தத் தேர்தலில் எப்படியாவது மத்திய அரசில் ஆளக்கூடிய கட்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தமிழகத்திற்கு வரவேண்டிய இரசாயன உரங்களையெல்லாம் அங்கே திருப்பி திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் தருமபுரி மாவட்டத்திலே சாலையிலே மக்கள் மறியல் நடத்தினார்கள். ஏன் ? தமிழகத்திலே சென்னையிலே இருக்கக் கூடிய இரசாயன உரங்கள், தூத்துக்குடியிலே இருக்கக் கூடிய இரசாயன உரங்கள் எங்கள் மாநிலத்தின் வழியாக கர்நாடகத்திற்கு எப்படி போகலாம், ஆந்திராவிற்கு எப்படி போகலாம் என்று வாகனங்களைத் தடுத்து மறியல் எல்லாம் செய்தார்கள். இப்படியெல்லாம் அடாவடித்தனங்கள் செய்து கூட மத்தியிலே ஆளக்கூடிய கட்சி இரண்டு மாநிலத்திலும் கோட்டை விட்டது. இந்த நிலைமையை எல்லாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உரத் தட்டுப்பாடு என்பது இந்தியா முழுமைக்கும் இருந்தது. இதற்கு தமிழக அரசு எந்த நிலையிலும் பொறுப்பல்ல. இருந்தாலும் சீராக, நேர்மையாக நாம் வினியோகம் செய்திருக்கிறோம். அதன் பயனாகத் தான் குறுவையிலே மட்டும் ஒரு ஹெக்டேருக்கு 4136 கிலோ என்ற அளவிற்கு அரிசியை உற்பத்தி செய்திருக்கிறோம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபொழுது ஒன்று குறிப்பிட்டேன். வேளாண்மைத் துறை மூலமாக, கூட்டுறவு மூலமாக உரம் கிடைக்கவில்லை. ஆனால், தனியாரிடத்திலே உரம் எப்படி கிடைத்தது ? ஆக இரண்டு மாநிலங்களிலே தேர்தல் நடந்திருக்கலாம். மத்திய அரசு கூட உரங்களை அனுமதிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் ஒரு அரசுக்கு வழங்காமல் தனியாருக்குக் கொடுப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் சொன்னேன். உரத்தை வழங்கக் கூடிய அதிகாரம் மாநிலத்தின் கையிலே இல்லை. மத்திய அரசாங்கம்தான் கூட்டுறவுத் துறைக்கும், தனியார் துறைக்கும் ஒதுக்குகிறது. எனவே, அவர்கள் ஒதுக்கீடு செய்தால்தான் தனியாருடைய கடைக்குப் போகிறது. தனியார்கள் தவறு செய்தால் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதிக விலைக்கு விற்றவர் லைசென்ஸை முடக்கி இருக்கிறோம். அதுதான் எங்களுடைய கையிலே இருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய கையிலேதான் அத்தனை அதிகாரமும் குவிக்கப்பட்டிருக்கிறது. திராவிட இயக்கம் இந்த மண்ணிலே தோன்றிய நாள் முதல், பேறறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே அமர்ந்த நாள் முதல், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவைக்கு வந்ததிலிருந்து அன்று முதல் எடுத்து வைக்கக் கூடிய ஒரே வாதம் மத்திய அரசினுடைய அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்பதுதான்.

பிற்பகல் 4.15

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுக்கு ஆதாரத்தோடு ஒன்றை குறிப்பிட வேண்டும் என்று சொன்னால் எங்களுடைய வேளாண்மைத் துறையினுடைய கோட்டத்தினுடைய அதிகாரிகள் அந்த உரம் வழங்கக்கூடிய நேரத்தில் யார் யாருக்கு எல்லாம் தனியார்களுக்கு பெர்மிட் கொடுத்தார்கள் என்பதனை தாங்கள் கேட்டுத் தெரிந்துகொண்டால் எனக்கு அது போதுமானது. ஏனென்று சொன்னால் தமிழக அரசின் சார்பாக நம்முடைய வேளாண்மை துறை அதிகாரிகள்தான் அந்த தனியார்களுக்கு உரங்களை வழங்குகின்றபோது பெர்மிட் கொடுப்பதே. உங்களுடைய அதிகாரிகள்தான் கொடுக்கிறார்கள். தனியார்கள் எங்கேயோ தனியாகப் போய் பெற்றுக்கொண்டு வந்து இங்கு வியாபாரம்....

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கருத்தின் அடிப்படையில் பேசுகிறார் என்று தெரியவில்லை. உரக்கடையாளர்கள் உர வியாபாரம் செய்வதற்கு நாம் உரிமை வழங்குகின்றோம். அவர்களுக்குத்தான் வழங்கக்கூடிய அதிகாரம். அந்த உரிமையை வைத்துக்கொண்டு தவறாகப் பயன்படுத்தினால் நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் நமக்கு, உரத்தை வழங்குவது மத்திய அரசாங்கம்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அந்த உரிமங்களைப் பெற்றிருக்கின்ற தனி வியாபாரிகள் எத்தனை பேர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு இருக்கிறது, அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னால் போதும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று எலி ஒழிப்புத் திட்டம். அநேகமாக ஒரு நேரத்தில் விவசாயிகளுக்கு முதல் எதிரி என்று சொன்னால் எலியாகத்தான் இருந்தது. இப்போது அதற்கு மாறாக பல்வேறு பூச்சிக்கொல்லி மருந்துகள் எல்லாம் வந்துவிட்டது. இருந்தாலும் எலித் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. இப்போது விவசாயிகள் நவீனமான முறையில் மின்சாரம் மூலமாக எலிகளை ஒழிக்கலாம் என்று ஒரு திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு குறைந்த மின் அழுத்தங்களைக் கொண்டு வயல்கள் ஓரங்களில் மின் கம்பிகளைப் பொருத்தி அந்த எலிகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் அதிகாரப்பூர்வமான அனுமதிகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிகமான சேதாரங்கள். அதுவும் இதுபோன்ற இறவைப் பாசனத்தில் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. பருத்தி உற்பத்தியில் விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. பருத்தி உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னால் அந்த விவசாயிகள் இதுபோன்ற எலி மருந்துக் கட்டிகளை வைக்க முடியாமல் இந்த மின்சாரத்தை பொருத்தித் தான் அதை கட்டுப்படுத்த முடியும். அதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மாவட்டந்தோறும் மண் பரிசோதனைகளை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு வேளாண்மையில் ஈடுபடுவதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியம் மூலமாக மண் பரிசோதனை அவசியம் செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய புல்டோசர்களை ஏற்கெனவே விவசாயிகளுக்கு மானிய வாடகையிலே வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதிகமான வாடகையினால் விவசாயிகள் எடுத்துக்கொள்ள முடியாத நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தேவையான மண் பரிசோதனை நிலையங்கள் மாநிலத்திலே இருக்கின்றன. நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் ஆங்காங்கே தன்னுடைய பணியைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறது. இன்னும்கூட ஒன்றைச் சொல்கிறேன். கர்நாடக மாநிலத்திலே தேர்தல் நடைபெற்ற போது தனியார்கள் எல்லாம் கூட அங்கே போய் லோடு லோடாக யூரியா உரங்கள் வாங்கி வந்து எல்லையிலே கொள்ளை விலைக்கு விற்றார்கள். அதையும் பிடித்திருக்கிறோம். ஆந்திராவிலிருந்து சித்தூர்

வழியாக வந்த லாரிகளை நாங்கள் பிடித்து இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே எலிகள் தொல்லை இருப்பதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறது. எலிகளைக் கொல்லக்கூடிய மருந்துகளை, மாத்திரைகளை நாங்கள் தருகிறோம். விவசாயிகள் சற்று ஒத்துழைக்க வேண்டும். மதுரை, திருச்சி மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் எல்லாம் விவசாயப் பருவத்திலே சாகுபடியைத் துவக்குவதற்கு முன்னால் அவர்கள் எல்லாம் வரப்பு பரப்பை உடைத்து கட்டி வேலை செய்வார்கள். என்னவோ தெரியவில்லை. தஞ்சையிலும், நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலும் வரப்பு என்பது யானை உயரத்திற்கு இருக்கிறது. விவசாயிகளும் ஒத்துழைத்து அவர்களும் வரப்பை கோடையிலே உடைத்து எலிகளைப் பிடித்து அடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, அந்த முன்மாதிரியான விவசாயப் பண்ணைகள் ஒவ்வொரு பஞ்சாயத்து அமைப்புகளுக்கும் தரப்பட வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக தாட்கோவில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கின்ற பணிகளுக்காக தரப்பட்டு வந்த அந்த மானியத் தொகைகள் நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் நீங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இறவைப் பாசன விவசாயிகளுக்கு இறவைப் பாசன பம்ப் செட்டுகள் எல்லாம் வழங்கப்பட்டு வந்தது. அது கூட்டுறவு சங்கம் மூலமாக வழங்கப்பட்டு வந்தது. சமீபத்திலே அதையெல்லாம் வழங்காமல் அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது. அதையும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக வழங்கக்கூடிய எந்த நிதியையும் இந்த அரசாங்கம் நிறுத்தவில்லை. எவ்வளவு ஆழ்குழாய் கிணறுகள் போட்டிருக்கிறோம் என்ற புள்ளிவிவரத்தையெல்லாம் பிறகு சொல்கிறேன். அதைப்போல புல்டோசரை பயன்படுத்துகின்றபோது இன்றைக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இருக்கக் கூடிய சலுகை தொடர்ந்து நீடிக்கிறது. நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

பிற்பகல் 4.20

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல இன்றையதினம் நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் முழுமையாக 13 இடங்களில் விதை உற்பத்தி செய்யக்கூடிய பண்ணைகள் இருக்கின்றன. ஆனால் இதுவரையிலும் விதைச் சான்று இயக்குநர் அலுவலகம் அங்கே திறக்கப்படவில்லை. அது அதிகமாக நெல் உற்பத்தி செய்யக் கூடிய மாவட்டம். 13 இடங்களில் அந்த விதை உற்பத்தி செய்யக்கூடிய பண்ணைகள் அங்கே இருந்தும், இல்லாத இடங்களில் எல்லாம் இதுபோன்ற அலுவலகங்கள்

இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த விதை நேர்த்தி செய்யக்கூடிய அந்தப் பண்ணையின் இயக்குநர் அலுவலகத்தை அந்த மாவட்டத்தில் திறக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு நம்முடைய கால்நடை துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. என்னுடைய திருத்துறைப்பூண்டியில் கால்நடை மருந்தகமாக அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த தாலுக்கா மருந்தகத்தை தாலுக்கா மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாழடைந்த நிலையில் அந்தக் கட்டிடங்கள் இருக்கின்றன. போதுமான அளவுக்கு மருந்துகள் அங்கே இல்லை. ஆகவே அந்த மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மனிதர்களுக்கு உடல்நலம் சரியில்லை என்று சொன்னால், அவர்களை உடனடியாக ஏதாவது ஒரு சிறிய வாகனத்தில் கொண்டுவந்து வைத்தியம் செய்துவிடலாம். ஆனால் மாடுகளுக்கு, கால்நடைகளுக்கு, ஏதாவது உடல்நலம் சரியில்லை என்று சொன்னால் அவைகளை கொண்டுவந்து காட்ட முடியாது. ஆகவே கால்நடை மருத்துவர்களுக்கு எல்லா இடங்களிலும், மருந்தகமாக இருந்தாலும், மருத்துவமனையாக இருநதாலும் ஒரு இரு சக்கர வண்டியாவது கொடுப்பதற்கான வாய்ப்புகளை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு திட்டங்களைக் கொண்டு வரக்கூடியவர்கள் நீங்கள். ஆகவே அந்த மருத்துவர்களுக்கு நீங்கள் இரு சக்கர வண்டிகளை வழங்கவேண்டும். அதேபோல் தொலைபேசி வசதியைச் செய்து கொடுக்கவேண்டும். கிராமப்புறங்களில் இருக்கக்கூடியவர்கள்தான் இன்றையதினம் கால்நடைகளை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் விவசாயிகளைச் சார்ந்திருக்கிற அந்த கால்நடைகள் விவசாயிகளுக்கு மிக உதவிகரமாக இருக்கிறது. அந்த கால்நடைகளை அவர்களுக்கு இருக்கக்கூடிய முதலாக அதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு நோய்கள் இன்றையதினம் வந்துகொண்டிருக்கின்றன. எந்த ஒரு மருந்தகத்திற்கு, மருத்துவமனைக்குச் சென்றாலும் கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகளுக்கு தனியார் கடைகளுக்கு சீட்டு எழுதிக் கொடுக்கக்கூடிய அளவுக்குத்தான் இன்றையதினம் நிலைமை இருக்கிறது. ஆகவே, நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில், பல்வேறு துறைகளில் இருக்கக்கூடிய டாக்டர்களுக்கும் கால்நடை மருத்துவர்களுக்கும் இருக்கிற வித்தியாசத்தை நீண்டகாலமாக தங்களுடைய கோரிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அனைத்து

சலுகைகளையும் தங்களுக்கும் வழங்கவேண்டுமென்று சொல்லி அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சலுகைகளை நீங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழ்நாட்டில் இன்றையதினம் 200 கால்நடை கிளை நிலையங்கள் இருக்கின்றன. அனேகமாக 450 பணியிடங்கள் இன்றையதினம் காலியாக இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். அதை நிரப்புவதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கால்நடை ஆய்வாளர் பயிற்சியில் இன்றைக்கு புதியவர்களைப் போடுவதற்கு மாறாக படித்துப் பட்டம் பெற்றவர்களை அதிலே நியமிப்பதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு விளக்கங்களைச் சொல்லியிருந்த போதிலும்கூட இன்றைக்கு விவசாயிகள் எந்த ஒரு லாபத்தையும் கருதாமல் தங்களுடைய உணவு தானியத்தை உற்பத்தி செய்கிறபோது அந்த விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையை நீங்கள் உடனடியாக வழங்கவேண்டும். ஏற்கெனவே அரசு கொடுத்துக் கொண்டிருந்த அந்த 35 ரூபாய் ஊக்கத் தொகை என்பது இன்றைக்கு ஏறியிருக்கக்கூடிய உரத்தின் விலை, பூச்சி மருந்தின் விலை இன்னும் சொன்னால் பல்வேறு பூச்சி மருந்து-தனியார் கம்பெனிகள் தயாரிக்கக்கூடிய பூச்சி மருந்துகள்-எல்லாம் விவசாயிகள் அங்கே இருக்கக்கூடிய வேளாண்மை விரிவாக்க மையத்திற்குச் சென்று இதற்குரிய மருந்தை அவர்கள் கேட்கிறபோது அவர்கள் கொடுக்கக்கூடிய மருந்தில் எந்த ஒரு பூச்சியும் அழியாத நிலை இருக்கிறது. இதற்கு என்ன என்ன மருந்து அடிக்கலாம், எப்படிப்பட்ட கம்பெனிகளை அரசு அனுமதிக்கவேண்டுமென்று.............

பிற்பகல் 4.25

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடைசியாக குறுக்கிடலாம் என்று நினைக்கிறேன். ஆனால் இருந்தாலும் என்னை அவர் இருக்க விடுவது இல்லை. (சிரிப்பு) ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விதை சான்று துறையினுடைய அலுவலகம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள வேளாண்மை இணை இயக்குநர் இடத்திலே விதை சான்று துறை அலுவலர் இருக்கிறார்; வட்ட நிலையில் உள்ள உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதை சான்று துறை அலுவலர் இருக்கிறார்; விதைகளைப் பொறுத்தமட்டிலே இந்தியாவிலேயே அதிக சான்று பெற்ற விதைகளை வழங்கக் கூடிய ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான் என்ற புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த அவையின் வாயிலாக ஒரு கருத்தை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு வேளாண்மை உற்பத்திக்கு அடிப்படைக் காரணமே, ஆதாரமே விதைதான். எவ்வளவு நேர்த்தியான, தரமான விதைகளைப் பயன்படுத்துகிறோமோ அதிலே இருந்துதான் உற்பத்தியே அதிகமாகிறது. ஏறத்தாழ 20 சதவீத உற்பத்தி கூடுவதே, விதையின் காரணமாகத்தான். ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ 22 சதவீதம் மட்டுமே நம்மால் சான்றளிக்கப்பட்ட விதைகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவிலேயே அதிகமாக நம்முடைய மாநிலத்திலேதான் வழங்கிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் விதைகளைப் பொறுத்தமட்டிலே நான் ஒன்றை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். விதைகள் என்பவை சாகா வரம் பெற்றவை. எப்படி என்று சொன்னால், இரண்டாவது உலகப் போரிலே ஹிட்லருடைய படை, ருஷிய நாட்டின் மீது படையெடுத்து சென்றபோது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஹிட்லர் கதையெல்லாம் பதிலுரையில் சொல்லலாமே.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மையை இப்பொழுதே சொல்லிவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியிலே உங்களுடைய பதிலுரையிலே சொல்லலாமே என்று சொல்கிறேன். இன்னும் 12 உறுப்பினர்கள் பேச வேண்டும். உங்களுடைய பதிலுரையும் இருக்கிறது. ஆகவேதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறிய விஷயம்தான். ஆகவே, சொல்லி விடுகிறேன். அன்றைக்கு ருஷ்ய நாட்டின்மீது ஹிட்லர் படையெடுத்தபோது, செயின்ட் பீட்டர்ஸ் நகரை முற்றுகையிட்டார்கள். அந்த முற்றுகையின் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். ஒருநாள் முற்றுகை தகர்க்கப்பட்டு, அந்தப் படைகள் உள்ளே நுழைந்தபோது, அங்கே ஒரு சிறுவனைப் பார்த்து, இங்கே நீங்கள் ஏன் இறந்து போகிறீர்கள் என்று கேட்டபோது, எங்களிடத்திலே உணவுதானியங்கள் இல்லை. ஆகவே இறந்து போகிறோம் என்று சொன்னான். அப்போது வீரன் கேட்டானாம். இங்கே பாபிலோனில் இருக்கக்கூடிய விதை சேமிப்புக் கிடங்கிலுள்ள கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு விதைகளையெல்லாம் நீங்கள் சாப்பிட்டு உயிர் வாழ்ந்து இருக்கக்கூடாதா என்று கேட்டபோது, அந்தச் சிறுவன் சொன்னானாம். இந்த ஜென்மம், அதாவது இந்த மானிடப் பிறவி என்பது பிறந்து மடியக் கூடியது. விதைகள் சாகாவரம் பெற்றவை, எனவே எங்களுக்குப் பின்னாலே வரக்கூடிய எங்களுடைய சந்ததிக்கு அது வேண்டுமென்பதற்காக நாங்கள் விட்டுச் சென்று இருக்கிறோம் என்று சொன்னானாம். அங்கே, உலகத்திலே எப்படி

நடந்தாலும், அதற்கு முன்பாக, தொல்காப்பியம் தோன்றுவதற்கு முன்னாலே நம்முடைய தமிழ் குடிமக்கள் ஒரு நூதனமான முறையை அன்றைக்கே நமக்கு வழிகாட்டி வைத்திருக்கிறார்கள். இந்துக் கோயில்களிலே கலசம் வைக்கிறோம் கோபுரத்திலே; அந்தக் கலசத்திலே இன்றைக்கும் அவர்கள் ஒரு விதையை வைத்துத்தான் நிரப்புகிறார்கள். அந்த விதை 'சாமை' என்ற விதையை அதிலே நிரப்புகிறார்கள். ஏனென்று சொன்னால் ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு அந்த விதை முளைக்கக்கூடிய தன்மையோடு இருக்கும். என்றாவது ஒரு நாள் மிகப் பெரிய பட்டினிச்சாவு இந்த மண்ணிலே நிகழ்ந்தால், அன்றைக்கு அந்தக் கலசத்திலே இருக்கிற அந்த வரகு விதையை எடுத்தாவது நாம் பிழைத்துக் கொள்வதற்காக தமிழ்ச் சமுதாயம் விட்டுச் சென்றிருக்கிறது. எனவே, அதையெல்லாம் உணர்ந்துதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விதைக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர், கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 35 ரூபாய் போதாது, இன்னும் கொஞ்சம் அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள், அதைத்தான் அவர் கேட்டார், நீங்கள் ஹிட்லர் கதையெல்லாம் சொல்லிவிட்டு அதற்கும் பதில் சொன்னால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் நெல் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் தரக்கூடிய ஊக்கத்தொகையைக் கேட்கிறார்கள். ஏற்கெனவே இன்றைக்கு பேரலல் புரக்யூர்மெண்ட் வந்துவிட்டது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அதிகாரிகளுடைய கவனத்திற்கு அதை நீங்கள்கொண்டு போகவேண்டும் என்பதற்காகத்தான். 17-3-1995-ஆம் தேதியன்று, திரு. பச்சையப்பன் என்பவர் வந்தவாசியிலே 10 டன் விதைகளை வாங்கிக்கொண்டு போய், தற்போது அதை பருவ சாகுபடிக்கு முளைக்க வைத்தார்கள். ஆனால், அவை முளைக்காமலேயே அந்த 10 டன் விதைகளும் முழுமையாக பாழாகி விட்டன. அதை வாங்கியதற்கான ரசீதுகள் எல்லாம் இருக்கின்றன. வேண்டுமானால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொடுக்கிறேன். விதைகள் இப்படியெல்லாம் இருக்கின்றன.

அதை திருப்பிக்கொடுத்தாலும் அவர்கள் வாங்குவதில்லை. ஆகவே, நேர்த்தி செய்கிறபோது நல்லமுறையிலே செய்ய வேண்டும். நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது என்னவென்று சொன்னால், அந்த விதைகளுக்கு விதைத்திறன் வந்தவுடனேயே அவற்றைப் பூச்சிகள் தாக்குகின்ற தன்மை வந்துவிடுகிறது. ஆதலால், எந்தெந்த கம்பெனிகளில் தயாரிக்கப்படுகின்ற, எந்தெந்த பூச்சி மருந்துகளை வாங்கி, எந்தெந்தப் பருவத்தில் பயன்படுத்த வேண்டுமென்பதையும், அரசாங்கம் பரிசீலித்து, அதை அறிவிப்பாக, வேளாண்மைத் துறை மூலமாக அறிவிக்க வேண்டும். ஏனென்றால் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருக்கக்கூடியவர்களிடத்திலே கேட்டால் எதையாவது ஒரு மருந்தை கொடுத்து விடுகிறார்கள். ஏனென்றால் மருந்துகள் குறைந்த விலையில் விற்பதில்லை. அநேகமாக ஒரு விவசாயி செய்கின்ற சாகுபடி செலவைவிட மருந்துகளுக்குச் செலவு செய்வது இரண்டு மடங்காக உயர்ந்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகளை வேளாண்மைத் துறை விற்பனை செய்வதில்லை என்ற முடிவை இந்த அரசாங்கம் எடுத்து, ஏறத்தாழ 1½ ஆண்டுக்காலத்திற்கு மேலாக நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் பூச்சி மருந்துகளையே பயன்படுத்தாமல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்திருக்கிறோம். ஏனென்று சொன்னால், ஒரு பூச்சிக்கு இயற்கையிலேயே இன்னொரு எதிர்ப்புப் பூச்சி உண்டு. அந்த எதிர்ப்புப் பூச்சியைக் கொண்டு அந்தப் பூச்சியை அழிக்க வேண்டுமென்பதற்காக இன்றைக்குப் பெண்களுக்கெல்லாம் பயிற்சி தந்து, அவர்களுக்கெல்லாம் சீருடை தந்து, மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தகவலுக்காகச் சொல்கிறேன். உரப் பரிசோதனை அதாவது உரங்களிலே கலப்படம் என்று சொன்னீர்கள்; இன்றைக்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கையிலே 705 உரிமங்கள் - லைசென்ஸ் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறது; 36 லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4.30

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய ஸ்ப்ரேயர், தார்ப்பாய், மண்வெட்டி இப்படிப்பட்ட பொருட்கள் மானிய விலையிலே வழங்கப்படுகிறது. அது

உண்மையான விவசாயிகளுக்குப் போய்ச்சேர மாட்டேன் என்கிறது. அதற்கு ஏதாவது அரசாங்கத்தின் தரப்பில், அதை எப்படிக் கொடுக்க வேண்டுமென்று - இல்லையென்றால் விவசாயிகளுக்காகச் சிறு குறு விவசாயிகளுக்குக் கார்டுகள் வழங்கப்படுகிறது, அந்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று நீங்கள் உத்தரவு போட வேண்டும். யார் வேண்டுமானாலும், விவசாயி என்ற பெயரால் வி.ஏ.ஓ.விடத்திலே ஒரு சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று சொன்னால், நிலமே இல்லாதவர்கள் வாங்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த மோசடியிலேயிருந்து தவிர்ப்பதற்கு - அதுபோன்று உண்மையான விவசாயிகளுக்குக் கிடைக்காத நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. இந்தத் தவறு நடக்காமல் நீங்கள் ஒரு உத்திரவைப் போட வேண்டும். அப்படிப் போட்டு அந்த உண்மையான சிறு குறு விவசாயிகளுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு குறு விவசாயிகளுக்குத்தான் மானிய விலையிலே எல்லாப் பொருட்களும் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அடையாள அட்டை வழங்கிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது குடும்ப அட்டைகூட ரேஷன் கடையிலே அரிசி, பருப்பு வாங்குவதற்கு அரசாங்கம் தருகிறது. சில மக்கள் அதைக்கூட அடகு வைத்து விடுகிறார்கள். சில பணக்காரர்கள் அதை அபகரித்துக் கொள்ளுகிறார்கள். இதைப்போன்ற நடவடிக்கைகளெல்லாம் இல்லாமல் அரசாங்கம் பார்த்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஒரு இடத்திலே விதை வாங்கினார்களாம், சரியாக முளைக்கவில்லை என்றும் சொன்னார்கள். அந்தத் தகவலை எனக்குத் தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தகவலை அமைச்சரிடம் கொடுத்து விடுங்கள். திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் இந்த மாமன்றத்தில் என்னைப் பேசுகின்ற அளவிற்கு எனது தகுதியினை உயர்த்திய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை; வாழ்த்துவதற்கு வயதும் இல்லை; நன்றியுடன் வணங்குகின்றேன்.

இந்திய விவசாயி கடனிலே பிறக்கிறான்; கடனிலேயே வாழ்கிறான்; கடனிலேயே சாகிறான் என்ற நிலைமையை உணர்ந்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், விவசாயிகள் பின்பற்றும் வகையில் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி பல்வேறு பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியினை அதிகரித்து இலாபம் அடைவதற்கு வழிவகுப்பதுடன், பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமுதாயத்தினை உருவாக்குகின்ற வேளாண்மைத் துறை செயல்பாட்டினை உண்மையிலேயே மனதாரப் பாராட்டுகிறேன். வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையின் தேவைக்கேற்ப........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்கு விளக்கம் தருகிறேன். இந்த விதை வாங்கப்பட்ட இடம் மத்திய அரசு - நேஷனல் சீட் கார்ப்பரேஷனிலே வாங்கியிருக்கிறார்கள். இந்த அத்தாட்சி கொடுத்தது ஆந்திரப் பிரதேசம்; தமிழ்நாட்டிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஜி. பழனிசாமி: வாங்கியது தமிழ்நாட்டிலேதான்; ஆந்திராவிலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கலாம். அவர் சொல்வது, மத்திய அரசு விதைப் பண்ணையிலே வாங்கிவிட்டு இவரைப்போய்த் தொந்தரவு செய்தால் என்ன செய்வது?

திரு. ஜி. பழனிசாமி: தமிழ்நாட்டு விவசாயிகளை ஏமாற்றக்கூடிய மத்திய விதைப் பண்ணை, விதை விற்பனை நிலையம் இருக்கிறது என்றால், அதற்குரிய நடவடிக்கையை எடுங்கள். இல்லை என்றால் அதைத் தமிழ்நாட்டிலே விற்பதற்குத் தடை விதிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, விதைச் சட்டம் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறோம்; நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது ஆந்திர மாநிலத்திலே வழங்கப்பட்ட அட்டை, இந்த விதையை உற்பத்தி செய்தது மத்திய அரசாங்கத்தினுடைய நேஷனல் சீட் கார்ப்பரேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான், நம்முடைய விவசாயிகள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதற்காக துறையின் சார்பில் அவர்களுக்கு எழுதி நடவடிக்கை எடுங்கள் என்று கேட்கிறார். திரு. என். ஆர். சிவபதி.

பிற்பகல் 4.35

திரு. என். ஆர். சிவபதி: வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையின் தேவைக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரித்து இன்றைக்கு 1994-95- ஆம் ஆண்டில் வியக்கத்தக்க அளவில் முன்னிலையில் என்றும் அடைந்திராத அளவான 105 இலட்சம் டன் உணவு உற்பத்தியை ஏற்படுத்தியிருப்பது, இதயதெய்வம் புரட்சித் தலைவியின் அரசு ஒவ்வொரு துறையிலும் முன்னிலையில் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையில் இன்றைக்கு வேளாண்மைத் துறை முன்னேற்றம் அடைந்திருப்பதை எண்ணி உண்மையிலேயே பாராட்டுகிறேன். ஒருங்கிணைந்த பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த ஒருங்கிணைந்த பாதுகாப்பு தொழில்நுட்பமானது இன்றைக்கு கிராமத்திலுள்ள ஒவ்வொரு விவசாய பெருங்குடி மக்களும் பயன்பெறுகின்றவகையில் அவர்கள் புரிந்துகொள்ளுகின்ற அளவுக்கு விளம்பரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பது பாராட்டுக்குரியது. அதேநேரத்தில் எனது தொகுதியில் ஏலூர்ப்பட்டி, மங்கலம், தத்தையங்கார்பேட்டை ஆகிய பகுதிகளில் தரிசு நிலங்கள் இருக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே, இந்த மேம்பாட்டுத் திட்டத்தினை எனது தொட்டியம் தொகுதியிலும் செயல்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையின் மூலம் நிறைய பயிர் பராமரிப்பு, மருந்து தெளித்தல், சிக்கன நீர் பாசனம் ஆகியவை குறித்து விவசாயிகள் புரிந்து கொள்கின்ற வகையில் இப்போது ஆங்காங்கே நடமாடும் வாகனங்களில் திரையிடப்பட்டு வருவதை இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இதை மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தந்தப் பகுதியிலே ஏற்படுகின்ற பயிர்களுக்கு உண்டாகின்ற நோய்களை எல்லாம் அறிந்து, விவசாயிகள் எப்படி கையாள வேண்டும் என்பதை தக்கத் தருணத்தில் திரைப்படத்தின் மூலம் வெளியிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள் தக்க தருணத்தில் கிடைக்க அந்தந்த விவசாயக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

உழவர் பயிற்சி மையம் ஒன்று கோவை, மதுரை, திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் இருப்பதுபோல், திருச்சி மாவட்டத்திலும் ஒரு உழவர் பயிற்சி மையத்தினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கசிவுநீர் குட்டைகள் அமைத்தல் இலக்குக்கு சென்ற ஆண்டு 977.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டும், பிப்ரவரி 95 முடிய 611.06 இலட்சம்தான் செலவிடப்பட்டுள்ளன. இதைக் குறிப்பிடுகின்றபோது மீதமுள்ள லட்சக்கணக்கான ரூபாய்களின் மூலம் விவசாயிகள் பயன்பெறுவது தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கசிவுநீர் குட்டையினை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு மீதமுள்ள தொகையினை இந்த ஆண்டிலாவது செலவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்தொகையை செலவிடாத அரசு அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கோவில் குளங்கள் புதுப்பிக்க 1994-95ஆம் ஆண்டில் ரூபாய் 422.25 இலட்சம் ஒதுக்கப்பட்டு ரூ. 86.90 இலட்சம்தான் செலவிடப்பட்டுள்ளது. ஆகவே, இதிலும் நிதி சரியான முறையில் செலவிடப்படவில்லை. செலவிடாத அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்து, இந்தத் திட்டத்தை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை போன்ற மாநகரங்களில் வீட்டுத் தோட்டம் உருவாக்கும் வகையில், மா, பலா, தென்னை, வாழை, ஆகிய கன்றுகள் எளிதாக கிடைப்பதற்கு விவசாயத் துறை மூலம் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4.40

எனது தொட்டியம் தொகுதியில் விவசாயப் பெருங்குடிமக்களின் நலன் கருதி ஸ்ரீராமசமுத்திரத்தில் நிரந்தர குறம்பு அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முள்ளிப்பாடி ஏரியை விவசாயப் பொறியியல் துறையின்மூலம் தூர் எடுத்து ஆழப்படுத்தி மழைக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்க ஏதுவாகச் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகையநல்லூர் மற்றும் மங்களம் ஏரிகளைத் தூர் எடுத்து விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தோளூர்பட்டி மற்றும் பக்கத்திலே உள்ள அனைத்து விவசாயிகளும் பயனடையும் வகையில் புதிய ஏரி அமைக்கும் பணியைப் பொறுத்த வரையில் அனைத்துத் துறைகளிலும் அனுமதி பெறப்பட்டுவிட்ட நிலையில் இருக்கிறது. ஆகவே விவசாய பொறியியல் துறையின் மூலம் இதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயே தொட்டியம் தொகுதியில்தான் வாழை, கொடிக்கால் அதிகம் சாகுபடியாகின்றன என்பது மாண்புமிகு வேளாண்மை அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். இந்த இரண்டு ஆராய்ச்சி மையங்கள் அமைச்சரின் தொகுதியில் இருக்கின்ற காரணத்தால் கிளை ஆராய்ச்சி மையங்களாவது முன்மாதிரி மையங்களாவது எனது தொகுதியில் தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் நடந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறபோது எனது கருத்தாக ஒன்றைத் தெரிவிக்கவேண்டும் என்று தோன்றுகிறது. மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களும், மாநிலங்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் தேர்ந்தெடுப்பதுபோல் அந்தந்த மாநில ஆளுநர்களை அந்தந்த மாநிலத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்களுக்கு எல்லாம்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே ஒரு தீர்மானமாகக் கொண்டு வந்து, விதிவிலக்குக் கொடுத்துத்தான் பேசப்பட்டது. எனவே எல்லா நேரத்திலும் அதைப் பேசக்கூடாது. அந்தத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது மட்டும்தான் பேசவேண்டும் என்று விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். எனவே எல்லா நேரத்திலும் பொதுவாகப் பேசக்கூடாது. (குறுக்கீடு) இதுவரை அவர் பேசியது சரி (குறுக்கீடு) அடுத்து வருகிறார். அதனால்தான் சொல்கிறேன். நீங்கள் சொன்னது மாதிரி உங்கள் கருத்தாகச் சொல்லலாம். சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும் என்று மட்டும் சொல்லலாம். அதற்கு மேல் வேண்டாம்.

திரு. என். ஆர். சிவபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவில் உள்ள முதலமைச்சர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகவும், எதிலும் புரட்சி செய்து சாதனை படைக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சட்டப்பேரவையில் ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து, அதுபோல் இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவரவேண்டும் எனக் கேட்கவேண்டும் எனக்கேட்டு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம். ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து அல்லது ஆறு நிமிடத்தில் முடித்துவிட்டால் எல்லோருக்கும் வாய்ப்புத் தரலாம். அல்லது இன்றைக்கு பலருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கும்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, பால்வளம், கால்நடை வளர்ப்பு ஆகிய இந்த நாட்டின் முதுகெலும்பு போன்ற துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் இட்ட கட்டளைக்கு அடிபணிந்து நான் இந்தத் துறைகளில் இருக்கும் சில குறைபாடுகளை மட்டும் நிவர்த்தி செய்யவேண்டும் என்பதை என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன். முதலிலேயே எனக்கு நேரத்தைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டீர்கள். எனவே அந்த நேரத்திற்குள்ளாக நான் முடித்துக்கொள்கிறேன்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்,'

என்று தமிழர்களின் தலைமை குருவான திருவள்ளுவர் சொல்லிவிட்டு சென்றார். என்னுடைய வயதான காலத்தில் அந்தச் செய்யுளைப் பார்த்துப்பார்த்து அதில் ஏதோ தவறாகிவிட்டதோ என்று ஐயுற்ற நேரத்தில் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, அந்தத் தெய்வப்புலவர் சொன்னது உண்மை; இந்த உழவனுக்கு இன்று வாழ்வு கிடைத்துவிட்டது; அந்தப் புலவர் சொன்னது உண்மையாகி விட்டது என்று பெருமகிழ்ச்சி ஏற்பட்டது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இந்தத் துறைகளின் மீது நாம் கவனம் செலுத்தி, தமிழகத்தில் இருக்கும் அத்துணை மக்களுக்கும் உணவு கொடுத்து தன்னிறைவு பெற்றிருக்கும் இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு காலகட்டத்தில் பர்மாவிலிருந்தும் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தும் உணவுதானியங்களை நாம் கொண்டுவந்து கொண்டிருந்தோம்.

பிற்பகல் 4.45

இப்போது அந்நிய நாடுகளுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் தொழில்நுட்பமாக பயிர் செய்து வருகிறோம். இதில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் மற்றும் ஏனைய துறை அலுவலர்களும் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். இச்செயலைப் பாராட்டும் இந்த நேரத்தில் நான் மேலும் சிலவற்றை இங்கே கோடிட்டுக் காண்பிக்கிறேன். களர் உவர் நிலங்களை மற்றும் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதிலே நமது அரசு மிக விரைவாக போர்க்கால அடிப்படையில் செயலாற்றி உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அடுத்து ஒருங்கிணைந்த பழங்குடி மேம்பாடு திட்டத்தின் மூலம் பழங்குடியினர் வாழ்வு வளம் பெறும் முகமாக ஒரு நபருக்கு ஒரு ஏக்கர் பழத்தோட்டம் நட முழு மானியத்துடன்

செடிகள் வழங்கியிருந்தாலும், நாம் கொடுக்கும் அந்த பழச் செடிகள் சரியாக பயிரிடப்படுகின்றனவா என்று நமது துறை மூலம் அவைகளை ஒவ்வொரு மலைக் கிராமங்களுக்கும் சென்று பார்வையிடச் செய்யவேண்டும். அதுபோன்று நமது கால்நடைத்துறையும், பால்வளத்துறையும் கால்நடை வளர்ப்பதற்கு கடன் வசதி செய்து கொடுக்கிறது. ஆனால் மலைவாழ் மக்களும், ஆதிதிராவிட மக்களும் அந்தக் கால்நடையை வளர்த்து அவர்களுடைய வாழ்வை வளமாக்கிக் கொள்கிறார்களா என்ற வகையில் அதை அடிக்கடி கண்காணிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கால்நடைத்துறையை எடுத்துக் கொண்டால் பழைய காலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். "தாலி அறுத்தவளுக்கு இட்லிக் கடை இருந்தால் போதும் என்று" ஆனால் எங்கள் பகுதியிலே இதை வேறுவிதமாகச் சொல்வார்கள். "கணவனை இழந்தவளுக்கு ஒரு பசுவும் ஒரு முருங்கை மரமும் இருந்தால் போதும் என்று" அவர்கள் பிழைத்துக் கொள்ளலாம். இன்றைக்கு நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஒவ்வொரு கிராம மக்களுக்கும் கடன் வசதி செய்து கொடுத்து, ஒவ்வொரு கிராமங்களிலும் பால் உற்பத்தியை நன்றாகப் பெருக்கியிருக்கிறோம். இந்தப் பால் உற்பத்தியிலே எங்கள் வடஆற்காடு மாவட்டம்தான் மிக அதிகமாக உற்பத்தியைச் செய்கிறது என்று நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பால் உற்பத்தியில் இப்போது ஒரு சிறு குறை ஏற்பட்டு உள்ளது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகக் கொண்டு வருகிறேன். நமது மாநிலம் கொடுக்கும் பாலின் விலையைவிட ஆந்திர மாநிலம் அதிகமாகக் கொடுப்பதால், எங்கள் வடாற்காடு மாவட்டம் ஆந்திர மாநிலத்திற்கு அண்மையில் இருப்பதால், அங்கு பால் உற்பத்தி செய்கின்றவர்கள் அதை ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். நாம் லிட்டருக்கு ரூ.5.46 என்று கொடுக்கிறோம். அவர்கள் அதை ரூ. 6.11 என்று கொடுக்கிறார்கள். நாம் அதை உயர்த்தி ரூ. 6 -அல்லது 6.15 என்று கொடுக்கலாம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு அந்தப் பாலின் விலையை உயர்த்தி ரூ. 6.50 என்று கூட கொடுக்கலாம். ஏனென்றால் தீவனத்தின் விலை உயர்ந்து விட்டது. மாட்டின் தீவனமும் உயர்ந்து மாட்டின் விலையும் உயர்ந்து இருக்கிறது. முன்பு ரூ. 3,500க்கு மாடு கடனாக வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு அது ரூ. 4,500 என்று ஆயிற்று. இப்போது ஐந்து லிட்டர் பால் கறக்கும் ஒரு மாட்டின் விலை ரூ. 6,000லிருந்து ரூ. 9,000 வரை விற்கிறது. நான் நடைமுறையில் இருக்கின்ற தகவலைச் சொல்கிறேன். எனவே பாலின் விலையை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் பால்வளத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து மூன்று துறைகளுக்கும் சேர்ந்து ஒரு முக்கியமான கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அதாவது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், வேளாண்மைத்துறைக்கு வேளாண்மை உதவி அலுவலர், கால்நடைத்துறைக்கு கால்நடை மருத்துவர் இதில் பால்வளத்துறைக்கும்

சேர்த்து, ஒரு ஒன்றியத்திற்கு ஒன்றோ அல்லது இரண்டு ஒன்றியத்திற்கு இரண்டு என்றோ அல்லது சேர்த்து ஜீப் வண்டி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பயிரைப் பாதுகாப்பதற்காக, அந்த விவசாய அலுவலர்கள் சென்று பார்க்க வேண்டும் என்றால் அவர்களுக்கு வாகன வசதி இல்லை. அதேபோல் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டிருக்கும் நேரத்தில் உடனடியாக தகவல் கொடுப்பதற்கு, டாக்டர்களுக்கு தகவல் கொடுப்பதற்கு இயலவில்லை. எங்கள் பகுதியிலே சிற்றூர்களும் கிராமங்களும் நிறைய இருக்கின்றன. ஆகவே, இரண்டு துறையும் சேர்ந்து, மேற்படி அலுவலர்களுக்கு அவசியமாக அந்தந்த ஒன்றிய தலைமை இடங்களில் தொலைபேசி ஒன்றும், ஜீப் வண்டியும் அவர்களுக்கு அவசியமாக கொடுக்க வேண்டும். கால்நடைத் துறை டாக்டர்கள், விவசாயத் துறை அலுவலர்கள் மற்றும் பால்வள அலுவலர்களும் அதிலே அடங்குவார்கள். அப்படிக் கொடுத்தால் நாம் இன்னும் விரைவாக இந்தத் துறைகளை வளர்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் உங்களிடம் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4.50

அடுத்து, நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, கசிவுநீர் குட்டைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் தங்கள் துறை மூலமாக கட்டப்பட்ட அந்த கசிவுநீர் குட்டைகளின் காரணமாக நிலத்தடி நீர் நிறைய கிடைத்தது. ஆனால், ஏன் தற்போது இந்த ஆண்டு நீங்கள் அதை நிறுத்திவிட்டீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அதை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கசிவு நீர் குட்டைகளை கட்டுவதால் நிலத்தடி நீர் அதிகமாக கிடைக்கிறது. அதே நேரத்தில் கால்நடைகளுக்கும் அது குடிதண்ணீராக பயன்படுகிறது. சில இடங்களில், சில மலைகிராமங்களில் அந்த நீரையேகூட குடிக்கிறார்கள். என்னுடைய தொகுதியில், மலை கிராமங்களில் கசிவுநீர் குட்டை கட்டப்பட்டதிலே இருந்துகூட தண்ணீர் எடுத்து குடிக்கிறார்கள், காய்ச்சி குடிக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை மீண்டும் தொடர்ந்து செய்ய வேண்டும். அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் இருக்கிறது. அந்த நிதியை, தாங்கள் விரைவாக ஒதுக்கி, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து கசிவுநீர் குட்டைகளை ஆங்காங்கே கட்ட வேண்டும். அடுத்து வேளாண் துறையைப் பற்றி குறிப்பிடுகையில் என்னுடைய தொகுதியை மட்டும் குறிப்பிடவிரும்புகிறேன். பல இடங்களில் தமிழகத்தில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியை மட்டும் குறிப்பிடுகிறபோது, ஜவ்வாது மலையிலிருந்து ஓடிவரும் காட்டாறு பாலாற்றிலே வந்து கலப்பதற்குள், ஏறக்குறைய 45 கி.மீ. வந்து சேருவதற்குள் 20 அடி ஆழத்திற்கு ஆறு அறுந்துவிடுகிறது. 30 வருடமாக மண் அரிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

3 இடங்களில் இதுபோல் இருக்கிறது. தயவுசெய்து அதை குறித்துக் கொள்ள வேண்டும். காட்டாற்றில் கத்தாடி குப்பம் என்ற கிராமத்தின் அருகிலும், கொட்டாவூர் கிராமம் அருகில், தாளமடு என்ற இடத்திலும், அகரம் என்ற கிராமத்தில் கிருஷ்ணம்பாறை என்ற இடத்திலும், ஆக அந்த 3 இடங்களிலும் தடுப்புச் சுவர் கட்டவேண்டும். அப்போதுதான் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்கும். நான் பொதுப்பணித் துறை அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொன்னால் அந்த அதிகாரிகள், பாசனக் கால்வாயாக இருந்தால்தான் நாங்கள் எடுத்துக் கொள்ளமுடியும் என்றும் இது வேளாண் துறையைச் சார்ந்தது என்றும் மண் அரிப்பை பொறுத்தவரையில் வேளாண் துறைதான் செய்ய வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே தங்கள் துறை மூலமாக என்னுடைய தொகுதியில் அந்த 3 இடங்களில் (மணியடிக்கப்பெற்றது) — மற்றபடி தமிழகத்தில் ஏனைய பல்வேறு இடங்களில் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்க — இதுபோன்ற மண் அரிப்பினை தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கால்நடை மருந்தகங்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் நாம் கால்நடை மருந்தகங்களை துவக்க வேண்டும். நேரம் இல்லாத காரணத்தினால் என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். பள்ளிகொண்டா பேரூராட்சி மற்றும் பொய்கை என்ற கிராமத்தில், ஆக அந்த இரண்டு இடங்களில் நீங்கள் தற்போது அவசியமாக அந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதற்காக பங்குத்தொகை அனைத்தையும் நாங்கள் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய பகுதியிலே வேளாண்மை துறையின் மூலம் வேளாண் பண்ணை அல்லது கால்நடைப் பண்ணை வைக்க வேண்டும். எங்களுடைய தொகுதியிலே தெள்ளூர் என்ற கிராமத்திலே அரசு நிலம் 119 ஏக்கர் இருக்கிறது. அங்கே பாதை வசதி இருக்கிறது. வேலூர் நகருக்கு அருகாமையிலே கிட்டத்தட்ட 7 கிலோ மீட்டர் தூரத்தில் அந்த இடம் இருக்கிறது. ஆகவே அந்த இடத்தை தேர்வு செய்து அந்த இடத்தில் வேளாண் பண்ணையோ அல்லது கால்நடைப் பண்ணையோ துவக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று சிறு, குறு விவசாயிகளுக்கு தொழிற்கருவிகளை நாம் விவசாயத் துறை மூலம் கொடுக்கிறோம். அந்தக் கருவிகளை கொடுக்கும்போது தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே பரிந்துரை பெற்று அந்தத் தொழில் கருவிகளை கொடுக்க வேண்டுமென்று, துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக சிலர், சாகுபடி செய்யாதவர்கள், இது நடைமுறையில் வருகிறது.

நிலம் இருக்கிறது. ஆனால் அவர் அரசாங்கத்தில் வேலை செய்து கொண்டிருப்பார். அவரும் வாங்குகிறார். நிலம் இரண்டு ஏக்கர் வைத்திருப்பார். அவர் குறு விவசாயியாக இருப்பார். ஆனால் அவர் அரசாங்க வேலையில் ** இருப்பார். அவர்களும் அந்த வசதிகளைப் பெற்று விடுகிறார்கள். நான் ** என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆக, அரசு வேலையில் இருந்து கொண்டு சிறு விவசாயியாக பயனைப் பெற்று விடுகிறார். சரியான விவசாயிக்கு செல்வது இல்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 4-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு ஊழியர் என்பது மட்டும் இருக்கட்டும். ** என்று சொன்னால் அது வெளியே போகிறபோது இலவச வேளாண் கருவிகளை ** வாங்கிக் கொள்கிறார் என்பது போலாகும்.

திரு. கி. தருமலிங்கம்: அதை நான் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். அரசில் பணியாற்றும் அலுவலர்களில் சிலர் தவறுகள் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அவர்கள் சிட்டா, 'ஏ' ரிஜிஸ்டர் நகலை மணியக்காரரிடத்தில் இருந்து பெற்றுக் கொண்டாலும், அந்தந்த பகுதியினுடைய, ஊராட்சித் தலைவர் வந்த பிறகு அவர்களிடம் போகலாம். தற்போது சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் பரிந்துரை பெற்று விவசாயத் துறை கருவிகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, கசிவுநீர் குட்டைகளும் *(மணி அடிக்கப்பெற்றது)* அங்கு குளங்களும் வெட்டும்போது, அந்த பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்கு கொண்டு வந்து எந்தெந்த இடத்தில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்பதை வைத்து அந்தப் பகுதியிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வேளாண்மை, பால் வளம், கால்நடைத் துறை ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைந்து இந்த மூன்று துறைகளும் மிகச் சிறப்பான துறைகள். இந்தத் துறைகளின் மானியக் கோரிக்கைகளை வரவேற்று வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் க. கோபால்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு 6 கோடி தமிழ் மக்களுடைய காவல் தெய்வமாகவும், 1½ கோடி அனைந்திந்திய அண்ணா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினருடைய உயிர் மூச்சாகவும் உலகத் தமிழர்கள் எல்லாம் வியக்கின்ற வகையில் தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தியும், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை வளம் பெற 69 சதவீத இட ஒதுக்கீடு தந்தும், காவிரி டெல்டா மற்றும் கடைமடைப் பகுதிகளுடைய உயிர்களைக் காக்கின்ற வகையில் 84 மணி நேரம் உண்ணா நோன்பிருந்த, ராஷ்டிரிய பீஷ்மாச்சாரிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், எனது தொகுதியின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய விவசாயி கடனிலே பிறக்கிறான். கடனோடு வாழ்கிறான். கடனோடு சாகின்றான் என்ற நிலைமைக்கு தமிழ் நாட்டில் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக "மகராசி வேளாண்மை இரண்டாயிரம்" என்ற திட்டத்தினை தீட்டித் தந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, 1994-95-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் என்றுமே அடைந்திராத 105 இலட்சம் மெட்ரிக் டன்னை உற்பத்தி செய்ததோடு மட்டுமல்லாமல் அரிசி உற்பத்தியில் 85 இலட்சம் மெட்ரிக் டன்னை உற்பத்தி செய்கின்ற ஒரு முன்னோடி மாநிலமாக நம் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஆகவே, வேளாண்மைப் பணிகளை இயந்திரமயமாக்கும் முயற்சியில் கடந்த ஆண்டு வரை 975 டிராக்டர்கள் 3,462 பவர் டிரில்லர்கள், 67,026 விசைத் தெளிப்பான்கள், 4,579 டயர் மாட்டு வண்டிகள் முதலியவற்றை தன்னகத்தே தமிழக அரசு பெற்று சிறப்புப் பெற்றிருக்கிறது.

அதோடு, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து குறிப்பிட்ட நாளில் தண்ணீரை திறந்து விட்டும், அதனைச் சார்ந்த குறுவைச் சாகுபடிக்கு சிறப்பு கருத்தரங்கம் நடத்தியும் சரியான தருணத்தில் இடு பொருள்கள் மற்றும் விரிவாக்கத்திற்கான பணிகளை வேளாண் துறை மூலம் நடத்தித் தந்ததனால் இன்று உணவு தானிய உற்பத்தியில் 105 இலட்சம் மெட்ரிக் டன்னை அடையலாம் என எதிர்பார்க்கிறது நம் தமிழக அரசு.

பிற்பகல் 5-00

நாகை-காயிதே மில்லத் மாவட்டம் முழுவதும் ஆற்றுப் பாசனத்தையே நம்பி உள்ள மாவட்டம். குறிப்பாக, இப்போது ஆறுகளின் வடிகால் பகுதிகளில் அதிகமாக மண் திட்டுக்களும், காட்டாமணக்குச் செடிகளும் மிகுதியாக உள்ளன. ஆகவே, அவைகளைச் சீர்படுத்த வேண்டும். இப்போது பொதுப் பணித் துறையிலிருந்து புல்டோசர்கள் வந்து அந்த வேலைகளைச் செய்தாலும், வேளாண் பொறியியல் துறையில் உள்ள புல்டோசர்களைக் கொண்டு அவை சீர்செய்யப்பட வேண்டும். குறிப்பாக, நன்னிலம் தொகுதியில் அரசலாறு, திருமலைராஜன் ஆறு, முடிகொண்டான் ஆறு, நாட்டாறு, வளப்பாறு,

வெட்டாறு, திராவிடாறு, மஞ்சளாறு போன்ற பகுதிகளில் காட்டாமணக்கு மற்றும் மணல் திட்டுக்கள் அதிகப்படியாக உள்ளதால் மழைக் காலங்களில் தண்ணீர் விரைவாக வடியாமல் தேங்கி அங்கே பயிர் பாதிப்பு அதிகமாக இருக்கின்ற சூழ்நிலை நிலவுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட நேற்றையதினம் பேசுகின்றபோது, காவிரி டெல்டா பகுதிகளுக்கு அதிகமான நிதியை ஒதுக்கி வாய்க்கால்களை எல்லாம் சீர்செய்வதாகச் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் நீண்டகாலமாக குடிநீர் மராமத்துப் பணி செய்யப்படாமல் இருக்கிறது. ஒன்றியங்களின் மூலமாக குடிநீர் வடிகால்களைச் சீர்செய்ய ஏற்பாடு செய்துதர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் இன்று இருமுறை சாகுபடி என்ற நிலைமை மாறி முப்போகம் என்று சொல்லக்கூடிய நிலை உள்ளது. அதிகப்படியான போர்வெல்கள் இருந்தும்கூட மின்சாரம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் பதிவு செய்தும்கூட அப்படிப்பட்ட போர் வெல்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல் உள்ளது. எனவே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்து, அனைத்து போர்வெல்களுக்கும் உடனடியாக, நடப்பு ஆண்டிலேயே மின்சார இணைப்பு வழங்க வேண்டுமாய் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஒரு 'போர்' போட்டாலே மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலையில் இன்று அதிக முன்னுரிமை கொடுத்து மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிக் கொடுக்கின்றபோது அந்த போர்வெல்கள் வற்றிவிட்டால், அந்த மின் இணைப்பை அவர்கள் கேட்கின்ற அடுத்த இடத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்கும் நீங்கள் ஆவன செய்ய வேண்டும். அதில் 3 வருடங்கள் காத்திருக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்த போர்வெல்லுக்குரிய, 'சோர்ஸ்' பெயில்யூர் ஆனாலும்கூட, பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. கடந்த 2 ஆண்டுக்காலமாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள அந்தமாதிரி இடங்களில் ஆயில் என்ஜின் வழங்கப்படவில்லை. ஆயில் என்ஜின்களை வழங்கினால், மின்சாரம் கிடைக்காத அந்தமாதிரி போர்வெல்களுக்கு, அதைப் பயன்படுத்தி, தண்ணீர் பாய்ச்சி, பயிர் செய்யக்கூடிய சூழ்நிலை உள்ளதால், உடனடியாக ஆயில் என்ஜின்கள் வழங்குகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு பாதி மானிய விலையில் கொடுக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

கோடை உழவு செய்கின்ற சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் கழகம் மூலமாக வழங்கப்படும் டிராக்டர்களை எல்லா

விவசாயிகளுக்கும், சிறு, குறு மற்றும் பெரும் விவசாயிகளுக்கும் 5 சதவீதம் மானியத்தில் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

இப்போது வழங்கப்படுகின்ற கைத்தெளிப்பான்கள் எல்லாம் 14 லிட்டர் கொள்ளளவு உடையதாக இருக்கின்றன. விவசாயிகள் நடவு செய்த சேறான வயலில் இந்தத் தெளிப்பான்களைத் தூக்கிச் சென்று தெளிப்பதற்கு சிரமப்படுகின்ற காரணத்தினால், வழங்கப்படுகின்ற கைத்தெளிப்பான்கள் எல்லாம் 10-லிருந்து 12 லிட்டர் கொள்ளளவு கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், அந்த மாதிரி தெளிப்பான்களையே நீங்கள் ஆர்டர் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகின்ற பவர் டில்லர்கள் மற்றும் டயர் வண்டிகள் போன்ற அத்தியாவசிய வேளாண்மைப் பொருட்களை எவ்வளவு விலையாக இருந்தாலும் அவற்றை 5 சதவீதம் மானியத்தில் கொடுக்க வேண்டும். நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் எண்ணெய்ப் பனை அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, நன்னிலத்தில் பனை எண்ணெய் பிழியக்கூடிய ஆலை ஒன்று நிறுவப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்க விரும்புகிறேன். தற்சமயம் சிறு, குறு விவசாயிகள் பயன்படுத்துகின்ற வகையில், மேட்டூர் அணை திறப்பதற்கு முன்னர் அந்த விவசாயிகள் எல்லாம் விதை விட்டு, நாற்று விளைவிப்பதற்காக Community Bore wells என்று சொல்லக்கூடிய, சமுதாய போர்வெல்களை அதிகப்படியாக நிறுவித் தரவேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் இன்று குறிப்பிட்ட சில ஊராட்சிகளில்தான் சமுதாய போர்வெல்கள் இருக்கின்றன. எனவே, எல்லா ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சமுதாய போர்வெல்களை அமைக்க வேண்டுமாய் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், நாகை-காயிதே மில்லத் மாவட்ட விவசாயிகள் எல்லாம் சென்ற ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கெல்லாம் பயிர் இன்சூரன்ஸ் வழங்கப்படாமல் இருக்கிறது. அதை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உடனடியாகச் செய்து தரவேண்டும்.

அதேபோல, உர விலை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலும், உரத்தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினாலும் இயற்கை சார்ந்த பூச்சி மருந்துகள், வைரஸ் மருந்துகள், வேம்பு மருந்துகளை இலவசமாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மூங்கில்குடி விதைப் பண்ணையும், பண்ணைவளாகம் விதைப்பண்ணையும் இன்று கவனிப்பாரற்ற நிலையில்

மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்த இரண்டு விதைப் பண்ணைகளை அரசு உடனடியாகச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-05

அதேபோல், சர்க்கரை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போடப்படுகின்ற சாலைகள் என்னுடைய தொகுதியில் இதுவரை ஒன்றுகூட நடைமுறைப் படுத்தப்படாமல் உள்ளது. என்னுடைய தொகுதியில் குழுமங்குடி கீரனூரில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டு இருக்கின்ற நிலையில், அங்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, சர்க்கரை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாலைகள் போட்டுத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நன்னிலம் பகுதியில், அது கடல் சார்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இன்று நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்ப்புப் பணிகள் அதிக அளவில் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில் நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்ப்புத் திட்டத்தை வேளாண்மை சார்ந்த தொழிலாக அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்கின்றபோது, அவர்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரம் தொழிற்சாலைகளுக்கு கொடுக்கக்கூடிய மின்சாரமாக இன்று எடுத்துக்கொள்ளப்படுகின்ற காரணத்தால், அதை விவசாயத்திற்கு உபயோகப்படுகின்ற மின்சாரமாகக் கருதி கட்டணம் வசூலிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை அங்கே ஏற்படுத்த வேண்டும். எனவே, நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பை இன்று விவசாயம் சார்ந்த தொழிலாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நகரைச் சார்ந்த கிராமப் பகுதிகளில் சாலைகளின் அருகே உள்ள விளை நிலங்கள் எல்லாம் குடியிருப்பு மனைகளாக மாறுகின்ற சூழ்நிலையில், அதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய நன்னிலம் தொகுதியில் இன்று அதிகப்படியாக ஜே.ஜே.92 என்ற நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அப்படி விளைகின்ற அந்த நெல்லை இன்று கிலோ 4 ரூபாய்க்கு எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. அந்த நெல்லை உற்பத்தி செய்வதற்கு அதிகமான செலவு ஆகின்ற காரணத்தினாலும், ஒரு ஏக்கருக்கு குறைவான அளவு விளைகின்ற காரணத்தினாலும், அந்த நெல்லின் விலையை அதிகப்படுத்தி, கிலோவுக்கு 30 ரூபாய் என்ற அளவில் நீங்கள் எடுத்து, அதை ஏற்றுமதி செய்ய உதவி செய்ய வேண்டும்.

அதேபோல், ஆடுதுறை எங்களுடைய பகுதியில் இருக்கின்ற காரணத்தினால், ஆடுதுறையைச் சார்ந்த பகுதியில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும். மேலும், எங்களுடைய மாவட்டம் விவசாய

மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினாலும், தஞ்சை மாவட்டத்திற்கு அருகில் இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நாம் எவ்வளவுதான் நல்ல பல திட்டங்கள் போட்டாலும் கூட, இன்று நாம் செய்கின்ற அந்த உணவு உற்பத்தியை எல்லாம் எலிகள் சாப்பிட்டுச் செல்லும் ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு மனிதன் சாப்பிடுவதை 6 எலிகள் சாப்பிடுவதாகக் கூறுகின்றார்கள். இன்று தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 36 கோடி எலிகள் இருப்பதாக கணக்கு எடுத்துக் கூறுகின்றார்கள். எனவே, அந்த எலிகளை ஒழிப்பதற்கு ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலருக்கும் பொறுப்புகளைக் கொடுத்து, அந்த எலிகளை ஒழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்தக் கோடை காலத்தில் நீங்கள் தந்து உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்கின்றபோது, ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலருக்கும் எலிகளை ஒழிக்க சிங்க் சல்ஃபேட் மற்றும் அரிசிப் பொரி முழுவதையும் இலவசமாகக் கொடுத்து, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளை ஊக்குவித்து, அந்த எலிகளை ஒழிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2 கால்நடை மருத்துவமனைகள் இருக்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. இன்று வளர்ந்து வரும் தமிழகத்தில், குறிப்பாக எங்களுடைய மாவட்டம் வேளாண்மை சார்ந்த மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினாலும், அதிகப்படியான கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினாலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 4 கால்நடை மருத்துவமனைகளை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் கட்டுவதற்கு நிதி இல்லை என்றாலும் கூட, எங்கள் மாவட்டத்திற்குக் கொடுக்கப்படுகின்ற பரவலாக்க திட்டத்தின் கீழ் நாங்கள் அந்த மருத்துவமனைகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொள்கின்றோம். ஆனால், அதற்கு வேண்டிய கால்நடை மருத்துவர்களை எங்களுக்குக் கொடுத்து, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 4 அல்லது 5 வெட்ரினரி டிஸ்பென்சரிகளை எங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கால்நடைத் துறை அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக வேளாண்மைத் துறை உள்ளது. ஆனால், தற்போது வேளாண்மைத் துறை பிரிக்கப்பட்டு, தோட்டக் கலைத் துறை, வேளாண்மைத் துறை என்று தனித் தனியாக உள்ளதால், விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல், உளுந்து போன்ற பயிர்களுக்கு ஆலோசனை பெற ஒரு அலுவலரிடமும், மா,பலா, கொய்யா போன்ற தோட்டப் பயிர்களுக்கு ஆலோசனை பெற ஒரு அலுவலரிடமும் அலைய வேண்டியுள்ளது. ஆகவே, தோட்டக் கலைத் துறையையும் வேளாண்மைத் துறையையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். அதேபோல பி.எஸ்.ஸி. (அக்ரி) படித்திருக்கின்ற விவசாய அலுவலர்கள் எல்லாம் தங்களை பயிர் மருத்துவர் என்று அழைக்கவேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எனவே, நமது தாயுள்ளம்கொண்ட டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்தத் தருணத்தில் பி.எஸ்.ஸி. (அக்ரி) படித்த அவர்களை பயிர் மருத்துவர் என்று ஒரு பட்டம் கொடுத்து அழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ.கு. சீனிவாசன், நல்ல ஒரு திருக்குறள் சொல்லி ஆரம்பியுங்கள்.

*திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இவ்வாண்டு பேசுவதற்கு காவல் தெய்வம், இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியோடு தாங்கள் வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நான் கிராமங்களுக்குச் செல்லும்போதும், எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும்போதும், இம்மாமன்றத்தில் கலந்துகொண்டு பேசும்போதும் நான் திருவள்ளுவப் பெருமானுடைய வாக்குகளையும், தனித் தன்மைகளையும் சுட்டிக் காட்டி, அவர்களுடைய நல்ல வாக்குகள், பண்புகள், சிறப்புகள் அந்த குறளில் அடங்கி இருக்கிறது என்று சொல்லி, எடுத்துக்காட்டாக இலக்கணமாக அம்மா அவர்கள் அமைந்திருக்கின்றார்கள், வீற்றிருக்கிறார்கள் என்று கோடிட்டுக் காட்டுவதற்காக நான் தாயாக வணங்கின்ற அம்மா அவர்களுக்காக முதல் வணக்கத்தை ஒன்றேமுக்கால் அடியே கொண்ட திருவள்ளுவப்பெருமான், அவர்களுடைய வாக்குகளை முதற்குறளாக சொல்லி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடிக்கடி ஏன் திருக்குறளில் ஆரம்பிக்கிறேன் என்று சொன்னால், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வள்ளுவப் பெருமான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நல்ல மன்னன் குடிமக்களுக்கு எந்தெந்த பண்புகளோடு ஆட்சி செய்ய வேண்டுமென்று அந்தக் குறளில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்களோ. அம்மா அத்தனை தன்மைகளையும் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகத்தான், அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைச் சொல்லி ஆரம்பிக்கிறேன். இந்த மாமன்றத்தில் இன்று இதை விளக்குவதற்குக் காரணம்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

என்று வள்ளுவப்பெருமான் குறிப்பிட்டிருக்கிறார்கள். வானத்தையே நம்பி, அதாவது வானத்திலேயிருந்து பெய்யும் மழையை நம்பி உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளும் பிழைக்கின்றன. ஐந்தறிவு ஜீவிகள் கூட வானத்தை நம்பிதான் பிழைக்கின்றன. அதேபோன்று, தண்ணீர் இல்லை என்று சொன்னால் உயிர் இல்லை, உணவு இல்லை. உணவு தானியமே கிடையாது என்று சொன்னால் அதற்கு தண்ணீர்தான் காரணம். அந்த உணவு தானியங்கள் வளர்வதற்கே தண்ணீர்தான் உணவாக விளங்குகிறது. அதற்கிணங்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தண்ணீர் ராசியைக் கொண்டவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கங்காதேவியின் நல்லாசியைப் பெற்றவர்கள். ஆகையினால், அம்மா அவர்கள், எந்த உயிர்கள் இருக்கவேண்டுமென்று சொன்னாலும், மூச்சு இருக்கவேண்டும் என்று சொன்னாலும் அம்மாவினுடைய ராசிதான் தமிழகம் இவ்வாறு சிறப்பாக இயங்குகின்றது. இன்றைய நிலையில் இந்த மாமன்றத்தில் வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, பால்வளத்துறை இந்த மூன்று துறைகளையும் பார்க்கிறபோது, இவை நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்குகின்றன. இந்த மூன்று துறைகளும் இல்லை என்று சொன்னால் ஒரு நகரமே ஏற்படாது, அமையமுடியாது. சில வீடுகள், சில வீடுகள் சேர்ந்து தெருக்கள். தெருக்கள் சேர்ந்தால் ஊர், ஊர்கள் சேர்ந்தால் நகரம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், நீங்கள் இப்போதுதான் இந்த மூன்று துறைகளைப் பார்க்க ஆரம்பித்து இருக்கிறீர்கள். ஏற்கெனவே 5 நிமிடமாகிவிட்டது. நீங்கள் இன்னும் ஊர், நகரம், நாடு இதெல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்கிற இலக்கண இலக்கியங்கள் பூராவும் சொல்லிக் கொண்டிருந்தால் மற்ற உறுப்பினர்கள் பேச முடியாது. இந்தத் துறையிலே ஏதாவது கோரிக்கை வைத்து உரையை முடியுங்கள்.

பிற்பகல் 5-15

திரு. ஆ. கு. சீனிவாசன்: 3 ஆண்டுகள் இம்மாமன்றத்தில் என்னுடைய தொகுதியிலுள்ள கிராமப்புற மக்களுக்கு என்னென்ன தேவை, என்னென்ன குறைபாடுகள் என்று பேசினேன். அத்தனை அடிப்படை வசதிகளும் என்னுடைய தொகுதிக்கு செய்து கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடிநீர் வசதிகள், போக்குவரத்து வசதிகள், தார் ரோடுகள், சுகாதார வசதிகள், மின்சார வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். கால்நடையைப் பொறுத்தவரையில், ஐந்தறிவு படைத்தவைகளுக்கு எல்லாம் குடிப்பதற்கு குட்டைகள் தோண்டப்பட்டிருக்கின்றன. ஆகையினால், கிராமங்களில் எந்த குறைபாடும் கிடையாது. ஏனென்று சொன்னால், நான் கிராமவாசி. சுதந்திரம் வாங்கிய புதிதில் பஸ் என்று சொன்னால், பஸ்ஸை பார்க்க வேண்டுமென்று சொன்னால், 4 கிலோமீட்டர், 3 கிலோமீட்டர் சென்றுதான் 'அதோ பார் பஸ்' என்று தாய்மார்கள் குழந்தைகளுக்குக் காட்டுவார்கள். இப்பொழுது அப்படி

அல்ல, அம்மாவின் ஆட்சியில் பஸ் மக்களை நாடிச் செல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்தை நாடிச் செல்கிறது. குழந்தைகளும், தாய்மார்களும் பஸ்ஸில் ஏறிக்கொண்டு நகரத்திற்குச் செல்கிறார்கள். அந்த அளவிற்கு பஸ் பார்க்க வேண்டுமென்று சொன்னால் அது அம்மாவினுடைய நல்லாட்சியில் தான். இதற்கு எல்லாம் காரணம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், இந்த 3 அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகளைப் பற்றியும் பேசுவதற்கு கொஞ்சம் வாருங்கள். (சிரிப்பு)

திரு.ஆ.கு. சீனிவாசன்: வேளாண்மைத் துறையைப் பார்க்கும்போது எங்களுடைய பகுதியில், ஏன் தமிழகத்தில் நன்றாக காலத்தோடு, பருவத்தோடு மழை பெய்து எல்லோரும் உண்ண வேண்டிய உணவுப்பொருள்கள், நெல் எல்லாம் விளைந்து, கட்டு அடிக்கும்போது தார் ரோட்டில் அடிக்கிறார்கள். பஸ்ஸே இப்போது வேண்டாமென்று நிறுத்தி விடுகிறார்கள். ஏனென்று சொன்னால் 'எங்களுக்கு ஒரு மாத காலம் இன்னும் வேலை இருக்கிறது. இப்பொழுது பஸ் வந்தால் நாங்கள் எப்படி மகசூல் எடுக்க முடியும்' என்று சொல்கிறார்கள். அதற்கு இணங்க சில பஸ்களை, கிராமத்திற்கு வந்த வண்டிகளை வேண்டாமென்று தடை-டெம்பரரி இன்ஜங்சன் வாங்கி இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், நன்றாக விளைகிறது, அதற்கு நெல்களம் வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். ஆகையினால், எல்லா பஞ்சாயத்துக்களிலும் பொதுவான இடங்கள் நிறைய இருக்கின்றன. எவ்வளவோ திட்டப் பணிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பொதுவான நெல்களம் இல்லை என்ற ஒரே ஒரு குறைதான் இருக்கிறது. ஆகையினால், ஒவ்வொரு கிராமத்திற்கும், 50 ஆயிரம் ரூபாய் செலவிலான திட்டப் பணியாக, அதுபோன்று பெரிய பெரிய கிராமங்களில் வயல்காட்டுப் பக்கமாக புறம்போக்கு இடத்தில் நெல்களம் அமைத்தால் பொதுவாக அது விவசாயிகளுக்கு மிக நல்ல திட்டப் பணியாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயக் குடிமக்கள் மேலும் ஒரு படி உயர வேண்டுமென்று சொல்லி, பெரணமல்லூர் தொகுதி பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆண்களும் பெண்களும் 1,750 பேர் படிக்கிறார்கள். பெண்களுக்கு மட்டும் தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு விடுபட்டு விட்டது. இந்த ஆண்டாவது அங்கே உயர்நிலைப் பள்ளி தனியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். 25 ஆயிரம் ஜனத்தொகை உள்ள சேத்துப்பட்டு பேரூராட்சி ஒன்று இருக்கிறது. அங்கே ஒரே

ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நற்குணம், உலகம்பட்டு என்று இரண்டு ஊர்கள் இருக்கின்றன. அங்கே உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தாய்மார்கள் சிகிச்சை பெற வேண்டுமென்று சொன்னால், திடீரென்று 25 கிலோமீட்டர் தூரத்திற்குச் செல்ல வேண்டும். இரண்டாண்டுக் காலமாக கேட்டும், கட்டிட வசதி இல்லை என்று சொல்லி, பெரணமல்லூரில் அது அடிசனல் பி.எச்.சி.ஆகவே இருக்கிறது. அதை பி.எச்.சி. சென்டராக உயர்த்தி, 50 பெட் வசதி கொண்ட, கட்டிட வசதி கொண்ட பி.எச்.சி. சென்டராக கட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். வந்தவாசி தாலூகாவில் 2 தொகுதிகள் உண்டு. ஒன்று பெரணமல்லூர் தொகுதி. இது பொதுத் தொகுதி. இன்னும் ஒன்று வந்தவாசியை மையமாகக் கொண்ட, நகராட்சியை மையமாகக் கொண்ட தனித் தொகுதி. பொதுத் தொகுதியான பெரணமல்லூரிலிருந்து 25 கிலோ மீட்டர் வந்தால்தான் எதையும் பெற முடியும். அதனால் தனியாக தாலூகா கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துருவை அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறார்கள். இந்த ஆண்டே அதற்கு ஆவன செய்ய அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தெள்ளார் பெரிய யூனியன். எனவே, தேசூரை மையமாகக் கொண்டு ஒரு யூனியன் அலுவலகம் ஆரம்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துக்கொள்ளலாம். நீங்கள்தான் சொன்னீர்கள், லாஸ்ட் பாயின்ட் என்று. அதற்குப் பிறகு 2 பாயின்டுகள் சொல்லிவிட்டீர்கள். இதோடு பேச்சை முடித்துவிடுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: அடுத்து பால், குழந்தைகளை வளர்ப்பது பால். என்னுடைய தொகுதியில் 125 பால் உற்பத்திச் சங்கங்கள் இருக்கின்றன. அங்கேயிருந்து பாலை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் 25 கிலோ மீட்டர், 80 கிலோ மீட்டர் தாண்டி மில்க் டையரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஆகவே, என்னுடைய தொகுதியை மையமாகக் கொண்டு ஒரு மில்க் டையரி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய பகுதியில் ஒரு கரும்பு ஆலையும், ஒரு காகித ஆலையும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : திரு. சீனிவாசன், உரையை இதோடு முடித்துவிடலாம். அடுத்து திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் ஜீவாதாரமான துறைகளான வேளாண்மை, கால்நடை, பால் வளம் ஆகிய துறைகள் இணைந்து இருக்கின்ற மானியக் கோரிக்கைகள்மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா ஒரு விவசாய நாடுதான். இன்றைக்கு தாராள மயம், தொழில் மயம் என்றெல்லாம் தொழில் துறையினுடைய வளர்ச்சிக்குப் பல்வேறு சலுகைகளைக் கொடுத்தாலும்கூட வேளாண்மைதான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. தாராள மயக் கொள்கையானது வேளாண்மைக்கு இன்னும் வந்து சேரவில்லை. இன்னும் நில உச்சவரம்பு, குத்தகை பாதுகாப்புச் சட்டங்கள், இன்றியமையாத பொருள்கள் சட்டங்கள், உணவுப் பொருள்கள் நடமாட்டத் தடைச் சட்டங்கள், நீர்ப் பாசனத்தில் ஒரு மாநிலத்தில் இருக்கிற உபரி நீரை இன்னொரு மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல அரசியல் தடைகள், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையில் பாரபட்சம், விலை நிர்ணயத்தில் அரசின் கட்டுப்பாடுகள் — இப்படிப் பல இந்தத் தொழிலை இன்னும் தாராள மயத்திற்கு விடவில்லை. விவசாயம் இன்னும் ஒரு தொழிலாக அங்கீகரிக்கப் படவில்லை. புதிய தொழில் கொள்கையைத் துணிச்சலோடு அறிவித்த மத்திய அரசு புதிய வேளாண்மைக் கொள்கையை அறிவிப்பதற்கு இன்னும் தயக்கம் காட்டித்தான் வருகிறது. வேளாண்மையில் மூலதன முதலீடு என்பது அதிகரிக்கவில்லை என்ற உண்மையை 1994-95-ஆம் ஆண்டுக்கான மத்திய அரசினுடைய பொருளாதார சர்வேயிலே புள்ளிவிவரங்களோடு தருகிறார்கள். 1980-81-க்கும் 1992-93-க்கும் இடையே வேளாண்மைக்கான முதலீட்டில் தேக்க நிலை இருப்பதை அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

பிற்பகல் 5-25

1980-81-ல் ரூ. 4,634 கோடியாக இருந்த முதலீடு 1992-93-ல் 4,617 கோடியாகக் குறைந்துள்ளது. 1980-81-ல் டோட்டல் கிராஸ் டொமஸ்டிக் கேப்பிடல் பார்மேஷன் 18 சதவிகிதமாக இருந்தது 1992-93-ல் 9 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. பொதுத் துறை மூலதனமான கேப்பிடல் பார்மேஷன் 1980-81-ல் 1,796 கோடியாக இருந்தது. 1992-93-ல் 1,065 கோடியாகக் குறைந்துள்ளது. தனியார் துறை முதலீடு 1980-க்கும் 1992-93-க்கும் இடையே 2,840 கோடியிலிருந்து 3,552 கோடியாக அதிகரித்திருந்தாலும் டோட்டல் கிராஸ் டொமஸ்டிக் கேப்பிடல் பார்மேஷனில் தனியார் துறையின் பங்கு குறைவாகவே உள்ளதை அந்த சர்வே குறிப்பிடுகிறது. 1980-81-ல் இருந்து மத்திய அரசினுடைய வேளாண்மைத் துறைக்கான பொதுச் செலவானது உரம், பாசனம், மின்சாரம், கடன் மற்றும் இடுபொருள்களுக்கான மானியங்கள் வடிவிலேதான் உள்ளதே தவிர வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்கான

மூலதன முதலீடு என்பது அதிகரிக்கவே இல்லை. 1995-96-ல் நிதிநிலை அறிக்கையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு சற்று அதிகரித்திருந்தாலும்கூட வேளாண்மை சார்ந்த தொழில் வளர்ச்சியோடு இணைந்த வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமலாக்காத வரையில் அது கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவாது என சமுதாய அறிவியலார் கருதுகிறார்கள். "If poverty has to be tackled, social expenditure is to complement a strong agricultural base" என்பதுதான் உண்மை. 1993-94-ஆம் ஆண்டுக்கான 'Report on Currency and Finance' என்ற அந்த மத்திய அரசின் அறிக்கை இன்னொன்றையும் தெளிவாக்குகிறது. முன்னுரிமை வகைக்கான வங்கிக் கடனை, மொத்தக் கடனோடு ஒப்பிடும்போது, 1993 மார்ச்சுக்கும் 1994 மார்ச்சுக்கும் இடையே 35.1 சதவீதத்திலிருந்து 35.3 சதவீதமாக, .0.2 சதவீதம் தான் அதிகரித்துள்ளது. 40 சதவீதக் குறியீட்டை நிர்ணயித்திருந்தாலும் கூட, வங்கிக் கடன் அந்த அளவுக்கு அதிகரிக்கப்படவில்லை. எனவே, மத்திய அரசுடைய பொருளாதாரக் கொள்கைகள் விவசாயத்திற்கு எதிராகவே இருக்கும்போது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துணிச்சலாக வேளாண்மைத் துறைக்குப் பல முன்னேற்றத் திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உலக வரலாற்றில் வேளாண்மைப் புரட்சியே தொழில் புரட்சிக்கு அடித்தளமாக அமைந்து வந்திருக்கிறது. பழமையான வேளாண்மைத் தொழிலில், பழையன கழிந்து, புதியன புகவேண்டும். புதுமைக்குப் பூபாளம் பாடும் புரட்சித் தலைவி அவர்கள், 'மகராசி 2000' என்ற பார்வைப் பாதை பரிமாணம் என்ற சிந்தனையில் விவசாயம் என்பது உணவுத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்கின்ற ஒரு துறையாக இல்லாமல் காலமாறுபாடுகளுக்கு ஈடுகொடுத்து, வளர்ந்து வரும் பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்கி, தோட்டக்கலைத் துறை, மலர்ச்சாகுபடி, பழச் சாகுபடி, உணவு பதப்படுத்தல், ஏற்றுமதி இறக்குமதிக்கான தொழில் நுட்பங்களை உருவாக்குதல், அறுவடைக்குப் பிந்தைய விளைவுகள் போன்றவற்றில் கவனம் செலுத்தியது பாராட்டுக்குரியது. தமிழகம் புரட்சித் தலைவியின் கடந்த நான்காண்டுக் கால ஆட்சியில், இயற்கையின் ஒத்துழைப்பை ஏராளமாகப் பெற்று, மழை பொழிந்து, 105 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய மகசூலை சாதனையாகப் படைத்திருக்கிறது. அந்தச் சாதனையை ஏற்படுத்திய விவசாயிகளை நன்றியோடு பாராட்டியும் இருக்கிறார்கள்.

ஆனால், விவசாயிகளுடைய உண்மை நிலை என்னவென்றால், அடுத்த ஆண்டு பணக்காரனாவோம் என்பதற்காக இந்த ஆண்டு கடன் வாங்கிக் கொண்டிருக்கிற நிலையில்தான், விவசாயிகள் உண்மையில் இருந்து வருகிறார்கள்.

'உழுதானே உழுதானே விவசாயி உழுதானே
யாருக்கு என்ன வச்சான் மணைவிக்கும் - மகனுக்கும்
மகன் பெற்ற மகனுக்கும் கடன்தானே மிச்சம்
வச்சான் இதுதான் உழுபவன் நிலைமை அவனோ
சிறகை விரிக்கும் பறவை'

என்று கவிஞர் வைரமுத்து பாடியுள்ளார். அந்த நிலைதான் இன்றைக்கு விவசாயிகளுடைய உண்மையான பொருளாதார நிலையாக இருக்கிறது. அந்தக் கடன்கார விவசாயிகளைப் பொருளாதாரத்தில் சொந்தக் காலிலே நிற்க வைக்கும் முயற்சியைத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதற்காக 9 அம்சக் கொள்கையை வைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள், ஒரு காலத்திலே விவசாயிகளுடைய பிரச்சினைக்கு 9 அம்சக் கோரிக்கையை முன்வைத்தார்கள். இன்றைக்கு இந்த அரசு ஒன்பது அம்சக் கொள்கையை இந்த வேளாண்மைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த 9 அம்சக் கொள்கைகளை நிறைவேற்றினால் நிச்சயம் விவசாயிகளுடைய நிலை, கடன் வாங்கும் நிலையிலே இருக்காது.

நீடித்த நிலையான வேளாண்மை, சீர்மிகு நீர் மேலாண்மை, பயிர்த் தொழிலுடன் பலன்தரும் பக்கத் தொழில்கள், உற்பத்திச் செலவுக்கு உரிய, நேரிய விலை, வெற்றி தரும் வளர்ச்சிக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆக்கம் தரும் வேளாண்மையில் அறிவியல் பொறிகளின் பணி, வேளாண்மை விளை பொருட்களுக்கு வெளிநாடுகளில் அங்காடி, காய்கறி விளைச்சலில் கணிசமான பெருக்கம் மற்றும் விதை உரிமைகளும் வேண்டிய பல்லுயிர் பெருக்கமும் என்ற அந்த 9 அம்சக் கொள்கைகளை நிறைவேற்றினால், நிச்சயமாக தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வினை ஏற்படுத்தித் தரமுடியும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கொள்கைகளைச் சீரிய முறையிலே அமலாக்கித் தரவேண்டுமென்ற வேண்டுகோளையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தானிய உற்பத்தியுடன் புரதம் தரும் பயறு வகைகள், உணவுக்குச் சுவையூட்டும் எண்ணெய் தரும் வித்துக்கள், உடலுக்கு வலுவூட்டும் சிறுதானியங்கள், தொழிலுக்கான மூலப் பொருட்களைத் தரும் கரும்பு, பருத்தி ஆகியவற்றின் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தும் கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் உற்பத்தி பெருக, விலை உத்தரவாதம் வேண்டும். 8.5 சதவீத சர்க்கரைச் சத்துடன் கூடிய கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 525 என்று விலை நிர்ணயித்திருப்பதை நான் வரவேற்கிறேன். சர்க்கரைச் சத்தை மட்டும் கரும்பின் விலையை நிர்ணயிப்பதற்கான அடிப்படையாக

எடுத்துக் கொள்ளாமல், அதோடு எரிசாராயம் தயாரிப்பதற்கு உதவும் ஆல்கஹாலையும் அது தருவதால், அதனால் கிடைக்கும் ஆதாயத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, டன் ஒன்றுக்கு ரூ. 750-ஐக் கொடுத்து உதவவேண்டும் என்ற அந்த வேண்டுகோளையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 5-30

பருத்தியை கரும்பைப் போல ஆலையுடன் இணைத்து விலை நிர்ணயத்திற்கு கொண்டு வர வேண்டும். பஞ்சாலை முதலாளிகள் பருத்திக்கு ஒரு பைசா கூட உதவாமல், பருத்தி விளைச்சலுக்கு எந்தவிதமான உதவியும் செய்யாமல், பருத்தியும் பஞ்சும் விலை குறைவாகக் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது, 10 மாதம் சுமக்காமல், பிரசவ வேதனை அனுபவிக்காமல் அழகான ஆண் மகவைப் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிற ஒரு தாயினுடைய செயலுக்கு ஒப்பானதாக இருக்கிறது. எனவே, அந்த பருத்தி ஆலை முதலாளிகள் எதிர்பார்ப்புகள் அப்படி இருக்கிறது. எனவே, பருத்தி அபிவிருத்தித் திட்டங்களுக்கு தமிழகத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பஞ்சாலை, நூற்பாலை, நெசவாலை, கைத்தறி, விசைத்தறி, பனியன், கதர் கிராமத் தொழிலுக்கு மூலப்பொருள் பருத்தி. துணி ஏற்றுமதி இந்தியாவிற்கு அன்னியச் செலாவணியை அள்ளித்தரும் காமதேனுவாக இருக்கிறது. இந்தியாவில் தமிழ்நாடுதான் துணித் தொழில் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிற மாநிலம். துணி தேவை 40 லட்சம் பேலாக இருக்கும் போது, உற்பத்தி வெறும் 4, 4½ லட்சம் பேலாகத்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, உரையை முடித்து விடலாம். இன்னும் 6, 7 உறுப்பினர்கள் பேச வேண்டும். வேளாண்மைத் துறை மட்டுமல்லாமல், 3 மானியக் கோரிக்கைகள் இன்றைக்கு மொத்தமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் உங்கள் உரையை சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : எனவே, அந்த பருத்தியை இன்றியமையா சட்டத்தில் கொண்டுவந்து விலை குறைப்பு செய்திருக்கிறார்கள். அதனால் பருத்தி உற்பத்தியானது மிகவும் பாதிக்கப்படுகிறது. பருத்திக்கு அதிகமாக இரசாயன உரம், பூஞ்சான மருந்துகள் பயன்படுத்தி, ஆறு மாதம் காத்திருந்து தான் அறுவடை செய்யவேண்டிய நிலை இருக்கிறது. ஒரு குவிண்டால் விலை இன்றைக்கு 2,500 ரூபாய்தான் பெற முடிகிறது. ஆனால், அதையே ஆறு நாட்களில் நூலாக்கி, துணியாக்கி 10 மடங்கு இலாபம் வைத்து விற்கிற நிலை ஆலை முதலாளிகளுக்கு இருக்கிறது. எனவே, பருத்தியை ஒரு குவிண்டாலுக்கு இன்றைக்கு 5,000 ரூபாய்க்கு விற்றால்தான் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும்.

பருத்தியை தாக்கும் காய்ப் புழுவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறையின்கீழ், 'நியூகிளியர் பாலிஹெட்ரோசிஸ் வைரஸ்' உபயோகிக்க அரசு அதிக உதவி செய்து, பருத்தி அபிவிருத்திக்கு உதவ வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

வேளாண்மையில் இரசாயன உரம், பூஞ்சான பூச்சிக் கொல்லி மருந்துகள் குறைந்து உயிரியல் முறையில் அந்தப் பயிர் பூச்சிகள் கட்டுப்பாட்டையும் சுற்றுச்சூழல்களை பாதுகாக்கிற, மாசு ஏற்படுத்துவதைத் தடுக்கிற இயற்கை வேளாண்மை முறைக்கு முன்னுரிமை கொடுத்திருப்பதை இந்த நேரத்தில் வரவேற்கிறேன்.

இன்றைக்கு விவசாயத் தொழிலை விட தோட்டக்கலைத் துறை முக்கியம் பெற்றிருக்கிறது. ஒரு நாடு பொருளாதார வளர்ச்சி அடைகிறபோது உணவு தானியங்கள் உபயோகம் குறைந்து, பழம், காய்கறிகள், மாமிசம், முட்டை போன்ற உணவு வகைகளை அதிகமாக உபயோகிக்கிற நிலை ஏற்படுகிறது. அந்த இயற்கையான முறையில் காய்கறிகளை உற்பத்தி செய்கிறபோது மேலை நாடுகளில் அவர்கள் அதிகமாக அதற்கு விலை கொடுக்கிறார்கள். அப்படி தயாரிக்கிற பொருளுக்கென்று நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் அதிக விலை கிடைப்பதில்லை. இன்றைக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தானியங்களை இடைத்தரகர்கள் இல்லாமல் விற்பதற்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. ஓரளவுக்கு அதனால் விலை பெற முடிகிறது. ஆனால், காய்கறிகளை எடுத்துக் கொண்டால் தனியார் கமிஷன் மண்டிகளில்தான் விற்கவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்று ஏலம் கூறித்தான் விற்றுக் கொடுக்கிறார்கள். அப்படி விற்கிறபோது வாங்குகிறவன் அதிக விலை கொடுத்தும், விற்கிறவர்கள் குறைந்த விலையிலும் தான் விற்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இந்த காய்கறிகளை விவசாயிகள், கேட்கிற விலைக்கு கொடுத்துவிட்டு, அவர்கள் சொல்கிற விலைக்கு இடுபொருள்களை வாங்கி வர வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு இந்த காய்கறிகளுக்கும் நல்ல மார்க்கெட் வசதி ஏற்படுத்த வேண்டும். தானியங்கள், பருத்தி, எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை இடைத்தரகர்கள் இல்லாமல் விற்க உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் போல தோட்டக்கலை விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு அதிகபட்சம் விலை வைத்துத் தருவதற்கு, (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம் — அரசு தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் நிறுவனம் ரூ. 115 இலட்சத்தில் தொடக்க முதலுடன் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது, இச்சங்கம் பழங்கள் மற்றும் காய்கறிகளை பதப்படுத்த, விற்பனை செய்ய ஒருங்கிணைக்கும் என்று ஒரு கொள்கையை சொல்லியிருப்பதை இந்த நேரத்தில் வரவேற்கிறேன்.

பிற்பகல் 5-35

இன்றைக்கு ஹிந்து பத்திரிகையில் கூட மாம்பழ ஏற்றுமதியில் இருக்கிற ஒரு பிரச்சினை பற்றி ஒரு செய்தி வந்திருப்பதை அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். இன்றைக்கு மாம்பழம் தமிழகத்தில் அதிகமாக விற்கிறபோது, அந்த மாம்பழத்தை ஏற்றுமதி செய்வதில் அந்த ஏற்றுமதியாளர்கள், அக்ரிகல்ச்சுரல் புராசஸ்ட் புராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் அத்தாரிட்டியை அணுகி அதில்கூட ஏற்றுமதிக்கு தர முடியாமல், குளிர்சாதன வசதியைப் பெறாமல் இருக்கிற ஒரு நிலை இருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். இப்படி இந்தத் தோட்டக் கலைப் பயிர்களை ஏற்றுமதி செய்வதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற வேண்டுகோளை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தென்னை சாகுபடியில் தமிழகம் முதல்நிலை மாநிலமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, தேங்காய் உபயோகம் தமிழகத்தைத் தாண்டி வட மாநிலங்களுக்குச் செல்லவேண்டும். அங்கே தென்னை மரங்கள் இல்லை. டெல்லி போன்ற நகரங்களிலே நான் கூட தெருக்களிலே போகும்போது, டிராபிக் ஜாம் ஆகி நிற்கின்றபோது, அங்கே தேங்காயைக் கீத்துக்களாகப் போட்டு தின்பண்டங்களாக விற்பதைப் பார்த்து இருக்கிறேன். ஒரு கீத்து இரண்டு ரூபாய்க்கு விற்கிறார்கள். ஒரு தேங்காய் 20 ரூபாய் அல்லது 30 ரூபாய் விலை ஆகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதேபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல, இளநீரை சேச்சட்டிலே போட்டு வட மாநிலங்களுக்கு விற்று, தென்னை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைகள் என்பது ஒரு நாட்டினுடைய இயற்கைச் செல்வங்கள். அந்தக் கால்நடைகளை, மரபு சார்ந்த கால்நடைகளை நாம் பாதுகாக்க வேண்டும். அதற்கு இன்றைக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக் கழகமும் இந்த இரண்டுமே, இன்றைக்குப் பயிர் வகைகளைப் புதிதாகக் கண்டுபிடிப்பதிலும், எம்.ஜி.ஆர். நெல் வகைகள் என்று, ஜே.ஜே. 92 போன்ற நெல் வகைகள் என்று கண்டுபிடிப்பதிலும், கால்நடைகள் வளர்ச்சிக்கான உதவிகளைச் செய்வதிலும் முன்னணியில் நிற்கின்றன. அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய மேலாண்மைக் குழு உறுப்பினராக நான் 3 ஆண்டுக்காலம் புரட்சித் தலைவியினுடைய அனுமதியால் பணியாற்றி இருக்கிறேன். அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே — வேளாண்மைப் பல்கலைக் கழகம் விவசாயிகளுக்குப் பயன் உள்ளதாக இருக்க — விவசாயி ஒருவரையும், சமூக சேவை செய்கின்ற ஒருவரையும் மேலாண்மைக் குழு உறுப்பினர்களாக நியமிப்பது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு, அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய வேந்தர் அவர்கள்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும், தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக் கழகத்திற்கும் ஆந்திராவைச் சேர்ந்த இரண்டு, இரண்டு பேர்களை நியமித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு என்ன செய்யவேண்டும் என்பதற்காக, ஆராய்ச்சி செய்வதற்காக இருக்கின்ற பல்கலைக் கழகத்திலே ஆந்திராவைச் சேர்ந்த விவசாயியையோ அல்லது யாரையோ நியமிப்பதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு அமைச்சர் பதவியை தந்திருக்கிறார்கள். அதே நேரத்திலே பல்கலைக் கழகத்தினுடைய இணை வேந்தர் பதவியையும் தந்திருக்கிறார்கள். எனவே, இங்கே நான் இணை வேந்தர் என்ற முறையிலே மட்டும் பதில்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு பல்கலைக் கழகத்தினுடைய வளர்ச்சிக்கும், அதனுடைய நிர்வாகத்திற்கும், அதனுடைய தொண்டிற்கும் 3 பேர்கள் ஆணித்தரமாக அச்சாணியாக இருந்து செயல்படவேண்டும். வேந்தர், இணை வேந்தர் மற்றும் துணை வேந்தர். இந்தப் பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கக்கூடிய சிண்டிகேட் அல்லது மேலாண்மைக் குழு, வேளாண் பல்கலைக் கழகத்திலே இருக்கிறது. அங்கே இரண்டு உறுப்பினர்களை வேந்தர் அவர்கள் நியமிப்பார்கள். ஒன்று, பயிர் உற்பத்தியிலே சிறந்த ஒரு விவசாயியை நியமிப்பது வழக்கம். அதனைப்போல, சமூகத் தொண்டு ஆற்றக்கூடிய ஒரு பெண்மணியை நியமனம் செய்வது வழக்கம். ஆனால், இந்த வழக்கங்களுக்கு எல்லாம் மாறாக, நம்முடைய வேந்தர் அவர்கள், ஏதோ தமிழகத்திலே அறிஞர் பெருமக்களே இல்லை போலும், தமிழகத்திலே விவசாயிகளே இல்லை போலும், உற்பத்தித் திறனைப் பெருக்கக்கூடிய வல்லுநர்களே இந்த மண்ணிலே இல்லை போலும் என்று கருதிக் கொண்டு, அவர்கள் ஆந்திர மாநிலத்திலிருந்து அதுவும் ஐதராபாத் நகரத்திலே வாழக்கூடிய ஒருவரை, பயிர் விவசாயியாக, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே ஒரு போதும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏன் என்று சொன்னால், 'வாள் தந்து வாள் தூக்கும் வல்லமையை' எங்களுக்குத் தந்திருக்கக் கூடிய புரட்சித் தலைவி காலத்திலே எத்தனையோ சாதனைகளை இன்றைக்கு இந்த அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட நேரத்திலே, பன்னெடுங்காலமாக புகழ் பெற்ற, பல்கலைக் கழகத்திற்கு எல்லாம், ஆந்திரா மாநிலத்திலிருந்து இன்றைக்கு

இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால், இனி பல்கலைக் கழகங்கள் எல்லாம் ஆந்திர மாநிலத்தினுடைய குடியிருப்புகளாக ஆகிவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைமை இங்கே இருக்கிறது.

இந்தப் பல்கலைக் கழகத்திலே மட்டும்தானா ? இல்லை. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே ஒரு விவசாயியை நியமனம் செய்ய வேண்டும் என்று நம்முடைய துணை வேந்தர் அவர்கள், 10, 15 பேர்களைக் கொண்ட பட்டியலை அனுப்புகிறார்கள். அந்தப் பட்டியலை வேந்தர் பார்ப்பதும் இல்லை. பார்க்காமல் அவருடைய இஷ்டத்திற்கு...... (மணியடிக்கப்பெற்றது). மன்னிக்க வேண்டும், இணை வேந்தர் என்ற முறையிலே இங்கே பேசுகிறேனே தவிர, வேறு அல்ல, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதற்கு சட்டப் பேரவை விதி எதுவும் கட்டுப்படுத்தாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பதில் சொல்லும்போது சொல்லலாம். ரொம்ப நேரம் இதிலே எடுத்துக் கொள்ள வேண்டாம். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : இந்தப் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்ல. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு இருவரை நியமித்து இருக்கிறார்கள். அதிலே ஒருவர் பெயர் சேஷாத்திரி ராவ், ஐதராபாத்திலே இருக்கிறார். அவர் விவசாயியா, வியாபாரியா, தொழில் அதிபரா என்பது யாருக்குமே தெரியாது. அதைப்போல ஐதராபாத் நகரத்திலே இருக்கிற ஒருவரை, Woman Social Worker என்று சொல்கிற ஒருவரை ரோகா மிஷ்ரி என்கிற ஆந்திராவைச் சேர்ந்தவரை நியமனம் செய்திருக்கிறார்கள். அதேபோல், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்திலே இருவரை நியமனம் செய்திருக்கிறார்கள். அவர்களும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகும்.

பிற்பகல் 5-40

அதுமட்டுமல்ல, 'இனியும் பொறுப்பதில்லையடா தம்பி, எரிதழல் கொண்டுவா' என்று சொன்னானே பாவேந்தர் பாரதிதாசன், அந்த பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலே ஆந்திராவிலேயிருந்து செனட் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்படி என்று சொன்னால் வேந்தருடைய மகன், இந்த..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அக்ரிகல்சுரல் யூனிவர்சிடி பற்றிச் சொன்னீர்கள். அத்தோடு விட்டு விடுங்கள். திரு. பழனிசாமி, சீக்கிரம் பேசி முடித்துவிடலாம்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பி.எஸ்.சி. வேளாண்மை பட்டம் பெற்றவர்கள், பொறியியலிலே பட்டம் பெற்றவர்கள் தங்களை இன்ஜினியர்கள் என்று போட்டுக் கொள்கிறார்கள், மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் தங்களை டாக்டர்கள் என்று போட்டுக் கொள்கிறார்கள், கால்நடை மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் தங்களை டாக்டர்கள் என்று போட்டுக் கொள்கிறார்கள், அதேபோல் பி.எஸ்.சி. பட்டம் படித்தவர்களும் தங்களைப் பயிர் மருத்துவர் என்ற ஒரு பட்டத்துடன் அழைக்க அவர்கள் உரிமை கேட்கிறார்கள். நியாயமான அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி இத்தோடு முடித்துக் கொள்ளலாம். ஒரு நிமிடம் என்று கேட்டீர்கள். அதற்குப்பிறகு கிட்டத்தட்ட 5 நிமிடங்கள் பேசினீர்கள், போதும் முடித்துக் கொள்ளலாம். நீங்கள் கேட்டீர்கள். அதனால் ஒரு நிமிடம் நான் கொடுத்தேன். நீங்களாக முடித்துக் கொள்வீர்கள் என்று பார்க்கிறேன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : அதேபோல கால்நடைத் துறையிலே கால்நடை மருத்துவர்கள் அவர்களுக்கு நம்முடைய மனித மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் கிடைப்பதில்லை என்ற குறையைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இணையான ஊதியத்தைக் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பாலுக்கான விலை தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகக் குறைவாக இருக்கிறது. அந்தப் பால் விலை என்பது எருமைப்பால் ஒரு கிலோ கொழுப்பு சத்துக்கு ரூ. 96-லிருந்து ரூ. 150 ஆகவும், 7 சதவீத கொழுப்புள்ள ஒரு லிட்டர் பால் ரூ. 6.78-லிருந்து ரூ. 9.86 ஆகவும், பசும்பால் ஒரு கிலோ மொத்த திடப் பொருள் உள்ளது. ரூ. 42-லிருந்து ரூ. 70 ஆகவும், அதாவது 12 சதவீத மொத்த திடப் பொருள் உள்ள ஒரு லிட்டர் பசும்பால் விலை ரூ. 5.25-லிருந்து ரூ. 8.25 ஆகவும் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய கால்நடைகளான, காங்கேயம் போன்ற கால்நடைகளும், தமிழகத்திலே இன்றைக்கு நாய் வளர்க்கின்ற முறை எல்லா வீடுகளிலும் இருக்கிறது. அதிலே தமிழகத்தைச் சேர்ந்த தென் மாவட்டங்களில் கோம்பை, ராஜபாளையம், கண்ணி, சிப்பிப்பாறை போன்ற நல்ல சிறந்த நாய் ரகங்கள் இருக்கின்றன. அவற்றை கால்நடைத் துறையின் மூலமாக அபிவிருத்தி செய்து, நம்முடைய வீடுகளுக்கும், தோட்டங்களுக்கும் பாதுகாப்பாகவும் மற்ற வகையில் நம்முடைய இனத்தைக் காக்கின்ற முறையிலும் நன்கு அபிவிருத்தி செய்து வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இந்தத் துறைகளின்

மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. க. பழனிசாமி.

**திரு. க. பழனிசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த நிலைக்கு உயர்த்திய 6 கோடி தமிழ் மக்களுடைய நெஞ்சிலே நீங்கா இடம் பெற்ற எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பால் வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

இன்று தமிழகத்திலே சுமார் 70 சதவீத மக்கள் வேளாண்மைத் தொழிலை ஒரு தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். இந்த வேளாண்மைத் துறையை ஒட்டிய உப தொழில்தான் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பால் வளர்ச்சி ஆகியவை. இன்று நம் விவசாயிகள் அவற்றை உப தொழிலாகக் கொண்டு நடத்தி வருகின்றார்கள். பால் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே சுமார் 10,182 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு கிராமங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே சுமார் 24.46 லட்சம் உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே நாள் ஒன்றுக்கு சுமார் 16.60 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு அந்த கிராமச் சங்கங்களின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. ஒன்றியத்தின் மூலமாக சுமார் 4.42 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு பல்வேறு இடங்களிலே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. கிட்டத்தட்ட 1993-94-ஆம் ஆண்டு புதிதாக 451 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் துவங்கப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு சுமார் 487 புதிய சங்கங்கள் தமிழகத்தினுடைய கூட்டுறவுச் சங்கங்கள் கிராமத்திலே உருவாக்கப்பட்டுள்ளன. அதிலே குறிப்பாக 288 சங்கங்கள் பெண்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 64 சங்கங்கள் முழுமையாக பெண்களே நிர்வகிக்கக் கூடிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக இன்று நிர்வாகம் செய்யப்பட்டு கொண்டு வருகின்றன. புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் மூன்று முறை பால் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், தற்போது இந்த 2 ஆண்டு காலத்திலே கால்நடைப் பராமரிப்பு செலவும் அத்தோடு கால்நடை தீவனத்தினுடைய செலவும் அதிகரிக்கின்ற காரணத்தினாலே இன்று விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் எல்லாம் பாலினுடைய விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று பல்வேறு

கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து பால் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல், இன்று தனியார்களுக்கும் அதிகமான விலை கிடைப்பதால் அண்டை மாநிலத்திற்கு பாலை கொண்டு செல்லுகின்ற காரணத்தால், நம்முடைய சங்கங்களுக்கு வருகிற பால் எல்லாம் குறைகின்ற ஒரு அச்சம் ஏற்படுகிற காரணத்தினாலே நம்முடைய சங்கங்கள் மூலமாக அதிகமான விலையை உயர்த்திக் கொடுத்து பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு விற்கக் கூடிய பாலினுடைய விலையையும் உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல், இப்போது கறவை மாடுகளுக்கு மானியத்திலே கடன் வழங்கப்படுகிறது. அதை புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் 3,200 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட இப்போது கறவை மாட்டினுடைய விலை அதிகமாக இருக்கிற காரணத்தாலே அந்த மானியத்தை உயர்த்தி சுமார் 9 ஆயிரம் ரூபாய்க்கு, கறவை மாடுகள் வாங்குவதற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, பழங்குடி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 100 கறவை மாடுகள் 70 சதவீத மானிய விலையில் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்திலே, மலைப் பகுதியிலே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கின்றபொழுது, ஒன்றியம் மூலமாக அதை எடுத்து வருகிற பொழுது அதிகமாக போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்படுகிறது. அதை அரசு மானியமாக கொடுத்தால் அந்தப் பகுதியிலே புதிய கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அந்தப் பகுதி மக்கள் நன்மை பெறுகின்ற விதத்திலே அங்கிருந்து பாலை கொள்முதல் செய்வதற்கு வாய்ப்பாக அமையும்.

அதேபோல, சேலம் பால் பண்ணையைப் பொறுத்தவரையிலும் இப்போது நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அதிகமாக்கி கூடுதலாக, சுமார் 5 லட்சம் லிட்டராக பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு, ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையத்தினுடைய குளிரூட்டும் திறன் தற்போது 80 ஆயிரம்

லிட்டர்தான், குளிரூட்டப்படக் கூடிய நிலையிலே இருக்கிறது. அங்கே இப்போது 85 ஆயிரம் லிட்டர் பால் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் வருங்காலத்திலே 1½ லட்சம் லிட்டர் பால் வருவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் அதனுடைய திறனை அதிகப்படுத்தி 1.5 லிட்டர் திறன் குளிரூட்டும் நிலையமாக மாற்றி அமைத்து உதவிட அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பால் சங்கங்களுக்கு எல்லாம் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்திலே நியாய விலைக் கடைகளுக்கு எல்லாம் இப்போது கட்டிடம் கட்டிக் கொடுக்கிறார்கள். அதேபோல, கிராமப்புறத்திலே இருக்கிற பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சேலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த அளவிலே 2 லட்சம் லிட்டர் பாலை வைத்துத்தான் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது 3 லட்சம் லிட்டர் பால் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பால் உற்பத்திக்கு தகுந்த அளவுக்கு பணியாளர்களை நியமனம் செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்லாமல் இணையமும் இங்கு உற்பத்தி செய்கின்ற பாலினுடைய உப பொருட்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறது. அதுபோல, அந்தந்த ஒன்றியமே இணையம் நிர்ணயிக்கும் விலைக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல, விவசாயத்தைப் பொறுத்த அளவிலே கிட்டத்தட்ட தமிழகம் 105 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தியை என்றும் இல்லாத அளவுக்கு இப்போது எட்டி உள்ளது.

பிற்பகல் 5-50

அது போல, 8.5% சர்க்கரை சத்துள்ள கரும்பிற்கு இப்போது மத்திய அரசாங்கம் 391 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் 134 ரூபாய் சேர்த்து மொத்தம் 525 ரூபாய் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, இப்போது பராமரிப்புச் செலவு, உர விலையேற்றத்தின் காரணமாக, விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்ற காரணத்தினாலே, கனிவோடு பரிசீலனை செய்து, கரும்பிற்கு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அதோடு, கரும்பு சாகுபடியைப் பொறுத்த

வரையிலே, விவசாயிகளிடத்திலே உள்ள கரும்புகளை உரிய காலத்திலே வெட்டுவது கிடையாது. கரும்புகளை உரிய காலத்திலே வெட்டாத காரணத்தினாலே கிட்டத்தட்ட 12 மாதத்திலே வெட்ட வேண்டும் என்று சொன்னால் 14 மாதங்கள் கழித்துதான் கரும்பு வெட்டுகிறார்கள். இதனால் ஏற்படுகின்ற இழப்புக்கு அந்த ஆலை நஷ்டத்தை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். எங்கள் பகுதியிலே பொன்னி சர்க்கரை ஆலையில் கிட்டத்தட்ட 14 மாதங்கள் ஆகியும்கூட இன்னும் கரும்பு வெட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஆலைகளால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 50, 60 டன் வர வேண்டும் என்று சொன்னால், 14 மாதங்கள் பொறுத்து வெட்டுகின்றபோது அது 40, 45 டன்தான் வருகின்றது. ஆகவே, இந்த எடை குறைவான, வித்தியாச நஷ்டத்தை ஆலை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அதுபோல, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சி, பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே மழைக் காலத்திலே அதிகமான தண்ணீர் வருகின்றது. இதை சிறிய, சிறிய, செக் டாம்களாக தேக்கி வைத்தால் அந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவார்கள். ஆகவே, சிறிய சிறிய செக் டாம்களாக அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய்களை காரைப் பூசுகின்ற கால்வாய்களாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அது போல, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இன்று 10 ஆயிரம் ரூபாய் கட்டினால் இன்றைக்கு சீனியாரிட்டியைத் தவிர்த்து முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பு வழங்குவதாக அறிவித்திருக்கின்றார்கள். அதை விவசாயிகள் பெரிதும் பாராட்டி வரவேற்றுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேபோல, சேலத்தைப் பொறுத்தவரையிலே, பூக்கள், மல்லிகை, செவ்வந்தி பூ, ரோஜா பூ, போன்ற பல பூக்கள் அதிகமாக விளைகின்ற காரணத்தினாலே அதைப் பயன்படுத்தி சென்ட் தொழிற்சாலை ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அதைப்போல, சூரியகாந்தி நாமக்கல், ராசிபுரம் போன்ற பகுதிகளிலே அதிகமாக விளைகின்ற காரணத்தினாலே அதைப் பயன்படுத்தி சூரியகாந்தி எண்ணெய் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

கால்நடையைப் பொறுத்தவரையில், எடப்பாடி தொகுதி கொங்கணாபுரம், கச்சிப்பள்ளி ஊராட்சியிலே கே. பள்ளிப்பட்டி என்ற பகுதியிலே 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினாலே அதில் சுமார் 30-க்கும் மேற்பட்ட சிறிய, சிறிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக

இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே அதிகமாக கால்நடைகள் வளர்க்கப்படுகின்ற காரணத்தினாலே, அங்கே ஒரு புதிய கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், குடிதண்ணீர் பிரச்சனையைப் பொறுத்த வரையிலே, பொது மக்களுக்கும், குடிதண்ணீர் வசதி வேண்டும். அதே போல கால்நடைகளுக்கும் குடிதண்ணீர் வசதி வேண்டும். ஆகவே, ஒட்டுமொத்தமாக அதைக் கருத்திலே கொண்டு எங்கள் தொகுதியிலே பூலாம்பட்டியிலிருந்து சின்னப்பட்டி வரை ஒரு கூட்டு குடிநீர் திட்டத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே ஒரு பேரூராட்சி, 9 ஊராட்சிகள் பயன் பெறுகின்றன. அதோடு, எடப்பாடி, ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மிகப் பெரிய திட்டமாக இந்த ஆண்டு எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் எடப்பாடிக்கு இந்த ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் குடிநீர் வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துக் கொள்ளலாம்.

திரு. க. பழனிசாமி : அதோடு மட்டும் அல்லாமல் கால்நடை மருந்தகத்திற்கு கடந்த முறை புரட்சித் தலைவி அவர்கள் மருந்து வாங்குவதற்கான தொகையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், இப்போது கால்நடைகளுக்கு அதிகமாக நோய் ஏற்படுகின்ற காரணத்தினாலே, தேவையான மருந்துகள் அங்கே இல்லாத காரணத்தினாலே இந்த மருந்துகளை வாங்குவதற்கு இன்னும் அதிகமான தொகை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, கால்நடை கிளை மருந்தகத்திற்கு அந்தத் தொகையைப் பொறுத்தவரை இப்போது ரூ. 5 ஆயிரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை ரூ. 10 ஆயிரமாக கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, நாமக்கல் கால்நடை மருந்தகத்திற்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருந்தார்கள். வாய் இல்லாத ஜீவன்களுக்கு சிகிச்சை பெற வேண்டும் என்று சொன்னால் அவைகளை அங்கே கொண்டு செல்ல முடியாது. ஆகவே, அவைகளைக் கொண்டு செல்வதற்கான ஆம்புலன்ஸ் வண்டி வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லி, இந்த 3 மானியக் கோரிக்கைகளையும் வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீரிய நடை, தெளிவான சிந்தனை, ஆற்றல் மிக்க பணிகள், சிறந்த ஆட்சி நிர்வாகம், மக்கள் போற்றும் திட்டங்கள், மாற்றார்கள் திகைக்கும் சட்டங்கள், அதனால் ஏற்படும் எதிர்க்கட்சியினரின் தடுமாற்றங்கள், எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் தூள் தூளாக்குகின்ற ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்களே, போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும், ஏற்றமிகு எம்பணி மக்களுக்கு செய்வதே என சூளுரைத்து இந்த அரசுக்கு தலைமைப் பொறுப்பை ஏற்று செயல்படும் என் தாய் புரட்சித் தலைவியே, உங்கள் திக்கு நோக்கி கும்பிட்டு என் உரையைத் துவக்குகின்றேன். மானியக் கோரிக்கை எண் 22 — கால்நடை பராமரிப்புத் துறையில் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி வெண்மை புரட்சி.......

பிற்பகல் 5-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் புருஷோத்தமன், மொத்தம் 3 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அதனால் மூன்றையும் கம்பைன் பண்ணித்தான் பேச வேண்டும். ஒவ்வொன்றுக்கும் தனியாகக் கொடுக்க முடியாது. மொத்தமே 10 நிமிடம்தான் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் : துணைத் தலைவர் அவர்களே, மூன்று முறையும் உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறை, பால் வளர்ச்சித் துறை, விவசாயத் துறை இந்த 3 மானிய கோரிக்கைகளில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக எனது கருத்துக்களை இம்மாமன்றத்திலே வைக்கின்றேன். ஒரு நாடு நன்றாக இருக்க வேண்டும் என்றால் அதனுடைய செல்வங்கள் எல்லாம் விவசாயத்திலும், விவசாயத்தைச் சார்ந்த தொழில்களிலும் பெரும் தொழில்களிலும்தான் இருக்கிறது. ஆனால், நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலேயே நாம் பசுமைப் புரட்சியிலே முதன்மையான இடத்தை வகிக்கின்றோம். அதிகமான புரட்சியை நாம் செய்துக் கொண்டு வருகின்றோம்.

அடுத்ததாக, இந்திய துணைக் கண்டத்திலேயே தொழில் வளர்ச்சியிலே நாம் பத்தாவது இடத்திலிருந்து இன்று மூன்றாவது இடத்திற்கு வந்திருக்கிறோம். ஆனால், வெண்மை புரட்சியிலே நாம் எந்த இடத்திலே இருக்கின்றோம் என்று தெளிவாக நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால் ஒரு நாட்டினுடைய செல்வங்கள் அந்த கால்நடைகளுடைய வளர்ச்சியைப் பொறுத்து

அமைந்திருக்கிறது. இங்கு பேசியவர்கள் பால் பற்றாக்குறையாக இருக்கிறது. முட்டை விலை ஏறிவிட்டது. இறைச்சி விலை ஏறிவிட்டது. ஆகவே இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இங்கு கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கும்போது 1989-ஆவது ஆண்டு கால்நடை கணக்கு எடுப்பிற்கும் 1994-ஆவது ஆண்டு கால்நடை கணக்கு எடுப்பிற்கும் மாறுபட்ட வித்தியாசங்கள் உள்ளன. ஏனென்றால் ஆண்டுக்கு ஆண்டு கால்நடைகளுடைய எண்ணிக்கை குறைந்து வருவதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இதை நாம் மிக மிக முக்கியமாக கவனிக்க வேண்டும். ஏனென்றால் கால்நடைகளுடைய எண்ணிக்கை அதிகமாக வளர வேண்டும். அப்பொழுதுதான் இந்த கிராமப்புறங்களில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் நீங்கும். ஆகவே, கால்நடைகளுடைய திட்டங்கள் பரவலாக்கப்பட வேண்டும். பல்வேறு பன்னாட்டு அமைப்புகள் மூலமாகவும் இந்திய அரசின் மூலமாகவும் ஒவ்வொரு மாநில அரசின் மூலமாகவும் பல்வேறு திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு வருகின்றது. எத்தனை திட்டங்கள் தீட்டினாலும் இந்த கால்நடை துறையைப் பொறுத்தவரையிலும் அது ஒரு சமச் சீர் நிலையில்தான் இருக்கிறது. பல்வேறு துறைகள் எல்லாம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே வருகின்றன. ஆனால் 1965-லே 10 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டும் என்று இருந்த அந்த நிலையில் இன்றைக்கும் அதே 10 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, நம்முடைய ஆட்சிக் காலத்திலே இந்தத் துறையை நாம் அதிக கண்ணோட்டத்துடன் செயல்படுத்த வேண்டும் என்று மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையிலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு பல்வேறு இடர்பாடுகள் உள்ளன. ஏற்கனவே கால்நடை பராமரிப்புத் துறையிலே படித்த பட்டதாரிகள் 600 பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். 200 கால்நடை கிளை நிலையங்கள் காலியாக உள்ளன. ஆகவே, கால்நடை மருத்துவப் படிப்பு படித்த 600 மருத்துவர்களை இந்த கால்நடை கிளை நிலையங்களில் அவர்களுக்கு ஸ்டைஃபண்ட் கொடுத்து அவர்களுடைய அந்த படிப்புத் திறனை அங்குள்ள பாமர மக்களுக்குப் பயன்படுத்தினால் கால்நடை செல்வத்தைப் பெருக்குவதற்கு ஒரு வழி ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். உடனடியாக 200 கால்நடை கிளை நிலையங்களுக்கு ஸ்டைஃபண்டரி வெட்டரினரி கிராஜுவேட் என்ற ஒரு முன்னோடித் திட்டத்தை நீங்கள் வகுத்து அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கால்நடை மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்ற காலத்திலே பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகின்றார்கள். அப்படிப்பட்ட சங்கடங்களுக்கு அவர்களுக்கு ரிஸ்க்

அலவன்ஸ் 100 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதே துறையில், நடமாடும் கால்நடை மருந்தகங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்களுக்கு அந்த ரிஸ்க் அலவன்ஸ் இல்லை என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-00

மேலும், கால்நடை ஆராய்ச்சிக்காக பல்வேறு வகையான திட்டங்கள் எல்லாம் கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏன் என்றால், அந்தப் பல்கலைக் கழகத்தில் ஆட்சி மன்றக் குழுவில் உறுப்பினராக நான் இருக்கின்ற காரணத்தால் அங்குள்ள சில பிரச்சினைகளை இந்த மாமன்றத்தில் சொல்லியாக வேண்டும். கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு மத்திய அரசின் மூலமாகவும், பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாகவும் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் இங்கு வருகின்றன. அப்படி வருகின்ற பணத்திலே நம்முடைய மாநில பங்கு இவ்வளவு ரூபாய் போட வேண்டுமென்று ஒரு விதிமுறை இருக்கிறது. அந்த நேரத்திலே நம்முடைய மாநில அரசு, தன்னுடைய பங்கை செலுத்தாத காரணத்தால் பல்வேறு திட்டங்கள் எல்லாம் வேறு எங்கோ போய் கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட முன்னோடித் திட்டங்கள் எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டுக்கு வேண்டும், அப்படி வருகின்ற பணத்தை இங்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை மருந்தகங்களை மருத்துவமனைகளாக ஆக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். எல்லா தாலுக்காவில் இருக்கின்ற மருந்தகங்களை எல்லாம் அப் கிரேடு செய்ய வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நம்முடைய ஆட்சிக் காலத்தில், பொற்கால ஆட்சியில் செய்ய வேண்டும் என்று மெத்த பணிவன்போடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதி தர்மபுரி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதி, பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியில் கல்வி அறிவு 20 சதவீதம் தான் இருக்கிறது. இங்குள்ள ஆரம்பப் பள்ளிகளிலிருந்து, உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து, மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து தரம் உயர்த்தும்போது இப்படிப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து இங்குள்ள பாப்பாரப்பட்டியில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும், இண்டூரில் உள்ள ஆண்கள் உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கித் தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இண்டூர் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, இந்தப் பகுதியில் ஒரு புறக் காவல் நிலையம் வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் பல்வேறு பாசனத் திட்டங்கள் எல்லாம் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை உள்ள தொகுதி. மத்தாளப்பள்ளம் என்ற ஒரு பகுதியில் சிறிய அணைக்கட்டுத் திட்டத்தை ஏற்படுத்தினால் அந்தத் திட்டத்தின் வாயிலாக ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாயக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட திட்டத்தை நீங்கள் இந்த மாமன்றத்தின் மூலமாக என்னுடைய கோரிக்கையாக ஏற்று, செய்து கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதி கடைக்கோடிப் பகுதி, டெயில் எண்டு ஏரியா. அந்த ஏரியாவிலே வருடம் முழுவதும் லோ வோல்டேஜ் இருக்கிறது. இந்த லோ வோல்டேஜை சரி செய்வதற்கு 33 கிலோ வாட் மின்சார பகிர்மான நிலையம் ஒன்று வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் சுற்றுலா ஸ்தலம் ஒகேனக்கல் இருக்கிறது. இங்கே பாமர மக்கள், ஏழை மக்கள் அண்டை மாநிலத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சுற்றுலா ஸ்தலத்தை இன்னும் பல்வேறு வகைகளில் மேம்பாடு செய்யவேண்டும். அதற்காக முன்னோடி திட்டங்கள் எல்லாம் போட்டு இந்த சுற்றுலா மையத்தை நல்லமுறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாமன்றத்தில் இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னைப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வீ. சுப்பிரமணியன்.

*திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை கூறுவதற்கு முன்பாக நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிர்வாக சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டு தென் ஆற்காடு மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாக பிரித்து விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் என்ற ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல்; சிப்காட் மூலம் தொழிற்பேட்டை துவங்குவதற்காக எனது தொகுதியிலுள்ள விக்கிரவாண்டி பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அந்த ஆய்வுப் பணிகளை நடத்த உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு..............

பிற்பகல் 6-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி சுந்தராம்பாள், பத்திரிகைகளையெல்லாம் வைத்துக் கொண்டு இங்கே அவையில் படித்துக் கொண்டிருக்கக் கூடாது.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தை உருவாக்குவதற்கு உத்தரவிட்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, எனது சிறிய உரையின் மூலம் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பெற்ற குழந்தைக்கு மட்டும் பால் வார்ப்பாள் அன்னை. ஆனால், நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோ தமிழகத்திலே உள்ள 6 கோடி மக்களின் வயிற்றில் பால் வார்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் என்று என்னால் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்.

ஆதிதிராவிட மக்களுடைய நலனில் அக்கறை கொண்ட நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் பெறுவதற்காக ஏற்கெனவே அளித்த ரூ. 3,200-ஐ, 4,500 ரூபாயாக உயர்த்தி அதிலேயும் ஒரு சாதனையை நிகழ்த்தினார்கள். அதற்காக எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் உரித்தாக்கிக் கொள்கின்றேன். ஆனால், அந்தத் தொகை போதாது என்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலும், தரமான கறவை மாடுகளை வாங்குவதற்கு அந்தக் கடன் தொகை போதவில்லை என்ற காரணத்தினாலும் அதை மேலும் ரூபாய் 7 ஆயிரம் அல்லது 9 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, கிராமப்புற பால் உற்பத்தியாளர்களுக்கு பிரைஸ், அதாவது கொள்முதல் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மிக்க பணிவோடு வேண்டுகிறேன்.

வெண்மைப் புரட்சி செய்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் சோளிங்கநல்லூர் புதிய பால் பண்ணைத் திட்டம் 32.59 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 24.80 கோடியில் அமைந்துள்ள அந்தப் பால்பண்ணையில் நுகர்வோர்களுக்கு உரிய காலத்தில் பால் செல்வதை உறுதி செய்வதற்கும் இந்தியாவிலேயே முதல்முறையாக பாலிதின் பைகளில் உள்ள பாலை பிளாஸ்டிக் தொட்டியில் நிரப்புவதற்கும், பால் பாக்கெட்டுகளை எண்ணுவதற்கும் ஆகிய அனைத்து வேலைகளையும் ஆட்டோமேட்டிக்காக, தானாகவே நடைபெறும் வகையில் பால்வளத் துறை

சாதனை படைத்திருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே என்று சொன்னால் அது மிகையாகாது. அந்தப் பண்ணையில், திட்டமிடுதல், உற்பத்தி, பராமரிப்புச் செலவு விவரங்கள் ஆகியவைகளை இந்தியாவிலேயே முதல்முறையாக கணிப்பொறி மூலம் நிர்வகிப்பது என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் என்று சொன்னால் அதுவும் மிகையாகாது. தாழ்த்தப்பட்ட மக்களுடைய ரட்சகராக விளங்கிக்கொண்டு இருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையமும் நடத்தும் பால் விற்பனையகங்களில் 20 விழுக்காட்டை ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கவேண்டுமென்றும், அதுவும் ஆதிதிராவிட பெண்களுக்கு ஒதுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு உள்ளார்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டையும் நான் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எனது தொகுதிப் பிரச்சினைக்கு வருகின்றேன். கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள சிறுவந்தாடு என்ற கிராமத்தில் வேளாண்மை துணைக் கிடங்கு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள புதுக்குப்பம் என்ற கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் மிக்க பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் வாரந்தோறும் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு அரசுப் பணிகளை முடுக்கி விடுவதோடு மட்டுமல்லாமல் முனைப்போடு பால்வளத் துறையையும் செம்மைப் படுத்தி வருகிறார்கள். அவருக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, விடை பெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 6-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள், பால்வளத் துறை அமைச்சர் அவர்கள், இந்த மூன்று துறை அமைச்சர்களும் தங்களுடைய மானியக் கோரிக்கையை முன் வைத்து இருக்கிறார்கள். இந்த மூன்று துறைகளும் மிக முக்கியமான துறைகளாகும். டினித வாழ்க்கையோடு அவர்களுடைய பொருளாதாரத்தோடு

இணைந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான துறையாகும். இந்தத் துறையிலே ஒருசில கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலைமைகளில் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற இந்த நிதி போதுமானதாக இருக்காது என்று கருதுகிறேன். காரணம், மத்தியிலே இருக்கிற மத்திய அரசு புதிய பொருளாதாரக் கொள்கை என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வேளாண்மைத் துறை அபிவிருத்திக்காக வழங்கக்கூடிய மானியங்களைக் குறைத்து வருகிற ஒரு அபாய சூழ்நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு, விதைகளுக்கு வழங்கிய மானியத்தை ரத்து செய்திருக்கிறார்கள். நீர்ப்பாசனத் துறைக்கு வழங்கிய மானியத்தை ரத்து செய்திருக்கிறார்கள். பூச்சி மருந்து போன்ற இடுபொருளுடைய, அத்தியாவசியப் பண்டங்களுடைய வேளாண்மை உற்பத்திக்குப் பயன்படக்கூடிய பொருளுடைய மானியங்கள் எதிர்காலத்திலே மேலும் குறைகின்ற ஒரு அபாய சூழ்நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலைமைகளையெல்லாம் எதிர்த்து தமிழ்நாட்டை ஒரு தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற வேண்டுமென்று சொன்னால் இன்றையதினம் இருக்கக்கூடிய ஒதுக்கியிருக்கிற நிதி போதுமானதாக இருக்காது.

இன்றைய தினம் அதற்கு ஒரு அடிப்படையான விஷயமாக விளை நிலங்கள் குறைந்து வருவதால் விளை நிலம் குறைவதற்கு மாற்றாக உற்பத்தியை இரட்டிப்பாக ஆக்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்குள் இன்றையதினம் நாம் இருக்கிறோம். அப்படியென்றால் வீரிய வித்துக்களைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. வீரிய வித்துக்களைக்கூட கண்டுபிடிக்கக் கூடாது என்ற அளவிற்கு இன்றையதினம் 'காட்' ஒப்பந்தம் வழி சொல்லப்படுகிறது. விதை உற்பத்திப் பண்ணைகளைத் தனியார் கைக்கு மாற்றுவதற்கான திட்டங்களை அது உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதில் எதிர்காலத்திலே நம்மையும் சேர்த்து பாதிக்கக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது.

அதுபோன்று, நகரத்தைச் சுற்றியிருக்கிற விளைநிலங்கள் இன்றையதினம் குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டு வருவதால் விளை நிலத்தினுடைய அளவு குறைகிறது. அந்தக் குடியிருப்பு நிலத்தில் இன்றையதினம் சென்னையிலேகூட பல அடுக்கு மாளிகைகள் கட்டப்படுகிறது. அதுபோன்ற குடியிருப்புகளை பல அடுக்குகள் கொண்ட குடியிருப்புகளாகக் கட்டுவதற்கு அரசு அதற்கான ஆணை பிறப்பிக்க வேண்டும். விளைநிலங்கள் குடியிருப்பு மனைகளாக மாற்றுவதை விரைவாகத் தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இன்றையதினம் பணப் பயிர்கூட விளை நிலங்களிலே செய்யப்படுகிறது. அதனுடைய விளைவாக நெல் விளைநிலங்கள்

குறைக்கப்படுகிறது. உதாரணத்திற்குச் சொன்னால், கடந்த இரண்டு நாளைக்கு முன்னால் பத்திரிகையிலே, புதுக்கோட்டையில் தேங்காய் விற்பனை செய்ய முடியாமல், ஒரு காய் இரண்டு ரூபாய்க்குக்கூட கொள்முதல் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம், விளைநிலங்கள் முழுமையும் தென்னை, பணப் பயிராக மாற்றி, தென்னையை அதிகம் உற்பத்தி செய்கின்ற காரணத்தால் இப்படி விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகையிலே வந்த செய்தி.

அதுபோன்று இன்றையதினம் விளைநிலங்களை பணப்பயிர் நிலங்களாக மாற்றுகிற காரணத்தால் விளைநிலங்கள் குறைக்கப்படுகிறது. எதிர் காலத்திலே தன்னிறைவு மாநிலம் என்று சொல்லக்கூடிய நிலைமைகள் மாறி, ஒரு பற்றாக்குறை மாநிலம் என்ற சூழ்நிலைமைகளை உருவாக்கக் கூடிய இந்த வழிமுறைகளை அரசு அறிந்து தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, புதிய கண்டுபிடிப்புகளை இன்றையதினம் நாம் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகள் என்கிற பொழுது இன்றையதினம் வீரிய வித்துக்கள் தேவைப்படுகிறது. அந்த வீரிய வித்துக்களை உற்பத்தி செய்வதற்கு வேகமாக அரசு வேளாண்மைத்துறை அதற்கான முன் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அப்படி வீரிய வித்துக்கள் வருகிறபொழுதுதான் அதிக அளவு நாம் உற்பத்தியைப் பெருக்க முடியும். அந்த வகையிலே செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோன்று, சிறு, குறு விவசாயிகள். இன்றையதினம் அவர்களுடைய நிலங்களைப் பொறுத்த வரை ஒரு நிலக்குவியல் உடைக்கப்பட்டு, நிலம் கை மாறியதனுடைய விளைவாகத்தான் இன்றையதினம் உற்பத்தி அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட சிறு, குறு விவசாயிகளை ஊக்குவிக்கின்ற முறையில் அவர்களுக்கான பல சலுகைகளை அளிக்க வேண்டியிருக்கிறது. இடுபொருட்கள் விதை மானிய விலையில் வழங்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு விதை என்பதில் மானிய விலைகூட அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு அரசு வழங்கக்கூடிய விதை மானியம் 21 சதவீதம் என்று நான் நினைக்கிறேன்.

பிற்பகல் 6-15

ஆனால் அதேநேரத்திலே விதை குறைவாக இருப்பதைப் பயன்படுத்தி தனியார் விதைகள் உற்பத்தி பண்ணி அதிக விலைக்கு விற்கிறார்கள். இன்றையதினம் இந்த ஆண்டுகூட சில முக்கியமான விதை கிடைக்காமல் ஒரு கிலோ விதை பத்து ரூபாய், பன்னிரண்டு ரூபாய் என்ற அளவிற்கு விவசாயிகள் வாங்க வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. ஆனால் வேளாண்மைத் துறையிலே விதைகளை அவ்வப்போது ஒரு கிராமத்திலிருந்து ஒரு கிராமத்திற்கு

மாற்ற வேண்டும். அப்படி மாற்றுவதன் மூலம்தான், விதை மாறுவதன் மூலம்தான் அதிக மகசூல் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றையதினம் பார்க்கின்றபோது அந்த விதைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி விதை உற்பத்தி செய்வதற்கு அந்தந்த கிராமத்திலே குறைந்த பட்சம் 10 ஏக்கர், 15 ஏக்கர் நிலங்களை அரசு குத்தகைக்கு எடுக்க முடியும். எங்கள் மாவட்டத்திலே அதிகமாக கோவில் நிலம் இருக்கிறது. அந்தக் கோவில் நிலத்திலே 16 ஏக்கர் கோவில் சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று உச்சவரம்புச் சட்டம் இருக்கிறது. அப்படி கோவில் வைத்திருக்கக்கூடிய நிலங்கள் தரிசாகக் கிடக்கிறது. அதை அரசு எடுக்கலாம். அதிலே ஒரு சிறிய விதை உற்பத்தித் தளத்தை அமைக்கலாம். அப்படி அந்தத் தளத்திலிருந்து வரக்கூடிய விதைகளை அந்தக் கிராமத்திலே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கொடுக்கலாம். ஏற்றுமதி, இறக்குமதி செலவு குறைந்து அப்படி நாம் செய்ய முடியும். அந்தமாதிரி கிராமங்கள்தோறும் விதை உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கான சூழ்நிலைமைகளை உருவாக்க வேண்டும். விவசாயிகளுக்குக் குறைந்த விலையிலே விதை வழங்குகிறபோது, அவர்கள் அதிகமாக உற்பத்தியில் ஈடுபடுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனக்கு முன்னால் பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு நீண்டநாள் கோரிக்கை. வேளாண்மைப் பட்டதாரிகள் இன்றையதினம் உதவி மருத்துவர் என்று போட்டுக்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று அவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது வட மாநிலங்களிலே பயன்படுத்தப்படுகிறது. ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே இப்படி உதவி மருத்துவர்கள் என்று போட்டுக்கொள்வதற்கு அங்கே அனுமதிக்கப்படுகிறது. அதுபோல் இங்கேயும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஒரே மாதிரி பட்டதாரிகள் என்கிறபோது, மற்ற மருத்துவர்கள் எல்லாம் 4 ஆண்டுக் கால பயிற்சி பெறுவதைப் போல இவர்களும் 4 ஆண்டுக் கால பயிற்சி பெறுகிறார்கள். ஒரு மனிதனுக்கு எப்படி வியாதி வந்தால் தட்பவெப்ப சூழலுக்கு ஏற்ப மருத்துவம் செய்யப்படுகிறதோ, அதுபோல பயிர்களுக்கு இன்று மருத்துவம் செய்யக்கூடிய சூழ்நிலைமை இருக்கிறது. கிராமத்திலே, நிச்சயமாக இன்றையதினம் ஒரு விவசாயி, எப்படி ஒரு சிறு குழந்தையை மருத்துவமனையிலே வைத்துப் பராமரிக்கிறானோ அந்தமாதிரி அன்றாடம் விவசாயத்தைப் பராமரிக்கிற சூழ்நிலைமை கட்டாயம் ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொன்னால், புகையான் பூச்சி ஒரு கொடிய பூச்சி. ஒரு ஏக்கர் நிலத்தை கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தில் அழிப்பதற்கான சக்தி வாய்ந்த பூச்சி. அதுபோன்று இன்றையதினம் நவீன நோய் பரவி வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் வேளாண்மை விரிவாக்க மையத்தை பயிர் மருத்துவ மையம் என்று மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

இன்று வேளாண்மைத் துறையிலே இருந்து தோட்டக்கலை பிரிக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் சாதாரணமாக ஒரு விவசாயி அதிலே பாதிக்கப்படுகிறார். ஒரு புறத்திலே நெல்லுக்கு நோய் வருமானால் வேளாண்மைத் துறை அதிகாரி அவர்களையும், அதுபோன்று தோட்டப் பயிருக்கு நோய் வருமானால், தோட்டக்கலை அதிகாரிகளைச் சந்திக்கின்ற, இப்படி இரண்டு அதிகாரிகளைச் சந்திக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆரம்பத்தில் ஒன்றாக இருக்கின்ற காலத்தில் இந்தப் பிரச்சினை எழவில்லை. இப்படிப்பட்ட பிரச்சினை இன்றையதினம் எழுந்திருக்கிறது. ஆகவே, தோட்டக் கலையையும், வேளாண்மைத் துறையையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் தோட்டக் கலையிலே பணியாற்றக் கூடிய அதிகாரிகளுக்கு ஊழியர்கள் கிடையாது. தோட்டக் கலை திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் திட்டப் பணிகள் முழுவதும் முடக்கமாகும் சூழ்நிலைமை இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற, தோட்டக் கலையையும், வேளாண்மைத் துறையையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றையதினம் பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பல்வேறு மானியங்கள் முழுமையும் யாருக்கு வழங்கப்பட வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை இன்றையதினம் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒருகால் சேருகிறது என்று சொல்லலாம். ஆனால் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திலே யாருக்குக் கொடுத்தார்கள் என்ற பட்டியலை வெளியிட்டாலே அதனுடைய உண்மை நிலைமை தெரியும்.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நியாயமாக யாருக்கு மானியம் வழங்க வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுக்கிறதோ அது முழுமையாக அவர்களுக்குச் சேரவேண்டும். அதுபோல் இப்போது மானிய விலையில் கடப்பாரை வழங்கப்படுகிறது. அரிவாள் வழங்கப்படுகிறது. இவை பூராவும் மானியத்தில் விவசாயிகளுக்கு...

பிற்பகல் 6-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள். திரு. தம்புசாமி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் பேச

வேண்டிய கருத்துக்களை ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொண்டால் நேரம் கொஞ்சம் குறையும். அரிவாள், சுத்தி எல்லாமே உங்களுக்கு கன்சஷனிலே கொடுக்கச் சொல்லலாம். (சிரிப்பு)

திரு. வே. தம்புசாமி: மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. அதாவது இந்தக் கருவிகளைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு மாவட்டம் பயன்படுத்துவதில் வித்தியாசம் இருக்கிறது. எனவே அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்ற கருவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, சான்று நெல். அதிகமாக நெல் உற்பத்தி செய்யக்கூடிய பகுதி எங்கள் பகுதி. விதைகளைத் தரம் பிரிக்கக் கூடிய ஒரு ராட்சஸ இயந்திரம் திருவாரூரில் இருக்கிறது. ஆனால் விதைச்சான்று பெறுவதற்கு தஞ்சாவூருக்குச் செல்லவேண்டி இருக்கிறது. எனவே திருவாரூரை மையமாக வைத்து சான்று வழங்கு நிலையம் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை. இன்றைய தினம் கொள்கைக் குறிப்பைப் பார்க்கிற போது, கால்நடைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது அவற்றின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது. அவற்றை ஆண்டுதோறும் அதிகரிக்க வேண்டியது மிகமிக அவசியம். கால்நடை வளர்ப்பு என்பது விவசாயிகளின் வாழ்க்கையில் இணைந்து இருக்கக்கூடிய ஒரு உப தொழில். அது மேலும் வளர்க்கப்பட வேண்டும். அவை குறைவதற்குக் காரணம் கிராமங்களில் இப்போது கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் இல்லை. கிராமங்களில் கறவை மாடுகளுக்குக் கடன் வழங்குவதில்லை. அது இன்றையதினம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் இந்த அளவுக்குக் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. அதை அதிகமாக்க வேண்டும் என்றால்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன், பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கிறார்.

* **திரு. கி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் கால்நடைகள் குறைந்து வருவதாகச் சொன்னார்கள். அதன் காரணம் என்னவென்றால் ஸ்லாட்டர் ஹவுஸ்-க்கு நல்ல நிலையில் இருக்கும் மாடுகள் எல்லாம் கொண்டு செல்லப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் அவற்றைக் கேரளாவுக்குக் கடத்திச் செல்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கும் கடத்திச் செல்கிறார்கள். அதனால்தான் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன், பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு உங்கள் கருத்துக்களை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. திரு. தம்புசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் ஏறத்தாழ 3000 பேர் இருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கை என்னவென்றால் அவர்கள் வைத்திருக்கக்கூடிய சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான். அதுபோல் கால்நடை உதவி பராமரிப்பு ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை பராமரிப்பாளர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சி அளிக்கக்கூடியவர்களுக்கான 4 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஆணையிட்டார்கள். அந்த ஆணை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவியாளர்கள் தினக்கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களை அங்கீகரித்து அரசு ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனைகளில் இரவுக் காவலர்கள் ஏறத்தாழ 7 ரூபாய், 9 ரூபாய் என்ற அளவுக்கு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளத்தைப் பொறுத்தவரையில் மாதவரம் பால் பண்ணையில் 2-1-1980 முதல் 700 பேர்கள் வேலை மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981-ஆம் ஆண்டில் வேலைக்குத் திரும்பிய 371 பேர்களுக்கு இன்றைய தினம் பணித் தொடர்பு வழங்கப்படவில்லை. அவர்களுக்குப் பணித்தொடர்பு வழங்க வேண்டும். அது சம்பந்தமாக அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டு இருக்கிறது. அதை விரைவாகப் பரிசீலித்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பால்வளத் தொழிலாளர்களுக்கு விடுப்பு, மருத்துவச் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இணையத்தினுடைய கூட்டம் இருக்கிறது. அந்தக் கூட்டத்தை விரைவாகக் கூட்டி அதில் ஏற்பட்டு இருக்கக்கூடிய சிக்கல்களையெல்லாம் பரிசீலித்து எதிர்காலத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட, இன்றையதினம் டி.வி.யில் விவசாயிகள் நிகழ்ச்சி 6.30 மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது. விவசாயிகள் வேலைகளை முடித்து விட்டு வீட்டுக்குத்

திரும்பும்போது அந்த நிகழ்ச்சியைப் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. அதை மாற்றி 7.00 மணிக்கு மேல் "வயலும் வாழ்வும்" என்ற விவசாய நிகழ்ச்சியை ஒளிபரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப் பெற்றது)

பிற்பகல் 6-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, இது மத்திய அரசாங்கத்திலே பேசவேண்டியது (குறுக்கீடு) அதற்கான நேரம் ஒதுக்குவதெல்லாம் (குறுக்கீடு) இதோடு பேசி முடித்து விடுங்கள்.

திரு. வே. தம்புசாமி: விவசாய நிகழ்ச்சியை 7-00 மணிக்கு மேல் ஒளிபரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ. தா. பொன்னுவேலு.

*** திரு. ஏ. தா. பொன்னுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட 22வது எண் மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கான வாய்ப்பினை அளித்த தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம், தமிழக மக்களின் காவல் தெய்வம், தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என்னுடைய பணிவான வணக்கத்தினைத் தெரிவித்து, தங்களுடைய அனுமதியோடு ஒரு பாடல் பாட வேண்டுகிறேன்.

வான் கொடுக்கும் மழையும் ஒரு இரண்டு மாதம்
வயல் கொடுக்கும் பயனும் ஒரு மூன்று மாதம்
அரசு வழங்கும் நன்மைகளோ ஆண்டுதோறும்
(மேசையைத் தட்டும் ஒலி)
பார் புகழும் முதல்வருக்கோ நாளும் ஜெயமே!
(மேசையைத் தட்டும் ஒலி)

ஆ... ஆ..... ஆ.... ஆ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொன்னுவேலு, பாடலோடு நிறுத்திவிடுங்கள், ராகங்கள், தாளங்கள், சுருதி இவையெல்லாம் வேண்டாம். (சிரிப்பு)

திரு. ஏ.தா. பொன்னுவேலு:

அளித்து சிவந்தன அன்னையின் கரங்கள் சலுகை
அடைந்து மகிழ்ந்தன ஏழைகள் மனங்கள்
தேய்ந்து மடிந்திடும் தீயவர் சதிகள்—தினம்
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாடல் நீளமான பாடல் இல்லையே, சுருக்கமான பாடல்தானே, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு:

உயர்ந்து சிறந்திடும் புரட்சித் தலைவியின் திருக்கரமே!

(மேசையைத் தட்டும் ஒலி)

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்"

என்ற வள்ளுவரின் குறளுக்கிணங்க, கடமையே தன் பணியாக, கண்ணியமே லட்சியமாக, கழகத்தை மட்டுமல்ல, கன்னித் தமிழ்நாட்டை மற்றவர் கவிழ்த்து விடாமல் கட்டிக் காக்கும் காவல் தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியின் (மேசையைத் தட்டும் ஒலி) சீரிய சிந்தனையில் நலத் திட்டங்களோடு வீறு நடைபோடும் கால்நடை பராமரிப்புத் துறை ஒரு வருவாய் ஈட்டும் தொழிலாக தற்போது மாறியுள்ளது. நம் மாநிலத்தில் இம்மாறுதலுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

பிற்பகல் 6-30

விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்ற நம்முடைய தமிழ்நாட்டில் கால்நடைச் செல்வம் என்பது விவசாயிகளுடைய இன்றியமையாத செல்வம் என்று கூறுவது மிகையாகாது. வளர்ச்சிக்கு முக்கியமானதொரு துறையாக நாம் கால்நடை வளர்ப்புத் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளோம். 1995-96 ஆம் ஆண்டிற்கு பல கோடி ரூபாயை ஒதுக்கி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், விவசாயப் பெருமக்களின் விடிவெள்ளியாகவும் திகழும் அன்னையின் ஆட்சியில் கால்நடை பராமரிப்புத் துறையில் நல்ல முறையில் வரையறுக்கப்பட்ட இனவிருத்திக் கொள்கைகள், கால்நடைகளுக்கு நல்வாழ்வு கொடுத்தல், தீவன உற்பத்திப் பெருக்கம், விரிவாக்கக் கல்வி மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி ஆகியவற்றை நல்ல முறையில் செயல்படுத்தியதே காரணமாகும். நம் நாட்டில் காலப்போக்கில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரித்து வெண்மைப் புரட்சியை வெற்றிகரமாக மாற்றியது நம் புரட்சித் தலைவியின் தீவிர முயற்சியின் பலனே ஆகும். உறை விந்து தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியதன் விளைவால் பால் உற்பத்தி அதிகரித்துள்ளதோடு, நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவைகளின் மூலம் மாநிலத்தில் தரம் வாய்ந்த பசு மற்றும் எருமையின உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எத்தர்கள் ஏசினாலும், என்னதான் இடையூறுகள் செய்தாலும் தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் நலன் கருதி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மலைப்பகுதியில் வாழும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுவது புரட்சித் தலைவியின் மற்றொரு சாதனையாகும்.

ஆண்டவனும் ஆதரவு காட்டும் ஆதரவற்ற பெண் சிசுகளுக்குப் பாதுகாப்புத் தந்தாய்! திக்கெட்டும் பரவியது உங்கள் புகழ், உலகமெல்லாம் உலாவியது. அன்னை தெரசாவால் ஆசீர்வதிக்கப்பட்டாய், அக்கிரமக்காரர்கள் அரசியலுக்காக அபாண்டப் பழி சொன்னாலும் அன்னையே உன் பெருமை உலகறியும், உள்ளமற்றவர்கள் அறிவது கடினம்தான். எத்தனை சோதனைகள் வந்தாலும் சாதனை படைப்பதில், சரித்திரம் காணத் துடிப்பவர் நீங்கள். ஆகையால்தான் எதிர்காலத்தில் தொழில் நுட்ப வல்லுநர்களை வரவழைத்து அவர்கள் மூலம் கால்நடை இனவிருத்தி, கருமாற்ற தொழில் நுணுக்கம், தீவன அபிவிருத்தி, நோய் கண்டறிதல், கால்நடை நலப்பணி போன்ற இந்தத் தொழில் நுணுக்கங்களை அவர்கள் மூலம் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது என அறிந்து எண்ணிப் பார்க்கையில் கால்நடைத் துறைக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து கால்நடைச் செல்வங்களுக்கு மிக உன்னதமாக எதிர் காலத்தை ஏற்பாடு செய்கின்ற புரட்சித் தலைவியைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆகவே இப்படிப்பட்ட ஒரு நல்ல நிலையில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கழகத்திற்கு வலிவும், பொலிவும் ஊட்டி இடையறாத இன்னல்களை எல்லாம் சமாளித்து, கழக ஆட்சியை மீண்டும் தமிழகத்திலே நிலைநாட்டி அகில உலகமும் வியக்கும் வண்ணமாய் தமிழகத்தின் தன்னிகரில்லாப் பெண்ணரசியாய் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதம் வணங்கி என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு சில கோரிக்கைகளை தெரிவிக்க விழைகிறேன். என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அங்கே வேப்பூர் ஒன்றியத்தில், திட்டக்குடி பார்டருக்கும் அரியலூருக்கும் செல்லும் வழியிலே பள்ளமும், குழியுமாக சாலை இருக்கிறது. அந்தப் பாதையை சீர் செய்ய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உத்திரவு வழங்கி, அதில் பேருந்து செல்வதற்கு வழிசெய்து தரவேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் அத்தியூர் கிராமத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. நீண்டகாலமாக, எத்தனையோ ஆட்சியாளர்கள் ஆட்சி செய்த போதிலும், அந்தப் பெரிய ஏரிக்கு தண்ணீர் போக்குவரத்து இல்லாமல் சுமார் 9 கிராமங்களில் பயிர் உற்பத்தி செய்ய

இயலாமல் இருக்கிறது. அந்த ஏரிக்குப் பக்கத்திலே வெள்ளாறு ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது அதில் கலிங்கு கட்டி, தடுப்புச் சுவர் கட்டி வாய்க்காலில் திருப்பினால் 9 கிராமங்களில் பயிர் செய்து நன்றாக வாழ்வார்கள் என்பது உண்மையாக இருக்கிறது. ஆகையால் மாண்புமிகு தமிழக முதல்வர், ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம் இதைப் பரிசீலனை செய்து அந்த அத்தியூர் கிராம மக்களுக்கு அத்தகையதொரு வாய்ப்பை செய்து தரவேண்டுமாய் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-35

அதோடு மட்டும் அல்ல, என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்பதினால் அங்கே பெரம்பலூருக்கும், சர்க்கரை ஆலைக்கும் இடையில் செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அதிகமாக ஆதிதிராவிட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்கின்றார்கள். அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட என்னுடைய தொகுதியில், அந்தப் பகுதிக்கு இரண்டு பேருந்துகள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பொன்னுவேலு, இதோடு உரையை முடித்து விடுங்கள்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்களை தரம் உயர்த்தி மருத்துவமனைகளாக மாற்றுவதன் மூலம் கால்நடை மருத்துவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். வருடத்திற்கு 10 ஆக உயர்த்தித் தந்து கொண்டிருக்கிறார்கள். அதை 50-ஆக எண்ணிக்கையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவர்களுக்கு மனிதயியல் மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும் எனப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வேலையில்லாத சுமார் 600 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை, தற்போது காலியாக உள்ள கால்நடை கிளை நிலையங்களில் பணியமர்த்த வேண்டுமென்று பணிவோடுக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்திலே பல வருடமாக தற்காலிகப் பணியாளர்களாக இருக்கின்றார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டும். மேலும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் என்னை தமிழகக் கோழி இன வளர்ச்சி கழகத்தின் தலைவராக நியமித்ததற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இன்றைக்கு 400 தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும்

விளக்கேற்றி வைத்துக் கொண்டிருக்கிற அன்னை அவர்களுக்கு நல்ல ஒரு உயர்வினைக் கொடுத்து காப்பாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும் நேரமாகிவிட்டது. திரு. கே.ஆர். ராஜு.

**திரு. கே.ஆர். ராஜு:* மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரும், சிறப்பும் மிக்க ஆட்சியில் 1995-96-ஆம் ஆண்டிற்கான பால் வளம், கால்நடை, வேளாண்மைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாட்டுவோர், வாடியோர் துயர் போக்கும் வான்மேகமே

பார்வையினால் வறட்சியையும் பசுமையாக்கும் பரவசமே

பொங்குபுனல் காவிரியே

புதுயுகம் கண்டு பொன்னேடு படைக்கும் புதிய சகாப்தமே

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதல்வரே

தமிழக ஆட்சியில் தாங்கள் படைத்த புரட்சிகள் பலப்பல

தமிழக ஏழை மக்களின் வளர்ச்சியே மனதில் கொண்டீர்.

இரவு பகல் என்று பாராமல் உழைக்கிறீர்.

இந்தியத் துணைக் கண்டமே போற்றிப் புகழ்கின்ற
புதுவரி இல்லாமல் வரவு செலவு படைத்தீர்
புரட்சித் தலைவியே வாழ்க பல்லாண்டு

தமிழகத்தின் நிரந்தர முதல்வராக.

தமிழக அரசு எவ்வளவோ, நிதி நெருக்கடி இருப்பினும் ஏழையெளிய நடுத்தர மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு எல்லாச் சலுகைகளையும் வாரி வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு அரிசி உற்பத்தியில் தமிழகம் பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்தப்படியாக உற்பத்தி செய்து பெரிய சாதனை படைத்திருக்கிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் புதிய சாதனையை

நிகழ்த்தியிருக்கிறது. கரும்பு உற்பத்தியில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம்தான் முன்னணியில் இருந்து சாதனை படைத்துள்ளது. தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு மூன்றாவது இடம் பெற்றிருக்கிறது. இது நாம் பாரட்ட வேண்டிய ஒன்றாகும்.

பிற்பகல் 6-40

புரட்சித் தலைவி அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் காப்பியடித்து மத்திய அரசு மதிய உணவுத் திட்டம், முதியோர் உதவித் தொகை, கருவுற்ற தாய்மார்கள் நலத் திட்டம் போன்றவைகளை பட்ஜெட் திட்டங்களாகத் தீட்டியிருப்பது தமிழகத்திற்குப் பெருமை.

புரட்சித் தலைவி அவர்களால் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெற்று வருகிறது. தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது. இதையெல்லாம் சகித்துக் கொள்ள இயலாதவர்கள், சூழ்ச்சிக்காரர்கள், வஞ்சகர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டுமென்ற தீய நோக்கோடு செயல்பட்டு வருகின்றார்கள். வஞ்சகர்கள் தங்கள் காழ்ப்புணர்ச்சியால் புரட்சித்தலைவி அவர்களுக்குக் கொடுக்கும் தொந்தரவுகளை மக்கள் பார்த்துக் கொண்டுள்ளார்கள். மக்கள் அவர்களுக்குச் சரியான பாடம் புகட்டுவார்கள்.

1968-ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகமானது விவசாயிகளுக்கு டிராக்டர்கள், மின் மோட்டார்கள் ஆகியவைகளைத் தவணைத் திட்டத்தில் வழங்கிய வகையில் கிட்டத்தட்ட ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சம் நிலைவையில் உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கருணை உள்ளத்தோடு விவசாயிகளின் நலன் கருதி, தாயுள்ளத்தோடு அந்த ஒரு கோடியே 23 இலட்சத்தைத் தள்ளுபடி செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் ஏறக்குறைய, 10,120 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

உணவு மற்றும் மலர் உற்பத்தி செய்து பதப்படுத்த புதிய பிரிவுகளை ஏற்படுத்த 1995-96-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியதற்கும், வேளாண் தொழில் கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் பூச்சி மருந்துகள் அத்தனையையும் அரசுத் துறையும், அரசு நிறுவனங்களும் வாங்க வேண்டுமென்று உத்தரவிட்டதற்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டதற்கிணங்க, அக்ரோ நிறுவனத்தில் மானிய விலையில் டிராக்டர்கள், பவர் டில்லர்கள் .தவணைத் திட்டத்தில் வழங்கி வருவதற்கும், அக்ரோ நிறுவனத்தின் தலைவர் என்ற முறையில் இதயபூர்வமான நன்றியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கை ஆக்குகின்றேன்.

நீலகிரி மாவட்டம், தமிழ்நாட்டில் உள்ள மற்ற எல்லா மாவட்டங்களையும் விடத் தனித்தன்மை வாய்ந்த மாவட்டம். நீலகிரி மாவட்டத்தில் சார்பு நீதிமன்றம்—Metropolitan Magistrate Court—அமைக்கப்படவில்லை. இதனால் வழக்குகள் நீண்டகாலமாகத் தேங்கிக் கிடக்கின்றன. இதைத் தனியாக கவனித்து, நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் காடுகள் இருந்தால்தான் மழை பெய்யும். மிருகங்கள் பாதுகாப்பாக வாழும். தேயிலைப் பயிர்கள் பாதுகாக்கப்படும். அதனால் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே, தனியார்களுக்கு காடுகளை வெட்டுவதற்குக் கொடுக்கப்படும் அனுமதியைக் குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. ஆர். ராஜு. ஏற்கெனவே, காடுகள் மற்றும் போக்குவரத்து பற்றிய மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதம் இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் முடிந்திருக்கிறது. எனவே, இனி வரப்போகும் டிமாண்டில் வேண்டுமென்றால் உங்களுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லுங்கள். முடிந்த டிமாண்டில் நீங்கள் பேசுவதால் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. கே. ஆர். ராஜு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேக்கு, ஈட்டி, சந்தனம் மற்றும் விலையுயர்ந்த மரங்கள் நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க வனப் பாதுகாப்பு மையம் கட்டாயமாகத் தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் சாலைகள் அமைப்பதற்கும், சமவெளிச் சாலைகள் அமைப்பதற்கும் வித்தியாசம் நிறைய உண்டு. ஆகவே, மலைப் பிரதேசமான நீலகிரி மாவட்டத்திற்கு சாலைகள் அமைப்பதற்கு அதிகத் தொகையை ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூடலூரிலிருந்து நீலகிரி 60 கி.மீ. தொலைவில் உள்ளதால், கூடலூரில் ஒரு அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

உலகத்திலேயே மிகவும் அழகான மலர்க் கண்காட்சி உதகமண்டலத்தில் ஜுன் மாதம் தொடங்க உள்ளது. அந்த மலர்க் கண்காட்சியானது 100-வது ஆண்டு மலர்க் கண்காட்சியாகும். ரோஜா மலர்க் கண்காட்சி நடக்க இருக்கும் பூங்காவை 'ஜே. ஜே. பூங்கா' என்று பெயர் சூட்ட வேண்டும் என்று, மாவட்ட மக்கள் சார்பாக விண்ணப்பித்துக்கொள்கிறேன். சிறப்புமிக்க இந்த 100-வது ஆண்டு மலர்க் கண்காட்சியை முன்னிட்டு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உதகமண்டலம் வந்து, அழகுமிக்க மலர்க் கண்காட்சியை துவக்கி, 100-வது ஆண்டு நினைவுத் தூணைத் திறந்து வைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்களுக்கு எவ்வளவோ பணிகள் இருந்தாலும் தாங்கள் தயவு செய்து, மலர் கண்காட்சிக்கு அவசியம் வந்து, நீலகிரி வாழ் மக்களின் ஆசையை நிறைவேற்றிடுமாறு மீண்டும் ஒருமுறை பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை மீதான மானியக் கோரிக்கை மீது பேச எனக்கு வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

பிற்பகல் 6-45

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, பால்வழங்கு துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பிரதான காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசி முடித்து வைக்கின்ற பொறுப்பினை எனக்கு அளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களும் சரி, ஒட்டுமொத்தமாக நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் சரி, எங்களுடைய கோரிக்கைகள் எதுவானாலும், நாங்கள் கொடுக்கின்றபோது உடனுக்குடன் முடித்துக் கொடுத்து எங்களுடைய தொகுதிகளை மிகச் சிறப்பான முறையில் வைத்துக் கொள்வதற்கான ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நானும் என்னுடைய கோரிக்கைகளை, ஒரு மணி நேரம் சொல்ல வேண்டிய கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன என்றாலும் கூட, அவற்றை எல்லாம் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் மத்தியிலே கொடுத்து நான் செய்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில், நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளாமல், இங்கே இருக்கின்ற நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களும் சரி, நம்முடைய அமைச்சர் பெருமக்கள் அனைவரும் சரி—இதைப் போன்று ஒரு அமைச்சரவையே இந்த நாட்டில் நாம் பார்த்ததில்லை என்கின்ற அளவிற்கு நம்முடைய அமைச்சர் பெருமக்களும், முதலமைச்சர் அவர்களும், நம்முடைய பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே நல்ல ஒத்துழைப்பு கொடுத்து சிறப்பான முறையில், நமக்கு ஆதரவு அளித்துக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால், நான் நிரம்ப கோரிக்கைகளைச் சொல்ல வேண்டுமென்று கருதினாலும், உங்களுடைய உணர்வுகளைப் புரிந்து நான்

விரைவிலே முடித்துக்கொண்டு—இப்போது ஆறே முக்கால் மணி ஆகிறது; நான் இன்னும் ஒரு அரை மணி நேரம் பேசி நேரத்தைக் கடத்தாமல், இங்கே உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இதன் வாயிலாக அமைச்சர் பெருமக்களுக்கு என்னுடைய வேண்டுகோளை விடுத்து, இந்த வாய்ப்பினைக் கொடுத்த உங்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறி, ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வேளாண்மைத் துறையிலே கூறி நான் அமைகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழக அரசு வந்த பிறகு, நம்முடைய விவசாயிகளுக்கு சிறப்பான முறையில் நெல் விலையை உயர்த்திக் கொடுத்து இருக்கிறார்கள் என்றாலும் கூட விவசாயிகள் மத்தியிலே—தமிழக அரசு எல்லாத் தரப்பு மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் காரியங்கள் செய்கின்றது; விவசாயிகளுக்கு போதிய காரியங்கள் செய்யவில்லை என்ற ஒரு மனக் கசப்பு அவர்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் கூட இந்த அரசு வந்தவுடன், இங்கே அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்வோம் என்று அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டு இருந்தாலும்கூட, நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நபார்டு இயக்கத்திற்கு அனுமதி பெறுவதற்கு எழுதியபோது, நபார்டு இயக்கம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அன்றைய அமைச்சரும் சொன்னார்; நம்முடைய முதலமைச்சரும் சொன்னார்; நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரும் சொல்லி இருக்கின்றார். ஆனால், நபார்டு இயக்கம் அப்படி அனுமதி கொடுக்காவிட்டாலும், வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோருகின்றபோது, அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அதையும் தள்ளுபடி செய்து கொடுத்தார்கள். ஆனால், அதை அந்த நேரத்தில் விவசாயிகள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆகவே, அதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் கலந்து பேசி மீண்டும் ஒரு முறை வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான போனஸை நீங்கள் வழங்குவீர்களேயானால், அது விவசாயிகளுக்கு மீண்டும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை மட்டும் உங்கள் மத்தியிலே கூறிக்கொண்டு,விவசாயிகளை நன்கு கவனித்து அவர்களுக்கு வேண்டிய அனைத்து காரியங்களையும், சிறப்பான முறையிலே செய்து கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் இன்னும் சிறப்பான முறையில் செய்து கொடுக்க வேண்டும்; கால்நடைத் துறையில் சிறப்பான முறையில் செய்து கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் இன்னும் சிறப்பான முறையில் செய்ய வேண்டும்; பால்வளத் துறையில் மிகச் சிறப்பான முறையில்

செய்து கொண்டிருக்கிற—நம்முடைய அமைச்சர் வந்த பிறகு நடைபெற்றாலும் கூட, தொடர்ந்து இன்னும் சிறப்பான முறையிலே நீங்கள் நிர்வாகம் செய்ய வேண்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் மூன்றுபேர் இதிலே பதிலுரை அளிக்க இருப்பதால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே கூடுமானவரை சுருக்கமாக முடித்துக் கொண்டால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். முதலிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை மற்றும் பால்வளத் துறை ஆகியவற்றிலே பதினாறு மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வரியிலே பதிலைச் சொல்லிவிட்டு என்னுடைய இறுதி உரைக்கு நான் வர ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தர்மலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, கசிவுநீர்க் குட்டை நிறுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது. தொடர்ந்து அந்த மாவட்டத்திலே பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், தடுப்பு அணைகள் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை வைத்தார்கள். அதையும் கனிவோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் பேசுகின்றபோது 10 லிட்டர் முதல் 12 லிட்டர் கொள்ளளவுள்ள தெளிப்பான்கள் வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யும். எல்லா மானியத் திட்டங்களும் ஆதிதிராவிட மக்களுக்கு 50 சதவீதத்தில்தான் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்துப் பேசுகின்ற போது, வேளாண் அலுவலர்கள் தங்களுடைய பெயர்களை பயிர் மருத்துவர் என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பற்றி எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களிலே இதுபோல பெயர்கள் வைக்கப்பட்டு இருப்பதாக கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆராயச் செய்யும். இது போன்ற கோரிக்கை வந்திருக்கிறது. அரசு ஆய்ந்து விரைவிலே அதற்குரிய நல்ல முடிவை எடுக்க இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கோ ஓர் ஊரோரம் நீர்பாய்ச்சி நெல் விளைத்து அன்றும் சிந்தனைச் செல்வி புகழ் வார்த்துச் சுறுசுறுப்பாய்ச் சுற்றி இருந்த தம்பிக்கு முகவரி இங்கு தந்து "இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுக" எனத் தன் பணிசெய் படைச் சேவகனாக்கிய, தமிழ்த்தரணியாளும் தலைவியே! அருட்சுடரே! அருந்தமிழே! விருந்தமிழ்தே! அன்னையே! உன்னையே தினந்தொழுவேன்! உனையன்றிப் பிறர் போற்றேன்! உன்திசையில் என்றும் தொடர்வேன்! முன்னிருந்து வாழ்த்து தாயே!

உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்குரிய எங்கள் வேதமே! பைந்தமிழர் உள்ளமெல்லாம் அவர்தம் இல்லமெல்லாம் பரவிப் பலன் பொழியும் பேரருளே! நிழலும் ஒளிவீசும் என் நிதர்சனத் தேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) சோதனை அலைகளையே சோர்வடைய வைத்துவிடும் மேரு மலை உறுதியே! நின் பொன்னடி போற்றுகிறேன்.

தமிழ்கூறும் நல்லுலகில் நீதி உனைச் சேர நித்தமும் நீயாள ஏர்பூட்டிப் படை நடத்தி எல்லோர்க்கும் உணவளிக்கும் உழவர் வாழ்வு மலர விரிவடைய, வளமாக யுகத் தலைவி உன் ஆட்சியில் யுவ ஆண்டிற்கான வேளாண் துறை மானியக் கோரிக்கையினை, வீராங்கனையே, நீ வீற்றிருக்கும் பேரவையில் முன் வைப்பது (மேசையைத் தட்டும் ஒலி) யான் பெற்ற பேறல்லவா?

இப்பேற்றினை வாரி வழங்கிய மாரியன்னை நீயல்லவா!
இப்பேற்றினை வழங்கிய மரியன்னையும் நீயல்லவா!
இதை மறுப்போர் இவ்வுலகில் யாரும் உண்டோ?

வான்மழைக் கொடையே! நின் பாதச் சுவடே எனக்கு வேதச்சுவடு, இதைப் பலகோடி முறை பறைசாற்றுவேன் அம்மா, வணங்குகிறேன்.

வேளாண்மையில் நிலவி வந்த மேலாண்மை வறட்சியால் தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்கு முன்பு, விவசாயிகளுக்கு, 'கைக்கும் வாய்க்கும்' என்ற நிலையே இருந்தது. நான்கு ஆண்டுகளில், வேளாண்மையில் வியத்தகு சாதனைகளைப் படைத்திருக்கிறோம். புரட்சிகரமான புதிய உத்திகளைப் பூக்கச் செய்து முன்னேற்றப் பாதையில் தமிழக வேளாண்மையை முனைப்போடு கொண்டு செலுத்தி வருகிறோம்.

வேளாண் பெருங்குடி மக்களை, 'உன்னால் முடியும் நம்பு' என்று உற்சாகம் ஊட்டி, அவர் தம் வாழ்வில் வளம்பல பெறவும், நலம்பல விளையவும், நல்ல பல திட்டங்களைத் தீட்டி, இந்தத் தரணிக்கே ஒரு முன்னோடியாகச் சாதனையில் உச்சி முகட்டில் நிற்கிறோம்.

1990-91 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்த உணவு உற்பத்தி 74.94 லட்சம் டன்கள். ஆனால் இன்றைக்கு, அது 105 லட்சம் டன் என்று எட்டியுள்ளது. புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சிக்குப் பூமித் தாய் மகிழ்ந்தளித்த பரிசு இது. (மேசையைத் தட்டும் ஒலி)

உணவு உற்பத்தியை முழுமையாகப் பெருக்கி, நான்கு ஆண்டுகளில் முன்பு இருந்ததைவிட 50 சதவிகிதம் உயர்த்திக் காட்டி இருக்கின்றோம். இந்த உயர்வு, இந்தியத் துணைக் கண்டத்தின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட அதிகமானது. (மேசையைத் தட்டும் ஒலி) 1990-91-ல் இந்தியாவில் உணவு உற்பத்தி 176.39 மில்லியன் டன்கள். ஆனால் அது 1994-95 இல் 185 மில்லியன் டன்கள் என்ற அளவை அடைந்துள்ளது. அப்போதுங்கூட இந்திய அளவில், வளர்ச்சி விகிதம் 5.5 சதவிகிதம் தான். ஆனால், இதனை மிஞ்சி, தமிழகத்தில் வளர்ச்சி விகிதம் ஆண்டொன்றுக்கு 12.5 சதவிகிதம் என்று பெருகி நிற்பது மகிழ்வன்றோ?

இந்தியாவிலுள்ள வேறெந்த மாநிலமும் எட்டமுடியாத ஏற்றமிகு சாதனைகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசின் சரித்திரச் சாதனைகளில், சத்தான சாதனை இது. இனியதோர் சாதனையை நிகழ்த்தியுள்ள நம் முதல்வர் அவர்களைப் பொழுதும் புவி போற்றும்.

தமிழகத்தின் உழவர் பெருங்குடி மக்கள், தமக்கு ஈடும் இணையும் எவருமில்லை என உணர்த்தும் வகையில் 1990-91-இல் 57.82 லட்சம் டன்கள் ஆக இருந்த மொத்த அரிசி உற்பத்தி 1994-95-இல் 85 லட்சம் டன்களாகப் பெருகியுள்ளது.

பிற்பகல் 6-55

இந்த நான்கு ஆண்டுகளில், இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும், அரிசி உற்பத்தி 50 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இந்த உன்னத நிலையைப் புரட்சித்தலைவி அவர்களது ஆட்சியின் மூலம் பெற்றுத் தந்திருக்கிறோம். உற்பத்தி பெருகியதால் அரிசி விலை உயர்ந்துவிடாமல் உறுதி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உரிய, நெறிய விலையும் கிடைக்க வாய்ப்பை அமைத்துள்ளது.

அன்னை அரியணை ஏறுவதற்குமுன், சோளம், ராகி, கம்பு போன்ற சிறு தானியங்கள் உற்பத்தி 13.53 லட்சம் டன்களாக இருந்தது. நாடாளும் தலைவியின் நான்காவது ஆண்டில் 15 லட்சம் டன் அளவினை எட்டி சிறுதானியங்களின் உற்பத்தியையும் 12 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறது என்பது பெருமை தரக்கூடிய செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) புவிபோற்றும் புரட்சித் தலைவி அவர்களது அரசு செயலாக்கப் படுத்தியுள்ள தனிச் சிறப்புத் திட்டங்கள் காரணமாகப் பயறுவகைகள் உற்பத்தியிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். புரட்சித் தலைவி ஆட்சித் தொடக்கத்தில் 3.59 லட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தி, நான்காண்டு ஆட்சியின் மாட்சியால்,

5 லட்சம் டன்களாக உயர்ந்திருக்கிறது. இந்த அரசு, பயறு வகை உற்பத்தியை உயர்த்துவதற்கென்றே தனிக் கொள்கையை உருவாக்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கன்னித்தமிழ் நாடாளும் காவியத் தலைவி அவர்களது கரும்பினிய நடவடிக்கைகளால் ஒரு டன் கரும்பிற்கு 1990-ல் 8.5 சதவீதம் சர்க்கரை சத்துக்கு 250/- ரூபாய் அரசு வழங்கிய பரிந்துரை விலை அது.

1994-95-ல், இரு மடங்குக்கும் மேலாகி, ஒரு டன் கரும்பிற்கு அரசு வழங்கும் பரிந்துரை விலை 8.5 சதம் சர்க்கரை சத்துக்கு 525/- ரூபாய் ஆனதனால்தான் 2.3 லட்சம் எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு வந்த கரும்பு 3 லட்சம் எக்டேர் பரப்பிற்கு பரந்துள்ளது.

ஜெ.ஜெ.92 என்ற புதிய வகை வாசனை அரிசியை அறிமுகம் செய்திருக்கிறோம். எம்.ஜி.ஆர். உயர் விளைச்சல் ரக நெல்லையும் உழவர்க்கு அறிமுகம் செய்திருக்கிறோம். தமிழ்நாட்டில் எண்ணெய்ப் பனை மரங்கள் வளர்த்திடும் நிலையை வளர்த்திருக்கிறோம். நம் மாநிலத்தில் சூரியகாந்தி, சோயா பீன்ஸ் ஆகியவற்றைப் பயிரிடும் பரப்பளவை தெரிவு செய்து, விரிவுபடுத்தியிருக்கிறோம்.

உயர்விளைச்சல் சிறு தானியங்களையும், புதிய துவரை வகைகளையும் தந்திருக்கின்றோம். விஞ்ஞான வளர்ச்சியின் விந்தை அங்கமான டிஷ்யூ கல்ச்சர் என்ற உற்பத்தியின உத்தியினைப் பயன்படுத்தி, கரும்பு வளர்ச்சியைப் பெருக்குவதற்கு உரிய வழிமுறைகளைக் கண்டிருக்கிறோம். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைக்கு நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ச்சியாக உயர்த்தி, ஊக்கமும், ஆக்கமும், உவந்து அளிப்பதன் காரணமாகத்தான், மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், நிதி போதாது என்று. அதற்காக இந்தப் புள்ளிவிவரத்தை இங்கு தர நான் விழைகிறேன்.

என்றும், எங்கும், எவரும் இதுவரை ஏற்படுத்த முடியாத சாதனைகளை வேளாண்மையில் இன்று நாம் படைத்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 1990-91-ல் வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 438.42 கோடி ரூபாய் ஆகும். அது 1995-96-ல் 764.87 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு 74.51 சதவிகிதம் கூடுதல் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒதுக்கப்பட்ட நிதியினை, மொத்த ஒதுக்கீட்டோடு ஒப்பிட்டு நோக்கையில் வேளாண்மைக்குத் தமிழ்நாட்டில் 9.64 சதவிகிதம் ஒதுக்கீடு உள்ளது. இந்த அளவு நிதி ஒதுக்கீடு மற்ற பல மாநிலங்களைக் காட்டிலும் உயர்வானது ஆகும். எடுத்துக்காட்டாக ஆந்திராவில் 5.4 சதவிகிதம், பீகாரில் 6.34 சதவிகிதம்.,

குஜராத்தில் 4.89 சதவிகிதம், ஹரியானாவில் 8.59 சதவிகிதம், பஞ்சாபில் 4.81 சதவிகிதம், கேரளாவில் 8.05 சதவிகிதம், கர்நாடகாவில் 9.12 சதவிகிதம் என்ற அளவில்தான் வேளாண்மைக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்கிறது. மற்ற மாநில அரசுகளைக் காட்டிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு வேளாண்மைப் பெருங்குடி மக்களின்மீது கொண்டுள்ள அக்கறையையும், ஆர்வத்தையும் வேளாண்மைக்கான உயர் ஒதுக்கீடு புலப்படுத்துவதோடு, இவ்வரசின் மாட்சியையும் வெளிப்படுத்துவதாகும்.

அரிசி உற்பத்தித் திறனைத் தொடர்ச்சியாக உயர்த்தி, 1993-94-ல் தமிழ்நாடு இந்தியாவிலேயே 2-வது இடத்திற்கு வந்தது. இந்த ஆண்டு, நல்ல மிகு விளைச்சல் காரணமாக, அரிசி உற்பத்தித் திறனில் பஞ்சாபையும் மிஞ்சி முதல் இடத்தை எட்டிப் பிடித்திடும் ஏற்றமிகு நிலையில் இன்று நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

உற்பத்தித் திறனில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம். எண்ணெய் வித்துக்கு தமிழநாடு தான் முதலிடம். (மேசையைத் தட்டும் ஒலி) சோளத்திற்கு முதலிடம். கம்புக்கு முதலிடம். தென்னைக்கு முதலிடம். உயிர்உர உற்பத்தியில் முதலிடம். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் முதலிடம். வேளாண்மை உயிரியல் தொழில் நுட்பத்தில் முதலிடம். இது தவிர, ஆரஞ்சுக்கு முதலிடம், அன்னாசிக்கு முதலிடம், முட்டைக்கோசுக்கு முதலிடம், (மேசையைத் தட்டும் ஒலி) தக்காளிக்கு முதலிடம். ஏலக்காய்க்கும் முதலிடம். கரும்பு பயிரிடும் பரப்பளவில் தமிழ்நாடு இந்தியாவில் நான்காவது இடத்தில் இருந்தாலும், உற்பத்தித் திறனில் இந்தியத் திருநாட்டில் மட்டுமல்ல, உலகிலேயே முதல் இடம் தமிழ்நாட்டிற்குத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இனிப்புமிகு மகிழ்ச்சியோடு இதனை இந்த மேன்மைமிகு அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-00

தமிழகத்தில்தான் இந்தியாவிலேயே அதிக அளவில் வாழை பயிரிடப்படுகிறது. அதனால்தான் மத்திய அரசின் தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தைத் தமிழ்நாட்டில் நிறுவிட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முயற்சி வெற்றியில் நிறைந்து நிற்கிறது. விடுதலைக்குப் பிறகு தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள முதல் ஆராய்ச்சி மையம் இதுவேதான்.

விரிவாக்கத்திற்கும், மானாவாரிச் சாகுபடிக்கும், உயிர் உர உற்பத்திக்கும், தமிழ்நாடு தேசிய உற்பத்தித் திறன் பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றிருக்கிறது என்பது வேளாண்மை வளர்ச்சியை விரும்புவோர் அனைவரின் நினைவிலிருந்து என்றைக்கும் நீங்காத, நிறைவு தரும் சாதனையாகும். இந்தச்

சாதனைகளின் மூலாதாரம் எங்கள் இனிய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கைகளுக்குக் கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தப் பேரவையில் பதில் அளித்துப் பேசும்போது, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவாற்றல் மிளிரும் அறிவுரைகளைப் பெற்று, பல்வேறு திட்டங்களைப் பற்றிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளேன் என்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 4 ஆண்டுகளாக நீங்கள் பதில் அளித்தீர்கள் என்பதைவிட கவி பாடினீர்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவிற் தங்கியிருக்கும். அறிவிப்புகள் தக்கபடி நிறைவேற்றப்பட்டும் செயலாக்கத்தின் பல்வேறு கட்டங்களிலும் உள்ளன. வேளாண்மை வளர்ச்சி புதிய பாதையில் நடைபோட அடிப்படைச் சக்தியைத் தருவதாய் நமது செயல்பாடுகள் அமைந்துள்ளன. வேளாண்மை 'மரபு சார்ந்த ஒரு வாழ்க்கை முறை' என்பது மாறி, இன்றைக்கு அதுவே ஒரு 'வளமிகு தொழில்' என்கிற ஆக்கபூர்வமான நிலையை அடைந்திருக்கிறது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றான் தீப்பந்தப் பாட்டுக்காரன், தேமதுரப் பாரதி. உழவையும் தொழிலையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்த நிலை அன்றைக்கு. ஆனால் இன்றோ, உழவே தொழிலாகும் உன்னதத்தை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். தலைப்பாகைக் கவிஞன் இன்றிருந்தால், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் வேளாண்மைப் புரட்சிக்கு ஒரு பூபாளமே இன்றைக்குப் பாடியிருப்பான்.

குறிப்பிட்ட சில அறிவிப்புகளின் செயல்முறை வண்ணத்தை இந்த மாமன்றத்தில் கருத்துக்கு விருந்தாக்குவது என் கடமை. பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெறுவோர்க்கான முதல் பரிசு ஒரு இலட்சம் ரூபாய், இரண்டாம் பரிசு ஐம்பதாயிரம் ரூபாய் என்று வழங்கியுள்ளோம். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இது போன்ற திட்டம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கும் திட்டத்தின்படி இதுவரை நான்கு விஞ்ஞானிகளுக்குப் பரிசுகள் வழங்கி இருக்கிறோம். எம்.ஜி.ஆர். உயர் விளைச்சல் ரக நெல்லை மாநிலத்திலேயே அதிகமாக உற்பத்தி செய்வோருக்கு ரூ.10,000/- மதிப்புள்ள தங்கப் பதக்கம்

"டாக்டர் புரட்சித் தலைவி விருது" என வழங்க ஆணைகள் வெளியிட்டுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

விஞ்ஞான தொழில் நுட்பங்களை வழங்கும் விரிவாக்க அலுவலர்களுக்கு "டாக்டர் புரட்சித் தலைவி விருது" உருவாக்கியுள்ளோம். எண்ணெய்ப் பனையை அறிமுகம் செய்ததோடு, எண்ணெய்ப் பனையிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுப்பதற்கான ஆலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. 309 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 410 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பயிர் விளைச்சல் போட்டிகளில் வெற்றி பெறும் வேளாண் பெருங்குடி மக்களின் குழந்தைகள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்கென ஒரு தனி இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தரிசு நில மேம்பாட்டிற்கான தனித் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது. பள்ளி மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னங் கன்றுகளும், மலைப் பகுதி மாணவர்களுக்கு வாசனைத் திரவியக் கன்றுகளும் வழங்கும் "டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ச்சித் திட்டம்" அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்குப் பல்வேறு திட்டங்களை இந்த மாமன்றத்தில் நான் அறிவித்துள்ளேன். அதன்படி, வேளாண் விளைபொருள் அங்காடிகளை வலிமைப்படுத்துவதற்கும், செம்மையாக்கிச் சீர்படுத்துவதற்கும் பயனுள்ள பல்வகைத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு செயல்படுத்தி உள்ளது. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒன்றும், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு ஒன்றும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு ஒன்றும் என மூன்று புதிய வேளாண்மை விற்பனைக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 7-05

வேளாண் வளர்ச்சியை விஞ்ஞான ரீதியில் விரைவுபடுத்த கடந்த நான்காண்டுகளில் தமிழகத்தில் புதிய சில அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. போதாவூரில் மைய அரசின் தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம், சிதம்பரனார் மாவட்டத்தில் தேசியப் பனை ஆராய்ச்சி மையம், ஆடுதுறையில் தேசிய எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி மையம், பெரம்பலூரில் மானாவாரிப் பயிர்களுக்கான வேளாண் ஆராய்ச்சி மையம், திருச்சி மாவட்டத்தில் மைய அரசின் வேளாண் பொறியியல் பயிற்சி மற்றும் பரிசோதனை நிறுவனம், சேலம், மதுரை, காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன், தர்மபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் "கிரிஷி விஞ்ஞான் கேந்திரா" எனப்படும் வேளாண் விஞ்ஞான மையங்கள் ஆகியன.

குடுமியான்மலையில் உள்ள வேளாண் பயிற்சி மையம் 75 லட்சம் ரூபாய் செலவில், மாநில வேளாண் மேலாண்மை நிறுவனமாக உயர்த்தப்பட்டுள்ளது. உயிரியல் தொழில் நுட்பங்களை ஊக்குவிக்கும் புரட்சித் தலைவி அரசு, தனியார் துறையிலும் டிஷ்யூ கல்ச்சர் பிரிவுகளை ஏற்படுத்த முனைவோர்க்கு ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை மானியம் நல்கி வருகிறது. அரசு சார்பில் உதகமண்டலத்திலும், பெரியகுளத்திலும் டிஷ்யூ கல்ச்சர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 80 லட்சம் ரூபாய் செலவில் உயிர் உர உற்பத்தி மையங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ரூ.99.25 லட்சம் செலவில் திருச்சியிலும், சாக்கோட்டையிலும் புதிய உர உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் உயிர் உரங்கள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் கழிவுகளும் உயிர் உரமாகும் யுத்திகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஆலயத் தலவிருட்ச மேம்பாட்டிற்கு டிஷ்யூ கல்ச்சர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மனித நலம் முக்கியம். மண்ணை நம்பி வாழும் உழவர்க்கோ மண் நலம் முக்கியம். மண்ணின் தன்மைகளைப் பகுத்தாய்ந்து அதனை வளப்படுத்தும் வழிமுறைகளைக் குறிப்பிடும் 'மண் நல அடங்கல்' கணிப்பொறி மூலம் தயாரிக்கப்பட்டு, முன்னோடியாக மூன்று ஒன்றியங்களில் 38,000 நில உடமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. நாடு முழுவதுக்குமே முன்னோடியான இத் திட்டத்திற்குப் பெருத்த வரவேற்பு. நாடே பின்பற்ற விழையும் இந்த மண் நல அடங்கல் வழங்கும் இத்திட்டத்தை நாம் முதலில் இம்மாநிலம் முழுவதும் உள்ள 73 லட்சம் நில உடமையாளர்களுக்கும் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான இசைவு இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. மண் நல அடங்கல் பெற்று இம்மாநில வேளாண் பெருமக்கள் பயன்பெருக இது நல்ல வாய்ப்பு.

'நீரின்றி அமையாது உலகு'. வேளாண்மைக்கு நீர் இன்றேல் வேறில்லை. ஆகவே, கடந்த நான்கு ஆண்டுகளில், 23,467 குழாய்க் கிணறுகளும் 13,614 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 98,147 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி கிட்டியுள்ளது. 1,69,467 ஏக்கர் நிலங்களில், பாசனம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நமது மாநில நீர் வளப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு தொலைநோக்குப் பார்வையோடு, சிக்கனப் பாசன முறையான சொட்டு நீர்ப்பாசனத்தை அறிமுகப்படுத்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த நான்காண்டுகளில் ரூ.10.77 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, 2,22,882 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 19] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

கரும்பு, தென்னை, எண்ணெய்ப்பனை, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவற்றிற்கான நுண்ணியப் பாசன முறைகள் மிகப் பரவலாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்திய அளவில் ஏழாவது நிலையிலிருந்த தமிழகம், சொட்டு நீர்ப் பாசன அறிமுகத்தில், இன்று மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியான இரண்டாம் இடத்திற்கு உயர்ந்துள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், பருத்தி ஆகியவற்றிற்குத் தேவையான தெளிப்பு நீர்ப்பாசன முறை கையாளப்பட, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் சமுதாயக் கிணறுகளை அமைப்பதன்மூலம் வேளாண்மைப் பெருக்கத்திற்குத் துணை புரிந்துள்ளோம். சுழற்சிப் பாசனமுறைத் திட்டத்தில், கம்பம் பள்ளத்தாக்கு, கோதையாறு, சித்தார் பட்டணங்கால் ஆகிய பகுதிகளில் முழுமையான பாசனம் கிடைத்திடவும், பாசன நீர் திறம்பட, சிக்கனமாகவும் சீர்பட நிர்வகிக்கப்படும் வகையிலும் திட்டப்பணிகள் 46.74 கோடி ரூபாய் செலவில் துவக்கப்பட்டுள்ளன. 1.96 கோடி ரூபாய் செலவில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு டீசல் என்ஜின்களும், மிகு திறன் நீர்ப்பாசனச் சாதனங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் நனவாகும் இன்றைய இன்பக்கனவு, "மகராசி வேளாண்மை 2000". நேற்று என்பது நினைவு, நாளை என்பது கனவு, நினைவும் கனவும் நீங்கிய மனிதன் நிலைப்பதில்லை. அதைப்போலவே பழைய நினைவை மறந்த சமுதாயம், எதிர்காலம் கனவு காணாத சமுதாயம் முன்னேற வாய்ப்பில்லை.

பிற்பகல் 7-10

சிங்கம், தான் நடந்து வந்த பாதையை ஓரிடத்தில் நின்று, செருக்குடன் திரும்பிப் பார்த்து, தொடர்ந்து முன்னேறுமாம். அதையே 'அரிமா நோக்கு' என்பர். எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, எட்டுத் திசையிலும் புகழை ஈட்டி, சங்கநாதம் முழக்கிச் சிலிர்த்துச் செம்மாந்து அரிமா நடைபோடும் ஆற்றல்மிகு தலைவியின் இவ்வரசு (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண்மை உற்பத்தியில் படிப்படியாக வளர்ந்தும் உயர்ந்தும் வருகிறது.

இதுவரை இம்மாநிலத்தில் படைத்திருக்கிற சாதனையைத் தக்கவைத்துக் கொள்ள, வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, வேகமாகத் தாவி முன்னேறி வருகிற வேளாண் அறிவியல் நுட்பங்களைக் கருத்தில் கொண்டு, கி.பி.2000-இல் வேளாண்மைத் தொழில் எப்படி இருந்திட வேண்டும் என்பதற்குரிய முன்னோட்டப் பணிகளை வரையறுப்பதற்கான முயற்சிகளை முழுமையாக மேற்கொண்டுள்ளது. பெருகி வரும் மக்களுக்கு உணவளிப்பதில் தன்னிறைவும் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் தலையாய கடமையும் வேளாண்மைக்கே. வேளாண்மையில் வளர்ச்சி காண்பது அரிதான

பணி என்பதை அறிவோம். தமிழ்நாட்டில் சாகுபடிக்கான நிலப்பரப்பு சுமார் 76 லட்சம் எக்டேர். இதில் 40 லட்சம் எக்டேருக்கு மட்டுமே பாசன வசதி. நம்மிடம் இருக்கிற நீர்வளத்தை முறையாகவும் முற்றிலுமாகவும் பயன்படுத்தி வருகிறோம்.

பயிர் நிலத்தை சாகுபடி அல்லாத மற்ற காரியங்களுக்கு ஒதுக்குவது அதிகரித்து வருவதாலும், பல்வேறு இயற்கைச் சூழல்களாலும், கடந்த 20 ஆண்டுகளில் பயிர் நிலத்தின் பரப்பு 3.5 லட்சம் ஹெக்டேர் குறைந்துவிட்டது. மக்கள் தொகை ஒரு பக்கம் வேகமாகப் பெருகிவருவதாலும், நிலத் தேவை அதிகமாகிவிட்டது. இவ்வாறான பாதகச் சூழ்நிலைகளை எல்லாம் வெற்றி கொள்வதற்காகப் புரட்சித் தலைவியின் இந்த அரசு, பயிர்ச் சாகுபடிக்குத் தகுதியான நிலங்களைப் பாதுகாப்பதற்கான ஆணை பிறப்பித்துள்ளது. நீரைப் பயன்படுத்துதல், நீராதாரம் எனும் பொதுச் சொத்தினைப் பாதுகாக்கும் 'நீர்க்காப்பு' முறைகள் முதலியன இன்றைய தேவை. மானாவாரித் தரிசு நிலங்களில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களைக் கொண்டுவருவதும் மிக அவசியமாகும்.

எதிர்காலத்திற்கான வேளாண்மைத் திட்டங்களை உருவாக்கும் போது, மாநிலத்தில் நிலவும் வேளாண்மைக்கான சூழல், இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், சர்வதேச அளவில் மாறிவரும் நிலைகளின் தன்மைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொள்ளவேண்டிய அவசியமும் உள்ளது. இந்திய அரசின் தாராளமயமாக்கும் கொள்கை ஒரு புறம், அதேநேரத்தில் வெளிநாட்டிலிருந்து வேளாண் இறக்குமதிகள் மறுபுறம், இந்திய விளைபொருள்களுக்கு ஆதரவு விலை வேண்டும் என்கிற கூக்குரல் ஒருபுறம், இவை யாவையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை நமக்கு.

உலக அளவில், 'காட்' ஒப்பந்தத்தின் காரணமாக, சமூக, பொருளாதார நிலைகளில் மாற்றங்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றன. ஏற்பட்டுள்ள, ஏற்படவுள்ள புதிய காரணிகள் யாவற்றையும் கருத்திலும், கவனத்திலும் கொண்டுதான், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் நுட்பமான அறிவுரைகளின் அடிப்படையில், நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கேற்ற வகையில் தமிழ்நாடு வேளாண்மைக் கொள்கை ஒன்றை உருவாக்கிச் செயலாக்குவோம் என்று கடந்த ஆண்டு இந்த மாமன்றத்தில் தெரிவித்தேன். அதற்கான ஆதார முயற்சிகளாக, டாக்டர் எம்.எஸ். சாமிநாதன் அவர்களுடைய தலைமையில், வேளாண் விஞ்ஞானிகளை உள்ளடக்கிய உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாநகரில் நடைபெற்ற உழவர் திருவிழாவில், உழவர் பெருங்குடி மக்களின் எண்ணங்களும், கருத்துக்களும் நேரடியாகப் பெறப்பட்டுள்ளன. பல்கிப் பெருகி வரும் மக்கள்தொகை, மாற்றங்களைக் குவித்துவரும் அறிவியல்

வளர்ச்சி, இவை இரண்டிற்கும் ஈடு கொடுக்கும் வண்ணம், இன்றைய வேளாண்மைத் தொழில் புதுப்பிக்கப்படவேண்டும். புரட்சிமயப்படுத்தப்பட வேண்டும் எனும் தொலைநோக்குச் சிந்தனையில் கருவாகி உருவாகி காலத்தே கனிந்ததுதான் 'மகராசி வேளாண்மை 2000' (மேசையைத் தட்டும் ஒலி) பார்வை, பாதை, பரிமாணம் என்னும் கொள்கைக் குறிப்பாகும்.

'மகராசி' என்பது வேளாண்மை வளர்ச்சியின் மகத்தான குறியீடு ஆகும். 'மகராசி' என்பது மகசூல் அளவைக் குறிக்கிற, தொன்றுதொட்டு நம் தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களிலே புழக்கத்திலே இருக்கிறதொரு மங்களகரமான சொற்றொடரும் ஆகும். நேற்றைய நினைவையும், நாளைய கனவையும், இன்றைக்கே சுமந்து, புதியதோர் தமிழ் உலகு செய்யப் புறப்பட்டுள்ள மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தனிப்பெரும் கொள்கைக் குறிப்பின் தாய்! ஆகவே, இந்தத் தொலைநோக்கு வேளாண்மைக் கொள்கைக்கு 'மகராசி' எனும் மங்கலப் பெயரைச் சூட்டியுள்ளோம்.

'மகராசி' வேளாண்மை 2000 பார்வை, பாதை, பரிமாணம்' என்பது வளர்ந்து வரும் தேவைகளை நிறைவுசெய்ய வழிகாணும் யுக்திகளை உள்ளீடாகப் பெற்றுள்ள உயரிய கொள்கை இது.

பிற்பகல் 7-15

முதல் பசுமைப் புரட்சியின் பார்வை, இரண்டாவது வேளாண்மைப் புரட்சிக்குப் பாதை, 21-ஆம் நூற்றாண்டில் வேளாண்மைப் பரிமாணம், 'அன்னையெனும் தத்துவத்தை அம்புலிக்குக் காட்ட வந்த நிலவு மின்னலாக' விளங்குகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நோக்கங்கள் ஈடேற, ஒன்பது கட்டளைகளையும் நமக்குத் தந்துள்ளார்கள்.

நீடித்த நிலையான வேளாண்மை; சீர்மிகு நீர் மேலாண்மை; பயிர்த் தொழிலுடன் பலன் தரும் பக்கத் தொழில்கள்; உற்பத்திச் செலவுக்கு உரிய, நெறிய விலை; வெற்றிதரும் வளர்ச்சிக்குச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு; ஆக்கம் தரும் வேளாண்மையில் அறிவியல் பொறிகளின் பணி; வேளாண்மை விளைபொருட்களுக்கு வெளிநாடுகளில் அங்காடி; காய்கறி விளைச்சலில் கணிசமான பெருக்கம்; விதை உரிமைகளும் வேண்டிய பல்லுயிர்ப் பெருக்கமும், இருபத்தோராம் நூற்றாண்டு வேளாண்மைக்கான குறிப்பும், விளக்கமும் 'மகராசி வேளாண்மை - 2000' என்ற தமிழ்நாடு வேளாண் கொள்கையில் அடங்கியிருக்கிறது என்பதறிந்து விந்தியத்திற்கப்பாலும் விழிகள் விரிந்துள்ளன.

இருபத்தோராம் நூற்றாண்டிற்கான வேளாண்மையைக் கருத்தில் கொண்டுதான், இந்த ஆண்டு வேளாண்மைக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. தேவை, அங்காடி நிலைகள் ஆகியவற்றைக் கருத்தில் இருத்தி கவனத்தோடு இது

ஒரு இடைக்கால ஏவுதளமாக அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் பெருங்குடி மக்களின் நல்வாழ்விற்காக வரையப்பட்டுள்ள இந்தக் கொள்கைக்கு வேளாண் பொருள்களுக்கு மதிப்பு கூட்டுதல், அதிகபட்ச விலையை உருவாக்குதல் ஆகியவை அடிப்படையாகும்.

நமது மாநிலத்தில், இரண்டு வேறுபட்ட வேளாண் சூழல்கள் நிலவி வருகின்றன. ஒன்று, நெல் விளையும் நீராதாரம் உறுதி செய்யப்பட்ட வேளாண்மைச் சூழல். மற்றொன்று, மானாவாரி தரிசு நில சாகுபடிச் சூழல் ஆகும். முதல்வகைப் பகுதிகளில் இந்த அரசின் நோக்கம், நீர் மேலாண்மையை மேம்படுத்துவது, சாகுபடி முறைகளில் நுண்ணிய தொழில்நுட்பத்தைப் புகுத்துவது, உயர் விளைச்சலை ஏற்படுத்துவது ஆகும். இந்தப் பகுதிகளில், உயர் விளைச்சல் விதைகளும், அதி நவீன விஞ்ஞான யுத்திகளும் முக்கிய பங்கேற்கும்.

புஞ்சைத் தரிசு நிலங்களில் சாகுபடி முறைகளை மாற்றியமைத்து, நீர்ப்பிடி முகடுகளை நிறுவி, நிலத்தடி நீராதாரங்களைப் பெருக்கி, ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டிற்கான யுக்திகளைக் கையாள முனைகிறோம். மகராசிப் பயன்கள் இந்தத் தரிசு நிலங்களிலிருந்துதான் தொடங்கும்.

வேளாண்மை ஆராய்ச்சி, அதன் பயனாய் உற்பத்திப் பெருக்கம், விளைந்த பொருட்களைப் பதனிடுதல், விற்பனை, விளைபொருட்களுக்கு வெளிநாடுகளில் அங்காடி, ஆகியவற்றிற்கான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, தேவையான முதலீடுகளுக்கு உதவி ஆகிய அனைத்தையும் புரட்சித் தலைவியின் இந்த அரசு நிச்சயமாக உருவாக்கும்.

உற்பத்திப் பெருக்கம், உற்பத்தித் திறன், விவசாயிகளுக்கு உண்மையான வருவாய் இவைகளை விரைவுபடுத்துவதற்கான வழிமுறைகளில் இந்த அரசு கவனம் செலுத்தும். நமது மாநிலத்தின் வேளாண்மை பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்தே உள்ளது. எனவே, வேளாண் பெருங்குடி மக்களுக்கான ஈட்டுறுதி, காப்பீடு ஆகியவை அவசியமாகிறது. சுருங்கக்கூறின், புரட்சித் தலைவி அரசின் வேளாண்மைக் கொள்கை, 'பிழைப்புக்குதவும் வேளாண்மை' என்பதைப் பழங்கதையாக்கி, 'வணிக வேளாண்மை' என்ற புதுமை நிலைக்கு உயர்த்திவிடும்.

1995-96 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பொருளாதாரத்தின் முக்கியமான கட்டமாகும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களை வாய்ப்புக்களாகப் பயன்படுத்திக் கொண்டு தடைக்கற்கள் என்றாலும் அவைகளைப் படிக்கற்களாக்குவோம் என்ற தாரக மந்திரத்தைத் தாங்கி, பண்ணை, பண்ணை விவசாயிகளின் மேம்பாட்டுக்காக, எதையும் திட்டமிட்டுச் செய்ய இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஏப்ரலில், இப்பேரவையில் வேளாண்மை மானியக் கோரிக்கையில் பதிலளித்துப் பேசும்போது, டங்கல் திட்டத்தின்படி, 'காட்' ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்திட்டுத் தன்னைப் பிணைத்துக் கொள்வதன் மூலம் இந்திய வர்த்தக எல்லைகள் விரிவாகத் திறக்கப்பட்டு, பிற நாடுகளிலிருந்து விதை, தொழில் நுட்பம் முதலியன நம் நாட்டிற்கு இறக்குமதியாகும் சூழல் தோன்றிவிடும் என்று குறிப்பிட்டுள்ளேன். வெளிநாடுகளிலிருந்து வேளாண் விளை பொருட்கள் இறக்குமதி அதிகமாகும் நிலையில் நமது வேளாண் உற்பத்தியிலும், உற்பத்தி செய்யும் ஆர்வத்திலும் சோர்வுகள் தோன்றக்கூடிய ஆபத்தினையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

'காட்' ஒப்பந்தத்தின் காரணமாக மெல்ல மெல்ல அத்தகைய அபாய மேகங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. வால்பாறை, மேகமலைப் பகுதிகளில் இருந்து தேயிலை ஏற்றுமதி செய்து வந்தோருக்குச் சிக்கல்கள் பிறந்துள்ளன. ஏற்றுமதி வாய்ப்பு குறைவதால், உள்நாட்டில் அவை விற்பனைக்கு வந்தன. இதன் விளைவு நீலகிரி மாவட்டத்தில் பயிராகும் பச்சைத் தேயிலையினுடைய விலை அடி பாதாளத்தில் வீழ்ந்தது. கூட்டுறவு அங்காடியில் விற்றுத்தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டது என்பதை இந்த நேரத்தில் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மிக முனைந்து, ஏற்றுமதியே குறியென்று செயல்பட்டாலோ அல்லது விளைபொருள்கள் அதிகமானாலோ அவற்றின் விலை உள்நாட்டில் உச்சத்திற்கு ஏறும் பிறிதொரு பிரச்சினையும் உள்ளது. பிரேசில் நாட்டில் காபி உற்பத்தியில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகச் சர்வதேசச் சந்தைக்கு நம் நாட்டிலிருந்து அதிக அளவில் காபி ஏற்றுமதியாக வாய்ப்பு அமைந்தது. ஆனால், அதன் விளைவாக காபி விலை, உள் நாட்டில் விஷம் போல் ஏறிவிட்ட கசப்பை இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

பிற்பகல் 7-20

இதுபோன்ற தாக்கங்களை வேளாண்மையில் ஏற்படுத்தும் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கையோடு, மத்திய அரசு வேளாண்மையை பொதுப்பட்டியலுக்குக் கொண்டு செல்லவும் எண்ணி வருவதாக அண்மைக்காலத்தில் ஏடுகள் தெரிவிக்கின்றன.

மைய அரசின் போக்கே ஒரு புரியாத புதிர்போல் இருக்கிறது. ஒரு நிலையான கொள்கைக்கு மத்திய அரசில் வறட்சி அதிகம் போல் இருக்கிறது. உரக் கொள்கையில்கூட ஒரு உறுதியற்ற நிலைதானே நிலவுகிறது.

பஞ்சாயத்து ராஜ் சட்டம் மூலம் கிராம அமைப்புகளுக்கும் அதிகாரப் பரவல் முறையில் அதிக அதிகாரங்கள் வழங்குவோம் என்ற அறிவிப்பு ஒரு புறம், அதே சமயத்தில் மாநில அரசின் அதிகார வரம்புகள் பலவற்றை அரித்து,

மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்குக் கொண்டு செல்லும் 'அதிகாரக் குவியல்' ஆர்வம் மறுபுறம்.

வேளாண்மை போன்ற மாநிலப் பட்டியலில் இருக்கும் துறைகளைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு செல்ல எண்ணும் மைய அரசின் போக்கு முன்னுக்குப் பின் முரணானது. வேளாண்மை மாநிலப் பட்டியலிலேயே இருக்க வேண்டியதன் அவசியத்தை எள்ளளவும் உணராமல் மைய அரசு அரசியல் சட்டத்தில் செய்யும் கண்மூடித்தனமான செயலாகும் என்று இப்பேரவையின் வாயிலாக நாம் மைய அரசுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

அதிகாரப் பரவல், 'கிராமங்களுக்குக் கூட அதிகாரம்' என்றெல்லாம் மைய அரசு பேசி வருவது வாயளவில் மட்டும்தான். கிராமங்களுக்கே அதிகாரம் வழங்கும் ஆர்வம் உண்மையானால், மாநில அரசுகளின் அதிகாரத்தை அரிக்கவும் பறிக்கவும் எண்ணுவது ஏன்?

ஏற்கெனவே 'கல்வி', 'காடுகள்' முதலிய துறைகள் மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்குக் குடிபெயர்க்கப்பட்டுவிட்டன. இப்போது வேளாண்மையையும் மாநிலப் பட்டியலில் இருந்து பறிக்கப் பார்க்கிறார்கள். இது கூட்டாட்சித் தத்துவத்தில் மட்டுமல்ல, இந்திய வேளாண்மை வளர்ச்சியிலும் விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்தாது என்று இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் மைய அரசிடம் தனது பரிந்துரைகளை அளித்துள்ள திரு.கே.சி. பந்த் தலைமையிலான பத்தாவது நிதிக் குழு, வேளாண்மை, கிராமப்புற மேம்பாடு, கல்வி, மக்கள் நல்வாழ்வு ஆகிய துறைகளில் மைய அரசிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பது வளர்ச்சிக்குதவாது என்றும், உண்மையான அதிகாரப் பரவல் நிகழ்ந்திட, இத்தகைய துறைகள் மாநில அரசுகளின் பார்வையில்தான் இருக்க வேண்டும் என்று எவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தினை மைய அரசுக்கு வழங்கியுள்ளதனையும் இப்பேரவையில் நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

புதிய அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன்னால் ஒரு புகழ் அறிவிப்பை வெளியிட்டுவிட்டு புதிய அறிவிப்புக்கு வருகிறேன்.

மாநில வேளாண்மைத் துறைப் பணிகள் சிறக்க அரசின் எண்ணத்தை விதைக்க, அளப்பரிய மகசூல் பெருக்க, அயராது உழைத்து வரும் துறைச் செயலர், திரு.ஆர்.சி. பாண்டா அவர்களுக்கும், துறைத் தலைவர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த மகிழ்வுடன் பாராட்டும், வாழ்த்துக்களையும் படைக்கிறேன் இப்பேரவையில்.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, புதிய அறிவிப்புகள் படைப்பதற்கு முன்னாலே உங்களிடத்திலே சற்று அனுமதியைக் கோர இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

. கூடலிலே, குளக்கரை ஓரத்திலே, தெப்பக்குளக்கரை ஓரத்திலே,
கூட்டல் கழித்தலோடு, நாட்டமுடன் தமிழ் உண்டவரே,
மாங்குடி மருதனைப் போல பேரவை நடத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) ஏனென்று சொன்னால் வைகை ஆற்றுக் கரையிலே அவர் தியாகராஜர் கல்லூரியிலே படித்தார்கள். அவர் படித்தது சையன்ஸ் என்பதற்காகக் குறிப்பிட்டுச்சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் படித்தது அந்தக் கூட்டல், பெருக்கல் கணக்குதான். சயின்ஸ் அல்ல. (சிரிப்பு)

மாண்புமிகு திரு.கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களின் யுவ ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்ற பெருமையை எனக்கு வழங்கிய கொடைமலை, டாக்டர் புரட்சித் தலைவியின் பாதங்களுக்கு மீண்டும் வணக்கத்தை கூறி, என்னுடைய புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

எல்லா விவசாயிகளுக்கும் இலவசக் காப்பீட்டுத் திட்டம். பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களின் இனிதான இசைவோடு இதோ புதிய திட்டங்கள்.

வரன் செய்யப்பட்ட பணிகளில் இருப்போர்க்கெல்லாம் ஓய்வும் உண்டு, ஓய்வூதியமும் உண்டு.

வயற்காட்டில், காலை, கடும்பகல், மாலை, இரவு என இளமையில், முதுமையில், என்றும் பாடுபட்டு, இந்த வையகத்துக்கே சோறிடும் விவசாயிக்கோ ஓய்வு என்பதே இல்லை, ஓய்வூதியம் என்பதும் இல்லை. நவயுகத் தலைவியின் நல்லாட்சி தொடரும் மகிழ்வோடு மலரும் யுவ ஆண்டில் 65 வயதினை எட்டிய எல்லா விவசாயிகளுக்கும் கருணைக் கொடையாக ஒரே தவணையில் 25,000 ரூபாய் கிடைத்திடக் கொடை மனங்கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா விவசாயிகளுக்கும் இலவசக் காப்பீட்டுத் திட்டத்தினை அறிவித்திடப் பணித்துள்ளார்கள்.

பிற்பகல் 7-25

தமிழகத்திலுள்ள வேளாண்மை விற்பனைக் கூடங்களில் 1995-96-ஆம் ஆண்டு முதல், குறைந்தது ஒரு டன் விளைபொருளை விற்பனைக்குக் கொண்டு வரும் எல்லா விவசாயப் பெருங்குடி மக்களும் இத்திட்டத்தின் பயன் பெறச்

சேர்க்கப்படுவார்கள். இதற்கென விவசாயிகளிடம் இருந்து எந்தக் கட்டணமும் இந்த அரசு வசூலிக்காமல், அவர்களுக்கு இலவசமாகவே இத்திட்டத்தினுடைய பயனைக் கிடைக்கச் செய்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்படி பயனாளியாகும் விவசாயி எதிர்பாரா வகையில் விபத்துக்குள்ளாகி இறந்தாலோ முழு ஊனம் அடைந்தாலோ ரூபாய் 25,000 உடன் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படியோ மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திரு. தம்புசாமி அவர்களுக்கும் திரு. பழனிசாமி அவர்களுக்கும் கரவொலி எழுப்ப வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: இன்றாவது இரக்கம் பிறக்கட்டும் என்பதற்காகத்தான்.

1995-96 ஆம் ஆண்டில் தொடங்கிப் பத்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் குறைந்தது ஒரு டன் விளைபொருளை வேளாண் விற்பனைக் கூடங்களின் மூலம் விற்பனை செய்யும் விவசாயி 65 வயதினை எட்டிய அன்றே கருணைக் கொடையாக ரூ.25,000 ஒரே தவணையில் கிடைக்கும். இத்தகையதொரு காப்பீட்டுத் திட்டம் இதுவரை இந்தியாவில் எங்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாளும் புதுமைச் சாதனை நிகழ்த்தும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் இப்புதுமைக் காப்பீடு பூக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள். சிறு குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும் பொருள்கள் எல்லாம் யாருக்கோ போய் விடுகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர் பேசுவதற்கு முன்னாலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்துச் செயல்படுவதற்கு ஒரு திட்டத்தினைத் தந்திருக்கிறார்கள். இதை இப்போது நான் அறிவிக்கிறேன்.

ஆதி திராவிட பழங்குடி விவசாயிகளுக்கு சிறப்புத் திட்டம். வேளாண் துறையில் ஆண்டுதோறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கான திட்டங்கள் பல செயல்பட்டு வருகின்றன. இவற்றின் பலன்கள் முழுமையாக நலிவுற்ற இப்பிரிவு மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே நம் முதல்வர் அவர்களின் பேரவா. பல்வேறு திட்டங்களின் பயன்கள் முழுவதுமாகத் தடையின்றி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சென்றடைய ஏதுவாக 'வேளாண் திட்டப் பயன் அடையாள அட்டை' வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி). அவ்வட்டையில் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் அவர்கள் பயனடையும் இடுபொருள்கள், கருவிகள் விவரம் பதிவு செய்யப்படும். மாவட்டந்தோறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளின் விவரம் [illegible]ந்து கணிப்பொறியில் சேமித்து அவர்களுக்கு அதற்குரிய விவர அட்டை வழங்கப்படும். இதன்மூலம் இந்த ஆண்டு 3.6 லட்சம் ஆதிதிராவிடர்

1995 ஏப்ரல் 19] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

விவசாயிகளுக்கு ரூபாய் 15.26 கோடி மதிப்பீட்டில் பயன் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தின் செயலாக்கத்தை, மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர் (வேளாண்மை) கண்காணிப்பார். இந்தத் திட்டத்தின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உரிய பயன்களைச் சிதறாமல் முழுமையாகப் பெற வாய்ப்புகள் சீராகும்.

திசைகள் வென்று தீரமுடன் ஆண்டு வரும் திராவிடத் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை உவந்து அளித்துள்ளார்கள். ஆதிதிராவிட பழங்குடி விவசாயிகளுக்குரிய பலன் தட்டாமல் கிடைக்கவும் முற்றாகக் கிடைக்கவும் இத்திட்டம். மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள். தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. திட்டங்கள் வேண்டும் என்று கேட்டார்கள். 40,000 ஏக்கர் தரிசு நிலத்தில் பன்னிரெண்டு கோடி செலவில் பசுமை துளிர்க்கும்.

பிற்பகல் 7-30

மக்கள் தொகைப் பெருக்கம். அதன் விளைவாக நிலத் தேவைகளில், பயன்பாட்டில் மாற்றம். இயற்கைச் சூழல்களில் ஏற்றத்தாழ்வு. இவற்றால் தமிழ்நாட்டில் 22 லட்சம் எக்டேர் நிலப் பரப்புக்கள், தரம் குறைந்த வறண்ட தரிசுகள் என்ற வகையில் சேர்ந்துள்ளன. இந்த நிலையிலிருந்து இவ்வகை நிலங்களை மீட்க வேண்டும்; பயிர் செய்யத் தக்கதாக அவற்றை மாற்ற வேண்டும் என்பதை வளமார்ந்த நல்லாட்சி வழங்கிவரும் தேவதை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் எமக்குக் கட்டளையாகக் கருத்துக்கள் நல்கியுள்ளார்கள். இவ்வாண்டு இத்திட்டம் பெரியார், வடாற்காடு-அம்பேத்கார், பசும்பொன், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும். இம் மாவட்டங்களில் 40,000 ஏக்கர் தரிசுப் பரப்பினை மேம்படுத்த 12 கோடி ரூபாய் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவளித்துள்ளார்கள். தமிழ்ப் பூமி பரப்பெல்லாம் இனிப் பசுமை துளிர்க்கும்.

இனிக்கும் கரும்புக்குத் தனித் திட்டம். கரும்பு உற்பத்தித் திறனில் தமிழகம் முதலிடத்தில். 3.26 லட்சம் எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு வரும் கரும்பு உற்பத்திக்கு மேலும் ஊக்கமளிக்க மைய அரசின் உதவியோடு, இரண்டு கோடி ரூபாய் மதிப்பில் தனித் திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும். களப் பணியாளர்களுக்கும், கரும்பு பயிரிடுவோருக்கும் பயிற்சி, கரும்பு உற்பத்தித் தொழில்நுட்ப விரிவாக்கம், வேளாண் சாதனங்கள் வழங்குதல், உயர் உற்பத்திக்குப் பரிசு என்பன இவ்வினிய திட்டத்தின் உள்ளடக்கமாகும். இனிக்கும் கரும்பு இனி அதிகம் விளைந்து இனிக்கும். மலர்த் திருவிழாவில் மனதைக் கவரும் ரோஜா மலர்த் தோட்டம். உலகம் மகிழும் உதகை மலர்க்காட்சிக்கு இவ்வாண்டு

நூற்றாண்டு. மூப்படையாது என்றும் பூத்திருக்கும் உதகையில் மே மாதம் இறுதி வாரத்தில் 'நூற்றாண்டு மலர்த் திருவிழா'. இவ்விழா இவ்வாண்டு ஏழு நாட்கள் மலர்ந்திருக்கும். கண்கவர் மலர் விழாவாக மட்டுமல்ல, கருத்து விழாவாகவும் விரியும். இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், எல்லாப் பயணிகள், செடி, கொடி, உயிரின ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் ஈர்த்திடும் வகையில் நூற்றாண்டு மலர்த் திருவிழா அமையும். நூற்றாண்டு மலர்த் திருவிழாவின் நினைவு நிலைக்க ரூபாய் நாற்பது லட்சம் செலவில் உதகையில், விஜயநகரம் என்னுமிடத்தில் மலர்களின் ராஜா, ரோஜா மட்டுமே சிரித்திருக்கும். மாபெரும் ரோஜாத் தோட்டம் ஒன்று மக்கள் ரசிக்கத் திறந்து வைக்கப்படும். பன்னிரெண்டு ஏக்கர் பரப்பு; இரண்டாயிரம் வகை ரோஜா வகைகள், கண் திரும்பும் பக்கமெல்லாம் பல்லாயிரம் ரோஜா மலர்கள் சேர்ந்து பூத்துச் சிரிக்கும். நீரூற்றுக்கள், நிலாமண்டபம் முதலியன சேர்ந்து கலைநயம் மிக்க கவின் பெரு ரோஜா வனமாக இது விளங்கும். இந்திய நாட்டில் வேறெங்குமேயில்லாத இத்தகு ரோஜாத் தோட்டம் நாட்டின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும். நம் தலைவியின் அழகுணர்வுக்கு ஆமோதிக்கும்.

தமிழ்நாடு வணிக மலர் சாகுபடிக்கு தனிக் கொள்கை. உலக நாடுகளின் வர்த்தகத்தில் குறுகிய காலத்திலேயே பெரும் பங்கை ஈர்த்துக் கொண்டிருப்பது வணிக மலர் விற்பனையே. இது ஆண்டுக்கு ஆண்டு 10 சதவிகிதம் முதல் 15 சதவிகிதம் வரை உயர்ந்து கொண்டே வருகிறது. 1993-94-ஆம் ஆண்டு, உலக மலர் விற்பனை ரூபாய் 28,000 கோடி. இதில், மலர்க் கொத்துக்கள் மட்டும் ரூபாய் 18,000 கோடி, சாடிப் பூக்கள் ரூபாய் 10 கோடிக்கு விற்பனை ஆயின. இந்தியாவிலிருந்து மட்டும் வணிக மலர்கள் ரூபாய் பதினேழு கோடியே தொண்ணூறு லட்சம் ரூபாய் மதிப்பிற்கு ஏற்றுமதி ஆகியுள்ளது. இந்திய மலர்கள் நெதர்லாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து, அரபு நாடுகள், ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகி அழகூட்டப்படுகின்றன. வணிக மலர் சாகுபடிக்கு ஏற்ற தட்பவெப்பச் சூழல், தக்க நிலப்பரப்பு, நீர், மனித உழைப்பு ஆகியன மிகுந்துள்ள நாடு நம் நாடு. இதிலும் குறிப்பாக நமது தமிழகம் சிறப்புக்குரியது. மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு, கடந்த நான்காண்டுகளில் வணிக மலர் சாகுபடியாளர்களுக்கு அளித்து வந்த ஆதரவால், தனியார்களின் முதலீடு 150 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. வணிக மலர் சாகுபடியாளர்கள் நிலம், நீர், மின்சாரம், வங்கிக் கடன் ஆகியவைகளை எளிதாகப் பெறுவதற்கு ஏதுவாக 'ஒரு முனை உதவி' வழங்கிட உயர் அலுவலர் கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும்.

வணிக மலர் ஏற்றுமதியில் தமிழகத்திற்கு அதிக வாய்ப்பு பெற்றுத் தரும் வகையில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகில் 'உலக வணிக மலர் மையம்' ஒன்று ரூபாய் இருபது கோடி செலவில் அமைக்கத் தேவையான

நிலத்தைத் தமிழக அரசின் சார்பில் இலவசமாகத் தர முன்வந்து, அதை மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவையில் பகிர்ந்து கொள்கிறேன்.

பிற்பகல் 7-35

தமிழகத்தின் பாரம்பரிய மலர்களான மல்லிகை, கனகாம்பரம், செவ்வந்தி போன்ற மலர்கள் நாளொன்றுக்கு 10 டன் அளவில் மதுரை மற்றும் கோவையிலிருந்து விமானங்கள் மூலம் பம்பாய் சென்று, அரபு நாடுகளில் பயன்படுத்துவதற்காக விற்பனைக்குச் செல்கிறது. தரம் குறையாத மலர்கள் செல்ல வேண்டும் என்பதற்காக மதுரை விமான நிலையம் அருகில் ரூபாய் 1 கோடி அளவில் குளிர் பதனிடும் சேமிப்புக் கிடங்கு ஒன்று இவ்வாண்டு உருவாக்கப்படும் என்ற மணம் (மேசையைத் தட்டும் ஒலி) நிறைந்த செய்தியையும் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை மேம்பட உலக நிறுவன ஆலோசனை. தமிழ்நாட்டில் பயிர் செய்யப் பயன்படாத மொத்த நிலப்பரப்பில் 35 சதவீதப் பரப்பு தருமபுரி, இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர் மாவட்டங்களில்தான் உள்ளது. இயற்கையின் மாறுபட்ட நர்த்தனங்களுக்கு இலக்காகும் இம்மாவட்டங்களில் பெரும்பாலும் வானம் பார்த்தே விவசாயம். வானம் பார்த்தே விவசாயம் என்றாலும் வளம்பெற வேண்டாமா? விளையக் கூடிய பரப்பில் விளையக்கூடிய பொருள்கள் விலை மதிப்பில் உயர்ந்ததாகப் பயிரிடும் முறைகள் மாற்றி, பலன் பெருக்கத்தக்கதாக வியூகம் அமைத்து வேளாண்மை செய்தால் வானம் பார்த்த பூமியிலும் வளம் பெருகச் செய்யக்கூடும். மாவட்டங்களின் தன்மைகளுக்கு ஒத்த பயிர்கள் கண்டறிதல், நீர்வளம் பெருக்குதல், விளைப்பொருட்கள் மதிப்புயர்த்தல், வேளாண்மை வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல், முதலீடுகளுக்கும் மனித உழைப்புக்கும் இசைவான வேளாண் கட்டமைப்புகளை அமைத்தல் ஆகிய தொழில் நுட்பப் பணிகளை மேற்கொள்ள முதல் முறையாக சர்வதேச நிலையில் ஆலோசனை வழங்கக்கூடிய நிறுவன உதவி பெறப்பட்டு உரிய பணிகள் உடன் மேற்கொள்ளப்படும். இதற்கென ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட உலகம் புகழ் உத்தமத் தலைவியின் அனுமதி கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரே ஆண்டிலே உலகம் வியக்கக்கூடிய சாதனைகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ரூ.47.5 கோடி மதிப்பீட்டில் வேளாண் தொழில் நுட்பப் பரிமாற்ற மையங்கள். மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும், ரூ.47.5 கோடி மதிப்பீட்டில் வேளாண் தொழில் நுட்பப் பரிமாற்ற மையங்கள் நிறுவ மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். மாநில அளவில், சென்னையில் ரூ.225 லட்சம் செலவில் வேளாண்மை இயக்குனரகத்தில் ஒன்றும், மாவட்ட அளவில் ரூ.1,339 லட்சம்

செலவில் திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருவண்ணாமலை, விருதுநகர், விழுப்புரம், வேலூர், சிவகங்கை, சேலம், ஈரோடு, புதுக்கோட்டை, கடலூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் வேளாண் தொழில் நுட்ப மையங்களும், வட்ட அளவில் ரூ.1,095 லட்சம் செலவில் அவினாசி, ஆற்காடு, ஆரணி, ஆலங்குடி, ஆவுடையார்கோவில், செம்பனார்கோவில், காட்டுமன்னார்கோவில், செங்கோட்டை, ஊத்துக்கோட்டை, உளுந்தூர்ப்பேட்டை, தேவக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, சத்தியமங்கலம், நீடாமங்கலம், மேட்டுப்பாளையம், கோபிசெட்டிப்பாளையம், கோவில்பட்டி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, பள்ளிப்பட்டு, பரமத்தி, பண்ருட்டி, பல்லடம், பூதப்பாண்டி, கும்மிடிப்பூண்டி, திருக்கோவிலூர், திருவாடானை, திருநெல்வேலி, திருவிடைமருதூர், திருப்பத்தூர், திருச்செந்தூர், திருவாரூர், பெரம்பலூர், பேராவூரணி, இளையான்குடி, இராஜபாளையம், இலால்குடி, சங்ககிரி, சாத்தான்குளம், ஊத்தங்கரை, நத்தம், உத்திரமேரூர், கமுதி, கீரனூர், குளித்தலை, துறையூர், மணப்பாறை, வாணியம்பாடி, விருதுநகர், தக்கலை, தென்காசி, ஓமலூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களில் வட்ட வேளாண்மை தொழில் நுட்பப் பரிமாற்ற மையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அளவில் 140 ஒன்றியங்களில் ரூ.70 இலட்சம் செலவில் வேளாண்மைத் தகவல் மையங்கள் நிறுவப்படும். (குறுக்கீடு) நேரம் இல்லை. 140 ஒன்றியங்களில் அமைக்கப்படும்.

பிற்பகல் 7-40

மேலும் சென்னையில் ரூ.735 லட்சம் செலவில் வேளாண்மை விற்பனை இயக்குநரகமும், ரூ.1280 லட்சம் செலவில் மதுரையில் மாபெரும் நெல் வணிக வளாகமும் அமைக்கப்படும். வேளாண்மைத் தொழில் நுட்பப் பரிமாற்ற மையங்கள், இந்தியாவிலேயே ஓரே ஆண்டிலே, ஒரே ஆட்சியிலே மாநில அளவில், மாவட்ட அளவில், வட்ட அளவில், ஒன்றிய அளவில் அளப்பெரிய தொகையான ரூ. 47.5 கோடியில் நமது மாநிலத்தில் அமைக்கப்படுகிறது என்ற சிறப்பை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அறிவித்து இருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேரவைமுன் வைக்கிறேன், இதயதெய்வத்தின் இணையற்ற நல்லாசியோடு.

அறுவடைக்குப் பின்னுள்ள தொழில் நுட்ப நிறுவன அமைப்பு. முனை மழுங்கா முயற்சிகள், இணையற்ற தொழில் நுட்பம், இசைவான வேளாண் கொள்கை,இவற்றின் விளைபயன் வேளாண் உற்பத்திப் பெருக்கம், உழவர்களைப் பொறுத்தவரை உற்பத்திப் பெருக்கத்தோடு முற்றுப்பெறுவதில்லை தொடர். விற்று முதலாக்க வேண்டும், விலை நன்கு கிடைக்க வேண்டும். சரிவு விலைக் காலத்தில் சேமிக்க, பதப்படுத்த, சாதனங்கள், தொழில்நுட்பம் அருகில் வரவேண்டும். அப்போது தானே அவன் நிலத்தில் சிந்திய வியர்வை பொருள் பெற்றதாகும். சேமிக்க, பதப்படுத்த தேவைப்படும்போது பயன்படுத்த

சிலபருவத்தே மட்டும் கிடைப்பன என்றில்லாமல் எப்போதும் தட்டாமல் விளைபொருள்கள் கிடைத்திருக்க, நுகர்வோர் மகிழ்வடைய விளைத்தோர் நிறைவடைய வேண்டியன செய்ய வேண்டும். நாட்டின் விளைபொருளில் 5 முதல் 10 சதவிகிதம் வீணாகிறது. அழுகிப் பயனின்றி அழிந்தும் போகிறது. எண்ணிப் பார்த்தால் எவ்வளவு இழப்பு. உழைப்பு, பொருள், பணம் இழப்பு தவிர்க்க வேண்டுமே. அறுவடைக்குப் பின்னாலும் தொழில் நுட்ப உதவிகள் விளைப்போர்க்குக் கிடைக்க வேண்டும். அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்ப அறிமுகம், பயிற்சி, சாதனங்கள், ஆய்வு என்றெல்லாம் விரிந்து பரந்து விளைப்போர்க்கு உதவிட வேளாண்மை விற்பனைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை இவர்களது கூட்டுறவில் எண்ணிடும் அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்ப நிறுவன உதவி நிகழ்ந்திட வேண்டும். தன்னாட்சி பெற்ற தக்கதொரு நிறுவனமாய் அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம் தர அமைப்பொன்று உருவாகும். மண்ணையும் பொன்னாக்கும் மகத்துவத் தலைவி மாண்புமிகு முதல்வர் விளைத்ததை வீணாக்க விடுவாரா? (மேசையைத் தட்டும் ஒலி) தக்கதோர் அமைப்பு தமிழகத்தே நிறுவிட உற்ற உதவிகள் அரசு செய்யும். பூர்வாங்கப் பணிகள் வேளாண் விற்பனைத் துறையினரால் ஆர்வமுடன் தொடங்கி ஆவன விரைந்து செய்யப்படும். (குறுக்கீடு) முடிவுரைதான் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைவுரைக்கு வந்துவிட்டால் சரி. ஏன் என்றால் உங்களுடைய சக அமைச்சர்கள் இருவரும் உங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை ஆட்சி பெற்று நான்காண்டுகள், நான்காண்டுகளில் வேளாண்மையில் வியத்தகு சாதனைகள். பாதை எமக்குக் காட்டித் தக்க பார்வையும் தந்து வளர்ச்சிப் பரிமாணம் பெற்றிட உழைப்போர்க்கெல்லாம் உற்சாகமளிக்கும் தலைவி என்றொரு வரம் பெற்றோம், தமிழகம் செழிக்கக் கண்டோம் நாம். மாநிலத்து வேளாண்மைப் பரிமாணங்கள் அன்றும், இன்றும், இதுவரை, நாளை, என்று விரிவாய்ப் பார்த்தோம் நாம்; இன்று புதிய அறிவிப்புகள் சிலவும் தவழ்ந்திட விடுத்துள்ளேன். மகிழ்வோடும், மனநிறைவோடும் இம்மாமன்றப் பார்வைக்குக் கணக்கொன்றை முன்வைக்கக் கருதுகிறேன். எண்பத்தி நான்கு அறிவிப்புகள் இதுவரை இப்பேரவையில் செய்துள்ளேன். சொல்வதைச் செய்யவே சோர்வில்லாத் தலைவி எமைப் பணித்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வழியில் அறிவிப்புகள் எழுபத்தைந்து இனிது நிறைவேறி, ஒன்பது, உடன் நிறைவேற ஆயத்தமாய் உள்ளது என்பது மகிழ்வு அல்லவா, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகிழ்வோ மகிழ்வு. (சிரிப்பு)

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு.கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்ந்து வேர் நிரவி, ஆழ்ந்து வேர் நிரவி, ஆல்போல் விழுதிறங்கி, உன் ஆட்சி நிழல் தொடர்வதனால் அன்னையே, மண்பரப்புப் பசுமையில், பொன்மணியாய் நெல்மணிகள், புவிபோன்ற உயர்விளைச்சல், இயற்கையும் இசைவாகி, இன்முகங் காட்டுவதால் கர்நாடகக் கைவிரிப்பும் பொருளற்றதாயிற்று;

பிற்பகல் 7-45

தண்ணீரில்லை எனுஞ்சொல்
தமிழகத்தில் இன்றில்லை தாயே
மண் மலர்ந்து...மகராசியால்...
மக்கள் மகிழ்ச்சியில்!
முன்வந்து உனை எதிர்க்க
முதுகெலும்பற்ற
கசடுகளின் சலசலப்பும் —
காகிதக் கணைகளையே
காண்டீபம் எனக் கருதிப்
புளகித்துப் போகும் பொக்கைகள் —
போனதுகள், வந்ததுகள்,
தட்டிப் பார்க்கும்
தப்புத் தாளங்களும்
மக்கள் சக்தியெனும்
மகத்தான அரண்தாண்டி உன்
பக்கம் நெருங்கும் வழியேயின்றிச்
சிதறுகின்றன
குப்பைகளாய்!
மக்கள் ஒதுக்கிய இக்
குப்பைகளை
மக்க வைத்தால்
பயிர்களுக்காவது பலன் கிடைக்கலாம் (மேசையைத் தட்டும் ஒலி)
கிண்டிப் பதிப்பில் வெளியிடவேண்டுமென்றே
வண்டி வண்டியாய்ப் பேப்பர் வாங்கி
கிண்டிப் பதிப்பில் வெளியிடவேண்டுமென்றே
வண்டிவண்டியாய்ப் பேப்பர் வாங்கி (மேசையைத் தட்டும் ஒலி)
விடிய விடியக் கதைகள் எழுதி
விடிய விடியக் கதைகள் எழுதி
வீதியிலே விற்க மண்டுகள் சிலவும்—.

1995 ஏப்ரல் 19] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

அண்மையிலே ஒருவர்
அரைகுறைப் பிரசவத்தில்
ஆட்சியைப் பிடித்தவர்போல்
இருந்த முன்னாள் முதல்வர்
விடிய விடியக் கதைகள் எழுதியதால்
நாக்கெல்லாம் புண்ணாம்
விடிய விடியக் கதைகள் எழுதியதால்
நாக்கெல்லாம் புண்ணாம்
இந்த புண்ணாக்கு
புண் நாக்கு
இந்த புண்ணாக்கு
*உண்மைக்குப் புறம்பான வார்த்தையினால்
பொழுதோட்டிக் கொண்டிருந்தால்
*உண்மைக்குப் புறம்பாகச் சொன்ன நாக்கிலே
பூவா மலரும்? (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாக்கிலே புண் வந்த கதை வரையிலும் சரி, அந்த ** என்பது வேண்டாம். அதை உண்மைக்குப் புறம்பான என்று மாற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு கு.ப. கிருஷ்ணன்: உண்மைக்குப் புறம்பான வார்த்தைகளையெல்லாம் கொண்டு பொழுதோட்டிக் கொண்டிருந்தால் உண்மைக்குப் புறம்பான சொல்லைச் சொன்ன நாக்கிலே பூவா மலரும்? புண்ணும் கொப்புளமுந்தானே மிச்சமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் திருத்தத்தையும் கவிதையாகவே பாடுகிறார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்; இந்த * புரட்டரும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்மைக்குப் புறம்பான என்று மாற்றிக் கொள்ளலாம்.** இல்லாத கவிதை வர வேண்டும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: இந்த உண்மைக்குப் புறம்பான புரட்டரும்—

இந்த உண்மைக்கு புறம்பான புரட்டரும்
நொண்டிக்குதிரைச் சவாரி பண்ணிக்
கிண்டி ரேசில் ஜெயிக்கத் துடிக்கும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.
*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

சண்டிச் சாமி ஜாக்கி சிலவும் (மேசையைத் தட்டும் ஒலி)
கோட்டைக்கு வருவதும்
ஆட்சியில் அமர்வதும்
மனுக் கொடுத்தல்ல—
மக்கள் அளிக்கும் வாக்கைப் பெற்றே (மேசையைத் தட்டும் ஒலி;
என்னும் அரிச்சுவடி
இன்னமும் அறியாமல்
உலவிக் கொண்டிருப்பது
உண்மையிலே வேடிக்கைதான்!
இன்னொரு விதி செய்ய
எங்களுக்கு ஆணையிடு தாயே!
பயிர்கள் வளர்த்துப்
பைந்தமிழர் பயன்பெறவே இக்
குப்பை கூளங்களைச்
சுற்றுப்புறத் தூய்மை கெடாமல்—
குழியிலே அமுக்கி
மக்க வைக்கத்தான்
மக்கள் விருப்பம்! (மேசையைத் தட்டும் ஒலி)
இப்பணி செய்திட
எமக்கிடு ஆணை தாயே!
மக்கள் வாக்குப்பெற்று
இம்மன்றம் வந்தமரும்
வக்கற்றதுகள்
வக்கரம் பேசலாம்.
வாக்களிப்போர் தீர்ப்பு
வழங்குவது புரட்சித் தலைவியின் பக்கம் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)
வேதப் பொருளே!
வெந்தணலிலும்
வேகாத விதைகளாய்
முளைப்போம் நாங்கள்
விருட்சமாய்ப் படர்வோம்!
வேதப் பொருளே!
வெந்தணலிலும்
வேகாத விதைகளாய்
முளைப்போம் நாங்கள்
விருட்சமாய்ப் படர்வோம்!

எதிர்ப்போர் எவர் வரினும்
முறிப்போம்; வெற்றியே பறிப்போம்! (மேசையைத் தட்டும் ஒலி)
கட்டிக் காப்போம் தமிழர் நலன்
கழனி மேன்மை கவனமாய்ப் போற்றி!
உன்னத அன்னையே!
உன்புகழ் காத்திட
உன்னத அன்னயே!
உன்புகழ் காத்திட
உயிர்ச் சந்தா கட்டியுள்ளோம்! (மேசையைத் தட்டும் ஒலி)
அனைத்திந்திய அண்ணா திமுக தொண்டர்கள் உன் புகழ் காத்திட
உயிர்ச்சந்தா கட்டியுள்ளோம்!
உலகம் இது அறியும்!
சுற்றும் உலகச் சுற்று
நிற்பினும் உன்
நிழலைக் கூட எதிரிகள் எவரும்
நெருங்க இயலா நெருப்பாய்—அரணாய் (மேசையைத் தட்டும் ஒலி)
இருப்போம்!
நிழலைக் கூட எதிரிகள் எவரும் நெருங்க இயலா நெருப்பாய்—
அரணாய் இருப்போம்
அற்ற நீர்க் குளத்து
அறுநீர்ப் பறவை போலல்லாமல்
அக்குளத்தே
கொட்டியும் ஆம்பலும் போலவே
ஒட்டியிருப்பேன் உன்னடி நிழலில்!
உயிருள்ள வரையில்,
என்று கூறி,

பிற்பகல் 7-50

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி), என்னுடைய உரையிலே மாண்புமிகு உறுப்பினர்களின் பல்வேறு கருத்துக்களுக்கு விடை கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள், கொள்கை பற்றி விவாதிக்கக் கொடுத்த கோரிக்கைகள் இவைகளெல்லாம் பேரவைப் பதிவேட்டிலே இருக்கிறது. இவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, வெட்டுத் தீர்மானம் தந்த மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, அரசு கோரிய மானியத் தொகையைப் பெற்றுத் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சடசடவென சந்தம் பாடினாலும் (மேசையைத் தட்டும் ஒலி) சத்தான பல அறிவிப்புகளைச் செய்தீர்கள். அது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தியளிக்கும் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) திருப்தி இல்லையா? திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் 65 வயது நிரம்பியிருக்கிற விவசாயிகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை இங்கே அறிவித்தார்கள். உண்மையிலேயே நான் வரவேற்கிறேன், நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதற்கான முழுமையான விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டும். ஏனென்றால் அனைத்து விவசாயிகள் என்று அமைச்சரவர்களுடைய பதிலுரையிலே சொல்லியிருக்கிறார்கள். அனைத்து விவசாயிகளுக்கும் எந்தவிதத்திலே, எப்படி அந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டம் வழங்கப்பட இருக்கிறது? அவர்களிடத்திலேயிருந்து ஏதாவது பிரிமியம் பிடிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா, அல்லது முற்றும் அரசாங்கமே அதைச் செலுத்துகிறதா என்று சொல்ல வேண்டும்.

அடுத்ததாக, ஏற்கெனவே நம்முடைய நிதியமைச்சரவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் 65 வயது நிரம்பியிருக்கிற சிறு குறு விவசாயிகளுக்கு 100 ரூபாய் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சருடைய அறிவிப்பிலே அது இடம்பெறவில்லையே? அதை எடுத்துக்கொள்ளப்போகிறார்களா அல்லது அது கைவிடப்பட்டதா என்பதையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் [illegible] துறையிலே வழங்குவது. இது வேறு. இன்ஷ்யூரன்ஸ் திட்டம் வே[illegible]று.

மாண்புமிகு திரு. கு. ப. [illegible] மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு [illegible]வர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து [illegible]பொழுது அவர்கள் குறிப்பிட்டது, குறு விவசாயிகளுக்கு 65 வயதைத் தாண்டிய பிறகு மாதம் 100 ரூபாய் அரசினுடைய உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் ஒரு விவசாயி தன்னுடைய விளைபொருளை—அதுதான் அவர் விவசாயி என்பதற்கு அடையாளம்—தன்னுடைய விளை பொருளை ஒரு ஆண்டுக் காலத்திலே 1 டன்- அதாவது 1000 கிலோ எப்பொழுது வேண்டுமானாலும் அவர் கொண்டு வந்து விற்று விட்டால் அவர் விவசாயி என்று நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்கிறோம். அப்படிப்பட்ட விவசாயி விபத்தில் இறந்தாலோ அல்லது முழு ஊனம் அடைந்தாலோ 25,000 ரூபாய் அவருக்கு உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். அதைப்போல, பத்து

ஆண்டுகளுக்கு ஒரு விவசாயி தொடர்ந்து தன்னுடைய விளைபொருளை — ஆண்டுக்கு ஒரு டன்தான் குறைந்தது-அவர் விற்பனை செய்து வந்தால் 65 வயது முடிந்தவுடன் அவருக்கு ரொக்கமாக 25,000 ரூபாய் வழங்கப்படும். இது இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அல்ல. புரட்சித் தலைவி அவர்களின் புதுமையான கருணைத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக எந்த விவசாயியினிடத்திலும் ஒரு காலணா, ஒரு பைசா வசூல் செய்ய மாட்டோம். இது முழுக்க முழுக்க அரசே ஏற்றுக் கொள்ளக்கூடிய புதிய திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் வேளாண்மைத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் நீண்டகாலமாக உழைக்கிறார்கள், அத்துக் கூலியாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கோ, ஊதிய உயர்வு செய்வதற்கோ அமைச்சரவர்கள் எந்த அறிவிப்பும் செய்யவில்லை. அமைச்சரவர்கள் இதைக் கணக்கில் எடுத்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை ஆகியவைகளிலே பண்ணைகள் இருக்கின்றன. அதேநேரத்திலே தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தால் நிர்வாகம் செய்யக்கூடிய ஆராய்ச்சி மையங்கள் இருக்கின்றன. எனவே, இவைகளுக்கெல்லாம் ஒரே சம்பளமாகக் கொடுக்க வேண்டுமென்பதற்கு அண்மையிலே புரட்சித் தலைவி அவர்கள் சம்பளத்தை உயர்த்தி, தினக் கூலியை உயர்த்தி ஆணை வழங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த அவையிலே நான் அறிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 65 வயது கடந்த விவசாயிகள் வருஷத்திற்கு ஒரு முறை 1000 டன் என்று சொன்னார்கள், அமைச்சரவர்கள் (குறுக்கீடு) 1000 கிலோ - 1 டன். உற்பத்தி செய்யாத வேறு நபர்கள் கூட வெளி மார்க்கெட்டிலே வாங்கிக்கொண்டுபோய் அதை அவர்கள் கொடுத்து அங்கு விற்பனை செய்வதற்கு வாய்ப்புகள் இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 7-55

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயி என்று அவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு

அவர்களுடைய விளைநிலங்களிலிருந்து விளைவிக்கப்பட்ட விளைபொருள்களைக் கொண்டுவந்து விற்க வேண்டும் என்ற நோக்கிலேதான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்கிறபோது நல்ல அணுகுமுறையோடு அணுக வேண்டும். ஏனென்று சொன்னால், இன்னொரு இடத்திலே வாங்கி வந்து விற்று விடுவார்கள் என்று சொன்னால், அதுபோன்ற தவறுகள் வராமல் நிச்சயமாக இந்த அரசு பார்த்துக்கொள்ளும். அதுபோன்ற எண்ணத்திலே யாராவது இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இப்போதே சொல்லிவிடுங்கள், தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பொறியியல் திட்டத்திலே சில கசிவு நீர்க் குட்டைகள் வெட்டுவதற்காக, அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே களங்கள் அமைப்பதற்கு, அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்போது விவசாயிகள் கிராமங்களிலே கோரிக்கையை வைக்கிறார்கள். அந்தத் திட்டத்தை, கிராமங்களில் பயிர் அடிப்பதற்குக் களங்கள் கட்டும் திட்டத்தை மீண்டும் அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் நிறுத்தப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டுகளில் அதிகமான களங்கள் உருவாக்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கிக் கடன் மூலம் கிராமப்புறங்களில், புஞ்சை நிலங்களில் கரை போட்டு நிலத்தடி நீர் பெருக்குகின்ற ஒரு திட்டம் மூலம் கிராமப்புறங்களிலே கரைகள் போடப்பட்டன. அந்தக் கரைகள் போடப்படும்போது, விவசாயிகளுக்கு அரசாங்கம் இலவசமாகப் போடுகின்றது என்று சொல்லிவிட்டுப் போட்டார்கள். ஆனால், தற்போது,15 ஆண்டு காலக் கடன் என்று சொல்லி, வேளாண்மைத் துறை மூலம் இதை வசூல் செய்ய வேண்டுமென்று கிராமப்புறங்களிலே ஏழை விவசாயிகளை நிர்பந்திக்கிறார்கள். 1979-லே இப்படிப்பட்ட பிரச்சினை எழுந்தபோது, ஒரு முறை கடனை தள்ளுபடி செய்தார்கள். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது ஏழை விவசாயிகளை பணம் கட்டச் சொல்லி, 15 ஆண்டு காலக் கடனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிர்பந்தத்தை தள்ளுபடி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டபோதே, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளோடு கலந்து பேசி, அவர்கள் கடனாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துகிறோம் என்ற உறுதிமொழியின் பேரில், அவர்களிடம் உறுதிப் பத்திரம் எழுதி வாங்கிப் பெற்றதற்குப் பின்னாலேதான் இந்தத் திட்டமே நிறைவேற்றப்பட்டது. எனவே, அந்த விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்கள். இப்போது அந்தக் கடனை ரத்து செய்யக்கூடிய திட்டம் ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து இரண்டு அமைச்சர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராயிரம் ஆண்டு தமிழர் செய்த மாதவத்தால் வாராது வந்த மாமணியே, திராவிட ஜோதியே, தென்னகத்தின் பேரொளியே, அறிவார்ந்த திருமகளே, திருவார்ந்த கலைமகளே, தாழ்ந்திருந்த தமிழகத்தின் தலைவிதியை மாற்றுவதற்கு ஓயாது பாடுபடும் உழைப்பின் மறுவடிவே, அமைதிப் பூங்காவாய் அழகிய தமிழகத்தை ஆக்கியவர் நீங்கள். அன்னைத் தமிழுக்கு அகிலம் வியக்க மாநாடு கண்ட மகராசி நீங்கள், வெண்மைப் புரட்சியிலும், பசுமைப் புரட்சியிலும், உண்மைப் புரட்சியை உருவாக்கியவர் நீங்கள். இதயதெய்வமே, உங்கள் காலடி மலர்களுக்குக் கவிதை மலர் தூவிக் கைகூப்பி வணங்குகிறேன்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆண்டாண்டுக் காலமாக நஷ்டத்தை மட்டுமே சந்தித்து வந்தது. இணையத்துக்கு ஏற்பட்டு வந்த இழப்பை மாற்றி, முதன் முதலாக இலாபத்தை ஏற்படுத்தியவை இதயதெய்வத்தின் பொற்கரங்கள். அந்தப் பங்கயக் கைகள் பைந்தமிழ் வளர்க்கும் கைகள் மட்டுமல்ல, பால்வளம் காக்கும் கைகளுமல்லவா! எனவே, 1993-94-ஆம் ஆண்டில் 6.13 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியது பால் உற்பத்தியாளர்கள் இணையம்.

'உள்ளது சிறத்தல்' வாழ்வின் அடிப்படை மந்திரமல்லவா, 1993-94-இல் 6.13 கோடி ரூபாய் இலாபம் என்றால் 1994-95-இல் கூடுதல் இலாபம் பெற வேண்டியது அவசியம். அதன்படி 1994-95-ஆம் ஆண்டில் இணையம் ஈட்டிய இலாபம் 6.59 கோடி ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரில் தற்போது இரண்டு பெரிய பால் பண்ணைகள் உள்ளன. அம்பத்தூரிலுள்ள பால் பண்ணை ஒரு நாளைக்கு 3 லட்சம் லிட்டர்கள் பாலைப் பதப்படுத்தக்கூடிய திறன் உள்ளது. மாதவரத்திலுள்ள

மற்றொரு பால் பண்ணை ஒரு நாளைக்கு 1.75 லட்சம் லிட்டர்கள் பாலை பதப்படுத்தக்கூடிய திறன் உள்ளது. மேற்படி 2 பால் பண்ணைகளின் மூலமாகவும் மற்றும் சில மாவட்ட பால்வள ஒன்றியங்களிலிருந்து நிலைப்படுத்திய பாலை நேரடியாகப் பெற்றும் தற்போது சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 8.2 இலட்சம் லிட்டர்கள் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. பால் விநியோகத்தை அதிகப்படுத்துவதற்காக மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தில் தேசிய பால்வள வாரிய ஒத்துழைப்புடன் சென்னை சோளிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர்கள் பாலைப் பதப்படுத்தக்கூடிய நூதன பால் பண்ணை 32.59 ஏக்கர் நிலப்பரப்பில் பழைய மகாபலிபுரம் சாலையில் ரூ. 24.80 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பால் பண்ணையின் அமைப்புப் பணிகள் முடிவடைந்து சோதனையோட்டம் நடைபெற்று வருகின்றது. மிக விரைவில் இப்பால் பண்ணை மூலமாக பால் விநியோகம் சென்னை மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. அவ்வமயம் தினமும் 8.2 இலட்சம் லிட்டர் பால் விநியோகம் என்பது 9.30 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும்.

பிற்பகல் 8-00

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டமொன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூ.7.05 கோடி மொத்தச் செலவில் 1995-96-ல் முடிக்கப்படும். 1995-96-ல் ரூ.4.66 கோடி செலவில் காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த புதிய பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணைத் திட்டமொன்று தொடங்கப்படும். காக்களூரிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் உள்ள பால் குளிர்விக்கும் மையங்கள் பால் பண்ணைகளாக மாற்றியமைக்கப்படும். இவைகள் எல்லாம் முடிந்ததற்குப் பின்பு இம்மாநிலத்தில் மொத்தப் பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 26.87 இலட்சம் லிட்டர் என்ற அளவை நடப்பு ஆண்டில் எட்டும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது 18.30 இலட்சம் லிட்டர் பதப்படுத்தக்கூடிய திறன்தான் நம்மிடத்தில் இருக்கிறது. மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் மூலமாக இவ்வாண்டில் திருச்சிராப்பள்ளியில் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணையொன்றை நிறுவும் பணி முடிக்கப்படும். கொடைக்கல், சானூர் ஆகிய இரண்டு இடங்களில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பால் குளிர்விக்கும் இரண்டு நிலையங்களை நிறுவும் பணிகள் இந்த ஆண்டில் முடிக்கப்படும். நாமக்கல், சங்கராண்டாம்பாளையம், சண்முகாபுரம், சுல்தான்பேட்டை, ஆத்தூர், பெரம்பலூர், கரூர் ஆகிய இடங்களில் பாலைக் குளிர வைக்கும் திறன் 1995-96-ல் விரிவுபடுத்தப்படும்.

ஆ காத்தல்- ஆநிரைக் காத்தல் என்பது அன்றைய காவலர் கடமை, அந்தப் புனிதப் பணியை அற்புதமாக இன்று நிறைவேற்றி வருவது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு.

உலக வாழ்வின் பல்வேறு தொழில்களில் உன்னதமானது, பசுக்களைக் காத்து, பசுக்களைப் பேணி, பசு வழங்கும் பயன்மிகு கொடைகளைப் பாருக்களிப்பது. இதைத்தான்,

'ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கை ஒரு கொடும் பாடில்லை.

என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

ஏழை எளியோர் ஏற்றம் பெற அவர்கள் வாழ்வில் வளம்பெற, கறவை மாடு வாங்க முந்தைய ஆட்சியில் 3,200 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கணிசமான அளவு பால் கறக்கும் நல்ல மாடொன்று வாங்க வேண்டுமானால் 3,200 ரூபாய் போதாது. மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப தொகை உயர்த்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1992-93ஆம் ஆண்டில் கறவை மாடு வாங்க 4,500 ரூபாய் வழங்க உத்தரவிட்டார். அதில், 50 சதவீதம் மானியம், 50 சதவீதம் வங்கிக் கடன். இந்த ஏற்பாடும் போதாது எளியோர் வாழ்க்கைத்தரம் உயர என்று நினைத்தார் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். பால் வற்றும் நிலை வரும்போது, ஒரு மாடு மட்டும் வைத்திருப்பது இலாபகரமாக இருந்ததில்லை. எனவே ஒரு கறவை மாட்டுக்குப் பதிலாக இரு கறவை மாடுகள் என்னும் திட்டத்தை முதன்முதலாக, தாயிற்சிறந்த தாயாக விளங்குகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்தார்கள். அதன் விளைவாக 9,000 ரூபாய் மதிப்புள்ள சொத்து ஏழைக் குடும்பங்களுக்குக் கிடைக்க வழி செய்தார்.

ஆண்டொன்று போனால் விலை கொஞ்சம் கூடுவது எந்தச் சந்தையிலும் வழக்கம். கறவை மாட்டு விலைக்கும் இது பொருந்துமல்லவா? கறவை மாட்டின் விலை அதிகரித்துள்ளதையும் பொருளாதார ரீதியாக மேலும் உதவி தேவைப்படுவதையும் உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு முதல் (1995-96 முதல்) ஒரு கறவை மாட்டுக்கு 4,500 ரூபாய்க்குப் பதிலாக 6,000 ரூபாய் என்று 1,500 ரூபாய் உயர்த்தித்தர ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 6,000 ரூபாயில் 3,000 ரூபாய் மானியம். மீதமுள்ள 3,000 ரூபாய் வங்கிக் கடன். எனவே, இரு கறவை மாடுகள் ஓர் உறுப்பினருக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் உருவாக்கப்படுகின்ற சொத்தின் மதிப்பு பன்னிரெண்டாயிரம் ரூபாயாக ஆகிறது என்பது தீஞ்சுவைப் பாலினும் தித்திக்கும் செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான, பால் வற்றிய கறவை மாடுகளைப் பேணிப் பராமரித்து கருவுறச் செய்து மீண்டும் பால் உற்பத்தி செய்யும் நிலையில் அக்கறவை மாடுகளை உரிய விவசாயிகளிடம் திரும்ப ஒப்படைக்கும் புதிய திட்டத்தைச் செயல்படுத்த இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆதிதிராவிட மக்களின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண வரப்பிரசாதமாக அமைந்த இத்திட்டம் இந்த ஆண்டு தென்னாற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

உளுந்தூர்பேட்டை தாலுகா காட்டுநெமிலி கிராமத்தில் 2.70 ஹெக்டேர் நிலத்தை அரசிடமிருந்து இத்திட்டத்திற்காக தென்னாற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் வாங்கியுள்ளது. இந்த நிலத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளின் பால் வற்றிய நிலையில் உள்ள கறவை மாடுகள் பராமரிக்கப்படும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடித் திட்டமான இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

பிற்பகல் 8-05

பால்வளத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பது உண்மை. ஆனால் பால்வளத் துறையில் பயிற்சி பெற்ற இளைஞர்களை நாம் உருவாக்கவில்லை. இந்தப் பால்பண்ணைப் பயிற்சியை நாம் வழங்கவில்லை. இந்தப் பயிற்சியைப் பெற இந்தியாவில் பெங்களூருக்கும், குஜராத்துக்கும் நமது மாணவக் கண்மணிகள் சென்று கொண்டிருக்கிறார்கள். பால்பண்ணைப் பணிகளிலே அதிகம் ஈடுபடுகிறவர்கள் பெண்கள் - நடத்துகிறவர்கள் பெண்கள் - என்னும் தகவலை இந்தச் செய்தியோடு சேர்த்துப் பாருங்கள்; ஓர் உண்மை புரியும்.

தமிழகத்துப் பால்வளப் புரட்சியிலே ஈடுபடுகிறவர்கள் பெண்கள். அதற்கான பயிற்சி பெறவேண்டுமானால் அவர்கள் அடுத்த மாநிலங்களுக்குத்தான் செல்ல வேண்டும் என்கின்ற நிலை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருமையான அறிவிப்புகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவருக்குத் தொந்தரவு செய்கின்ற வகையிலே பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: எனவே, நமக்குத் தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் தேவை; நம்மிடமோ அந்தத் தொழில் நுட்பத்தை வழங்கக் கல்வி நிலையங்கள் இல்லை.

அடுத்த மாநிலத்திலே இந்தக் கல்வி பெற ஆண்களே அவ்வளவு விரும்புவார்களா ? இயலுமா ? என்ற நிலை இருக்கும்போது பெண்களைப் பற்றிப்

பேசவே தேவையில்லை. இந்த உண்மையை முதலில் உணர்ந்தவர் நம் தமிழகத்தில் நமது முதல்வர் மட்டுமே. அதன் விளைவு-இதோ-இன்று நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பால் பண்ணைத் தொழில் நுட்பக் கல்வி (DAIRY TECHNOLOGY COURSE) தமிழகத்திலேயே தொடங்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் உள்ள பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்கப்படும் பாலுக்கு 1988-ஆம் ஆண்டு முதல் கமிஷன் தொகையாக லிட்டர் ஒன்றுக்கு 7 காசுகள் வழங்கப்பட்டு வருகின்றது. எல்லோருக்கும் தாமாகவே முன்வந்து உதவிடும் இதயதெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கமிஷனை உயர்த்தித் தர உத்தரவிட்டிருக்கிறார். அதன் அடிப்படையில் லிட்டர் ஒன்றுக்கு 10 காசாக கமிஷன் தொகை உயர்த்தப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பு தமிழ்ப் புத்தாண்டு தினமான 14-4-1995 முதல் முன் தேதியிட்டு அமல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) இதனால் 'ஆவின்' நிர்வாகத்திற்கு ஆண்டுக்கு ரூ.23.7 இலட்சம் அதிகப்படியாகச் செலவாகும்.

சென்னை மாநகரில் தானியங்கி நிலையங்கள் மூலமாகவும், பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாகவும், பால் விற்பனை செய்யும் முகவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் கமிஷன் தொகை 1992-ஆம் ஆண்டுக்குப் பிறகு உயர்த்தப்படவில்லை என்று அரசிடம் முறையிட்டனர். அவர்களின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்த இதயதெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, 'ஆவின்' நிறுவனத்துக்கும் நுகர்வோருக்கும் இடையே பாலமாக இருந்து வரும் முகவர்களின் கமிஷன் தொகையை உயர்த்தியுள்ளது.

தானியங்கி பால் விற்பனை நிலையங்களின் முகவருக்கு லிட்டர் ஒன்றுக்கு 4 காசாக இருந்ததை 6 காசுகள் எனவும், பிளாஸ்டிக் தொட்டிகள் மூலம் பால் விற்பனை செய்யும் முகவர்களுக்கு 5 காசுகளாக இருந்ததை 7 காசுகள் எனவும் உயர்த்தி இதயதெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்த நாளான 24-2-95 முதல் வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 'ஆவின்' நிர்வாகத்திற்கு ஆண்டுக்கு 22 லட்ச ரூபாய் கூடுதல் செலவாகும்.

முப்பால் அருந்தும் முத்தமிழ் அறிஞருக்கும்
முதற்பாலானது தாய்ப்பால் என்றாலும்,
அப்பால் அவர்கள் விரும்பியது ஆவின்பால். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தப் பால்வளத் துறையில் மாபெரும் சாதனை படைத்தது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலமைந்த தமிழ்நாடு அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பால் கொள்முதல் விலை பக்கத்து மாநிலங்களின் கொள்முதல் விலையைவிடக் குறைவு. இந்த நிலை தொடர்வதால் எல்லையோர மாநிலங்களுக்கு, நமது விவசாயிகள் பால் விற்பனை செய்வதும், அதனால் நம் நகரங்களுக்குப் பால் வரத்து குறைவதும் வழக்கமாகி விட்டது. இந்த நிலை மாறி நம் விவசாயப் பெருமக்கள், முழுவதும் நம் மாநிலத்திலேயே தங்கள் பாலை விற்பனை செய்யும்வண்ணம் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியது உடனடித் தேவையாகிறது.

எனவே பால் உற்பத்தியாளருக்கு லிட்டருக்கு ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுக்க இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் இலட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் பலனடையப் போவது உறுதி.

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. இதுவரை நாம் பார்த்தது கொள்முதல் என்னும் ஒரு பக்கம். விற்பனை என்னும் மறு பக்கமும் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பால் கொள்முதல் விலையில் ஒரு ரூபாய் கூடுவதோடு, பாலைப் பிற இடங்களுக்குக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு, குளிர்பதனப்படுத்தும் செலவு, விற்பனை முனைகளில் நிர்வாகச் செலவு போன்ற செலவுகளையும் சேர்க்க வேண்டியுள்ளது. இதனால் விற்பனை விலையை ஒரு ரூபாய் 50 காசாக உயர்த்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. இது யதார்த்த நிலை. ஆனால், தமிழக மக்களின் நலனே தனது நலன், தனது அரசின் நலன் என்று கருதுகிற நமது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், எக்காரணத்தை முன்னிட்டும் ஓவர்ஹெட் சார்ஜஸ் சுமையை நுகர்வோர் மேல் ஏற்றக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதால், ஒரு ரூபாய் 50 காசு விலையேற்றத்தை ஒரு ரூபாய் விலையேற்றமாக உறுதிப்படுத்தி விற்பனை விலையில் ஒரு ரூபாய் மட்டுமே அதிகரிக்க அனுமதித்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) விற்பனையால் கிடைக்கிற உபரி வருமானத்தைவிட, சேவையே பெரிது என்பது முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையாதலால், விற்பனை விலை ரூ.1.50க்கு பதிலாக ஒரு ரூபாய் மட்டுமே கூடுதலாகிறது.

இந்தக் கூடுதல் விலை எவ்வளவு நியாயமானது என்பதை உணர இரண்டு செய்திகளை நாம் இதயத்தில் கொள்ளவேண்டும்.

நாம் தருகிற இந்தக் கூடுதல் விலை யாருக்குப் போகிறது? தமிழகத்தில் 10,152 கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 24,46,157 உறுப்பினர்களுக்கு இந்தக் கூடுதல் விலை போய்ச் சேருகிறது. இதிலே அடங்குகிற 5,88,353 பெண்களுக்குப்

போய்ச் சேருகிறது. 4,93,193 தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேருகிறது. 11,264 பழங்குடியினருக்குப் போய்ச் சேருகிறது.

யானையின் வாய் சிந்துகின்ற சிறு கவளம் ஆயிரக்கணக்கான எறும்புகளுக்குப் போய் சேருவதைப் போல நுகர்வோர் அளிக்கின்ற இந்த ஒரு ரூபாய் கூடுதல் விலை 24,46,157 ஏழை எளிய விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறது.

சரியாகச் சொன்னால் 24,46,157 விவசாயக் குடும்பங்களுக்குப் போய்ச் சேருகிறது என்பது மறுக்க முடியாத மகத்தான உண்மை (மேசையைத் தட்டும் ஒலி) நாம், நம் இதயத்தில் ஏந்த வேண்டிய இன்னொரு செய்தி-தனியாரிடம் அதிக விலை கொடுத்து நீர் கலந்த பாலை வாங்க வேண்டிய மக்கள், இனி ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுத்தாலும், நல்ல பாலை, தூய பாலை, தேவைக்கு ஏற்பப் பெற முடியும்-காரணம், நாம் கொள்முதல் விலையைக் கூட்டியிருப்பதால் பக்கத்து மாநிலங்களுக்கு நம் மாநிலப் பால் இனிப் பயணம் போகாது. நமது நகரங்களுக்கே இனி வந்து சேரும்.

பிற்பகல் 8-10

ஓர் அரசு, உற்பத்தியாளர் நலனையும் நுகர்வோர் நலனையும் இரு கண்ணாகக் கருத வேண்டும். அப்படிக் கண்ணாகக் கருதுகின்ற அரசுதான் பொன்னான நம் அரசு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு. இந்த பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலை ஏற்றம் நாளை 20-4-95 முதல் அமலுக்கு வரும் (மேசையைத் தட்டும் ஒலி).

இப்படி ஓர் முதல்வரை
இந்தியா கண்டதில்லை!
இப்படி ஓர் வளர்ச்சியைத்
தமிழ்நாடு கொண்டதில்லை!
என்றுலகம் பாராட்ட (மேசையைத் தட்டும் ஒலி)
பொற்காலம் படைத்து வரும்
இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே!
எத்திசையும் புகழ்மணக்க
அற்புதங்கள் நிகழ்த்திவரும்
முத்தமிழ் முதல்வர் அவர்களே!
உங்கள் தலைமை
உலகுக்கே பெருமை!
சிங்கத் தலைவியே!
சிறுநரிக் கூட்டம்
உங்கள் கர்ஜனை கேட்டாலே

TRUTH ALONE TRIUMPHS

கலங்கி வெருண்டோடும்! (மேசையைத் தட்டும் ஒலி)
இலட்சோப லட்சம்
கழகத் தொண்டர்கள்
அன்னை உங்களின்
ஆணைக்காகக் காத்திருக்கிறோம்
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?
எவர் வந்தாலும் எங்கள் தெய்வமே வெல்லும்!

இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் மேலான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்கியுள்ளார்கள். மேலும் வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானங்களுக்குத் தேவையான விளக்கங்களை அளித்துள்ளேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ பாசஞ்சர் வேகம்தான் என்று சொன்னாலும், பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் எக்ஸ்பிரஸ் வேகத்திலே முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். (சிரிப்பு) பாராட்டுக்கள். (குறுக்கீடு) அடுத்தது எக்ஸ்பிரஸாகப் போகிறதா, சாதாரண வண்டியாகப் போகிறதா அல்லது கூட்ஸ் வண்டியாகப் போகிறதா என்று பிறகு பார்ப்போம். (சிரிப்பு) திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாலுக்கான விலையை லிட்டருக்கு ஒரு ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்ததை விவசாயிகளின் சார்பாக வரவேற்பதோடு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சில பால் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு மாதம்வரை பால் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழகத்தில் இல்லாமல் இருந்த இண்டியன் டெய்ரி டெவலப்மெண்ட் கோர்ஸ் என்ற புதிய திட்டத்தை ஆரம்பித்து, அதற்கென

கல்லூரியை தமிழகத்திற்குக் கொடுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதுவரை 26 லட்சம் ஏழை விவசாயக் குடும்பங்கள் வாழ்கின்ற வகையிலே பாலின் விலையை ஒரு ரூபாய் உயர்த்திக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு மேலும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்காக சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பாக இடம் தேர்வு செய்யப்பட்டு இதுவரை எந்தப் பணியும் நடைபெறாமல் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில் அங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எத்தனையோ படிப்புகளோடு, இந்த டெய்ரியிலே மிகச் சிறந்த படிப்பினை உருவாக்கியிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கோர்ஸை எங்களுடைய தஞ்சை மாவட்டத்திலே நிறுவுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே துவங்குவது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. தற்போது 8¼ மணி ஆகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சென்னையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர். பாக்கியெல்லாம் வெளியூரிலிருந்து வந்திருக்கிறவர்கள்.

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு சட்டமன்றக் கூட்டம் இருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதைப் பார்த்தால், நாளை காலை வரையில் எடுத்துக் கொள்வீர்கள் என்பதுபோல் தெரிகிறது. *(சிரிப்பு)*

பிற்பகல் 8.15

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

கொடை, அருள், செங்கோல், தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசு, மற்றைய அரசிற்கு எல்லாம் ஒளியைத் தரக்கூடிய விளக்கு போன்றது என்ற வள்ளுவனின் இலக்கணத்திற்கு இலக்கியமாய், தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட வைத்து, ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறந்து, பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறந்து, சில வேளை அடித்துக் கறக்கிற மாட்டை அடித்துக் கறந்து *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆயர் குலத்தை காத்த யசோதை அன்னையாய், தமிழக மக்களை கண்ணாய், கண்ணின் மணியாய், மணியின் ஒளியாய், ஒளியின் ஒளிப் பிழம்பாய், தாயாய், தந்தையாய், தெய்வமாய், நின்று காத்து, *(மேசையைத் தட்டும் ஒலி)*

வடக்கர் எம்மை ஆளவும், மாளுமோ
அஞ்சும் வழக்கம் திராவிடர்க்கு இல்லை
ஆள்வலி தோள்வலிக்கு, பஞ்சம் இல்லை

எனப் பறைசாற்றி, திராவிட இயக்கத்தின் திருவிளக்காய், மக்கள் நெஞ்சில் பூத்த குறிஞ்சி பூவாய், தமிழகத்தில் ஒலித்த முராரி ராகங்களை பூபாளமாக்கி, ஏழைகளின் நன்னம்பிக்கை முனையாய், அவர்தம் வாழ்வில் வற்றாத ஜீவநதியாய், மண்ணில் இறங்கி வந்த மனித தேவதையாய், திராவிட இனம் காத்து, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, முன்தோன்றிய மூத்த மொழியாம் நம் அன்னை மொழி காக்க, மாநாடு நடத்தி, *(மேசையைத் தட்டும் ஒலி)* துரோகிகள் வீசிய வேல்களை சுள்ளியாய் மாற்றி, அவர்களின் துரோகச் செயல்களை பொடிப் பொடியாக்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* நின்றால் காற்று, நடந்தால் தென்றல், பொங்கிப் புறப்பட்டால் புயலாய், புது வெள்ளமாய், ஆர்ப்பரிக்கும் அலைகடலாய், இம்மண்ணை ஆண்டவரில் தனக்கு ஒப்பாரும் இல்லை, மிக்காரும் இல்லை என நல்லாட்சி *(மேசையைத் தட்டும் ஒலி)* புரிந்து வரும் ஏழைகளின் இதய வாசல் மணிவிளக்காய் திராவிடத்தின் திருவிளக்காய்,

1995 ஏப்ரல் 19] [திரு. இ. மதுசூதனன்]

இந்தியாவிற்கு வழிகாட்ட வந்த அன்னை சந்தியா பெற்றெடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாத மலர் பணிந்து இம்மாமன்றத்தில் என்னுரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையின் மேல் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்கள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு தங்களின் மேலான கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். இவர்கட்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையைப் பற்றி பாராட்டிப் பேசிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். இத்தகைய பாராட்டுகள் எங்கள் துறைக்கு ஓர் புத்துணர்வை ஊட்டும் என்பதில் சந்தேகம் இல்லை. குறைகளைச் சுட்டிக்காட்டி பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் எந்த மூலையில் தவறு நடந்தாலும், அதனை உடனடியாகக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்து, இந்தக் கன்னித் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசுக்கு இத்தகைய குறிப்புகள் பேருதவியாக இருக்கும்.

கால்நடைத் துறை. கால்நடை செல்வத்தின் வளர்ச்சியே வளமுள்ள நாட்டின் அடையாளமாகும். கிராம மக்கள் மட்டுமின்றி, நகர்ப்புற மக்களின் உபதொழிலாகவும், கால்நடை வளர்த்தல் விளங்குகிறது. பால், அதனுடைய உப பொருட்களான தயிர், மோர், வெண்ணெய், நெய் மற்றும் முட்டை, கோழியிறைச்சி, ஆட்டு இறைச்சி போன்ற முக்கிய உணவுப் பொருட்கள் கால்நடைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல் ஆட்சியில் அவர்களின் ஆணையின்படியும், அறிவுரையின்படியும், தமிழகத்தில் கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த, பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதனை இம்மாமன்றம் நன்கு அறியும்.

47,000 தரமான கிடேரிக் கன்றுகளை கால்நடைத் துறை தத்து எடுக்கும் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் கிடரிக் கன்றுகள், கிடேரிக் கன்றுகள் இல்லை.

[1995 ஏப்ரல் 19

பிற்பகல் 8-20

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: இது ஸ்டைல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டில் குழந்தைத் திட்டத்தை உலகிலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்தி, வெற்றி கண்டவர் கருணைக்கடல் நம் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நாடு நன்கு அறியும். ஆனால், சாலையில் வீசப்படும் அனாதைக் குழந்தைகளுக்கு மட்டுமின்றி, திறம்பட வளர வழியில்லாமல், சாலையில் திரியும் வாயற்ற ஜீவன்களையும் வாழ வழிவகுத்துக் கொடுத்துள்ளார் என்பதனை இம்மாமன்றத்தில் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளலாரின் மனமும், ஆடிய மயிலுக்குப் போர்வை தந்த பேகனின் கொடையும், வாயற்ற ஜீவன்களைத் தத்தெடுத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் மனமும், கொடையும், (மேசையைத் தட்டும் ஒலி) பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வரலாற்று உண்மை என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிடேரிக் கன்றுகளைத் தத்தெடுக்கும் திட்டத்தை............ (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய language style என்று சொல்லிவிட்டார்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: கிடேரிக் கன்றுகளைத் தத்தெடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்த அறிவுரை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் 47-வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் நடப்பு ஆண்டில் இத்துறையின் மூலம் 47000 கிடேரிக் கன்றுகள் அனைத்து மாவட்டங்களிலும் தத்து எடுக்கப்படும். இத்திட்டத்தினால், அதிக பால் உற்பத்தித் திறன் கொண்ட கலப்பினப் பசு மற்றும் எருமைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் துணைக் கண்டத்திலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசுதான், கால்நடைகளின் மேல் அக்கறை கொண்டு இத்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது என்பதைப் பெருமையோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடைக்கலமாக வந்த ஒரு புறாவிற்கு அடைக்கலம் தந்த சிபிச் சக்ரவர்த்தியின் புகழ் இன்றும் பேசப்படுகிறது என்றால், ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரமாயிரம் வாயில்லா ஜீவன்களைத் தத்தெடுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ், கார் உள்ள அளவும், கடல்நீர் உள்ள அளவும், பூவுலகில் பேசப்படும். வரலாறு, இதனைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துக்கொண்டு (மேசையைத் தட்டும்

ஒலி) வருங்காலச் சந்ததியினர்க்கு வழிகாட்டும் என்பதனை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையத்தில், வெறிநோய் தடுப்பூசி மருந்தின் உற்பத்தியினை அதிகரிக்கும் திட்டம். கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில், இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பூசி மருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம், கால்நடை மற்றும் கோழி இனங்களைப் பாதுகாக்கத் தேவையான 36 வகை தடுப்பூசி மருந்துகளைத் தயாரித்து, ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபாய் அரசிற்கு வருவாய் ஈட்டித் தருகிறது. வெறிநோய் தடுப்பூசி தற்போது சுமார் 7500 டோஸஸ் அளவிற்குத்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த உற்பத்தி நம் மாநிலத் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. வருமுன் காத்து, மக்களை வாழவைக்கும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க வழிவகை செய்ய, வெறிநோய் தடுப்பூசியின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி ரூபாய் 42.50 இலட்சம் நிதி அளித்து (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்கு 7500 டோஸஸ் உற்பத்தியை, 25,000 டோஸஸ் உற்பத்தியாக உயர்த்த ஆணையிட்டுள்ளார்கள். இதனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இந்தியாவில் மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசியாவிலேயே, சிறந்த நிலையம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமையைப் பெற்றுள்ளது என்பதனை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுவே இவர்களின் ஆற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் திட்டம். இத்துறையில் உள்ள கால்நடை மருந்தகங்கள் மூலமாக கால்நடைகளுக்கு சிகிச்சை, நோய்த்தடுப்பு மற்றும் இனப்பெருக்கப் பணி மேற்கொள்ளப்படுகிறது. பால் உற்பத்தியைப் பெருக்க நாட்டு இனப் பசுக்கள், கலப்பினப் பசுக்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதுபோல் தரம் உயர்த்தப்பட்ட கலப்பின கால்நடைகளுக்கு வரும் நோய்களைத் தடுக்கவும், அவைகளுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கலப்பின மற்றும் தரம் உயர்த்தப்பட்ட மாட்டினங்கள் அதிகம் உள்ள 10 நகரங்களில், தற்போது செயல்படும் கால்நடை மருந்தகங்களை, அதிக வசதிகள் கொண்ட மருத்துவ மனைகளாக உயர்த்தி, சிகிச்சைக்கான மருந்துகள் வாங்கும் நிதியை ரூ.40,000 இல் இருந்து ரூ. 60,000 ஆக உயர்த்தி வழங்கியுள்ளார். கால்நடைகள் தொடர்ந்து சிகிச்சை பெற, உள்நோயாளி இருப்பிட வசதியை மருத்துவமனையிலேயே அமைக்கத் திட்டமிட்டு நடப்பு ஆண்டில் ரூ.2.02 இலட்சம் நிதி ஒதுக்கி, 10 கால்நடை மருந்தகங்களை கால்நடை

மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தி உள்ளார் என்பதனை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால் அனுபவம் மிக்க முதுநிலை கால்நடை மருத்துவர்கள், உதவி இயக்குநர் தகுதியில் பதவி உயர்வு பெற, வாய்ப்பும் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொன்னாட்சியில் மண்மேடெல்லாம் மணிகோபுரமாகும்போது, மருந்தகம் எல்லாம் மருத்துவமனையாவது ஒன்றும் ஆச்சரியமில்லை என்றாலும்கூட, கால்நடைச் செல்வங்களைக் காக்க இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தொலைநோக்குப் பார்வையையும், அவரின் கருணை உள்ளத்தின் அளவையும் இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 8-25

மதுரை கால்நடை மருத்துவமனையை கால்நடை பன்முக மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்.

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் அதிநவீன விஞ்ஞான முறைப்படியும் கால்நடைகள் பராமரிப்பதால், கிராமங்களைப்போல் நகரங்களிலும் உயரிய கால்நடைகள் பெருகி வருகின்றன. எனவே, தமிழகத்தின் முக்கிய நகரங்களில் 24 மணி நேர சிறப்பு மருத்துவமனை துவக்கப்படுவதால், நோய் மற்றும் விபத்துக்களால் பாதிக்கப்படும் கால்நடைகள் அகால நேரத்தில் அனைத்து சிகிச்சை வசதியும் பெற வேண்டி, தாயுள்ளத்தின் தனிப் பெரும் தலைவி, கம்பன் காட்டிய அயோத்தி அரசனைப் போல், 'செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ் உயிரெல்லாம் உறைவதோர் உடலும் ஆயினான்' என்பதைப்போல் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் கால்நடைகளும் நலமாய் வாழ, 100 ஆண்டுகளாக நிறைவேற்றாமல் இருந்த நிலைமையை மாற்றி, தமிழகத்தில் முதன் முதலாக 1993-94-ம் ஆண்டில் சைதாப்பேட்டையில் கால்நடை மருத்துவமனையை அதிநவீன உபகரணங்களான ஈ.சி.ஜி. மற்றும் எக்ஸ்-ரே வசதியுடன் ரூபாய் 7.04 லட்சம் செலவில் கால்நடை பன்முக மருத்துவமனையாக அமைத்துள்ளார்கள். அதேபோல் தமிழகத்தில் 3வது கால்நடை பன்முக மருத்துவமனையை நடப்பு நிதியாண்டில் ரூ. 4.65 லட்சம் நிதி ஒதுக்கி மதுரை மாநகரத்தில் அமைக்க அனுமதியளித்து உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புத் தானே.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் மாவட்டம்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து பாளையங்கோட்டை கால்நடை பெரு மருத்துவமனையில், நவீன அறுவைச் சிகிச்சைக்குக் கட்டிடம் கட்டுதல், மற்றும் எக்ஸ்-ரே கருவி நிறுவும் திட்டம்.

கால்நடைச் செல்வங்களைக் காப்பாற்றுவது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, என்பதை உணர்ந்த இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை எளிய மக்களின் துன்பத்தை எல்லாவிதத்திலும் தீர்க்க, பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நாடு நன்கறியும். சரியான நேரத்தில் சிகிச்சை தராமல் கால்நடைகள் இறந்து போனால், அதன் வருமானத்தை நம்பி வாழும் ஏழை மக்கள் அவதிப்படுவார்கள் என்பதை உணர்ந்த, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகம் முழுவதும் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் அதிநவீன முறையில் சிகிச்சை அளிக்க, இத்துறைக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். இதன்படி நடப்பு நிதியாண்டில், பாளையங்கோட்டை பெருமருத்துவமனையில், நவீன அறுவைச் சிகிச்சைக் கட்டிடம் கட்டவும், எக்ஸ்-ரே கருவி அமைக்கவும், ரூ. 9.00 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளார்கள். இதனால் பாளையங்கோட்டையில் கால்நடைச் செல்வங்களை நம்பி வாழும் ஏழை எளியவர்கள் துன்பம் நீங்கி, மகிழ்ச்சியடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை கால்நடை பன்முக மருத்துவமனையில், சிறிய பிராணிகளுக்காக, நவீன அறுவைச் சிகிச்சை கூடம் அமைக்கும் திட்டம்.

கால்நடை வளர்ப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட கோவை மாவட்ட மக்கள், கோவை மாநகராட்சி எல்லையில் அமைந்துள்ள, கால்நடை பன்முக மருத்துவமனையை, பெரிதும் பயன்படுத்துகின்றனர். செல்லப் பிராணிகள் வளர்க்கின்ற நகர்ப்புற மக்கள், அதிகமாக வரத் துவங்கியதனால், அரசிற்கு வருமானம் கணிசமாகப் பெருகியுள்ளது. மக்களின் தேவைகளை அறிந்து, செயல்படும் அரசை நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், சிறிய பிராணிகளுக்குத் தனியான அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்று அமைக்க ரூ.3.50 லட்சம் நிதி அளித்து உள்ளார்கள். இதுமட்டுமின்றி, கடந்த நிதியாண்டில் கோவை பன்முக மருத்துவமனைக்கு வழங்கிய எக்ஸ்-ரே கருவி அமைக்கத் தேவையான சகல வசதிகள் நிறைந்த கட்டிடம் அமைக்க, நடப்பு நிதியாண்டில் ரூ. 2.50 லட்சம்

வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கால்நடை மருத்துவப் பட்டம் பெற்ற அரசு வேலையில்லா பட்டதாரிகளுக்கு சுய வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்.

கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு, எம்.பி.பி.எஸ். க்கு இணையான தொழில் படிப்பாகும். இப்பட்டத்தைப் பெறுகின்ற மாணவர்கள் பெரும்பாலும் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். இவர்கள் பட்டப் படிப்பை முடித்து, வேலையில்லாமல் இருந்து துன்பப்படுவதைக் கண்டு மனித நேயத்தின் மகத்தான சக்தியாம் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் நிதி நெருக்கடி நிலையிலும் ஏழை பெற்றோரின் கண்ணீரைத் துடைக்கவும், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் வாழ்வு மலர, தமிழகத்தில் ஓர் புரட்சிகரமான வேலை வாய்ப்பு முன்னோடித் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்து உள்ளார்கள். பட்டம் பெற்ற மருத்துவர்கள், சுய வேலைவாய்ப்பு பெற, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கடன் பெறுவதற்குத் தேவையான விளிம்புத் தொகையை வழங்க, ரூ.10 லட்சம் நடப்பு ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு சுயவேலை வாய்ப்பு உருவாகி, அதன் மூலம் மாதம் ரூ. 6,000 வருமானம் கிடைக்கும்; அவர்களின் வாழ்வு மலர வழி காட்டியுள்ளார்கள். ஏழை மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கும் ஒரே அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-30

உலக வங்கி நிதி உதவியுடன் தீவிர கால்நடை அபிவிருத்தி மற்றும் பால் பெருக்கும் திட்டம்.

கால்நடை அபிவிருத்தி என்பது, நாட்டின் பொருளாதாரத் தன்னிறைவாகும். மக்களின் அன்றாட வாழ்க்கையின் தன்னிறைவிற்கும் வழிவகுக்கும் திட்டம் என்பதை நாடு நன்கறியும். கால்நடை இனப் பெருக்கம் திட்டமிட்டபடி நடைபெற்றால்தான், பொருளாதாரத் தன்னிறைவு பெற முடியும் என்பதை, இத்துறை நன்கு அறிந்துள்ளது. தற்போது கால்நடை பராமரிப்புத் துறையில்

தமிழகம் முழுவதும் 3510 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள் உள்ளன. ஆனால் இந்த நிலையங்களில் இருந்து, வெகுதூரத்தில் இருக்கின்ற கிராம மக்கள், செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களுக்கு, தங்கள் கால்நடைகளைக் கொண்டு செல்லமுடியாமல், நாட்டுக் காளைகளை கொண்டு, இனப்பெருக்கம் செய்து வருகின்றனர். இதனால், பால் உற்பத்தித் திறன் குறைகிறது. நவீன விஞ்ஞான கால்நடை பராமரிப்பு முறை, அவர்களிடம் போய்ச் சேரவில்லை என்பதை உணர்ந்த, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தன் அரசு போடும் திட்டம் எதுவானாலும், தமிழகத்தின் மூலைமுடுக்கில் இருக்கும் மக்களும் பயனடையவேண்டும் என்ற தாயுள்ளத்தோடும், தொலைநோக்குத் திட்டத்தோடும், நடமாடும் கால்நடை மருத்துவர்களின் மூலம், தரமான உயரின விந்துக் குச்சிகளைச் சேகரித்தல் மற்றும் விளம்பரத்தின் மூலம் விரிவாக்கப் பணி அலுவலர்களுக்குத் தொழில் நுணுக்கப் பயிற்சி ஆகியவை தேவை என்பதனை உணர்ந்து, செயற்கை முறை இனப்பெருக்கத்திற்கான அடிப்படை உள்ளமைப்புகளை வலுப்படுத்த, உலக வங்கி நிதி உதவி மூலம் ரூ.1072 லட்சம் 1995-96-ல் செலவிட அனுமதி அளித்துள்ளார் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் 1993-94-ல் 35 லட்சம் டன்னாக உள்ள பால் உற்பத்தி கி.பி. 2000-ல் 58 லட்சம் டன்னாக உயர்ந்து, தமிழகத்தின் உயர்வுக்கு வழிவகுக்கும் என்பதனை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாய மனித வள மேம்பாட்டுத் திட்டத்தில், அலுவலர்கட்கு பயிற்சி அளிக்கும் திட்டம்.

மாறிவரும் விஞ்ஞான தொழில் நுணுக்கம், தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும் புகுத்தி, தமிழகத்தை வெற்றி நடைபோட வைத்து, இந்தியத் துணைக் கண்டத்தில், எல்லாத் துறைகளிலும் முன்னோடியாக, தமிழகம் விளங்குவதற்கு, அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடை பராமரிப்புத் துறையிலும், புதுப்புது தொழில் நுணுக்கங்களைப் புகுத்தி செயல்பட, அலுவலர்கட்கு பயிற்சி அளிக்க ரூ.366.29 லட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று ஓசூரில் மாநில பயற்சி மையம் ஒன்றும், சென்னையில் பயிற்சி ஆய்வு குழுமம் ஒன்றும், ஓசூர், ஈச்சங்கோட்டை, அபிஷேகப்பட்டியில் அமைந்துள்ள செயற்கை முறை இனப்பெருக்க பயிற்சி மையங்களை வலுப்படுத்தவும், திட்டம் தீட்டியுள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெண் பன்றி வளர்ப்புத் திட்டம்.

ஓசூர், சைதாப்பேட்டை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் மாமிச ராஜாவான பெரிய வெள்ளை யார்க்ஷையர் இன வெண்பன்றிகள் இத்துறைப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. மலிவான தீவனச் செலவு செய்தாலும், சத்தான இறைச்சியை, அதிக அளவில் தரும் இத்தகைய இன வெண் பன்றிகளை, அதிகமாக வளர்த்து, நலிந்த ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.50 லட்சம் பெற்றுத் தந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

உம்பளாச்சேரி இனக் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

தஞ்சை, நாகை காயிதேமில்லத் மாவட்ட விவசாய மக்களின் உற்ற துணைவனாய், விளங்கி வரும் உம்பளாச்செரி இனக் கால்நடைகள் பாதுகாக்கப்படவும், அவற்றின் இனப்பெருக்கத்திற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்துள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* திரு. ஜி. பழனிசாமி, தட்டுங்கள், உங்கள் மாவட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஊர் பேர்தான், பலருக்கு, தஞ்சாவூர்காரர்களுக்கே தெரியமாட்டேன் என்கிறது. நீங்கள் உச்சரித்த உச்சரிப்பில். *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உம்பளாச்செரி.

பிற்பகல் 8-35

பசு மற்றும் எருமை கருமாற்ற தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அதற்கான ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டம். தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்த, உயரினத்தைச் சேர்ந்த கலப்பினக் கன்றுகளை உற்பத்தி செய்ய தற்போது இத்துறை நவீன விஞ்ஞான தொழில் நுணுக்கத்தின் அடிப்படையில், உயரின காளைகளின் சக்தியை கொண்டு, ஒரு கருவினை உருவாக்குவதற்குப் பதிலாக, 8 முதல் 10 கருக்களை ஒரே நேரத்தில் உருவாக்கி, அதன்பிறகு விஞ்ஞான தொழில் நுணுக்க முறைப்படி வெளியே எடுத்து, நாட்டினப் பசுவின் கருப்பையினுள் செலுத்தி, கன்றினை ஈனச் செய்யும் நவீன விஞ்ஞான கருமாற்ற தொழில்நுட்ப திட்டத்தை நடத்தி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த, இத்துறை அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சிக்கு ரூ.3.75 லட்சம் நிதி ஒதுக்கீடும், ஓசூர் கால்நடைப் பண்ணையில் கருமாற்றம் செய்ய உதவும் ஆய்வுக்கூடத்திற்கு ரூ.45.50 லட்சம் நிதியும் ஒதுக்கீடு பெற்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கோமாரி நோய் தடுப்பூசித் திட்டம். நம் மாநிலத்துக் கன்றுகள் மற்றும் கறவை மாடுகளின் குல எதிரி கோமாரி நோய் ஆகும். இந்த நோய் ஒரு தொற்று நோயாகும். இதனால், பல உயிர் இழப்பு ஏற்படுகிறது. பணம் கொடுத்து இதற்கான தடுப்பூசியை கால்நடைகளுக்குப் போட முடியாத ஏழை விவசாயிகளின் பொருளாதாரம் சீர்கெடுவதை கண்ட ஏழைகளின் இதய தெய்வம், ஏழைகளின் கண்ணில் கண்ணீர்வழிந்தால், தன்னுடைய இதயத்தில் இரத்தம் வழிவதாய் எண்ணும் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.80 லட்சம் அளவில் கோமாரி நோய் தடுப்பூசி மருந்து வாங்கி மானிய விலையில் வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

டானிடா உதவியுடன் கால்நடை வளர்ச்சித் திட்டம். டானிடா உதவியுடன் கால்நடை வளர்ச்சித் திட்டத்தில், ஒவ்வொரு ஊராட்சிகளிலும் உள்ள குறிப்பிட்ட இளம் தம்பதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு கால்நடை பராமரிப்பு, கால்நடைத் தீவன உற்பத்தி, தீவன சேமிப்பு ஆகியவற்றில் தொழில்நுட்ப விரிவாக்க பயிற்சியினை இத்துறை அளித்து வருகிறது. பயிற்சி முடித்தபின் அவர்கள் பக்கத்தில் உள்ள கிராம மக்களை, கால்நடை பராமரிப்பு முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் சென்றிடுவார்கள். இதுவரை இத்திட்டம் புதுக்கோட்டையில் செயல்பட்டது. இத்திட்டத்தின் சிறப்பினையும், பலனையும் அறிந்த மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இத்திட்டத்தை மாநிலத்தின் மற்ற மாவட்டங்களான காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் 2000 தம்பதியினரும், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளும் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கால்நடை பண்ணைகளில் கலப்பினக் கிடேரி வளர்த்து விநியோகிக்கும் திட்டம். உயர்தர கலப்பின கால்நடைகளை செயற்கை முறையின் மூலம் ஈன்று எடுத்தாலும், தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்கள், நன்கு பேணி வளர்க்க முடியாமல் தவிக்கின்றனர். இதனால் இத்திட்டம் பயனளிக்காமல் போவதைப் பார்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவியின் அரசு, ஓர் தொலைநோக்குப் பார்வையுடன் இத்திட்டத்தை புகுத்தியது. தாழ்த்தப்பட்ட, நலிந்த மக்களின் நலன் காக்க, இத்துறையின் பண்ணையில் முதல்கட்டமாக, 1000 கலப்பினக் கிடேரிக் கன்றுகளை பராமரித்து, சினை பிடிக்கும் தருணத்தில் ஆதி திராவிட ஏழை எளிய மக்களுக்கு 50 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது சிறப்பு மத்திய நிதி உதவி திட்டம் என்றாலும், இத்திட்டத்திற்கு சமபங்கு நிதி உதவியது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதனை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம். தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் 100 லட்ச ரூபாய் முதலீட்டில் துவக்கப்பட்டது. அதன்பிறகு, இந்த நிறுவனத்தின் மூலதனம் 200 லட்சமாக உயர்த்தப்பட்டது. இந்த நிறுவனம் பிராய்லர் மற்றும் லேயர் கோழி இனங்களை உற்பத்தி செய்து, முட்டை, உயிர்வாழ் பறவைகள், கோழி மற்றும் கோழி இறைச்சியை விற்பனை செய்துவருகிறது.

கோழித் தீவனம் கலவை யூனிட் சென்னை, மதுரை, கோவை மாவட்டங்களில் இயங்கி வருகிறது. தாது உப்பு கலவை நிலையம் சேலத்தில் இயங்கி வருகிறது. விற்பனைக்கான யூனிட்டுகள் சென்னை, திருச்சி, மதுரை, கோவை, சேலம், நாமக்கல் பகுதிகளில் இயங்கி வருகிறது. உற்பத்திக்கான செலவு அதிகமாகவும், அதேசமயம், தனியார் நிறுவனங்களுடன் சந்தையில் போட்டிபோட முடியாத காரணத்தாலும், மிக அதிகமான அளவில் 389 ஊழியர்களைக் கொண்டு இயங்குவதாலும், படிப்படியாய் நஷ்டம் அடைய துவங்கியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தவும். இலாபத்தை ஈட்டுவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்த உள்ளார்கள். முதற்கட்டமாக அதிக செலவில் இயங்கும் நிறுவனத்தினுடைய செலவினங்களை குறைக்க வேண்டி, தாமாக முன்வந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு நிதியாக நடப்பு நிதியாண்டில் ரூ.10.50 லட்சம் ஒதுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) நஷ்டத்தில் இயங்கும் இந்நிறுவனத்தை காப்பாற்றுவதற்கு வழிவகுத்து உள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-40

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம். சோதனைகளைச் சாதனைகளாக்கி, எதிரிகட்கு தோல்வியையே பரிசளித்து பழக்கப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றித் தேவதையின் மூத்த மகள், நம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இத்துறையின்கீழ் இயங்கி வரும் பல்கலைக் கழகம்

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமாகும். கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய முப்பெரும் பணிகளில் வீறுநடை போட்டுவரும் இந்தப் பல்கலைக் கழகத்தில் உயிர் தொழில் நுட்பவியல் துறை பல நாடுகள் போற்றும் வண்ணம் சாதனை புரிந்துள்ளது. இந்தியாவிலேயே, விவசாயப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் நடத்தும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் இந்த பட்ட மேற்படிப்பைப் பெற்றது நம் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி புரியும் தமிழகம் மட்டும்தான் என்பதனைப் பெருமையுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவிகள் விடுதி கட்ட, ரூ.10.00 இலட்சம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த ஆண்டு 36 மாணவிகள் தங்கும் விடுதியை முழுமையாகக் கட்டி முடிக்கவும் ரூ.18 இலட்சம் வழங்கியுள்ளார்கள்.

ஆராய்ச்சி என்பது பல்கலைக் கழகங்களின் தனிச் சொத்து. ஆராய்ச்சிகள் பெருக வேண்டும் என்றால், அதனால் பயனுள்ள முடிவுகள் தேசத்திற்குக் கிடைக்க வேண்டும் என்றால் பொருளாதாரத் தட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது. அறிவியல் தமிழ் கண்ட நம் அன்னை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அறிவியல் ஆராய்ச்சி வளர்ச்சிக்கு அள்ளித் தந்ததினால் இப்பல்கலைக் கழக ஆராய்ச்சி நிறுவனம் பல்வேறு பயனுள்ள உண்மைகளைக் கண்டறிந்து, தேசத்தின் வளர்ச்சிக்குப் பாதை போட்டுள்ளது.

இதனால்தான் ஆசிய, பசிபிக் நாடுகளின் கூட்டமைப்பான 'ஆப்கா' எனப்படும் சர்வதேசக் கூட்டமைப்பு நம் பல்கலைக் கழகத்தின் திறனை மனதில்கொண்டு, அண்டை நாடான பாகிஸ்தான் வேண்டிக் கேட்டுக்கொண்டதையும் நிராகரித்து, சர்வதேச கோழி நோய் கருத்தரங்கை நடத்தும் வாய்ப்பை பாகிஸ்தான் பிரதமர் பெனாசிருக்கு வழங்காமல், இந்தியத் துணைக் கண்டத்தின் விடிவெள்ளி, நம் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆளும் தமிழகத்திற்கு அந்த வாய்ப்பைத் தந்தது என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிகளினால் அதிக லாபம் தரும் காட்டுப்பாக்கம் வெண் பன்றி இனம், காட்டுப்பாக்கம் சிகப்பு என்னும் புதிய ஆட்டினம் வெளியிடப்பட்டுள்ளது. நாய்களின் வெறி நோயைக் கண்டறிய ஒரு நோய் காண் சாதனம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இ. மதுசூதனன்] [1995 ஏப்ரல் 19

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வழிகாட்டுதலில் சீரும் சிறப்புமாக இயங்கும் இப்பல்கலைக் கழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், வழி காட்டியாகவும் இருந்து வருகிறது. மேற்கு வங்காள அரசு தன் மாநிலத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்தும் தமிழகத்தின் இப்பல்கலைக் கழகத்திற்கு தங்களின் உயர் அதிகாரிகளை அனுப்பியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நிதி நிலைமைக்கு ஏற்றவாறு சூழ்நிலைகளை அறிந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் நாமக்கல்லில் ஆம்புலன்ஸ் வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடன் உதவி பெற்று, அங்கே ஆம்புலன்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் புருசோத்தமன் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிற சுமார் 600 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கேட்டுள்ளார்கள். நிதிநிலைக்கேற்ப அது குறித்து பரிசீலிக்கப்படும்.

பிற்பகல் 8-45

கால்நடை ஆய்வாளர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுப்பது பற்றி இந்த அரசு பரிசீலித்து வருகிறது. அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் நா. சா. பழனிசாமி அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை பற்றிக் குறிப்பிட்டார்கள். 1982-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் இருந்தபோது, ராஜபாளையம், கோம்பை வகை நாய்களை வளர்ப்பது குறித்து அறிவித்து, அதன்படி இப்போது சைதாப்பேட்டையில் அந்த வகைகள் வளர்க்கப்படுகின்றன. அவைகள் இப்போது குறைந்தவிலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வந்தபிறகு டாபர்மேன், லேபர் வகை நாய் வகைகளை வளர்ப்பதற்காக கட்டளையிட்டு அதன்படி வளர்க்கப்படுகின்றன. குறைந்த விலையில் அவை விநியோகம் செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத் திட்டங்கள் பற்றி சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். டாக்டர் புரட்சித் தலைவி மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் அதிக லாபம்

பெறும் வகையில் ஏழை எளிய மக்கள் மகிழ்ச்சியடையவும், குறிப்பாக பெண்கள் இத்திட்டத்தினால் அவர்கள் துன்பம் நீங்கி பொருளாதாரத் தன்னிறைவு பெறவும் மகளிர் நலன் காக்கும் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) 47-வது பிறந்த நாளை மனதில் கொண்டு இத்துறை 47 மகளிர் கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்க இருக்கிறது. இத்திட்டத்தில் ஆடு, கோழி, முயல் போன்றவைகள் வளர்க்கப்படும். டாக்டர் புரட்சித் தலைவி மகளிர் கால்நடை கூட்டுறவுச் சங்கம் துவக்குவதை இத்துறை பெரும் பேறாக நினைக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பன்முக மருத்துவமனையில் சிறு பிராணிகள் தங்கும் வசதி. நகரங்களில் வாழும் மக்கள் செல்லப் பிராணிகளை அதிகமாக வளர்த்து வருகிறார்கள். குடும்பத்தோடு வீட்டை விட்டு வெளியூர்களுக்கு அவர்கள் செல்லும் காலத்தில் தங்களின் செல்லப் பிராணிகளைத் தனியே விட்டுச் செல்லமுடியாமல் தவிக்கின்றனர். அவர்களின் வாட்டத்தைப் போக்கவும் குடும்பத்ினரை விட்டு தனியாக வாடும் செல்லப் பிராணிகளை நன்றாகப் பாதுக்காக்கவும் இத் துறையின் சார்பில் அவைகளுக்கு தங்கும் வசதி செய்யப்படுகிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு முதல் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆலோசனையின் பேரில் பன்முக மருத்துவமனைகள் கோவை மற்றும் சென்னையில் சிறு பிராணிகள் தங்குவதற்காக வசதி செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் பட்டம் மற்றும் பட்டய மேற்படிப்பு வகுப்புகள் துவங்கப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சியால் தமிழகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் இந்திய அரசு மற்றும் அமெரிக்க அரசின் உதவியுடன் வனவிலங்குகள் மேன்மைப் பட்டயப் படிப்பும் துவங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, பல்கலைக் கழகத்தில் கால்நடை மருந்தியல் மற்றும் பல்பொருள் உற்பத்தி பட்டயப் படிப்பு என்ற படிப்பும் துவங்க இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் நான் ஆற்றிய உரையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேவையான விளக்கங்கள் கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன். பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 8-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், போதும். அமைச்சர் அவர்கள் இவ்வளவு அழுத்தந்திருத்தமாக வார்த்தைகளைச் சொன்ன பிறகுமா, உங்களுக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) போதும், இப்போது மணி 8.50 ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. எஸ். அன்பழகன், ஒருவர் மட்டும்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியான நாமக்கல் கல்லூரிக்கு ஆம்புலன்ஸ் வண்டி கொடுத்ததற்காக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாமக்கல் பகுதியில் கோழிப் பண்ணைகள் அதிகமாக உள்ளதால் கப்பலூரில் இருப்பதைப் போல நாமக்கல் பகுதியில் ஒரு கோழிக் குஞ்சு பொரிப்பகம் நிறுவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு தற்போது இருக்கிற நிதி நிலைமைகளை அலசி ஆராய்ந்து, சாத்தியக்கூறுகள் இருக்குமானால் ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருடைய கோரிக்கைகளையும் அவர் ரொம்பவும் அலசி ஆராய்வார், ஒன்றும் பயப்பட வேண்டாம். (சிரிப்பு) விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை.

வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.753,48,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.11,37,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10- ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.6,44,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஈ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22- ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.95,31,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-4-1995) காலை 10.00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

103. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 16-8-1994-ஆம் நாளிட்ட 139-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

104. 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி (இடவசதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 14-7-1994-ஆம் நாளிட்ட 564-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22- ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.95,31,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-4-1995) காலை 10.00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

103. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 16-8-1994-ஆம் நாளிட்ட 139-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

104. 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி (இடவசதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 14-7-1994-ஆம் நாளிட்ட 564-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1995 ஏப்ரல் 19

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

107. மானியக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

108. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

109. மானியக் கோரிக்கை எண் 10 - பால் வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம், 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

110. மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

111. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

112. மனுக்கள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை, 1994-95.

113. மனுக்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை, 1994-95.

114. மனுக்கள் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1994-95.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(89 -ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

அத்தியாயம் 1

முன்னுரை

இந்திய விவசாயி கடனிலே பிறக்கிறான்;
கடனிலேயே வாழ்கிறான்;
கடனிலேயே சாகிறான் என்ற நிலைக்கு
தமிழ்நாட்டில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

—டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

முதன்மை இடத்தை வகிக்கும் வேளாண்மை மாநில பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றி வருகிறது. போதுமான அளவு ஊட்டச்சத்து உணவு உற்பத்தி, இயற்கை ஆதார வளங்களை சுற்றுப்புற சூழ்நிலைக்கு மாசு ஏற்படாத வகையில் பாதுகாத்து இலாபம் ஈட்டக்கூடிய வகையில் வேளாண்மையில் தொடர்ந்து வளம் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இயற்கை வளங்களுக்கு தீங்கு ஏற்படாவண்ணம் பாதுகாத்தல், நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை திறம்பட நிர்வகித்தல், சிக்கனமானதும், சுற்றுப்புற சூழ்நிலைக்கு மாசு ஏற்படாத சிறந்த பண்ணை தொழில் நுட்பங்களை பின்பற்றி வேளாண்மையில் தொடர்ந்து வளர்ச்சி அடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வளர்ந்துவரும் மக்கட் தொகையின் தேவைக்கேற்ப உணவு உற்பத்தியினை அதிகரிக்க வேண்டியுள்ளது. பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியும் அதற்கான தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றும் வகையில் பரவலாக்குவதன் மூலம் பல்வேறு பயிர்களின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தி அதிகரித்து இலாபம் அடைவதற்கு வழிவகுப்பதுடன் சுற்றுப்புறச் சூழல் பாதுகாத்தல், பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கிட வேளாண்மைத்துறை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு, நீர் ஆதாரங்கள் மேலாண்மை, சிக்கன நீர்ப்பாசனம், இயற்கை முறை விவசாயத்தில் குறிப்பாக பசுந்தாளுர உபயோகம், உயிரின உரம், வேளாண் கழிவுகளை உயிரியல் மாற்றம் செய்தல், உயிரியல் கொல்லிகள்

[1995 ஏப்ரல் 19

மற்றும் பயிர் உண்ணிகள், ஒருங்கிணைந்த தீவிர பாசன முறை விவசாயம், பண்ணை மகளிரின் திறமைகளை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, வேளாண் விளை பொருள்களுக்கு உரிய விலை, அறுவடைக்குப்பிந்திய தொழில் நுட்பங்கள், பல முனை விரிவாக்கம், ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவை இத்துறையின் சில முக்கிய நடவடிக்கைகளாகும். வேளாண் பெருமக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார நிலை உயர்ந்திடவும், பண்ணை நடவடிக்கைகளில் சுற்றுப்புற சூழ்நிலைக்கு மாசு ஏற்படாத வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. இவ்வகையான கோட்பாடுகளுக்கு இணங்க பல முனை விரிவாக்கம். ஒருங்கிணைந்த நிலையான அபிவிருத்திக்கான சிறப்பு முயற்சி, வேளாண் தட்ப வெட்ப மண்டலத்திற்கான அணுகுமுறை மற்றும் சிறு விவசாயிகளின் வேளாண் வர்த்தகக் குழுமம் ஆகியவற்றிற்கான முயற்சிகளை எடுப்பதுடன் அதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. நிலையான மேலாண்மை, இயற்கை ஆதாரங்களை பயன்படுத்துதல், பயன்பெறும் குழுக்கள்/சுய உதவி குழுக்களில் மக்களின் பங்கேற்பு ஆகியவை மேற்குறிப்பிட்ட திட்டங்களின் அம்சமாகும்.

3. மேலும், முன்னோடி தொழில் நுட்பங்களான திறமையான நீர் நிர்வாகம், இயற்கை பண்ணைமுறை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு, மகளிர் மற்றும் சமூகத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

4. மானாவாரி நிலங்களின் மூலம் இரண்டாவது பசுமைப்புரட்சி தோன்றிட ஓர் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனையை அடைந்திட நீர்பிடிப்புப் பகுதிகள் மேம்படுத்துதலை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மைய நீர்ப்பிடிப்புத் திட்டம், மானாவாரி பகுதி நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் மாநிலத்தின் இதர பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி இவ்விலக்கினை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. 1991-ஆம் ஆண்டு முதல் வேளாண் அபிவிருத்தி மற்றும் உத்திகளில் பொதுவான மாற்றத்தினால் தமிழ்நாடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் இதுவரை கண்டிராத ஒரு சாதனை அடையப்பட்டுள்ளது. இருப்பினும் இம்முயற்சிகள் அனைத்தும் களப்பணியாளர்கள் மற்றும்

1995 ஏப்ரல் 19]

விவசாயிகளுக்கு சென்றடையாவிட்டால் வீணாகிவிடும். விவசாயிகளுக்கும் மற்றும் களப்பணியாளர்களுக்கும் விற்பனை அமைப்பில் பயிற்சி அளிப்பதன் மூலம் மேற்கண்ட குறிக்கோள்கள் அடையப்பெறும். பிந்திய அறுவடை உத்திகள் மற்றும் சேமித்தல் போன்றவற்றிலும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு நிலையிலுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சியளிக்கப்படுகிறது.

6. வேளாண்மையைச் சார்ந்த தொழில் நுட்பங்களில் உள்ள முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு உணவு பதப்படுத்துதலை தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகம் பங்கேற்பதன் மூலம் ஊக்கம் பெற்றுள்ளது. அரசு ஏற்றுமதிக் கண்ணோட்டத்துடன், மலர் ஏற்றுமதி, பழம், காய்கறிகள் பதப்படுத்துதல் மற்றும் காளான் உற்பத்தி ஆகியவற்றுக்கான பிரத்யேக மையங்கள் ஊக்குவிக்கப்படுகின்றது.

7. மாநிலத்தில் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவைகளை திருத்தி அமைப்பதற்கான சீரிய முயற்சிகள் மேற்கொள்ளுவதன்மூலம் புதிய வேளாண் அணுகுமுறைகளுக்கான குறிக்கோள்கள் அடையப்பெறும். மாநிலத்திற்குள்ளும் வெளியிலும் அங்காடித் தேவைகளை கருத்தில் கொண்டு செயல் முறைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. நியாயமான மற்றும் எதிர்படும் சவால்களைச் சந்திக்கத் தேவையான முன் நடவடிக்கைகளான புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகளுக்கான செயல்முறை ஆராய்ச்சி மற்றும் களப்பணி விரிவாக்கம் ஆகியவற்றிற்கு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

8. வேளாண் தட்ப வெட்ப மண்டலத் திட்டம் :

உற்பத்தியில் சீரான வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பை வேளாண்மை மூலம் அடைய குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு மையத் திட்டக் குழுவுடன் இணைந்து வேளாண் தட்ப வெட்ப மண்டலத்திற்கான திட்டமிடுதலை துவக்கி உள்ளது. இனி வருங்காலங்களில் வேளாண் அபிவிருத்தித் திட்டங்கள் மண்டல அபிவிருத்தி அணுகுமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு நடப்பு திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதனால் ஆதார வளங்களை அடிப்படையாகக் கொண்டும் இதர சார்புப் துறைகளோடு இணைந்தும் செயல்படுவதினால் வேளாண்மை கண்ணோட்டத்தில் ஒருங்கிணைந்த பிரதிபலிப்பை ஏற்படுத்தும்.

[1995 ஏப்ரல் 19

இந்தியநாடு 15 வேளாண்மை தட்ப வெட்ப மண்டலங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள மூன்று மண்டலங்களும் இதில் அடங்கும். தமிழ்நாடு ஏழு தட்ப வெட்ப பகுதிகளாக புதிய உத்திகள் மற்றும் மேம்பாட்டிற்காக பிரிக்கப்பட்டுள்ளது. பகுதிகளின் அமைப்பை மேம்படுத்தப்பட்ட பிறகு பின்வரும் உத்திகள் நமது மாநிலத்திற்கு என உருவாக்கப்பட்டுள்ளது.

(1) பயிர் சாகுபடி முறையினை மேம்படுத்துதல் : பயிர்கள், தோட்டக் கலைப் பயிர்கள், விதை வழங்குதல் மற்றும் விரிவாக்கப் பணிகள் (2) நிலவளத்தை மேம்படுத்துதல் : நில மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, தரிசு நில மேம்பாடு, (3) நீர்வள மேம்பாடு : ஏரி மற்றும் கிணற்றுப் பாசனம், (4) கால்நடை அபிவிருத்தி மேம்பாடு : கால்நடை மற்றும் கோழியின் அபிவிருத்தி துவக்குதல் மற்றும் (5) மீன் வள மேம்பாடு: கடற்கரைப் பகுதி, உப்பங்கழிப் பகுதி. இதன் அடுத்த கட்டமாக இந்த அணுகுமுறை மீண்டும் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு திருச்சியில் உப கோட்டங்களாக பிரிக்கப்பட்டு மேம்பாட்டு உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒரு முன்னோடித் திட்டமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணிகண்டம் வட்டாரத்தில் களர், உவர் நிலச்சீர்திருத்தம் ரூ. 2.03 கோடி செலவில் 3 ஆண்டுகளுக்கு, 1800 எக்டரில் துவக்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டத்துடன் இணைந்த நிறுவன அமைப்புகளின் செயல்பாட்டினால் மாவட்டம் தன்னிறைவை அடைவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. இந்த அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்து நிலம் மற்றும் நீரின் உபயோகத்தை பெருமளவு பயன்படுத்தி மாவட்டங்களின் முன்னுரிமைக்கேற்ப ஆண்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படும். இதில் பயன்பெறுவோரையும் சேர்ப்பது உறுதி செய்யப்படும். இதை அடைவதற்கு, நான்கு கட்டங்களான திட்டம் ஒன்று ரூ. 20 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக மாநில அலுவலர்களுக்கு வேளாண் தட்ப வெட்ப ஆராய்ச்சி மண்டல திட்டமிடுதலின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் அறிந்து கொள்ளும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப்பணி பிப்ரவரி திங்கள் 1995-ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் திருச்சிராப்பள்ளியில் துவக்கப்பட்டது. இத்திட்டம் இராமநாதபுரத்தில் 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் துவக்கப்படும்.

1995 ஏப்ரல் 19]

9. தமிழ்நாடு வேளாண்மைக் கொள்கை :

இவ்வரசு வேளாண்மை மேம்பாட்டிற்காக புதிய கொள்கைகளை உருவாக்கி அதனை செயல்படுத்துவதற்காக செயல்திட்டம் தீட்டியுள்ளது. வேளாண்மைக் கொள்கையை உருவாக்குவதற்காக "மகராசி வேளாண்மை 2000" என்ற மாநாடு திருச்சியில் 3 நாட்கள் அதாவது 1995-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27, 28 மற்றும் 29 தேதிகளில் விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் திட்டம் தீட்டியவர்களின் கருத்துக்களை பெற வேண்டும் என்ற முக்கிய நோக்கோடு நடத்தப்பட்டது. இது தவிர, பல்வேறு வேளாண்மை வல்லுநர்கள் ஒரு சில முக்கியமான வேளாண்மை பரிந்துரைகளைக் கோடிட்டுக் காட்டினார்கள். மகராசி வேளாண்மை 2000 மாநாட்டில் ஒன்பது கொள்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவைகளாவன :

1. நீடித்த நிலையான வேளாண்மை.
2. சீர்மிகு நீர் மேலாண்மை.
3. பயிர்த் தொழிலுடன் பலன் தரும் பக்கத் தொழில்கள்.
4. உற்பத்திச் செலவுக்கு உரிய, நெறிய விலை.
5. வெற்றிதரும் வளர்ச்சிக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு.
6. ஆக்கம் தரும் வேளாண்மையில் அறிவியல் பொறிகளின் பணி.
7. வேளாண்மை விளை பொருட்களுக்கு வெளி நாடுகளில் அங்காடி.
8. காய்கறி விளைச்சலில் கணிசமான பெருக்கம்.
9. விதை உரிமைகளும் வேண்டிய பல்லுயிர் பெருக்கமும்.

இம்மாநில மாநாட்டில் முன்னிலை நிர்வாகிகள், வல்லுனர்கள், வேளாண்துறை அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள், விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பல்வகைத் திட்டங்களை விவாதித்தனர். விரிவாக்கம், பொருளாதாரம், ஆராய்ச்சி, நிலம், நீர், இடுபொருள்கள், கடன் வசதி, பயிற்சி, மகளிர் மேம்பாடு மற்றும் ஏற்றுமதி குறித்து விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் வேளாண்மையைச் சீரமைக்கும் வகையில் விவசாயிகள்/அரசு சாரா நிறுவனங்கள்/ தன்னார்வு நிறுவனங்கள் பங்கேற்பு வேளாண்மையை ஒரு தொழில் துறையாக அறிவிப்பது, தொழில் நுட்பங்களை விரைவில் பரவலாக்குதல், பயிர் மற்றும் கால்நடைகளுக்கு காப்புத் திட்டமும், விளை பொருட்களுக்கு உரிய நெறிய விலையும், திசு வளர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நில கூட்டமைப்பு, இருக்கும் பாசன வளங்களை திறம்பட

[1995 ஏப்ரல் 19

பயன்படுத்துதலும், மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள், கடன் வசதியை எளிதில் பெறவும், விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிருக்கு தொழில் நுட்ப பயிற்சியும் மற்றும் உணவுப் பதப்படுத்தலும் மேற்கொள்ளப்படும். இம்மாநாட்டின் பல்வேறு பரிந்துரைகள் கணிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கான வேளாண்மை கொள்கைத் திட்டம் உருவாக்கப்பட உள்ளது.

10. வேளாண்மை செயலாக்கத்தில் வியத்தகு வளர்ச்சி :

தொடர்ந்து நான்காண்டுகளாக தமிழ்நாட்டில் வேளாண்மை வியக்கத்தக்க அளவில் முன் நிலையில் இருந்து வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் என்றுமே அடைந்திராத உயர் அளவான 105 இலட்சம் மெட்ரிக் டன்னை அடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி உற்பத்தி மட்டும் இதுவரை அடைந்திடாத அளவான 85 இலட்சம் மெட்ரிக் டன்னை அடையும். கரும்பு உற்பத்தியிலும் புதிய சாதனை அடையும். 1991-92-ஆம் ஆண்டில் எக்டருக்கு 1205 கிலோவாக இருந்த சிறுதானிய உற்பத்தி 1993-94-ஆம் ஆண்டில் 1314 கிலோவுக்கு உயர்ந்துள்ளது. பயறு தேவையினை உற்பத்தி மூலம் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் முன்னுரிமை அளித்து பயறு வகைக் கொள்கை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கரும்பின் பரப்பளவு உயர்ந்து அகில இந்திய அளவில் கரும்பு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. எண்ணெய்வித்து உற்பத்தித் திறனிலும் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. (எக்டருக்கு 1378 கிலோ) எண்ணெய்ப் பனை அறிமுகமும் சூரியகாந்தி மற்றும் சோயா மொச்சை சாகுபடி பரப்பு மாநில அளவில் அதிகப்படுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. பருத்தியில் இயல்பான உற்பத்தி பராமரிக்கப்படுகிறது.

11. இடுபொருள் வினியோகத்தில் தமிழ்நாட்டில் உர உபயோகம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது. நமது நாட்டில் எக்டர் உர உபயோகத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்திலுள்ள மண் வளங்களின் ஊட்டச்சத்தை சரிவர பராமரிப்பதற்கு சமச்சீர் உரச்சத்துக்களை பயன்படுத்தியது பெருஞ்சாதனையாகும். இயற்கை பண்ணை முறையை மேற்கொண்டு சுற்றுச்சூழலை மேம்படுத்துதலில் தமிழ்நாடு ஒரு சிறந்த இடத்தை வகிக்கிறது. நிலையான வேளாண்மை மேம்பாட்டிற்கு உயிரின உரங்கள், இயற்கை எரு, வேளாண் கழிவுகளை உயிரியல் மாற்றம் செய்தல், பசுந்தாள் உர உபயோகம் மற்றும் ஊட்டமேற்றிய தொழு உரம் ஆகியவை மூலம் இடுபொருட்கள் திறம்பட

1995 ஏப்ரல் 19]

பயன்படுத்தப்படுகிறது. இதனால் உரமிடுதலை சிக்கனப்படுத்துவதை உறுதி செய்வதுடன் நீடித்த நிலையான வேளாண்மைக்கு வழி வகுக்கிறது. உயிரின உர உற்பத்தி மேம்படுத்தப்படுவதோடல்லாமல் அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுகிறது. வேளாண் உற்பத்தியில் உயர் அளவினை நிலைநிறுத்தும் வகையில் தமிழ்நாடு 1200 மெ.டன்கள் உயிரின உரங்கள் விநியோகம் செய்த வகையில் முதல் நிலை வகிக்கிறது. பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் அரசின் முக்கிய கொள்கையான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் உள்ள பயன்கள் மற்றும் பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சி ஆகியவை குறித்து விவசாயிகளிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நெல், பருத்தி, கரும்பு சாகுபடி முறைகளில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையினை வலுப்படுத்த ஊக்குவிக்கப்படுவதால் பூச்சி மருந்துகளின் உபயோக அளவு குறைந்துள்ளது. மாநிலத்தில் பூச்சி மற்றும் நோய்களின் தீவிர தாக்குதல் இல்லை. இயற்கை பூச்சிக் கொல்லி, தாவர பூச்சிக் கொல்லி ஆகியவற்றின் உபயோகங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. வேளாண்மையை இயந்திர மயமாக்கும் முயற்சியில் 975 டிராக்டர்கள்; 3468 பவர் டில்லர்கள்; 67026 விசைத் தெளிப்பான்கள்; 4579 டயர் மாட்டுவண்டிகள்; அதிக அளவில் சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாசனக் கருவிகள் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பண்ணை நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் வழிவகுக்கிறது. நீர்ப்பிடிப்புப் பகுதி திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம்; தேசிய நீர்ப்பிடிப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் மாநிலத்தில் தொடர்ந்து செயல்படும். அயல்நாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள் வேளாண்மையில் முதலீடு செய்ய நிதி உதவி வழங்கி வருகிறது. உலக வங்கி உதவி மூலம் வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டம் 1995-96-ஆம் ஆண்டு முதல் ரூ. 94.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்பட ஆரம்பிக்க உள்ளது. இதில் 1995-96-ஆம் ஆண்டிற்கு மட்டும் ரூ. 10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு வேளாண் அபிவிருத்தித் திட்டம் ரூ. 410 கோடிக்கு மாற்றம் செய்யப்பட்டு 1995-96-க்கு ரூ. 73.43 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. டானிடா உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் 2-வது கட்டத்தில், 18 மாவட்டங்களில் இருந்து 21 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு வேளாண் உற்பத்தியினை அதிகரிக்க நடப்பு ஆண்டில் 11000 பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்க

திட்டமிட்டுள்ளது. (1) திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வ.உ.சி. மாவட்டங்கள் (2) இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் ஒட்டுமொத்த நீர்ப்பிடிப்புத் திட்டம் இருபிரிவாக 1995-ஆம் ஆண்டு முழுமையாக செயல்பட உள்ளது. பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின் கீழ் ரூ. 46.74 கோடி செலவில் கம்பம் பகுதி, அமராவதி, கோதையார் - சிற்றாறு பட்டணம் கால் பகுதிகளில் இத்திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. விவசாயிகள் வேளாண் சமுதாய வாய்ப்பு வளங்களை நல்ல முறையில் பேணிப் பராமரிக்க அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இக்கருத்தின்படி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்ட விவசாயிகள், ஆற்றுப்பகுதி திட்டம் மற்றும் நீர்ப்பிடிப்பு திட்ட விவசாயிகள், தண்ணீர் உபயோகிப்போர் சங்கம் ஆகியோருக்கு உரிய நேரத்தில் நீர் கிடைக்கவும், நீர் ஆதாரங்களில் இருந்து தேவையான நீரைப் பெறவும் அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

12. மாநில அரசு, விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவினை குறைத்து, விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைக்கத்தக்க வகையில் விவசாய உத்திகளை கையாள உரிய அணுகுமுறைகளை உருவாக்கியுள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான நல்லிணக்க விலைக் கொள்கை, விற்பனைக் கட்டுப்பாட்டினை நீக்குதல், விவசாயிகள் நலனில் அதிக கவனம் செலுத்துதல், விளை பொருட்களை நல்ல முறையில் விற்பனை செய்தல் போன்றவைகள் மூலமாக வேளாண்மையில் முன்னேற்றம் கண்டிட செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தரமான வேளாண் இடுபொருட்களை வழங்குதல், கிராமப்புற கடன் வசதிகள், வேளாண் விரிவாக்கம் மூலம் நவீன தொழில் நுட்பங்களை பரவலாக்குதல், வேளாண்மையைச் சார்ந்த தொழில்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் ரூ. 764.88 கோடி செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

13. கோரிக்கை எண் 20 மற்றும் 52-ன் கீழ் வேளாண்மைக்காக பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப் பிரேரிக்கப்பட்டுள்ளது. பகுதி-2 பிரேரணைகள் சுருக்கமாக பின்வரும் அட்டவணைக்கு பிறகு கொடுக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 1.1

வேளாண்மைக்கு திட்ட ஒதுக்கீடு

சேர்க்கை - எண் 20 (ரூ. ஆயிரத்தில்.)

	கணக்குத் தலைப்பு	1994-95 திட்ட மதிப்பீடு	1994-95 திருந்திய மதிப்பீடு	1995-96 திட்ட மதிப்பீடு
2401.	பயிர் பராமரிப்பு	5,37,97,90	5,84,97,40	6,03,79,08
2402.	மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு	31,54,55	31,94,69	33,11,37
2415.	வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி	27,20,39	26,31,60	30,58,00
2435.	இதர வேளாண் திட்டங்கள்	13,99,91	14,81,36	15,51,08
2501.	ஊரக வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம்	9,85,50	10,95,00	20,58,50
2551.	மலைப் பகுதி	9,32,91	9,26,07	10,38,88
2702.	சிறு பாசனம்	8,26,23	11,53,66	11,89,81
2705.	பாசனப் பகுதி மேன்மை திட்டம்	18,02,48	17,30,83	18,10,16
3054.	பாதைகள் மற்றும் பாலங்கள்	9,20,00	9,45,73	9,11,25
2059.	பொதுப்பணிகள்	41,92	41,92	42,79
3435.	சுற்றுப்புறமும் சூழ்நிலையும்	1	1	1
	துணை மொத்தம்	**6,65,81,80**	**7,16,98,27**	**7,53,50,93**

சேர்க்கை - எண் 52 (ரூ. ஆயிரத்தில்.)

	கணக்குத் தலைப்பு	1994-95 திட்ட மதிப்பீடு	1994-95 திருந்திய மதிப்பீடு	1995-96 திட்ட மதிப்பீடு
4401.	பயிர் பராமரிப்பில் முதலீட்டுத் தொகை	6,55,67	6,81,45	5,90,74
4402.	மண் மற்றும் நீர்வள பாதுகாப்பில் முதலீட்டுத் தொகை	3	3	15,03
4415.	வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வியில் முதலீட்டுத் தொகை	25,01	25,00	14,02
4435.	இதர வேளாண் திட்டங்களில் முதலீட்டுத் தொகை	2	2	2
4551.	மலைப் பகுதியில் முதலீட்டுத் தொகை	2	2	2
5054.	பாதைகள் மற்றும் பாலங்களில் முதலீட்டுத் தொகை	7,00,00	5,43,00	5,18,00
	துணை மொத்தம்	**13,80,75**	**13,49,52**	**11,37,83**
	மொத்தம் ..	**6,79,62,55**	**7,30,47,79**	**7,64,88,76**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

1995 96-ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள்

வேளாண்மை.

1995-96-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்)

(1) வேளாண்மை விரிவாக்க மையங்களை செம்மைப்படுத்துதல். 20.00

200 வேளாண்மை விரிவாக்க மையங்களின் கட்டிடங்களை வலுப்பெறச் செய்ய, பெரிய அளவில் பழுதுபார்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

(2) சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நுண்ணுயிர் உரத் தயாரிப்பு நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல். 14.00

தற்பொழுது நுண்ணுயிர் உரத் தயாரிப்பு நிலையமானது தனியார் கட்டிடத்தில் வருடத்திற்கு ரூ. 1.38 இலட்சம் வாடகை செலுத்தப்பட்டு இயங்கி வருகிறது. தேவையான இடவசதி மற்றும் வாடகையில் ஏற்படும் அதிக செலவினை தவிர்க்க ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) 200 ஏக்கர்களில் எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கம். 2.00

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் மூலம் உற்பத்தியை கணிசமான அளவில் பெருக்க பெறும் வாய்ப்பு உள்ளது. செயல் விளக்க தளைகள் அமைப்பதன் மூலம் எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் சாகுபடியை பரவலாக்கலாம்.

(4) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் காகுப்பத்தில் மாநில விதைப் பண்ணையில் வேளாண்மை தகவல் மையம், விதை சேமிப்புக் கிடங்கு, பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல். 15.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

வேளாண்மை-தொடர்ச்சி

1995-96-ல் செலவு
(ரூபாய் இலட்சத்தில்)

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், காகுப்பத்தில் உள்ள மாநில விதைப் பண்ணையிலுள்ள நிலத்தில் 8.06 எக்டேர் பரப்புள்ள ஒரு பகுதி காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் வேளாண்மைத் தகவல் மையம், விதை சேமிப்புக் கிடங்கு, பணியாளர் குடியிருப்புகள் ஆகியவை கட்டுவது அவசியமானதாக கருதப்பட்டு அதில் முதலில் கிடங்கு கட்டுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலை :

(5) அரசு தோட்டக்கலை பண்ணைகளில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல். 10.40

தற்போதுள்ள நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தும் முகமாகவும், அதன்மூலம் செடிகளின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(6) அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். 18.00

அநேக மாநில தோட்டக்கலைப் பண்ணைகள் கிராமப்புறங்களிலும் ஒதுக்குப்புறமாகவும் அமைந்துள்ளதால் அவைகளுக்கு செல்வதற்கான சாலைகள், வேலிகள், அலுவலகக் கட்டிடங்கள், பணியாளர்களுக்கான குடியிருப்பு, பணித்துளிக்கூடம் முதலியவைகள் அமைத்துத்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் :

(7) பழைய 6 புல்டோசர்களுக்குப் பதிலாக புதிய புல்டோசர்கள் வாங்குதல். 15.00

ஏற்கனவே உள்ள மண்தள்ளும் இயந்திரங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு உரிய நேரத்தில் விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்யாத நிலையில் பழைய 6 புல்டோசர்களுக்குப் பதில் புதிய 6 புல்டோசர்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல்-தொடர்ச்சி.

1995-96-ல் செலவு
(ரூபாய் இலட்சத்தில்)

(8) காவிரி பாசனப் பகுதிகளில் வாய்க்கால் தூர் எடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள டி.50ஏ மண் தள்ளும் இயந்திரங்களின் கீழ்பகுதியிலுள்ள பாகங்களை மாற்றுதல். 10.00

மண்தள்ளும் இயந்திரங்களை நல்ல நிலையில் வைத்திருக்க அவைகளின் கீழ்நிலைப் பாகங்களை புதியதாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(9) மின்சாரத்தால் இயங்கும் நடமாடும் நீரோட்டக்கணிப்பான் ஒன்று வாங்குதல். 15.00

துளை மற்றும் குழாய்க் கிணறுகளில் உயரளவு தண்ணீர் பெறுவதற்கு எவ்வகைக் குழாய் இணைப்புகளைப் பயன்படுத்துவது, சிக்கனமான முறையில் துளை/குழாய்க் கிணறுகளை எவ்விதம் போடுவது, நீர்வளம் எங்கு எவ்வளவு ஆழத்தில் அமைந்துள்ளது என்பதை துல்லியமாகக் கண்டறிய மின்சாரத்தால் இயங்கும் நடமாடும் நீரோட்டக் கணிப்பான் ஒன்று வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(10) வேளாண்மைப் பொறியியல் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் தானியங்கி மின்னணுத் தொலைபேசி ஏற்படுத்துதல். 3.00

மாவட்ட அலுவலர்களுடன் துரிதமாக தொலை தொடர்பு கிடைக்க வழிவகுக்கவும் தொலைபேசி செலவினத்தை குறைக்கவும் தானியங்கி மின்னணுத் தொலைபேசி ஒன்று வேளாண்மை பொறியியல் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

வேளாண் விற்பனை : 1995-96-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்)

(11) ஊரக கிட்டங்கி கட்டுதல். 11.50

கோட்டூர்-மலையாண்டிப்பட்டினம், பெதப்பம் பட்டி, செய்யூர், சூளுர் - காங்கேயம் பாளையம், அரூர் மற்றும் கடையநல்லூர் ஆகிய ஆறு இடங்களில் ஊரக கிட்டங்கிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :

(12) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் அமல்படுத்த நிதியுதவி. 16.65

வேளாண்மை உயர் நுட்பவியல் மூலமாக உயர்ரக விதைகள் மற்றும் நாற்றுகளை விரைவில் பெருக்கி உலகச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் ஆராய்ச்சி உத்திகளை மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் :

(13) தருமபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் அமைந்துள்ள சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலையில் வெளியேறும் கழிவுகளை சுத்திகரிக்கும் நிலையம் அமைத்தல். 2.00

(14) உணவுப்பதப்படுத்தும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் திட்டம். 100.00

பட்டன் காளாண் உற்பத்தித் திட்டம் மலர் உற்பத்தி மற்றும் ஒருங்கிணைந்த தேங்காய் பதப்படுத்தும் அமைப்புகளில் பங்கு பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் 5.00

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மைய கூட்டுறவு இணையத்திற்கு அதன் 10 வட்டார வேளாண் பணி மையங்களுக்கு பட்டரை இயந்திரங்கள் வாங்க நிதி உதவி அளித்தல்.

மொத்தம் **257.55**

[1995 ஏப்ரல் 19

அத்தியாயம் 2

வேளாண்மை

*மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து குறிப்பிட்ட நாளில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து குறுவை சாகுபடிக்கு சிறப்பு கருத்தரங்கு நடத்தியது. சரியான தருணத்தில் இடுப்பொருட்கள் மற்றும் விரிவாக்கப்பணிககளை வேளாண் துறை மூலம் மேற்கொண்டதன் பயனாக குறுவை பருவத்தில் காவிரிப் பாசன பகுதி மாவட்டங்களில் நெல் சாகுபடி வரலாறு காணாத அளவாக 1.68 இலட்சம் எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. அதே பருவத்தில் அரிசி உற்பத்தி எக்டருக்கு 4136 கிலோ என்ற அளவினை எட்டியுள்ளது.

*1994-95-ஆம் ஆண்டு மொத்த உணவு தானிய உற்பத்தி 105 இலட்சம் மெ. டன்னை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*தமிழ்நாட்டில் பயறுவகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பயறு வகைக்கென ஓர் கொள்கை அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

*தமிழ்நாட்டின் சமையல் எண்ணெய் தேவையை நம் மாநிலத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்துடன் முக்கிய எண்ணெய் வித்துப்பயிர்களான மணிலா, எள், சூர்யகாந்தி மற்றும் சோயா மொச்சை சாகுபடி ஊக்குவிக்கப்படுகிறது. இதனால் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டு நல்லதொரு பலனை அளித்துள்ளது.

*திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த மணிகண்டம் வட்டாரத்தில் வேளாண் தட்ப வெப்ப மண்டல திட்டமிடும் அணுகுமுறை பின்பற்றப்பட்டது. தற்போதுள்ள வளங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் அவற்றை முழுமையாக தொடர்ந்து பயன்படுத்தி, அவ்வளங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கி உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கிறது. இது போன்று, மற்றும் ஒரு திட்டம் 5000 எக்டர் பரப்பில் களர் மற்றும் உவர் நிலங்களை சீர்திருத்தும் வகையில் 1995-96-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*விற்பனை நடவடிக்கைகளை வேளாண் துறை மேற்கொள்வதை நிறுத்தும் கொள்கை முடிவினை அடுத்து விரிவாக்க நடவடிக்கைகளில் மேலும் அதிக கவனம் செலுத்தும் நோக்கத்துடன் நெல் மற்றும் சிறுதானிய விதை உற்பத்தி மற்றும் விநியோகம், மத்திய அரசின்

1995 ஏப்ரல் 19]

முழுமானிய உதவியுடனும் மத்திய மற்றும் மாநில அரசு சார்பு திட்டங்களின் தேவைக்கு மட்டுமே மேற்கொள்ளப்படும். இத்துடன் தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஏற்றுமதி வாய்ப்பினை கருத்தில் கொண்டு புதிதாக வெளியிடப்பட்ட ஜே.ஜே. 92 வாசனை நெல் இரகம் பரவலாக்கப்படுகிறது. மேலும் இம்மாநிலத்தில் அரிசி உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் சாகுபடியினை அதிக அளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**சுற்றுப்புறச் சூழல் நல்லிணக்கத்தினை கருத்தில் கொண்டு இயற்கை முறை விவசாயம் சிபாரிசு செய்யப்படுகிறது. உரமிடுவதில் சிக்கனத்தை கையாளும் வகையில் தரமான கம்போஸ்ட் உபயோகம், உயிரின உரம், வேளாண் கழிவுகளை உயிரியல் மாற்றம் செய்தல், பசுந்தாள் உர உபயோகம் மற்றும் ஊட்டமேற்றிய தொழு உரம் ஆகியவற்றின் உபயோகம் பரவலாக்கப்பட்டு வருகிறது.*

**தற்போது தமிழ்நாட்டில் இயங்கி வரும் நான்கு உயிரின உர உற்பத்தி மையங்களில் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தியதன் வாயிலாக உயிரின உரங்களின் உற்பத்தி இவ்வாண்டு 1200 மே. டன் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. திருச்சி மற்றும் சாக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் கூடுதலாக இரண்டு உயிரின உர உற்பத்தி மையங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 350 மெ. டன் உயிரின உர உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.*

**1993-94-ஆம் ஆண்டில் ஏற்கனவே செயல்பட்டு வந்தது ஆறு உரப் பரிசோதனை நிலையங்கள் அன்றி விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் கூடுதலாக இரண்டு உரப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டன. இவை தவிர, சேலம், தர்மபுரி, கும்பகோணம், திருவாரூர், நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம் ஆகிய ஆறு இடங்களில் உரப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டன.*

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் மூலம் பயிர்களைப் பாதுகாப்பது இம்மாநிலக் கொள்கையாகும். உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தை சார்ந்த வல்லுநர்கள் அளித்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முதன்மை பயிற்சியைத் தொடர்ந்து, இரண்டாம் நிலை பயிற்சி மாநிலம் முழுவதும் அளிக்கப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் ஆண்டு சுமார் 25,500 விவசாயிகளுக்கு மாநிலம் முழுவதும் உள்ள 850 உழவர் வயல் வெளிப் பள்ளிகள் மூலம்*

நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளுக்காக பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர, 72 மகளிர் வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 1140 பண்ணை மகளிருக்கு பிரத்யோகமாக பயிற்சி அளிக்கும் வகையில் 38 வயல் வெளிப் பள்ளிகளை செயல்படுத்தி வருகிறார்கள். பருத்திப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பத்தை செயல்படுத்தி மாநிலம் முழுவதும் 950 உழவர் வயல் வெளி பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

*இந்த ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையை மேலும் செம்மைப்படுத்தி, திருச்சி, சேலம், தர்மபுரி, பெரியார், மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய எட்டு இடங்களில் உயிரியல் கொல்லிகள் உற்பத்தி மையங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உயிரியல் பூச்சிகொல்லிகள், சிறு/குறு விவசாயிகளுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*உலக வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படியும், அரசின் ஆணைப்படியும் 1-4-1994 முதல் வேளாண் துறை எந்தவித பூச்சிக்கொல்லி மருந்துகளையும் வாங்குவதை நிறுத்தியுள்ளது.

*அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க அதிகமாக நெல் பயிரிடப்படும் மாவட்டங்களுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நெல் சாகுபடியில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும், தொழில் நுட்பங்களை பரவலாக்கவும் மற்றும் அவசியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்கவும் ஒருங்கிணைந்த தானியப் பயிர்கள் அபிவிருத்தி திட்டம், தேதிய/மாநில சராசரி அரிசி உற்பத்திக்கு குறைவாக அரிசி உற்பத்தி திறன் உள்ள தெரிவு செய்யப்பட்ட 140 வட்டாரங்களில் ரூ.563.91 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்களை சார்ந்த 84 வட்டாரங்களில் 1990-91-ஆம் ஆண்டு முதல் தேசிய நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏழு ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் இத்திட்டம் ரூ.41.51 கோடி செலவில் 1.19 இலட்சம் எக்டரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*தமிழ்நாட்டில் வேளாண் வளர்ச்சித் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் ஏழு ஆண்டு திட்டமாக 1991 முதல் வேளாண் துறையில் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய வேளாண்மை திட்டமிடுதல்,

1995 ஏப்ரல் 19]

வேளாண் விரிவாக்கம், விதை உற்பத்தி மற்றும் ஒருங்கிணைந்த நீர்பிடிப்புப் பகுதி மேம்பாடு ஆகிய நான்கு இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

*தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் பகுதி-2 அக்டோபர் '93 முதல் ஏழு ஆண்டுகளுக்கு ரூ.28.73 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும். இந்த பகுதி-2 திட்டத்தின் கீழ், 2976 கிராம நிலை பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இதனால், 74,400 பண்ணை மகளிர் பயிற்சி பெறுவர். 1994-95-ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.292.42 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

*1994-95-ஆம் ஆண்டு தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியம் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு திட்டத்தை அங்கீகரித்துள்ளது. வேளாண் துறை ஒரு நடு நிலைத் துறையாக, சார்புத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் அளித்த திட்ட கருத்துக்களை பெற்று, பரிசீலனை செய்து இதுவரை 42 திட்டங்களுக்கான கருத்துருக்களை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

*தென்னை சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் தமிழ்நாடு தேசிய அளவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

*தற்போது நடைமுறையில் உள்ள மண் ஆய்வு முறைக்கு மேலும் கூடுதலாக மண் வள அட்டை வழங்கும் புதுமையான திட்டம் ஒன்று 1994-95-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அட்டையில் மண்ணின் பல்வேறு குணாதிசயங்கள், சத்துக்களின் நிலை, நுண்ணூட்டச் சத்துக்களின் நிலை, மண் பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வு ஆகியவை அடங்கிய ஒரு நிரந்தர அட்டையாக இருக்கும்.

*எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் சாகுபடியில் அதிகபட்ச மகசூர் எடுக்கும் ஒரு விவசாயிக்கு மாநில அளவில் ரூ.10,000 மதிப்புள்ள தங்கப்பதக்கம் விருதாக வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் விருது, வேளாண் துறையைச் சார்ந்த தொழில் நுட்ப அலுவலர்களின் செயல்பாட்டினை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு புத்துணர்வு அளிக்கவும், 1994-95-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*குடுமியான்மலையில் உள்ள வேளாண்மை பயிற்சி மையத்தை மாநில (ஸ்டேமின்) நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது.

[1995 ஏப்ரல் 19

வேளாண் கண்ணோட்டம் 1994-95

பருவ நிலை

1994-ஆம் ஆண்டில் பருவவாரியாக பெறப்பட்ட மழை விபரம் இயல்பான மழை மற்றும் கடந்த ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்ட மழை அளவுடன் ஒப்பிட்ட விபரம் பின்வருமாறு.

அட்டவணை 2.1

பெறப்பட்ட மழையளவு

வ. (எண்.	பருவம்/மாதம்	இயல்பான (மி.மீட்டரில்) மழை அளவு	பெய்த மழை அளவு		வேறுபாடு சதவீகிதத்தில் அளவு	
			1993	*1994*	இயல்பு மழையுடன்	கடந்த ஆண்டு மழையுடன்
1.	கோடை (ஏப்ரல்-மே)	117.6	54.6	122.5	(+)4.2	(+)124.4
2.	தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்டம்பர்)	307.6	298.0	228.5	(-)25.7	(-)23.3
3.	வடகிழக்கு பருவம் (அக்-டிசம்பர்)	438.7	697.2	475.5	(+)8.4	(-)31.8
4.	குளிர் பருவம் (ஜனவரி-பிப்ரவரி)	42.2	32.4	6.7	(-)84.1	(-)79.3
	மொத்தம் (ஏப்ரல்94-பிப்ரவரி 95)	**906.1**	**1082.2**	**833.1**	**(-)8.1**	**(-)23.0**

கோடை பருவத்தில் பெறப்பட்ட மழை அளவு இயல்பான மழையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 4.2% கூடுதலாகவும், கடந்த ஆண்டு இதே பருவத்தில் பெறப்பட்ட மழை அளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 124.4% கூடுதலாகவும் பெறப்பட்டுள்ளது. தென் மேற்குப் பருவ மழை காலத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரையில் பெறப்பட்ட மழை அளவு சற்று திருப்திகரமாக இல்லை. பெறப்பட்ட மழை அளவு இயல்பான மழை மற்றும் கடந்த இதே பருவத்தில் பெறப்பட்ட மழை ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் முறையே 25.7% மற்றும் 23.3% குறைவாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

பெறப்பட்டு உள்ளது. மாறாக வடகிழக்குப் பருவ மழை காலத்தில் அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் உள்ள காலகட்டத்தில் பெறப்பட்ட மழை அளவு இயல்பான மழையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 8.4% கூடுதலாகவும், கடந்த ஆண்டு பெறப்பட்ட மழையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 31.8% குறைவாகவும் பெறப்பட்டுள்ளது. குளிர் பருவத்தில் பெறப்பட்ட மழை அளவு, இயல்பான மழை அளவு மற்றும் கடந்த ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்ட மழை அளவு இரண்டிற்கும் குறைவாகவே பெறப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஏப்ரல் 1994 முதல் பிப்ரவரி 1995 வரை பெறப்பட்ட மொத்த மழை அளவு இயல்பு மழையிலிருந்து 8.1% குறைவாகவும், கடந்த ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்ட மழை அளவைவிட 23% குறைவாகவும் பெறப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டில் பயிர் நிலைமை விபரம்:

பரவலாக பெறப்பட்ட மற்றும் பருவத்தே துவங்கிய பருவ மழை மற்றும் நீர்த் தேக்கங்களில் திருப்திகரமான நீர்நிலை ஆகியவற்றினால் *1994-95*ஆம் ஆண்டு பயிர் சாகுபடி முறை திருப்திகரமாக இருந்தது. முக்கிய பயிர்களின் சாகுபடி பரப்பு, பெறப்பட்ட உற்பத்தி மற்றும் எதிர் நோக்கும் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி ஆகியவை பின்வருமாறு.

அட்டவணை 2.2

1994-95ல் பயிர் நிலை

வ. எண். பயிர்	சாகுபடி பரப்பு (இல. எக்டர்) குறியீடு	பிப்ரவரி 1995 வரை சாதனை	எதிர் நோக்கும் சாதனை	உற்பத்தி (இல. மெடன்) குறியீடு	பிப்ரவரி 1995 வரை சாதனை	எதிர் நோக்கும் சாதனை
1. அரிசி	*21.00*	*22.63*	*23.00*	*65.50*	*70.49*	*85.00*
2. சிறு தானியங்கள்	*15.50*	*12.25*	*12.35*	*18.50*	*15.00*	*15.00*
3. பயறுவகைகள்	*10.00*	*10.85*	*10.85*	*6.00*	*4.87*	*5.00*
மொத்த உணவு தானியங்கள்	*46.50*	*45.73*	*46.20*	*90.00*	*90.36*	*105.00*
4. எண்ணெய்வித்துக்கள்	*13.15*	*15.83*	*15,83*	*14.50*	*19.50*	*19.50.*
5. பருத்தி (லட்சம் பொதிகள்)	*2.50*	*2.62*	*2.72*	*6.60*	*4.32*	*4.89*
6. கரும்பு (வெல்லம்)	*2.35*	*2.85*	*3.23*	*25.59*	*33.65*	*33.65*

[1995 ஏப்ரல் 19

மே 1994-ல் பெறப்பட்ட சாதகமான மழை மற்றும் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக காலத்தே பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு காவிரி பாசனப் பகுதி மற்றும் மாநிலத்தின் இதர பகுதிகளில் வேளாண் நடவடிக்கைகள் உரிய காலத்தில் துவங்கியது. காவிரி பாசனப் பகுதியில் குறுவை நெல் சாகுபடி கடந்த 93 ஆம் ஆண்டின் பரப்பான 1.40 இலட்சம் எக்டரை விட 1.68 இலட்சம் எக்டரில் மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மைத் துறையின் இடைவிடாத தொழில் நுட்ப பரவலாக்கம், தக்க தருணத்தில் தரமான இடுபொருட்கள் விநியோகம், குறுவை பருவத்திற்கான கருத்தரங்குகள் மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றை சிறந்த முறையில் மேற்கொண்டதன் மூலமாக குறுவைப் பட்ட அரிசி உற்பத்தி திறன் எக்டருக்கு 4136 கிலோ என்ற அளவை எட்டியுள்ளது. இதனைத் தொடர்ந்து எக்டருக்கு 4136 கிலோ என்ற அளவை எட்டியுள்ளது. இதனைத் தொடர்ந்து தென்மேற்கு பருவ மழை மற்றும் வட கிழக்கு பருவ மழையினால் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி திருப்திகரமாக இருந்தது. சாதகமான பருவ நிலை மற்றும் நீர் தேக்கங்களில் திருப்திகரமான நீர்நிலை ஆகியவற்றினால் நெல் சாகுபடி பிப்ரவரி 1995 வரை 22.63 இலட்சம் எக்டரில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு பரப்பான 22.36 இலட்சம் எக்டரை விட இது கூடுதலாகும். சாதனமான பருவ நிலை மற்றும் இதர இயற்கை சூழல்களை கணக்கில் கொண்டு நெல் சாகுபடி பரப்பு குறியீடான 21 இலட்சம் எக்டரை கடந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மொத்த அரிசி உற்பத்தி 85 இலட்சம் மெ.டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுதானியங்கள்:

தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் பெறப்பட்ட பற்றாக்குறை மழையினால் சிறுதானியங்கள் குறைந்த பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. மானாவாரியாக சிறுதானியங்கள் இயல்பாக 50% பரப்பில் பயிரிடப்படாத காரணத்தினால் சாகுபடி பரப்பு குறைபாடு 1994-95ஆம் ஆண்டின் மொத்த சிறுதானிய சாகுபடி பரப்பில் குறைபாட்டினை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மொத்த சிறுதானியங்கள் சாகுபடி பரப்பு நடப்பு ஆண்டில் 12.35 இலட்சம் எக்டராகவும், சிறுதானியங்கள் உற்பத்தி 15 இலட்சம் மெ.டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1995 ஏப்ரல் 19]

பயறு வகைகள்:

கடந்த சில ஆண்டுகளாக பயறு வகை சாகுபடியை தனி பயிராகவோ அல்லது ஊடு பயிராகவோ அல்லது நெல் தரிசிலோ சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டு பயறு வகை சாகுபடி 10.85 இலட்சம் எக்டரிலும் பயறு வகை உற்பத்தி 5 இலட்சம் மெ. டன்களாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உணவு தானியங்கள்:

1994-95ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 105 இலட்சம் மெ. டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய்வித்துக்கள்:

சமையல் எண்ணெய் தேவையை நமது மாநிலத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்துடன் எண்ணெய்வித்து பயிர்களில் முதன்மை பயிர்களான மணிலா, எள், சூரியகாந்தி மற்றும் சோயா மொச்சை சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதன் பலனாக எண்ணெய்வித்துக்கள் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் நல்ல பலனை காண முடிகிறது. 1994-95ஆம் ஆண்டு எண்ணெய்வித்துக்கள் சாகுபடியில் தனி கவனம் செலுத்தப்பட்டு குறிப்பாக சூரியகாந்தி மற்றும் சோயாமொச்சை பயிர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சூரியகாந்தி சாகுபடியில் வீரிய ஒட்டு இரகங்களை புகுத்தி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன் சோயா மொச்சை சாகுபடியை தனி பயிராகவோ அல்லது கலப்பு பயிராகவோ சாகுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதின் விளைவாக நடப்பு ஆண்டில் கூடுதலான பரப்பும், உற்பத்தியும் 1994-95-ல் அடையப்படும், எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி 1994-95ஆம் ஆண்டில் 19.50 இலட்சம் மெ. டன்களாக இருக்கும்.

கரும்பு:

கரும்பு நிர்ணயிக்கப்பட்ட பரப்பு மற்றும் உற்பத்தியில் அதிக சாதனை அடையப்படும். 1993-94ஆம் ஆண்டை விட 25 விழுக்காடு அதிக பரப்பில் கரும்பு சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு பரிந்துரை செய்து நிர்ணயிக்கப்பட்ட கரும்பு விலையினால் கூடுதலாக பரப்பு அடைய முடுக்கி விடப்பட்டுள்ளது.

[*1995 ஏப்ரல் 19*

1995-96ஆம் ஆண்டிற்கான உற்பத்தி (குறியீடுகள்) திட்டம்:

இயல்பான மழை மற்றும் நீர்த் தேக்கங்களிலிருந்து உரிய காலத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடல் ஆகியவற்றை எதிர்நோக்கி 1995-96ஆம் ஆண்டில் பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி இலக்குகள் மத்திய திட்டக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை அட்டவணை 2.3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இடுபொருள் விநியோகத் திட்டம்:

அ. விதைகள்—

தமிழ்நாட்டில் முறையான விதை உற்பத்தி மூன்று கட்ட முறையாக கடைப்பிடிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருந்து பெறப்படும் கருவிதைகளைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள 42 அரசு விதைப் பண்ணைகளில் ஆதார விதைகள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆதார விதையினை பயன்படுத்தி விவசாயிகளின் வயல்களில் விதைப் பண்ணைகள் அமைத்து பதிவு செய்யப்பட்டு சான்று பெற்ற விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. விதைச் சான்றின் அளவுகோலின் படி விதைகளின் தரத்தினை தமிழ்நாடு விதை சான்றளிப்பு நிறுவனம் உறுதி செய்கின்றது. கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி இடுபொருள் விநியோகத்தை தவிர்த்து விரிவாக்க நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தும் நோக்கத்துடனும், நெல் மற்றும் சிறுதானிய விதைகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தினை மத்திய அரசு திட்டங்களுக்கு மட்டும் மேற்கொள்வது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆண்டிற்கு 28900 மெ. டன்கள் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட அரசுக்கு சொந்தமான விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் சான்றுநிலை விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இதற்கென மாநிலம் முழுவதும் 16 பெரிய, 3 நடுத்தர மற்றும் 52 சிறிய விதை சுத்திகரிப்பு மையங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த சுத்திகரிப்பு செய்யப்பட்ட விதைகள் விதை சான்றளிப்பு துறையினால் சான்றளிக்கப்பட்டு தமிழகம் முழுவதுமுள்ள 780 வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நடைமுறையில் உள்ள விதைக் கொள்கையின்படி தேசிய திட்டங்களுக்கு தேவையான விதைகள் மட்டும் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதாக முடிவெடுத்துள்ள போதிலும் ஏற்றுமதிக்கு உகந்த ஜே.ஜே.92 வாசனை இரக அரிசி உற்பத்தியினை

1995 ஏப்ரல் 19]

மேம்படுத்த தனி கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், மாநிலத்தின் அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும் வகையில் புதிதாக வெளியிடப்பட்ட எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல்லை பிரபலப்படுத்தவும், உற்பத்தியினை உயர்த்தி சாகுபடி பரப்பினை அதிகரிப்பதில் முழு கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாறு ஜே.ஜே.92 மற்றும் எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் அறிமுகம் மற்றும் பரவலாக்கம் மூலமாக வேளாண் பெருமக்களின் பொருளாதார நிலை கண்டிப்பாக மேம்படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள பயறுவகை, எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருத்தி பயிர்களின் விதைக்கொள்கை 1995-96-ம் ஆண்டிலும் தொடர்ந்து பின்பற்றப்படும். விதை மாற்று விகிதம் மற்றும் விதைப்பெருக்க முன்னேற்றம் பற்றிய விபரங்கள், அட்டவணை 2.4 மற்றும் 2.5-ல் அளிக்கப்பட்டுள்ளன.

ஆ. இரசாயன உரங்கள்:

பெருகி வரும் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அடிப்படையில் இரசாயன உர உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 1994-95 ஆம் ஆண்டில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து 11.11 இலட்சம் மெ.டன் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டில் பிப்ரவரி 95 வரை இரசாயன உர உபயோகத்தில் சாதனை மற்றும் 1995-96ஆம் ஆண்டிற்கான குறியீடுகள் அட்டவணை 2.6-ல் அளிக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் சலுகை விலையில் இரசாயன உர விநியோகம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான மானியம் முழுவதையும் உர உற்பத்தியாளர்களுக்கு மத்திய அரசு நேரடியாக அளிக்கிறது. கரீப் 1994-ல் ரூ. 3570.86 இலட்சம் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கென மொத்தமாக ரூ. 7500 இலட்சம் செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டு உர விநியோகம் திருப்திகரமாக இருந்தது. 1994 ஆம் ஆண்டு சம்பா பருவத்தில், யூரியா கிடைப்பதில் இருந்த குறைபாட்டினை, தமிழக அரசின் தலையீட்டினால் சரி செய்யப்பட்டது.

நுண்ணூட்டக் கலவை தயாரிக்கும் நிலையம் :

ஆண்டு ஒன்றுக்கு 1700 மெ. டன் நுண்ணூட்டக் கலவை தயார் செய்து விநியோகம் செய்யவல்ல மையம் ஒன்று புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த குடுமியான்மலையில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 95 வரை 2112 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[*1995 ஏப்ரல் 19*

இயற்கை முறை விவசாயம் :

இயற்கை சூழல் இணக்கத்தினைக் கருத்தில் கொண்டு இயற்கை முறை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. தரமான குப்பை எரு உபயோகம், உயிரியல் உரங்கள், வேளாண் கழிவுகளை உயிரியல் மாற்றம் செய்தல், ஊட்டமேற்றிய தொழு உரம், தழை உரம் இடுதல் ஆகிய சிக்கன உரமிடும் முறைகள் மேற்கொள்ளப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் பிப்ரவரி 95 வரை பசுந்தாள் உர விநியோகத்தின் கீழ் 100 மெ.டன் குறியீட்டிற்கு 41 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டு மண்ணின் வளம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த பசுந்தாள் உர விநியோகம் 1995-96-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இயற்கை முறை விவசாயம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மையை சிறந்த முறையில் கடைபிடித்த விவசாயிகள் மற்றும் கிராம பஞ்சாயத்துக்களின், நல்ல பணியினை அங்கீகரிக்க தேசிய/மாநில/மாவட்ட மற்றும் ஒன்றிய அளவிலான பரிசுகள் வழங்க மைய அரசு முடிவெடுத்துள்ளது. மைய அரசின் விதிகளுக்கு ஏற்ப இப்பரிசினை வழங்க, தமிழக அரசு ஒரு குழுவினை ஏற்படுத்தியுள்ளது.

உயிரின உர உற்பத்தி மற்றும் விநியோகம்:

உயிரின உர உபயோகத்தினை வேளாண் பெருங்குடி மக்கள் நன்கு உணர்ந்துள்ளதினால் உயிரின உரத்தேவை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. தற்போது தமிழ்நாட்டில் மொத்த உயிரின உரத் தேவை ஆண்டு ஒன்றுக்கு 12,000 மெ.டன் என்ற அளவில் உள்ளது. கடந்த ஆண்டு வரை கடலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் குடுமியான்மலை ஆகிய உயிரின உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 1000 மெ.டன் உயிரின உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. 1994-95 ஆம் ஆண்டில் நான்கு மையங்களிலும் உள்ளிருப்பு வசதிகளை கூடுதலாக செய்து கொடுத்ததன் வாயிலாக உயிரின உர உற்பத்தி 1200 மெ.டன் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இந்த நான்கு உற்பத்தி மையங்களுக்கு பயோபாஸ் உற்பத்தி செய்யும் வகையில் கூடுதல் உள்ளிருப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தயாரிக்கப்படும் உயிரின உரங்களின் தரம் மற்றும் அவற்றினை தரம் குறையாமல் நீண்ட நாள் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை உயர்த்தும் வகையில் இந்த நான்கு மையங்களுக்கும் தானியங்கி கலக்கும் மற்றும் பொட்டலமிடும் கருவி வழங்கப்படுகின்றன. மேற்கண்ட நான்கு உற்பத்தி மையங்கள் தவிர மேலும் கூடுதலாக திருச்சி மற்றும் சாக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் உயிரின உர உற்பத்தி மையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 350 மெ.டன் உயிரின உர உற்பத்தி கூடுதலாக

1995 ஏப்ரல் 19]

கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயிர் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு பயிர்களுக்கான உயிரன உரங்களை திறம்பட உற்பத்தி செய்து பயன்படுத்தப்படும். இவ்வுயிரின உரங்களின் தரக்கட்டுப்பாடு, தரத்தை உறுதி செய்தல் மற்றும் தர கட்டுப்பாடு முறைகளை நிர்ணயம் செய்வதற்காக தமிழக அரசு ஒரு தொழில் நுட்பக்குழுவை அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற கலவை உரம் :

தமிழ்நாட்டில் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் கட்டுப்பாட்டில் 103 நகராட்சிகள் உள்ளன. நடப்பு நிதி ஆண்டு 1994 - 95 -ல் 103 நகராட்சிகளில், 2,42,000 மெ.டன் கலவை உரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் மொத்த ஜனத்தொகையில் 3 சதவீதம் அளவிற்கு ஒவ்வொரு நகராட்சியிலும், கலவை உரம் தயாரிக்க செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் உற்பத்தி செய்யப்படும் கலவை உரம் விவசாயிகளுக்கு அவர்களது வயலில் உபயோகிக்க விநியோகிக்கப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் உற்பத்தி செய்த கலவை உரம் பின்வருமாறு :

நகர்ப்புற கலவை உரம் :

வருடம்	உற்பத்தி		
1989 - 90	2,58,950	மெ.டன்	
1990 - 91	2,83,900	"	
1991 - 92	2,57,700	"	
1992 - 93	2,40,300	"	
1993 - 94	2,31,000	"	
1994 - 95	2,42,000	"	(குறியீடு)

1995-96 ஆம் ஆண்டில் மக்கள் தொகையில் 3 சதவீதம் கலவை உர உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் தரமான கலவை உரம் தயாரிப்பதை ஊக்குவிக்க ''கலவை உர உற்பத்தி'' போட்டிக்கு பதிவு செய்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. 1994-95 ஆம் ஆண்டு 33 நகராட்சிகள் கலவை உர உற்பத்தி போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்துள்ளன. தரமான கலவை உரம் அதிக அளவில் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நகராட்சிகளுக்கு பரிசுத் தொகையும், சுழற் கேடயமும் வழங்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995-96 ஆம் ஆண்டிலும் கலவை உர உற்பத்தி போட்டி நடைபெறும், உள்ளாட்சி நிறுவனங்களின் செயல் திறன்படி பரிசுத் தொகை வழங்கப்படும்.

நாகர்கோவில் நகராட்சியில் இயந்திர கலவை உரம் தயாரித்தல்:

1994-95-ல் நாகர்கோவில் நகராட்சியில் தினசரி சேகரிக்கப்படும் 70 மெட்ரிக் டன் திடக்கழிவுகளைக்கொண்டு கலவை உரம் தயாரிக்கும் இயந்திர கலவைத் தொழிற்சாலை ரூ. 20/- இலட்சத்தில் அமைக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம், நகராட்சி திடக்கழிவுகளை நல்ல தரமான கலவை உரமாக விஞ்ஞான முறைப்படி தயாரிக்க அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சியில் சேரும் திடக்கழிவுகளை சுகாதாரமுறைப்படி அப்புறப்படுத்துவதோடு வேளாண்மை பெரு மக்களுக்கு தரமான கலவை உரத்தினைத் தயாரித்து வழங்கும். இத்தொழிற்சாலை தினமும் 70 மெ.டன் கழிவுகளைப் பெற்று கலவை உரமாக மாற்றும் திறன் கொண்டதாகும்.

கழிவு நீர்ப்பண்ணைகள் :

தற்போது 19 உள்ளாட்சி நிறுவனங்களில் கழிவுநீரைப் பயன்படுத்தி கழிவுநீர் பண்ணைகள் பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகளில் தீவனப்புல், தென்னை, சிறு தானியங்கள், கரும்பு, காய்கறிகள், யூகலிப்டஸ் மரங்கள் மற்றும் இதர பயிர்கள் இலாபகரமாக பயிரிடப்பட்டு வருகின்றன. இப்புண்ணைகளை முறையாக பராமரிக்கவும், உற்பத்தி திறனை அதிகரிக்கவும், பெருமளவில் கழிவு நீரை உபயோகித்து அதிக பரப்பில் பயிரிடவும், நகராட்சிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றன.

சிறு/குறு விவசாயிகளுக்கான உதவித் திட்டங்கள்:

இரசாயன உரங்களின் விலை ஏற்றத்தால் சிறு/குறு விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கும் வகையில் மத்திய அரசு 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை அறிவித்து தமிழ்நாட்டிற்கென ரூ. 53.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் கீழ் 1993-94 ஆம் ஆண்டு வரை ரூ. 30.50 கோடி செலவில் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன :

- 1,568 இலட்சம் உர சிறுதளைப்பைகள் விநியோகம்
- 3.33 இலட்சம் பூச்சிக்கொல்லி சிறுதளைப்பைகள்

1995 ஏப்ரல் 19]

- 20,000 விசைத் தெளிப்பான்கள்

- 4,000 டயர் சக்கரம் பொருந்திய மாட்டு வண்டிகள்.

- 1,000 சிறிய டிராக்டர்கள்.

- 1,500 பவர் டில்லருக்கான இழுவைகள்

- 40,000 வேளாண் கருவிகள்

- 454 தானிய சேமிப்புக்கலன்கள்

- 19,734 தார்ப்பாய்கள்

- 15,00,000 உயிர் உரப் பொட்டலங்கள்

- 1.50 இலட்சம் தென்னங்கன்றுகள் பள்ளி மாணவர்களுக்கு வழங்குதல்

- 250 மெடன் பசுந்தாள் உர விதைகள் விநியோகம்

- 20,000 பெட்ரோமாக்ஸ் விளக்குப் பொறிகள்

- எலி ஒழிப்பிற்கான மருந்துகள்

- வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்குதல், களர் மற்றும் உவர் நிலச் சீர்திருத்தத்திற்கென தட்ப வெட்ப மண்டலங்களுக்கு ஏற்ப திட்டமிடும் பணியை திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணிகண்டம் வட்டாரத்தில் மேற்கொள்ளுதல், மற்றும்

- 46,000 வேளாண்மை உபகரணங்களை பண்ணை மகளிருக்கு வழங்குதல்.

1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட இத்தகைய திட்டங்களினால் 10.58 இலட்சம் சிறு/குறு விவசாயிகள் பயனைடந்துள்ளனர். 1994-95 ஆம் ஆண்டு பின்வரும் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன :

- ஊட்டமேற்றிய தொழு உரம் தயார் செய்ய இரசாயன உரங்கள் அடங்கிய *85,715* கிட்டுகள் வழங்குதல்

- வேளாண் கழிவுகளை உயிரியல் மாற்றம் செய்யும் நிருபணங்கள் 15000 எக்டரில் மேற்கொள்ளுதல் மற்றும் இதற்கென 15000 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல், இவை தவிர,

- உயிரியல் பூச்சிக்கொல்லி மினிகிட்டுகள்

- *4,50,000* தென்னங்கன்றுகள் பள்ளி மாணவர்களுக்கு வழங்குதல்

[1995 ஏப்ரல் 19

- 1000 தானிய சேமிப்புக்கலன்கள்

- 5000 தார்ப்பாய்கள்

- 1200 டயர் சக்கரம் பொருந்திய மாட்டு வண்டிகள்

- 600 பவர் டில்லர்கள், 400 கதிரடிக்கும் இயந்திரங்கள்

- திருச்சி மற்றும் சாக்கோட்டை ஆகிய இடங்களில் உயிரின உர உற்பத்தி மையங்கள் அமைத்தல்

- சிங்க் சல்பேட் விநியோகம்

- தற்போதுள்ள நான்கு உயிரின உர உற்பத்தி மையங்களுக்கு உள்ளிருப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

- பயோபாஸ் உற்பத்தி நிலையம் ஏற்படுத்துதல்

- எட்டு உயிரியல் கட்டுப்பாடு நிலையங்கள் அமைத்தல்

- ஆறு உரப்பரிசோதனை நிலையங்கள் அமைத்தல்

- மண் ஆய்வில் நுண்ணூட்டச் சத்து ஆய்வுக்கென அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் நிறுவுதல்.

- உயிரின உற்பத்தி மையங்களுக்கு தானியங்கி கலக்கும் மற்றும் பொட்டலமிடும் கருவிகள் வழங்குதல் மற்றும்.

- பல்வேறு பயிர்களுக்கான குறிப்புகள் அடங்கிய கையேடு வெளியிடுதல் ஆகியவை ரூபாய் 1119.88 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டு வருகிறது.

தட்ப வெப்ப மண்டலங்களுக்கு ஏற்ப திட்டமிடுதல் :

தட்ப வெட்ப மண்டலங்களுக்கு ஏற்ப திட்டமிடுதல் திருச்சி மாவட்டம், மணிகண்டம் வட்டாரத்தில் 1800 எக்டேர் களர் மற்றும் உவர் நிலங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் களர் மற்றும் உவர் நிலங்கள் குறித்து உட்பகுதி உட்பட ஆய்வு, மேற்கொள்ளப்பட்டது. 28 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் ஏழு கிராமங்களில் தீவிர ஆய்வுப்பணி முடிவு பெற்றுள்ளது. மேலும் இப்பகுதிகளில் அதி தீவிர ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட பகுதியில் தீவிர மண் மாதிரிகள் எடுக்கும் பணி துவங்கப்பட்டு மண்ணின் உர அளவு, களர் மற்றும் உவர் ஆய்வு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் இதுவரை 12,436

1995 ஏப்ரல் 19]

மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் சத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இப்பணி பல்வேறு துறைகள் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை பொறியியல் துறை வடிகால் வசதி ஏற்படுத்தி கொடுத்த உடன் மண்ணின் பிரச்னைக்கு ஏற்ப ஜிப்சம் இடுதல் மேற்கொள்ளப்படும். இத்திட்டப் பகுதிக்கு, மண்வள அட்டைகள் வழங்கும் பணியும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இதே போல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் 5000 எக்டேர் பரப்பில் களர் உவர் பிரச்சினைகளை கண்டறிந்து அதனை களைவதற்கான திட்டம் ஒன்று 1995-96 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இ. பயிர்ப் பாதுகாப்பு :

தமிழ்நாட்டில் முறையான பூச்சி நோய் கணிப்பு செயல்படுத்தப்பட்டு பூச்சி மற்றும் நோய்களின் நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் 7356 இடங்களிலிருந்து புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டுவருகிறது. அவற்றை ஆய்வு செய்து பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறித்து ஒவ்வொரு வாரமும் முன் அறிவிப்பு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டில் பல்வேறு பயிர்பாதுகாப்பு முறைகளின் மூலம் உணவுப்பயிர்களைச் சேர்ந்த பூச்சி மற்றும் நோய் தாக்குதல் 49 இலட்சம் எக்டேர் இலக்கிற்கும், அதே போல் உணவு அல்லாத பயிர்களின் பூச்சிநோய் தடுப்பு 27.80 இலட்சம் எக்டேர் இலக்கிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிப்ரவரி 95 வரை 43.237 இலட்சம் எக்டேரில் மற்றும் 27.561 இலட்சம் எக்டேரிலும் உணவுப் பயிர் மற்றும் உணவு அல்லாத பயிர்களின் பயிர் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை:

ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. குறைந்த செலவில் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல், சுற்றுப்புற சூழல் மாசுபடுதல், மண்ணின் நச்சுத்தன்ணை, பூச்சிகளின் பெருக்கம் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். 1993-94 ஆம் ஆண்டு உணவு மற்றும வேளாண் நிறுவனத்தைச் சார்ந்த நிபுணர்களால் இத்துறையைச் சார்ந்த 32 வேளாண் அலுவலர்களுக்கு மூன்றுமாத களப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நிலை பயிற்சி விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில்

நுட்பத்தை பரவலாக்கும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 1994-95 ஆம் ஆண்டு 25,000 விவசாயிகளுக்கு ரூ. 52 லட்சம் செலவில் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 850 உழவர் வயல் வெளிப் பள்ளிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் நெற்பயிரைத்தாக்கும் பூச்சிகள் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிவதில் உழவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர 11.40 பண்ணை மகளிருக்கு பிரத்யேகமாக பயிற்சி அளிக்கும் வகையில் பயிற்சி பெற்ற 72 மகளிர் வேளாண் அலுவலர்களால் 38 வயல் வெளிப்பள்ளிகள் செயல்படுத்தப்படுகிறது.

பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பத்தை மேற்கொள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூரில் 210 வேளாண் அலுவலர்களும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் நாக்பூரில் ஆறு வேளாண்மை அலுவலர்களும் பயிற்சி பெற்றனர். இவ்வாறு பயிற்சி பெற்ற வேளாண்மை அலுவலர்கள் பருத்தி பயிருக்கென 950 வயல்வெளிப்பள்ளிகள் செயல்படுத்தி வருகின்றனர். இத்தொழில் நுட்பத்தை பரவலாக்க மணிலாவில் 1280 செயல்விளக்கங்களும் பயறுவகைப் பயிர்களில், 530 நிரூபணங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பம் தவிர பூச்சி மற்றும் நோய் கணிப்பு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பூச்சி நோய் கணிப்பில் விவசாயிகள் மற்றும் துறையை சார்ந்த அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் மாநில ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு மையம் ஒன்று மதுரையில் ரூ. 12.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. திருச்சியில் ஏற்கனவே செயல்படும் மையத்துடன் கூடுதல் மையமாக இது செயல்படும். இந்த மையங்கள் மூலம் பயிர் உண்ணிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

இந்த ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்ப முறையை மேலும் வலுப்படுத்தும் வகையில் திருச்சி, சேலம், தர்மபுரி, பெரியார், மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய எட்டு இடங்களில் உயிரியல் கொல்லிகள் தயாரிப்பு மையங்கள் ரூ. 80 இலட்சம் செலவில் அமைக்கவும் பயிர் உண்ணிகள் சிறு/குறு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கிடைக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் நடப்பு 1994-95 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் உயிரியல் கொல்லிகள் பயிர் உண்ணிகள் மினிகிட்டுகள், ஒட்டுண்ணிகள், தாவரப்பூச்சிக் கொல்லிகள் மற்றும் பொறிகள் ஆகியவை

1995 ஏப்ரல் 19]

ரூ. 70 இலட்சம் செலவில் சிறு/குறு விவசாயிகளுக்கு 1994-95 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இயங்கி வரும் ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள் மூலம் உயிரியல் தடுப்பு முறைகளை மேற்கொள்ளும் வகையில் ஒட்டுண்ணிகள் தயாரிக்கப்பட்டு பல்வேறு பயிர்களில் தோன்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கரும்பில் தோன்றும் இடை கணுப்புழுவைக் கட்டுப்படுத்த 21 மையங்களிலும், தென்னை கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த 19 மையங்களிலும், ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. பருத்தி காய் புழுவைக் கட்டுப்படுத்த நியுக்ளியர் பாலி ஹைட்ரோசிஸ் நுண்ணுயிர் மூன்று மையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. மணிலா சிகப்புக் கம்பளிப் புழுவைக் கட்டுப்படுத்த நான்கு மையங்களிலும் நுண்ணுயிர் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னையில் தோன்றும் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த இரண்டு மையங்களிலும் ஒட்டுண்ணிகள் மற்றும் தாவர பூச்சிக் கொல்லிகள் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் பிப்ரவரி 95 வரை விநியோகம் செய்யப்பட்ட ஒட்டுண்ணி திட்டத்தின் சாதனைகள் அட்டவணை 2.7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

விற்பனை நடவடிக்கைகளை படிப்படியாக குறைத்தல்:

தமிழக அரசு மாநிலம் முழுவதும் பூச்சி மருந்து விற்பனையை துறை மூலம் மேற்கொள்ளக் கூடாது என ஆணையிட்டுள்ளது. அவ்வாறு பூச்சி மருந்து விற்பனை, தவிர்க்க இயலாத சூழ்நிலைகளான இயற்கை சீற்றங்கள், ஒட்டு மொத்த பூச்சி நோய் பாதிப்பு ஆகிய காரணங்களுக்காக மட்டுமே மேற்கொள்ளலாம். மேலும், அரசு இந்த பூச்சி மருந்து விற்பனையை கூட்டுறவு நிறுவனங்களான தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணி கூட்டுறவு மையம், ஆரம்ப வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் மூலமாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளது. அதன்படி 1-4-1994 முதல் வேளாண்மைத்துறையில் எவ்வித பயிர்பாதுகாப்பு மருந்துகளும் விற்பனைக்காக வாங்கப்படவில்லை.

[1995 ஏப்ரல் 19

மத்திய அரசு சார்பு திட்டங்கள்

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம்

தமிழ்நாட்டில் நெற்பயிர் மிகுதியாக பயிரிடப்படும் மாவட்டங்களில், அரிசி உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தொடர்ந்து உந்துகை அளிக்கப்பட்டு வருகின்றது. 1993-94 ஆம் ஆண்டு வரை நெற்பயிருக்கும், சோளம் மற்றும் கேழ்வரகு பயிருக்கென தனியாக திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. மைய அரசு ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தை, ஒருங்கிணைந்த தானிய (அரிசி) உற்பத்தித் திட்டமாக மாற்றி அமைத்ததன் காரணமாக 'சிறப்பு உணவு தானியங்கள் உற்பத்தி திட்டத்தில் 'செயல்படுத்தப்பட்ட இனங்கள் இப்புதிய திட்டத்துடன் இணைக்கப்பட்டன. மாநில/தேசிய சராசரி அரிசி உற்பத்தித் திறனுக்குக் குறைவாக உள்ள 140 வட்டாரங்களைத் தெரிந்தெடுத்து, மாற்றியமைக்கப்பட்ட 'நெற்பயிரைச் சார்ந்த ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டம் ' செயல்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட அரிசி மற்றும் சிறுதானிய இரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.200/- மானியம் வீதமும், திருந்திய பண்மைக் கருவிகளுக்கு 50 சத மானியம் ஒரு கருவிக்கு ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ. 1,500/- வீதமும் உற்பத்தி திறனை அதிகப்படுத்த கிராம பஞ்சாயத்துகளுக்கு விருது, உற்பத்தி தொழில்நுட்ப விளக்க தளைக்கு ஏக்கருக்கு ரூ.2,000/-, வீரிய ஒட்டுநெல் விளக்க தளைக்கு ஏக்கருக்கு ரூ.1000/- மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிர்வாக விளக்கத் தளைக்கு ரூ.6,000/- என்ற வீதத்தில் உதவித்தொகை அளிக்கப்படுகிறது. உள்ளிட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சில்லரை செலவினங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு போதுமான நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

இனவாரியாக இலக்கு மற்றும் பிப்ரவரி '95 வரை சாதனை அட்டவணை 2.8-ல் அளிக்கப்பட்டுள்ளது.

நெல் சிறுதளைகள் திட்டம் :

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் விரைவாக விவசாயிகளிடையே பரவச்செய்யவும், வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்பு தன்மையை தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்களின் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும் நெல் சிறு தளைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் முழு செலவினையும் மத்திய அரசே ஏற்கிறது.

1995 ஏப்ரல் 19]

இத்திட்டத்தின் கீழ் வெளியிடப்படவுள்ள ஐஈடி-11673, இரண்டு கிலோ சிறுதளை பைகள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். விழுப்புரம் - இராமசாமி படையாச்சியார், வடாற்காடு-அம்பேத்கார், இராமநாதபுரம், பசும்பொன், மற்றும் காமராசர் ஆகிய ஆறு மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. சமீபத்தில் வெளியிடப்பட்ட இரகங்களின் (இரண்டு கிலோ) சிறுதளை பைகள் நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு கிலோ சிறுதளை பை ஒன்றின் மதிப்பு ரூ.20/- ஆகும். விவசாயிகளிடமிருந்து சிறுதளை பை விலையில் 10 சதம் பெற்றுக்கொண்டு சிறுதளைப் பைகள் விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் இலக்கு மற்றும் பிப்ரவரி 1995 வரையிலான சாதனை விவரம் அட்டவணை 2.9-ல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1995-96-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

சிறுதானிய சிறுதளைகள் :

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் விவசாயிகளிடையே விரைவில் பரவச் செய்யவும், வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்பு தன்மையை தெரிந்து கொள்ளவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் குறிப்பாக சிறு/குறு விவசாயிகளிடமிருந்து சிறுதளை பையின் விலையில் 10 சதத்தை பெற்றுக்கொண்டு விநியோகம் செய்யப்படுகின்றது. இத்திட்டம் நாகப்பட்டினம்-காயிதே மில்லத், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு சிறுதளை பையின் அளவு, அதன் மதிப்பு விபரம் மற்றும் சாதனை விபரம் அட்டவணை 2.10 மற்றும் 2.11-ல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் பகுதியில் மக்காச்சோளம் மற்றும் சிறுதானியங்கள் தீவிர சாகுபடி திட்டம் :

ஆதி திராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளை ஊக்குவித்து புதிய தொழில் நுட்பங்களை கடை பிடிப்பதின் மூலம் மக்காச்சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானிய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் கன்னியாகுமரி, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு செயல் விளக்கமும் 0.5 முதல் 1 எக்டர்

பரப்பில் அமைக்கப்படும். பயிர்வாரியாக அளிக்கப்படும் நிதி உதவி மற்றும் சாதனை விபரம் அட்டவணை 2.12 மற்றும் 2.13-ல் அளிக்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின் கீழ் 100 நிருபணங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம் :

பயறு வகைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் 1986-87-ல் தேசீய பயறுவகை அபிவிருத்தித் திட்டம் துவங்கப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டு வரை சிறப்பு உணவு தானிய உற்பத்தி திட்டம் (பயறுவகை) மற்றும் பயிர் பாதுகாப்பு (குடை) என இரு தனித்தனி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. இவை தேசிய பயறுவகை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் 1994-95 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இனவாரியாக 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி 95 வரையிலான பொருள் மற்றும் நிதி சாதனை அட்டவணை 2.14-ல் அளிக்கப்பட்டுள்ளது.

தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம் :

அதிகரித்து வரும் பருத்தி தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் பருத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளதால் இதர வழிமுறைகள் கண்டறியப்பட்டு வருகின்றன. செங்கை எம்.ஜி.ஆர். கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் இவ்வொருங்கிணைந்த தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இனவாரியாக 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி 1995 வரையிலான பொருள் மற்றும் நிதி சாதனை அட்டவணை 2.15-ல் அளிக்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி திட்டம் :

புதிய கண்டுபிடிப்புகளை விவசாயிகள் ஆர்வத்துடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாகவும் முக்கியமான இடுபொருட்களை மானிய

1995 ஏப்ரல் 19]

விலையில் வழங்குவதன் மூலமும் எண்ணெய்வித்துகள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 1994-95 ஆம் ஆண்டில் பிப்ரவரி 95 வரை இனவாரியான பொருள் மற்றும் நிதி சாதனை அட்டவணை 2.16-ல் அளிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் பனை சாகுபடி திட்டம் :

சமையல் எண்ணெய் தேவையினை மாநிலத்திலேயே உற்பத்தி செய்து கொள்ளும் வகையில் 1992-93 ஆம் ஆண்டு எண்ணெய்பனை சாகுபடி திட்டம் துவக்கப்பட்டது. 3.40 இலட்சம் முளைவிட்ட எண்ணெய்ப்பனை விதைகளை கோஸ்டாரிக்காவிலிருந்தும், 25,000 முளைவிட்ட எண்ணெய் பனை விதைகள் கேரளா மாநிலம் பாலோடிலுள்ள மைய மலைப்பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்திலிருந்தும் தருவிக்கப்பட்டு அரசு விதைப்பண்ணைகளில் நாற்றுவிடும் பணி 1992-93-ல் எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

1993-94 ஆம் ஆண்டிலும் அதே போல் 3.4 இலட்சம் முளைவிட்ட எண்ணெய்பனை விதைநாற்றுகள் காஸ்டாரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. மேலும் பாலோடு மைய மலைப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 25,000 முளைவிட்ட விதைநெற்றுகள் பெறப்பட்டு முந்தைய ஆண்டைப்போலவே அரசு விதைப்பண்ணைகளில் நாற்றுக்கள் அமைக்கப்பட்டது. மேலும் எண்ணெய்பனை சாகுபடி பரப்பு அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் திருச்சி, தஞ்சாவூர், நாகை காயிதேமில்லத் ஆகிய காவிரிப் பாசனபகுதி மாவட்டங்களில் நாற்று ஒன்றுக்கு ரூ. 25/- வீதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1671 எக்டர் நடவு மேற்கொள்ளப்பட்டது ஒவ்வொரு விவசாயிகளுக்கும் அதிக பட்சமாக 6 எக்டர் சாகுபடி மேற்கொள்ளும் வகையில் 900 கன்றுகள் வரை விநியோகிக்கப்பட்டது. இம்மாவட்டங்களை சேர்ந்த 1092 விவசாயிகள் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களுக்கு கல்வி சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டு எண்ணெய் சாகுபடி மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டது. 1994-95-ல் இயற்றப்பட்ட எண்ணெய்பனை சட்டம், எண்ணெய்பனை அபிவிருத்தி மற்றும் பதனிட்டு சுத்திகரிக்கும் ஆலைகள் அமைக்கும் பணிக்கு வழிவகுக்கிறது. 1994-95-ஆம் ஆண்டும் 3.40 இலட்சம் முளைவிட்ட எண்ணெய் பனை விதைகள் கோஸ்டாரிகா மற்றும் ஐவரி கோஸ்ட் ஆகிய

இடங்களிலிருந்து தருவிக்கப்பட்டு நாற்றுவிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாகுபடி பரப்பு விரிவு படுத்தும் பணியின் கீழ் நடப்பு ஆண்டின் குறியீடான 2329 எக்டருக்கு பிப்ரவரி 95 வரை 750 எக்டர் நடவு செய்யப்பட்டுள்ளது. நடவு செய்யப்பட்ட மூன்றாவது ஆண்டிலிருந்து உற்பத்தி எதிர்ப்பார்க்கப்படுகிறது. எக்டருக்கு சுமார் 20 மெ.டன் என்ற அளவிற்கு பழக்குலைகள், நட்ட ஐந்தாவது ஆண்டிலிருந்து கிடைக்கும்.

இனவாரியாக பொருள் மற்றும் நிதி சாதனை பிப்ரவரி 95 வரை அட்டவணை 2.17-ல் அளிக்கப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து தீவிரமாக செயல்படுத்தப்படும்.

அயல் நாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்.

1. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம்.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் இத்திட்டம் ஏழு வருடதிட்டமாகும். இத்திட்டம் 1991-ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டப் பணியின் இடைக்கால ஆய்விற்குப் பின், 7 இனங்களின் ஒதுக்கீடு 309 கோடி ரூபாயிலிருந்து 410 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. பிப்ரவரி 1995 வரை 109 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, ரூ. 92.37 கோடிக்கு சரி கட்டும்பட்டியல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, இதில் 89.17 கோடி ரூபாய், மாநில அரசிற்கு திரும்பப்பெறப்பட்டது.

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

அ. அபிவிருத்தி தடைகளை கண்டறிந்து அதை களைவதற்கான வழிமுறைக்கு முன்னுரிமை அளித்து அரசின் செயல் திறனை மேம்படுத்துவது.

ஆ. விவசாயிகளுக்கு குறைந்த செலவில் சேவையை மேம்படுத்துதல்.

இ. மாநில வேளாண்மை தொலை நோக்கு திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி திட்டத்தில் முன்னுரிமை அளித்து உறுதுணை செய்தல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

1. வேளாண் உற்பத்தி மற்றும் வருவாயை அதிகரித்து கிராமப்புற ஏழ்மை நிலையை போக்குதல்.

2. சுற்றுப்புறச் சூழல் குறைகள் உள்ள மானாவாரி நிலங்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

மேற்கண்ட குறிக்கோள்களை அடையும் வகையில் வேளாண் துறை மூலம் பின்வரும் நான்கு திட்ட இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. வேளாண்மைத் திட்டமிடுதல்.
2. வேளாண்மை விரிவாக்கம்.
3. விதை உற்பத்தி
4. நீர்ப்பிடிப்பு மேம்பாடு.

வேளாண்மை திட்டம்:

மாநில மற்றும் மாவட்ட அளவில் திட்ட செயல்திறனை செம்மைப்படுத்துவது இத்திட்ட இனத்தின் நோக்கமாகும். இவ்வினத்தின் முதல் நடவடிக்கையாக துணை வேளாண்மை இயக்குநர் (கொள்கை, திட்டம், மேலாண்மை) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வலுவலர்கள் மாவட்ட அளவில் வேளாண் துறை நடவடிக்கைகளை திட்டமிட்டு வரன்முறை செய்து செயல்படுத்த உதவி வருகிறார்கள். இதுபோல் மாநில அளவில் திட்டப் பிரிவும் செம்மைப்படுத்தப்பட்டு, வரன்முறை மற்றும் மதிப்பீடு பிரிவு, கொள்கை திட்டம் மற்றும் மேலாண்மை பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. இத்துறையின் மேலாண்மை தகவல் முறையை மேலும் செம்மைபடுத்தும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிப்பொறிகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு இப்பணிக்காக ரூ. 7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மாநில அளவில் இருந்து வட்ட அளவு வரை, திருச்சி, மாவட்டம் துவாக்குடியில் உள்ள மாநில பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்திலும் தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னையிலும் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்பட்டனர். வேளாண்மை ஆணையர் அலுவலக கணிப்பொறி அறைக்கென தடையில்லா மின் வசதி பெறும் வகையில் இரண்டு ஜெனரேட்டர்கள் வாங்கவும் திட்டமிடப்பட்டு, 1994-95-ஆம் ஆண்டு ரூ. 22.20 இலட்சம்

[1995 ஏப்ரல் 19

செலவில் இத்திட்ட இனம் செயல்படுத்தப்படுகிறது. 195-96-ஆம் ஆண்டுக்கு இவ்வினத்திற்கு ரூ. 139.28 இலட்சம் கோரப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்கம்.

வேளாண் விரிவாக்கத்தை பலமுனைப்படுத்தும் நோக்கத்துடன் விவசாயிகளை ஈடுபடுத்தும் வகையில் ஒரு வட்டாரத்திற்கு 10 மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றது. இத்துறையைச் சேர்ந்த முதுநிலை மற்றும் நடுநிலை அலுவலர்களுக்கும், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் விரிவாக்கத் திறமைகளை வலுப்படுத்தும் வகையில் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம், குடுமியான்மலையில் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1994-95-ம் ஆண்டில் வேளாண்மை ஆணையர் அலுவலகத்திற்கு கூடுதல் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கும், 5 மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் 23 உதவி வேளாண்மை இயக்குனர் அலுவலகங்களுக்கும் கட்டிடம் கட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்கள் அலுவலகங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு உலக வங்கியின் இடைக்கால ஆய்வின் போது கோரப்பட்டுள்ளது. இந்த கட்டுமானப்பணிகள் தவிர இதர சாதனங்களான புகைப்படக் காமிரா, கணிப்பொறி மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காகவும் ரூ. 1,521.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பிப்ரவரி 95 வரை ரூ.811.81 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1995-96-ஆம் ஆண்டில் 400 நிருபணங்கள் மற்றும் விவசாயிகள் பேரணி, 2100 அனுசரணை ஆராய்ச்சித் திடல்கள் மற்றும் பண்ணைத் திடல்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவாக்க சாதனங்களான துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் ஆகியவற்றின் மூலம் தொழில் நுட்பங்களை பரவலாக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதாந்திர மண்டல தொழில் நுட்பக் கூட்டங்கள் மற்றும் முன் பருவ பயிற்சிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டு போதுமான நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சம்பளம் மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

விதை உற்பத்தி.

விவசாயிகளுக்கு தரமான விதைகளை விநியோகம் செய்யும் நோக்கத்துடன், கிடங்குகள், கதிரடிக்கும், களங்கள், பண்ணை மேம்பாட்டுப்

1995 ஏப்ரல் 19]

பணிகள், முள்வேலி அமைத்தல், கிணறுகள் தோண்டுதல், பம்பு செட்டுகள் அமைத்தல் ஆகிய உள்ளிருப்பு வசதிகல் மூலம் ஆதார விதை உற்பத்தியை மாநில விதைப் பண்ணைகளில் இவ்வினத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. 1994-95-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ. 129.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பிப்ரவரி 95 வரை ரூ.47.97 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டு இவ்வினத்தின் கீழ் நடப்பு ஆண்டின் முடிவுறாத பணிகள் மேற்கொள்ளப்படும்.

நீர்ப்பிடிப்பு மேம்பாடு.

சாகுபடிக்கு உகந்த மற்றும் சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், மண்ணின் ஈரத் தன்மையை முடிந்த வரை உபயோகித்தல், மண் மற்றும் நீர் பராமரிப்பு மூலம் அதிகப்படியான நீர்வழிந்து ஓடுவதை கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்ட இனத்தின் நோக்கமாகும். 90,000 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் 54,000 எக்டர் பாலாறு மற்றும் வெள்ளார் நீர்ப்பிடிப்பு பகுதியிலும் மீதமுள்ள 36,000 எக்டர் 12 விஸ்தரிப்பு செய்யப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்ட இனத்தின் கீழ் மண் வளப்பாதுகாப்பு முறைகளான தாவர தடுப்பு, நிருபணங்கள், புல்வெளி அமைத்தல் மற்றும் மண் அளவை ஆகியவையும், நீர்வள பாதுகாப்பு முறைகளான அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், கசிவு நீர் குட்டைகள் அமைத்தல், வடிகால் வசதி, தாவர தடுப்புச் சுவர், மரங்கள் நடுதல் மற்றும் அவற்றைப் பேணுதல், பழக்கன்றுகள் நடவு செய்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சி வரன்முறை மற்றும் மதிப்பீட்டு பணிகள் இத்திட்ட இனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. 1994-95-ஆம் ஆண்டு ரூ. 534 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படும் இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 95 வரை ரூ. 382.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த ரூ.534 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டில் மேற்கண்ட 4 திட்ட இனங்களிலும் பிப்ரவரி 95 முடிய சாதனை அட்டவணை 2.18-ல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம்.

அயல்நாட்டு உதவியுடன் செயல்படும் இத்திட்டம் தமிழ்நாட்டில் டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் செயல்படுகிறது. இத்திட்டம் சிறு குறு விவசாய பண்ணை மகளிரின் வேளாண் தொழில் நுட்பங்களின்

[*1995 ஏப்ரல் 19*

திறமையை மேம்படுத்துதல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு குறு விவசாய குடும்பங்களின் உணவு தன்னிறைவை அதிகரித்தல், பண்ணை மகளிரின் வேளாண் பணியினை சிறப்பித்தல் மற்றும் அவர்களின் முழுத்திறனையும் வெளிக்கொணர்தல் ஆகிய நோக்கங்களுடன் செயல்படுகிறது. இத்திட்டம் 1986 முதல் ஏப்ரல் 1993 வரை பகுதி-1 திட்டமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பகுதி 1-ல் 495 கிராம நிலைப் பயிற்சி 14782 பண்ணை மகளிருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 193 முதல் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின் பகுதி-2 ரூ. 28.73 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்பட்டு வருகிறது. படிப்படியாக இத்திட்டம் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த பகுதி-2-ல் 2976 கிராம நிலைப் பயிற்சி மூலம் 74,400 பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பகுதி-2 திட்டத்தின் முக்கிய நோக்கம் சிறு/குறு விவசாய குடும்பத்தைச் சார்ந்த பண்ணை மகிளிருக்கு புதிய தொழில் நுட்ப உதவிகளை கையாளுவதில் பயிற்சி அளித்து உற்பத்தியை பெருக்குதல் மற்றும் பண்ணை மகளிரின் முழு திறனையும் வெளிக்கொணர்தல் ஆகியவையே ஆகும். 1994-95-ஆம் ஆண்டில் செங்கை எம்.ஜி.ஆர். தென்னாற்காடு வள்ளலார், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பசும்பொன், நெல்லை கட்டபொம்மன், மதுரை, சேலம், திருச்சி மற்றும் தருமபுரி ஆகிய பத்து மாவட்டங்களில் ரூ. 292.42 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 234 கிராம நிலைப்பயிற்சிகள் 88 சிறப்பு பயிற்சிகள், 52 பண்ணை மகளிர் கருத்தரங்குகள், 1872 தொடர் நடவடிக்கை நிருபணங்கள் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டில் 5850 சிறு/குறு விவசாய குடும்பத்தைச் சார்ந்த பண்ணை மகளிருக்கு இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. 1995-96-ஆம் ஆண்டில் மேலும் இத்திட்டம் வடாற்காடு அம்பேத்கார், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், நாகப்பட்டினம் காயிதே மில்லத், பெரியார், கோயம்புத்தூர், காமராசர், திண்டுக்கல் அண்ணா மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்படும். இம்மாவட்டங்களில் முன்னோடி நடவடிக்கைகள் மற்றும் மகளிர் வேளாண் அலுவலர்களை பணி அமர்த்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1995-96 ஆம் ஆண்டில் 441 கிராம நிலைப் பயிற்சி, 155 சிறப்பு பயிற்சிகள், 98 பண்ணை மகளிர் கருத்தரங்குகள் மற்றும் 3996 தொடர் நிருபணங்கள் ரூ. 429.33 இலட்சம் செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 11,025 சிறு/குறு விவசாய குடும்பத்தைச் சார்ந்த பண்ணை மகளிர் பயிற்சி அளிக்கப்படுவார்கள். 1994-95-ஆம் ஆண்டில் பிப்ரவரி 95 வரை இத்திட்டத்தின் கீழ் சாதனை அட்டவணை 2.19-ல் அளிக்கப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1995 ஏப்ரல் 19]

மானாவாரி நிலங்களில் வேளாண் காடுகள் (சிடா திட்டம்)

சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சமூக காடுகள் திட்டத்தின் பகுதி-2ன் ஒரு பகுதியாக மானாவாரி நிலங்களில் வேளாண் காடுகள் திட்டம் வேளாண் துறையினரால் 1988 முதல் 5 ஆண்டு திட்டமாக செயல்படுத்தப்பட்டு 1994-95-ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் உணவு, தீவனப் பொருள்கள், எரிபொருள் ஆகியவை மற்றும் இதர வனப்பொருள்களை சிறு/குறு விவசாயிகளுக்கு தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 153.00 இலட்சம் கிடைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி தவிர இதர 18 மாவட்டங்களிலும் 14,4278 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சிறு/குறு விவசாயிகளுக்கு இலவசமாக 500 கன்றுகள் வரை வழங்கப்பட்டு வருகின்றது. பிழைத்து நிலைபெறும் மரங்களின் சதவிகிதத்தை அதிகமாக்கும் நோக்கத்துடன் வட்டாரத்திற்கு அருகாமையில் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் ஒட்டு மொத்தமாக தேர்ந்தெடுத்து அவற்றில் நடவு மேற்கொள்ளப்படுகின்றது. களப்பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் வேளாண் காடுகளின் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. 5 முதல் 6 நாட்களுக்கு நடைபெறும் இப்பயிற்சியில் பயிற்சி பெறுவோர் பல்வேறு இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தை செயல்படுத்தும் களப்பணியாளர்கள் தென் இந்தியாவில் உள்ள வேளாண் காடுகள் மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சில சிறப்பு விபரங்கள் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1994-95-ம் ஆண்டு பிப்ரவரி 1995 வரை இத்திட்டத்தின் சாதனை விபரம் பின்வருமாறு.

வேளாண்காடுகள் திட்ட சாதனை

இனம்	இலக்கு (1994-95)	பிப்ரவரி'95 வரை சாதனை
மரக்கன்றுகள் (ல.எண்கள்)	14,428	13,457
நிதி (இலட்சம் ரூபாயில்)	153.000	90.923

[1995 ஏப்ரல் 19

மாநில அரசின் திட்டங்கள்

தரிசு நில மேம்பாடு திட்டம்

தமிழ்நாட்டில் சாகுபடிக்கு உகந்த தரிசு நிலங்களை, சாகுபடி செய்து பசுமைப்படுத்துவதற்கு இத்திட்டம் ஒரு மாநில அரசு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ்

1. மர வகைகளான தைல மரம், புளி, மா, அக்கேசியா, சுபாபுல், சவுக்கு போன்ற நீண்ட கால மர வகைகள் வளர்த்தல்.

2. ஆரம்ப காலத்தில் மரக்கன்றுகளுக்கு இடையே ஊடுபயிர்களான சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, மிளகாய், பயறுவகைகள் ஆகியவை சாகுபடி மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை மேற்கொள்வதற்கு எக்டர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர்., கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல் அண்ணா, காமராசர், மதுரை, நெல்லை கட்டபொம்மன், வடஆற்காடு அம்பேத்கார், பசும்பொன், பெரியார், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தென்ஆற்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், திருச்சி. வ.உ.சிதம்பரனார் ஆகிய 17 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 1991-92 முதல் 1993-94 வரை 24,814 எக்டர்கள் ரூ. 371.768 இலட்சம் செலவில் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1994-95-ஆம் ஆண்டு, தேசிய தரிசு நில மேம்பாடு வாரியத்தின் அங்கீகாரம்பெற்ற ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிதி முழுவதையும் மத்திய அரசு அளிக்கிறது. வேளாண்மைத் துறை இதுவரை இதர துறைகளிலிருந்தும், அரசு சாரா நிறுவனங்களிலிருந்தும், 42 திட்டங்களுக்கான கருத்துருக்களைப் பெற்று பரிசீலனை செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. 1993-94 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கந்தர்வ கோட்டையில் 2155 எக்டர் பரப்பில் ரூ.327.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் ஒரு மைய அரசு திட்டம் செயல்படுகிறது. 1995-96-ல் மேலும் பல திட்டங்கள் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1995 ஏப்ரல் 19]

தென்னை அபிவிருத்தி திட்டம்.

தமிழ்நாட்டில் தரமான தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்க பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. 26 தென்னை நாற்றங்கால்கல் மூலம் நெட்டை மற்றும் நெட்டை குட்டை இரகங்கள், ஆறு தாய் நாற்றங்காலிலிருந்து நெட்டை இரசு நெற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. 19 ஒட்டுண்ணி மையங்கள் மூலம் தென்னையில் தோன்றும் கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேலும், இரண்டு மையங்களில் பச்சைக் காளான்கள் உற்பத்தி செய்யப்பட்டு, தென்னையில் தோன்றும், காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த விநியோகிக்கப்படுகிறது. 1994-95-ஆம் ஆண்டில் தென்னை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இலக்கு மற்றும் சாதனை விவரம் அட்டவணை 2.20-ல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1995-96-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தென்னை வாடல் நோய் கணக்கெடுப்பு திட்டம்.

தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்னை நமது கலாச்சாரம் மற்றும் பொருளாதார அளவில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. மேலும் கடலோரப் பகுதிகளில் உள்ள சிறு/குறு விவசாயிகளின் பொருளாதாரத்தில் தென்னை வளர்ப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், இராமநாதபுரம், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் தென்னை வாடல் நோய் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. பரப்பு மற்றும் உற்பத்தியில் தமிழகம் தேசிய அளவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. தென்னை சாகுபடி பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து கொண்டே வருகிறது. தென்னையில் தோன்றும் பல்வேறு பூச்சி மற்றும் நோய்களில் தஞ்சாவூர் வாடல் நோய் மிக முக்கியமான ஒரு உயிர் கொல்லி நோயாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட மரங்கள் காய்ந்து மடிந்து விடும். இந்நோயினை ஆரம்பகாலத்தில் கண்டுபிடிப்பதன் மூலம் தென்னை மரங்கள் அழிவதை தடுப்பதுடன் உற்பத்தியையும் அதிகரிக்க இயலும், இந்நோயினை கண்டறிய கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. களப்பணியாளர்களுக்கு இந்நோயின் அறிகுறிகள் குறித்து பயிற்சி அளிக்கவும், பல்கலைக்கழக விஞ்ஞானிகளைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று மையங்களில்

பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. களப்பணியாளர்களுக்கு பயிற்சித் தொகை வழங்கவும், பல்வேறு பகுதிகளுக்கு அழைத்துச் சென்று பயிற்சி அளிக்கவும், ரூ.3.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் சமபங்கில் ஏற்கின்றன.

தென்னை அபிவிருத்தி வாரிய நிதி உதவியுடன்

தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்க திட்டம்.

தென்னை நெற்றுக்கள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்க திட்டம் கொச்சியில் உள்ள தென்னை அபிவிருத்தி வாரியம் வழங்கும் 100% நிதி உதவியுடன் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தென்னை நடவு செய்ய முதல் ஆண்டு ரூ.3,000-மும் இரண்டு மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் ரூ. 1,500 வீதமும் மொத்தம் எக்டர் ஒன்றுக்கு ரூ.600 மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் வழங்கப்படும் மானியத் தொகை தென்னை நடுவோருக்கு, தேவையான நாற்றுக்கள், குழிகள் எடுத்தல், நடவு மற்றும் இதர செலவினங்களுக்கும் இரண்டு மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் பராமரிப்பு செலவிற்கும் வழங்கப்படுகிறது. 1994-95-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 750 எக்டர் பரப்பு ரூ. 42.16 இலட்சம் செலவில் தென்னை சாகுபடியின் கீழ் கொண்டு வரப்படும். இத்திட்டம் 1995-96-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நெட்டை குட்டை விரிய ஒட்டு தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

ஒரு இலட்சம் நெட்டை குட்டை வீரிய தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும், 10% நெட்டை குட்டை தென்னங்கன்றுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 16.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 50% ஒதுக்கீடான ரூ. 8.25 இலட்சத்தினை தென்னை அபிவிருத்தி வாரியம் ஏற்கும்.

தென்னையில் உற்பத்தி திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணை முறை

தென்னை நெற்றுக்கள் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் வயது முதிர்ந்த மற்றும் நோயுற்ற தென்னங்கன்றுகளை மாற்றி நடுதல்,

1995 ஏப்ரல் 19]

பயிர் பாதுகாப்பு மற்றும் பல்வேறு தென்னை இரகங்களை பயிரிடுதல் ஆகியவை நடப்பு ஆண்டு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் பயன்பெறும் வகையில் ரூ.79 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதில் 10% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் 2500 எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் பின்வரும் நான்கு வழிகளில் செயல்படுத்தப்படும்.

அ. 20,000 எக்டர் பரப்பில் மரம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் வயது முதிர்ந்த மற்றும் நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுதல்.

ஆ. தென்னற்கன்று ஒன்றுக்கு ரூ. 5 வீதம் புதிய தென்னங்கன்றுகள் நடவு செய்தல்.

இ. மரம் ஒன்றுக்கு ரூ. 8 வீதம் உரம் மற்றும் பயிர்பாதுகாப்பு மருந்துகள் இட வழங்குதல்.

ஈ. பல இரக தென்னை சாகுபடி எக்டர் ஒன்றுக்கு ரூ.200 வீதம் 2000 எக்டர் பரப்பில் மேற்கொள்ளுதல்.

இலை உண்ணும் புழுவை கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த திட்டம்.

தென்னையில் இலை உண்ணும் புழுவைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் தயாரித்து விநியோகம் செய்ய, ஒரு மத்திய ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டு ஒரு மில்லியன் ஒட்டுண்ணிகள் விடுவதற்கு ரூ. 5,232 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்த்திற்கான செலவில் (50%) ரூ. 2,616 இலட்சத்தை தென்னை அபிவிருத்தி வாரியம் ஏற்றுக்கொள்கிறது.

ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம்.

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசு திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் திருத்திய தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் விவசாயிகளுக்கும் அதிக மகசூல் பெற வழிவகை செய்வதாகும். பின்வரும் வழிமுறைகள் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1. மேம்படுத்தப்பட்ட இரகங்களை அதிக பரப்பில் சாகுபடி செய்தல்.

2. பரிந்துரைப்படி உரமிடுதல் மற்றும் பயிர்பாதுகாப்பு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை அனைத்து சாகுபடி பரப்பிலும் மேற்கொள்ளுதல்.

3. இறவையில் 15% மானாவாரியில் 10% என்ற அளவில் சான்று பெற்ற மேம்படுத்தப்பட்ட வீரிய ஒட்டு இரகங்கள் விநியோகம் செய்தல்.

4. புரோடினியாவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையின் கீழ் நியூக்ளியர் பாலி ஹெட்ரோலிஸ் வைரஸ் உபயோகித்தல்.

இத்திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டு பிப்ரவரி 95 வரை சாதனை விவரம் அட்டவணை 2.21-ல் அளிக்கப்பட்டுள்ளது.

கரும்பு அபிவிருத்தித் திட்டம்.

பல்வேறு தொழில் நுட்பங்களை கையாண்டு கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் சிதம்பரனார், நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் முறைகளால் கரும்பு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பரிந்துரைப்படி உரமிடுதல், பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், நிருபணத்திடல்கள் அமைத்தல், கரும்பின் இடைக்கணுப்புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விடுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் கரும்பு உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது. 1994-95-ஆம் ஆண்டில் பிப்ரவரி 95 வரை சாதனை விவரம் அட்டவணை 2.22-ல் அளிக்கப்பட்டுள்ளது.

உழவர் பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாடு விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கும் வகையில் கோவை, மதுரை, திண்டுக்கல் அண்ணா மற்றும் நீலகிரி நீங்கலாக இதர 12 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் பயிற்சி தேவைகளை பிரிக்கப்படாத மாவட்டத்திலிருந்து உழவர் பயிற்சி நிலையங்கள் பூர்த்தி செய்து வருகின்றன. ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையமும், 22 கிராம நிலை பயிற்சி ஆண்/பெண் உழவர்களுக்கும், 10

1995 ஏப்ரல் 19]

கிராம நிலை பயிற்சி அமைப்பாளர்களுக்கும் மற்றும் உழவர் விவாதக் குழு உறுப்பினருக்கு 110 சுழற் பயிற்சி மற்றும் நிரூபணங்கள் ஆகியவையும் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, உழவர் பயிற்சி நிலையங்கள், செய்திக் கடிதம், செய்திப்பலகை, வானொலி செய்திப் பண்ணைச் செய்திகள், உழவர் விழா, விவசாயிகளுக்கு சுற்றுலா ஆகியவற்றில் மூலமும் பயிற்சி அளித்து வருகின்றன. ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையத்திற்கும் தகவல், ஒலி, ஒளி சாதனங்கள் வழங்கப்பெற்று, உழவர் பயிற்சியில் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 1994-95-ஆம் ஆண்டில் பிப்ரவரி 95 வரை சாதனை மற்றும் 1995-96-ஆம் ஆண்டில் உத்தேச இலக்குகள் அட்டவணை 2.23-ல் அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம்

குடுமியான்மலையில் அமைந்துள்ள மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம், தற்போது வேளாண்மை அலுவலர் (தொழில் நுட்பம்) வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை துணை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளித்து வருகிறது மேலும் புதிதாக பணியில் சேரும் வேளாண்மை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூத்த மற்றும் நடுநிலை அலுவலர்களான வேளாண்மை இணை இயக்குநர்கள், வேளாண்மை துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களுக்கு மேலாண்மை விரிவாக்க பயிற்சி அளிக்கும் வகையில் புதிதாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இது போன்ற கணிப்பொறி பயிற்சி அளிக்கும் வகையில் தேவையான உள்ளிருப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, இதுவரை மூன்று பயிற்சி வகுப்புகள் நடப்பு ஆண்டில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

1994-95-ஆம் ஆண்டு, பிப்ரவரி 95 வரை சாதனை மற்றும் 1995-96-ஆம் ஆண்டிற்கான உத்தேச இலக்கு விவரம் அட்டவணை 2.24-ல் அளிக்கப்பட்டுள்ளது.

மண் பரிசோதனை நிலையங்கள்:

தமிழ்நாட்டில் 14 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 15 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்து, குறிப்பான உரப்பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்துடன் பாசன நீர் ஆய்வு மற்றும் மண் வள வரைப்படம் தயாரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த மண் பரிசோதனை நிலையங்கள் தவிர, நெல்லை கட்டபொம்மன் மற்றும் திண்டுக்கல் அண்ணா ஆகிய இரண்டு இடங்களில் கூடுதலாக இரண்டு மண் பரிசோதனை நிலையங்கள் 1994-95 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த மண் பரிசோதனை நிலையங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. வேளாண் துறை மூலம் தற்போது மண் வள ஆய்வுகளும் இந்த நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு, மண் ஆய்விற்கான நம்பகரமான செய்முறைகளை கண்டறியவும், அதன் அடிப்படையில் முக்கிய பயிர்களுக்கான பரிந்துரைகள் கணக்கிடப்பட்டு உரப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும். மண் மாதிர் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் பெற்று ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படுகிறது. கிராம அளவிலான மண் வள நிலையை கண்டறிய மண் பரிசோதனை நிலையங்களின் செயல் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் உகந்த பரிந்துரைகளை அளிக்க ஏதுவாகிறது. 1994-95 ஆம் ஆண்டில், பிப்ரவரி 95 முடிய சாதனை மற்றும் 1995-96 ஆம் ஆண்டிற்கான உத்தேச இலக்குகள் அட்டவணை 2.25ல் அளிக்கப்பட்டுள்ளது.

மண்வள குறிப்பு அட்டைகள்:

தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மண் பரிந்துரை முறையை மாற்றி மண் வள குறிப்பு அட்டைகள் வழங்கும் முறை 1994-95 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மண்வள அட்டைகள் தற்போது அளிக்கப்பட்டு வரும் விவரங்கள் தவிர, கூடுதலாக மண்ணின் பௌதீக. இரசாயன மற்றும் உயிரியல் தன்மைகள் பற்றியும், மண்ணின் பல்வேறு சத்துக்களின் நிலை மற்றும் பிரச்சினையுள்ள பகுதிகளுக்கு சீர்திருத்த முறைகள் ஆகியவை அடங்கிய நிரந்தர அட்டையாக இது அமையும். இந்த மண் வளக் குறிப்பு அட்டையில் மேற்கண்ட விவரங்களுடன் பாசன நீரின் தன்மைகள் குறித்தும் விவரங்கள் அளிக்கப்படும். இவ்விபரங்கள் அடங்கிய கணிப்பொறி அட்டை ஒன்றுக்கு ரூ. 5 வீதம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும். நடப்பு ஆண்டில்

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்துக்கோட்டை, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலை, தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஓசூர் ஆகிய வட்டாரங்களில் 38000 பண்ணை குடும்பங்களுக்கு அட்டை வழங்கப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக தமிழ்நாட்டில் உள்ள 73 இலட்சம் பண்ணை குடும்பங்களுக்கும் இவ்வட்டைகள் வழங்கப்படும்.

பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்:

ஆண்டு ஒன்றுக்கு 17,820 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யக் கூடிய திறன் கொண்ட ஒன்பது பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1994-95 ஆம் ஆண்டு, பிப்ரவரி 95 வரை 15,863 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1995-96ம் ஆண்டிலும் இந்த பரிசோதனை மையங்கள் மூலம் பூச்சி மருந்து ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

உரப்பரிசோதனை நிலையங்கள்:

விவசாயிகளுக்கு தரமான இரசாயன உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி வழங்கும் நோக்கத்துடன் உரச்சட்டத்தின் கீழ், உர ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ள வேளாண்மை அலுவலர், சில்லரை, மொத்த விற்பனை, உற்பத்தி கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து உர மாதிரிகள் எடுக்கின்றார். தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 14,280 உர மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்ட எட்டு உரப் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, 1994-95 ஆம் ஆண்டில் சேலம், தர்மபுரி, கும்பகோணம், திருவாரூர், நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம் ஆகிய ஆறு இடங்களில் உரப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி 95 வரை 12,273 உர மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டிலும் இவ்வுர மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து செயல்படுத்தப்படும். உரக் கட்டுப்பாடு சட்டம் 1985ல் நிர்ணயித்த விதி முறைகளின்படி தரக்கட்டுப்பாடு அலுவலர்கள், விவசாயிகளுக்கு தரமான இரசாயன உரங்கள் கிடைக்கச் செய்யும் வகையில் தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் 1994-95 ஆம் ஆண்டு, 12,270 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 519 உர மாதிரிகள் தரமற்றவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒன்பது நபர்களுக்கு சட்டப்படி

தண்டனை அளித்தும், 390 மாதிரிகள் மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது.

மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு:

மண்ணின் தன்மை மற்றும் அவற்றின் குணாதிசியங்கள், பௌதீக மற்றும் இரசாயன தன்மைகள் ஆகியவற்றை கள ஆய்வின் போதும் ஆய்வகங்களில் கண்டறிந்து சோதனை முடிவின் அடிப்படையிலும் கண்டறியப்படுகிறது. இதன் அடிப்படையில் மண்ணின் வகைகள் பிரிக்கப்பட்டு அவற்றின் வரைபடம் வரைந்து பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1994-95 ஆம் ஆண்டில் 15.84 இலட்சம் எக்டர் இலக்குக்கு பிப்ரவரி 95 வரை 13.06 இலட்சம் எக்டர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டில் இப்பணிகள் தொடர்ந்து நான்கு மையங்களாக கோவை, தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

பயிர் விளைச்சல் போட்டி:

விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியை அதிகப்படுத்தும் பயிர் விளைச்சல் போட்டிகளில் விவசாயிகள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள வகை செய்ய இந்த பயிர் விளைச்சல் போட்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நெல், இறவை மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயிறு மற்றும் காராமணி ஆகிய பயிர்களுக்கு மேற்கொள்ளப்படுகிறது. நெற்பயிரின் போட்டிக்கான மாநில முதல் பரிசு ரூபாய் ஒரு இலட்சமும், இரண்டாம் பரிசுத்தொகை ரூபாய் ஐம்பதாயிரமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர் வாரியாக பரிசுத்தொகை விபரம் அட்டவணை 2.26 ல் அளிக்கப்படுகிறது.

1994-95 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 10.16 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

எம்.ஜி.ஆர். வீரிய ஒட்டு நெல் சாகுபடி போட்டி:

எம்ஜிஆர். வீரிய ஒட்டு நெல் 1994 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வீரிய ஒட்டு நெல் இதர உயர் விளைச்சல் இரகங்களை விட அதிக மகசூல் தரவல்லது. இந்த நெல்லின் அதிக உற்பத்தித் திறனை வெளிக்கொண்டு வரும் வகையில் விவசாயிகளிடையே போட்டி மனப்பான்மை உருவாக்கப்படுகிறது. இதற்கென அரசு ரூ. 10,000 மதிப்புள்ள தங்கப் பதக்கத்தினை இந்த வீரிய ஒட்டு

நெல்லில் மாநில அளவில் அதிக உற்பத்தித்திறன் எடுக்கும் விவசாயிக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் தொழில் நுட்ப அலுவலர்களுக்கான விருது.

வேளாண்மை விரிவாக்கத்தில் செயல்பட்டு வரும் தொழில் நுட்ப அலுவலர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த விருது அளிக்கப்படுகிறது. விருதுகளின் பரிசுத்தொகை விபரம் பின்வருமாறு

1.	தங்கப்பதக்கம்	1 எண்	ரூ. 1600
2.	வெள்ளிப்பதக்கம்	1 எண்	ரூ. 1200
3.	வெண்கலப்பதக்கம்	20 எண்ணிக்கை	ரூ. 9500
		மொத்தம்	ரூ. 12,300

1994-95 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இந்த விருது வழங்குவது 1995-96ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(அ) கரும்பு விலை:

1994-95 ஆம் பருவத்தில், 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச கரும்பு விலையாக ரூ. 391/ என மத்திய அரசு அறிவித்த விலை மிகவும் குறைவானதாகும். இந்த சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையை எதிர்த்து கரும்பு விவசாயிகள் கருத்து தெரிவித்து சட்டப்பூர்வ குறைந்த பட்ச விலையாக கூடுதல் விலை நிர்ணயிக்க வேண்டுமென்று கோரினர். இதன் அடிப்படையில் சர்கரை ஆலைகளுக்கு தேவையான கரும்பு உற்பத்தி செய்ய வேண்டுவதற்காகவும், சர்க்கரை உற்பத்தியை பெருக்கிடவும், தமிழக அரசு, கரும்பு விவசாயிகள் மற்றும் ஆலை உரிமையாளர்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி நடப்பு 1994-95 ஆம் அரவைப் பருவத்திற்கு 8.5% சர்க்கரை சத்துள்ள கட்டுமானத்திற்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.525/ வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. [அரசாணை எண் 732 வேளாண்மை (கரும்புத்) துறை, நாள் 21-12-1994.]

இதன்படி நடப்பு 1994-95 ஆம் ஆண்டிற்கு கரும்பு விவசாயிகளுக்கு மத்திய அரசு அறிவித்த விலையான ரூ.391/ ஐவிட டன் ஒன்றுக்கு ரூ. 134/ என உயர்த்தி அறிவிப்பு செய்தது ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

மேலும் கரும்பு விவசாயிகள் தங்கள் வயலிலிருந்து சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அனுப்ப வாகன வாடகையில் சலுகை அளிக்கும் வகையில், கடந்த ஆண்டைப்போலவே நடப்பு 1994-95 ஆம் ஆண்டிற்கும்

20 கி.மீ. தூரத்திற்கு மட்டும் விவசாயிகள் வாகன வாடகை செலுத்தவும் 20 கிமீட்டருக்கு அதிகப்படியான தூரத்திற்கு, அந்தந்த சர்க்கரை ஆலைகளே வாகன வாடகை ஏற்க வேண்டுமெனவும் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) கரும்பு சாலை திட்டம்

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு வகை செய்யும் கரும்புச் சாலை மேம்பாட்டுத்திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. கரும்பு போக்குவரத்தை எளிதாக்குவதே இச்சாலை அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். 1949 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் இம்மாநிலத்தில் சர்கரை ஆலைகளுக்கு விற்கப்படும் கரும்புகளுக்கு டன் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்ற வீதத்தில் விதித்து வசூலிக்கப்படும் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஒரு பகுதி கரும்பு சாலை மேம்பாட்டுத்திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரி விவரம் வருமாறு:—

வருடம்	ரூபாய் இலட்சத்தில்
1990-91	1055.85
1991-92	702.86
1992-93	810.40
1993-94	575.75
1994-95 (31-12-1994 வரை)	576.44

கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் சாலை பராமரிப்பு பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றியவிவரம் பின்வருமாறு

ஆண்டு	புதியசாலைகள் (கிமீட்டரில்)	புதியதாக சாலைகள் அமைத்த தூரம்.	பராமரிப்பு	மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்)
1990-91	150.06	32.495	150.13	300.19
1991-92	162.00	35.778	500.10	662.00
1992-93	375.00	12.000	98.17	473.17
1993-94	200.00	18.870	300.00	500.00
1994-95 (நவம்பர் 1994 வரை)	101.90	28.500	100.00	201.90

1995-96 ஆம் ஆண்டில் ரூ. 518 இலட்சம் செலவில் புதிய சாலைப் பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 396 இலட்சம் செலவில் பழைய சாலைகளைப் பராமரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசு ஆதரவுள்ள கரும்பு வளர்ச்சியில் ஆதாரமுள்ள பயிர் செய்யும் திட்டம்

விதையிலேயே பயிரைத் தாக்கும் நோய்களிலிருந்து விதைகளைப் பாதுகாத்து பக்குவப்படுத்தவும், தரமுள்ள விதைகளை வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், புதிய மற்றும் மறுதாம்புப் பயிர்களுக்கான நவீன உற்பத்தி தொழில் நுட்பங்களைக் கையாண்டு கரும்பு உற்பத்தியைப் பெருக்கவேண்டி, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கரும்பு வளர்ச்சியில் ஆதாரமுள்ள பயிர்த் திட்டத்தில் ஒரு புதிய ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடப்பு நிதி ஆண்டாகிய 1995-96 ல் தொடங்கி எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய காலத்தில், 75:25 என்ற நிதி விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தலாம் என்று 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மத்திய அரசு அறிவித்தது.

இந்த அரசின் கருத்துருவின் அடிப்படையில், மத்திய அரசு இந்தத் திட்டத்தை ரூ. 75.50 இலட்சம் செலவில் (மத்திய அரசின் பங்கு ரூ. 62.875 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ. 12.625 இலட்சம்) 1995-96 ல் நடைமுறைப்படுத்த ஆணை வழங்க உள்ளது. கீழ்க்காணும் வகைகளில் பூர்வாங்க வேலைகளைத் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(1)	வயல் விளக்கங்கள்	..	150
(2)	மாநில அளவிலான பயிர்	..	16
(3)	விவசாயிகளுக்கு பயிற்சி	..	80
(4)	விவசாயக் கருவிகள்	..	110
(5)	திசுக்கள் வளர்ச்சி மையம்	..	3
(6)	தாவர பூச்சிக்கொல்லி மையம்	..	2
(7)	விதைகளைப் பெருக்குதல்	..	840

மேற்குறிப்பிட்ட திட்டத்தை 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 210 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

இணைப்பு

அட்டவணை 2.3

1995-96 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி இலக்குகள்

வ.எண்.	பயிர்.	1995-96 ஆம் ஆண்டிற்கான இலக்கு. பரப்பு (வ.எக்டர்)	உற்பத்தி (ல.மெ.டன்)
1.	நெல்	21.00	66.75
2.	சிறுதானியங்கள்	15.00	19.25
3.	பயறுவகைகள்	10.00	6.50
	உணவு தானியங்கள்	46.00	92.50
4.	எண்ணெய்வித்துக்கள்	14.00	14.75
5.	கரும்பு (வெல்லம்)	2.50	26.04
6.	பருத்தி (லட்சம் பொதிகள்)	2.50	6.80

அட்டவணை 2.4

பல்வேறு பயறுகளுக்கான விதை மாற்று சதவிகிதம்

வ.எண்.	பயிர்.	விதை மாற்று சதவிகிதம் மாநில அரசு	மத்திய அரசு
1.	பயறு வகைகள்	12.5	11
2.	பருத்தி		
	மானாவாரி	10	15
	இறவை	15	--
3.	எண்ணெய்வித்துக்கள்		
	மணிலா	5	3
	எள்	15	10
	சூரியகாந்தி	50	50
	ஆமணக்கு	30	20
	சோயாமொச்சை	25	--

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 2.5

1994-95 ஆம் ஆண்டில் விதை விநியோகத்திட்ட சாதனை மற்றும் 1995-96 ஆம் ஆண்டு குறியீடு (மெ.டன்)

வ.எண்.	பயிர்	1994-95 குறியீடு	1994-95 பிப்ரவரி '95 வரை சாதனை	1995-96 குறியீடு
1.	நெல்	18,000	17,219	**
2.	சிறுதானியங்கள்	400	469	**
3.	பயறுவகைகள்	2,500	1,710	2,550
4.	பருத்தி	375	315	340
5.	எண்ணெய்வித்துக்கள்	11,528	9,365	111,99
	மொத்தம்	32,803	29,078	

**இவ்விரு பயிர்களுக்குமான குறியீடுகள் தேசிய திட்டங்களில் குறியீட்டைபொறுத்து நிர்ணயிக்கப்படும்.

அட்டவணை 2.6

சத்துக்கள் உபயோகம் (இலட்சம் மெ.டன்)

வ.எண்.	சத்துக்கள்	1994-95 இலக்கு	1994-95 பிப்ரவரி '95 வரை சாதனை	1995-96 குறியீடு
1.	தழை	6.16	4.50	6.10
2.	மணி	2.53	1.76	2.70
3.	சாம்பல்	2.42	2.19	2.60
	மொத்தம்	11.11	8.45	11.40

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 2.7

உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சாதனை

பயிர்	பூச்சி	பரப்பு அளவு (எக்டர்) 1994-95 இலக்கு	பிப்ரவரி '95 முடிய சாதனை
கரும்பு	இடைக்கணுப்புழு (டிரைகோகிராமா)	10,500	9,350
தென்னை	(1) கருந்தலைப்புழு (பெத்திலிட்ஸ் ப்ரகானிட்ஸ் மற்றும் யுலோபிட்ஸ்)	10,250	6,634
	(2) காண்டாமிருக வண்டு (பச்சை மஸ்கர்டைன் காளான்)	10,000	9,093
பருத்தி	காய்புழு (என்பிவி)	1,200	2,000
மணிலா	சிவப்பு கம்பளிப்புழு (என்பிவி)	480	408

அட்டவணை 2.8

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம்

இனம்/அலகு	பொருள் இலக்கு 1994-95	பொருள் பிப்ரவரி '95 வரை சாதனை	நிதி (இலட்சம் ரூபாயில்) இலக்கு 94-95	நிதி (இலட்சம் ரூபாயில்) பிப்ரவரி '95 வரை சாதனை
1. அ. சான்று பெற்ற நெல் விதை விநியோகம்—ஐ.ஆர். 64, ஐ.ஆர். 50, ஆடுதுறை 37, 38, அம்பை 16, 17, 18 திருந்திய வெள்ளைப் பொன்னி, பையூர் 1 குவிண்டாலுக்கு ரூ. 200 வீதம் (மெ.டன்).	15,112	11,334	302.24	226.68

.

1995 ஏப்ரல் 19]

ஆ. சான்றுபெற்ற மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு, குவிண்டாலுக்கு ரூ. 400 வீதம் (மெ.டன்)	315	236	12.60	9.44
2. பண்ணைக் கருவி-கள் விநியோகம் 50% மானியத்தில் ரூ 1,500-க்கு மிகாமல் ஒரு கருவி/ஒரு விவசாயிக்கு (எண்)	30,800	30,800	88.50	88.50
3. கிராம பஞ்சா-யத்துக்கு விருதுகள் (எண்)	140	—	77.00	—
4. நிருபணத் திடல்கள்—				
அ. உற்பத்தித் தொழில் நுட்பம் ஏக்கருக்கு ரூ. 2,000 வீதம் (ஏக்கர்)	700	890	14.00	14.00
ஆ. வீரிய ஒட்டு நெல் உற்பத்தி தொழில் நுட்பம் ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் (ஏக்கர்)	197	197	1.97	0.25
இ. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு ரூ. 6,000 ஒரு நிருபணத்திற்கு வீதம் (எண்)	700	700	42.00	42.00

53/112–10c

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. உழவர் பயிற்சி (கரீப் மற்றும் ரபி பருவங்களுக்கு பருவத்திற்கு ஒரு பயிற்சி வீதம்) ஒரு பயிற்சிக்கு 50 விவசாயிகள் வீதமும் விவசாயிக்கு ரூ. 50 வீதம் (எண்)	280	280	14.00	14.00
6 சில்லரை செலவினம் (பி.ஓ.எல்.)	--	--	6.60	5.65
7. விளம்பரம்	--	--	5.00	--
மொத்தம்			536.91	400.52

அட்டவணை 2.9

நெல் சிறுதளைகள் திட்டம்

வ. எண்	இனம்	பொருள் (எண்) இலக்கு 1994-95	பொருள் (எண்) பிப்ரவரி '95 வரை சாதனை	நிதி (இலட்சம் ரூபாயில்) இலக்கு 1994-95	நிதி (இலட்சம் ரூபாயில்) பிப்ரவரி '95 வரை சாதனை
1.	வெளியிடப் பட வுள்ள இரக சிறு தளைகள்.	500	50100	0.100	10.02
2.	சமீபத்தில் வெளி யிட்ட இரக சிறுதளைகள்.	50,000		10.000	

அட்டவணை 2.10

பயிர்வாரியாக சிறுதளை பையின் அளவு மற்றும் மதிப்பு

வ. எண்.	பயிர்	சிறுதளை பையின் அளவு	சிறுதளை பையின் மதிப்பு ரூபாயில்
1.	சோளம்	1 கிலோ	19.00
2.	மக்காச்சோளம் வீரிய ஒட்டு ரகங்கள்	2 கிலோ	.. 36.00 31.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1995 ஏப்ரல் 19]

3. கம்பு	½ கிலோ	15.50
4. கேழ்வரகு மற்றும் இதர சிறுதானியங்கள்	½ கிலோ	5.00

அட்டவணை 2.11

1994-95 ஆம் ஆண்டு இத் திட்டத்தின் கீழ் பிப்ரவரி '95 வரை பொருள் மற்றும் நிதி சாதனை

இனம்	1994-95 ம் ஆண்டு இலக்கு	பிப்ரவரி '95 வரை சாதனை
பொருள் (எண்)	20,000	19,550
நிதி (லட்சம் ரூபாயில்)	2.53	2.47

அட்டவணை 2.12

பயிர்வாரியாக அளிக்கப்படும் நிதியுதவி (ரூபாயில்)

இனம்	மக்காச்சோளம்	சோளம்	கம்பு	கேழ்வரகு மற்றும் இதர சிறு தானியங்கள்
விதை	120.00	120.00	120.00	50.00
உரம் (தழை) மணி (சாம்பல்)	750.00	350.00	350.00	300.00
பயிர்பாதுகாப்பு மருந்துகள்	130.00	130.00	130.00	50.00
மொத்தம்	1,000.00	600.00	600.00	400.00

அட்டவணை 2.13

பயிர்வாரியான 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி 1995 வரையிலான பொருள் மற்றும் நிதி சாதனை.

பயிர்	பொருள் (எண்) இலக்கு 1994-95	பொருள் (எண்) பிப்ரவரி '95 வரை சாதனை	நிதி (இலட்சம் ரூபாயில்) இலக்கு 1994-95	நிதி (இலட்சம் ரூபாயில்) பிப்ரவரி '95 வரை சாதனை
சோளம் மக்காச் சோளம், கம்பு கேழ்வரகு மற்றும் இதர சிறுதானி-யங்கள்	110	110	0.72	0.72

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 2.14

தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்

இனம்/அலகு	பொருள்		நிதி (இலட்சம் ரூபாயில்)	
	இலக்கு 19994-95	பிப்ரவரி '95 வரை சாதனை	இலக்கு 1994-95	பிப்ரவரி '95 வரை சாதனை
1. விதை கிராமம் குவிண்டாலுக்கு ரூ. 200 வீதம் (குவி)	8,000	5,100	16.00	17.55
2. சான்றுபெற்ற விதை விநியோகம் குவிண்டாலுக்கு ரூ. 300 வீதம் (குவி)	9,000	5,757	27.00	17.27
3. கருவிதை வாங்குதல் மற்றும் ஆதார விதை உற்பத்தி குவிண்டாலுக்கு ரூ. 400 வீதம் (குவி)	3,250	2,100	13.00	8.00
4. விதை சிறுதளைகள் கோடை பயறு உள்பட ரூ. 75 வீதம் (எண்)	32,000	28,188	24.00	20.76
5. நிரூபண திடல்கள் எக்டருக்கு ரூ. 5,125 வீதம் (எக்)	780	648	40.00	33.21
6. இனக்கவர்ச்சி பொறி ரூ. 900 முதல் ரூ. 1,200 வரை ஒரு எக்டருக்கு வீதம் (எண்)	600	235	3.00	1.18
7. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிரூபணம் எக்டருக்கு ரூ. 1,500 வீதம் (எக்.)	533	30	8.00	0.45

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

8. திருந்திய பண்ணை கருவிகள் வழங்குதல் 50% மானியத்தில் கருவி ஒன்றுக்கு ரூ. 1,500க்கு மிகாமல்	*867*	*--*	*13.00*	*--*
9. பருப்பு சுத்தம் செய்யும் கருவி மற்றும் தானிய சேமிப்பு கலன்கள் 50% மானியத்தில் ரூ. 4,000க்கு மிகாமல் (எண்)	*200*	*--*	*8.00*	*--*
10. தெளிப்பு நீர் பாசன கருவிகள் 50% மான்யம் ரூ. 10,000க்கு மிகாமல் [(எண்) (சிறு/குறு) விவசாயிகளுக்கு மட்டும்]	*230*	*83*	*23.00*	*8.30*
11. ரைசோபியம் பாக்கெட்டுகள் 50% மான்யத்தில் எக்டருக்கு ரூ. 25க்கு மிகாமல் (எக்)	*20,000*	*38,479*	*5.00*	*3.50*
12. நுண்ணுட்டங்கள் எக்டருக்கு ரூ. 100 வீதம் (எக்)	*2,000*	*1,300*	*2.00*	*1.30*
13. விவசாயிகள் பயிற்சி பயிற்சி ஒன்றுக்கு ரூ. 10,000 வீதம் (எக்.)	*10*	*8*	*1.0*	*0.80*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

14. சம்பளம் மற்றும் இதர செலவினம்.	--	--	9.0	2.20
மொத்தம்	--	--	192.00	114.92

அட்டவணை 2.15

தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டம்.

இனம்/அலகு	பொருள் இலக்கு 1994-95	பொருள் பிப்ரவரி '95 வரை சாதனை	நிதி (இலட்சம் ரூபாயில்) இலக்கு 1994-95	நிதி (இலட்சம் ரூபாயில்) பிப்ரவரி ' 95 வரை சாதனை
1. கருவிதை உற்பத்தி (அறிவிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு உட்பட்ட இரகங்களுக்கு 50% விலையில் (குவி)	3	4.17	0.075	0.10
2. சான்று பெற்ற விதை விநியோகம் (குவிண்டாலுக்கு ரூ. 250 முதல் ரூ. 400 வரை (குவி)	3,544	2,550	14.185	9.80
3. நிரூபணங்கள் (எக்டர்)				
அ. உற்பத்தி தொழில் நுட்பங்கள் (எக்டருக்கு ரூ. 1,500 வீதம்)	5,000	4733	75.000	47.57
ஆ. இனக்கவர்ச்சிப் பொறி (எக்டருக்கு ரூ. 500 வீதம்)	1,900	998	4.750	2.50
இ. நியூக்கிலியர்பாலி ஹெக்ரோஸிஸ் / வைரஸ் (எக்டருக்கு ரூ. 750 வீதம்)	2,500	417	18.750	3.13

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

4. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிரூபணம் மற்றும் பயிற்சி (10 எக்டர் நிரூபணம் ஒன்றுக்கு ரூ. 8,000 வீதம் (எண்)	938	754	75.040	57.07
5. பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்)—				
அ. கைத்தெளிப்பான்கள் (50% மானியம் அதிகபட்சம் ரூ. 600)	--	--	--	--
ஆ. விசைத்தெளிப்பான்கள் (50% மானியம் அதிக பட்சம் ரூ. 1,500)	3,800	--	57.000	--
இ. டிராக்டர்கள் (25% மானியம் அதிக பட்சம் ரூ. 4,000)	--	--	--	--
6. தெளிப்பு நீர்பாசனக் கருவிகள் விநியோகம் (50% மானியம் அதிக பட்சமாக ரூ. 10,000 வீதம் சிறு/குறு விவசாயிகளுக்கு மட்டும் (எண்)	1,000	392	100.000	39.20
7. விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல் (ஒரு விவசாயிக்கு ஒரு நாளைக்கு ரூ. 50 வீதம் (எண்)	7,500	6,500	3.750	2.50

8. சில்லரை செலவினம்	--	--	0.750	0.60
மொத்தம்	--	--	349.30	162.47

அட்டவணை 2.16

எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி திட்டம்

(இலட்சம் ரூபாயில்)

இனம்/அலகு	பொருள்		நிதி	
	இலக்கு	சாதனை பிப்ரவரி 95 வரை	இலக்கு	சாதனை பிப்ரவரி 95 வரை
1. கருவிதை உற்பத்தி (குவி)	798.93	766.97	24.900	19.92
2. ஆதாரவிதை உற்பத்தி (குவி)	4710.00	4510	9.420	7.54
3. சான்று விதை விநியோகம் (குவி)	56227.00	66510	146.680	132.01
4. விதை கிராமம் (குவி)	56227.00	78433	146.680	134.88
5. விதை இடுபொருள் கிட்டுகள் விநியோகம் (எண்கள்)	26509.00	36845	25.097	23.85
6. மாநில எண்ணெய்வித்து பண்ணைகளின் உள்ளுருப்பு வசதி மேம்பாடு (எண்கள்)	--	--	59.767	37.59
7. கூட்டு நிருபணம்	8998	9158	141.655	135.98
8. விதை நேர்த்தி (இ.எக்)	1.28	0.57	24.786	8.91
9. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிருபணம் (எக்)	2560	2304	38.400	34.56
10. விதை நேர்த்தி மூலம் வேர் புழுவைக் கட்டுப்படுத்தல் (எக்)	1860	2171	9.300	6.12
11. ரைசோபியம் பொட்டலம் விநியோகம் (எக்)	48600	50390	12.150	10.91
12. இனக்கவர்ச்சி பொறி விநியோகம் (எக்)	4000	3640	20.000	18.20
13. ஜிப்சம் விநியோகம் (எக்)	100000	91485	200.00	182.97

1995 ஏப்ரல் 19]

14. வேளாண் கருவிகள் விநியோகம் (எண்)	2935	335	44.025	3.00
15. தெளிப்பு நீர்பாசனம் கருவிகள் விநியோகம் (எண்)	2347	908	234.700	90.80
16. நுண்ணூட்டக்கலவை விநியோகம் (எண்)	28940	25480	28.940	25.48
17. விவசாயிகள் பயிற்சி (எண்)	1000	982	8.000	8.00
18. சம்பளம் மற்றும் சில்லறை செலவினம்	–	–	35.500	29.58
மொத்தம்	–	–	1210.00	910.30

அட்டவணை 2.17

எண்ணைய் பனை சாகுபடி திட்டம்

இனம்/அலகு	பொருள் இலக்கு	சாதனை பிப்ரவரி 95 வரை	(இலட்சம் ரூபாயில்) நிதி இலக்கு	சாதனை பிப்ரவரி 95 வரை
1. முளைவிட்ட எண்ணைய் பனை விதைகள் இறக்குமதி (இலட்சம் எண்கள்)	3.40	1.70	75.00	89.50
2. பரப்பு விரிவாக்கம் (எக்டர்)	2329	750	134.44	56.25
3. விரிவாக்க அலுவலர்கள் மற்றும் எண்ணைய்ப்பனை சாகுபடியாளர்கள் பயிற்சி (எண்கள்)	–	–	3.35	2.04
4. சொட்டு நீர்பாசன வசதி (எக்)				
அ. விவசாயிகள் வயல்களில்	50	20	5.00	2.00
ஆ. அரசு பண்ணைகளில்	2	–	0.30	–
5. விளம்பரம் மற்றும் விரிவாக்கம்	–	–	3.35	3.00
மொத்தம்			221.44	152.79

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 2.18

தமிழ் நாடு வேளாண் வளர்ச்சித் திட்ட சாதனை

வ. எண்	இனம்	7 ஆண்டுகளுக்கு மொத்ததிட்ட ஒதுக்கீடு	31-3-94 வரை சாதனை	1994-95 நிதி ஒதுக்கீடு	பிப்ரவரி '95 வரை சாதனை
			(ரூபாய் இலட்சத்தில்)		
1.	வேளாண்மைத் திட்டம்	256.353	109.65	22.20	13.04
2.	வேளாண்மை விரிவாக்கம்	5602.267	1374.98	1521.01	811.81
3.	விதை உற்பத்தி	361.096	109.87	129.48	47.97
4.	நீர்பிடிப்பு மேம்பாடு	4722.194	638.58	534.00	382.65
	மொத்தம்	10941.91	2233.08	2206.69	1255.47

அட்டவணை 2.19

தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்ட சாதனை

வ. எண்.	திட்ட நடவடிக்கைகள்	பொருள் (எண்கள்) இலக்கு	பொருள் (எண்கள்) பிப்ரவரி 1995 வரை சாதனை	நிதி (இல. ரூபாயில்) இலக்கு	நிதி (இல. ரூபாயில்) பிப்ரவரி 1995 வரை சாதனை	1995-96 பொருள் இலக்கு
1. அ.	கிராம நிலை பயிற்சி	234	215	--	--	441
ஆ.	பயிற்சி பெற்றோர்	2106	5375	--	--	11025
2. அ.	சிறப்பு பயிற்சி	88	63	--	--	165
ஆ.	பயிற்சி பெற்றோர்	2640	1890	292.42	91.40	4950
3. அ.	பண்ணை மகளிர் கருத்தரங்கு	52	40	--	--	98
ஆ.	பங்கு பெற்றோர்	5200	4000	--	--	9800
4.	தொடர் நிருபணங்கள்	1872	367	--	--	3996

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 2.20

தென்னை அபிவிருத்தி திட்ட சாதனை (இல. எண்கள்)

வ. எண்.	இரகங்கள்	இலக்கு	பிப்ரவரி '95 வரை சாதனை	1995-96 பொருள் இலக்கு
1.	நெற்றுக்கள் கொள்முதல்			
	அ. நெட்டை	17.50	13.26	17.50
	ஆ. நெட்டை குட்டை	10.62	6.86	10.62
	இ. குட்டை நெட்டை	0.30	0.19	0.30
	மொத்தம்	28.42	20.31	28.42
2.	தென்னங்கன்றுகள் விநியோகம்			
	அ. நெட்டை	14.00	8.31	14.00
	ஆ. நெட்டை குட்டை	7.00	2.79	7.00
	இ. குட்டை நெட்டை	0.18	0.09	0.18
	மொத்தம்	21.18	11.19	21.18

அட்டவணை 2.21

ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்ட சாதனை

வ. எண்	விவரம்	அலகு	1994-95 இலக்கு	பிப்ரவரி 1995 வரை சாதனை	1995-96 ஆண்டு இலக்கு
1.	சாகுபடிப்பரப்பு	லட்சம் எக்டர்	2.50	2.62	2.50
2.	பருத்தி உற்பத்தி	லட்சம் பொதிகள்	6.60	4.32	6.80
3.	சான்றுவிதை உற்பத்தி	குவிண்டால்	3750.00	3194.00	3750.00
4.	சான்றுவிதை வினியோகம்	குவிண்டால்	3750.00	3154.00	3750.00
5.	உரமிட்டபரப்பு	லட்சம் எக்டர்	2.50	2.62	2.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. பயிர்பாதுகாப்பு செய்யப்பட்ட பரப்பு	லட்சம் எக்டர்	2.50	2.62	2.50
7. நியுக்கிளியர்பாலி ஹெட்ரோசிஸ் வைரஸ் உபயோகித்த பரப்பு	எக்டர்	1200.00	2000.00	1200.00
8. நிதி	லட்சம் ரூபாய்	0.31	0.29	0.38
9. சான்றுவிதை உற்பத்தி நிதி	லட்சம் ரூபாய்	36.36	54.68	64.82

அட்டவணை 2.22

கரும்பு பெருக்க திட்ட சாதனை

வ. எண் விவரம்	அலகு	1994-95 இலக்கு	பிப்ரவரி 1995 வரை சாதனை	1995-96 ஆண்டு இலக்கு
1. சாகுபடி பரப்பு	லட்சம் எக்டர்	2.35	2.85	2.35
2. உற்பத்தி (வெல்லமாக)	லட்சம் மெடன்	25.59	33.65	26.04
3. தேவையான அளவு உரமிடுதல்	லட்சம் எக்டர்	2.35	2.85	2.35
4. நிருபண தளை அமைத்தல்	எண்	575	385	575
5. ஒட்டுண்ணிவிடுதல்	எக்டர்	10500	9350	10500
6. நிதி	லட்சம் ரூபாய்	1.48	0.75	1.24

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 2.23

உழவர் பயிற்சி நிலையங்கள் சாதனை (எண்கள்)

வ எண்	விவரம்	பயிற்சிகள் இலக்கு 1994-95	பிப்ரவரி 1995 வரை சாதனை	1995-96 ஆண்டு இலக்கு
1.	கிராமநிலை பயிற்சி ஆண்/பெண் உழவர்களுக்கு	264	250	264
2.	உழவர் மன்ற அமைப்பாளர் கிராம நிலை பயிற்சி	120	128	120
3.	சுழற்பயிற்சி மற்றும் நிருபணம்	1320	1155	1320

அட்டவணை 2.24

மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை பயிற்சி நிலைய சாதனை

(எண்கள்)

வ.எண்	விவரம்	உத்தேசிக்கப் பட்டுள்ள நபர்கள்	பயிற்சி அளிக்க பட்டோர் பிப் '95 வரை	உத்தேச இலக்கு 1995-96
1.	புத்தூட்டப்பயிற்சி (வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு)	532	532	--
2.	உயர் மற்றும் நடு நிலை அலுவலர்களுக்கு மேலாண்மை பயிற்சி	100	181	200
3.	கணிப்பொறி பயிற்சி	30	20	200
	சிறப்புப் பயிற்சிகள்			
4.	ஒருங்கிணைந்த பண்ணைமுறை	500	345	500
5.	வேளாண் காடுகள்	500	356	500
6.	தீவன அபிவிருத்தி	500	364	500
7.	மண்வளப்பாதுகாப்பு	500	377	500

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 2.25

மண் மாதிரிகள் ஆய்வு (இலட்சம் எண்கள்)

விவரம்	1994-95 இலக்கு	பிப்ரவரி 1995 வரை சாதனை	1995-96 உத்தேச இலக்கு
மண் ஆய்வு நிலையங்கள்	7.30	4.90	7.30
நடமாடும்மண் ஆய்வு நிலையங்கள்	2.70	2.23	2.70
மொத்தம்	10.00	7.13	10.10

அட்டவணை 2.26


பயிர் விளைச்சல் போட்டிகள் பரிசு விபரம்

பயிர்	பரிசுத் தொகை (ரூபாயில்)			
	மாநில அளவு		மாவட்ட அளவு	
	முதல் பரிசு	இரண்டாம் பரிசு	முதல் பரிசு	இரண்டாம் பரிசு
1. நெல்	100000	50000	7000	3000
2. இதரபயிர்கள்	5000	3000	2000	1000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு நில உபயோகம்
(இலட்சம் எக்டர்)

2.1.




TRUTH ALONE TRIUMPHS

1.	காடுகள்	21.50
2.	தரிசு மற்றும் சாகுபடியற்றவை	5.10
3.	வேளாண் சாராதவை	18.68
4.	பலவகைப்பட்ட மரங்கள்	2.31
5.	நடப்பில் உள்ள தரிசுகள்	9.61
6.	நிரந்தர மேய்ச்சல் நிலம்	1.21
7.	பயிரிடப்பட்ட மொத்த பரப்பளவு	58.31
8.	ஏனைய தரிசுகள்	10.50
9.	சாகுபடிக்கு உகந்த பாழ் நிலம்	3.04




2.3.




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2.4. சிறு தானிய உற்பத்தி (இலட்சம் மெ.டன்)




2.5. சிறு தானிய உற்பத்தித்திறன் (கிலோ/எக்டர்)




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2.6. பயறுவகை உற்பத்தி (இலட்சம் மெ.டன்)




2.7. பயறுவகை உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

2.8, உணவு தானிய உற்பத்தி (இலட்சம் மெ.டன்)




2.9 உணவு தானிய உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19


2.10. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி (இலட்சம் மெ.டன்)




2.11. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)



2.12. பருத்தி உற்பத்தி (இலட்சம் பேல்கள்)




2.13. பருத்தி உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2.14. கரும்பு உற்பத்தி (வெல்லம்) (இலட்சம் மெ.டன்)




2.15. கரும்பு உற்பத்தித் திறன் (வெல்லம்) (மெ.டன்/எக்டர்)



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS


1995 ஏப்ரல் 19]

2.16. மொத்த உணவு தானிய உற்பத்தி




வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


2.17. உணவு தானிய உற்பத்தி/உற்பத்தித் திறன்
1970 - 71 முதல் 1994 - 95 முடிய



2.18. இரசாயன உரங்கள் உபயோகம்
(இலட்சம் மெ.டன்)



2.19. கட்டுப்பாடு



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

அத்தியாயம் 3
தோட்டக்கலை

விவசாயிகளிடையே தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்யும் ஆர்வம் அதிகரித்துவருகிறது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, பழங்கள், காய்கறிகள், வாசனைத் திடவியங்கள், மலர்கள் மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள் சாகுபடியில் விரைவான வளர்ச்சி அடைய கிரியா ஊக்கியாக செயற்பட்டு வருகின்றது. இத்துறையின் மூலம் தரமான நடவுப் பொருட்கள் விதைகள் மற்றும் தேவையான இதர இடு பொருட்கள் வழங்கப்படுவதன் மூலம் ஆண்டு தோறும் பயிர் சாகுபடி பரப்பை அதிகரிப்பதோடு மட்டுமல்லாது உற்பத்தியினையும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. 1990-91 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி அளவும் 1993-94 ஆம் ஆண்டில் உற்பத்திப் பெருக்கும் அட்டவணை எண் 3.1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1990-91-ம் ஆண்டில் 1,28 லட்சம் எக்டேராக இருந்த பழச்சாகுபடி பரப்பு 1993-94-ம் ஆண்டில் தரமான நடவுப் பொருட்கள் விநியோகம் செய்து 1.80 லட்சம் எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. பழங்கள் உற்பத்தி 27 லட்சம் டன்களிலிருந்து 33 லட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. காய்கறி சாகுபடி 1.47 லட்சம் எக்டேரிலிருந்து 1.71 லட்சம் எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தி 36.29 லட்சம் டன்களிலிருந்து 41.59 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. பழங்கள் சாகுபடியில் வழக்கமாகப் பயிரிடப்படும் பழங்களுடன் சேர்த்து ஏற்றுமதி ரக பழங்களைச் சாகுபடி செய்யும் அளவுக்கு விவசாயிகளிடையே மாற்றம் ஏற்பட்டுள்ளது. வாசனைப் பயிர்கள் சாகுபடி 1.32 லட்சம் எக்டேரிலிருந்து 1.70 லட்சம் எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது. உற்பத்தி 1.57 லட்சம் டன்களிலிருந்து 2.21 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. 1991-92-ம் ஆண்டில் புளி சாகுபடி 0.13 லட்சம் எக்டேராக இருந்தது. புளி சாகுபடியில் உயர் விளைச்சல் தரும ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் 1993-94-ம் ஆண்டில் 0.15 லட்சம் எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது. உற்பத்தியில் 1991-92-ம் ஆண்டில் 0.40 லட்சம் டன்களிலிருந்து 1993-394-ம் ஆண்டில் 0.46 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. மலைத் தோட்டப் பயிர்கள் சாகுபடியில், 175 லட்சம் எக்டேராக இருக்கும் பரப்பு 1.78 லட்சம் எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது. மலைத் தோட்டப்பயிர்களின் விளைச்சல் 5.45 லட்சம் டன்களிலிருந்து 5.76 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 19]

முந்திரி உற்பத்தி எக்டேருக்கு *190* கிலோவாக இருந்த மகசூல் திறன் தற்பொழுது எக்டேருக்கு *356* கிலோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

3. காளான் சாகுபடியில் விவசாயிகளிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்தோடு இத்துறை கடந்த மூன்று ஆண்டுகளாக *1200* விவசாயப் பெருமக்களுக்குக் காளான் சாகுபடி பற்றிய தொழில் நுட்பப் பயிற்சி அளித்து விவசாயிகள் தாங்களாகவே காளான் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் தேவையான சிறுதளைகள் வழங்கி இத்திட்டம் துவங்கப்பட்டது. அட்டவணை எண் *3.1*-ல் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்திதிறன் ஆகியவை பற்றிய கூடுதல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

4. தோட்டக்கலை விவசாயிகளின் விளைபொருள்களுக்கு அதிகபட்சம் விலை பெறுவதற்காகத் தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் நிறுவனம் ரூ. *115* லட்சம் தொடக்க முதலுடன் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கம், பழங்கள் மற்றும் காய்கறிகளைப்பதப்படுத்துவதுடன் விற்பனை வசதிகளையும் ஒருங்கிணைக்கும்.

1995-96 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்

5. (i)*1995-96* ஆண்டு முதல் தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல் படுத்தப்பட்டுவரும் வளர்ச்சி திட்டங்களின் பலன்கள் கூட்டாக அமைய செயற்படுத்தப்படும். வெப்ப மண்டலம் மற்றும் வறட்சிப் பகுதிகள் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. பழப்பயிர்கள் அபிவிருத்தி தவிர மா, வாழை, திராட்சை போன்ற வழக்கமாகப் பயிரிடப்படும் பயிர்கள்சாகுபடிக்கும், நெல்லி இலந்தை சீத்தா போன்ற பயிர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(ii) தரமான நடவுப் பொருள்கள் விநியோகம் செய்தல், நவீன சாகுபடி தொழில் நுட்பங்களைப்பயன்படுத்துதல். பாலிதீன் பசுமைக்குடில்கள் அமைத்தல், சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் போன்ற பணிகளுக்கு அதிக முக்கியத்துதவம் அளிக்கப்படும்.

(iii) தோட்டக்கலையில் காய்கறி சாகுபடியை அதிகரிக்கும் நோக்கத்தோடு வீரிய காய்கறி விதைகளை சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) மஞ்சல் சாகுபடியில் உயர் விளைச்சல் ரகங்களை அறிமுகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மஞ்சளைப் பக்குவப்படுத்த

உயர் தொழில் நுட்பங்கள் கடைப்பிடிக்கப்பட்டு மஞ்சளின் தரத்தை உலக சந்தைத் தரத்திற்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் இஞ்சி சாகுபடியாளர்களை அச்சுறுத்தி வரும் இஞ்சிக் கிழங்கு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த நவீன தொழில் நுட்பமாக மண்ணை சூரிய ஒளி மூலம் சூடு செய்தல், மற்றும் மைக்கோரைசா நுண்ணுயிர்களை அறிமுகப்படுத்தி இஞ்சிக் கிழங்கு அழுகல் நோயைக் கட்டுப்படுத்தும் முறை விவசாயிகள் கடை பிடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

(v) ஏற்றுமதிக்கு உகந்த மலர்களை உற்பத்தி செய்யும் நோக்கத்தோடு மலர்கள் மையம் ஒன்று திசு வளர்ப்பு ஆய்வுக்கூடத்துடன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிக பரப்பளவில் மலர்கள் சாகுபடியை மேற்கொள்ள விவசாயிகளின் தோட்டங்களில் செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது. பசுமைக் குடில்கள் மூலம் தரமானமலர்களை உற்பத்தி செய்திட தனியார் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். வழக்கமாகப் பயிரிடும் மலர்களுடன் புதிய மலர் இரகங்களும் தோட்டக்கலை சாகுபடியாளர்களிடம் அதிக அளவில் பயிரிட வழிவகை செய்யப்படும்.

(vii) நீலகிரி மாவட்டத்தில் அதிக பரப்பளவில் ஸ்டிராபெர்ரி, பட்டாணி, அவரை, மற்றும் சாமந்தி போன்றபயிர்கள் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும்.

(viii) குன்னூரில் உள்ள பழம் பதனிடும் நிலையத்தை நவீனப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

(ix) உதகமண்டலத்தில் ரோஜா தோட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்காவில் இந்த ஆண்டு 100 ஆம் மலர்க்கண்காட்சி நடைபெற உள்ளதால், 1995 ஆம் ஆண்டு மலர்க்கண்காட்சி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

(x) உதகமண்டலத்தில் ரோஜா தோட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்காவில் இந்த ஆண்டு 100 ஆம் மலர்ககண்காட்சி நடைபெற உள்ளதால், 1995 ஆம் ஆண்டு மலர்க்கண்காட்சி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

(x) பழவிளைச்சலை 1994-95 ஆம் ஆண்டு 36 லட்சம் டன்களிலிருந்து 1995-96 ஆம் ஆண்டில் 38 லட்சம் டன்களாக உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று காய்கறி விளைச்சலை 1994-95

1995 ஏப்ரல் 19]

ஆம் ஆண்டின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை 37 லட்சம் டன்களிலிருந்து 1995-96 ஆம் ஆண்டில் 42 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. தேயிலை, காப்பி, முந்திரி மற்றும் பாக்கு ஆகிய பயிர்களின் விளைச்சல் 2.6 லட்சம் டன்களிலிருந்து 2.70 லட்சம் டன்களாக உயர்த்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வாசனைத் தரவியப் பயிர்களில் 3.7 லட்சம் டன்களிலிருந்து 3.8 லட்சம் டன்களாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பல்லாண்டு தோட்டக்கலைச் செடிகளின் உற்பத்தியினை 80 லட்சத்திலிருந்து 1995-96 ஆம் ஆண்டில் 84 லட்ச டன்களாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(xi) தோட்டக்கலை விளைப் பெருட்களை உள்நாட்டுத் தேவைகளுக்கு மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் மாவட்டந்தோறும் தோட்டக்கலையில் தொழில் நுட்ப வல்லுநர்கள் மூலம் சாகுபடியாளர்களுக்கு எடுத்துரைக்கப்படும். இத்துறையில் நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடிக்கும் வகையில் விளம்பர அமைப்புகள் உருவாக்கப்படும்.

(xii) தோட்டக்கலைச் செடிகள் மற்றும் விதைகள்உற்பத்தி செய்யும் தேவையான நாற்றங்கால் பராமரிப்பு அடிப்படை வசதிகளைப் பெருக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். இதற்குத் தேவையான நிதி, தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தித் திட்டத்தின் கீழ் பெறப்படும். 1995-96 ஆம் ஆண்டில் தொழில் நுட்ப வல்லுநர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களின் தொழில் நுட்பத்திறனை மேம்படுத்த வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் தேவையான நிதி உதவி வேளாண் மனித மேம்பாட்டுத் திட்டம் மூலம் பெறப்படும்.

6. இக்கொள்கையைச் செயல்படுத்த மாநில மற்றும் மத்திய உதவி பெறும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

மைய அரசின் நிதி உதவிபெறும் திட்டம்

6.1 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களான கோவை, பெரியார், திண்டுக்கல் அண்ணை, மதுரை, காமராஜர் நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மண் அரிமாணத்தை தடுக்கவும் மலைச்சரிவு இயற்கை சூழல் நிலையினை மேம்படுத்திடவும்

செயலாக்கப்படுகிறது. இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவைப்படும் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களின் தரமான நடவுச் செடிகள் ஐம்பது சத மானிய விலையில் வழங்கப்படுகிறது. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 391.40 லட்சம் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 2620 எக்டர் புதிய பரப்பில் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி ரூ. 79.00 லட்சம் செலவில் நிறைவேற்றப்படும். 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 79.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மண் அரிப்பினால் ஏற்படும் சேதத்தினைத் தடுக்கும் பொருட்டு குறுகிய கால ஆண்டுப் பயிர்களின் சாகுபடியிலிருந்து நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களான தேயிலை, பழங்கள் மற்றும் இதர பொருளாதார பயிர்கள் சாகுபடிக்கு மாற்றுவதன் மூலமும் மலைப்பகுதி சூழலினை பராமரிக்கவும் செயலாக்கப்படுகிறது. இத்திடத்தின் மூலம் தேயிலை, பழங்கள் மற்றும் பொருளாதார செடிகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 75 சத மானிய விலையிலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு இலவசமாகவும் வழங்கப்படுகின்றது. உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் 50 சத மானிய விலையில் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்படுகின்றது. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்தத் திட்டத்திற்காக ரூ.1022.75 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டு ரூ. 248.78 லட்சங்கள் செலவில் 500 எக்டர் பரப்பில் தேயிலை மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 331.30 லட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

6.3 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் சேலம் மாவட்டம் கொல்லிமலை, சேர்வராயன் மலை. அரநூத்து மலை மற்றும் பச்சமலைப் பகுதிகளிலும் தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலைப்பகுதிகளிலும், வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாது மற்றும் கல்ராயன் மலைப் பகுதிகளிலும் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக செயல்படுத்தப்படுகிறது. பழங்குடி விவசாயிகள் பழத்தோட்டங்கள் அமைக்க ஊக்குவிக்கும் முகமாக தனி நபர் ஒருவருக்கு ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் பழச் செடிகளின் நடவுப் பொருட்கள் முழு மானியத்தில் வழங்கப்படுகின்றன. 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 96.06 லட்சம்

1995 ஏப்ரல் 19]

செலவில் 2600 ஏக்கர் புதிய பரப்பில் செயலாக்கப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டில் இந்த திட்டம் 100.95 லட்சங்கள் செலவில் செயலாக்கப்படும்.

6.4 முந்திரி வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டம்

தமிழ்நாட்டில் முந்திரி உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உயர் விளைச்சல் தரவல்ல முந்திரி ஒட்டுச் செடிகள், பதியன்கள் ஆகியவற்றை 75 சதவீத மானிய விலையிலும், பயிர் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மொத்தம் ரூ. 437.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 1994 ஆம் ஆண்டிலிருந்து தரமில்லாத வகைகளைப் பயன்படுத்துவது நீக்கப்பட்டுள்ளது. அதிகவிளைச்சல் தரும் ஒட்டுச் செடிகளைப் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. முந்திரி ஒட்டுச் செடிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக மொத்தம் ரூ. 24.00 இலட்சம் செலவில், தோட்டக்கலைத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தமிழ்நாடு வனக்கழகம் ஆகிய ஒவ்வொன்றின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் ஒவ்வொரு நாற்றுப் பண்ணைகள் என மூன்று மண்டல நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்படும். 1994-95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 8.40 இலட்சம் செலவில், 400 எக்டேர் பரப்பில் புதிதாக முந்திரி நடவுச் செய்யப்பட்டு வருகிறது. முந்திரி பயிரிடப்படும் பகுதியை விரிவுபடுத்துவதற்காகவும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும், பழைய பயிர்களுக்குப் பதிலாக உயர்விளைச்சல் ரகங்கள் பயிரிடுவதற்காகவும் மண்டல நாற்றுப் பண்ணை அமைப்பதற்காகவும், செயல்விளக்கப் பாத்திகள் அமைப்பதற்காகவும் 1994-95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 94.494 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. 1994 அக்டோபர் திங்களில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காரைக்குடியில் முந்திரி குறித்து கருத்தரங்கம் நடத்தப்பட்டுள்ளது.

6.5 நறுமண சுவைப் பயிர்கள் வளர்ச்சி குறித்த ஒருங்கிணைந்த திட்டம்

இத்திட்டம், தமிழ்நாட்டில் நறுமண சுவைப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்தோடு நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தில்,

அ. 6.00 இலட்சம் மிளகு வேர்விட்ட பதியன்கள் உற்பத்தி செய்தல்.

[1995 ஏப்ரல் 19

ஆ. மிளகு பயிருக்குத் தேவைப்படும் 8,000 சிறுதளைகள் வழங்குதல்.

இ. மிளகுப் பயிருக்கு 100 செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்.

ஈ. 25,000 எண்கள் மரவகை நறுமணச் சுவைப் பயிர்கள் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.

உ. 4000 கொத்தமல்லி சிறுதளைகள் வழங்குதல்.

ஊ. மஞ்சள் பயிருக்கு 450 செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல்.

எ. மிளகாய் பயிரில் விதை உற்பத்திக்காக 500 எண்கள் பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் அமைத்தல்.

ஏ. மிளகாய் பயிரில் 4000 பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள்.

ஐ. சிறுவகை நறுமண சுவைப் பயிர் சாகுபடி செய்பவர்களுக்கு 600 தெளிப்பான்கள் வழங்குதல்.

ஒ. எட்டு நாற்றங்கால் கொட்டகை அமைத்தல் ஆகியவை அடங்கும்.

எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மொத்த ஒதுக்கீடு ரூ. 558.56 இலட்சமாகும். இத்திட்டம். 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 117.33 இலட்சம் செலவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மிளகாய் மஞ்சள் ஆகியவற்றின் அறுவடைக்குப் பின்னர் பயன்படுத்த வேண்டிய அறிவியல் தொழில் நுட்பமுக்கியத்துவம் குறித்தும் அதிக விளைச்சல் தரும் வகைகள் முதலியவற்றைப் பயிரிடுவது குறித்தும் கற்பிப்பதற்காக முறையே விருதுநகர், ஈரோடு ஆகிய இடங்களில் மிளகாய் குறித்தும் மஞ்சல் குறித்தும் கருத்தரங்கு நடத்தப்படும். இத்திட்டம், ரூ. 190.00 இலட்சம் ஒதுக்கீட்டுடன் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மிளகு குறித்த கருத்தரங்கு, 1993 டிசம்பர் திங்களில் மிகச் சிறப்பாக நாகர்கோயிலில் நடத்தப்படும்.

6.6. வெப்ப, வறண்ட பகுதி மற்றும் குளிர்பகுதி பழங்கள் சாகுபடி குறித்த ஒருங்கிணைந்த திட்டம்.

அதிக விளைச்சலைப் பெறுவதற்காக, தரமான பழ மரக் கன்றுகளை உற்பத்தி செய்து வழங்கும் நோக்கத்துடனே இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் (அ) ஒரு பெரிய மற்றும் நான்கு சிறிய நாற்றங்கால் பண்ணைகள் அமைத்தல், (ஆ) பொதுத்துறையில் திசு வளர்ப்பு மையம் ஒன்று அமைத்தல், (இ) விவசாயிகளுக்குப் பயிற்சி

1995 ஏப்ரல் 19]

அளித்தல், (ஈ) விளம்பரம் செய்தல், (உ) 768 எக்டேர் பரப்பிற்கு பழச்சாகுபடியை விரிவுபடுத்துதல், (ஊ) 1162 எக்டேர் பரப்பில் நலிவடைந்த பழத் தோட்டங்களைப் புதுப்பித்தல். (எ) 43 செயல்விளக்கப் பாத்திகள் அமைத்தல் ஆகியவை அடங்கும். 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 107.40 இலட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கிறது. 1995-96 ஆம் ஆண்டில், ரூ. 92.20 இலட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். எட்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்கான மொத்த ரூ. 371.94 இலட்சமாகும்.

6.7. (அ) தோட்டப் பயிர்களுக்குச் சொட்டு நீர் பாசனத் திட்டம்.

தோட்டப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு. தோட்டப்பயிர்களுக்குச் சொட்டுநீர் பாசனம் அளிப்பதற்காக, மத்தியஅரசு 1994-95 ஆம் ஆண்டில், 50 சதவீதம் உதவித் தொகையாக ரூ.351.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தை, வேளாண் பொறியியல் துறை செயற்படுத்துகிறது. தோட்டக்கலைத் துறை. பயனடைவோரைக் கண்டறிந்து, நிதியுதவிக்குப் பரிந்துரைக்கிறது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1930.04 இலட்சமாகும். இத்திட்டம், ரூ. 420 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

(ஆ) சொட்டுநீர் பாசன செயல்முறை விளக்கம்.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 1994-95 ஆம் ஆண்டில், சொட்டுநீர் பாசன செயல் முறை விளக்கத் திட்டங்களைப் செயற் படுத்துவதற்காக, அரசு ரூ. 42 இலட்சம் அனுமதித்துள்ளது.

6.8. தோட்டப் பயிர்களுக்குப் பாலிதீன் பசுமைக் குடில்கள் அமைக்கும் திட்டம்.

தோட்டப்பயிர் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக பாலிதீன் பசுமைக் குடில்கள் அமைக்கப்படுகின்றன. வெப்பம், ஈரப்பதம், காற்று போன்ற சுற்றுப்புறச் சூழலைச் சரியான முறையில் கையாளுவதன் மூலம், தோட்டப் பயிர் சாகுபடிக்கு ஏதுவாக இக்குடில்கள் அமைக்கப்படுகின்றன. பாலிதீன் பசுமைக்கு குடில்கள் அமைப்பதில் உழவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, பிரிவின் அளவைப் பொருத்து, தனியார் துறைக்கு, மூன்று நிலைகளில் நிதியுதவி வழங்கப்படுகிறது.

1. ரூ. 62, 500/- என்ற விகிதத்தில், 50 சதவீதம் உதவித்தொகையுடன், குறைந்த செலவு பசுமைப் குடில்கள் அமைத்தல்.

2. ஒரு யூனிட்டிற்கு ரூ. 2.50 இலட்சம் செலவு என்ற வீதத்தில் நடுத்தர அளவுடைய பசுமைக் குடில்கள் கட்டுவதற்கு அதிகபட்சத் தொகை ரூ. 1.00 இலட்சம் என்பதற்கு உட்பட்டு 40 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

3. ஒரு யூனிட்டிற்கு மொத்த மூலதனச் செலவு ரூ. 10 இலட்சம் என்ற அளவில் உயர்செலவு பசுமைக் குடில்கள் கட்டுவதற்கு 10 சதவீத மானியத் தொகை அதிகபட்டமாக ரூ. 1.00 இலட்சம் என்பதற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் உதவித்தொயாக ரூ. 12.00 இலட்சம் வழங்கப்படும்.

6.9. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் பாலிதீன் பசுமை குடில்களை அமைத்தல்.

தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் பாலிதீன் படுமை குடில்களைப் பயன்படுத்தும் முறையை உழவர்களுக்கு செயல்விளக்கம் செய்துகாட்டும் தெரிந்தெடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு பசுமைக் குடில் அமைக்க ரூ.0.90. இலட்சம் ஆகும். 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.18.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6.10. இளம் செடிகளின் பாதுகாப்பிற்காக நிலப்போர்வை அமைத்தல்

ஈரப் பதத்தைக் காப்பதற்கும், களை பரவுவதைத் தடுக்கவும், இளம் செடிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் நிலப் போர்வை அமைக்கும் முறை பின்பற்றப்படுகிறது. இளம் செடிகளைப் பாதுகாப்பதற்கு நிலப்போர்வை அமைக்கும் இம்முறை, களை பரவுவதை 90 சதவீதத்திலிருந்து 95 சத வீதம் வரை தடுத்து உதவுகிறது. மேலும், எக்டேர் ஒன்றுக்கு ரூ.5,000/- என்று வரையறுக்கப்பட்ட வீதத்தில் 50 சதவீத மானியத்தில் 100 மைக்ரோன் பாலித்தீன் ஷீட்டுகள் வழங்கப்பட்டு, புல்லாண்டு பழமரப்பயிர்களின் வேர்ப்பகுதி நிலத்தின்மேல் அமைக்கப்படுகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரூ.55 இலட்சத்தில், 1995-95 ஆம் ஆண்டிற்கு ரூ.8.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது, 1995-96 ஆம் ஆண்டிலும், ரூ.12.00 இலட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

1995 ஏப்ரல் 19]

6.11 காய்கறி சிறு தளைப் பைகளை வழங்கும் திட்டம்.

காய்கறி விளைச்சலை அதிகரிக்கவும், ஒட்டு தக்காளி, முட்டைகோசு பயிர்கள் அடங்கிய சிறு தளைப் பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். 1994-95-ஆம் ஆண்டுகளிலும், ரூ.10.50 இலட்சம் செலவில் மொத்தம் 30000 சிறுதளைப் பைகள் வழங்கப்படும். 1995-96 ஆம் ஆண்டிலும், ரூ.10.50 இலட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

6.12. கோகோ பயிர் வளர்ப்புத் திட்டம்.

தமிழ்நாட்டில், கோகோ பயிர் உற்பத்தியையும், உற்பத்தித்திறனனையும் அதிகரிக்கும் பொருட்டு பாசன வசதிகளளை மேம்படுத்த உழவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. அறிவியல் முறையில் பயிர் வளர்ப்பை மேற்கொள்ளவும், பதியன்கள் மூலம் கோகோ பயிர் வளர்க்கும் முறையைப் பயன்படுத்தவும், செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளன. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூ.24.96 இலட்சம் ஆகும். 1994-95 ஆம் ஆண்டில். ரூ.5.31 இலட்சம் செலவிடப்படும். இத்திட்டம், 1995-96 ஆம் ஆண்டில், ரூ.4.27 இலட்சம் செலவில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

6.13 காளான் வளர்ப்புத் திட்டம்.

அறுவடைக்குப் பின்னர் முறையாகவும், உரிய நேரத்திலும் கையாள வேண்டிய நடைமுறைகளையும், தரத்தையும் மேம்படுத்தி, காளான் உற்பத்தியை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இத்திட்டத்தின் கீழ் ரூ.69.00 இலட்சம் செலவிடப்படும். இது இரண்டு விதைக் காளான் உற்பத்தி நிலையங்களையும், இரண்டு கிருமி நாசினி செய்யப்பட்ட தொழு எரு உற்பத்தி நிலையங்களையும் அமைக்கப் பயன்படுத்தப்படுவதோடு, காளான் உற்பத்தி செய்ய 2400 உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படும். 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டப் பயிற்சிக்காக, ரூ.3.00 இலட்சம் வழங்க அனுமதிக்கப்பட்டது. இத்திட்டம் குறித்த பயிற்சிக்காக, 1995-96 ஆம் ஆண்டில் ரூ.300 இலட்சம் பயன்படுத்தப்படும்.

6.14. வெற்றிலை சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்.

நம் நாட்டில், வெற்றிலை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்தட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.17.825 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்,

வெற்றிலைத் கொடி தாங்கிகள் அமைக்கவும், நீர் ஆதாரங்களை மேம்ப டுத்தவும், செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கவும், பயிர்ப் பாது காப்புச் சாதனங்களை வழங்கவும் 1994-95 ஆம் ஆண்டில் ரூ.3.375 இலட்சம் செலவிட்ப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.3.975 இலட்சம் பயன்படுத்தப்படும்.

6.15 வணிகரீதியில் மலர்கள் சாகுபடித் திட்டம்.

புதிய முறையானதும், ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளதுமான மலர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, ரூ.11.86 இலட்சம் செலவில், மாதிரி நிலையங்களை ஏற்றுமதி, பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வழக்கமான மற்றும் புதிய மலர்களின் சாகுபடி குறித்து 0.1 எக்டேர் நிலப்பரப்பில் 300 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படும்.

6.16. கிழங்கு வகைப் பயிர் சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்.

கிழங்கு வகைப்பயிர் சாகுபடியை அதிகரிப்பதற்கு, 1994-95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 150 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுவதோடு, ரூ. 1.95 இலட்சம் செலவில் உழவர்களுக்கு 600 சிறுதளைப் பைகளும் வழங்கப்படும். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ரூ.13.20 இலட்சத்தில் 1995-96 ஆம் ஆண்டில், ரூ. 1.95 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் திட்டங்கள்.

7.1 தோட்டக்கலை பயிர்களுக்கு அறுவடைக்குப் பிந்தைய அடிப்படை வசதிகளை வழங்குகிற ஒருங்கிணைந்த திட்டம்.

அறுவடைக்குப் பிந்தைய உற்பத்தி இழப்புகளைக் குறைக்க தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றுவதை மேம்படுத்தவும், அதன் மூலம் நுகர்வோருக்குத் தரமாந உற்பத்திப் பொருட்களை வழங்குவதை அதிகப்படுத்தவும் இடைத்தரகர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதாரத்தைத் தடுத்து உழவர்களுக்கு அதிக ஆதாயமளிக்க கூடிய விலை வீதத்தைக் கிடைக்கச் செய்வதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், உழவர்களுக்கு வட்டியில்லா எளிய தவணைக்கடன் வழங்கப்படும்; அக்கடன் தொகையை அவர்கள் ஐந்தாண்டுக் காலங்களில் திருப்பிச் செலுத்துவர். 1994-95 ஆம் ஆண்டில் தேசிய அளவில் எளிய தவணைக் கடன் தொகையாக ரூ. 1000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 19]

7.2. ஊரகப் பகுதிகளில் ஊட்டமிகு பழத் தோட்டங்கள் நிறுவும் திட்டம்.

ஊரகப் பகுதிகளில் ஊட்டச்சத்து உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு குடும்பத்திற்கு ரூ.50 மதிப்புள்ள 10 பழச்செடிகள் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 30,000 இலட்சம் செலவிடப்படும். இத்திட்டம் 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

8. மாநிலத் திட்டங்கள்

8.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத்திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், பழமரங்கள், நறுமணவகை செடிகள் போன்ற வளம் நிறைந்த தோட்டக்கலைப் பயிர்களையும் காபி, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களையும் பயிரிடுவதற்கான செடிகளை 50 சதவீதம் மானிய விலையில் வழங்குவதன் மூலம் சிறுஉழவர்கள் குறுநில உழவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சான்றளிக்கப்பட்ட காய்கறி விதைகளும் வழங்கப்படுகின்றன. தோட்டக்கலைப் பயிர்கள் காய்கறிப் பயிர்களை 31,000 எக்டேர் அளவுக்குப் பயிரிடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 1994 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை, 25,555 எக்டேர் பரப்பளவிற்கு தோட்டக்கலை செடிகளும் காய்கறி விதைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1995-95 ஆம் ஆண்டிலும் 31,000 எக்டேர் பரப்பளவில் தொடர்ந்து பயன்தரக் கூடிய தோட்டக்கலைப் பயிர்கள், காய்கறிச் செடிவகைகள் பயிரிடப்படும். இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டில், ரூ. 175,010 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8.2. பயிற்சி வழித் தொடர்பு விரிவாக்கத் திட்டம்.

இத்திட்டம் நீலகிரி மாவட்டம் முழுவதிலும் திண்டுக்கல் அண்ணா மாவட்ட கொடைக்கானல் பகுதியிலும் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மலைச்சரிவு பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர் விளைச்சலைப் பெருக்குவதேயாகும். இத்திட்டத்தை நிறை வேற்றுமுகமாக களப்பணியாளர்கள் விவசாயிகளைச் சந்தித்து பழங்கள் மற்றும் காய்கறிப் பயிர்களின் உற்பத்தியினை பெருக்குமுகமாக சீரான முறையில் தொழில் நுட்ப ஆலோசனைகளை, வழங்குகின்றனர். இத்திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு நில விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு மானிய விலையில் உரங்கள் வழங்க

வழிவகுக்கப்படுகின்றது. இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதன் மூலம் 52,000 பண்ணைக்குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ. 97,80 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ரூ. 120.58 இலட்சம் செலவில் இத்திட்டம் 1995096 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலாக்கப்படும்.

8.3. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.

1994-95 ஆம் ஆண்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்யுமுகமாக 166.0 இலட்சம் கன்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரையில் (டிசம்பர் 1994 முடிய) 123.0 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.153.06 இலட்சம் செலவிடப்படுமென்றும், இதனால் ரூ. 191.99 இலட்சம் வரவினம் கிடைக்கக் கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டிலும் ரூ. 181.69 இலட்சம் மூலதனச் செலவில் செலாக்கப்படும். இதன் வாயிலாக ரூ. 200 இலட்சம் வரவினம் கிடைக்கும்.

8.4. நீலகிரி தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் தோட்டங்களை மேம்படுத்துவதற்கென புல்டோசர்கள், டிராக்டர்கள் மற்றும் ஏனைய இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இத்திட்டத்தில் 1994-95 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட 4,000 மணி நேரத்தில் 31-12-1994 முடிய 2,112 மணிநேரத்திற்குப் பல்வேறு இயந்திரங்கள் வாடகைக்கு விடப்பட்டன. 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 4,000 மணி நேரத்திற்குப் பண்ணை இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 7.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8.5. தோட்டக்கலைப் பயிற்சி மையம், மாதவரம்.

தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் தோட்டக்கலைப் படிப்பில் ஈராண்டு பட்டயப்படிப்பு பயிற்சி 40 மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டம் ரூ. 0.99 இலட்சம் செலவில் 1995-96 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும். மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 305 இலட்சம் செலவில் மாதவரத்தில் இப்பயிற்சி மையத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

8.6. தீவிர காய்கறிச் சாகுபடித் திட்டம்.

இந்தத் திட்டம் சேலம், பெரியார், திருச்சி மாவட்டங்களில் 500 எக்டேர் கூடுதல் பரப்பில் ரூ. 15,345 இலட்சம் செலவில் செயற்படுத்தப்பட்டு

1995 ஏப்ரல் 19]

வருகிறது. ஏனைய மாவட்டங்களில் 1995-96 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். உயர்விளைச்சல் காய்கறிவிதைகள் மானியவிலையில் வழங்கப்படும்.

8.7. தோட்டக்கலை நாற்றங்கால் ஒழுங்குமுறைச் சட்டம் செயல்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பழங்கள், காய்கறிகள், நறுமண, சுவைப்பயிர்கள், மலர்கள் மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் பயிரிடு பொருட்களின் உற்பத்தியை முறைப்படுத்தும் பொருட்டு, நாற்றங்கால் ஒழுங்கு முறைச் சட்டம் 1995-96-ல் இயற்றப்படும்.

8.8. தமிழ்நாடு தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (டான்கோப்) நிறுவுதல்.

இடைத்தரகர்களின் ஈடுபாடின்றி, நல்ல விலையில் உழவர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதியை அளிக்கும்பொருட்டு, 1994-95 ஆம் ஆண்டு, தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் 'டான்ஹோப்' என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. அறுவடைக்குப்பின் கையாள வேண்டிய சாகுபடி அறிவியல் முறைகளை உழவர்களுக்கு அளிக்க கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படை வசதிகள் அதிகரிக்கப்படும். 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

8.9. கோவில்களில் நந்தவனம் அமைக்கும் திட்டம்.

தமிழ்நாட்டிலுள்ள கோவில்களில் நந்தவனம் அமைத்து அமை மேம்படுத்தும் பொருட்டு கோவில் வளாகங்களில் இந்த இனையற்றதிட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நந்தவனங்கள் மலர்கள், பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருட்கள், மூலிகைகள் போன்ற தோட்டக்கலைச் செடிவகைகள் பயிரிடப்பட்டு கோவில்களில் வழிபாட்டிற்காகவும் பக்தர்களின் பயனுக்காகவும் அவை பயன்படுத்தப்படும். இத்திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கோவில்கள்வீதம் தெரிந் தெடுக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1992-93 ஆம் ஆண்டில் முதல் நிலையில் 21 கோவில்களில் நந்தவனம் அமைக்கத் தேர்வு செய்யப்பட்டதில் 21 கோவில்களிலும் இப்பணி முடிக்கப்பட்டு விட்டது. இரண்டாவது நிலையில் (1993-94-ல்) 37 கோவில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, பராமரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. மூன்றாவது நிலையில் (1994-95 ஆம் ஆண்டில்) 5 கோவில்கள் தெரிந்தெடுக்கப்பட்டு இப்பணி முடிக்கப்படும்.

8.10. வெங்காய சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்

ஏற்றுமதிக்கான வெங்காய இரகங்களைப் பிரபலப் படுத்தும் பொருட்டு, 1994-95 ஆம் ஆண்டில், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 500 எக்டேர் பரப்பில் ரூ. 10.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

9. 1995-96 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் (1995-96 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்).

9.1. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டம்.

அரசுத் தோட்டக்கலை பண்ணைகளுக்கு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு இத்திட்டம் வகை செய்யப்பட்டது. பெரும்பாலான அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் போதிய நீர்ப்பாசன வசதிகள் இல்லை. எனவே, அரசுத் தோட்டக்கலைப்பண்ணைகளில் தற்போதுள்ள பாசன வசதிகளை அதிகப்படுத்தி பண்ணைச் செடிகளின் உற்பத்தியை அதிகரிக்க ரூ. 10.40 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

9.2. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளின் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யும் திட்டம்.

தோட்டக்கலைப் பண்ணை நிருவாகத்தை செவ்விய முறையில் நடத்துவதற்கு தற்போதுள்ள பண்ணைகள் பெரும்பாலானவற்றில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லை. அணுகுசாலைகள், வேலிகள், அலுவலகக் கட்டிடங்கள், குறுகிய காலத்தில் அதிக அளவு செடிகளை உற்பத்தி செய்யக் கூடிய 'மிஸ்ட் சேம்பர்ஸ்' போன்ற அடிப்படை வசதிகள் இல்லாததால், செடிகளின் உற்பத்தியிலும், அன்றாட நடவடிக்கைகளிலும் முழுவதுமாக சாதனை எய்த இயலவில்லை. ஆகவே அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளுக்காக ரூ. 18.00 இலட்சம் ஒதுக்க இத்திட்டம் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை எண் 3.1

பரப்பளவு, தோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் 1980-81 முதல் 1993-94 வரை

பரப்பளவு : எக்டேரில்
உற்பத்தி :மெட்ரிக் டன்னில்

வ எண்.	விவரம்	1980-81	1990-91	1991-92	1992-93	1993-94
1.	பழங்கள் பரப்பளவு	1,11,330	1,37,924	1,45,535	1,63,296	1,79,596
	உற்பத்தி	19,40,499	26,97,487	30,59,181	29,66,717	33,38,924
	உற்பத்தித் திறன்	17.43	19.56	21.02	18.17	18.59
2.	காய்கறிகள்	1,07,955	1,47,105	1,61,318	1,50,824	1,70,922
	பரப்பளவு உற்பத்தி	19,45,176	36,29,307	40,96,678	3,59,3253	41,59,278
	உற்பத்தித் திறன்	18.02	24.67	25.40	23.82	24.33
3.	நறுமண சுவைப்பயிர் பரப்பளவு	1,59,417	1,31,926	1,35,892	1,75,101	1,70,147
	உற்பத்தி	1,60,755	1,57,155	1,56,961	2,07,061	2,20,937
	உற்பத்தித் திறன்	1.01	1.19	1.16	1.18	1.30
4.	மலைத்தோட்டப் பயிர் பரப்பளவு	1,83,142	1,75,411	1,75,283	1,75,995	1,77,633
	உற்பத்தி	7,14,772	5,45,342	5,69,455	5,70,380	5,76,064
	உற்பத்தித் திறன்	3.09	3.11	3.25	3.24	3.24
5.	மலர்கள் பரப்பளவு	8,384	11,507	10,761	11,742	12,340
	உற்பத்தி	36,520	57,925	53,874	58,378	61,704
	உற்பத்தித் திறன்	4.35	5.03	5.01	4.97	5.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 3.2
தமிழ்நாட்டிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் அமைவிடம் குறித்த விவரம்.

தொ.எண்	பண்ணைப் பெயர்	அமைவிடம்
செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம்		
1.	அதோப.	ஆத்தூர்
2.	அதோப.	விச்சந்தாங்கள்
3.	அதோப.	மேல்கதிர்ப்பூர்
4.	அதோப.மேல்	கோட்டிவாக்கம்
5.	அதோப.	பிச்சிவாக்கம்
6.	அதோப.	மாதவரம்
தென்னாற்காடு மாவட்டம்		
7.	அதோப.	நெய்வேலி
8.	அதோப.	விருத்தாசலம்
வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்		
9.	அதோப.	தகரக்குப்பம்
10.	அதோப.	கூடப்பட்டு
11.	அதோப.	நவ்லாக்
சேலம் மாவட்டம்		
12.	அதோப.	ஏர்க்காடு
13.	அதோப.	செம்மேடு
14.	அதோப.	படசோலை
15.	அதோப. (மா.பெ.ப.)	கருமந்துறை
16.	அதோப. (காபி)	கருமந்துறை
17.	அதோப. (காய்)	கருமந்துறை
18.	அதோப. (வாழை)	கருமந்துறை
19.	அதோப.	முள்ளுவாடி
20.	அதோப.	விறுமலை
(அறுநூற்றுமலை) தர்மபுரி மாவட்டம்		
21.	அதோப.	திம்மாபுரம்
22.	அதோப.	ஜூனூர்
கோயம்புத்தூர் மாவட்டம்		
23.	அதோப.	ஆணைக்கட்டி
24.	அதோப.	கல்லார்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்		
25.	அதோப.	முதலைப்பட்டி

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


1995 ஏப்ரல் 19]

புதுக்கோட்டை மாவட்டம்		
26.	அதோப.	குடுமியான்மலை
27.	மகாஉபப.	
வாளத்திராகோட்டை		
28.	அதோப.	நாட்டுமங்கலம்
நாகை காயிதேமில்லத் மாவட்டம்		
29.	அதோப.	ஆடுதுறை
தஞ்சாவூர் மாவட்டம்		
30.	அதோப.	மருங்குளம்
மதுரை மாவட்டம்		
31.	அதோப.	பெரியகுளம்
திண்டுக்கல் அண்ணா		
32.	அதோப.	கொடைக்கானல்
33.	பிரைண்ட் பூங்கா	கொடைக்கானல்
34.	அதோப.	தாண்டிகுடி
35.	அதோப.	சிறுமலை
காமராஜர் மாவட்டம்		
36.	அதோப.	பவானி
37.	மாபெப.	ஸ்ரீவில்லிபுத்தூர்
பசும்பொன்தேவர்		
38.	அதோப.	தேவக்கோட்டை
39.	அதோப.	நேமம்
திருநெல்வேலி கட்டபொம்மன்		
40.	அதோப.	குற்றாலம்
சிதம்பரனார்		
41.	அதோப.	அரசூர்
நீலகிரி மாவட்டம்		
42.	அதோப.	பர்லியார்
43.	அதோப.	காட்டேரி
44.	அதோப.	குன்னூர்
45.	பழவியல் நிலையர்	குன்னூர்
46.	சிம்ஸ்பூங்கா	குன்னூர்
47.	அதோப.	தொட்டபெட்டா
48.	அதோப.	தும்மநட்டி
49.	அதோப.	விஜயநகரம்
50.	அதாவிபூங்கா	உதகை
51.	அதோப.	நஞ்சைநாடு
52.	அதோப.	தேவாலா
கன்னியாகுமரி		
53.	அதோப.	கன்னியாகுமரி
54.	அதோப.	பேச்சிப்பாறை


53/112–12

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


3.1 தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பளவு - தமிழ்நாடு



3.2



3.3 தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி - தமிழ்நாடு



வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*1995 ஏப்ரல் 19*

அத்தியாயம் 4

வேளாண்மைப் பொறியியல் துறை

4.1.1. இயற்கையின் சமநிலை குன்றாமல் தொடர்ச்சியான முறையில் வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்க நமது நிலம் மற்றும் நீர்வளங்களைச் சிறப்பாகத் திட்டமிட்டு நிர்வகிக்க வேண்டும். அளவால் அதிகரிக்காத நிலத்தின் தேவை வேளாண்மைக்கும், வேளாண்மை அல்லாத பிற பணிகளுக்கும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. காற்று மற்றும் நீரால் ஏற்படும் மண்ணரிப்பு, முறையற்ற நில உபயோக முறைகள் இவற்றால் ஏற்படும் பாதிப்புகளில் நிலவளம் தொடர்ந்து குன்றி அதனால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இச்சூழலில் எய்தியிருக்கும் உற்பத்தி அளவினைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழகத்தின் நிலவளம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை கீழ்க்கண்ட பணிகளில் உழவர்களுக்கு உதவி வருகிறது.

1. மண் அரிப்பை தடுத்தல், மண்ணில் ஈரம் காத்தல்.

2. பாசன வளங்களை உருவாக்குதல், நிலைப்படுத்துதல் மற்றும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் உகந்த நீர் சிக்கனமுறையில் உபயோகத்திற்கு வழிவகுத்தல்.

3. கிணறு, ஏரி, ஆற்றுப்பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்.

4.1.2. நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் :

நீர் உபயோகத்தினை உகந்த அளவிற்கு உயர்த்திடவும் சிக்கனதத்தைப் புகுத்திடவும், ஒரு புதிய உத்வேகத்தோடும் அணுகுமுறையிலும் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பார்சனம் போன்ற நுண்ணிய நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களில் சொட்டு நீர்ப்பாசன முறைகளை அமைக்க மானியமாக வழங்க ரூ. 351 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பிப்ரவரி 1995 முடிய ரூ. 228.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முழுத்தொகையும்

1995 ஏப்ரல் 19]

31-3-1995-க்குள் செலவிடப்பட்டுவிடும். 1995-96 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ. 420 இலட்சம் மான்யமாக வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.2. மண், நீர்வளப் பாதுகாப்பு :

மலைப் பகுதிகளில் மண் அரிப்பை கட்டுப்படுத்துதல், நிலப் பயன்பாட்டை முறைப்படுத்துதல், இயற்கை சூழலைப் பாதுகாத்தல், சீரமைத்தல் ஆகியவற்றிற்காக வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

(அ) நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ் குந்தா, கீழ்ப்பவானி நீர்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு:

மிகவும் பாதிப்புக்குள்ளானது எனக் கண்டறியப்பட்டுள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வண்டல் உற்பத்தியாவதைக் கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சம உயர வரப்புடன் கூடிய சம உயரப் புதர்கள் அமைத்தல், தோட்டக்கலைப் பயிர்கள் வளர்த்தல், தாவர வேலி அமைத்தல், நிழல் தரும் மரம் வளர்த்தல், புல் வளர்த்தல், வடிகால்சீர் செய்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், வண்டல் தடுப்புக் கட்டுமான அமைப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1994-95 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1995 முடிய ரூ. 360.67 லட்சம் செலவில் 7453 எக்டேர் நிலங்கள் சீர்திருத்தப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் 6906 எக்டேர் நிலங்கள் சீர்திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண் நீர்வளப்பாதுகாப்பு:

அமராவதி மற்றும் வைகை நீர்பிடிப்புப் பகுதிகளில் 1994-95 ஆம் ஆண்டு 1570 எக்டேர் நிலங்களை ரூ. 273.80 இலட்சம் செலவில் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பிப்ரவரி 1995 முடிய, 1702 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 256.91 இலட்சத்திற்கு மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் 7205 எக்டேர் நிலங்களைக் காக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்களுக்குப் பணிச் செலவில் 50 விழுக்காடு மான்யமாகவும் மீதித் தொகை கடனாகவும் கருதப்பட்டு, கடன் தொகை இரண்டு ஆண்டுகள் கழித்து நிர்ணயித்த வட்டியுடன் 10 ஆண்டு சம தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது.

[1995 ஏப்ரல் 19

(இ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிகளும், நிலச்சரிவினைத் தடுக்கும் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. நடப்பு நிதியாண்டில் ரூ. 342.33 இலட்சம் செலவில் 1040 எக்டேர் நிலங்களைக் காக்கத் திட்டமிட்டதில் பிப்ரவரி 1995 முடிய ரூ. 284.38 இலட்சம் செலவில் 951 எக்டேர் நிலங்களில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் 4650 எக்டேர் நிலப்பரப்பினைக் காக்க உரிய பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. நிலச்சரிவினைத் தடுக்கும் பணிகள் அரசின் செலவில் மேற்கொள்ளப் படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகளில் 50 விழுக்காடு மான்யமாகவும் மீதம் 50 விழுக்காடு கடனாகவும் கருதப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஈ) ஊட்டி ஏரியை அழகு படுத்துதல் :

ஊட்டி ஏரியைச் சுற்றியுள்ள நான்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்பு மற்றும் நிலச்சரிவினைத் தடுக்கும் பணிகள் 1992-93 மற்றும் 1993-94 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 90.026 இலட்சம் மற்றும் ரூ. 73.526 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட நான்கு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நிலச்சரிவு சம்பந்தப்பட்ட பணிகள் மற்றும் ஏரியினைச் சுற்றி கம்பு வேலி அமைத்தல், நடைபாதையினைச் செப்பனிடுதல் முதலிய பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

(உ) மலை மற்றும் சமவெளிப்பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு:

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மானாவாரி நிலப்பகுதிகளில் அதிக முக்கியத்துவத்தோடு செயல்படுத்தப்படுகின்றன. இந்தப் பணிகள் மூலம் மண்ணில் ஈரத்தன்மை அதிகரிக்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 960.15 இலட்சம் செலவில் நீர்ப்பிடிப்புப் பகுதி அடிப்படையில், 75,000 எக்டேர் நிலங்களைப் பாதுகாக்க மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பிப்ரவரி 1995 முடிய ரூ. 883.17 இலட்சம் செலவில் 75,100 எக்டேர் நிலப்பரப்பு இத்திட்டத்தினால் பயன்பெற்று உள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் 75,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 994.01 இலட்சம் செலவில் மண்வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணிச் செலவில் சமவெளிப்

1995 ஏப்ரல் 19]

பகுதியாயின் 25 விழுக்காடு மானியமும், மலைப் பகுதியாயின் 40 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. மீதம் கடனாகக் கருதப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து 10 ஆண்டு மத தவணைகளில் நிர்ணயிக்கப்பட்ட வட்டியுடன் திரும்பபப் பெறப்படுகிறது. இந்து ஆதி திராவிட உழவர்களுக்கு 50 விழுக்காடு மான்யமும் வழங்கப்படுகிறது.

(ஊ) காற்றரிப்பினைக் கட்டுப்படுத்துதல் :

இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில், முந்தைய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தாவர அரண்களின் பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1995 முடிய தாவர அரண்களைப் பாமரிக்க ரூ. 34.80 இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் தாவர அரண்கள் பராமரிப்பிற்கு ரூ.45.66 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ) பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண் வளப்பாதுகாப்பு:

பழங்குடியினருக்குப் பயனளிக்கும் வகையில் விழுப்புரம் இராமசாமி-படையாச்சியார், வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், திருச்சி மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 42.20 இலட்சம் செலவில் 398 எக்டேர் நிலப்பரப்புப் பயனடைய இலக்கிடப்பட்டுள்ளது. பிப்ரவரி 1995 முடிய ரூ. 33.04 இலட்சம் செலவில் 370 எக்டேர் நிலப்பரப்பு பயனடைந்துள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட 6 மாவட்டங்களிலும் 400 எக்டேர் நிலப்பரப்பில் பணி செயலாக்கப்பட உள்ளது.

4.3. தொலை உணர்வு:

தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அலுவலகத்தில் இருக்கும் தொலை உணர்வுப் பிரிவு மேற்கு மலைத்தொடர்ச்சி மலைத் திட்டப் பகுதிகளுக்கான வரைபடங்களையும் நில அறிக்கைகளையும், விண்கோள் மற்றும் ஆகாய விமானப் படங்களைக் கொண்டு தயாரிக்கின்றது. இந்த நிலை அறிக்கைகள் மூலம் மேற்கு மலைத் தொடர்ச்சி திட்டப் பகுதிகளில் இருக்கும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருக்கும் மண் அரிப்பு, நில உபயோகம், புவியியல், ஆறு, நதி ஆகியவை பற்றிய நிலைகளை அறியலாம்.

அறிக்கைகளின் அடிப்படையில் முன்னுரிமை நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வரிசைப்படுத்தப்பட்டு மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மேற்கு மலைத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் 1,50,000 எக்டேர் நிலப் பரப்பிற்கு இத்துறை நிலை அறிக்கைகளைத் தயாரிக்கின்றது. இது வரையில் 15 இலட்சம் எக்டேர் பரப்புள்ள நிலப்பகுதிக்கு நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது தவிர 1,50,000 அளவில் நீர்ப்பிடிப்பு வரைபடப் புத்தகங்கள், திண்டுக்கல்-அண்ணா, கோயம்புத்தூர், மதுரை, காமராசர் மாவட்டங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், பெரியார் மாவட்டங்களுக்கு நீர்ப் பிடிப்பு வரைப்படப் புத்தகங்கள் தயாரிப்பில் உள்ளன.

4.4 நில மேம்பாடு:

வேளாண்மைப் பொறியியல் துறை, நிலத்தைச் சமமாக்கவும், சீராக்கவும், இயந்திரங்களைக் கொண்டு உழுவதற்கும் நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு புல்டோசர்களையும் டிராக்டர்களையும் வாடகை முறையில் வழங்கி உதவுகிறது.

தற்போது 113 புல்டோசர்களும், 170 டிராக்டர்களும் வேளாண்மைப் பொறியியல் துறையிடம் உள்ளன. துறையிடம் உள்ள 170 டிராக்டர்களில் 16 டிராக்டர்கள் இழுவைப் பணிக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானிய வாடகையில் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

1994-95 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனைகள், 195-96 ஆம் ஆண்டிற்கான இலக்கு முதலிய விபரங்கள் அட்டவணை 4.1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைப் பொறியியல் துறையின் புல்டோசர்கள் 1994-95 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டிணம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் உள்ள பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்துச் சீரமைக்கும் பணியினைச் செவ்வனே நிறைவேற்றின. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய்ப் பாசனப் பகுதிகளில் உள்ள ஆற்று வழிகளிலும், கால்வாய்களிலும் தூர் எடுக்கப்பட்டது. 474.53 கி.மீ. நீளத்திற்கு ஆற்று வழி மற்றும் கால்வாய்களிலும் 45 புல்டோசர்களைக் கொண்டு தூர் எடுக்கப்பட்டது. பாசன வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணியும் மற்றும் பாசன வாய்க்கால்களில் அபிவிருத்திப் பணிகள், கரைகள் பலப்படுத்துதல்

1995 ஏப்ரல் 19]

போன்ற பணிகளும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடமுருட்டியாறு, கொடிங்கல் வடிகால். உய்யக் கொண்டான் வாய்க்கால் மற்றும் அரியார் வாய்க்கால்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. 41.77 கி.மீ. நிளத்திற்கு ஆற்றுவழி மற்றும் கால்வாய்களிலும் 34 புல்டோசர்களைக் கொண்டு தூர் எடுக்கப்பட்டுள்ளது.

4.5. நீர்வள நிர்வாகம் :

4.5.1. நிலத்தடி நீர்வள மேம்பாடு:

கிணற்றுப் பாசனத்தால் பயன்பெறும் நிலப்பரப்பு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இச்சூழ்நிலையில் நிலத்தடி நீர்வள உபயோகம் முக்கியத்துவம் பெறுகிறது. புதிய கிணறுகள் அமைக்கும் இடத்தை புவியியல் ஆய்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கவும், குழாய் கிணறுகள் மற்றும் வடிமுனைக்குழாய் கிணறுகள் அமைத்துத் தரவும், வறண்டு போன கிணறுகளில் துளையுட்டும், பாறைகளைத் தகர்த்தும், ஆழப்படுத்தி நீர்வளம் மீட்கவும், உழவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை உதவுகிறது. இதற்கென இத்துறையில் இயந்திரங்களும், கருவிகளும் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றின் விவரங்கள் அட்டவணை 4.2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்து ஆதி திராவிட உழவர்களுக்கு 50 விழுக்காடு குறைவான வாடகையில் சிறுபாசனத் திட்ட இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

1994-95 ஆம் ஆண்டில் 5,500 குழாய் கிணறுகளும், 3,3000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட உள்ளன. இவற்றில் பிப்ரவரி 1995 முடிய 5479 குழாய்க் கிணறுகளும், 3020 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப் பெற்றுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் 5,500 குழாய்க் கிணறுகளும் 3,300 வடிமுனைக் குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட உள்ளன.

4.5.2. பெருவாரியான வேளாண்மை உணவு உற்பத்தித் திட்டம்:

1994-95 ஆம் ஆண்டில் சிறு, குறு மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் மான்யமாக வழங்கிட அரசு ரூ. 464.942 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்த திட்டத்தின் விவரம் அட்டவணை 4.3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களுக்குக் கீழ்க்கண்டவாறு மான்யம் வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. டீசல் பம்ப் செட் வழங்குதல் தமிழ்நாடு

வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் (என்கோபெட்) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1995 முடிய ரூ. 360.66 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

வரிசை எண்.	விவசாயிகளின் தரம்	மான்ய விழுக்காடு	அதிகபட்ச தொகை (ரூபாய்)
1.	சிறு விவசாயி	25	3000
2.	குறு விவசாயி	33 1/3	4000
3.	பழங்குடி விவசாயி	50	5000

4.5.3. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் திட்டம்.

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் குழாய்க்கிணறுகள் அமைக்கவும், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் மற்றும் கிணறுகளை ஆழப்படுத்தவும் மானியமாக வழங்கிட ரூ. 200 இலட்சம் அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயிக்கும் மானியமாக 50 விழுக்காடும் அதிகபட்சமாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது. பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. பிப்ரவரி 1995 முடிய ரூ. 117.09 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

4.6. பாசன பகுதியில் நீர் மேலாண்மை :

4.6.1. பாசன பகுதி மேன்மைத் திட்டம்:

மைய அரசால் உதவி செய்யப்படும் பாசனப் பகுதி மேன்மைத்திட்டம் தமிழ்நாட்டில் காவேரி, கீழ்பவானி, பரம்பிக்குளம்-ஆளியாறு மற்றும் கம்பம் பள்ளத்தாக்கு ஆகியப் பாசனப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பண்ணை, மேன்மைத் திட்டப்பணிகளின்கீழ் நீர்பங்கிடுவதற்கான கட்டுமானங்கள் கட்டுதல், ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனி மண் வாய்க்கால் அமைத்துத் தருதல், காரைவாய்க்கால்கள் கட்டித்தருதல், நீர் பிடிப்புத் தொட்டிகள் கட்டுதல் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வாரப்பந்தித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வயலுக்கும் உகந்த நீர், பாசன அளவு முறையின் மூலம் விவசாயிகளின் பங்கேற்புடன் சமவிகித அளவில் பாசன நீர் பங்கீடு செய்யப்பட்டு வருகிறது.

1995 ஏப்ரல் 19]

1994-95 ஆம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை விவரங்களும், 1995-96 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட இலக்கு விவரங்களும் அட்டவணை 4.4-ல் தரப்பட்டுள்ளன.

4.6.2. விவசாயிகளின் பங்கேற்பு :

பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் மட்டுமே பயனடைவதால், விவசாயிகள் தாங்களாகவே தங்கள் பண்ணைகளில் நீர் மேலாண்மையை அமுல்படுத்தவும், அதனை நீண்ட காலத்துக்குச் செவ்வனே நிறைவேற்றும் வண்ணமாகவும், இவ்விவசாயிகளை, சமுதாய அமைப்பு என்ற கோட்பாட்டின்கீழ் ஒருங்கிணைத்து, இத்துறையின் மூலம் மூன்றடுக்கு விவசாயிகள் சங்கங்கள் ஒவ்வொருப் பாசனப்பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன :–

1. பாசன சங்கங்கள் - மதகளவில்
2. பாசன சபைகள் - கிளை வாய்க்கால் அளவில்
3. விவசாயிகள் பாசன இணையம் - பாசனப்பகுதி முழுமைக்கும்

இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 1995 முடிய விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வ.எண்.	பாசனப்பகுதி	பாசன சபைகள்	பாசன சங்கங்கள்
1.	காவேரி	58	1096
2.	கீழ்பவானி	30	2006
3.	சாத்தனூர்	13	111
4.	பரம்பிக்குளம்-ஆளியாறு	52	1075
5.	பெரியார் வைகை	31	831
6.	கம்பம் பள்ளத்தாக்கு	-	35
	மொத்தம் ..	**184**	**5154**

இது தவிர பெரியார் வைகைத் திட்டத்தின்கீழ் 5 மகளிர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு பண்னை மகளிர்க்கு நீர் மேலாண்மைப் பணிகளிலும் எம்பிராய்டரி, செயற்கை வைரக்கல் அறுத்தல் மற்றும் நவீன அரிசி ஆலைத் தொழில் நுட்பம் போன்ற சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

[*1995 ஏப்ரல் 19*

4.6.3. பாசன சபைகளுக்கு மேலாண்மைத் தொகை வழங்குதல்:

பாசன சபைகள் நிதியில் தன்னிறைவு அடைந்து நீண்ட காலத்திற்கு திறம்பட செயல்படும் விதத்திலும், வாரபந்தித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வண்ணமாகவும் முதல் மூன்றாண்டுகளுக்கு மைய அரசு, பாசன மேலாண்மை மானியத்தொகை வழங்கி உதவுகிறது. பதிவு செய்யப்பட்ட பாசன சபைகளுக்கு முதல் இரண்டாண்டுகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 100 வீதமும், மூன்றாம் ஆண்டிற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 75 வீதமும் மானியத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 31-3-94 முடிய ரூ. 122.06 இலட்சம் அளவில் மேலாண்மைத்தொகை பாசன சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 87.50 இலட்சம் நிதியானது மேலாண்மைத் தொகையாக வழங்கிட ஒப்புதலளிக்கப்பட்டது.

4.6.4. புதிய பாசனப்பகுதி மேன்மைத் திட்டங்கள்:

எட்டாவது திட்ட காலத்தில் மைய அரசு தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பாசனப் பகுதிகளில் பாசனப்பகுதி மேன்மைத் திட்டத்தை மைய அரசு உதவியுடன் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

1. கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம்
2. அமராவதித் திட்டம்.
3. கோதையாறு, சித்தார்-பட்டணம்கால் திட்டம்.

கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம் ஆகஸ்டு 1994-ல் தொடங்கப்பட்டு ரூ. 186.16 இலட்சம் தொகையில் 2,500 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டு பணிகளையும், 2,500 எக்டேர் பரப்பில் வாரபந்திப் பணிகளையும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 1995 முடிய 2,100 எக்டேர் பரப்பில் பண்னை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மற்ற இரு பாசனப்பகுதிகளான அமராவதி மற்றும் கோதையாறு, சித்தார்- பட்டணம்கால் பாசனப்பகுதிகளில் இத்திட்டம் 1995-96 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

4.7. வெளிநாட்டு உதவியுடன் நடைபெறும் திட்டங்கள் :

4.7.1. திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களில் டானிடா நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் தரம் பாதிக்கப்பட்ட 17,800 எக்டேர் நிலப்பரப்பை

1995 ஏப்ரல் 19]

ரூ. 625 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கான திட்டம் டானிடா நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 30-4-1994 அன்று முடிவுற்றது. 1993-94 ஆம் ஆண்டு முடிய 17,861 எக்டேர் பரப்பளவு நிலங்கள் ரூ.583 இலட்சம் செலவில் பயன்பெற்றுள்ளன.

முதற் கட்டப்பணிகள் ஏப்ரல் 1994-ல் முடிவுற்றதும், இரண்டாவது கட்டப்பணிகள் ஆகஸ்ட் 1994 முதல் செயல்படுத்தப்பட்டது. மே 1994 முதல் ஜூலை 1994 முடிய இடைப்பட்ட காலத்தை 'டானிடா' ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் ஆகஸ்ட் 1994 முதல் இரண்டாம் கட்டப்பணி செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 42,500 எக்டேரில் ரூ. 4172 இலட்சம் செலவில் ஏழு ஆண்டு காலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். பிப்ரவரி 1995 முடிய நிதி ஒதுக்கீடாகிய ரூ. 200 லட்சங்களில் ரூ. 135.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

4.7.2. காமராசர், பசும்பொன்-முத்துராமலிங்கத்தேவர், இராம நாதபுரம் மாவட்டங்களில் டானிடா நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மேற்கண்ட மாவட்டங்களிலுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் நிலங்களில் மேலும் மண்ணரிப்பு நிகழாமல் தடுக்கவும் நிரந்தரமாக சிக்கனமான எளிய நில உபயோக முறைகளை மேற்கொள்ளவும், வேலை வாய்ப்பினை உருவாக்கித்தரவும், 11,000 எக்டேர் பரப்பில் ரூ. 13.85 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் டானிடா நிதி உதவியுடன் 51/2 ஆண்டுகளில் செயல்பட உள்ளது.

4.8. கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல்:

நிலத்தடி நீரை அதிக அளவு பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டைகளைப் பெருமளவில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டு முடிய 8,048 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குட்டைகள் நிலத்தடி நீர் ஆதாரங்களை பெருக்குவதில் நல்ல பயன் அளித்துள்ளது. இதனால் கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 588 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்க, ரூ. 977.25 லட்சத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் 1994-95-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

[1995 ஏப்ரல் 19

4.9. மாவட்டத் திட்டங்கள்:

கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், கோவில் குளங்கள் புதுப்பித்தல் பஞ்சாயத்து ஒன்றியக் குளங்களை நிலைப்படுத்துதல், கதிரடிக்கும் களம் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஒப்படைக்கப்பட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

4.10. 1995-96ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

1995-96ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கூடுதல் திட்டங்கள் நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

(அ) அரசு ஒதுக்கீடான ரூ. 15 இலட்சம் பங்குப் பணம் மூலம் பழைய ஆறு புல்டோசர்களுக்குப் பதிலாக புதிதாக ஆறு புல்டோசர்கள் வாங்குதல்.

(ஆ) காவிரிப் பாசனப் பகுதியில் வாய்க்கால் தூர் எடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள டி-50 எ புல்டோசர்களின் கீழ்-நிலைப் பகுதிப் பாகங்களை ரூபாய் 10 இலட்சங்கள் செலவில் மாற்றியமைத்தல்.

(இ) ரூபாய் 15 இலட்சங்கள் செலவில் ஒரு நடமாடும் நீரியற் கருவி வாங்குதல்.

(ஈ) வேளாண்மைப் பொறியியல் துறைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ரூபாய் மூன்று இலட்சங்கள் செலவில் ஒரு தானியங்கி மின்னணுத் தொலை பேசி நிலையம் அமைத்தல்.

அட்டவணை 4.1
நில மேம்பாடு திட்டம்

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்	அலகு	1994-95		1995-96 ஆண்டு இலக்கு
			ஆண்டு இலக்கு	பிப்ரவரி 1995 வரையிலான சாதனை	
1.	நிலத்தைச் சமன் செய்தல்	மணிகள்	145800	167456	145800
2.	இயந்திர உழுவை	மணிகள்	85350	91437	85350

TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 4.2

சிறு பாசனத் திட்ட இயந்திரங்கள்

வரிசை எண்.	இயந்திரம்/கருவிகளின் பெயர்	எண்கள்
1.	பெர்குஷன் துளைக்கருவிகள்	44
2.	ரோட்டரி துளைக்கருவிகள்	59
3.	காலிக்ஸ் துளைக்கருவிகள்	1
4.	ஹேமர் துளைக்கருவிகள்	6
5.	வாகன், இன்வெல் துளைக்கருவிகள்	39
6.	பாறை வெடிக் கருவிகள்	84
7.	நீள் துளைக் கருவிகள்	45
8.	காற்றழுத்தக் கருவிகள்	16
9.	மின்சார லாகிங் கருவிகள்	3
10.	கைத்துளைக் கருவிகள்	377
11.	ரெஸிஸ்டிவிடி மீட்டர்கள்	22

அட்டவணை 4.3

பெருவாரியான வேளாண்மை உணவு உற்பத்தித் திட்டத்தில் சிறு, குறு, பழங்குடி விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியத்தொகை.

வரிசை எண்.	திட்டத்தின் பெயர்	தொகை (ரூபாய் லட்சத்தில்)
1.	பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்	21.400
2.	குழாக் கிணறுகள் அமைத்தல்	100.000
3.	டீசல் பம்ப் செட் வழங்குதல்	200.000
4.	வேளாண் நிலங்களுக்கு நீர் வழங்கிட குழாய்கள் அமைத்தல்	143.542
	மொத்தம்	**464.942**

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 4.4

பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்

வ.எண்	திட்டத்தின் பெயர்	அலகு	1994-95 ஆண்டு இலக்கு	1994-995 சாதனை பிப்ரவரி 1995 முடிய.	1995-1996 ஆண்டு இலக்கு
1.	**பண்ணை மேன்மைத் திட்டப் பணிகள்:**				
1.	காவேவி	எக்டேர்	24300	24493	25000
2.	கீழ்பவானித் திட்டம்	„	5000	5003	5000
3.	பரம்பிக்குளம்-ஆளியாறுத்திட்டம்	„	5000	5397	5000
4.	கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம்	„	2500	2100	2500
	மொத்தம்	„	***36800***	***36993***	***37500***
2.	**சுழற்சி முறைப் பாசனத் திட்டம்:**				
1.	காவேரி	எக்டேர்	24000	20175	25000
2.	கீழ்பவானித் திட்டம்	„	10000	9697	10000
3.	பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்	„	20000	20643	20000
4.	கம்பம் பள்ளத்தாக்கு திட்டம்	„	2500	-	2500
	மொத்தம்	„	***56500***	***50515***	***57500***
3.	**சுழற்சி முறைப் பாசனத் திட்டம் (மாநிலத் திட்டம்):**				
1.	பெரியார் வைகை	எக்டேர்	15000	16196	-
2.	சாத்தனூர்	„	5000	5000	-
	மொத்தம்	„	***20,000***	***21,196***	-

1995 ஏப்ரல் 19]

அத்தியாயம் - 5
நீர்ப்பிரி முகடு மேம்பாடு

கடந்த நான்கு ஆண்டுகளாக பல வகையான தானியங்களின் உற்பத்தி கவருகின்ற வகையில் அதிகரித்து வருவதை மாநிலம் கண்டு வருகின்றது. உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் கரும்பு உற்பத்தி கணிசமான அளவு உயர்ந்து இருக்கின்றது. பயிர் செய்யப்படும் பரப்பளவை அதிகரிக்க முடியாததால் பயிர் உற்பத்தியை அதிகரித்ததின் மூலம் அதிகரிப்புகள் பெறப்பட்டன. உதாரணமாக அரிசி உற்பத்தி 1990 கிலோ/எக்டேரிலிருந்து 3116 கிலோ/எக்டேராக அதிகரித்தது. இதைப் போன்று சிறு தானியங்களின் உற்பத்தி இரண்டு மடங்கானது. இதற்குக் காரணம் திறமையான ஆராய்ச்சியும், தொழில் நுட்ப மாற்றமும் மற்றும் வேளாண்மைத் துறையில் தகுந்த முதலீடுகள் செய்வதே ஆகும். வேளாண்மை உற்பத்தி பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஈடாக இருக்க முடியவில்லை. மேலும் இதனை ஆராய்ந்து பார்த்தால் வேளாண் உற்பத்தி பன்மடங்கு பெருகினாலும் சுற்றுப்புறச் சூழலில் உள்ள இயற்கை பாதிக்கப்படாமல் இருக்க முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். மக்கள்தொகை பெருக்கமும், கால்நடைப் பெருக்கத்தினாலும் பயிரிடுவதற்குப் பயன்படாத நிலங்களும் பயிரிடும் பொருட்டு, பயிரிடும் நிலங்களாக மாற்றப்பட்டன. முழு முயற்சி எடுத்த போதிலும் பலவித பயிர்கள் 50 சதவிகிதம் மானாவாரி சாகுபடியில் உள்ளது. ஆகையால், மானாவாரி சாகுபடியில் அதிக அக்கறை செலுத்துவதின் மூலம், அடிப்படையான உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும். மேற்கூறியபடி, மானாவாரி சாகுபடி தொழில் நுட்பங்களின் செயல்பாட்டுத் திறனை அறிவுறுத்துவதன் மூலம்மு பிரச்சனைகளை ஒருங்கிணைந்த முறையில் அணுகுவதின் மூலமும் தீர்வு காண முடியும்.

தற்சமயம், 1000 முதல் 2000 எக்டேர் பரப்பளவு கொண்ட சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதித் திட்டத்துடன் திருந்திய பயிர் முறை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, இம் மாநிலத்தில் பலதரப்பட்ட நீர்பிடிப்புத் திட்டங்களான, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், தேசிய மானாவாரி நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம், விரிவான நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கூறிய திட்டங்கள் மண் அறிப்புதலைத் தடுப்பதற்காகவும், மழை நீரைச் சிறந்த முறையில் உபயோகிப்பதற்கும், மானாவாரி சாகுபடித் தொழில் நுட்பங்களை கையாளுவதன் மூலமும், பயிர் உற்பத்தியைப் பெருக்குதலும்,

[1995 ஏப்ரல் 19

பண்ணைக் காடுகள், தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் துணைத் தொழில்களில் விவசாயிகளை ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் வருமானத்தை பெருக்கலாம். நீர்ப்பிரி முகடுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் இயற்கை வளங்களான நிலம், நீர், தாவரங்கள், கால்நடை மற்றும் மனித வளம் ஆகியவற்றை செம்மைப்படுத்துதல் ஆகும். சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தி, உள்ளூர் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் ஆகியன இத்திட்டதின் மற்ற குறிக்கோள்கள் ஆகும். இம்மாநிலத்தில், மேற்கூறிய கருத்தை மையமாக கொண்டு கீழ்க்காணும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

2. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

2.1 மைய அரசின் நிதி உதவியின் கீழ் செயற்படும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் இம்மாநிலத்தில் 1972-73 ஆம் ஆண்டில் இருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காகும் செலவு, மத்திய, மாநில அரசுகளால் 50:50 என்ற அடிப்படையில் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தற்போது இத்திட்டம் இம்மாநிலத்தில் தருமபுரி, வ.உ.சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய 7 மாவட்டங்களில் 43 வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது. 1987 முதல் இத்திட்டம் நீர்ப்பிரி முகடு வளர்ச்சி என்ற அடிப்படையில் பயிரிடுவதற்கு இயலாத நிலங்களில் வடிகால் அமைப்புகள் சீர்படுத்தி, நிலவளம் மற்றும் மண்ணின் ஈரத்தன்மையை காத்தல், வேளாண் காடுகள் வளர்ப்பு, மேய்ச்சல் நிலத்தில் புல் வளர்ப்பு, பழவகை மரங்கள் வளர்ப்பு மற்றும் நிலத்தில் மாறுபட்ட பயன்பாடு ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இயங்குகிறது.

2.2. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 1095 இலட்ம் செலவில் 27.692 எக்டேர் பரப்பு நிலங்களை மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் பிப்ரவரி 95 வரை ரூ. 893.54 இலட்சம் செலவில் 24,137 எக்டேர் பரப்பளவு நிலங்களில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. செலவிடப்பட்ட தொகை மற்றும் செயல் இலக்கு சாதனை விவரம் அட்டவணை 5.1 மற்றும் 5.2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.3 மைய அரசு இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து தற்பொழுது ஒரு புதிய வழிமுறை தொகுப்பினை வெளியிட்டுள்ளது. மேலும் 1-4-1995 முதல் இத்திட்டத்தின் கீழ் புதிதாக 33 கூடுதல் வட்டாரங்களை சேர்ப்பதற்கு

1995 ஏப்ரல் 19]

ஏற்கனவே உள்ள *3* வட்டாரங்களை பிரித்து ஆணை வெளியிட்டுள்ளது. அதன்படி *6* மாவட்டங்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. அவை வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திண்டுக்கல் அண்ணா, காமராசர் மாவட்டங்கள் ஆகும்.

2.4. புதிய வழிமுறை தொகுப்புகளின் கீழ் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்: *(1)* கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சி *(2)* சுற்று சூழலின் நிலைபடு தன்மையை சீராக்குதல் *(3)* வறுமை கோட்டின் கீழ் உள்ள நீர்பிரி முகடு பகுதிவாழ் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தல் *(4)* நிர்ணயித்த இலக்குகளை எட்டுதல், அஃதாவது திட்டப்பகுதியில் பயன்பாடு அடையும் மக்களை பங்கேற்கச் செய்தல்.

2.5. தற்போதைய *43* வட்டாரங்களுக்கு *1994-95* ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு ரூ. *10.985* கோடியாகும். *1995-96* ஆம் ஆண்டு மேலும் *36* வட்டாரங்கள் சேர்க்கப்படுவதாலும், ஒரு நீர்ப்பிரி முகடு திட்டத்திற்கு ஒதுக்கப்படும் ரூ. *20* இலட்சத்தில் நான்கில் ஒரு பகுதி மட்டும் *1995-96*ல் செலவிட வேண்டும் என்பதாலும், மொத்தம் ரூ.*20.00* கோடிகள் *1995-96*க்கு தேவைப்படும் அதில் *50* விழுக்காடு ரூ.*10.00* கோடிகள் மாநிலத்தின் பங்கு ஆகும்.

3. பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத் திட்டம்.

உள்ளூர் மக்களின் பங்கு மற்றும் முழு ஒத்துழைப்புடன் நீர்ப்பிரி முகடுத் திட்ட அடிப்படையில் பயன்படுத்தப்படாத நிலங்களைத் திறம்பட மேம்படுத்துவது தான் இத்திட்டத்தின் நோக்கமாகும். உள்ளூர் மக்களின் மரத்தேவை மற்றும் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பலதரப்பட்ட மர உற்பத்தி, உள்ளூர் கால்நடைகளின் தீவனத் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் உள்ளூர் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல் ஆகியவைகளுக்காக பயன்படுத்தப்படாத நிலங்களில் பலவகையான மரங்களை நட்டு பசுமையாக்குவதற்கு இத்திட்டம் வழி வகை செய்கிறது.

அதிகப்படியான பயன்படுத்தப்படாத நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருவதின் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதற்கிணங்க, சென்னையில் நடைபெற்ற மாவட்டாட்சியர்கள் மாநாட்டில் *1,00,000* எக்டேர் பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுக்குத் திட்டம் தயாரிக்குமாறு எல்லா மாவட்டாட்சி யர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

மாவட்டாட்சியர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் "ஒருங்கிணைந்த பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத் திட்டம்". "முதலீட்டு முன்னேற்றத்திட்டம்" மற்றும் "தொழில் நுட்ப மேம்பாட்டு விரிவாக்கம் மற்றும் பயிற்சி". ஆகிய திட்டங்களின் கீழ் திட்ட செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளர்கள். ரூ.6591.30 இலட்சம் செலவில் 60359.01 எக்டேர் பயன்படுத்தப்படாத நிலங்களை மேம்படுத்துவதற்கு இருபத்தேழு (27) திட்டசெயற்குறிப்புகள் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அரசு சாரா நிறுவனங்கள், வசதி வாய்ப்புள்ள விவசாயிகள், கூட்டாண்மை அமைப்புகள் மற்றும் தனியார் தொழில் முனைவர்கள் ஆகியோர்களுக்கு பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத்திட்ட முக்கியத்துவம் பற்றி தெரிவிக்கப்பட்டது. "தானாக முன்வரும் முகமைகளுக்கு மான்ய உதவி வழங்குதல் திட்டம்" மற்றும்

"முதலீட்டு முன்னேற்றத் திட்டம்" ஆகிய திட்டங்களின் கீழ் திட்ட செயற்குறிப்புகளை அவர்கள் அனுப்பியுள்ளார்கள். மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் ரூ.302.32 இலட்சம் செலவில் 4633.01.2 எக்டேர் பயன்படுத்தப்படாத நிலங்களை மேம்பாடு செய்ய இருபது (20) செயற்குறிப்புகள் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

(i) ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 1.26 கோடி செலவில் கந்தர்வ கோட்டை வட்டாரத்தில் உள்ள 2155 ஏக்டேர் பயன்படுத்தப்படாத நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்ட செய்ற்குறிப்புக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

(ii) ரூ.40.58 இலட்சம் செலவில் "முதலீட்டு முன்னேற்ற திட்டத்தின் கீழ் " கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள "தமிழ்நாடு பிளாண்டேஷன்ஸ்" என்ற அரசு சாரா நிறுவனம் தயாரித்து அனுப்பியுள்ள திட்ட செயற்குறிப்புக்கும் மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மற்ற மாவட்டங்களில் பயன்படுத்துப்படாத நில மேம்பாட்டுப் பணிகளுக்காக அனுப்பப் பட்டுள்ள சில திட்ட செயற்குறிப்புகளுக்கும் மைய அரசு ஒப்புதல் விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஒருங்கிணைந்த நீர் பிடிப்பு பகுதிமேம்பாடு திட்டம்.

இத்திட்டம் உழுது பயிரிடத்தக்க நிலங்கள், அவ்வாறு பயிரிடுவதற்கேற்ப சீர்செய்யப்படாத நிலங்கள் ஆகியவற்றின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன்

1995 ஏப்ரல் 19]

மூலம் சுற்றுப்புற சூழல் நிலையில் உள்ள இயற்கை நிலையினை பாதுகாக்கும் இத்திட்டமானது பாலாறு மற்றும் வெள்ளாறு நீர் பிடிப்பு பகுதிகளில் 54000 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டமானது 12 மாவட்டங்களில் 36000 எக்டேர் பரப்பளவில் விரிவாக்கபட உள்ளது.

1994-95 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கும், 1995 ஆண்டிற்கான (பிப்ரவரி 95 வரை) சாதனையும் மற்றும் 1995-96 ஆம் ஆண்டிற்கு திட்ட இலக்கும் 5.3., 5.4. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. தேசிய மானாவாரி நீர்ப்பிரிவு முகடு மேம்பாட்டுத்திட்டம்

மைய அரசு ஆதரவுடன் செயற்படுத்தப்பட்டு வரும் தேசிய மானாவாரி நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு

(1) நீடித்த இயற்கைத் தாவர உற்பத்தி

(2) இயற்கை சூழ்நிலை சமன்பாட்டை சீராக்குதல்

1990-91ஆம் ஆண்டிலிருந்து 1996-97 ஆம் ஆண்டுவரை ஏழு ஆண்டு காலத்திற்கு ரூ.41.51 கோடி செலவில் 15 மாவட்டங்களில் அமைந்துள்ள 84 நீர்ப்பிரி முகடுகளில் தேசிய மானாவாரி நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் இலக்கு 5.5 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகள்

(1) அடிப்படை வேலைகள்

(2) பயிரிடத்தக்க நிலங்களில் மேற்கொள்ளப்படும் வேலைகள்

(3) பயிரிடத்தகாத நிலங்களில் மேற்கொள்ளப்படும் வேலைகள்

(4) கால்நடை மேலாண்மை

[1995 ஏப்ரல் 19

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளாவன

(1) மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல்

(2) சிறிய தடுப்பு அணைக்கட்டுகள், தாவர தடுப்பு வேலி போன்றவைகளை அமைப்பதன்மூலம் மழை நீரை தேக்கி வைத்தல்.

(3) உப தொழில்களை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல், அதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரித்தல்.

இத்திட்டத்தின் கீழ் 1994-95ஆம் ஆண்டிற்கான திட்டம் மற்றும் பிப்ரவரி 95 ஆம் ஆண்டு வரை எட்டப்பட்ட சாதனைகள், மேலும் 1995-96 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவைகள் பின்வருமாறு அட்டவணை 5.6-5.7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.1

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்ட நிதி இலக்கு சாதனை

(ரூபாய் இலட்சத்தில்)

வ.எண்	திட்டக்கூறு	1993-94 இலக்கு	1993-94 சாதனை	1994-95 இலக்கு	1994-95 சாதனை
1.	மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு	294.348	290.694	323.09	300.09.
2.	காடுவளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நில மேம்பாடு	249.410	251.500	299.34	219.56
3.	நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு	208.600	200.850	218.63	161.13
4.	மற்றவை	134.492	123.580	144.50	112.01
5.	திட்ட நிர்வாகம்	98.650	105.672	110.57	100.75
	மொத்தம்	**985.500**	**962.296**	**1096.13**	**893.54**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 5.2

வறட்சிக்கு இலக்காகும் பகுதி செயல் சாதனை

தொடர் திட்டக்கூறு	அலகு	1993-94 இலக்கு	1993-94 சாதனை	1994-95 இலக்கு	1994-95 சாதனை (பிப்-95)
1. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு	எக்டர்	16457	16118	16670	16485
2. காடுவளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நிலமேம்பாடு	எக்டர்	6716	6674	7963	7525
3. நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு	எக்டர்	553	533	669	441
4. மற்றவை	எக்டர்	2062	1856	2390	2264
மொத்தம்	எக்டர்	**25788**	**25181**	**27692**	**26715**

அட்டவணை 5.3

ஒருங்கிணைந்த நீர் பிடிப்பு பகுதி மேம்பாட்டுத்திட்டம்

	1994-95 திட்ட செயல் (எக்டர்/எண்) இலக்கு	சாதனை	நிதி இலக்கு (ரூ. இலட்சங்கள்) இலக்கு	சாதனை
1. பண்ணை மேம்பாடு குறித்த பணிகள்	74.37	6910	59.654	43.385
2. பண்ணை அல்லாத பிற இடங்களுக்கான மேம்பாட்டுப் பணிகள்	3218	3169	279.840	187.968
3. இயற்கையான வடிகால் அமைத்தல்	11993	4235	32.004	16.553
4. விரிவாக்க திட்டங்கள்	16623	16132	58.843	55.367
5. வெட்டிவேர் நாற்றங்கால்	-	-	7,900	7,900
6. அரசுசாரா நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவி.	-	-	2,300	1,140
7. பயிற்சி	10	-	2,200	0.187

[1995 ஏப்ரல் 19

	1994-95			
	திட்ட செயல் (எக்டர்/எண்)		நிதி இலக்கு (ரூ. இலட்சங்கள்)	
	இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை
8. நீர்பிடிப்பு ஆராய்ச்சி	-	-	1,000	-
9. கொள்முதல்	-	-	1,500	-
10. அலுவலர்கள்				
11. பராமரிப்பு -	-		87.858	70.212
மொத்தம் ..	-	-	**534.00**	**382.650**

அட்டவணை 5.4

ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத்திட்டம்

வ.எண்	1995-96 செயல் இலக்கு (எக்டர்)	நிதி இலக்கு (ரூபாய் இலட்சங்கள்)
1. பண்ணை மேம்பாடு குறித்த பணிகள்	7437	59.654
2. பண்ணை அல்லாத பிற இடங்களுக்கான மேம்பாட்டுப் பணிகள்	3218	279.840
3. இயற்கையான வடிகால்	11993	32.904
4. விரிவாக்கத் திட்டங்கள் பன்னிரண்டு மாவட்டங்களில்	17623	58.843
மொத்தம்	-	**431.241**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 5.5

நவப்ரா திட்ட நீர்பிடிப்புப் பகுதிகள்

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	நீர்ப்பிடிப்பு பகுதி எண்கள்
1.	தென்னார்க்காடு-வள்ளலார்	1
2.	விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார்	2
3.	வட ஆற்காடு-அம்பேத்கார்	9
4.	திருவண்ணாமலை-சம்புவராயர்	8
5.	சேலம்	14
6.	பெரியார்	7
7.	கோயம்புத்தூர்	4
8.	புதுக்கோட்டை	1
9.	தருச்சி	16
10.	திண்டுக்கல்-அண்ணா	8
11.	மதுரை	3
12.	பசும்பொன்முத்துராமலிங்க தேவர்	3
13.	காரமராசர்	1
14.	திருநெல்வே-கட்டபொம்மன்	2
15.	தர்மபுரி	4
	மொத்தம்	**84**

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 5.6

நவப்ரா திட்டத்தின்கீழ் நிதி சாதனை (1994-95)

வரிசை எண்ணும் பகுதியும்.		திட்ட செயல் (எக்டர்/எண்) 1994-95		நிதி இலக்கு	
		இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை (ரூ. இலட்சங்கள்)
1. அடிப்படை பணிகள்		1037764	1021280	291.50	220.90
2. விளை நிலங்களில் பணிகள்	எக்.	8190	7700	176.45	161.74
	எண்கள்	169112	93100	-	-
3. விளைநிலமற்ற இடங்களில் பணிகள்	எக்	17488	12980	256.85	187.98
	எண்கள்	1592785	792788	-	-
4. கால்நடைப் பராமரிப்பு	எண்கள்	20110	13110	49.68	46.34
மொத்தம் ..		-	-	**774.48**	**616.96**

அட்டவணை 5.7

1995-96 நவப்ராதிட்டம்

எண் பகுதி.		செயல் இலக்கு (எக்டர்)	நிதி இலக்கு (ரூபாய் இலட்சங்கள்)
1. அடிப்படைப் பணிகள்	எண்	2503000	289.23
2. விளை நிலங்களில் பணிகள்	எக்.	16250	
	எண்	1146000	271.87
3. விளை நிலமல்லாத இடங்களில் பணிகள்	எக்.	1787	
	எண்	882392	438.04
4. கால்நடைப் பராமரிப்பு	எண்	5315	8.00
மொத்தம் ..			**1007.14**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அத்தியாயம் 6
வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி
1. கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒன்பது உறுப்புக் கல்லூரிகளும், சார்புக் கல்லூரியாக புதுவையில் காரைக்கால் வேளாண்மைக் கல்லூரியும் மூன்று வேளாண் பட்டயப்படிப்பு அளிக்கும் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. இவைகளில் குமுளூரில் இருக்கும் வேளாம் பொறியியல் கல்லூரியும், திருச்சியிலிருக்கும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் 1992 ஆம் ஆண்டு துவங்கப்பட்டன. தந்தை ரோவர் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனம் பட்டயப்படிப்பு அளிக்கும் பொருட்டு 1994 ஆம் ஆண்டு சார்பு நிறுவனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. செயற்முறைக்கு இளநிலை பட்டங்களிலும் அறிவியலுக்கு முதுநிலை பட்டங்களிலும் முக்கியத்துவம் அளித்து பாடத்திட்டங்கள் 1992 ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே, புகுத்தப்பட்ட சுய வேலை வாய்ப்பு பாடங்கள் வலுப்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், புதிய வேலைவாய்ப்பு பாடங்கள் புகுத்தப்பட்டுள்ளன. விவசாயம், தோட்டக்கலை, வனவியல், மனையியல் மற்றும் வேளாண் பொறியியல் துறைகளில் இளநிலை பட்டங்கள் கொடுக்கப்படுகின்றன.

2. முதுநிலை பட்டங்களை 28 பாடங்களில் அளிக்கப்படுகின்றன. அவற்றில் முதுநிலை அறிவியல் - (பட்டுவளர்ப்பு) மற்றும் முனைவர் ஆராய்ச்சி நிலையில் உயர்தொழில் நுட்பம், வனவியல் மற்றும் சுற்றுப்புற அறிவியல் பாடங்கள் 1992 ஆம் ஆண்டு துவங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சென்ற ஐந்து ஆண்டுகளில் சேர்ந்த விபரம் அட்டவணை 6.1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சமீபத்தில் நடந்த தேசிய அளவிலான இளநிலை ஆராய்ச்சி உதவி தொகைக்காக பாரதிய வேளாண் குழு நடத்திய தேர்வில் 54 சத-உதவித் தொகையை இப்பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுள்ளனர். மொத்தமுள்ள 28 வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து பங்கு கொண்ட மாணவர்களில், இப்பல்கலைக்கழக மாணவர்கள் தாவர அபிவிருத்தி மற்றும் மரபியல், நோயியல், பூச்சியியல், நுண்ணுயிரியல், விதைநுட்பவியல், நூற்புழுவியல், வேளாண் விரிவாக்கம் மற்றும் தோட்டக்கலை பாடங்களில் முதல் இடத்தைப் பிடித்துள்ளனர். ஐந்து ஆராய்ச்சி மாணவர்கள் தேசிய அளவிலான சிறந்த ஆராய்ச்சி உரைக்கான ஜவஹர்லால் நேரு விருதினை பெற்றுள்ளனர்.

[1995 ஏப்ரல் 19

வருங்கால முக்கிய திட்டங்கள்:

வேளாண் மனிதவள மேம்பாட்டுத்திட்டம்:

4. தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் பிரம்மாண்டமான ரூ.94.50 கோடி மதிப்புள்ள வேளாண் மனித வள மேம்பாட்டுத்திட்டத்தை 1995 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், வேளாண்மைத்துறை தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத்துறை, மீன்வளத்துறை மற்றும் வனவியல் துறை ஆகியவற்றின் மூலம் செயல்படுத்த உள்ளது.

இத்திட்டம் தமிழ்நாட்டில் விவசாயத்துறையை நவீனமயமாக்க உதவியாக இருக்கும். இதன்மூலம், மனித வளத்தில் மேம்பாட்டைச் செய்து உற்பத்தியைப் பெருக்க ஊக்குவிக்கும். இத்தகைய மாற்றத்தைக் கொணர, கொள்கை மற்றும் நிறுவனங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். இவ்வாறு ஏற்படும் மாற்றங்கள், இத்திட்டத்தின் முன்னுரிமை முதலீடு மூலம் அதிகரிக்கப்படும். இந்த திட்டம் முக்கியமாக உயர் வேளாண்மைக் கல்வியின் தரத்தை முன்னேற்றவும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பங்கு கொள்ளும் மாநிலங்கள் மனித வளத்தை உருவாக்கி நிர்வாகம் செய்யத் தேவையான திறமையை அதிகரிக்கவும் ஏதுவான உத்திகளைத் தொடங்கும். தமிழ்நாடு கீழ்க்காணும் திட்டங்களை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தும் : (அ) பாடத்திட்டத்தை மாற்றியமைத்தல், (ஆ) ஆசிரியர்களின் திறமையின் தரத்தை உயர்த்துதல், (இ) கற்பிக்கும் முறைகளைப் புதுப்பித்தல், (ஈ) தேசீய மற்றும் உலக அளவில் ஆசிரியர்களை வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி கருத்துப் பரிமாற்றம் செய்தல், (உ) பல்கலைக்கழகத்தில் நிர்வாகம் மற்றும் வேளாண்மை முறைகளை நவீனமாக்குதல், (ஊ) பயிற்றுவிக்கும் ஆய்வு கருவிகள், கணிப்பொறிகள், தொடர்புகள், பண்ணைகள், நூலகங்கள் மற்றும் விடுதிகள் போன்றவைகளின் தரத்தை மேம்படுத்தல், (எ) மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு மையம் மற்றும் அவர்களை வேளாண் சார்பு தொழிற்சாலைகளில் அமர்த்துதல்.

இத்திட்டம் பல்கலைக்கழக வாடிக்கையாளர்களை பல்கலைக்கழக நிர்வாக முறைகளில் பங்கு கொள்ளச் செய்து கல்வி தொடர்புள்ள நிதி நிர்வாகத்தை முன்னேற்ற வழிவகுக்கும். மனித வளமேம்பாட்டிற்காக (அ) பணியாளர்களின் திறமையை மேம்படுத்தவும் மற்றும் நிர்வகிக்கவும், (ஆ) முறையான பயிற்சி தேவையை மதிப்பிடவும், (இ) பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கவும், (ஈ) பயிற்சிகளின் திறமைகளை மதிப்பிடவும்,

1995 ஏப்ரல் 19]

(உ) பயிற்றுவிக்கும் வசதிகளை அதிகரிக்கவும், (ஊ) அரசு பணியாளர்களை திறம்பட நிர்வகிக்கவும் மற்றும் (எ) மனிதசக்தி அறிவுரைக்குழு மூலம் மனித சக்தி தேவைகளை பணியாளர்களின் நிலைகளை மாநில அளவில் ஆராய்ந்து அரசு மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளுக்குத் தெரிவித்து உரிய கொள்கையும், கல்வித்திட்டத்தையும் நிதி ஒதுக்கீடு செய்யவும், பல்கலைக் கழகத்துடன் மாணவர்கள் சேர்க்கையின் அளவை நிர்ணயிக்கவும் இத்திட்டம் உறுதுணையாக இருக்கும். இத்திட்டத்தில் இரு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆறு துறைகளுக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு அட்டவணை 6-2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஊரக வேளாண்மை செயல் அனுபவத்திட்டம்:

5. தற்போது ஊரக வேளாண்மை செயல் விளக்க அனுபவ பாடத்திட்டத்திற்கு 0 + 2 என்ற அளவில் (அதாவது வாரத்திற்கு இரண்டு செய்முறை பாடவகுப்புகள்) கால அட்டவணையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு கால அட்டவணையில் பாட நேரம் 0 + 9 என்று உயர்த்தப்பட்டு 1995-96 ஆம் ஆண்டு முதல் செயல்பட உள்ளது. தங்கிபயிலும் காலம் ஒரு மாதத்திலிருந்து மூன்று மாதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வேளாண் சார்பு தொழிற்சாலைகளில் தொடர்பு திட்டம் :

6. வேளாண் சார்பு தொழிற்சாலை தொடர்பு திட்டம் 1995-96 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் தொழில் நுணுக்கங்கள் மற்றும் நிர்வகித்தல் பற்றி கற்க தெரிவு செய்யப்பட்ட வேளாண் தொழிற்சாலையில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இந்த காலகட்டத்தில் மூலப்பொருள்கள் வாங்குவதிலிருந்து பொருட்களை உருவாக்கி விற்பனை செய்வது வரையிலான தொழில் நுட்பங்களையும், வேளாண்மை முறைகளையும் மாணவர்கள் கற்றுக் கொள்வார்கள்.

கல்வி நிறுவனங்களின் இணைப்புத் திட்டம் :

7. உலக வங்கி திட்டத்தின்கீழ் தேசிய மற்றும் உலக அளவில் சிறந்து விளங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மனித ஆற்றல் மேம்படுத்தப்படும். இதன் மூலம் மூத்த ஆசிரியர்கள் வேறு நிறுவனங்களுக்குச் சென்றும், அங்குள்ளவர்கள் இப்பல்கலைக் கழகத்திற்கு வந்தும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வார்கள். உயர் கல்வியை தொடரும் வகையில் தேவையான பாடங்கள் மற்றும் ஆராய்ச்சிகள் மிக

முன்னேற்றம் அடைந்த நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும். உலக வங்கித் திட்டத்தின்கீழ் வேளாண் கல்வியில் உள்ள தற்போதைய தொழில் நுட்பங்களை அறிந்து வர 45 ஆசிரியர்களை வெளிநாடுகளுக்கும் 200 ஆசிரியர்களை இந்தியாவில் உள்ள மற்ற வேளாண் பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு சார்ந்த சான்றிதழ் பாடங்கள் :

8. வேலையில்லாத பண்ணைப் பட்டதாரிகளுக்கு வேளாண்மைத் தொழில் சார்ந்த சிறு தொழில்களைத் தொடங்கக்கூடிய வகையில் 18 வகையான வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய சான்றிதழ் பாடங்கள் துவக்கப்படவுள்ளன.

ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்காகக் கட்டிடங்கள் :

9. ஆசிரியர் மற்றும் மாணவர்கள் குடியிருப்புக் கட்டிடங்கள் ரூ. 6.31 கோடி மதிப்பில் கோவை மற்றும் திருச்சி கல்லூரி வளாகத்தில் வீட்டுவசதி மேம்பாட்டு நிதிவாரியத்தில் கடன் மூலமும் மற்றும் மனித வள மேம்பாட்டு திட்ட நிதி மூலமும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

II. வேளாண் ஆராய்ச்சி

10. கடந்த 5 ஆண்டுகளில் (1991-95) 86 புதிய பயிர் இரகங்கள் வேளாண்குடி பெருமக்களின் நலனுக்காக வெளியிடப்பட்டன. அதேபோன்று, 19 வேளாண் பண்ணைக் கருவிகளும் வடிவமைத்து உருவாக்கப்பட்டு வேளாண் பணிகளில் உள்ள வேலைப் பளுவைக் குறைக்கும் முகத்தான் வெளியிடப்பட்டன. இது பற்றிய விபரங்கள் அட்டவணை 6-3 மற்றும் 6-4-ல் கொடுக்கப்பட்டுள்ளன. புதிதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்களில் வல்லுநர் விதை உற்பத்தி செய்யப்பட்டு மாநில வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத் துறைக்கு வழங்கப்பட்டன. விபரங்கள் அட்டவணை 6-5-ல் தரப்பட்டுள்ளன. புதியதாக உருவாக்கப்பட்ட வேளாண் உத்திகளைப் பல்வேறு பயிர் அறிவியலார் கருத்தரங்குகள், ஆராய்ச்சிக் குழுக் கூட்டங்கள், அறிவியலார் மாநாடுகள் ஆகியவற்றில் நன்கு விவாதிக்கப்பட்டு, உறுதியாக்கப்பட்ட வேளாண் தொழில் நுட்பங்கள் ஒன்று திரட்டப்பட்டு பயிர் உற்பத்திக் கையேடு உருவாக்கப்பட்டது. இக்கையேடு தமிழக வேளாண்மைத் துறையில் உள்ள விரிவாக்க அலுவலர்களுக்கும், வேளாண்குடி பெருமக்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. புதிய

1995 ஏப்ரல் 19]

பொருளாதார கொள்கைக்கும் மாறிவரும் பொருளாதார நிலைக்கும் ஈடு கொடுக்கும் வகையில் வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

11. தமிழ்நாடு அரசு, ஒரு மேல்மட்ட மையக் குழுவினை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் உருவாக்கி உள்ளது. இக்குழு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வேளாண் ஆராய்ச்சியில் புதிய பாதை மற்றும் எதிர்வரும் முக்கிய ஆராய்ச்சியை மேற்கொள்ள வழிகாட்டும்.

எதிர்வரும் முக்கிய ஆராய்ச்சித் திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. ஒரு குறிப்பிட்ட பகுதிகளுக்கு உயர் விளைச்சல் தரக்கூடியதும், உயிர்வழி நெருக்கடிக்கும் சுற்றுச்சூழல் நெருக்கடிக்கும் எதிர்ப்புத்திறன் கொண்டதுமான இரகங்களை உருவாக்க முனைப்புடன் செயல்படுதல்.

2. மானாவாரிக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மற்றும் களை கட்டுப்பாடு மற்றும் ஊட்டங்கள் மேம்பாடு பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.

3. பூச்சி மற்றும் நோயைத் தாங்கி வளரக்கூடிய இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு நெல் இரகங்களை உருவாக்குதல்.

4. நெல் தரிசுகளுக்கானப் பயறு வகைகளில் மேம்பாடு.

5. எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் மற்றும் சிறு தானியப் பயிர்களில் வீரிய ஒட்டு இரகங்களை உருவாக்குதல்.

6. தொழிற்சாலைகளுக்குகந்த மக்காச்சோள இரகங்களை உருவாக்குதல்.

7. மானாவாரி பயிர்களுக்கான உத்திகளை உருவாக்குதல், மானாவாரி மற்றும் தரிசு நிலங்களில் பழ மரங்களைப் பயிரிட உகந்த உத்திகளைக் கண்டறிதல்.

8. வனமர ஆராய்ச்சியில் வேளாண் வனவியல் மற்றும் பண்ணை வனவியல் அடங்கிய வனமர ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

9. நுண்ணுயிர், உயிர் உரங்கள் மற்றும் அங்கக வேளாண்மை குறித்து முனைப்புடன் முயற்சி மேற்கொள்ளுதல்.

[1995 ஏப்ரல் 19

10. உயிர் நுட்பவியல் மற்றும் மரபுப் பொறியியல் மூலம் பயிர் மேம்பாடு.

11. வேளாண் மக்களின் வருவாயை நிலைநிறுத்தும் வகையில் பயிரிடும் முறையில் மேம்பாடு செய்தல்.

12. நீர் மேலாண்மையின் முனைப்புடன் ஆராய்ச்சி.

13. வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள உகந்த உத்திகளுக்கான ஆராய்ச்சிகள்.

14. பழங்களைப் பதப்படுத்துதல் மற்றும் பழம் சார்ந்த பொருட்கள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

15. காய்கறிப் பயிர்களில் விதை உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சேமிப்பு குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

16. வல்லுநர் விதை உற்பத்தித் திட்டத்தை வலுவாக்குதல்.

17. புதிய பண்ணை இயந்திரம் மற்றும் கருவிகளை வடிவமைத்து மேம்படுத்துதல்.

18. உயிர் வழிக் கட்டுப்பாட்டின் மூலம் பூச்சி மற்றும் நோய் மேலாண்மையை மேலாக்குதல்.

19. ஆலைக் கழிவுகளைச் சீரிய முறையில் வேளாண்மைக்கு உபயோகித்தல்.

20. பட்டு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, உயிர்வழிச்சத்து, நெகிழ்வுத் தாளியல் மற்றும் மண்புழுவியல் போன்றவற்றில் முனைப்புடன் ஆய்வு மேற்கொள்ளல்.

21. தொழிற்சாலை மற்றும் ஏனைய சுற்றுச்சூழலில் உள்ள மாசுப் பொருட்களைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டு அதன்மூலம் வேளாண் பெருக்கத்தை மேம்படுத்துதல்.

III வேளாண்மையில் தொழில் நுட்பப் பரிமாற்றம்

12. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி முடிவுகளின் வாயிலாக வெளியிடப்படும் சமீபத்திய தொழில் நுட்பங்களை உழவர்களுக்குப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது. பல்வேறு விரிவாக்க மையங்களான

1995 ஏப்ரல் 19]

தகவல் தொடர்பு நிலையம், வீடியோ உற்பத்திப் பிரிவு, வேளாண்மை தகவல் பணிமையம், பயிற்சி பிரிவு, வேளாண்மை அறிவியல் நிலையங்கள், பயிர் மருத்துவ மையங்கள் மற்றும் இதர பிரசுரங்கள் வாயிலாக தொழில் நுட்பங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. தெரிவு செய்யப்பட்ட பாடங்களில் தொழில் முனைவோர் பயிற்சிகள், வணிக ரீதியில் வேளாண்மையில் பயிற்சிகள், வேலை வாய்ப்பை அதிகரிக்கும் அஞ்சல் வழிப்பாடங்கள், வீரிய ஒட்டு நெல்லில் பயிற்சிகள், வீடியோ கிராமங்களை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி - விரிவாக்க இணைப்பை வலுப்படுத்துதல் போன்றவை முக்கியமான எதிர்காலத் திட்டங்களாகும். வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளில் கண்டுபிடிக்கப்படும் தொழில் நுட்பங்கள் தகவல் தொடர்பு நிலையத்தின் வீடியோ நிகழ்ச்சிகள், வானொலி வேளாண்மைப்பள்ளிப் பாடங்கள் மற்றும் அஞ்சல் வழிப்பாடங்கள் மூலமாக உழவர்களுக்கு முறையாகத் தெரிவிக்கப்படுகின்றன. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த அறிவியல் பாடங்களை வீடியோ கேசட்டில் தயாரிப்பதைத் தவிர வளர்ச்சித் துறைகளுக்குத் தேவைப்படும் வீடியோ நிகழ்ச்சிகளும் தகவல் தொடர்பு நிலையத்தின் வாயிலாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில் நுட்பங்களை வேளாண்மையில் கையாளுதல் பற்றி தகவல் கொண்ட தமிழ் மாத வெளியீடான வளரும் வேளாண்மை தொடர்ந்து வெளியிட்டு பதிவு செய்து கொண்ட சுமார் 12,000 சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. இதைத் தவிர ஆங்கிலச் செய்திமடலும் மற்றும் தமிழ்ச் செய்திமடலும் ஒவ்வொரு மாதமும் உழவர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் பயன்பெறும் வண்ணம் தொழில் நுட்பச் செய்திகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சித் திட்டங்களின் வாயிலாக கண்டுபிடிக்கப்படும் செய்திகள் விரிவாக்கப் பணியாளர்களுக்கு அவ்வப்பொழுது தெரிவிக்கப்படுகின்றன.

13. பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் நான்கு வேளாண்மை அறிவியல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இரண்டு நிலையங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடனும் மற்ற இரண்டு நிலையங்கள் மாநில அரசின் நிதி உதவியுடனும் இயங்கி வருகின்றன. ஐந்து பயிர் மருத்துவ மையங்களும் தற்போது இயங்கி வருகின்றன. வேளாண்மை மற்றும் இதர வளர்ச்சித் துறைகளுடன் இணைந்து இந்த விரிவாக்க மையங்கள் பல்வேறு விரிவாக்க கல்விப் பணிகளை விவசாயிகளுக்கெனச் செயல்படுத்தி வருகின்றன. அண்மையில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் சேலம் மாவட்டத்தில் புதிய வேளாண்மை அறிவியல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணியாளர்களுடன் ஒவ்வொரு

ஆண்டும் சுமார் 12,000 உழவர்கள் இந்த விரிவாக்க மையங்களில் பயிற்சிகள் வாயிலாக பயன்பெறுகின்றனர்.

14. வேளாண்மை தகவல் பணிமையம் பல்வேறு தொலைத் தொடர்பு தகவல் சாதனங்களின் வாயிலாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தொழில் நுட்பங்களைப் பரப்பி சீரிய முறையில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு புதன்கிழமையும் தெரிவு செய்யப்பட்ட செய்திகள் உழவர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் பயன்பெறும் வண்ணம் அளிக்கப்படுகின்றன. விரிவாக்க கல்வி இயக்ககத்தின் பயிற்சிப் பிரிவு, வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளில் பயிற்சிகளை வளர்ச்சித் துறையில் விரிவாக்கப்பணியாளர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், இடுபொருள் நிறுவனத்தினர், தேசிய பால்வள இணையம் மற்றும் இதர தன்னார்வ நிறுவனங்களில் விரிவாக்கப் பணியாளர்களுக்கு அளித்து வருகின்றது.

வேளாண்மையில் தொழில் நுட்ப பரிமாற்றத்தில் எதிர்காலத் திட்டம் :

15. உயிரியல் முறையில் பூச்சிகளை பெருக்கி, நோய்க் கட்டுப்பாடு, வைரஸ் நுண்ணுயிரி, டிரைகோடெர்மா மற்றும் டிரைகோகிரம்மா, காளான் விதை மற்றும் காளான் உற்பத்தி மற்றும் வேளாண் கழிவுகளை உபயோகித்தல் போன்ற தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடங்களில் பயிற்சிகளை வேலையில்லாப் பட்டதாரிகள் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாதவர்களுக்கு அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

16. சிறப்புப் பிரிவுகளான இயற்கை வழி வேளாண்மை, வணிக வேளாண்மை, எம்.ஜி.ஆர்.1 வீரிய நெல் உற்பத்தி, ஒட்டு பழங்கள் மற்றும் காய்கறிகள் பதனிடுதல் மற்றும் வேளாண் கழிவுகளின் உபயோகம் போன்றவற்றில் பயிற்சிகளை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

17. பள்ளிப் படிப்பை தொடர முடியாதவர்களுக்கு பயனளிக்கக்கூடிய சுய வேலைவாய்ப்புகளை மேற்கொள்ள வாய்ப்பளிக்க அஞ்சல் வழிப்பாடங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதிக அளவில் வீடியோ பாட நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் பல்கலைக் கழகத்தின் தொழில் நுட்பங்களை கிராமங்களில் பரப்ப வீடியோ கிராமத் திட்டம் போன்ற செயல்பாடுகளை ஏற்படுத்தி கேபிள் தொலைகாட்சி மூலம் பரப்புதல் முதலானவைகள் எதிர்காலத் திட்டத்தில் அடங்கும். பல்வேறு

1995 ஏப்ரல் 19]

குழுக்களை அமைப்பதின் வாயிலாக ஆராய்ச்சி - விரிவாக்க இணைப்பை மாவட்ட மற்றும் மாநில அளவில் வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

18. விரிவாக்கக் கல்வி இயக்ககம் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி முடிவுகளின் வாயிலாக வெளியிடப்படும் தொழில் நுட்பங்களை உழவர்களுக்குப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது. பல்வேறு விரிவாக்க மையங்களான தகவல் தொடர்பு நிலையம், வீடியோ உற்பத்திப் பிரிவு, வேளாண்மை தகவல் பணிமையம், பயிற்சிப் பிரிவு, வேளாண்மை அறிவியல் நிலையங்கள், பயிர் மருத்துவ மையங்கள் மற்றும் இதர பிரசுரங்கள் வாயிலாக தொழில் நுட்பங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. விரிவாக்கக் கல்வி இயக்ககம் 1991 முதல் 1995 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 169 விரிவாக்கப் பணியாளர் பயிற்சிகள், 3971 உழவர் பயிற்சிகள், 1994 செயல் விளக்கங்கள் மற்றும் பெரு விளக்கப் பண்ணை செயல் விளக்கங்கள், 652 கிராமக் கூட்டங்கள், 235 பண்ணை/வயல் விழாக்கள், 34 உழவர் தினவிழாக்கள், 3902 பண்ணை ஆலோசனைப் பணிகள், 563 படக்காட்சிகள், 341 கருத்துக்காட்சிகள், 345 முகாம்கள்/கருத்தரங்கம், 30 அஞ்சல்வழிப் பாடங்கள், 18 வானொலி வேளாண்மைப் பள்ளிப்பாடங்கள், 22732 கேள்விகளுக்குப் பதில் அளித்தது. 410 வெளியீடுகள், 1033 வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் 163 வீடியோ படக்காட்சிகளைத் தயாரித்தது விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் சாதனைகளாகும்.

19. வேளாண்மைத் துறையுடன் பல்கலைக் கழகம் இணைந்து செயல்படுத்திய ஆராய்ச்சித் திட்டத்தின் வாயிலாக "சாட்டிலைட் மாதிரி பண்ணைத் திட்டம்" என்ற ஒரு அணுகுமுறையை பல்கலைக் கழகம் கண்டுபிடித்திருக்கின்றது. தேசிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் திட்டம் வேளாண்மைத் துறையின் பல்முனை விரிவாக்கத் திட்டத்தின் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது. தற்போது 1,000 சாட்டிலைட் மாதிரி பண்ணைகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6-1

1990 91 முதல் 1994-95 வரை சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் :

வருடம்	இளங்கலை	முதுகலை	பொறியியல் முதுகலை (வேளாண்மை)	ஆராய்ச்சி மாணவர்கள்
1990-91	489	201	12	72
1991-92	472	293	8	372
1992-93	555	250	..	93
1993-94	417	266	9	151
1994-95	558	256	*	*

*விரைவில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அட்டவணை 6-2

வேளாண்மை மனித வள மேம்பாடு திட்டநிதி ஒதுக்கீடு

நிர்வாகம்	ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்.)
1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்	3907.469
2. தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் கழகம்	2389.166
3. வேளாண்மைத்துறை	165.700
4. தோட்டக்கலைத்துறை	306.025
5. வேளாண்மைப் பொறியியல் துறை	207.600
6. வனவியல் துறை	243.790
7. கால்நடைப் பராமரிப்புத்துறை	366.290
8. மீன்வளத்துறை	197.895
9. திட்ட மேலாண்மை	79.000
(அ) பொருட்செலவினங்கள்	320.968
(ஆ) விலைவாசி ஏற்றத்தாழ்வுகள்	1272.553
மொத்தம்	**9456.456**

அட்டவணை 6-3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1991 முதல் 1995 வரை வெளியிடப்பட்ட பயிர் ரகங்கள்.

1991	*1992*	*1993*	*1994*	*1995*
நெல் ஏஎஸ்டி 18	நெல் டிகேஎம் 10	ஜெஜெ 92 நெல்	எம்ஜிஆர்	நெல் ஏஎஸ்டி 19
கூர்க்கன் கிழங்கு கோ 1	துவரை வம்பன் 1	(ஏடிடி 41)	-வீரிய ஒட்டு நெல்	நெல் டிஆர்ஓய் 1
வீரிய ஒட்டு	பச்சைப்பயறு கே 1	நெல் டிபிஎஸ் 3	(கோ ஆர் எச் 1)	சோளம் பையூர் 1
சோளம் கே 10	எள் எஸ்விபிஆர் 1	வீரிய ஒட்டு கம்பு	நெல் ஏடிடி 42	வரகு வம்பன் 1
சேப்பங்கிழங்கு கோ 1	பருத்தி ஏடிடி 1	எக்ஸ் 6	நெல் பிஎம்கே 2	சிப்பிக் காளான்
சோளம் பையூர் 1	பனை எஸ்விபிஆர் 1	ஏற்காடு டிம்லா அத்தி	சோளம் பிஎஸ்ஆர் 1	ஏபிகே 1
வரகு ஏபிகே 1	கரும்பு கோ சி 92061	உளுந்து ஏபிகே 1	தினை கோ 6	சோயா மொச்சை
துவரை கோ 6	கரும்பு கோ 8362	தட்டைப்பயறு கோ 6	வீரிய ஒட்டு துவரை	கோ 2
அவரை கோ 12	மா நீலம் பையூர் 1	கரும்பு	கோஎச் 1	சூரியகாந்தி கோ 3
பருத்தி எஸ்விபிஆர் 1	வீரிய ஒட்டு	கோ சி 93076	உளுந்து கே 1	எள் விஆர்ஐ 1
பருத்தி பையூர் 1	சப்போட்டா பிகேஎம் 2	கரும்பு கோ 8208	ஏஎல்ஆர் 2	கரும்பு
லைமா அவரை	பலா பலூர் 1	பருத்தி கே 11	நிலக்கடலை	கோ சி 95076
எல்பிஎஸ் 1	பீட்ரூட் ஊட்டி 1	மிளகாய் பிகேஎம் 1	பிஎஸ்ஆர் 1	கரும்பு கோ சி 95071
வெண்ணை அவரை	ரோஜா வைசிடி 2	மரவள்ளி கோ 3	தென்னை விபிஎம் 3	கரும்பு கோ 85019
கேகேஎல் 1	ஜெர்பிரா வைசிடி 1	பந்தல் அவரை கோ 1	கரும்பு கோ சி 94077	தீனானாத்
கரும்பு கோ சி 91061	தீவனக்கம்பு கோ 8	தர்பூசணி பிகேஎம் 1	மஞ்சள் பிஎஸ்ஆர் 2	தீவனப்புல் கோ 1
கம்பு நேபியர்-	புளி பிகேஎம் 1	கிளாடியோலஸ்	வீரிய ஒட்டு	ஜெர்பரா வைசிடி 2
வீரிய ஒட்டுப்புல் கோ 2		கேகேஎல் 1	சப்போட்டா	நெல்லி பிஎஸ்ஆர் 1
முயல் மசால்			பிகேஎம் 3	கத்தரி கேகேஎம் 1
பிச்சி கோ 2			பிரஞ்சு அவரை	பாலக்கீரை
வெண்டை கோ 3			வைசிடி 1	ஊட்டி 1
மிளகாய் கோ 3			பச்சைமிளகாய்	
கொத்தமல்லி கோ 3			பிஎல்ஆர் 1	
முந்திரி விஆர்ஐ 3			வெற்றிலை	
வெள்ளைப்பூண்டு ஊட்டி 1			எஸ்ஜிஎம் 1	
பெருவள்ளிக்கிழங்கு கோ 1				

அட்டவணை 6-4

பண்ணைக் கருவிகள் வெளியீடு விபரங்கள்

1991	1992	1993	1994	1995
கையால் இயங்கும் எள் விதைகளை தரம் பிரிக்கும் கருவி	விசை உழுவானால் (பவர் டில்லர்) இயங்கும் குறைந்த சக்தியில் அதிக அளவில் நீரை வெளிக் கொணரும் கருவி	பவர் டில்லரால் இயங்கும் குழி தோண்டும் கருவி	பழ மரங்களுக்கான பூச்சி மருந்து தெளிப்பான்	இருவித உழவிற்கு இலேசானதோர் இருப்புக் கலப்பை
சிறு தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழ விதைகளுக்கு ஊட்டச் சத்துக்களை முலாம் பூச உதவும் கருவி	கை மற்றும் காலால் இயக்கக்கூடிய தீவனப் பயிர் வெட்டும் கருவி	சாண எரிவாயு பலூன்	கையினால் இயங்கும் பருப்பு மற்றும் கேழ்வரகு சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் கருவி	
கை பேட்டரியால் இயங்கும் சுழலும் தெளிப்பான்	சூரிய ஒளியால் பழம் மற்றும் காய்கறிகளை உலர்த்தும் கருவி	புளியங் கொட்டை பசை தயாரித்தல்	புதர் அகற்றும் கருவி	
	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அடுப்பு உயிர் வழி பூச்சிக்கொல்லிகளை தயாரிக்க பூச்சிகளுக்கான உணவு தயாரிக்கும் கருவி சேமிப்புக்கிடங்கில் பூச்சிகளை கட்டுப்படுத்த புற ஊதா விளக்குப் பொறி பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளைப் பெருக்க உபயோகிக்கும் கொர்சைரா முட்டைகளை செதில்களிலிருந்து பிரித்தெடுக்கும் சல்லடை	வீட்டு உபயோகத்திற்கு பூச்சிகளை தானியங்களிலிருந்து பிரித்தெடுக்க புதிய பொறி	கொசுபிடிக்கும் கருவி	

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]


அட்டவணை 6-5

வல்லுநர் விதை உற்பத்தி மற்றும் விநியோகம் குவிண்டாலில்

பயிர்	*1991*	*1992*	*1993*	*1994*	*1995*
நெல்	*202.00*	*233.05*	*114.97*	*245.80*	*254.76*
சிறுதானியங்கள்	*1.32*	*1.75*	*0.67*	*1.59*	*1.29*
பயறுவகைகள்	*69.87*	*151.03*	*101.58*	*131.81*	*153.41*
எண்ணெய் வித்துக்ககள்	*228.20*	*545.40*	*350.83*	*489.23*	*596.17*
பருத்தி	--	*1.25*	*0.15*	*0.81*	*9.94*
காய்கறிகள்	*1.57*	*1.07*	*0.02*	*0.92*	*0.06*

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6.1. 1994-95ம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு நிதி உதவி (ரூபாய் இலட்சங்களில்)



1.	இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம்	457.14
2.	இந்திய அரசு	127.87
3.	தனியார் நிறுவனம்	96.46
4.	வரவுகள்	331.05
5.	மாநிலம்	2361.16

1995 ஏப்ரல் 19]

அத்தியாயம்-7

விதைச்சான்றளிப்பு

"விதைப் பொருத்தே விளைவு" என்ற பழமொழிக்கேற்ப விதை என்பது முக்கியமான விளைச்சலை அதிகரிக்கச் செய்யும் இடுபொருள் ஆகும். மற்ற எல்லா இடுபொருள்களான பூச்சி மருந்து, உரம், தண்ணீர் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றுடன் நல்விதையும் சரிவர பயன்படுத்தப்படும் போது, அதிக மகசூலுக்கு வழி வகுக்கின்றது. பெருகி வரும் மக்கட் தொகைக்கேற்ப உற்பத்தியும் பெருக வேண்டும். வீரிய வித்துக்களும் தொழில் நுட்பங்களும் உற்பத்தியை பெருக்க உதவும். அதற்கு சான்று பெற்ற விதை உபயோகித்தல் மிகவும் அவசியமாகும். மேலும் பயன்படுத்தப்படும் விதைகள் நல்ல முளைப்புத் திறனோடும், இனதூய்மை உள்ளதாக இருப்பதோடு, அந்த ரகத்திற்கே உரிய குணநலன்களை பெற்றிருக்க வேண்டும். விவசாயிகளுக்கு தரமான விதைகளை விநியோகம் செய்யும் நோக்கில் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983 உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு பின் 01-7-1994 முதல் நடைமுறையில் உள்ளது.

2. தற்பொழுது விவசாயிகள் பயன்படுத்தும் விதைகள் தரமுள்ளவைகளாக மாற்றுவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தமிழ் நாட்டில் பல்வேறு பயிர்களுக்கு உரிய மாற்று விகிதம். 1994-95-ல் மத்திய அரசு பரிந்துரை செய்துள்ள மாற்று விகிதத்துடன் ஒப்பிடும்போது நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளது. உதாரணமாக 1994-95ஆம் ஆண்டின் நெல்லின் மாற்று விகிதம் தமிழ்நாட்டில் 21 சதவீதம் ஆகும். ஆனால் தேசிய அளவிலான மாற்று விகிதம் 14 சதவீதம் ஆகும். விதை மாற்று விகிதம் அட்டவணை எண். 6-1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. விதை உற்பத்தியில் அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் விதை மட்டுமின்றி தனியார் விதை உற்பத்தியாளர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். மேலும் நெல் மற்றும் பருத்தி விதை உற்பத்தியில் தனியார் உற்பத்தியாளர்கள் அதிக அளவில் ஈடுபட்டுள்ளார்கள். இவ்விரு பயிர் விதைகளின் உற்பத்தியில் இவர்களின் பங்கு 1993-94ஆம் ஆண்டில் 17 சதவீதமாக இருந்தது. நடப்பு 1994-95ஆம் ஆண்டில் இது 22 சதவீதமாக உயர்ந்துள்ளது. தமிழ் நாட்டில் சுமார் 125 தனியார் விதை உற்பத்தியாளர்கள் சான்றளிக்கப்பட்ட மற்றும் வீரிய விதை உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் விதை உற்பத்தி செய்யும் பன்னாட்டு நிறுவனங்களும் அடங்கும். இவர்கள்

[1995 ஏப்ரல் 19

மேலும் அதிக அளவில் சான்று விதைகளை உற்பத்தி செய்யவும், தமிழ்நாட்டு விவசாயிகளின் தரமான விதைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

விதைச் சான்றளிப்பு

4. இனத்தூய்மை, புறத்தூய்மை, முளைப்புத்திறன் விதை நலன் உள்ள தரமான விதைகளுக்குச் சான்றளிப்பதே விதைச்சான்றளிப்புத் துறையின் முதன்மையான பணியாகும். சான்று விதைகள் தரம் வாய்ந்ததாகவும் நல்ல விதையின் எல்லா குணங்களையும் கொண்டுள்ளதாலும், சான்றளிக்கப்படாத விதைகளைக் காட்டிலும் குறைந்தபட்சம் 10 சதவீதமாவது அதிக மகசூல் கொடுக்கும் திறன் வாய்ந்ததாக இருக்கிறது. இத்துறை தற்பொழுது 15 பயிர்களின் 94 ரகங்கள் வரை சான்று அளித்து வருகிறது. மேலும் சான்று விதையின் தூய்மையை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் 221 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. (அரசு 69: கூட்டுறவு 19: தனியார் 133).

1994–95 ஆம் ஆண்டு 30,617 எக்டர் பரப்பில் விதைச் சான்று வழங்க பதிவு செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் 308.40 இலட்ச ரூபாய் விதைச்சான்றுத் துறை திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் ரூ. 325 இலட்சம் ரூபாய் பல்வேறு திட்டங்களுக்காக செலவிடப்பட உள்ளது. 1990–91, 1993–94 மற்றும் 1994–95ஆம் ஆண்டுகளில் சான்றளிக்கப்பட்ட மொத்தவிதை அளவு அட்டவணை 7–2ல் அளிக்கப்பட்டு உள்ளது. 1995–96ஆம் ஆண்டில் 40,000 எக்டர் பரப்பளவில் பல்வேறு விதை ரகங்களுக்கு விதைச்சான்று அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அட்டவணையை காணும்பொழுது, 1990–91, மறறும் 1994–95 ஆம் ஆண்டில் சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவு 21,340 மெட்ரிக் டன்னிலிருந்து 25,000 மெட்ரிக் டன்னாக உயர்ந்து உள்ளது. தெரிய வரும் (17.15 சதவீத வளர்ச்சி).

விதைச்சான்று பயிற்சித் திட்டங்கள்

5. இத்துறை வீரிய மற்றும் ரக விதைகள், விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி வழங்குகிறது. இப்பயிற்சி, விதைச் சான்றுத்துறை அலுவலர்களுக்கும் விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சகோதரத்துறை அலுவலர்களுக்கும் மற்றும் தனியார்

1995 ஏப்ரல் 19]

உற்பத்தியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும் இத்துறை விதைச் சட்டம், விதை விதிகள், விதைக் கட்டுப்பாட்டு ஆணை, விதை சேமிப்பு ஆகியவை பற்றிய பயிற்சியினை விதை விற்பனையாளர்களுக்கு வழங்குகிறது. நடப்பு 1994–95–ம் வருடத்தில் 17,457 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 6233 அலுவலர்களும், 7000 விவசாயிகள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களும், 4224 விதை விற்பனையாளர்களும் அடங்குவர். வரும் 1995-96–ம் ஆண்டில் 16,000 பேர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் வரும் 1995–96–ம் ஆண்டில் வீரிய விதைகள் உற்பத்தி செய்வோர் தனியாக தொழில் நுட்ப பயிற்சி வழங்க, "வீரிய விதை உற்பத்தியாளர் பயிற்சி மையம்" ஒன்று கோயமுத்தூரில் ஏற்படுத்த 57 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதை ஆய்வு

6. விவசாயிகளுக்கு நல்ல தரமான விதையினை வழங்க வழிவகை செய்யும் பொருட்டு, விதைச் சான்றுத் துறையில் விதை ஆய்வுப் பிரிவு, விதைச் சட்டம் 1966 மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவற்றை தீவிரமாக அமுல்படுத்தி வருகிறது. இதன்படி விதை விற்பனை நிலையங்கள் திடீர் ஆய்வு செய்தும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் வருகிறது. விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983–ன்படி 1–7–94 முதல் 31–3–95 வரை உள்ள காலத்தில் 3676 விதை விற்பனை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. (அரசு 883, கூட்டுறவு 291 மற்றும் தனியார் 2,502).

7. 1994–95ஆம் ஆண்டு 13,472 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் 12,204 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் தரக்குறைவான 1,681 விதைக் குவியல்கள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டன.

8. இவ்வாண்டில் 62 வழக்குகள் தொடரப்பட்டன. 55 வழக்குகளுக்கு தண்டனையும் வழங்கப்பட்டன. தற்போது 7 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. மேலும் வரும் 1995–96–ம் ஆண்டிற்கு 13,500 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வும், 13,500 விதை மாதிரிகள் எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[1995 ஏப்ரல் 19

விதைப் பரிசோதனை

9. தரமான விதைகளை உற்பத்தி மற்றும் விநியோகம் செய்ய விதைப் பரிசோதனை உதவிகரமாக செயல்படுகிறது. தமிழ்நாட்டில் கோயமுத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் ஏழு விதைப் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. விதைச்சான்று விதை ஆய்வுப் பிரிவுகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் ஆகியோரால் அனுப்பப்படும் விதை மாதிரிகள், விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற ரக கலப்பு மற்றும் விதை நல சோதனைகள் சர்வதேச விதைப் பரிசோதனை சங்க வழிபாட்டு நெறிகளின்படி செய்யப்பட்டு முடிவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

10. 1994-95ஆம் ஆண்டில் அட்டவணை 7.3ல் குறிப்பிட்டுள்ளபடி 35,346 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மேலும் 1995-96-ம் ஆண்டில் 42,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

11. கோயம்புத்தூர் விதை பரிசோதனை நிலையத்தை மேம்படுத்தி சிறப்பு நிலையமாக்க 27 இலட்ச ரூபாய் ஒதுக்கீடும் செயயப்பட்டுள்ளது.

இனத்தூய்மை பரிசோதனை

12. பருத்தி மற்றும் ஆமணக்கு வீரிய ஒட்டு ரகங்களுக்கும் அதன் தாயாதி ரகங்களுக்கும் இனத்தூய்மை பரிசோதனைக்கு பின்னரே சான்று செய்யப்படும். இப்பணிக்கென கோயமுத்தூர் விதைச்சான்று இயக்குநர் அலுவலகத்துடன் இணைந்த கண்ணாடி ஆய்வகமும், கண்ணம்பாளையத்தில் உள்ள மாநில விதைப் பண்ணையும் பயன்படுத்தப்படுகின்றன.

13. 1994-95ஆம் ஆண்டில் 215 விதை மாதிரிகள் வீரிய ஒட்டுப்பருத்தி அதன் தாயாதி ரகங்கள், விதை ஆய்வாளரால் அனுப்பப்பட்ட விதை மாதிரிகள் ஆகியவற்றின் இனத்தூய்மை பரிசோதனை செய்யப்பட்டன.

வருமானம்

14. 1994-95ஆம் ஆண்டு தோராயமாக 51.83 இலட்ச ரூபாய் விதைச்சான்று வயலாய்வு கட்டணம், விதைப் பரிசோதனை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறை மூலம் வருமானம் 1995-96

1995 ஏப்ரல் 19]

ஆம் ஆண்டு 55 இலட்ச ரூபாயாகவும் உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள்

15. கீழே குறிப்பிட்டுள்ள புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :--

(1) கோயமுத்தூரில் வீரிய ஒட்டு விதைகள் உற்பத்தியாளர் பயிற்சி மையம் ஒன்றினை 57 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல்.

(2) கோயமுத்தூரில் தற்போது உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தை 23 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தல்.

(3) 11.53 இலட்ச ரூபாய் செலவில் தேவைப்படும் சாதனங்கள் வழங்குவதன் மூலம் விதை ஆய்வுப் பிரிவுகளைப் பலப்படுத்துதல்.

(4) 20 இலட்ச ரூபாய் செலவில் திருச்சியில் ஒரு விதைப் பரிசோதனை நிலையம் கட்டுதல்.

அட்டவணை 7.1.

விதைகள் மாற்றுக் குறியீடு.

வரிசை எண்.	பயிர்	தமிழ்நாட்டின் மாற்று விகிதம் 1990-91.	தேசிய அளவிலான மாற்று விகிதம் 1990-91.	தமிழ் நாட்டின் மாற்று விகிதம் 1994-95.	தேசிய அளவிலான மாற்று விகிதம் 1994-95.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	நெல்	20%	11.21%	21%	14%
2.	பயிறு வகைகள்	12.5%	11.55%	12%	11%
3.	பருத்தி (மானாவாரி)	10%	14.32%	10%	15%
4.	பருத்தி (இறவை)	15%	14.32%	15%	15%
	எண்ணெய் வித்துக்கள்				
1.	நிலக்கடலை	5%	4.75%	5%	3%
2.	எள்	–	6.78%	15%	10%
3.	சூரியகாந்தி	–	38.03%	50%	50%
4.	ஆமணக்கு	–	-	30%	20%

அட்டவணை 7.2

சான்றளிக்கப்பட்ட விதை அளவு (மெ.டன்கள்)

வ.எண்.	பயிர்கள்	1990-91	1993-94	1994-95	1995-96 இலக்கு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	நெல்	14,427	17,776	18,500	21,000
2.	இரக சிறு தானியங்கள்	658	812	350	400
3.	வீரிய சிறு தானியங்கள்	212	149	70	100
4.	இரகப் பருத்தி	3,666	1,218	2,500	3,000
5.	வீரியப் பருத்தி	99	11	20	30
6.	பயறு வகைகள்	1,617	1,363	2,500	3,000
7.	எண்ணெய் வித்துக்கள்	644	1,012	1,030	1,420
8.	காய்கறிகள் மற்றவை	17	53	30	50
	மொத்தம்	**21,340**	**22,396**	**25,000**	**29,000**

அட்டவணை 7.3

விதை மாதிரிகள் பரிசோதனை செய்தது (எண்கள்)

வ.எண்.	விதைப்பரிசோதனை ஆய்வுக்கூடம்	1990-91	1993-94	1994-95	1995-96 இலக்கு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	கோயமுத்தூர்	14,866	10,008	10,000	10,000
2.	மதுரை	8,700	10,041	10,000	10,000
3.	திருச்சிராப்பள்ளி	8,570	7,928	6,000	6,000
4.	தருமபுரி	-	4,481	4,400	4,000
5.	தஞ்சாவூர்	-	2,881	4,000	4,000
6.	திருநெல்வேலி	–	216	2,500	4,000
7.	காஞ்சீபுரம்	–	–	–	4,000
	மொத்தம்	**32,136**	**35,555**	**36,900**	**42,000**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அத்தியாயம்-8

வேளாண்மை விற்பனை

வேளாண்மை வளர்ச்சியில் வேளாண்மை விற்பனை முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது நிலவும் விற்பனையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பொருளாதார நிலையில், வேளாண் பெருமக்கள் தங்கள் விளைபொருளுக்கு நல்ல விலை கிடைக்க எதிர்நோக்கியுள்ளனர். வேளாண் விளைபொருட்களின் தரம்பிரிப்பு மையங்களை உள்ளடக்கிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் அக்மார்க் ஆய்வுக் கூடங்களும், தேவையான அடிப்படை வசதிகளுடன் வேளாண் உற்பத்தியாளர் மற்றும் உபயோகிப்பாளர்களிடையே நல்ல சுமுகமான உறவினை வளர்த்து வருகின்றது. இடையீட்டாளர் தரகர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமும் வெளிச் சந்தைகளிலும் வேளாண்மை பொருட்களை குறைந்த விலைக்கு விற்று வந்த விவசாயிகளைக் காத்திட வேளாண்மை விற்பனை இயக்ககம் பொறுப்பினையேற்று அவர்களுக்கு விளைபொருட்களுக்கு உரிய ஆதாயம் அளிக்கக்கூடிய நியாய விலை கிடைத்திட ஆவன செய்து வருகிறது, இத்துறை.

அ. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விற்பனை குழுக்களின் மூலம் நடத்தப்படுதலுடன் பராமரிக்கப்படுகின்றன.

ஆ. விவசாயிகளுக்கு விளைபொருட்களை வணிகமுறையில் தரம்பிரிக்கும் பணியை மேற்கொள்கிறது.

இ. பொருளீட்டுக் கடன் சிறு/குறு மற்றும் இதர விவசாயிகளுக்கு வழங்குகிறது.

ஈ. உணவுப் பண்டங்களை "அக்மார்க்" முறையில் தரம்பிரிக்கிறது.

2. பருத்தி தரம்பிரிப்புச் சட்டம் மற்றும் சான்றுரை அமல்படுத்துகிறது. இவை வேளாண் விற்பனைத் துறையின் முக்கியப் பணிகளில் சிலவாகும். மாநில விளைபொருள் விற்பனை வாரியம் வேளாண் விற்பனையைப் பெருக்க அடிப்படை வசதிகளான, கட்டிட வசதிகள் மற்றும் தகவல், விளம்பரங்கள் ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 14 விற்பனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனைக் குழுக்களின் கீழ் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், 15 துணை விற்பனை கூடங்களும் செயல்பட்டு

[*1995 ஏப்ரல் 19*

வருகின்றன. விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே சுமுகமான நட்புறவு நல்கிடவும், எளிதான முறையில் அவர்கள் விளைபொருட்களை விற்பனை செய்திடவும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தேவையான அடிப்படை வசதிகளான பாதுகாப்பான வளாகம், கிடங்குகள், பரிவர்த்தனை கூடங்கள், உலர் களங்கள், பணம் பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள், விவசாய இடுபொருள் விற்பனை அங்காடிகள், தொலைபேசி வசதிகள் போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட வசதிகளை பயன்படுத்தி இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் விவசாயிகள், உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கு மறைமுக ஏலம் மூலமாக விளைபொருட்களை விற்று போட்டி விலை பெறுகின்றனர். இவை தவிர எடை தராசுகள், தரம்பிரிப்பு உபகரணங்கள் முதலிய வசதிகளை அளிப்பதுடன் விளைபொருட்கள் வைக்கத் தேவையான சாக்கு பைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வரத்துகள் வருடா வருடம் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. அவற்றின் விவரங்களை அட்டவணை 8.1ல் காணலாம்.

4. விற்பனைக் குழுக்கள் வியாபாரிகளிடமிருந்து தங்களது வியாபார பரிவர்த்தனைக்காக ஒரு விழுக்காட்டினை வேளாண் விளைபொருளின் மதிப்பில் விற்பனைக் கட்டணமாக வசூலிக்கின்றது. வியாபாரிகளிடமிருந்தும் எடையாளர்களிடமும் உரிமக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றது. விற்பனைக் குழுக்களின் மொத்த வரவினம் பற்றிய விவரம் அட்டவணை 8.2ல் உள்ளது. 1994-95ல் மொத்த வரவினம் ரூபாய் இருபத்தைந்து கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. பொருளீட்டுக் கடன்.

அறுவடைக் காலங்களில் விலை வீழ்ச்சியுற்றபோது குறைந்த விலையில் விற்பதனைத் தவிர்த்து விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஊரகக் கிடங்குகளில் சேமித்து, அதிக விலை கிடைக்கும்போது விற்கும் பொருட்டு பொருளீட்டுக் கடன் வசதி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயியும் தாங்கள் ஈடு வைத்த வேளாண் விளைபொருளின் மதிப்பில் 75 சதவீதம், அதிகபட்சமாக ரூ. 25,000/- வரை பொருளீட்டுக் கடனாகப் பெறலாம். வேளாண் விளைபொருட்களை ஆறுமாத காலம் வரை இருப்பில்

1995 ஏப்ரல் 19]

வைத்திருக்கலாம். முதல் 15 நாட்களுக்கு இலவசமாகவும், பின் வரும் நாட்களுக்கு 12 முதல் 13.5 வரை வட்டியுடனும் வைத்திருக்கலாம். சிறு/குறு விவசாயிகளிடமிருந்து இதனினும் குறைவாக வட்டி வசூலிக்கப்படுகின்றது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 137 கிடங்குகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் 1995-96ஆம் ஆண்டில் ஏனைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் 10 ஊரகக் கிடங்குகள் மத்திய அரசிடமிருந்து 25% உதவியுடனும் மாநில அரசிடமிருந்து 25% உதவியுடனும், ரூ. 81 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு .வருகின்றன. விவசாயிகள் இதன் பலனை தற்போது உணர்ந்து வருவதால், பொருளீட்டுக் கடன் வசதி பெறுவது உயர்ந்து வருவதுடன் அட்டவணை 8.3ல் காட்டியவாறு பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

6. அக்மார்க் மற்றும் வணிகமுறை தரம்பிரிப்பு

நுகர்வோரை தரக்குறைவான (கலப்பட) உணவுப் பொருளினால் ஏற்படும் தீங்குகளில் இருந்து காப்பாற்றும் உயரிய நோக்குடன், வேளாண்மை விற்பனை இயக்குநரின் கட்டுப்பாட்டில் 35 அக்மார்க் ஆய்வகங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய கட்டுப்பாட்டிற்குட்பட்ட மத்திய கட்டுப்பாட்டிற்குட்படாத உணவுப் பண்டங்களை, தரமுள்ள சுத்தமான பொருட்களை உத்தரவாதத்துடன் வழங்க அக்மார்க் முறையில் பயிற்சி பெற்ற தொழில்நுட்பத் தகுதி பெற்றவர்களால் தரம்பிரிக்கப்பட்டு, அக்மார்க் முத்திரைச்சீட்டுகள் அனுமதி பெற்ற அக்மார்க் பொருள் தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது. 1991-92-ஆம் ஆண்டு முதல் அக்மார்க் முறையில் தரம்பிரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் அளவுகள் அட்டவணை 8.4ல் தரப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்களில் சோதனை செய்யப்பட்ட மாதிரிகளை சோதனை முறையில் மறு ஆய்வு செய்ய சென்னையில் வேளாண்மை விற்பனை இயக்ககத்தில் முதன்மை ஆய்வகம் ஒன்று செயல்படுகின்றது. மத்திய கட்டுப்பாட்டிற்குட்பட்ட பண்டங்களில் எண்ணெய் வகைகள், நெய், மசாலா பொடிகள், ஜவ்வரிசி, மைதா, ரவை, கோதுமைமாவு, கடலைமாவு, தேன் மற்றும் கொட்டை நீக்கிய புளி போன்றவையும், மத்திய கட்டுப்பாட்டிற்குட்படாத் பண்டங்களான அரிசி, பருப்பு வகைகள், வெல்லம், மஞ்சள், முட்டை, கொத்தமல்லி, உருளைக்கிழங்கு, ஏலக்காய் மற்றும் பாக்கு போன்றவையும் அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப்படுகின்றன.

[1995 ஏப்ரல் 19

பொருளின் தரத்திற்கேற்ப விலை அளிக்கப்படுவதால் விவசாயிகள் விளைபொருட்களின் தரத்தினயையும், தன்மையையும் அறிந்துகொள்ளும் பொருட்டு 96 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வணிகமுறை தரம்பிரிப்பு வசதி .இலவசமாக அளிக்கப்படுகிறது. விவசாயிகளின் விளைபொருட்கள் கிராமங்களிலும் வணிக முறையில் தரம் பிரிககப்படுகின்றன. இது தவிர பருத்தி மறறும் புகையிலை விளையும் பகுதியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 11 பருத்தி தரம்பிரிப்பு மையங்களும் ஒரு புகையிலை தரம்பிரிப்பு மையமும் செயல்பட்டு வருகின்றன. அட்டவணை 8.4ல் வணிக முறையில் தரம்பிரிப்பு செய்யப்பட்ட அளவைகள் தரப்பட்டுள்ளன.

7. பருத்தி வணிகத்தை சீராக்கும் முகத்தான், பருத்திச் சான்றுரையும் சட்ட அமலும் திட்டம், 1923வது வருடத்திய பருத்தி போக்குவரத்துச் சட்டம் மற்றும் அதன் கீழ் 1950-ல் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் இயங்கி வருகிறது. இந்தத் திட்டத்தின்படி பஞ்சு/கச்சா பருததியின் சுத்தத்தன்மை (தரம்) விலை நிலவரம் ஆகியவை கட்டுக் கோப்புடன் கண்காணிக்கப்படுகின்றது. பருத்தியை பதுக்கிவைப்பதைத் தடுக்கவும் ஆலைகளில் உள்ள நூற்பு கதிருக்குத் தேவையான பருத்தியை மட்டும் வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரவும், ஆலைகள் நியாயமான விலையில் கச்சாப் பருத்தியை பெறவும் இத்திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் விவரம் அட்டவணை 84ல் தரப்பட்டுள்ளது.

நிலமற்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு நிலம் வாங்குதல்.

தமிழ்நாட்டில் தற்போது 119 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 1994-95ஆம் ஆண்டில் நிலமற்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு படிப்படியாக நிலம் வாங்கும் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து 1994-95ஆம் ஆண்டில் செங்கை எம்.ஜி.ஆர். விற்பனைக் குழுவில் உள்ள அச்சரப்பாக்கம், பஞ்சுப்பேட்டை, வடாற்காடு விற்பனைக் குழுவில் உள்ள வானாபுரம் வாணியம்பாடி, பெரியார் விற்பனைக்குழுவில் உள்ள முத்தூர், அவல்பூந்துரை, தாராபுரம், கோவை விற்பனைக் குழுவில் உள்ள நெகமம், காரமடை, தொண்டாமுத்தூர், வடக்கிபாளையம், மதுரை விற்பனைக்குழுவில் உள்ள வாடிப்பட்டி, தஞ்சாவூர் விற்பனைக்குழுவில் உள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய 14 இடங்களில் நிலங்கள் வாங்கப்பட்டு, வரும் மாதங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன.

1995 ஏப்ரல் 19]

மாநில விளைபொருள் விற்பனை வாரியம்.

1970 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாநில விளைபொருள் விற்பனை வாரியம் விற்பனைக்குழுக்களின் தலைமைப் பீடமாக அமைந்துள்ளது. இது விற்பனைக்குழுக்கள், வேளாண்மை விற்பனை இயக்கம் மற்றும் ஆகியவற்றுடன் ஒரு சிறந்த இணைப்பாக இருந்து கொண்டு விற்பனைக்குழுக்களின் வணிக முறைகளையும், நடைமுறை வழக்கங்களையும் ஒருமித்தமாக இருக்க உறுதியளிக்கிறது. இதுநாள் வரை சட்டமுறைப்படியாக இல்லாது இயங்கிவந்த வாரியத்தை *1-2-91* முதல் அமுலுககு கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு விளைபொருள் விற்பனை (ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் *1987*ன்படி சட்டமுறையாக அதிக அதிகாரங்களுடன் இயங்கும் வகையில் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாநில விளைபொருள் விற்பனை வாரியம் பின்வரும் பணிகளை மேற்கொண்டு விற்பனைக்குழுக்கள், விவசாயிகளுக்கு செய்துவரும் சேவைகளுக்கு ஒத்துழைப்பையும் நல்கி வருகிறது.

1. விளம்பரம்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் செயல்பாடு பற்றி விவசாயிகள் அறியவும், நியாயமான முறையில் நல்ல விலை பெறும் பொருட்டு விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பதைத் தூண்டும் பொருட்டும் மதுரை, கோவை, திருச்சி, மற்றும் சென்னை ஆகிய மையங்களில் விளம்பரம் மறறும் பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு மையததிலும் விளம்பரத்துக்கான ஊர்தி, திரைப்படக்கருவி, ஒலிபெருக்கிவசதி, ஆகிய அடிப்படை வசதிகள் உள்ளன. இந்தப் பிரச்சாரப் பிரிவுகள் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகள் கூட்டங்கள், சிறு கருத்தரங்குகள், திரைப்படக் காட்சிகள் போன்றவை நடத்தி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் வேளாண் விளைபொருட்களை விற்பதால் அடையக்கூடிய நன்மைகள் பற்றிய பிரச்சாரத்தினை மேற்கொண்டு வருகின்றன. மேலும் வாரியத்தின் தலைமை இடமான சென்னையில் சுவரொட்டிகள், ஸ்டிக்கர்கள், விளம்பர பலகைகள், கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள், ஹேங்கர்ஸ் போன்றவைகளை தயாரித்து அனைத்து விற்பனைக்குழுக்களுக்கும் அவை விளம்பரமும் பிரச்சாரமும் செய்ய விநியோகித்து வருகிறது. வாரியத்தின் பிரச்சாரப் பணிகள் பற்றிய சாதனை விவரங்கள் அட்டவணை *85*ல் தரப்பட்டுள்ளன.

[1995 ஏப்ரல் 19

2. அங்காடி தகவல்கள்

மத்திய அரசின் தேசிய தகவல் மைய இணைப்பின் மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவி வரும் விலை விவரங்கள், விளைபொருள் வரத்து விவரங்கள் ஆகியவை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பயனடைய எல்லா விற்பனைக் கூடங்களுக்கும் குறித்த நேரத்தில் சேரும் பொருட்டு வாரியத்தில் சேகரிக்கப்படுகிறது. வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்கள் மூலம் விலை மற்றும் வரத்து பற்றிய தக்வல்கள் பரப்பப்படுகின்றன.

3. பயிற்சி

வாரியத்தின் பயிற்சிப் பிரிவு திருச்சியில் இயங்கி வருகிறது. இப்பயிற்சிப் பிரிவு விற்பனைக் குழுக்களின் பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சிகளை அளிக்கிறது. 1. தரம்பிரிப்பாளர் பயிற்சி, 2. விற்பனைக்குழுப் பணியாளர்களுக்குப் புத்தூட்ட பயிற்சி, 3. விவசாயிகட்கு நேரடித் தொடர்புத் திட்டம் ஆகிய மூலிகை பயிற்சிகளை இம்மையம் அளித்து வருகின்றது. வணிகமுறை தரம்பிரிப்பு, அக்மார்க் தரம் பிரிப்பு அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம், அறிவியல் ரீதியில் சேமித்தல் வரவு-செலவு திட்டமிடல் சட்டம் மற்றும் விதிகள் போன்ற வேளாண் விற்பனை பற்றிய பல்வகைப் பிரிவுகளில் இப்பயிற்சி திட்டத்தின் கீழ் அளிக்கப்படுகிறது.

அ. தரம்பிரிப்பாளர் பயிற்சி

இப்பயிற்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணிபுரிந்து வரும் தரம்பிரிப்புப் பணியாளர்களுக்கு வணிகமுறை தரம்பிரிப்பு, அக்மார்க் தரம்பிரிப்பு, பின் அறுவடை தொழில்நுட்பம், சேமிப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலத்தில் வகுப்பறையில் பயிற்சி பெறுவதுடன் பயிற்சியாளர்கள முக்கியமான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் மண்டல அக்மார்க் ஆய்வகம், மத்திய அரசின் வேளாண்மை விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககம் ஆகிய இடங்களில் செயல்முறை பயிற்சியும் பெறுகிறார்கள்.

ஆ. விற்பனைக் குழுப் பணியாளர்களில் புத்தூட்டப் பயிற்சி

இப்பயிற்சியில் விற்பனைக் குழுக்களின் பணியாளர்களுக்கு கணக்கு மற்றும் வரவு-செலவு, சட்டம் மற்றும் விதிகள், பின் அறுவடை தொழில்நுட்பம், சேமிப்பு முதலியன பற்றி புத்தறிவு பயிற்சி

1995 ஏப்ரல் 19]

அளிக்கப்படுகிறது. நேரடியாக அறியும் பொருட்டு, இப்பயிற்சியில் பயிற்சியாளர்கள் வேறுபட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இ. நேரடித் தொடர்புத் திட்டம்

இப்பயிற்சி விற்பனைக் குழுக்களால் பிரத்யேகமாக சிறு/குறு விவசாயிகளுக்கு மட்டும் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியின் பின் அறுவடை தொழில்நுட்பம், சேமிப்பு முறைகள், ஒழுக்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றிய விவரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இப்பயிற்சிக் காலததில் விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பாட்டினை நேரில் கண்டறிய பலதரப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இப்பயிற்சியின்போது மேற்கொள்ளும் பயணத்திற்கான செலவுகள் வாரியத்தால் ஏற்கப்படுகின்றது. மேலும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தினப்படியாக ரூ. 20/- வழங்கப்படுகிறது.

4. கட்டுமானப்பணிகள்

விற்பனைக் குழுக்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள் தமிழ்நாடு அரசு வாரியத்தில் ஒரு கண்காணிப்பு பொறியாளரின் கீழ் இரண்டு கோட்டங்களுக்கு 2 செயற்பொறியாளர்களையும் 6 உதவி செயற்பொறியாளர்களையும் கொண்ட பொறியியல் பிரிவை ஏற்படுத்த அனுமதி வழங்கியது. 1991-ஆம் ஆண்டு இப்பொறியியல் பிரிவு ஒரு செயற் பொறியாளர், 3 உதவிச் செயற்பொறியாளர்களைக் கொண்ட ஒரு கோட்டமாக குறைக்கப்பட்டது. இந்த பொறியியல் பிரிவு தற்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அலுவலக கட்டிடங்கள், ஊரகக் கிடங்குகள், உலர் களங்கள், கிடங்குகள், ஏலக்கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடு பொருள் மற்றும் பணப்பட்டுவாடா அறைகள், ஓய்வு அறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், அலுவலகம் இணைந்த கிடங்குகள், இணைப்புச் சாலைகள், ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் சுற்றுச் சுவர்கள், போன்ற கட்டுமானப் பணிகளை செய்து வருகிறது. தற்போது இப்பொறியியல் பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ. 370.81 இலட்சம் மதிப்புள்ள 131 கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இக்கட்டுமானப் பணிகள் குறித்த விவரங்கள் அட்டவணை 8.6 மற்றும் 8.7,ல் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப்பொறியியல் பிரிவு கடந்த 10 ஆண்டில் ரூ. 1,519.72 இலட்சம்

[1995 ஏப்ரல் 19

மதிப்புள்ள 825 கட்டுமானப் பணிகளை முடித்து விற்பனைக்குழுக்களிடம் ஒப்படைத்துள்ளது. இதில் குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிக்கு மட்டும் ரூ. 119.32 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இப்பொறியியல் பிரிவு ரூ. 424.16 இலட்சம் மதிப்புள்ள 98 ஊரக கிடங்குகளை கடந்த 10 ஆண்டுகளில் கட்டி முடித்துள்ளது.

அட்டவணை 8.1

ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாய விளைப் பொருட்களின் வரத்து விவரம்.

அளவு மெட்ரிக் டன்னில்

வ.எண்.	விற்பனைக்குழுக்கள்	1991-92	1992-93	1993-94	1994-95 பிப்ரவரி 1995 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	செங்கை எம்.ஜி.ஆர்.	3230	3818	4621	4688
2.	வடஆற்காடு	65407	92284	100817	104912
3.	தென்னாற்காடு	155337	215125	207539	165066
4.	சேலம்	5650	5283	6970	6570
5.	தருமபுரி	8523	6914	7849	9343
6.	கோயம்புத்தூர்	76269	69988	64016	69664
7.	பெரியார்	88240	91477	121067	131799
8.	திருச்சி	18851	19045	18021	15081
9.	தஞ்சாவூர்	7787	11620	18405	39974
10.	புதுக்கோட்டை	1940	2190	2677	3347
11.	மதுரை	8104	10328	11230	13046
12.	இராமநாதபுரம்	14983	16883	18195	15990
13.	திருநெல்வேலி	11725	12699	13244	17537
14.	கன்னியாகுமரி	2257	1795	2976	2102
	மொத்தம்	**468303**	**559249**	**597628**	**599199**

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 8.2

விற்பனைக் குழு வாரியாக வரவின விவரம்

ரூபாய் இலட்சத்தில்

வ.எண்.	விற்பனைக்குழுக்கள்	1991–92	1992–93	1993–94	1994-95 பிப்ரவரி 1995 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	செங்கை எம்.ஜி.ஆர்.	40.49	49.88	30.66	41.27
2.	வடஆற்காடு	103.50	136.28	157.91	176.68
3.	தென்னாற்காடு	181.57	276.36	244.86	232.08
4.	சேலம்	107.84	116.46	113.46	121.07
5.	தருமபுரி	70.50	75.96	84.03	84.32
6.	கோயம்புத்தூர்	165.45	191.38	233.10	359.77
7.	பெரியார்	86.55	115.17	143.30	177.85
8.	திருச்சி	73.55	76.31	91.51	93.72
9.	தஞ்சாவூர்	92.02	119.46	183.26	359.97
10.	புதுக்கோட்டை	14.79	31.56	27.91	30.60
11.	மதுரை	56.64	78.71	83.45	168.52
12.	இராமநாதபுரம்	75.90	100.87	92.40	173.30
13.	திருநெல்வேலி	66.83	71.01	76.85	172.93
14.	கன்னியாகுமரி	25.82	45.65	48.90	65.22
	மொத்தம்	**1161.45**	**1485.06**	**1611.60**	**2257.30**

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 8.3

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பொருளீட்டுக் கடன் விவரம்

அளவு ரூபாய் இலட்சத்தில்

வ.எண்.	விற்பனைக்குழுக்கள்	1991-92	1992-93	1993-94	1994-95 பிப்ரவரி 1995 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	செங்கை-எம்.ஜி.ஆர்.	1.87	18.29	10.40	9.79
2.	வடஆற்காடு	4.97	4.34	10.05	24.63
3.	தென்னாற்காடு	12.28	40.24	28.72	46.51
4.	சேலம்	1.41	5.05	6.17	7.21
5.	தருமபுரி	4.60	4.06	2.51	13.80
6.	கோயமுத்தூர்	7.30	8.95	29.92	56.00
7.	பெரியார்	6.40	21.79	32.60	62.61
8.	திருச்சி	1.66	6.67	9.21	19.30
9.	தஞ்சாவூர்	6.47	6.38	18.23	33.13
10.	புதுக்கோட்டை	1.62	4.95	4.84	10.76
11.	மதுரை	20.09	13.88	25.00	39.17
12.	இராமநாதபுரம்	24.57	30.18	40.48	89.79
13.	திருநெல்வேலி	14.85	11.79	24.46	35.08
14.	கன்னியாகுமரி	6.94	9.00	12.28	10.54
	மொத்தம்	**115.03**	**185.57**	**248.87**	**458.32**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 8.4

அக்மார்க் தரம் பிரிப்பு

வ.எண்.	திட்டத்தின் பெயர்.	1991-92	1992-93	1993-94	அளவு குவிண்டாலில் 1994-95 பிப்ரவரி'95 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது.	195976	194131	223699	155970
2.	மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்படாதது.	167530	188806	289698	134673

வணிக முறை தரம் பிரிப்பு

வ.எண்.	திட்டத்தின் பெயர்.	1991-92	1992-93	1993-94	அளவு குவிண்டாலில் 1994-95 பிப்ரவரி'95 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	வணிகமுறை தரம் பிரிப்பு	5135884	5947708	5627481	5924702
2.	பருத்தி தரம் பிரிப்பு	346161	379098	401001	406337
3.	புகையிலை தரம் பிரிப்பு	11527	12023	12079	12434

பருத்தி சான்றுரைத் திட்டம்

வ.எண்.	திட்டத்தின் பெயர்.	1991-92	1992-93	1993-94	1994-95 பிப்ரவரி'95 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	பருத்தி ஏற்றுமதிக்காக வழங்கப்பட்ட உரிமங்கள் (எண்கள்)	112601	128107	138859	126725
2.	உரிமம் புதுப்பிக்கப் பட்டதன் மூலம் வருவாய் (ருபாய் இலட்சத்தில்)	9.17	9.50	11.03	14.12

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 8.5

விளம்பரம் மற்றும் பிரச்சார பணிகள் விவரம்

வ.எண்.	விவரங்கள்.	1992–93 இலக்கு	1992–93 சாதனை	1993–94 இலக்கு	1993–94 சாதனை	1994–95 இலக்கு	1994–95 சாதனை பிப்ரவரி 95 வரை
1.	பயணம் மேற்கொண்ட கிராமங்கள்	440	400	400	414	440	567
2.	தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட கிராமங்கள் கிராம கூட்டங்கள், திரைப் படக்காட்சி மற்றும் கருத்தரங்குகள் உட்பட	800	675	800	743	800	863
3.	மொத்த கிராமங்களின் எண்ணிக்கை	2400	2094	2400	2202	2400	2287
4.	கிராம திருவிழா காலங்களில் கருத்தரங்கு காட்சிகள்	48	25	48	26	48	56
5.	வானொலி மூலம் செய்திகள்	800	478	800	540	600	573
6.	தொலைக்காட்சி மூலம் செய்திகள்	50	48	50	50	50	46
7.	செய்தித் தாள்கள் மூலம் செய்திகள்	96	64	96	78	80	83
8.	துண்டுபிரச்சாரம், கையேடுகள், விநியோகம் செய்தது.	20000	13000	20000	30240	20000	26050
9.	திரைப்படஸ்லைடுகள் தயாரிக்கப்பட்டது.	300	..	200	305	200	160

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 8.6

மாநில விளை பொருள் விற்பனை வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள்.

ரூபாய் இலட்சத்தில்

வ.எண்.	பணிகளின் விவரங்கள்.	எண்ணிக்கை	தொகை
1.	சுற்றுச் சுவர்	33	76.69
2.	பழுது பார்ப்பதற்கான பராமரிப்பு செலவுகள்	19	16.75
3.	பணம் பட்டுவாடா செய்யும் இடம்	1	5.00
4.	அலுவலக கட்டிடங்கள்	5	31.48
5.	உலர் களம்	6	10.15
6.	அலுவலகம் மற்றும் கிடங்கு	2	9.00
7.	குடிநீர்வசதி	10	6.86
8.	மாட்டுக் கொட்டகை	1	1.97
9.	கழிப்பிடங்கள்	4	1.80
10.	பரிவர்த்தனை கூடம்	15	68.65
11.	சைக்கிள் கொட்டகை	–	–
12.	சாலைகள்	6	9.21
13.	மின் விளக்குவசதி செய்து தருதல்	1	0.10
14.	விற்பனை வளாகம்	4	16.85
15.	எலி புகா கிடங்கு	1	3.60
16.	ஓய்வறைகள்	12	55.30
17	விருந்தினர் மாளிகை	1	3.20
18.	ஊரகக் கிடங்கு	4	32.00
19.	சிற்றுண்டிச்சாலை	1	3.50
20.	கிடங்கு	5	18.70
	மொத்தம்	**131**	**370.81**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 19

அட்டவணை 8.7

மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தால் முடிக்கப்பட்ட கட்டுமானப் பணிகளின் விவரங்கள்

ரூபாய் இலட்சத்தில்

வ.எண். பணிகளின் விவரம்.	1991-92		1992-93		1993-94		1994-95 பிப்ரவரி 95 வரை	
	எண்	மதிப்பு	எண்	மதிப்பு	எண்	மதிப்பு	எண்	மதிப்பு
1. ஊரகக் கிடங்கு	4	27.03	1	6.41	–	–	2	13.10
2. சுற்றுச் சுவர்	3	2.38	19	33.45	9	11.09	12	13.65
3. வாகனங்கள் நிறுத்தும் இடம்.	–	–	–	–	2	4.45	–	–
4. அலுவலக கட்டிடம்	3	10.00	4	20.00	4	20.00	3	11.20
5. மின்கருவிகள் பழுது	27	6.71	5	0.50	15	2.41	13	2.74
6. ஓய்வு அறை	–	–	1	4.50	1	5.00	4	17.30
7. கடைகள்	–	–	–	–	2	4.70	–	–
8. அலுவலகம் (&) கிடங்கு	2	0.30	–	–	6	30.00	2	7.30
9. பணம்பட்டுவாடா செய்யுமிடம்.	8	1.71	5	24.00	8	40.00	3	15.00
10. சுத்தம் செய்தது	–	–	5	3.50	7	3.63	11	4.71
11. ஏலமிடுவதற்கான மேடை.	1	0.18	–	–	3	15.00	6	17.65
12. சாலை	2	0.41	17	14.70	7	6.58	7	5.87
13. உலர் களம்	5	1.41	9	9.00	9	18.00	8	16.25
14. சிறப்பு பழுதுகள்	23	2.60	42	2.01	45	21.33	9	15.44
15. குடிநீர் வசதி	–	–	1	5.00	1	5.00	4	2.98
16. விருந்தினர் விடுதி	–	–	1	5.00	1	5.00	2	2.30
17. காவலர் அறை	–	–	–	–	1	0.18	–	–
18. சோதனை சாவடி	–	–	–	–	–	–	2	0.50
மொத்தம்	78	52.73	110	128.07	121	192.37	88	145.99

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

அத்தியாயம்-9

மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

(அ) தமிழ்நாடு வேளாண் பொறியியல்-பணிக் கூட்டுறவு இணையம் (என்கோ.ஃபெட்).

தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம், அரை மில்லியன் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், வேலையற்ற பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக 1972-ல் நிறுவப்பட்டது. தற்போது இந்த இணையம் விவசாயிகளுக்கு வேண்டிய அனைத்து சேவைகளையும் அளிப்பதற்காக, 192 வட்டார அளவிலான சங்கங்களையும் மாவட்ட அளவில் வேளாண்மை பணிச்சங்கங்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

(அ) வட்டார/மாவட்ட அளவில் உள்ள நிலையங்கள் மூலமாக உழவர்களுக்குப் பொறியியல் வசதிகள் வழங்குதல்

(ஆ) தார்பாலின், விசைத் தெளிப்பான்கள், ஆயில் எஞ்சின் போன்ற ஏனைய இயந்திரங்கள்/சாதனங்கள் வழங்குதலும் உழவர்களுக்கு வேளாண்மை இயந்திரங்கள்/கருவிகளை வாடகைக்கு விடுதலும்.

(இ) உழவர்கள் மற்றும் ஏனைய அரசுகள்/அரசு சார்புத் துறைகள் ஆகியவற்றைச் சேர்ந்த வேளாண்மைச் சாதனங்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றைப் பழுதுப்பார்த்தல் போன்ற சேவை.

(ஈ) விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள், பயிர் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் இரசாயன மருந்துப் பொருட்கள் போன்ற இடுபொருட்களின் வினியோகம்.

(உ) பாசனவசதி தேவையாக உள்ள உழவர்களுக்கு சொட்டுநீர்பாசனம் தூவு முறைப்பாசனம், தெளிப்புமுறைப்பாசனம், போன்ற மாதிரி நவீன பாசன முறைகளுக்கு ஏற்பாடு செய்தல்.

(ஊ) மானிய திட்டத்தின் கீழ் டயர் வண்டி, ஜிப்சம், உரங்கள், விசை கொண்டு கையினால் தெளிக்கும் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குதல், ஒப்பந்த வீத அடிப்படையில் கையினால் மற்றும் விசையினால் இயங்கக் கூடிய தெளிப்பான்களை வழங்குதல்.

[1995 ஏப்ரல் 19

2. வேளாண்மைத்துறை இயக்குனர் மூலம், ஒப்பந்த அடிப்படையில் மானிய உதவித் திட்டத்தின் கீழ், நன்கு செயலாற்றக்கூடிய கை மற்றும் விசையினால் இயங்கக்கூடிய தெளிப்பான்கள் தமிழ் நாடு முழுவதிலும் உள்ள உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

1990-91 முதல் *1994-95* ஆம் ஆண்டுவரை 'என்கோஃபெட்' நிறுவனத்தின் சாதனைகள் குறித்த விவரங்கள் பின் வருமாறு:--

அட்டவணை 9.1

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு.	பயிர் பாதுகாப்பு சாதனங்கள்.	வேளாண்மை இடுபொருட்கள்.
1990-91	*322.00*	*200.77*
1991-92	*371.87*	*96.70*
1992-93	*659.00*	*5345.27*
1993-94	*1062.42*	*268.51*
1994-95 (94 அக்டோபர் வரை)	*139.50*	*11.86*

3. டயர்கள்-வண்டிகள் வழங்குதல்:

அரசு *50* சதவீத மானிய வீதத்தில் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு காற்றடைத்த டயர் வண்டிகள் வழங்குவதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. சிறு, குறு உழவர்களுக்கு டயர் பொருத்தப்பட்ட வண்டி ஒன்றுக்கு உச்ச அளவு ரூ. *7,500* என்ற வீதத்தில், *1200* டயர் வண்டிகளுக்கு *50* சதவீத உதவித் தொகை வழங்குவதற்காக அரசு *1994-95* ஆம் ஆண்டில் ரூ. *90.00* இலட்சம் ஒதுக்கி, இத்திட்டம் நடந்தேறி வருகிறது.

சிறு குறு உழவர்களுக்கு 50 சதவீத உதவித் தொகை என்பதன்கீழ் நெற்குதிர்கள், தார்ப்பாய்கள் வழங்குதல்.

4. சிறு/குறு உழவர்களுக்கு *19,734* தார்ப்பாய்களையும், *454* நெற்குதிர்களையும் வழங்கியதன் மூலம் என்கோஃபெட் நிறுவனம் வெற்றிகரமாக இத்திட்டத்தை நிறைவேற்றியதோடு ஒதுக்கப்பட்ட ரூபாய் *2.00* கோடி தொகையை முழுவதுமாக பயன்படுத்தியது சிறு/குறு உழவர்களுக்கு *5000* தார்ப்பாய்களையும், *1000* நெற்குதிர்களையும்

1995 ஏப்ரல் 19]

வழங்குவதற்கு 50 சதவிகித உதவித தொகை என்ற அளவில் 1994–95 ஆம் ஆண்டில் அரசு உதவித்தொகையாக ரூ. 60 இலட்சத்தை வழங்க அனுமதி வழங்கியது.

5. சிறு, குறு உழவர்களின் பயனுக்காக, என்கோஃபெட் நிறுவனம் உதவித் தொகை (50 சதவிகிதம்) வழங்கும் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது :

1. ரூ. 7.705 இலட்சத்திற்கு ஆழமில்லாத குழாய்கிணறுத் திட்டம்.
2. ரூ. 37.55 இலட்சத்திற்கு பெட்ரோமாக்ஸ் விளக்குப் பொறிகள் வழங்குதல்
3. ரூ. 53.10 இலட்சத்திற்கு வேளாண் கருவிகள் வழங்குதல்
4. மொத்தம் ரூ. 342.70 இலட்சம் செலவில் விசைத் தெளிப்பான்களை வழங்குதல்

6. 1995–96 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் 5 வேளாண் பணிக் கூட்டுறவு மையங்களில் அடிப்படை வசதிகளை வலுப்படுத்தும் முகத்தான் பட்டறைச் சாதனங்கள் வழங்க ரூ. 5.00 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

7. வாடகைக்கு விடுதலும் பழுதுபார்த்தலும்:

(அ) இந்த இணையத்துடன் இணைக்கப்பட்ட பிரிவுகள், பின்வரும் எந்திரங்களை, அதாவது 162 டிராக்டர்கள், 131 இழு வண்டிகள், 119 எண்ணெய் எந்திரங்கள், 376 மின் தெளிப்பான்கள், 485 கைத்தெளிப்பான்கள், 10 கம்பரசர்கள், கிணற்றுகள் துளையிடும் கருவி 1, 81 ஆந்திரக் கலப்பைகள் ஆகியவற்றை வாடகைக்கு விடுவதற்காக வைத்துள்ளன.

இணைக்கப்பட்ட பிரிவுகள் 1993–94 ஆம் ஆண்டில் டிராக்டர்களையும் எந்திரக் கலப்பைகளையும் வாடகைக்கு விட்டதன் மூலம் ரூ. 130.97 இலட்சம் வருமானத்தை ஈட்டியுள்ளது.

(ஆ) தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு இணையம் ஊரகப் பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்காக ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வாடகைக்கு விட 6 சாலை சமன்பொறிகளை வைத்திருக்கிறது. தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு இணையம், 1994–95ஆம் ஆண்டில், 1994 நவம்பர் திங்கள் வரை ரூ. 3.17 இலட்சம் வருமானத்தை ஈட்டியுள்ளது.

[1995 ஏப்ரல் 19

8. 1990–91 ஆம் ஆண்டிலிருந்து 1994–95 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் தமிழ்நாடு வேளாண்மை பொறியில் பணி கூட்டுறவு இணையம் இதனுடன் இணைந்த பிரிவுகள் ஆகியவற்றின் திட்ட சாதனை குறித்த விவரம் வருமாறு.

அட்டவணை 9.2.

ஆண்டு.	இணையத்துடன் இணைந்த பிரிவுகள் எண்ணிக்கை.	வாடகை வகையில் திட்ட சாதனை மணி களில்.	வாடகை வகையில் நிதிச் சாதனை ரூபாய் இலட்சத்தில்	விற்பனை வகையில் திட்ட சாதனை எண்ணி க்கை	விற்பனை வகையில் நிதிச் சாதனை ரூபாய் இலட்சத்தில்	பழுது பார்ப்புப் பணி வகையில் திட்ட சாதனை	பழுது பார்ப்புப் பணி வகையில் நிதிச் சாதனை ரூபாய் இலட்சத்தில்
1990–91	194	237282	125.13	23774	522.03	–	796.58
1991–92	195	218028	90.60	38476	468.57	–	909.07
1992–93	199	364219	101.74	52405	6018.17	–	1516.47
1993–94	206	223258	130.57	60138	1289.59	–	1861.75
1994–95 (94 அக். வரை)	211	114686	70.90	10267	139.51	–	676.05

9. தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு இணையம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று, மொத்தம் ரூ. 200 இலட்சம் செலவில் 8 நிலச்சமன் பொறிகளையும் தனது சொந்த நிதிகளிலிருந்து ரூ. 20 இலட்சம் செலவில் டோசர்பிளேடுகளும் கூடிய 5 டிராக்டர்களையும் வாங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பொறியில் பணி கூட்டுறவு இணையம் 31.3.94 ஆம் நாள் நிலவரப்படி ரூ. 89.54 இலட்சம் (தற்காலிமானது) ஆதாயம் ஈட்டியுள்ளது. தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு இணையம் 1994–95 ஆம் ஆண்டில் ஆதாய்ம் ஈட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1995 ஏப்ரல் 19]

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்.

(டான்காப்)

தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் தாவர எண்ணெய் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் அமைப்பாக, தமிழ்நாடு கூட்டுறவு எணணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் 1-1-1981 அன்று பதிவு செய்யப்பட்டது.

நோக்கம் :

2. எண்ணெய் மற்றும் அதன் துணைப் பொருட்களை உற்பத்தி செய்தல், கொள்முதல் செய்தல், செயல் முறைப்படுத்துதல், விற்பனை செய்தல், ஆகியவை போன்ற பணிகளைத் திறம்பட ஒருங்கிணைப்பதன் வாயிலாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு உகந்த பணிகளை மேற்கொள்வதே இந்த இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

பங்கு மூலதனம் :

3. இந்த இணையத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5 கோடி ஆகும். இணையத்தின் திட்டப் பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட எண்ணெய்வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் தொடக்கச் சங்கங்களும் தேசிய பால்வள நிறுவனமும் இந்த இணையத்தின் உறுப்பினர்களாவர். இந்த இணையத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 159.76 லட்சம். இதில் ரூ. 98.88 லட்சம் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் தனது பங்கு மூலதனமாக கொடுத்துள்ளது. எஞ்சிய தொகையான ரூ. 60.88 லட்சம் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் பங்கு மூலதனமாக கொடுத்துள்ளன.

தாவர எண்ணெய் திட்டம் :-

திட்ட நிதி :

4. இதற்கான நிதி உதவியினை தேசிய பால்வள வாரியம் அளித்து வந்துள்ளது. இதன் முதல் கட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 15.61 கோடி அளவிற்கு நிதி வழங்கப்படுகிறது. இதில் தேசிய பால்வள வாரியத்திடமிருந்து ரூ. 8.42 கோடி கடனாகவும், ரூ. 7.19 கோடி மானியமாகவும் (முறையே 54%

கடனாகவும் மற்றும் 46% மானியமாகவும்) அளித்துள்ளது. அத்துடன் தேசிய பால்வள வாரியம் இணையத்திற்கு தேவையான குறைந்ததால் கடன்களையும், நீண்டகால கடன்களையும் கொள்முதல், விற்பனை மற்றும் குறிப்பாணை பிரேரணைகளை அனுசரித்து அளித்து வருகிறது. இதுவரை சுமார் ரூ. 12 கோடிகளை பல்வேறு பணிகளுக்காக முதலீடாக பெற்றுள்ளது. தற்போது தேசிய பால்வள வாரியம் நிதி உதவியினை 1991–92ஆம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

தேசிய பால்வள வாரியம் இரண்டாம் கட்ட திட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்ட நிதி உதவியாக ரூ. 29.14 கோடியினை அளிப்பதற்கு உறுதி அளித்துள்ளது. இருப்பினும், இந்த இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீடு தற்போது கூட்டுறவு சங்கங்களுக்கு நீதி மன்றத்தில் அளிக்கப்பட்ட தடுப்பாணையின் காரணமாக, தேர்தலை அரசு நடத்த இயலாத காரணத்தால் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த சூழ்நிலையில் அரசு இணையத்திற்கு தேவையான அனைத்து நிதி உதவியினை அளித்து, அந்த வகையில் ரூ. 1 கோடிக்கு வழி வகைகள் முன்பணமாகவும் (வட்டியில்லாத முன்பணமாகவும், மேலும் ரூ. 8 கோடி ஆதாய பங்கீட்டுத் தொகை ரூ. 80 லட்சம் வழங்கியும் அத்துடன் பல்வேறு திட்ட உதவிகளையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திற்கான சமையல் எண்ணெயினை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக இணையம் அளிப்பதற்கும், விற்பனை அங்காடி கட்டணத்திலிருந்து விலக்கும் மற்றும் இணையத்தினால் செலுத்தப்பட்ட கொள்முதல் வரியினை மானியமாக திருப்பி அளிக்கவும் வகை செய்துள்ளது.

திட்ட பகுதி :

5. தற்போது இத்திட்டம் 5 மாவட்டங்களான திருவண்ணாமலை-சம்புவராயர், வட ஆற்காடு-அம்பேத்கார், விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார், தென்னார்காடு-வள்ளலார், செங்கை-எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் 20 வட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இணையம் இதுவரை 335 எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை தோற்றுவித்து, 1,492 கிராமங்களில் 84,765 உறுபபினர்களை பதிவு செய்துள்ளது. இதுவரை 1,30,807 எக்டேர் பகுதியில் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள்.

1995 ஏப்ரல் 19]

உற்பத்தி பெருக்கம் :

6. இணையத்தின் வளர்ச்சிப் பணிகள் எண்ணெய்வித்துக்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதன் மூலம் உற்பதறித் திறனை அதிகப்படுத்தி அதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவற்றை அடைய இணையம் தீவிரமாக, தன்னுடைய விரிவாக்க பணியாளர்களின் மூலம் நல்ல தரமான எண்ணெய்வித்துக்கள் வினியோகித்தல், செயல்முறை விளக்கப்பாத்தி அமைத்தல், பயிற்சிகளை கொடுத்து இடுபொருட்களை வழங்குதல் போன்ற விரிவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

வட்டார உழவியல் மையம் :

7. இந்த இணையம் மேம்படுததப்பட்ட சிறந்த விதைகளை உற்பத்தி செய்யவும் இந்த இணையத்தில் சங்க விவசாயிகள், பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிப்பதற்காகவும், ரூ. *130* லட்சம் செலவில் நெய்வேலியில் திட்டப்பகுதியில் *102* எக்டேர் பரப்பில் உழவியல் மற்றும் பயிற்சி மையம் ஒன்றை அமைத்துள்ளது. இம்மையத்தை பொறுக்குவிதை உற்பத்தி மையமாக மத்திய அரசு (இந்திய வேளாண் ஆராய்ச்சி குழு) அங்கீகரித்து உள்ளது. இம்மையம் *1994–95*ஆம் ஆண்டில் நவம்பர் *94* வரை *22* குவிண்டால் கருவித்து விதைகளையும், *36* குவிண்டால் ஆதாரவித்துக்களையும் உற்பத்தி செய்துள்ளது.

பயிற்சி மையம் :

8. வட்டார உழவியல் மையத்தில் விவசாய உறுப்பினர்கள் பயிற்சி பெறுவதற்காக பயிற்சி மையம் ஒன்றை இவ்விணையம் அமைத்துள்ளது. இப்பயிற்சி மையத்தின் பல்வேறு பணிகளுக்கு உறுதுணையாக சொகுசு வசதியுடன் கூடிய பேருந்து மற்றும் நடமாடும் விரிவாக்க வண்டியும் உள்ளன. இம்மையத்தில் பயிற்சியின்போது கலந்து கொள்கின்ற *35* விவசாயிகள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான உணவு, உறங்கும் இடம் போன்ற வசதிகளும் மற்றும் நிரந்தர பொருட்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மையத்தில் மூன்று விதமான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

1. விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.
2. சங்கச் செயலர் மறறும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல்.
3. களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், இதுதவிர திட்டப் பகுதிக்கு தேவையான நீர்நிர்வாகம், எண்ணெய்வித்துக்கள் சாகுபடி, விதை உற்பத்தியாளர் பயிற்சி மற்றும் கிடங்கு பராமரித்தல் போன்றவற்றிற்குரிய சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.
4. இந்த பயிற்சி மையத்தில் அரசு 10,000 விதை உற்பத்தியாளர்களுக்கென பயிற்சி அளிக்க அரசு எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் எடுத்து செயல்படுததி உள்ளது. அத்துடன் திட்டத்திற்குரிய தேவையான விதை உற்பத்தி பாதுகாத்தல் வளர்ச்சி ஆகியவற்றுக்கான சிறப்பு பயிற்சிகளையும், தேவைக்கேற்றவாறு அளித்து வருகிறது.

எண்ணெய்வித்து பெருக்குத் திட்டம்:

9. இவ்விணையம் அரசாங்கத்தில் பல்வேறு வகையான அபிவிருததி திட்டங்களை திட்டப்பகுதியில் செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசாங்கம் எண்ணெய்விதது பெருக்குத் திட்டத்தின் கீழ் இவ்விணையத்திற்கு சுமார் ரூ. 610.65 இலட்சங்களை பல்வேறு இடுபொருட்கள் வழங்கவும் தேவையான பயிற்சி அளிக்கவும் ஒதுக்கியுள்ளது. அத்துடன் 1994-95ஆம் ஆண்டுக்கான சுமார் 45.451 இலட்ச ரூபாய்களை விதைகொள்முதல் மற்றும் பிற பணிகளுக்கு முன் பணமாக வழங்கி, அதன் பணிகள் தொடங்கப்பட்டு நடந்துவருகின்றன.

(i) சிறுதளை விநியோகம்:

இணையம், சிறுதளை விநியோகம் செய்யும் எல்லாவிதமான பொறுப்பினை எண்ணெய்வித்துகளுக்காக 1993-94ம் ஆண்டு எடுத்து செயல்படுத்தி வருகிறது. இதுவரை 1994-95ம் ஆண்டிற்குரிய இலக்கும், சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 9.3

	பயிர்.	கொடுக்கப்பட்ட சிறுதளை எண்ணிக்கைகள்.	விநியோகிக்கப்பட்ட சிறுதளை எண்ணிக்கைகள்.
1.	நிலக்கடலை	14,815	14,815
2.	சூரியகாந்தி வீரிய விதை	68,000	68,000
3.	சூரியகாந்தி ரகம்	15,524	15,524
4.	சூரியகாந்தி வீரிய விதை	22,561	22,561
5.	சோயாமொச்சை	55,550	55,550
6.	எள்	1,26,960	1,26,960
7.	ஆமணக்கு	37,030	37,030

(ii) ஜிப்சம் மற்றும் விதை விநியோகம்:

ஜிப்சம் மற்றும் எண்ணெய்வித்துக்கள் விநியோகத்தை டான்காப் எடுத்து செயல்படுத்தி வருகிறது. அவற்றின் இலக்கும் சாதனைகளும், கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 9.4

	பயிர்	இலக்கு (டன்னில்)	சாதனை (டன்னில்- 10--12-1994 முடிய)
1.	ஜிப்சம்	23,330	12.752
2.	நிலக்கடலை	1,200	721.793
3.	சூரியகாந்தி		
	சான்றுவிதை	42,958	42,958
	உண்மை நிலை விதை	62,042	62,042

(iii) உழவியல் மையத்தின் அடிப்படை வசதியின் வளர்ச்சி:

எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின் கீழ் வட்டார உழவியல் நில வளர்ச்சி மற்றும் குழாய் கிணறுகள் மூலம் நீர்ப்பாசன வசதி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் நடப்பு நிதி ஆண்டில் தமிழக அரசு சுமார் ரூ.61.665 லட்சம் ஒதுக்கியுள்ளது. நில

வளர்ச்சி பணிகள் ஏற்கனவே எடுத்து செய்யப்பட்டுள்ளது மற்றும் நீர்வசதிகளுக்கான வளர்ச்சிப் பணிகள் வேளாண்மை பொறியியல் (பொறியாளர்) கடலூர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(iv) நெய்வேலியில் விதை, பதப்படுத்தும் கருவி :

நெய்வேலியில் உள்ள உழவியல் மையத்தில் ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் விதை பதப்படுத்தும் வசதிகளை அமைக்க அரசு ஒதுக்கீடு அளித்துள்ளது. இருப்பினும், இந்த விதை பதப்படுத்தும் கருவியினை ஓரிடத்தில் அமைக்கும் எண்ணத்தை தற்போது மாற்றிக் கொண்டு, நெய்வேலி, திருவண்ணாமலை விருத்தாசலம் மற்றும் செய்யார் ஆகிய பகுதிகளில் (4 இடங்களில்) செயல்பாடுகளின் வசதிகளை கருத்தில் கொண்டு அமைக்க திட்டமிட்டுள்ளது. டான்காப் இணையம் இன்னும் இந்த பணியினை கொடுக்கப்பட்ட நிதியுதவியினை கொண்டு முடிக்கவில்லை.

கொள்முதலும் பதப்படுத்துதலும் :

10. அரசு கொள்முதலுக்கான காரணிகளை தற்போது விவரித்துள்ளது. இத்துடன் கடன் வசதி ரூ.8 கோடியும் அளித்துள்ளது. நிதி ஆதாரமாக ரூ.80 லட்சம் கொடுத்துள்ளது. எனவே, இணையம் ரபி 95 இறவை பருவத்தில் கொள்முதலை துவங்க உள்ளது.

இணையத்தில் கீழ்க்கண்ட திறன் கொண்ட இரு எண்ணெய் பிழியும் ஆலைகள் உள்ளன.

அட்டவணை 9.5

விவரம்	அளவு	திருவண்ணாமலை	விருத்தாசலம்	மொத்தம்
1. மணிலா உடைப்பு	டன்/நாள்	150	150	300
2. எண்ணெய் பிழிதல்	டன்/நாள்	125	100	225
3. சுத்திகரித்தல்	டன்/நாள்	10	..	10
4. கரைசல் பிரிப்புமுறை	டன்/நாள்	40	40	80
5. மணிலாக்காய் மற்றும் பிண்ணாக்கு இருப்பு வைத்தல்	டன்/நாள்	7000	5000	12000
6. எண்ணெய் இருப்பு வைத்தல்	டன்/நாள்	1000	1500	2500

1995 ஏப்ரல் 19]

தற்போது விருத்தாசலம் ஆலையில் நவீனப்படுத்தும் பணி முடிந்து ஆலை பொறுப்பினை இணையத்திடம் அளிக்க உள்ளது. இவ்வாலை பணி எடுத்துக் கொண்டவுடன் வரப்போகும் ரபி *95* பருவத்தில் சோதனை ஓட்டம் முடிந்து எடுக்கப்பட உள்ளது.

எண்ணெய் நிரப்பும் நிலையம்:

இணையம் நாள் ஒன்றுக்கு *105* டன் திறன் கொண்ட எண்ணெய் நிரப்பும் நிலையங்களை திருவண்ணாமலை/சென்னை (கிண்டி) மதுரை (கப்பலூர்) ஆகிய இடங்களில் ஏற்படுத்தி உள்ளது.

அட்டவணை 9.6

இடம்	அடைக்கும் திறன் நாள் ஒன்றுக்கு டன்னில்	கிடங்கு வசதி டன்னில்
1. கிண்டி	*45*	*5000*
2. திருவண்ணாமலை	*30*	*1000*
3. கப்பலூர்	*30*	*1500*

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட ஆர்பிடி பாமாலின் எண்ணெயை நுகர்வோருக்கு வழங்க பாலித்தின் பைகளில் நிரப்பி, சிப்பமிடும் பணியை மேற்கொண்டுள்ளது. இந்த பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காகவும், மற்றும் வேளாண்மை பொறியியல் மையத்திற்காகவும், தற்பொழுதுள்ள எண்ணெய் நிரப்பும் நிலையங்களில் உள்ள வசதிகளை தகுந்த முறையில் பயன்படுத்தி அதன் மூலம் வருவாயை பெருக்க இணையம் வழிவகை செய்துள்ளது. அத்துடன் டாங்கர், கிடங்கு, சுத்திகரிப்பு ஆலை மற்றும் ஏனைய வசதிகளை வாடகைக்கு விட்டு பயன்பெறவும் முயற்சி செய்து வருகிறது. *5,000* டன் திறன் கொண்ட ஒரு சேமிப்பு கிடங்கினை அமைத்துள்ளது.

இணையத்தின் மறுமலர்ச்சி:

11. இணையத்தின் நிர்வாகம் மற்றும் இதர செலவினங்கள் காரணமாக நெருக்கடி நிதி நிலைமையினை மாற்றி இணையத்தை மீட்கும் பொருட்டு கீழ்க்கண்ட உதவிகளை அரசு அளித்துள்ளது.

[1995 ஏப்ரல் 19

1. இணையத்தின் நிர்வாகம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.1 கோடி எந்தவித வட்டியும் இல்லாமல் தமிழக அரசு கடனாக அளித்துள்ளது.

2. இவ்விணையம் தமிழ்நாடு தலைமை மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து காசுக்கடன் மூலம் ரூ.8 கோடியை பெறுவதற்கு ரூ.80 லட்சத்தை வழங்கியுள்ளது.

3. அங்காடி கட்டணம் செலுத்துவதிலிருந்து இணையத்திற்கு விலக்கு அளித்துள்ளது.

4. இணையம் கொள்முதல் வரியாக செலுத்தும் தொகையினை 1–12–93லிருந்து ஒவ்வொரு மாதமும் இணையத்திற்கு மானியமாக அளித்துள்ளது.

5. புரட்சித் தலைவர் எம்ஜிஆர் மதிய சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான சமையல் எண்ணெய் முழுவதையும் இணையத்தின் மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விநியோகம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டாவது கட்ட திட்டம்:

12. தமிழக அரசு தாவர எண்ணெய்வித்து திட்டத்தை விரிவாக்கும் நோக்கத்தோடு, தர்மபுரி, சேலம், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் தேசிய பால்வள வாரியத்தின் உதவியோடு இரண்டாவது கட்டமாக விரிவாக்கம் செய்ய ஆணை வழங்கியுள்ளது.

அதாவது

1. கிராம அளவில் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாகவும்

2. மாவட்ட அளவில் கூட்டுறவு ஒன்றியங்கள் வாயிலாகவும்

3. மாநில அளவில் இணையத்தின் வாயிலாகவும் செயல்படுத்த உள்ளது.

எனவே, அரசு இந்த இரண்டாம்கட்ட திட்டத்தினை தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்த உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

(இ) தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் (தாய்)

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் (தாய்) 1966 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. வேளாண் விளைபொருட்களின் மதிப்பு உயர்வதை உறுதிப்படுத்துவதற்காக, பண்ணைத் தொழிலை இயந்திர மயமாக்குதல் இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் முதலான தரமான இடுபொருட்கள் வழங்குதல், வேளாண்விளைபொருட்களைப் பதப்படுத்துவதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவற்றின் வாயிலாக வேளாண் தொழிலை நவீனப்படுத்த உதவுவதே இக்கழகம் ஏற்படுத்தப்பட்டதன் முதன்மையாக நோக்கமாகும். இக்கழகத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.400.00 இலட்சமாகும். தமிழ்நாடு அரசு, இந்திய அரசு ஆகியவற்றின் பங்குத் தொகை முறையே ரூ.235.00 இலட்சம், ரூ.165.00 இலட்சமும் ஆகும்.

2. இக்கழகத்தின் நோக்கங்களாவன :

(i) வேளாண் வளர்ச்சிக்கும் நவீன மயமாக்குதலுக்கும் உதவக் கூடிய, பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை உருவாக்கி நிறுவி, நடத்தித் தயாரிப்புப் பணியை மேற்கொள்ளுதல்.

(ii) வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை உருவாக்கி, நிறுவி, சொந்தமாக்கி நடத்துதல்.

(iii) மேற்சொன்ன வகைகளைச் சேர்ந்த தொழில்களின் விரைவான வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல்.

3. மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்காக தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம், பின்வரும் இரு பெரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(அ) மூன்று உற்பத்திப் பணிகள் (சூரியகாந்தி எண்ணெய், பூச்சிகொல்லி மருந்துகள், மீன்பிடி வலை)

(ஆ) இரு முக்கியமான பிரிவுகளில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (இரசாயன உரங்கள், வேளாண்மைக் கருவிகள்)

[1995 ஏப்ரல் 19

3.1 பூச்சிகொல்லி மருந்து ஆலை

இக்கழகம் 1976-ல் அம்பத்தூரில் அமைக்கப்பட்ட அதன் தொழிற்சாலையில், பூச்சி கொல்லி மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. இத் தொழிற்சாலைக்கான மூலதனச் செலவு ரூ.34.00 இலட்சமாகும். இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 25 டன் தூள் மருந்தும் 1000 லிட்டர் திரவ பூச்சி கொல்லி மருந்தும் தயாரிக்கும் திறன் கொண்டதாகும்.

இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள்:

(அ) தூள் மருந்துகள் : (i) பி.எச்.சி. 10% (ii) மாலத்தியான் 25% டபிள்யூ.டி.பி (iii) பி.எச்.சி. 50% டபிள்யூ.டி.பி.

(ஆ) திரவ வடிவிலானவை : (i) புட்டாகுளோர் 50% ஈசி (ii) பாஸ்போமிடன் 86% எஸ்.எல் (iii) எண்டோ சல்ஃபான் 35% ஈசி (iv) மாலதியான் 60% ஈசி (v) மோனாகுரோட்டோஃபாஸ் 36% எஸ்.எல் (vi) குய்னால்ஃபாஸ் 25% ஈசி. 1992-93ஆம் ஆண்டில் ரூ.388.90 இலட்சமாக இருந்த வியாபாரத் தொகை 1993-94ஆம் ஆண்டில் ரூ.256.76 இலட்சமாகும். 1994-95ஆம் ஆண்டில் 300 டன் தூள் பூச்சி கொல்லி மருந்துகளையும் 3,50,000 லிட்டர் திரவ பூச்சி கொல்லி மருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டது. 1995-96ஆம் ஆண்டில், 350 டன் தூள் பூச்சி கொல்லி மருந்தும் 4,00,000 லிட்டர் திரவ பூச்சி கொல்லி மருந்தும் தயாரித்து விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூரிலுள்ள பூச்சிக்கொல்லி மருந்து ஆலையை நவீனப்படுத்தி, புதுப்பித்து உற்பத்தித் திறனளவைப் பெருக்குவதற்காக அரசு, ரூ.25.00 இலட்சம் ஒதுக்கியது. ஏற்கெனவே, ரூ.17.28 இலட்சம் பயன்படுத்தப்பட்டு விட்டது. எஞ்சிய தொகை விரைவில் பயன்படுத்தப்படும். பூச்சிகொல்லி மருந்து ஆலை தொடங்கப்பட்டது முதற்கொண்டு அதன் செயல்பாடு பற்றிய விவரம் அட்டவணை 9-1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3.2 மீன்பிடி வலை தொழிற்சாலை :

மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான, இயந்திரத்தால் தயாரிக்கப்படும் வலைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 1976 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனளவு ஆண்டு ஒன்றுக்கு 60 டன்களாகும். இத்தொழிற்சாலை

1995 ஏப்ரல் 19]

தொடங்கப்பட்டது முதல் அதன் செயல்பாடு அட்டவணை 9-2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3.3 சூரியகாந்தி எண்ணெய் ஆலை :

இக்கழகம், 1978 ஆம் ஆண்டில் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த போச்சம்பள்ளியில் ஒருங்கிணைந்த எண்ணெய் ஆலை வளாகம் ஒன்றை நிறுவியது. இந்த ஆலைக்கான மூலதனச் செலவு ரூ.109.50 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு, 50 டன் சூரியகாந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிழியும் திறனும் 40 டன் புண்ணாக்கையும், 20 டன் எண்ணெயையும் பதப்படுத்தும் திறனும் கொண்டதாகும். இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய், "சனோலா" என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. இதன் துணை உற்பத்திப் பொருளான, சூரியகாந்தி விதை புண்ணாக்கு, கோழி மற்றும் கால்நடைத் தீவனம் தயாரிப்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 1993-94 ஆம் ஆண்டில் 3076 டன் சூரியகாந்தி எண்ணெய் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டில் இப்பிரிவின் வியாபாரத் தொகை ரூ.13.29 கோடியாகும். 1994-95ஆம் ஆண்டில், இதுவரை, அதாவது 1994 பிப்ரவரி வரை, 2007 டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில், 6500 டன் "சனோலா" எண்ணெய் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சூரியகாந்தி பயிரிடுவோருக்கு ஊக்கமளிப்பதற்காக, "தாய்" நிறுவனம், திட்டமிட்ட கொள்முதல் ஏற்பாடு ஒன்றை உருவாக்கவும், தமிழ்நாட்டில் சூரியகாந்தி சாகுபடியைப் பெருக்க நல்ல ஆதரவு விலை அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை தொடங்கப்பட்ட காலந்தொட்டு அதன் செயல்பாடு பற்றிய விவரம் அட்டவணை 9-3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3.4 வணிக நடவடிக்கைகள் :

(i) தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் பிரசித்தி பெற்ற உற்பத்தியாளர்களின் டிராக்டர்கள், எந்திரக்கலப்பைகள் ஆகியவற்றின் விற்பனைப் பொறுப்பை எடுத்துக்கொண்டுள்ளது. இந்த பண்ணை எந்திரங்கள், இவற்றிற்கு பொருத்தமான கேஜ்வீல், கல்டிவேட்டர், தரமான உற்றுழில் பாகங்கள், டயர்கள், டியூப்கள், பாட்டரிகள் ஆகியவற்றுடன் பல்வேறு வட்டார மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இக்கழகத்திற்கு, தமிழ்நாடு முழுவதிலும் 9

[*1995 ஏப்ரல் 19*

வட்டார மையங்களும், *18* விற்பனை நிலையங்களும் உள்ளன. *1994-95* ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய *533* டிராக்டர்களும், *333* பவர்டில்லர்களையும், மற்றும் ரூ.*281.60* இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களையும் விற்பனை செய்துள்ளது. *1995-96*ஆம் ஆண்டில், *82* டிராக்டர்களையும், *535* பவர்டில்லர்களையும், ரூ.*484* இலட்சம் மதிப்புள்ள உதிரிப் பாகங்களையும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் அட்டவணை 9-4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) உர விற்பனை :

இக்கழகம் முன்னணியிலுள்ள பெரும்பாலான உற்பத்தியாளர்களின் உரங்களை விற்பனை செய்கிறது. நடப்பு ஆண்டில் பிப்ரவரி *1995* வரையில் ரூ.*99.18* இலட்சம் மதிப்புள்ள *2875* டன் உரங்களை விநியோகித்துள்ளது. *1995-96* ஆம் ஆண்டு *1,02,200* டன் உரங்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இக்கழகத்தின் உர விற்பனைச் சாதனை பற்றிய விவரங்கள் அட்டவணை *9-5*ல் கொடுப்பட்டுள்ளது.

4. விற்பனை அளவு :

*1994-95*ல் பிப்ரவரி மாதம் முடிய இக்கழகத்தின் விற்பனை அளவு ரூ.*3100* இலட்சங்கள் ஆகும். *1995-96*ல் இக்கழகத்தின் விற்பனை ரூ.*9158.13* இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் விற்பனை விபரங்கள், இக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அட்டவணை *9-6*ல் கொடுக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 9.7

பூச்சிகொல்லி மருந்து ஆலையின் செயல்பாடு

	1976–77	1984–85	1990–91	1991–92	1992–93	1993–94	1994–95 (பிப்.95)	1995–96 (இலக்கு)
உற்பத்தி அளவு								
திரவ மருந்து-லிட்டரில்	46000	43201	271816	284519	162237	138446	10245	400000
துகள் மருந்து-மெ.டன்	1962	3947	2494	1814	1008	89	274	350
விற்பனை அளவு								
திரவ மருந்து--லிட்டரில்	36949	34507	261792	277385	179170	131166	9798	400000
துகள் மருந்து-மெ.டன்	1905	3791	2432	1870	1243	453	344	350
விற்பனை அளவு ரூபாய் லட்சத்தில்	25.64	52.02	389.01	502.79	388.90	256.65	81.63	571

அட்டவணை 9.8

மீன்பிடி வலைத் தொழிற்சாலையின் செயல்பாடு

(ரூபாய் இலட்சத்தில்)

	1976–77	1981-82	1985–86	1990–91	1991–92	1992–93	1993–94	1994–95 (பிப்.95)	1995–96 (இலக்கு)
உற்பத்தி அளவு மெ.டன்னில்	6.5	25	21	36	53	46	72	47	70
விற்ப்னையளவு மெ.டன்னில்	6.2	27.4	19	38	58	46	65	54	70
வியாபாரத் தொகை	6.97	27.02	19.69	38.87	68.92	68.00	90.25	81.29	129.86

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 9.9

சூரியகாந்தி எண்ணெய் ஆலை செயல்பாடுகள்

	1976–77	1987–88	1990–91	1991–92	1992–93	1993–94	1994–95 2/95 வரை	1995–96 (இலக்கு)
உற்பத்தி அளவு :								
பிழிவு மெ.டன்	..	5845	3086	4131	4918	6738	6579	..
சுத்திகரிப்பு மெ.டன்	..	2394	5327	3094	2564	3197	3042	..
கரைத்து எண்ணெய் எடுத்தல்	..	4196	..	3033	2951	3769	3484	6500
விற்பனை அளவு :								
எண்ணெய் மெ.டன்	853.00	2262	4788	4205	2566	3076	3007	6600
எண்ணெய் பொருட்கள் மெ.டன்	60.390	3775	2027	2429	2543	3479	3512	10200
வியாபாரத் தொகை „ ரூபாய் இலட்சத்தில்	70.38	714.20	1812.89	1824.70	1116.34	1306.00	1441.91	354096

அட்டவணை 9.10

டிராக்டர்கள், எந்திரக்கலப்பைகள் ஆகியவற்றின் விற்பனைச் சாதனை

	1969–70	1986–87	1990–91	1991–92	1992–93	1993–94	1994–95 2/95 வரை	1995–96 (இலக்கு)
அளவு (எண்ணிக்கை)	6.30	335	597	549	1958	1857	866	617
மதிப்பு (ரூ.இலட்சத்தில்)	103.80	145.29	389.18	381.75	1157.35	1426.08	956.19	543.03

அட்டவணை 9.11

உரவிற்பனை

	1984–85	1990–91	1991–92	1992–93	1993–94	1994–95 2/95 வரை	1995–96 (இலக்கு)
அளவு (மெ.டன்)	54939	57677	28633	118331	24436	2875	102200
வியாபாரத் தொகை (ரூ.இலட்சத்தில்)	1176.04	1139.14	698.39	5252.25	1150.69	99.18	3892.72

1995 ஏப்ரல் 19]

அட்டவணை 9.12.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மொத்த விற்பனை அளவின் விபரங்கள்

வரிசை எண்.	வருடம்.	விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	1966–67	0.47
2.	1969–70	75.08
3.	1970–71	148.96
4.	1971–72	194.00
5.	1977–78	289.68
6.	1978–79	455.03
7.	1979–80	518.87
8.	1980–81	706.43
9.	1981–82	1157.65
10.	1985–86	2448.21
11.	1988–89	1671.47
12.	1989–90	2430.44
13.	1990–91	4319.84
14.	1991–92	3911.38
15.	1992–93	7996.95
16.	1993–94	4639.85
17.	1994–95	(பிப்,'95 முடிய)3100.00
18.	1995–96	9158.13 (இலக்கு)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. உணவுப்பொருள் செய்முறைத் தொழில்

இந்த அரசு, உழவர்களின் வருமானத்தை உயர்த்தவும், வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கவும், ஊரகப் பகுதிகளின் உற்பத்தி மற்றும் பொருளாதாரத்தைப் பல்திறப்படுத்தவும், ஊரகப் பகுதிகளை விரைவாக தொழில்மயமாக்கவும் சீரிய பெரும் முயற்சியாக, உணவுப் பொருள் பதனத்தொழில், ஏனைய வேளாண் அடிப்படைத் தொழில்கள் ஆகியவற்றுக்கு மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் அளிப்பதோடு மட்டுமல்லாது, இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் மேற்கொண்டு அதிக முதலீடுகளைச் செய்வதற்கு உதவும் வகையில்,

உகந்த பாதுகாப்பான பயனளிக்கும் தொழில் மேம்பாட்டுச் சூழ்நிலை ஒன்றை உருவாக்கவும் முனைந்துள்ளது.

எனவே இந்த அரசு தொழில்நுட்ப ஆலோசனை, சிறப்புவகை சிப்பமிடல் வழிகளுடன் பழங்கள், காய்கறிகள், பால்படுபொருட்கள், கோழி, மீன்வகைகள், எண்ணெய்வித்துக்கள், மால்ட் போன்றவற்றின் பதனமுறை விற்பனை முறைகளை ஒருங்கிணைக்கவும் ஓரினப்படுத்தவும் முயற்சி மேற்கொண்டுள்ளது. இப்பணியைக் கவனிப்பதற்காக, தலைமைச் செயலகத்திலுள்ள வேளாண்மைத் துறை, வெளித் தொடர்பு துறையாகவும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் வெளித்தொடர்பு முகவர் அமைப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறை, மேற்கொண்ட சீரிய முயற்சிகளினால், உணவுத்தானியங்கள், பழங்கள், காய்கறிகள், இறைச்சிக்கோழி முதலியவற்றிற்கு ரூ.237.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மிட்டாய்-இனிப்பு வகை, தானியவகை பண்டங்கள், சோடா கலர் பானங்கள், காபி, தேயிலை, மீன், இறைச்சி, கோழி பழங்கள்/காய்கறிகள் முதலியவற்றுக்கும் கூடுதலாக முதலிடு செய்யக்கருதப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கருதியுள்ளது.

(1) காளான் பயிரிடல்

(2) திராட்சை, மாம்பழம், வாழைப்பழம் போன்றவற்றுக்கு முறையே மதுரை, தருமபுரி, திருச்சி ஆகிய இடங்களில் சேமிப்பு வசதி, போக்குவரத்து வசதி, விநியோக வசதி, ஏற்றுமதி வசதி ஆகிய அடிப்படை வசதிகள்.

இதைப்போன்று, காய்கறிகள், நறுமணப் பொருட்கள் போன்றவற்றிற்கும் மலர்ச்செடி, தோட்ட வளர்ப்பு போன்றவற்றிற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

மத்திய அரசின் உணவுப் பொருட்கள் பதனப்படுத்தும் அமைச்சகம், மைய அமைப்பாக விளங்கும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்திற்கு சில அடிப்படை வசதிகள் செய்து தரும் பொருட்டு, உதவி மானியத் தொகையாக ரூ.3.50 இலட்சம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் உணவுப் பொருட்கள் பதனப்படுத்தும் தொழில் அமைச்சகத்திடமிருந்து உதவி மான்யமாகவும்/கடனாகவும் பெருமளவு தொகையை இக்கழகம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(90-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1995-96 ஆம் ஆண்டிற்கான பால் வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்

கோரிக்கை எண் 10

பால்வளத்துறை

முன்னுரை:

1958-ஆம் ஆண்டு பால்வளத்துறை துவங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலாக நவீன பால்பண்ணை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குகள் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமாகவும், மத்தியில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல் மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றன.

குறிக்கோள்கள்:

பால் வளத்துறையின் முக்கியமான குறிக்கோள்கள்:

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குப்படுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும், பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

நடவடிக்கைகள்:

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு, பின்வரும் பெரிய அளவிலான திட்டங்களை பால்வளத் துறை செயல்படுத்தி வருகிறது.

(அ) கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும், அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அதிக பால் அளிக்கவும், பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல், சரிவிகித கால்நடை தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி முதலியன இத்துறையினால் அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும், பால் விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள்ளீடு வசதிகளான பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தும் ஆலைகள் அமைத்தல் மற்றும் நவீன பால் விற்பனை முறை மேற்கொள்ளுதல் ஆகியவை நுகர்வோர் நலனுக்காக துறையினால் செய்யப்படுகின்றது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தை 17 மாவட்டங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் செயல்படுத்துகிறது. எஞ்சியுள்ள கீழ்கண்ட மாவட்டங்களில் பால்வளத் துறையின் மூலம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து பால் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

கன்னியாகுமரி
திருநெல்வேலி - கட்டபொம்மன்
சிதம்பரனார்
இராமநாதபுரம்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும்
காமராஜர்

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத்

1995 ஏப்ரல் 19]

திட்டம், ஆதி திராவிடர் நலத்திட்டம் முதலிய சிறப்பு திட்டங்களை சம்பந்தப்பட்ட நிதி நிறுவன உதவியுடன் பால்வளத்துறை செயல்படுத்தி வருகின்றது.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 பால்பத துணைப் பதிவாளர்கள் உள்ளனர். கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், செயற்கைமுறை கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால்நடை மருந்தகங்களும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-Operation Flood) காமராஜர், இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், கன்னியாகுமரி, திருநெல்வேலி - கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

பால்வளத்துறையின் செயல்பாடுகளாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், இவைகளை மேற்பார்வை செய்தல், பால் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள் 1988னை நடைமுறைப்படுத்துதல் ஆகியனவாகும்.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து, அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில், பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையில் இச்சங்கங்களின் செயலாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும், தங்கள் சொந்த செலவில் முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளது. இக்கிராம சங்கங்களில், கொள்முதல் செய்யப்படும் பாலில், உள்ளூர்

உபயோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக் கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

பால்வளத் துறையின் முன்னேற்றம்

அரசு திட்ட நிதி உதவியுடனும், பிற சிறப்புத் திட்ட ஒதுக்கீட்டுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பால்வளத் துறை அடைந்துள்ளது.

வ. எண். 1.	இனம் 2.	31.3.94 வரை செயலாக்கம் 3.	31.3.95 வரை செயலாக்கம் 4.
1.	முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை (நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பால் வழங்கு கூட்டுறவுகள் உள்ளடங்கியது)	10187	10250
2.	மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை	17	17
3.	உறுப்பினர்களின் எண்ணிக்கை	24.02 லட்சம்	24.46 லட்சம்
4.	பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்)	16.28 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு	16.60 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு
5.	பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்)	14.33 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு	14.42 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு
6.	சென்னை நகரத்தில் பால் விற்பனை	7.60 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு	8.20 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு

1.	2.	3.	4.
7.	பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை	19	19
	திறன்	19.64 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு	19.64 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு
8.	குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை	41	41
	திறன்	9.07 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு	9.07 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு
9.	தானியங்கி பால் நிலையம்	166	172

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி:

1993-94-ல் புதியதாக 451 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1994-95-ல் 487 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1994-95-ம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 288 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. (64 அனைத்து பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 224 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்).

பால் கூட்டுறவு சங்கங்களின் புள்ளி விவரங்கள்:

தமிழகத்தில் செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்கள் / ஒன்றியங்கள்

அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்	10182
ஆ) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள்	8
இ) கூட்டுறவு பால் பண்ணைகள்	2
ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்	57
உ) கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம்	1

ஊ) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் 17

எ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (மாநில அளவு இணையம்) 1

பால் வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள்

தொடர் திட்டப்பணிகள்:

அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்:

பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால் பண்ணைக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்தப்படுவதற்கென ரூ.7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்திற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம் கடனாக வழங்கும். மீதம் உள்ள 30 சதவிகிதந்தை மாநில அரசு மானியமாகவும் பங்கிட்டு தொகையாகவும் வழங்கும். இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.
2. மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளைக் கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.
3. 651 கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.
4. மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

5. தற்போதுள்ள திருநெல்வேலி பால் பண்ணையின் கொள் திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

6. நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல்.

இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ. 7.05 கோடிகளில் கீழ்க்காணும் கூடுதல் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளன.

1) சங்கரன்கோயில் குளிரூட்டும் நிலைய கொள்திறனை நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டருக்கு விரிவுபடுத்துதல்.

2) சாத்தான்குளத்தில் கூடுதலாக ஒரு குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

3) சாத்தான்குளம் குளிரூட்டும் நிலையத்திற்கு பால் பரிசோதனைக் கருவி, தொழிலக, நீரியல் கழிவுகள் அகற்றும் இயந்திர நிலையம், நிலம், கட்டிடங்கள் முதலியன அளித்தல்.

4) பால் பண்ணையினை விரிவுபடுத்தும் பொருட்டு, திட்டக் காலத்தை 31.12.95 வரை நீட்டித்தல்.

பால் குளிரூட்டும் நிலையங்களின் விவரங்கள்:

1. சங்கரன்கோயில் குளிரூட்டும் நிலையம்

நாளொன்றுக்கு 30,000 லிட்டர் கொள்திறனுள்ள ஒரு குளிரூட்டும் நிலையம் சங்கரன்கோயிலில் 15.3.92 முதல் செயல்பட்டு வருகின்றது. இந்தக் குளிரூட்டும் நிலைய கொள்திறனை நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டருக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கோயில்பட்டி குளிரூட்டும் நிலையம்

நாளொன்றுக்கு 10,000 லிட்டர் கொள்திறனுள்ள ஒரு குளிரூட்டும் நிலையம் கோயில்பட்டியில் துவக்கப்பட்டு, 27.2.91 முதல் இயங்கி வருகின்றது.

3. சாத்தான்குளம் குளிரூட்டும் நிலையம்

நாளொன்றுக்கு 10,000 லிட்டர் கொள்திறனுள்ள, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ரூ.30 இலட்சம் செலவில் சாத்தான் குளத்தில் நிறுவுவதற்கான கருத்துரு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இது 20,000 லிட்டர் கொள்திறனுக்கு பிற்காலத்தில் விரிவுபடுத்தப்படக் கூடியதொன்றாகும்.

மேற்காணும் திருநெல்வேலி திட்டத்தை 31.12.95-க்குள் நிறைவேற்றி முடிக்கும் பொருட்டு, 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.193.125 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.640 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஆ. காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் காமராஜர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பால்பண்ணை அமைப்பதற்கு ரூ.465.50 லட்சம் திட்ட மதிப்புடன் திட்டமொன்று தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதமான ரூ.325.85 லட்சம் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் கடனாகவும், 30 சதவிகிதமான ரூ.139.65 லட்சம் அரசு மானியமாகவும், பங்குத் தொகையாகவும் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பங்குத் தொகையான ரூ.34.91 லட்சம் அரசு விடுவித்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ரூ.81.46 லட்சம் நிதியினை விடுவித்துள்ளது. ஆக மொத்தம் இத்திட்டத்திற்கு ரூ.116.37 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 1994-95-ம் ஆண்டில் அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் கடன் தொகையும் மாநில அரசின் பங்குத் தொகையும் சேர்த்து ரூ.172.28 இலட்சம் தற்போது விடுவித்துள்ளது. இத்திட்டத்தினை 1992 முதல் 1997 வரையிலான ஐந்தாண்டுகளுக்குள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1995-96 ஆம் ஆண்டில் மாதவரம் பால் பண்ணைக் குடியிருப்புகளில் ரூ.25 லட்சம் செலவில் கீழ்க்காணும்

பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்)
1. மாதவரம் பால் பண்ணையிலுள்ள குடியிருப்புகளில் ஒழுகும் கூரைகளைப் பழுது பார்த்தல்	14.00
2. குடிநீர் விநியோகம் செய்ய பழுதடைந்த முலாம் பூசப்பட்ட இரும்பு குழாய்களுக்குப் பதிலாக புதிய முலாம் பூசப்பட்ட இரும்பு குழாய்களை பொருத்துதல்	4.00
3. மாதவரம் பால் பண்ணையில் மின்சார வேலைகள் சிறப்புப் பழுது பார்த்தல்	7.00
மொத்தம்	25.00

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கும் / மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கும் உள்ளமைப்பு வசதிகள் (infrastructure facilities) செய்து கொள்ளும் பொருட்டு ரூ.38.15 இலட்சம் 1994-95 ஆம் ஆண்டுக்கு ஒப்பளிக்கப்பட்டது.

கறவை மாடுகள் மான்யத் திட்டம்

ஆதிதிராவிட பழங்குடியினருக்காக ஆதிதிராவிடர் நலம் ஆதி திராவிடர் கிறிஸ்துவர்கள் மற்றும் சிறப்பு மத்திய உதவியுடன் செயல்படும் திட்டத்தின் கீழ் ஒரு கறவை மாட்டின் விலை ரூ.3,200/-லிருந்து ரூ.4,500/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போது ஒரு கறவை மாடு வாங்க வழங்கப்பட்ட மான்யத் தொகை ரூ.1,600/-லிருந்து ரூ.2,250/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அரசு உதவியுடனும், தாட்கோ நிறுவனம் அளிக்கும் சலுகைகளின் கீழும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்

ஒன்றியங்கள் ஒருங்கிணைப்பு முகவரைப்பாக (Nodal Agency) இருந்து செயல்படுத்தி வருகின்றன.

1994-95 நிதியாண்டில் இத்திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

திட்டத்தின் பெயர்	இலக்கு எண்ணிக்கை (கறவை மாடுகள்)	நிதி ஒதுக்கீடு
1. ஆதி திராவிடர் நலத்திட்டம்	2222	50.00 லட்சம்
2. மதம் மாறிய ஆதி திராவிட கிறிஸ்துவர்கள்	66	1.50 லட்சம்
3. தாட்கோ	4577	104.00 லட்சம்

பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தனி அலுவலர்கள் நியமித்தல்:

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) சட்டம் 1991 (தமிழ்நாடு சட்டம் 30/1991)ன் கீழ் 5991 ஆதார பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் பொதுநலன் கருதி கலைக்கப்பட்டு தனி அலுவலர்கள் 28.7.91 அன்று நியமிக்கப்பட்டு அவர்களின் பதவிக்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வருகிறது. அரசு, சமீபத்தில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டம் 1995 (தமிழ்நாடு சட்டம் 2/1995)ன் கீழ் ஆதார பால் கூட்டுறவு சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தினை 28.1.1995 முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்துள்ளது.

1995 ஏப்ரல் 19]

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் பால் பொருட்களை விநியோகம் செய்தல் ஆகிய முழு வணிக சம்மந்தமான நடவடிக்கைகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் செய்து வருகிறது. பால் பெருக்குத் திட்டங்களின் கீழ், தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் இவ்விணையம் கீழ்க்காணும் 17 மாவட்டங்களில் பால் உற்பத்தி நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகின்றது.

சென்னை
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.
தென்னாற்காடு வள்ளலார்
விழுப்புரம் இராமசாமி படையாச்சியார்
வட ஆற்காடு அம்பேத்கார்
திருவண்ணாமலை சம்புவராயர்
சேலம்
தர்மபுரி
கோயம்புத்தூர்
நீலகிரி
பெரியார்
மதுரை
திண்டுக்கல் அண்ணா
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
நாகப்பட்டினம் காயிதே மில்லத்
புதுக்கோட்டை

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் தமது ஒன்றியங்களுக்குத் தேவையான உறைவிந்துவை தயாரிப்பதற்குத் தேவையான பொலிகாளை பண்ணைகள், உறைவிந்து நிலையங்கள் போன்ற பொதுவான வசதிகளை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது. தற்சமயம், இவ்விணையத்தின் கீழ் அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய மூன்று இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் கொள் திறனுடன் அம்பத்தூரிலும், நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் கொள்திறனுடன் மாதவரத்திலும், பால் பொருட்களான கோவா, ஐஸ்கிரிம், யோகர்ட் போன்றவை தயாரிக்க 12,000 லிட்டர் கொள்திறனுடன் அயனாவரத்திலும் இப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதீன் பைகளின் மூலமாகவும், தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால் பண்ணையில் பால் துணைப் பொருட்களாகிய ஐஸ்கிரீம், யோகர்ட் மற்றும் கோவா ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்து வழி நடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக, திட்டமிடல், பண்ணைகள் நிறுவுதல், பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல் ஆகிய பணிகளையும் இயந்திரங்கள் சாதனங்களை நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் (turnkey basis) அடிப்படையில் இணையம் மேற்கொள்ளுகிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும், பால் பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக் கட்டி போன்ற பால் பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால் விவரம்

வ. எண்	மாவட்டம்	1992-93	1993-94	1994-95
		(நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் லிட்டர்களில்)		
(1)	(2)	(3)	(4)	(5)
1.	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.	52	68	72
2.	தென்னாற்காடு - வள்ளலார், விழுப்புரம் - இராமசாமி படையாச்சியார்	74	96	99
3.	வடஆற்காடு - அம்பேத்கார், திருவண்ணாமலை - சம்புவராயர்	236	306	320
4.	தர்மபுரி	81	90	95
5.	சேலம்	209	260	257
6.	பெரியார்	130	138	123
7.	கோயம்புத்தூர்	86	107	108
8.	நீலகிரி	25	24	24
9.	திருச்சிராப்பள்ளி	78	104	115
10.	தஞ்சாவூர்	10	12	12
11.	புதுக்கோட்டை	1	1	3
12.	திண்டுக்கல் அண்ணா	44	44	34
13.	மதுரை	68	87	84
14.	இராமநாதபுரம் - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	13	14	14
15.	காமராஜர்	11	12	10
16.	திருநெல்வேலி - கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார்	55	61	62
17.	கன்னியாகுமரி	10	9	10
	மொத்தம்	1183	1433	1442

அ. பால் கொள்முதல் விலை (உற்பத்தியாளர்களுக்கான விலை)

பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததால், பால் கொள்முதல் விலை பால் உற்பத்தியாளர்களுக்கு அவ்வப்போது கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

காலம் (1)	எருமைப் பால் கிலோ (கொழுப்பு) (2)	ஒரு லிட்டரின் விலை (3)	பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள்) ஒன்றுக்கு (4)	ஒரு லிட்டரின் விலை (5)
	ரூ.பை	ரூ.பை	ரூ.பை	ரூ.பை.
1.11.1987 முதல் 31.3.1988 வரை	48.00	3.36	23.00	2.99
1.4.1988 முதல் 2.11.1988 வரை	50.00	3.50	24.00	3.12
3.11.1988 முதல் 30.11.1990 வரை	58.00	4.06	28.00	3.64
1.12.1990 முதல் 14.5.1991 வரை	64.25	4.50	30.75	4.00
15.5.1991 முதல் 22.2.1992 வரை	67.15	4.70	32.30	4.20
23.2.1992 முதல் 30.4.1992 வரை	90.00	6.30	32.30	4.20
1.5.1992 முதல் 30.4.1993 வரை	90.00	6.30	36.15	4.70
1.5.1993 முதல் இன்று வரை	96.00	6.72	42.00	5.46

1995 ஏப்ரல் 19]

ஆ. விற்பனை விலை

அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும் பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலிதீன் பை தயாரிப்பதற்கு தேவையான பாலிதீன் பிலிம் விலை அதிகரித்ததாலும், பணியாளர்களின் சம்பள விகிதம் அதிகரித்ததாலும் விற்பனை விலை கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

	1.11.1987 முதல்	16.11.1988 முதல்		25.1.1992 முதல்		1.7.93 முதல்
				பாலிதீன் பைகளில்	தானியங்கி நிலையங்களில்	பாலிதீன் பைகளில்
	ரூ.பை	ரூ.பை	ரூ.பை	ரூ.பை.	ரூ.பை	ரூ.பை
பால் அட்டை	4.50	5.00	5.90	6.00	7.00	7.50
ரொக்கத்திற்கு	4.60	5.20	6.10	6.00	7.50	7.50
		(தரம் உயர் பால்)	(நிலை படுத்திய பால்)	(தரம் உயர் பால்)	(நிலை படுத்திய பால்)	

கால்நடைத் தீவன ஆலை

கால்நடைத் தீவன உற்பத்தி ஆலைகள் கீழ்க்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.ஒன்றியம் - மாதவரம்
2. பெரியார் ஒன்றியம் - ஈரோடு
3. மதுரை ஒன்றியம் - கப்பலூர்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும்.

இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் தீவனங்கள் 'பெல்லட்' (PELLET) மற்றும் 'மேஷ்' (MASH) வகைகள் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. மேலும் இத்தீவனம்

கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும், மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மேற்சொன்ன கால்நடைத் தீவன ஆலைகளில் 1994-95 ஆம் ஆண்டில் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் வருமாறு:

இருப்பிடம் (1)	1994 - 95 உற்பத்தி (டன்) (2)	விற்பனை (டன்) (3)
சென்னை - மாதவரம்	7186	7092
ஈரோடு	16837	16718
கப்பலூர்	15702	12936
மொத்தம்	39725	36746

பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை

1994-95 ஆம் ஆண்டில் சென்னையில் நாளொன்றுக்கு 8.20 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 1993-94 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு சராசரியாக 7.60 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. 500 பால் விற்பனை நிலையங்கள், 40 பாலகங்கள், 172 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 250 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி.டேங்க்) மூலமாக முறையான விற்பனையும் வாடிக்கை நிறுவனங்களுக்கு மொத்த விற்பனையாகவும், தனி வாடிக்கையாளர்களுக்கு 1/2 லிட்டர், 1 லிட்டர் பாலிதீன் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பால் விநியோகம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு 32 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பால் பொருட்கள் விற்பனை விபரம் பின்வருமாறு:

இனங்கள் (1)	1992-93 (2)	1993-94 (3)	1994-95 (4)
நாளொன்றுக்கு சராசரி பால் (லட்சம் லிட்டர்கள்)	7.35	7.60	8.20
வெண்ணெய் (டன்னில்)	1088	1175	1228
நெய் (டன்னில்)	248	269	471
பால்பொடி (டன்னில்)	6	77	515

இணையத்தின் மொத்த விற்பனை 1993-94ல் ரூ.204.84 கோடியும், 1994-95-ல் ரூ.234.75 கோடியுமாகும்.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டம்

1972-ல் பால் பெருக்குத் திட்டம் துவக்கப்பட்டு, முதலாவது பால் பெருக்குத் திட்டம் 9 மாவட்டங்களில் ரூ.15.48 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்டது. முதல் பால் பெருக்குத் திட்டத்தினை தொடர்ந்து இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் 12 மாவட்டங்களில் ரூ.35.66 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்டது.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் 17 மாவட்டங்களில் தேசிய பால்வள வாரியம் மூலமாக உலக வங்கி நிதி உதவி பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1995-ஆம் வருடத்துடன் முடிவடைகிறது. ரூ.88.23 கோடி செலவில் செயல்படும் இத்திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அவற்றில் பல திட்ட வேலைகள் இவ்வருடத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய விவசாய

உறுப்பினர்கள் சேர ஊக்குவித்தல், கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குதல், பால் பதனிடும் மற்றும் பால் குளிரூட்டும் திறனை அதிகப்படுத்துதல், மாவட்ட அளவில் விற்பனை மற்றும் சென்னை நகரில் விற்பனை முன்னேற்றம் அடைய செய்தல் போன்றவை இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தில் முடிவடைந்த திட்ட விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்.	மாவட்டம்	இடம் / திட்ட விபரம்	கொள்ளளவு ('000)	செலவின் மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)
1.	2.	3.	4.	5.
1.	தென்னாற்காடு வள்ளலார்	விழுப்புரம் பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு... குளிரூட்டும் திறன் கொண்டதாகவும் மற்றும் நாளொன்றுக்கு... திறன் கொண்ட பால் பதப்படுத்தும்பால் பண்ணையாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.	100 50	289.97
2.	வட ஆற்காடு அம்பேத்கர்	திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம்	30 - 100	99.94
		ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையம்	30 - 50	36.26
		அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம்	30 - 60	28.44
3	தர்மபுரி	கிருஷ்ணகிரி பால் பண்ணை	100-150	37.46
		தர்மபுரி பால் குளிரூட்டும் நிலையம்	40-50	24.83
4.	சேலம்	சேலம் பால் பண்ணை	200-300	206.25
		ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையம்	50-80	64.29
5.	மதுரை	மதுரை பால் பண்ணை	150-200	104.44
6.	பெரியார்	ஈரோடு	30 மெட்ரிக் டன் பால் பவுடர் ஆலை	807.82

கொள்ளளவு ('000) - (ஆயிரம் லிட்டர்களில்)

சோளிங்கநல்லூர் புதிய பால்பண்ணை

மகாபலிபுரம் சாலையில் சோளிங்கநல்லூர் கிராமத்தில் 32.599 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பால்பண்ணை அமைந்துள்ளது. இப்பால் பண்ணையின் திட்டமதிப்பீடு ரூ.24.80 கோடியாகும்.

இப்புதிய பால்பண்ணை ஒரு நவீன, சிறப்புமிக்க பால் பண்ணையாக அமையும். இந்த பால்பண்ணை தென் சென்னையிலுள்ள மக்களின் தேவையை பூர்த்தி செய்யும்.

இந்த பால்பண்ணை நாளொன்றுக்கு 4.0 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டதாகும். மேற்படி பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 8.0 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யக்கூடியதாக இருக்கும். இந்த பால்பண்ணையில், பால் வாங்கப்படுவதிலிருந்து, பதப்படுத்துவது, பாலிதீன் பைகளில் அடைப்பது, பாலை வெளியே அனுப்புவது மற்றும் எல்லா கருவிகள், உபகரணங்களை அந்தந்த இடத்திலேயே சுத்தம் செய்தல் ஆகியவை தானாகவே செயல்படுத்துவதாக இருக்கும். மேற்கூறிய எல்லா நடவடிக்கைகளையும் கணிப்பொறிமூலம் செயல்படுத்த முடியும்.

பால் நுகர்வோர்களுக்கு உரிய காலத்தில் பால் செல்வதை உறுதி செய்வதற்கு இந்தியாவிலேயே முதன்முறையாக பாலிதீன் பைகளிலுள்ள பாலை பிளாஸ்டிக் தொட்டிகளில் நிரப்புவதும், பால் பாக்கெட்டுகள் எண்ணுவதும் மற்றும் நிரப்புவதும், பால் பாக்கெட்டுகளை நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் தொட்டிகளை அடுக்குவதும் ஆகிய அனைத்து வேலைகளும் மேற்படி பண்ணையில் தானாகவே (automatic) நடைபெறும்.

இந்த பால் பண்ணையில் அதிநவீனமான 'பிளட்டட்' (Flooded) என்ற முறை, பால் குளிர்விக்க உபயோகப் படுத்தப்படுகிறது. இந்த அம்மோனியா குளிர்விக்கும் முறையில் மின்சாரத்திற்கு ஆகும் செலவு குறைவாக இருக்கும்.

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அந்தந்த இடத்திலேயே சுத்தம் செய்யும்போது, சுத்தப்படுத்துவதற்கு

உபயோகப்படுத்தப்படும் ரசாயன பொருட்களின் திறன் தானாகவே சரிபார்க்கப்படுகிறது. இது துல்லியமாக சுத்தப்படுத்துவதை உறுதி செய்வதால் பால் அதிக நேரம் கெடாமல் இருக்க வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் சுத்தம் செய்வதற்கு ஆகும் செலவும் குறைவாக இருக்கும்.

பால் பண்ணையிலுள்ள அனைத்து நடவடிக்கைகளான திட்டமிடுதல், உற்பத்தி, பராமரிப்பு மற்றும் செலவு பற்றிய விவரங்கள் கணிப்பொறி மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இந்த பால்பண்ணை இந்தியாவிலேயே முதன் முறையாக கூட்டுறவுத் துறையில் இயங்கும் பால் பண்ணைகளில் தானாகவே இயங்கும் திறன் கொண்டதாகும்.

மூன்றாம் பால்பெருக்குத் திட்டத்தில் கீழ்கண்ட திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் இவ்வாண்டு (1995) இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வ. எண்.	மாவட்டம் / இணையம்	இடம் / திட்ட விபரம்	கொள்ளளவு ('000)	செலவின் மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)
1.	2.	3.	4.	5.
1.	இணையம் / சென்னை	அம்பத்தூர் பால் பண்ணை	300-400	425.07
2.	செங்கை எம்.ஜி.ஆர்	சானூர் பால் குளிரூட்டும் நிலையம் (புதியது)	30	53.25
3.	வட ஆற்காடு	கொடக்கல் பால் குளிரூட்டும் நிலையம் (புதியது)	30	72.69
4.	சேலம்	நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம்	30-50	134.27
5.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் பால்பண்ணை	100-200	158.73
		சண்முகாபுரம் பால் குளிரூட்டும் நிலையம்	10-50	56.52
6.	மதுரை	தேனி பால் குளிரூட்டும் நிலையம்	10-50	107.00
7.	பெரியார்	சங்கராண்டாம் பாளையம் பால் குளிரூட்டும் நிலையம்	30-50	55.40

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8.	திருச்சி	திருச்சி பால் பண்ணை (புதியது)	150	762.11
		பெரம்பலூர் பால் குளிரூட்டும் நிலையம்	8-50	119.05
		கரூர் பால் குளிரூட்டும் நிலையம்	8-30	83.88

கொள்ளளவு : ('000) - (ஆயிரம் லிட்டர்களில்)

பால் பெருக்குத்திட்டம் செயல்படும் மாவட்டங்களில் தற்போது நாளொன்றுக்கு 18.38 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட பால் பதனிடும் பண்ணைகளின் கொள்திறன் நாளொன்றுக்கு 26.87 இலட்சமாகவும், தற்போது நாளொன்றுக்கு 8.04 இலட்சம் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையங்களின் திறன் நாளொன்றுக்கு 11.06 இலட்சம் குளிரூட்டும் திறனாகவும் உயர்த்தப்படவுள்ளது.

தற்போது சென்னையில் இயங்கி வரும் 172 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இத்திட்ட முடிவில் 250 தானியங்கி பால் வழங்கு நிலையங்களாக உயர்த்தப்படவுள்ளது.

சென்னையில் சோளிங்கநல்லூரில் கட்டப்பட்டு வரும் மூன்றாவது பால்பண்ணை செயல்படும்போதும் நாளொன்றுக்கு 3.00 இலட்சம் லிட்டரிலிருந்து 4.00 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டு, அம்பத்தூரில் உள்ள பால்பண்ணை செயல்படும்போதும், சென்னையில் பால் விற்பனை நாளொன்றுக்கு 9.30 இலட்சம் லிட்டராக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட மகளிருக்கு பாலகங்களை ஒதுக்கித் தரல்:

மாவட்ட கூட்டுறவு பாலுற்பத்தியாளர் ஒன்றியங்களும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமும் நடத்தும் விற்பனைப் பாலகங்களில் 20% இனி ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதில் அரசு ஆர்வம் கொண்டிருப்பதால் இந்த 20% ஒதுக்கீடும்

ஆதிதிராவிடப் பெண்களுக்கே தரப்படவேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமும் இவ்வாணையை அமுல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

உள்ளீட்டுப் பணி:

பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்:

1994-95 ஆம் ஆண்டு மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு 14.42 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் மேற்படி காலத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 14.33 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1994-95 ஆம் ஆண்டு 487 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் துவக்கப்பட்டு 14.44 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவ மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகள் செய்வதற்குத் தேவையான உறைவிந்து குச்சிகள், கால்நடைத் தீவனங்கள், பசும்புல் உற்பத்திக்கான மானியம், வெக்கை மற்றும் கோமாரி நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுவது போன்ற வசதிகள் அளிக்கப்பட்டன. கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்பட்டது. 1994-95 ஆம் ஆண்டு 8,82,631 கறவை இனங்களுக்கு உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டது.

1994-95 ஆம் ஆண்டு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், நல்ல தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் 8,05,965 கால் நடைகளுக்கு சிகிச்சை அளித்தன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர நேர அழைப்பிற்காக அவசரகால சிகிச்சை வழித்தடங்கள் செயல்படுத்தப்பட்டன. 1994-95 ஆம் ஆண்டு 90 நடமாடும் கால்நடை சிகிச்சை தடங்களும், 38 அவசரகால சிகிச்சை தடங்களும் செயல்படுத்தப்பட்டன.

1995 ஏப்ரல் 19]

உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி:

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக 1994-95 ஆம் ஆண்டு 1,10,079 அதிக வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உறைவிந்து குச்சிகள் உதகமண்டலத்திலுள்ள கருவூல மைய பொலிகாளை பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை நிலையத்தில் அமைந்துள்ள உறைவிந்து நிலையத்திலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1994-95 ஆம் ஆண்டு உதகமண்டலத்தில் உள்ள கருவூல மைய பொலிகாளை பண்ணையில் 8.19 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஈரோட்டில் உள்ள எருமை இன உறைவிந்து நிலையத்தில் 1.62 இலட்சம் முர்ரா எருமை இன உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

வம்சா வழி மூலம் பொலிகாளைகள் தேர்வு திட்டம்

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான பொலிகாளைகளை தேர்ந்தெடுப்பதற்காக 1986 ஆம் ஆண்டு வம்சா வழி மூலம் பொலிகாளைகளை தேர்வு செய்யும் திட்டம் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில் தாய் பசுக்கள் மற்றும் தாய் எருமைகள் கொடுக்கும் பாலின் அளவு பதிவு செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் சோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ள அனைத்து பொலிகாளைகள் மூலம் பிறந்த கிடாரிக்கன்றுகள் பசுவாகி கன்று ஈன்றவுடன், அவைகள் கொடுக்கும் பாலின் அளவு பதிவு செய்யப்படுகிறது. எந்த காளைக்கும் பிறந்த கிடாரிக் கன்றுகள் பசுவாகி, மற்ற காளைக்கு பிறந்த கிடாரிக் கன்றுகள் பசுவாகி கொடுக்கும் பாலைவிட அதிகமாக கொடுக்கிறதோ அந்த காளை சிறந்த காளையென தேர்வு செய்யப்படும். ஆரம்பத்தில் எருமைகளுக்காக இத்திட்டம் தென்னாற்காடு வள்ளலார், சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 1990 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல் - அண்ணா, தஞ்சாவூர் மற்றும் வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டங்களுக்கு கலப்பு இன கால்நடைகளுக்காக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையின் செயலாக்க பணிகள்:

மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு தேவைப்படும் கால்நடை மருத்துவ மற்றும் செயற்கைமுறை இனவிருத்தி வசதிகள் அந்தந்த மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செய்து வருகின்றன. இதுதவிர கால்நடை பராமரிப்புத்துறையும் மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகளை செய்து வருகின்றது. 1994-95ஆம் ஆண்டில் 751 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகள் அளித்துள்ளது.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, பால் கூட்டுறவுகளின் தணிக்கை வாரியம் நீக்கப்பட்டபின், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை தேசிய பால் வள வாரியம் (முந்தைய தேசிய பால்பண்ணைக் கழகம்) அளித்த ஆலோசனையின் பேரில் 1.10.1987 முதல் இயங்கி வருகிறது. இத்துறையானது, பால்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலத்தின் அனைத்து ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தலைமை இணையமான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகிறது.

2. தணிக்கை முன்னேற்றம்

அ. பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை:

1. 1993-94 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை:

திட்டமிட்ட மொத்த 9918 பிரதம பால் கூட்டுறவு சங்கங்களில் 31.3.95 முடிய 9258 சங்கங்களின் இறுதி தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 660 சங்கங்களிலும் விரைவில் தணிக்கை முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2. 1994-95 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை:

1993-94 ஆம் ஆண்டுக்கு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்ட அனைத்து சங்கங்களிலும் 1994-95ஆம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை:

1. 1993-94ஆம் ஆண்டிற்கான இறுதித் தணிக்கை:

மொத்தமுள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் 1993-94 ஆம் ஆண்டுக்கான தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டது.

2. 1994-95 ஆம் ஆண்டிற்கு இறுதி தணிக்கை:

1994-95 ஆம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் முன்னேற்றத்தில் உள்ளது. தேசிய பால்வள வாரியம் விரும்பிய வண்ணம் இறுதி தணிக்கை முடிக்கப்பட்டு தொடர் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இ. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 1990-91 ஆம் ஆண்டுவரைக்கான இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 1991-92 ஆம் ஆண்டு மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கான தணிக்கை, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின்பால் ஒப்படைக்கப்பட்டு 1991-92 ஆம் ஆண்டுக்கான தணிக்கை முன்னேற்றத்திலுள்ளது.

3. அரசு வருவாய் வசூல்

தணிக்கை மேற்கொள்ளப்படும் அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் தணிக்கை கட்டணம் வசூலிக்கப்பட்டு அரசு வருவாய் கணக்கில் சேர்க்கப்பட்டுவருகிறது. 1994-95 ஆம் ஆண்டுக்கு நிதிநிலை அறிக்கையில் இவ்வினத்தில் வசூலிக்க மதிப்பிடப்பட்ட ரூ.86.81 இலட்சத்தில் 31.3.95 முடிய 84.93 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு III

(91-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கால்நடை பராமரிப்புத் துறை

கோரிக்கை எண் 22

கொள்கை விளக்கம் 1995-96

பாகம்-1

பொது விவரம்

முன்னுரை

உலக வாணிப அமைப்பில் இந்தியா சேர்ந்தபிறகு இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைப் பராமரிப்பு ஒரு முக்கிய இடம் அடைந்துள்ளது. கால்நடை மற்றும் கோழியின உற்பத்தித் திறன் அதிகரிப்பின் மூலம் ஒரு காலத்தில் உபதொழிலாகவும், வேளாண்மையைச் சார்ந்ததாகவும் கருதப்பட்ட கால்நடைப் பராமரிப்பு, பல மாறுதல்களுக்குட்பட்டு ஒரு வருவாயீட்டும் தொழிலாக தற்போது மாறியுள்ளது. நம் மாநிலத்தில் இம்மாறுதல்களுக்கு கால்நடைப் பராமரிப்புத்துறை ஒரு முக்கியப் பங்கு வகிக்கக் காரணமாக அமைந்தது, நல்ல முறையில் வரையறுக்கப்பட்ட இனவிருத்திக் கொள்கைகள், கால்நடைகளுக்கு நலவாழ்வு கொடுத்தல், தீவன உற்பத்திப் பெருக்கம், விரிவாக்கக் கல்வி மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி ஆகியவற்றை நல்ல முறையில் துறை செயல்படுத்தியதே காரணமாகும். நம்நாட்டில் காலப்போக்கில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரித்து வெண்மைப் புரட்சியை வெற்றிகரமாக மாற்றியது இத்துறையின் தீவிர முயற்சியின் பலனாகும்.

பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவைகளின் அளவீடுகள் செய்யப்பட்டதில் 1993-94ம் ஆண்டில் பால் உற்பத்தி 35.20 இலட்சம் டன்னாகவும், முட்டை உற்பத்தி 29,190 இலட்சமாகவும், இறைச்சி உற்பத்தி 418.20 இலட்சம் கிலோவாகவும் அதிகரித்துள்ளது. இது 1989-90ம் ஆண்டு பால் உற்பத்தி 34.10 இலட்சம் டன்னாகவும், முட்டை உற்பத்தி 34,610 இலட்சமாகவும், இறைச்சி உற்பத்தி 373.60 இலட்சம் கிலோ ஆகவும் இருந்தது. மாநில அளவில் 1 நாளைக்கு 1 நபருக்குக் கிடைக்கும் பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளின் அளவும் அதிகரித்துள்ளது. இவை முறையே 1989-90ஆம் ஆண்டில் பாலின் அளவு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 169 கிராம்களில் இருந்து 173

கிராமாகவும், முட்டையின் அளவு ஒரு ஆண்டிற்கு 44-ல் இருந்து 52 ஆகவும் 1993-94ம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

பாகம்-2

ஆவின அபிவிருத்தி

(1) கால்நடை கணக்கெடுப்பு

1989-ஆம் ஆணடு கால்நடை கணக்கெடுப்பின்படியும் *1994-95*-ஆம் ஆணடில் அறிவியல் முறையில் ஏற்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் உத்தேச மதிப்பீடுகள் பின்வருமாறு.

	மொத்தக் கால்நடைகள் (இலட்சங்களில்).		இனவிருத்திக்குத் தகுதியான கால்நடைகள் (இலட்சங்களில்).	
	1989	*1994*	*1989*	*1994*
ஆவினம்	*93.50*	*86.80*	*31.50*	*29.30*
எருமையினம்	*31.30*	*30.70*	*16.20*	*15.50*

1989-ஆம் ஆணடு கால்நடை கணக்கெடுப்பின்படி இருந்த இனவிருத்திக்கான பசுக்கள் மற்றும் எருமையினங்களின் எண்ணிக்கையைவிட *1994*-ஆம் ஆண்டின் இனவிருத்திக்கு உகந்த கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்திருந்தும் உறைவிந்து தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தியதின் விளைவால் பால் உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது. *1989-90*ம் ஆண்டு *34.10* இலட்சம் டன்னாக இருந்த பால் உற்பத்தியின் அளவு, *1993-94*ம் ஆண்டில் *35.20* இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது *4* ஆண்டுக் காலங்களில் *32* சதவீதம் உயர்வைக் காட்டுகிறது. மாநிடத்தில் பால் உற்பத்தியின் அளவு ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில், கூடியோ, குறைந்தோ இருந்தபோதும் *1991-92*-ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுதவியுடன் பெரிய அளவில் பசு மற்றும் எருமையின மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தியதன் விளைவாக பால் உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

(2) ஆவினம்/எருமை இன விருத்திக் கொள்கை

மாநில அரசின் இனவிருத்திக் கொள்கை பின்வருமாறு

(1) உள்நாட்டின் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகியவைகள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில், தேர்ந்தெடுத்த முறையில் இனவிருத்தி செய்தல்.

(2) நாட்டினப் பசுக்களை அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் ப்ரிசியன் பொலிகாளைகளைக் கொணடு இன்விருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

(3) கிராமப்புறங்களில் உள்ள நாட்டின எருமைகளை முர்ராவகை பொலிகாளைகளைக் கொண்டு இனவிருதநி செய்து தரம் உயர்த்துதல்

மற்றும்

(4) கலப்பின பசுக்களை, கலப்பின பொடிகாளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர பொதுக் கொள்கையாக இனவிருத்திக்காக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா சமவெளிப் பகுதிகளில் ஜெர்சி இன பொலிகாளைகளும், எல்லா மலைப் பகுதிகளிலும், கன்னியாகுரி மாவட்டத்திலும் ப்ரிசியன் இனக்காளைகளும் பயன்படுத்தப்படுகின்றன. தரம் வாய்ந்ததும் சத்துமிக்கதுமான தீவனங்கள் கிடைப்பததை கருத்தில் கொண்டு கறவை மாடுகளுக்கு சமவெளிப் பகுதியில் விந்தின் உபயோகம் அமைகிறது. தற்போது தேவைக்கேற்ப நகரப் பகுதிகளில் ப்ரிசியன் காளைகளின் விந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவைகளின் மூலம் மாநிலத்தில் தரம் வாய்ந்த பசு மற்றும் எருமையின உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(3) கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள்

தீவிர கால்நடை அபிவிருத்தியானது இதற்கு முன்னர் செயல்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முக்கியத் திட்டமாக கருதப்பட்டு செயற்றை முறை இனவிருத்தி தொழில் நுட்பத்தைக் கொண்டு பசு மற்றும் எருமையினங்களின் வளர்ச்சிக்காக, கால்நடைப் பராமரிப்புத்துறை, தீவிர கால்நடை பெருக்கத் திட்டங்களையும் கேந்திர கிராமத்

திட்டங்களையும், சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் கடந்த காலங்களில் செயல்படுத்தி வந்துள்ளது. அவை முன்னோடித் திட்டமாக கருதப்பட்டு உள்நாட்டில் படு மற்றும் எருமையினங்களின் தரம் உயர்த்தப்பட்டு வந்துள்ளது.

மேற்கண்ட திட்டங்களின் சாதனைகளைக் கருத்தில் கொண்டு தீவிர கால்நடை பெருக்கத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்து கால்நடை பெருக்கம் மறறும் தீவன அபிவிருத்தித் திட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறையின் மூலம் சென்னையில் செயற்றை முறை கருவூட்டல் பணி 1948-ஆம் ஆண்டு மார்ச் 22ம் தேதி முதற்கட்டமாக திரவ விந்து மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி 1975ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 3510 செயற்றை முறை இனவிருத்தி நிலையங்களின் மூலமாக நவீன விஞ்ஞான தொழில் நுட்பரீதியான உறைவிந்து மூலம் மட்டுமே கருவூட்டல் பணி நடைபெற்று வருகிறது.

(4) உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்

உறைவிந்து தொழில் நுட்பத்தின் மூலம் உள்நாட்டினங்களுக்கு தரமிக்க வம்சாவழியைத் தோற்றுவிக்க வகை ஏற்படுகிறது. மிகப் பெரிய அளவிட் உறைவிந்து குச்சிகள் மற்றும் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்பட்டு, அவைகளை தமிழகமெங்கும் அனைத்து இடங்களுக்கும் பயன்படுத்தவும் சேமித்து வைப்பதற்காகவும், விநியோகத்திற்காகவும் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உறைவிந்து குச்சிகளை சேமித்து வைக்கத் தேவையான திரவ நைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கு, திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையங்களை உறைவிந்து தயாரிப்பு நிலையங்களோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் உறைவிந்து குச்சிகள் எளிதாக கிடைக்கும் நோக்குடன் கீழ்கண்ட நான்கு இடங்களில் உறைவிந்து தயாரிப்பு நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிஷேகப்பட்டி (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

1995 ஏப்ரல் 19]

இந்த உறைவிந்து நிலையங்களில் உறைவிந்து சேகரிக்கும் பொருட்டு, தரம் மிகுந்த அயலின காளையினங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு பேணி பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகள் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 10 உறைவிந்து சேமிப்பு வங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டு அவை தமிழகத்தில் உள்ள அனைத்து செயற்கை முறை கருவூட்டல் நிடையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

1994-95ம் ஆண்டு (31-1-1995 வரை) 18.24 இலட்சம் டோஸஸ் உறைவிந்து குச்சிகளும், 1.47 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும் மேற்படி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

5. கால்நடைப் பண்ணைகள்

கால்நடைப் பண்ணைகளில், தரம் உயர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ரீதியான மற்றும் அயலினக் காளைகளைக் கொண்டு குறிப்பிட் வகையைச் சார்ந்த காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அவைகள் மக்களுக்கு ஓர் முன்னுதாரணமாக விளக்குமாறு பயன்பட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் தற்போது 7 கால்நடைப் பண்ணைகளும், ஒரு அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணையும் உள்ளது. அவைகள் பின்வருமாறு:

1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர், தர்மபுரி மாவட்டம்.
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டைட, புதுக்கோட்டை மாவட்டம்.
3. மாவட்டக் கால்நடைப் பண்ணைண், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, கொருக்கை, நாகை காயிதே மில்லத் மாவட்டம்.
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.
7. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
8. அயலின கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

TRUTH ALONE TRIUMPHS

ஒரத்தநாடு மற்றும் அபிஷேகப்பட்டி மாவட்டக் கால்நடைப்பண்ணைகளில் முர்ரா வகை எருமையினம் மற்றும் பசுவின வளர்ப்பும் கொருக்கைப் பண்ணையில் உம்பளாச்சேரி இனமும் ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் காங்கேயம் பசுவினமும், உதகமண்டலமும் பண்ணையில் ப்ரிசியன் பசுவினமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஜெர்சி பசுவின வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகின்றன.

சிந்தி இன வம்சாவழி ஆய்வு, ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், முர்ரா எருமை இன வம்சாவழி ஆய்வு ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை பண்ணைகளில் சிந்தி கலப்பினக் காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உட்கரு மாற்றம் மாற்றம் தொழில் நுட்பம் இத்துறையினரால் கையாளப்படுகிறது. இதன்படி ஒரு உட்கரு மாற்றப் பிரிவு ஈச்சங்கோட்டை கால்நடைப் பெருக்கப் பண்ணையில் இயங்கி வருகிறது. மற்றொரு பிரிவு ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தோற்றுவிக்கப்படவுள்ளது.

(6) உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் மிகப்பெரிய அளவில் உலக வங்கி நிதி உதவியுடன் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1991-92ஆம் ஆண்டு முதல் ரூ. 46.62 கோடி செலவிட் ஏழு ஆண்டுகளுக்கு இத்திட்டம் செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்

அ. தமிழகத்திற்கு ஏற்ற கால்நடை உற்பத்தி முறைகளைத் தோற்றுவித்தல்

ஆ. சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்றவாறு பால் உற்பத்தியை அதிகமாக்குதல்.

இ. கிராமங்களில் உள்ள கால்நடை வளர்ப்போரின் வருமானத்தைப் பெருக்குதல் மற்றும்

ஈ. பால் உற்பத்தி தொழிலை தமிழக அரசு தகுத்த முறையில் மேற்கார்வையிடவும், உதவி அளிக்கவும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல்.

இந்த குறிக்கோள்களை உறைவிந்து செய்து சேமித்தல் மற்றும் விநியோகம் போன்றவற்றிற்குத் தேவையான உள்ளமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பலப்படுத்துதல், தீவன உற்பத்தி திட்டங்களை அமுல்படுத்துதல், விரிவாக்க நடவடிக்கைகளை பலப்படுத்துதல், நோயினைக் கண்டறிதல் மற்றும் கால்நடை நோய் திறனாய்வு போன்ற ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் மூலம் அடைய வேண்டும்.

மேலும் இந்தத் திட்டத்தின் செயல்பாட்டினால், பால் உற்பததி 2001–ஆம் ஆண்டில் 58.00 இலட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வுயர்வு இயல்பாக வரக்குடிய 48.00 இலட்சம் டன்னைக் காட்டிலும் அதிகம்.

அ. 1991-92 ஆம் ஆண்டு முதல் 1994-95 ஆம் ஆண்டு வரையிலான சாதனைகளின் சிறப்பு அம்சங்கள்.

(அ) உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் ஆகியவைகளை அனைத்து கருவூட்டல் நிலையங்களுக்கும் வழங்குவதைக் கண்காணிக்க கால்நடைப் பராமரிப்புத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிப்பிரிவு நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஆ. மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கடலூர், சிவகங்கை மற்றும் சைதாப்பேட்டை (சென்னை) ஆகிய இடங்களில் பத்து உறைவிந்து வங்கிகள் நிறுவப்பட்டு உறைவிந்து குச்சிகள் தருவிக்கப்படும், சேமித்து வைக்கப்பட்டும் பிற மையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இ. உறைவிந்து கருவூட்டல் பணி அனைத்து செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஈ. தற்போது எல்லாவிதமான தீவன அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் தீவன அபிவிருத்திக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

உ. 1994–95ம் ஆண்டில் விவசாயிகளுக்கு தீவன இடுபொருள்கள் ரூ. 50.00 இலட்சம் செலவிட் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

ஊ. எல்லா மாவட்ட பிரிவுகளுக்கும் ஒலி, ஒலி திரைப்படக்கருவிகள் மற்றும் விரிவாக்கப் பணிக்குத் தேவையான உபகரணங்கள் விரிவாக்கப் பணிக்காக வழங்கப்பட்டுள்ளன.

எ. கால்நடைகளைத் தாக்கும் பல்வேறு நோய்களின் காரணங்களைக் கண்டறியும் பொருட்டு, கோயம்புத்தூர், மதுரை,

வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு நிறுவப்பட்டு, நோயினை கண்டறிந்து, நோய் நீக்கப் பணிக்கு துறை அலிவலர்களுக்கு உதவி வருகிறது.

ஏ. ஆஸ்திரேலியா நாட்டு தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு இத்துறையைச் சார்ந்த களப்பணியாளர்களுக்கு பல வகைப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

ஆ. 1995-96-ஆம் ஆண்டிற்கான செயலாக்கத் திட்டம்

*1995-96*ம் ஆணடில் பசு மற்றும் எருமையினம் ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தீவன அபிவிருத்தியினை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ் குறிக்கப்பட்ட சில முக்கியப் பணிகள் *1995-96*ம் ஆண்டில் செயல்படுத்திட வேண்டிய வகையில் உலக வங்கி திட்ட நிதி ஒதுக்கீட்டின் அங்கீகாரத்துடன் அதற்கான நிறுவனத்திடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

		(ரூபாய் இலட்சத்தில்)
1.	திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையின் உள்ளிருப்பு வசதிகளை ஏற்படுத்தி கூடுதலான முர்ரா காளைகளை உற்பத்தி செய்தல்.	59.50
2.	ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில், கால்நடைகள் தங்குமிடங்களை பழுதுபார்த்து கட்டிடம் கட்டுதல்.	50.00
3.	கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துதல்.	24.00
4.	சைதாப்பேட்டையில் உள்ள துறையின் அச்சுக்கூடத்தை வலுப்படுத்துதல்.	20.00
5.	திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையத்தை மாற்றியமைத்தல்.	100.00
6.	ஒசூர் ஈச்சங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்துதல்.	40.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7.	களப்பணியாளர்களுக்குத் தேவையான பலவகையான தொழில் நுட்ப பயிற்சிகளை அளித்தல்.	30.00
8.	தீவன அபிவிருத்தி குறித்து பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல்.	8.00
9.	கால்நடைப் பராமரிப்பு விரிவாக்க அலுவலர்களுக்கு களப்பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்.	82.35
10.	மேலும் இரண்டு உறைவிந்து வங்கிகளைத் தோற்றுவித்தல் 40.50	40.50
11.	ஒசூர், ஈச்சங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள பயிற்சியாளர் விடுதிகளுக்கு தேவைவ்யான உபகரணங்கள் வழங்குதல்.	10.00
	மொத்தம்	**464.35**

1995–96-ம் ஆண்டில், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 3.66 கோடி கீழ்கண்ட பணிகளை நிறைவேற்ற வழங்கப்பட உள்ளது.

அ. ஒசூர் பண்ணையில், துறை அலுவலர்களுக்காக மாநில அளவில் பயிற்சி நிலையம் நிறுவுதல்.

ஆ. கால்நடைப் பாமரிப்புத் துறை இயக்குநரகத்தில் பயிற்சி மதிப்பீட்டு மையம் உருவாக்குதல்.

இ. அகிஷேகப்பட்டி (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்) ஒசூர் (தர்மபுரி மாவட்டம்) மற்றும் ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள செயற்றை முறை இனப்பெருக்க பயிற்சி நிலையங்களின் உள்ளமைப்புகளை வலுப்படுத்துதல்.

(7) டானிடா உதவியுடன் கால்நடை வளர்ச்சித் திட்டம்

புதுக்கோட்டையில் கால்நடை அபிவிருத்திக்காக, ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, அதில் தம்பதிகள் தொடர் பணியாளரகளாக ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் வாயிலாக தீவன அபிவிருத்தி ம்ற்றும் காலநடைப் பராமரிப்பு

நடைமுறைகள் பற்றிய விவரங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இத்திட்டம். புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல், குன்னாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஆகிய 3 பகுதிகளை உள்ளடக்கியது. இப்பகுதிகள், புதுக்கோட்டை மாவட்டத்தின் வறட்சியால் பாதிக்கப்பட்டு, மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பகுதியாகும். இத்திட்டம் ஐந்தாண்டு காலத்துக்கு ரூ. 4.40 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களுக்கு கூடுதலான வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி அதன்மூலம் அதிக வருமானத்தைப் பெருக்கிடவும் மற்றும் தற்போதைய நவீன கால்நடைப் பராமரிப்பு தொழில் நுட்ப உத்திகளை கையாள்வதின் மூலம், நல்ல வருவாய் கிடைக்கச் செய்வதும் ஆகும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சமானது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொடர் தம்பதிகளுக்கு கால்நடைப் பராமரிப்பு. தீவன அபிவிருத்தி மற்றும் தீவன சேமிப்பு ஆகியவற்றில் தகுந்த தொழில் நுட்ப விரிவாக்கப் பயிற்சி அளிப்பதாகும். பயிற்சி முடிந்தபின்பு, மேற்படி தொடர் தம்பதியர்கள் கிராம மக்களை கால்நடை வளர்ப்பின் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றிட முன்மாதிரியாகவும் இருப்பார்கள். இதற்கான தகுந்த அனைத்து உதவிகளையும் மனித வள மேம்பாட்டுத் துறையின் மூலம் அவர்கள் பெறுவார்கள்.

252. தொடர் பணியாளர்களுக்கும் 3387 விவசாயிகளுக்கும் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம மக்களிடையே விழிப்புணர்வை வளர்க்கும் வகையில் 599 கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் 31-01-1995 தேதி வரையில் நடத்தப்பட்டுள்ளன. 84023 தீவன மரக்கன்றுகள். கோ.4 ரக தீவன புல் நறுக்குகளும் வழங்கப்பட்டன. இத்திட்டத்திற்குத் தேவையான பயிற்சி நிலைய கட்டிடம், புதுக்கோட்டையில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை மேலும் 6 மாவட்டங்களுக்கு ரூ.16.33 கோடி செலவில் விரிவுபடுத்த பிரேரணை அனுப்பப்பட்டு டென்மார்க் அரசின் பரிசோதனையில் உள்ளது.

(8) செம்மறி ஆடு அபிவிருத்தி

செம்மறியாடு வளர்ப்பு இம்மாநிலத்தில், ஏழை விவசாயிகளிடம் மிகவும் பிரபலம் அடைந்துள்ளது. வேளாண்மை தொழிலுக்கு உபதொழிலாகவும் கிராமப்புற பொருளாதாரத்தில் ஆட்டு வளர்ப்பின்

முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, ஏழை விவசாயிகள் ஆடுகளை வாங்கி வளர்க்கக் கால்நடைப் பராமரிப்புத்துறை பல்வேறு செம்மறியாட்டு வளர்ப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அ. ஆட்டுப்பண்ணைகள்

கால்நடைப் பராமரிப்புத்துறை, சின்னசேலம் (விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்) மற்றும் சாத்தூர் (காமராஜர் மாவட்டம்) ஆகிய இரண்டு இடங்களில் ஆட்டுப்பண்ணைகளையும், ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் தனியே 4 ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் பராமரித்து வருகிறது. இங்கு, உள்நாட்டு இனங்களான மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய செம்மறியாடுகள் வளர்க்கப்பட்டு, தேர்ந்த இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டுக்கிடாக்களும், பெட்டைகளும், தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு நாட்டின ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகின்றன.

ஆ. செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்

ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு தக்க காலத்தில் இடுபொருள்கள் கிடைப்பதற்கும் விற்பனை உதவிக்கும தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள 1701 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களில் 1350 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இ. ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்

ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம் தமிழகத்திலுள்ள ஆறு மாவட்டங்களில் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் 19-5-1989 முதல் செயல்பட்டு வருகிறது.

1. இறைச்சி உற்பத்தியைப் பெருக்குதல்
2. ஆடு வளர்ப்போரின் வருவாயை உயர்த்துதல்
3. சமூக மேய்ச்சல் நிலங்களை மேலும் தரிசு ஆகாமல் தவிர்த்தல்

4. இந்தத் திட்டத்தில் சேர்ந்த ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களின் ஆடுகளுக்கு பசுந்தீவனம் அளிப்பதற்கு பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குதல்

இத்திட்டம் தமிழகத்தின் கீழ்க்கண்ட ஆறு வட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
2. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்
3. திருவண்ணாமலை சம்புவராயர்
4. தென் ஆற்காடு வள்ளலார்
5. சேலம்
6. தருமபுரி

இத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகள்

1. புல் மற்றும் தீவன அபிவிருத்தி
2. நோய்த் தடுப்பு / உடல் நலம்
3. இனவிருத்திக்குத் தேவையான இருப்பை பன்மடங்கு பெருக்கி விநியோகித்தல்
4, விரிவாக்கப்பணி
5. நடமாடும் பயிற்சிப் பிரிவுகள் மற்றும்
6. திட்ட நிர்வாக அலுவல் பிரிவு.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.13.66 கோடி ஆகும். இதில் ரூ.9.31 கோடி ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிறுவன முதலீட்டிலும், எஞ்சியுள்ள ரூ.4.35 கோடி செயலாக்கச் செலவாக மாநில அரசாலும் ஏற்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது, ஆடுகளின் உடல் எடையை கூட்டுதலும், அதன் வாயிலாக இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதும் ஆகும்.

இத்திட்டத்தில் 1994–95 இல் கீழே குறிப்பிட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

		எண்ணிக்கை ரூபாய்
1.	குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவை	5,12,814
2.	பார்வையிடப்பட்ட ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்	610
3.	பார்வையிடப்பட்ட கிராமங்கள்	5,290
4.	தடுப்பூசி போடப்பட்டது	33,905
5.	பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	33,866
6.	பயணம் மேற்கொண்டு அளிக்கப்பட்ட சிகிச்சைகள்	27,932
7.	சூபாபூல் தீவனம் / மரக்கன்றுகள் விநியோகம்	30,002
8.	ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டவை	844
9.	பயிற்சி பெற்ற நபர்கள்	8,082
10.	உண்ணி நீக்கம் செய்யப்பட்ட ஆடுகள்	18,569
11.	ஆடு கொட்டகைகளில் உண்ணி நீக்கம் செய்யப்பட்டது	447
12.	ஆண்மை நீக்கம் செய்யப்பட்ட கிடா குட்டி	576
13.	குடற்புழு நீக்கம் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகை	38,207

இத்திட்டம் மேலும் 3 ஆண்டுகள் நீடிக்கச் செய்ய ஐரோப்பிய பொருளாதார நிறுவனத்திடம் மத்திய அரசு மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் முயற்சியால் ஆடுகளின் உடல் எடை கூடியும், பிறப்பின் எடையில் முன்னேற்றம் ஏற்பட்டும், ஆடுகளின் பிறப்பு சதவீதம கூடியும் நோய் தாக்கும் சக்தி அதிகரித்தும் பலன்கள் ஏற்படும்.

(9) வெள்ளாட்டுப் பெருக்கம்

தமிழ்நாட்டில் வெள்ளாட்டு வளர்ப்பு விவசாயிகளிடையே பிரபலம் அடைந்து வருகிறது. சில விவசாயிகள் வெள்ளாடுகளைக் கொட்டில் முறையில் தீவிரமாக வளர்த்து வருகின்றனர். இறைச்சி மற்றும பால் உற்பத்தித் திறன் உள்நாட்டு வெள்ளாடுகளில் குறைவாக இருப்பதால் கால்நடைப் பராமரிப்புத் துறை ஜமுனாபாரி வெள்ளாட்டு இனங்களை

சின்னசேலம் ஆட்டுப் பண்ணையிலும் செட்டிநாடு மற்றும் கொருக்கை கால்நடை பண்ணையிலும், மற்றும் சைதாப்பேட்டை பல்முக மருத்துவமனை வளாகத்திலும் இனப்பெருக்கத்திற்காக வளர்த்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன. வம்சாவழி முறையில் பெறப்படும் வெள்ளாடுகள் உள்நாட்டில் வெள்ளாடுகளின் பால் மற்றும் இறைச்சியின் தரம் உயர்த்த அவை தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(10) கோழி இனப்பெருக்கம்

கால்நடை பராமரிப்புத்துறை 26 கோழி விரிவாக்க நிலையங்களையும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்களையும், வெள்ளை வெக்கார்ன் கோழிகளின் உற்பத்திக்காகவும், வளர்ப்பாகவும பராமரித்து வருகிறது. உள்ளூர் விவசாயிகளுக்கு விற்க குஞ்சு வளர்ப்பு நிலையங்களாகவும், செயல்முறை விளக்க நிலையங்களாகவும் இக்கோழி விரிவாக்க நிலையங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அசல் இனக்கோழிகளை தருவித்து காட்டுப்பாக்கம மற்றும் ஓசூர் பண்ணைகளில் தரமான கோழிகளை பெருக்கவும் முட்டையிடும் அளவினை உள்நாட்டினங்களில் அதிகப்படுத்தவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கோழியினங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து கோழி நோய்கள பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவரித்து விவசாயிகள் பயனடையத் தக்க வகையில், பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டிலும், சேலம் மாவட்டத்தில் ஆண்டலூர் கேட்டிலும் கோழி நோய்கள் புலனாய்வு கூடம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் 31-1-1995 வரை 752 கிராமங்களிலுள்ள 1419 கோழிப் பண்ணைகளுக்கு அதிகாரிகள் சென்று நோயைக் கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

11. பன்றி இனப்பெருக்கம்

பன்றி வளர்ப்பு கிராமங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழை குடும்பங்களுக்கு உபரி வருமானத்தை அளிக்கிறது. நாட்டுப் பன்றிகளின் இறைச்சி உற்பத்தித் திறன் குறைவாக உள்ளதால் கால்நடைப்பராமரிப்புத்துறை சென்னை சைதாப்பேட்டையிலும், ஓசூர் மற்றும் புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளிலும் லார்ஜ் ஒயிட் யார்க்ஷையர் இனப் பன்றிகளை இனப்பெருக்கம் செய்து வருகிறது.

உள்நாட்டின் பன்றிகளின் தரத்தை உயர்த்த விவசாயிகளுக்கு இப்பிரிவுகளிலிருந்து பன்றிகள் வழங்கப்படுகின்றன.

ரூ.50.00 இலட்சம் செலவில், மேற்கண்ட 3 இடங்களில் உள்ள பன்றிப் பிரிவை வலுப்படுத்தவும், அபிஷேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் புதிதாக பன்றிப்பிரிவு தோற்றுவிக்கப்படவும் உள்ளது.

(12) சிறப்புத் திட்டங்கள்

அ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலையின் இயற்கைசூழலை பாதிக்கவண்ணமும், மாவட்ட மக்களின் தரத்தை உயர்த்தவும், நீலகிரி மாவட்டத்தில் 1975-ம் ஆண்டுமுதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் ஒன்று, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கன்று மற்றும் ஆடு வளர்ப்பு போன்ற தனி நபர் பயனடையும் திட்டங்கள் இத்திட்டத்திற்குள் அடங்கும்.

பின்னர், உறைவிந்து உற்பத்தி நிலையம் நிறுவுதல், உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தீவன உற்பத்திக்காக உள்ளமைப்பு வசதிகள் செய்து தருதல், நோய் கண்டறியும் வசதிகளை மேம்படுத்த கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று உதகமண்டலத்தில் நிறுவுதல், மற்றும் கால்நடை மருந்தகம், கிளை நிலையம் கட்டுதல் மற்றும் நடமாடும் கால்நடைப் பிரிவுகளை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளின் மூலம் இத்திட்டம் அதிக அளவில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணை மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள கால்நடை நிலையங்களை வலுப்படுத்துவதற்காக ரூ.30.47 இலட்சம் 1994-95ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ளது.

ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

1981-ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், திண்டுக்கல் அண்ணா, மதுரை, திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி மற்றும் காமராஜர் மாவட்டத்திலுள்ள 24 தாலுக்காக்களில், சுற்றுப்புற சூழல் பாதிக்காவண்ணம மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின்கீழ் பசுந்தீவன விதைகள் ஆகியவைகளை வழங்குதல், கால்நடை மருத்துவ

நிலையங்களை ஒட்டிய காலியான நிலங்களில் தீவன வளர்ச்சியைப் பெருக்குதல், மேலே குறிப்பிட்ட 24 தாலூக்காக்களை உள்ளடக்கிய கால்நடை மற்றும் ஆட்டினப் பண்ணைகளின் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தி தீவனப் பெருக்கம் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். உரிய நிதி உதவி செய்வதன்மூலம், பண்ணையின் அடிப்படை வசதிகளை வலுப்படுத்திக் கொள்வதும் குறிக்கோளாகும்.

இத்திட்டத்திற்கென 1994-95-ம் ஆண்டில் ரூ.13.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்டக் கால்நடைப் பண்ணை அபிஷேகப்பட்டியில் விவசாயிகள் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இ. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் 1976 முதல் சேலம், தர்மபுரி, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை, சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மலைப்பகுதியில் வாழும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு 50 வழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம இராமசாமி படையாச்சியார் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் மூலமாக 18,159 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1994-95-ம் ஆண்டில் 100 கறவை மாட்டு அலகுகளும், 140 ஆட்டு அலகுகளும், 240 மலைவாழ் பழங்குடியினர் நலனுக்காக ரூ.23.47 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது. இது தவிர 9 கால்நடை மருந்தகங்கள், 9 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலம் இப்பகுதியில் உள்ள கால்நடைகள் மற்றும கோழிகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியும் இலவசமாக செய்யப்படுகின்றன.

ஈ. சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்

இத்திட்டம் 1983-ஆம் ஆண்டு முதல், இந்து ஆதி திராவிட சமூகத்தினருக்கென, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

1995 ஏப்ரல் 19]

இத்திட்டத்தில் பயன்பெறும் ஒவ்வொரு பயனாளிக்களுக்கும் 20 பெட்டை செம்மறி ஆடுகளும் 1 கிடாவும் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படுகிறது. கால்நடைகளின் நலப்பணியின் அங்கங்களான தடுப்பூசி மற்றும குடற்புழு நீக்கம் குறித்தகாலத்தில் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 23017 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. அவற்றில் 50 சதவிகிதம் பெண்கள் ஆவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் செயல்படுத்த 1994–95ம் ஆண்டு ரூ.51.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கிடாரி கன்று வளர்ப்பதற்கும் மற்றும் பயிற்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் 200 கன்றுகள் வீதம் மொத்தம் 1000 கன்றுகள் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்.
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, கொருக்கை
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு

கிடேரிப் பசுக்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் காலங்களில், பசு விலையில் 50 விழுக்காடு வங்கி மூலம் பெறும் கடனாகவும், மீதமுள்ள 50 விழுக்காடு மானியமாகவும் வழங்கப்பட உள்ளது.

(13) புள்ளி விவரம்

கால்நடைப் பராமரிப்புத் துறையில் பல்வேறு திட்டங்களின் உரிய செயலாக்கப் பணிக்கும், சரியான கால்நடை முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டவும் காலத்திற்கேற்ற நம்பகமான புள்ளிவிவரம் அவசியமாகும்.

மாநில மாதிரி அளவீட்டுத் திட்டத்தின் மூலம் எல்லா மாவட்டங்களிலும் பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை பருவ காலங்களில் மதிப்பீடு செய்யும் திட்டத்தை அதேபோல் மாவட்ட அளவிலான மாதிரி அளவீட்டுத் திட்டம். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான தென் ஆற்காடு வள்ளலார், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய 4 மாவட்டங்களில், பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவை அளவிட மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கி 1993–94

முதல் இவ்விரண்டு திட்டங்களும் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த மாதிரி அளவீட்டுத் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

கால்நடை கணக்கெடுப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம் ஒன்று இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது.

1994–95 ஆம் ஆண்டில் இரண்டு பருவ கால கணக்கெடுப்பு அளவீடுகளின் முடிவுகள் பின்வருமாறு

	கோடை காலம்	மழை காலம்	மொத்தம்
1. பால் உற்பத்தி மதிப்பீடு (000 மெட்ரிக் டன்கள்)	1202.098	1250.000	2452.098
2. முட்டை உற்பத்தி மதிப்பீடு (இலட்சம் எண்கள்)	9870.38	1024.00	20110.38
3. இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (இலட்சம் கிலோ)	144.80	145.00	290.28

குறிப்பு: 1994–95ல் எடுக்கப்பட்ட பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவீடுகள் 1993–94ன் அளவீடுகளைக் காட்டிலும் பால் உற்பத்தியில் 4.4 சதவீதமும், முட்டை உற்பத்தியில் 7.2 சதவீதமும் மற்றும் இறைச்சி உற்பத்தியில் 0.5 சதவீதமும் அதிகரித்துள்ளது என்பது புலனாகிறது.

(14) கால்நடை மருத்துவ நலப்பணிகள்

அ. கால்நடை மருத்துவ நிலையங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 881 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2079 கிளை நிலையங்கள் மூலமாக கால்நடைகளின் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது. நோய் நீக்கப் பணி மற்றும் தடுப்பூசி போடுவதன் மூலமாக கால்நடைகளின் உடல்நலத்தைக் காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி சம்பந்தப்பட்ட பணிகள் இந்நிலையங்களில் கவனிக்கப்படுகின்றன.

கால்நடை மருத்துவ நிலையங்களின் விவரம்

1.	பல்முக மருத்துவமனை	2
2.	பெரு மருத்துவமனை	22
3.	கால்நடை மருத்துவமனை	84
4.	கால்நடை மருந்தகங்கள்	773
	மொத்தம்	881

காலமுறைப்படி தடுப்பூசி போடுவதுடன் கால்நடை நலப்பணி மற்றும் மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன் மலட்டுத் தன்மையுள்ள கால்நடைகளுக்கு உரிய சிகிச்சையும் இந்நிலையங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. உள்ளிருப்பு வசதிகள் கொண்ட பல்முக மருத்துவமனை மற்றும் பெரு மருத்துவமனைகளில் பெரிய அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர சேலம், மதுரை, ஈரோடு மற்றும் பொள்ளாச்சி ஆகிய பெரு மருத்துவமனைகளில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.

மேலும், சைதாப்பேட்டை மற்றும்க் கோயம்புத்தூரில் உள்ள பல்முக மருத்துவமனைகளில் எக்ஸ்ரே வசதி உள்ளது. இப்பல்முக மருத்துவமனைகள் (பாலிகிளினிக்) கால்நடை மற்றும் கோழி இனங்களுக்கு, 24 மணி நேரமும் சிறப்புமிக்க மருத்துவம் அளித்து வருகின்றன.

1994–95–ஆம் ஆண்டில் 31-01-1995 வரை 126.51 இலட்சமும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 5.18 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 157.46 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 21.05 இலட்சம் செயற்கை முறை இனவிருத்தி கருவூட்டல் பணி செய்யப்பட்டது.

ஆ. கால்நடை நோய் (கடுங் கண்காணிப்பு) தகவல் முறை

கால்நடை நோய் (கடுங் கண்காணிப்பு) முறை என்பது கால்நடைகளில் ஏற்படும் தொற்று நோய்கள் பற்றி, ஒரு குறிப்பிட்ட பகுதியில் தெரிந்து கொள்ளவும், அப்பகுதியில் அதற்கான, உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் உதவும் வழியாகும்.

இத்திட்டதின் குறிக்கோள்கள்

1) நவீன தொழில் நுணுக்க உதவியுடன், நோய்கள் புலனாய்வு மற்றும் தடுப்பூசி மருந்து பயன்படுத்துதல் ஆகிய செயல்பாடு மூலமும் நோய் பற்றிய தகவலை பரிமாற்றம் செய்து கொள்வவது மூலமும் நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், அறவேவ ஒழித்தல்.

2) கால்நடைகள் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருள்கள், விற்பனையினை பன்னாட்டு அளவில் அதிகரித்தல்.

கடுங்காணிப்பு என்பது, நோய்களின் தோற்றம் பற்றிய, தொடர்ந்த விழிப்புணர்வு ஆகும். இதன் மூலம் நோய்களின் தோற்றம் பற்றி தெரிந்து கொள்வதுடன், நோய்களை தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அறவே ஒழித்தல் ஆகிய செயல்களுக்கு மிகவும் இன்றியமையாதது.

இதில் மூன்று பிரிவுகள் உள்ளன

1. விவரங்கள் சேகரித்தல்

2. ஆய்வு

3. நோய் கடுங்கண்காணிப்பு தகவலை பகுத்தறிந்து விரைவில் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துதல்.

கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் கால்நடைப் பண்ணைகள் அந்தந்தப் பகுதிகளில் தலையாய கண்காணிப்பு மற்றும் அறிவிப்பு பிரிவுகளாக செயல்படுகின்றன.

பிரதம அறிவிப்பு பிரிவுகள் நோய் கண்ட முதல் தகவல் மற்றும் வாராந்திர அறிக்கைகளை மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்களுக்கு தெரிவித்து, சம்பந்தப்பட்ட உதவி இயக்குநருக்கும் ஒரு நகல் அனுப்ப வேண்டும்.

மாதாந்திர அறிக்கைகள், கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநருக்கு அடுத்த மாதத்தின் 5-ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். உதவி இயக்குநர் அவற்றை மண்டல இணை இயக்குநருக்கு 10-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். மண்டல இணை இயக்குநர் அந்த விவரங்களை, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ள தேசிய தகவல் மையம் பிரிவில் உள்ள மின் அணு சாதனங்களில் சேமிப்பதுடன் உடனுக்குடன் துறையின் தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இதுவரை அறிக்கைகள் அஞ்சல் அல்லது தந்தி மூலம் அனுப்பப்பட்டு வந்துள்ளன. இதனால் காலதாமதம் மற்றும் அஞ்சலில் இழப்பும் ஏற்படுகிறது. நேரிடை மின் அணு அஞ்சல் முறையில், தகவல்களை அனுப்புவது முலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு இந்திய அரசின் மூலம் இந்தத் தகவல் அனுப்பும் முறை தேசீய தகவல் மையம் இணைப்பு (நிக்நெட்) மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் பிரிவுகள் மாநில தலைமை அலுவலகத்திலும், அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் இம்முறையினை செயல்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

இ. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கு தடுப்பூசி போடுவதுதான் கால்நடை மருத்துவத் துறையின் தலையாய நோக்கமாகும். இதன அடிப்படையில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கீழே குறிப்பிட்டுள்ள 14 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

1. வேலூர்
2. மதுரை
3. திருநெல்வேலி
4. உதகமண்டலம்
5. கடலூர்
6. சேலம்
7. திருச்சிராப்பள்ளி
8. கோயம்புத்தூர்
9. தஞ்சாவூர்
10. சிவகங்கா
11. காஞ்சிபுரம்
12. ஈரோடு
13. திண்டுக்கல்
14. தூத்துக்குடி

இப்பிரிவின் முக்கியப் பணியாவன

(அ) நோய்கிளர்ச்சி ஏற்படக்கூடிய இடங்களில் நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து களப்பணி அலுவலர்களுக்கு உதவி செய்தல்.

(ஆ) தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து அதைக் தவிர்க்கும் தடுப்பு வழிமுறைகளை குறித்த காலத்தில் மேற்கொள்ளுதல்.

(இ) இரர்ணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய உதவியுடன் கோமாரி நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து நோய்க் கிளர்ச்சியின் தன்மையை அறிந்துக் கொள்ளுதல்.

(ஈ) அப்பகுதியினை ஆய்வு செய்து நோய்க் கிளர்ச்சியின் தன்மையை வரைபடம் மூலம் விளக்குதல்.

(உ) உடனடியாக நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கு சரியான மருத்துவ சிகிச்சை அளித்தல்.

(ஊ) காசநோய், ஜோன்ஸ் நோய், கருச்சிதைவு மற்றும் மடிவீக்க நோய் ஆகியவைகளை காலமுறைப்படி பரிசோதனை செய்தல்.

மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் நோய் கண்டறியும் பரிசோதனை நிலையம் நான்கும், தொத்துநோய் கண்டறியும் பிரிவுகள் நான்கும் உலகவங்கி நிதியுதவியுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நோய் கண்டறியும் பரிசோதனை மூலமாக களத்தில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள் நோய் கண்டறிதலில் உதவி செய்யும் காலங்களில், தொற்றுநோய் கண்டறியும் பிரிவு, பல்வேறு விதமான நோய்களின் தன்மைகளை ஆய்ந்து, அவைகளிலிருந்து கால்நடைகளை அதிக அளவில் தாக்கக்கூடிய தொற்றுநோய்களை மாநிலத்திலிருந்து அறவே ஒழிக்கப்படுகிறது.

(ஈ) நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள்

கீழே குறிப்பிட்டுள்ள நோக்கங்களுடன் நம் மாநிலத்தில் 55 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் பணியாற்றி வருகின்றன.

1. குக்கிராமங்களில் கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்றுநோய்களைக் கண்டறிந்து உரிய முறையில் தடுப்பூசி போடுதல்.

2. தொற்றுநோய் தாக்கி ஏற்படுக் நோய்க் கிளர்ச்சியினை தடுத்து நிறுத்துதல்.

3. நோய்க் கிளர்ச்சி காலங்களில் தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

4. தொலைதூரத்தில் உள்ள கிராம விவசாயிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் மூலமாக கால்நடைப் பராமரிப்புத் துறையில் அறியப்படும் தொழில்நுட்ப விவரங்களைத் தெரிவித்தல்.

5. தொலைதூரத்தில் உள்ள கிராம மக்களின் பசு, எருமை ஆகியவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்தல்.

இதைத்தவிர 386 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், ஒரு பஞ்சாயத்து யூனியக்கு ஒன்று வீதம் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்க அலுவலர் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

(உ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்

நம் நாட்டில் தென்பகுதியில், கால்நடைகளுக்கு உயிர்தேசம் அதிகம் விளைவிக்கும் நோய் வெக்கை நோய் அல்லது கால்நடைகளில் பிளேக் ஆகும். இது அதிக அளவில் இறப்பு வீதத்தை அதிகரிப்பதோடு மட்டுமின்றி தீவிர கால்நடை உற்பத்திக்குத் தேவையான உயரின மரபுவழியைச் சார்ந்த கால்நடைகள் இழப்பினால் பொருளாதாரத்தில் பேரிழப்பை ஏற்படுத்துகிறது. மாநிலத்தில் தெரிவிக்கப்படாத வெக்கை நோய் பாதிப்புகளை அறியும் பொருட்டு பல இடங்களில் பார்வையிட்டு இந்நோயை அறவே இம்மாநிலத்திலிருந்து ஒழிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஊநீரைக் கொண்டு வெக்கை நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் 10 கால்நடை சோதனைச் சாவடிகள் கேரளம், கர்நாடகம், மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் எல்லைப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 10 வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 26 வெக்கை நோய் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின் வாயிலாக நவம்பர் 1993 முதற்கொண்டு செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். வட ஆற்காடு அம்பேத்கார், தருமபுரி, நீலகிரி மற்றும் மதுரை ஆகிய 5 மாவட்ட எல்லைப்புறப் பகுதிகளில் உள்ள 34 வெக்கை நோய்க் குழுக்கள் (10 சோதனைச் சாவடிகள் நீங்கலாக) மூலமும் இரண்டு வெக்கை நோய்க்

குழுக்கள் மூலம் சென்னை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் 100 விழுக்காடு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

1994-95-ஆம் ஆண்டின், தேசீய வெக்கை நோய் ஒழிப்புத் திட்ட நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட நடப்புத் திட்ட செயல்பாட்டின்படி தமிழகத்தில் திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், பெரியார், கோயம்புத்தூர், திண்டுக்கல் அண்ணா மற்றும் காமராஜர் ஆகிய 6 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, இவற்றில் 100 விழுக்காடு வெக்கை நோய் தடுப்புப்பணி நடைபெற உள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் 31-01-1995 வரை 48.33 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

ஊ. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை

இராணிப்பேட்டையில் அமைந்துள்ள முன்னோடி நிலையமான கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்குத் தேவையான தடுப்பு மருந்துகள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை தயாரித்தும், விநியோகித்தும் வருகிறது.

இந்நிலையத்தின் செயல்முறைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ. கால்நடை மற்றும் கோழியின் தடுப்பு மருந்துகள், உயிர் மருந்துகள், ஊநீர் மற்றும் மருந்துகள் தயாரித்தலும், விநியோகித்தலும்.

ஆ. கால்நடை நோய் புலனாய்வு மற்றும் நோய் கண்டறிதலும் ஆகும்.

இந்நிலையம் 7 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும், 11 வைரஸ் தடுப்பு மருந்துகளும், நோய் கண்டறியும் சாதனங்களையும், மருந்து வகைகளையும், ஊநீர்களையும் தயாரித்து வருகிறது. இவை பின்வருமாறு:

நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள்

1. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆலம் பிரசிபிடேட்)
2. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆயில் அட்ஜுவண்ட்)
3. மாட்டின நிணநீர் சுரப்பி நோய் தடுப்பு மருந்து

4. சப்பை நோய் தடுப்பு மருந்து

5. துள்ளுமாரி நோய் தடுப்பு மருந்து

6. அடைப்பான் ஸ்போர் தடுப்பு மருந்து

7. கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்து

வைரஸ் நோய் தடுப்பு மருந்துகள்

1. திசுவளர் வெக்கை நோய் தடுப்பு மருந்து

2. ஆட்டம்மை தடுப்பு மருந்து

3. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (கே)

4. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (லசோட்டா)

5. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (எப்)

6. திசு வளர் கோழியின அம்மை நோய் தடுப்பு மருந்து

7. வாத்துக்கழிச்சல் நோய் தடுப்பு மருந்து

8. மேரக்ஸ் நோய் தடுப்பு மருந்து

9. வெறி நாய்க் கடி நோய் தடுப்பு மருந்து

10. நாய் டிஸ்டெம்பர் நோய் தடுப்பு மருந்து

11 கோமாரி நோய் தடுப்பு மருந்து (மோனோ வெலன்ட்)

கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டையில் பலவகையான களிம்புகளும் உற்பத்தி செய்து தமிழ்நாட்டில் உள்ள கால்நலை நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

களப்பணிக்கு விநியோகிக்கும் முன் தடுப்பு மருந்துகளின் தரத்தை பரிசோதனை செய்ய சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று இந்நிலையத்தில் இயங்கி வருகிறது.

துறையின் நோய் புலனாய்வுப் பிரிவு களப்பணியாளர்களுக்கு கால்நடை மற்றும் கோழியினங்களில் நோய் கண்டறிந்து உறுதி செய்வுதற்கு ஏற்றவாறு ஆதார ஆய்வுக்கூடம் இந்நிலையத்தில் செயல்பட்டு வருகிறது.

வெறி நாய்க்கடி நோய் தடுப்பு மருந்து, டிஸ்டெம்பர் மற்றும் வாத்துக்கழிச்சல் தடுப்பு மருந்துகளைத் தவிர மற்றவை களப்பணியாளர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. கோழியின நோய் தடுப்பு மருந்துகள் தனியார் கோழி வளர்ப்பாளர்களுக்கு விலைக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன. கோழியின நோய் தடுப்பு மருந்துகள் நாமக்கல் மற்றும் ஆண்டலூர் கேட் (சேலம் மாவட்டம்) மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விற்பனை கூடங்களில் விற்கப்பட்டு வருகின்றன. கால்நடை நோய்த் தடுப்பு நிலையத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஊநீர் குளிர்ந்த நிலையிலேயே எடுத்துச் சென்று விநியோகிப்பதற்காக மாநிலத்தில் முதல்முறையாக குளிரூட்டப்பட்ட நடமாடும் ஊர்தி பயன்படுத்தப்படுகிறது.

எ. நோயற்ற மண்டலம்

கால்நடை மற்றும் கால்நடை பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்நாட்டின் தென்பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கால்நடைகளை பெரிதும் தாக்கக்கூடிய நோய்களான வெக்கை மற்றும் கோமாரி நோய் தாக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் விற்பனையை வெளிநாட்டு சந்தையில் வலுப்படுத்தவும், அதிகரிக்கவும் நோயற்ற பகுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி திட்டப் பகுதியில் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதியில் முறையான தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தினை ஒட்டிய எல்லையோரப் பகுதியில் ஒரு நோய்த் தடுப்புச் சாவடி அமைத்து திட்டப் பகுதியில் நுழையும் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. 29-10-1984 முதல் கன்னியாகுமரியில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் துவக்கப்பட்டது முதற்கொண்டு இதுநாள்வரை எந்தவிதமான நோய்க் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. 1994-95 (31.01.1995 வரை) 99854 கோமாரி நோய் மற்றும் 122689 வெக்கை நோய் தடுப்பூசிகளும் போடப்பட்டுள்ளன. இத்திட்டம் வ.உ.சிதம்பரனார் விரிவுபடுத்தப்பட உள்ளது.

ஏ. கால்நடை நோய் கடுங்கண்காணிப்புத் திட்டம்

கால்நடை நோய் கடுங்கண்காணிப்புத் திட்டம், 1983-84 முதற்கொண்டு மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இந்நோய் கண்காணிப்பின் பலனாக தொற்றுநோய் புலனாய்வு மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிட்ட நோய்கள் பற்றிய திறனாய்வு

மேற்கொள்ளப்படுகிறது. நோய்களைப் பற்றிய புள்ளிவிவரங்களை சேகரித்து நோய் கிளர்ச்சி வரைபடங்கள் வரையப்பட்டு, நோய்கள் எந்தெந்த காலங்களில் கால்நடைகளை எந்தெந்த பகுதிகளில் தாக்கக்கூடும் என்பதை முன்கூட்டியே அறிந்து துறை அலுவலர்களால் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டும், தடுப்பூசி போடப்பட்டும் நோய்களால் கால்நடைகள் தாக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(அ) கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு ஏற்படும் தொற்றுநோய்களைக் கண்காணித்து நோய் பற்றிய விவரங்களை சேகரித்து அவற்றை ஆராய்தல்.

(ஆ) கால்நடைகளின் வயது, பாலினம், மற்றும் இனம் இடத்தின் சுற்றுப்புற சூழல் மற்றும் சீதோஷ்ணநிலை முதலியவற்றையும் கருத்தில் கொண்டு கால்நடைகளின் இறப்பு பற்றிய விவரங்களை மதிப்பீடு செய்தல்.

(இ) பலதரப்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாகவும், இயற்கைச் சீற்றத்தின் காரணமாக ஏற்படக்கூடிய தொற்றுநோய் வகையைப் பற்றியும் ஆராய்தல்.

(ஈ) ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு பரவக்கூடிய தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தியும், நம் மாநிலத்திலிருந்து வெளிமாநிலத்திற்கும் வெளி மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கும் கால்நடை போக்குவரத்து வழிகளை வரைபடத்தில் குறித்தல்.

(உ) தாது உப்பு சத்துக்கள் குறைவான இடங்களை கண்டறிதல் மற்றும் தூய்மை மாசுபடுத்தலினாலும் மற்றும் இதர காரணங்களினாலும் கால்நடைகளுக்கு விஷத்தன்மை ஏற்படும் பகுதிகளை கண்டறிதல்.

(ஊ) கால்நடை இனப்பெருக்கத்திற்குத் தடையாக உள்ள கூறுகளையும், பெருமளவு கன்று மடிவதற்கும் உண்டான கர்ரணங்களையும் ஆராய்தல்.

(எ) பல்வகை நோய்களினால் உண்டாகும் பொருளாதார இழப்பையும் மற்றும் நோய்த் தடுப்பு முறைகளினால் உண்டாகும் பணிகளைழும் கணக்கிடுதல்.

(ஏ) மேற்கூறப்பட்ட விவரங்களை சேகரித்து அவைகளை ஆராய்ந்து பின்பு கண்காணிப்பு குறித்து வரைபடம் தயார் செய்தல்.

(ஐ) களப்பணியாளர்களுக்கு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட நோய்களுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்வது பற்றி அறிவுரை வழங்குதல்.

ஐ. வெறி நாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம்.

வெறி நாய்க்கடி ஒரு அபாயகரமான நோய். நாய்களில் வெறிநோய் ஏற்படாமல் தடுப்பதன் மூலம் அது மனிதர்களுக்குப் பரவாமல் தடுக்க ஒரு வெறி நோய் தடுப்புத் திட்டம் கோயம்புத்தூர் மாநகரில் ஏற்படுத்தப்பட்டது. பின்பு இத்திட்டமானது சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், எல்லா வளர்ப்பு நாய்களுக்கும் முறையே வெறிநோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. தவிரவும் உள்ளாட்சி நிறுவனங்களின் உதவியுடன் தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு கருணை முறையில் அழிக்கப்படுகின்றன.

வெறிநோய்த் தடுப்பு திட்டப்பணிகளின் முக்கிய நோக்கங்கள்.

(அ) கட்டாய நோய்த் தடுப்பு முறையைக் கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி மருந்தின் விலையை கட்டணமாக வசூலித்து பணி மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

(இ) பொதுமக்களிடையே இந்நோய்பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலம் தகுந்த விளம்பரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல்.

(ஈ) நகராட்சி நிறுவனங்களின் உதவியுடன் தெருவில் திரியும் நாய்களைப் பிடித்து அவைகளுக்கு அதிக துன்பத்தைக் கொடுக்காது அழித்தல்.

(உ) வெறிநாய்க்கடி நோய் பற்றிய நிகழ்வுகளை சுகாதார துறையினர் மூலம் விவரங்களை கண்டறிதல்.

இத்திட்ட செயலாக்கத்துக்குப் பின் மனிதர்களை தாக்கக்கூடிய வெறி நாய்க்கடி நோய் நகரங்களில் வெகுவாக குறைந்துள்ளது என்பது தெரியவருகிறது.

1995 ஏப்ரல் 19]

1994-95-ஆம் ஆண்டில் (*31.01.1995* வரை) *12,381* நாய்களுக்கு வெறிநாய் நோய் தடுப்பூசி போடப்பட்டு *14,839* தெருவில் திரியும் நாய்களைப் பிடித்து அழிக்கப்பட்டது.

ஒ. கோமாரி நோய் தடுப்பூசிப் பணி

1976-77 முதல் கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் ஏழை விவசாயிகளுக்கு *50* விழுக்காடு மானிய விலையில் கோமாரி நோய் தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*1994-95*ல் *31.01.1995* வரை *3.38* இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டது.

15. மக்கள் தொடர்பு முகாம்

விவசாயிகள் கால்நடை மற்றும் கோழிகளைப் பேணிக் காக்கவும் கால்நடை வளர்ப்பில் அதிக அக்கரை கொண்டு இலாபம் ஈட்டவும், இத்துறை, மக்கள் தொடர்பு முகாம்களை கிராமங்கள் தோறும் நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இம்முகாம்களில் நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ளுதல், பசு மற்றும் எருமைகளுக்கு செயற்றை முறை கருவூட்டல் பணி செய்தல், தடுப்பூசி பணி மேற்கொள்ளுதல், இனவிருத்திக்கு ஒவ்வாத காளைகளை ஆண்மை நீக்கம் செய்தல், கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் மற்றும் வைக்கோலின் தரத்தை யூரியா கொண்டு சக்தி மிக்கதான வைக்கோலாக மாற்றக் கூடிய செயல் விளக்க முறைகளையும் 'கால்நடை வளர்ப்பு மற்றும் தீவனப் பெருக்கம்' குறித்து விவசாயிகள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் திரைப்படங்கள் திரையிட்டு காண்பிக்கப்படுகிறது. *1994-95*-ம் ஆண்டில் (*31.1.1995* வரை) *17298* மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

16. செம்மறி ஆடுகளுக்கு தீவிர நலப் பாதுக்காப்புப்பணி

ஆடுகளின் வயிற்றில் உள்ள குடற்புழுக்களினால், பாதிப்பு ஏற்பட்டு அவைகளின் உடல் எடையும் குறைந்து அதனால் இறைச்சிப் பெருக்கம் வெகுவாக பாதிப்படைவதால் ஏழை விவசாயிகளின் வருமானம் குறைந்து பொருளாதார இழப்பிற்கு ஆளாக நேரிடுகிறது. ஆகவே காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் இன்றியமையாததாகும். அதனால் கால்நடைப் பராமரிப்புத்துறை ஆடுகளின் நலப்பாதுகாப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி, ஏழை விவசாயிகளின் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் உடல்நலம் பேணுதலும் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.40.00 இலட்சம் செலவில் சென்னை, நீலகிரி, நாகை-காயிதே மில்லத், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாம அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

17. 1995-96ம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1. 1995-96ம் ஆண்டில், தல்லாகுளம் (மதுரை) கால்நடை பெரு மருத்துமனையை ரூ. 4.65 இலட்சம் செலவில், பல்முக மருத்துவமனையாகத் தரமுயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. பத்து கால்நடை மருந்தகங்கள் ரூ.0.96 இலட்சம் செலவில் கால்நடை மருத்துவமனைகளாகத் தரமுயர்தப்பட் உள்ளன.
3. பாளையங்கோட்டை கால்நடை மருத்துவமனைக்கு ரூ.9.00 இலட்சம் செலவில் 'எக்ஸ்ரே' கருவியும், அறுவை சிகிச்சைக்கூடமும் அமைத்து மருத்துவமனையின் வசதிகள் பலப்படுத்தப்பட உள்ளன.
4. கோயம்புத்தூர் பல்முக மருத்துவமனையில் சிறிய பிராணிகள் அறுவை சிகிச்சைக்கூடம் ரூ.3.50 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்றும் பல்முக மருத்துவமனை வளாகத்தில் உள்ள் காலியான பொலிகாளை கொட்டகையினை புனரமைப்பு செய்து எக்ஸ்ரே பிரிவு, இருட்டறை ஆகியவை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
5. இராணிப்பேட்டை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவில் நாய்களின் வெறிநோய் தடுப்பூசி தயாரிப்புப் பிரிவினை, ரூ.42.50 இலட்சம் செலவில் வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6. வேலையற்ற கால்நடை மருத்துவ பட்டதாரிகள் தனியாக மருத்துவ நிலையங்களை அமைத்துப் பணியாற்ற உதவிட ரூ.10.00 இலட்சம் விளிம்புத் தொகையாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
7. கால்நடைப் பராமரிப்புத்துறை மூலம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான 47.000 கலப்பினக் கிடேரிக் கன்றுகளை தத்தெடுத்து அவற்றை சிறந்தமுறையில் தரமான பசுக்களாக வளர்க்க உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்

1. முன்னுரை

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் 12.7.1973-ஆம் ஆண்டு ஒரு அரசு நிறுவனமாக ரூ.100/- இலட்ச மூலதனத்துடன் துவங்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.200 இலட்சங்களாக 1991-ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.109.81 இலட்சமாகும்.

2. தற்போதைய நடவடிக்கைகள்

முட்டையிடும் கோழிக் குஞ்சுகள், கறிக்கோழிக் குஞ்சுகள், கோழித் தீவனம், உற்பத்தி செய்து விற்பதிலும் மற்றும் முட்டை, கோழி, கோழிக்கறி, ஆட்டு இறைச்சி விற்பனையிலும் ஈடுபட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இறைச்சிக் கூடங்கள் டாப்கோவால் குத்தகை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன.

டாப்கோவின் கீழ் இயங்கி வரும் பிரிவு அலுவலகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. குஞ்சு பொரிப்பகங்கள்

அரசூர் (கோயம்புத்தூர் மாவட்டம்)

கப்பலூர் (மதுரை மாவட்டம்)

கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

அனுப்பன்குளம் (காமராஜர் மாவட்டம்)

2. தீவன கலவை நிலையங்கள்

நந்தனம், சென்னை-35.

கப்பலூர், மதுரை மாவட்டம்)

3. தாது உப்பு கலவை நிலையம்

சேஷன்சாவடி, சேலம் மாவட்டம்)

4. விற்பனை நிலையங்கள்

சென்னை

திருச்சிராப்பள்ளி

மதுரை

கோயம்புத்தூர்

சேலம்

நாமக்கல்

5. இறைச்சிக் கூடங்கள், சென்னை

பெரம்பூர்

சைதாப்பேட்டை

வில்லிவாக்கம்

3. திட்ட சாதனை

(அ) கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள்

உற்பத்தி செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகள்

ஆண்டு	கோழிக்1 குஞ்சுகளின் எண்ணிக்கை (இலட்சங்களில்)	மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்)
1992–93	*22.63*	*133.60*
1993–94	*25.70*	*149.10*
1994–95 (1/95 வரை)	*25.68*	*152.26*

(அ) கோழித் தீவனங்கள் கலவை நிலையங்கள்

ஆண்டு	உற்பத்தி (மெட்ரிக் டன்களில்	மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்)
1992–93	*3474*	*175.70*
1993–94	*2536*	*160.50*
1994–95 (1/95 வரை)	*2138*	*150.65*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 19]

மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் சென்னை அருகே காட்டுப்பாக்கத்தில் 21.00 இலட்ச ரூபாய் செலவில் 8 மணி நேரத்தில் 50 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி திறன் கொண்ட நவீன தீவன கலவை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (மத்திய அரசு நிதி மற்றும் டாப்கோவின் பங்கு 50:50 ஆகும்.) கூடுதல் அடிப்படை வசதிகளுக்காக நிதி கேட்டு மாநில அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(இ). தாது உப்பு கலவை நிலையம்

டாப்கோ தீவனக் கலவை நிலையங்களுக்கு தேவையான தாது உப்புகள் சேலம் மாவட்டத்தின் அருகாமையிலுள்ள சேஷன்சாவடியில் அமைந்துள்ள தாது உப்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆண்டு	உற்பத்தி (மெட்ரிக் டன்களில்	மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்)
1992–93	91	3.67
1993–94	57	4.80
1994–95 (1/95 வரை)	48	3.28

(ஈ) விற்பனை நிலையங்கள்

விற்பனை நிலையங்கள், முட்டையிடும் கோழிக்குஞ்சு, கறிக்கோழிக் குஞ்சு, தீவனம் ஆகியவற்றை அருகாமையில் உள்ள பண்ணையாளர்களுக்கு விற்பதிலும், மற்றும் முட்டை, கோழி, ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி கொள்முதல் செய்து விற்பதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அனைத்து விற்பனை நிலையங்களின் செயல்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

		ஆண்டு 1992(1/95 வரை)		1993-94		1994-95	
எண்.	விற்பனை செய்த பொருள்கள்	எண்ணிக்கை	மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்	எண்ணிக்கை	மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்	எண்ணிக்கை	மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்
1.	முட்டை (இலட்சத்தில்)	180.00	157.70	1.38	146.30	98.00	110.00
2.	கோழி (இலட்சத்தில்)	1.94	58.50	1.13	40.20	0.58	25.24
3.	இறைச்சி (மெட்ரிக் டன்களில்)	84.00	39.50	86.00	48.20	0.56	35.32
4.	கோழிக்குஞ்சுகள் (இலட்சத்தில்)	14.42	129.60	14.70	108.55	11.06	101.38
5.	தீவனம் (மெட்ரிக் டன்களில்	12.31	65.65	5.33	26.45	506.00	31.36

(2) இறைச்சிக்கூடம்

தமிழ்நாடு இறைச்சிக் கழகம் டாப்கோவுடன் இணைக்கப்பட்டதால், இறைச்சிக் கழகத்தின் கீழ் இயங்கி வந்த சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மூன்று இறைச்சிக் கூடங்கள் தற்போது டாப்கோவின் கீழ் இயங்கி வருகின்றன.

பெரம்பூரில் உள்ள இறைச்சிக் கூடத்தில் ஆடு மற்றும் மாடுகள் வெட்டப்படுகிறது. சைதாப்பேட்டை மற்றும் வில்லிவாக்கம் இறைச்சிக் கூடத்தில் ஆடுகள் மட்டும் வெட்டப்பட்டு சென்னை மாநகர நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் வெட்டப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	ஆடுகளின் எண்ணிக்கை	மாடுகளின் எண்ணிக்கை
1992-93	8,12,629	51,827
1993-94	9,46,921	60,372
1994-95 (1/95 வரை)	5,35,663	47,487

பரிசீலனையிலும் / செயலாக்கத்திலும் உள்ள திட்டங்கள்

(1) மேற்கு தொடர்ச்சி மலை முன்னேற்றத் திட்டத்தின் கீழ் ரூ.32.45 இலட்சத்தில் கோழிக்குஞ்சுப் பொரிப்பகம் ஒன்றின் கட்டுமான பணிகள் அகஸ்தீஸ்வரம் கிராமம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

(2) மத்திய அரசு நிதி உதவியுடன் கூடிய திட்டத்தின் கீழ் (மத்திய அரசு மாநில அரசு நிதி விகிதம் 50:50) இந்திய அரசு ரூ.98.00 இலட்சங்களை பெரம்பூரில் உள்ள இறைச்சிக் கூடத்தை நவீனப்படுத்த அனுமதித்துள்ளது. அதற்கான பணிகள் இறைச்சிக் கூடத்தை எந்த நிறுவனம் நடத்துவது என்று முடிவு செய்த பின்பு தொடரப்படும்.

(3) மத்திய அரசு 100 சதவீதம் நிதி உதவியுடன் இறந்த கால்நடைகளின் உடலை பதப்படுத்தவும், அதை சார்ந்த மற்ற பொருள்கள் தயாரிக்கவும் தேவையான இயந்திரக் கூடம் சென்னையில் அமைக்க ரூ.107.75 இலட்சம் அனுமதித்துள்ளது. மத்திய அரசு, முதன் தவணையாக ரூ.22.75 இலட்சத்தை விடுவிக்க ஆணை பிறப்பித்துள்ளது.

(4) டாப்கோ நிறுவனம் 100 சதவீதம் மத்திய அரசு நிதி உதவியுடன், பன்றிப் பண்ணை ஒன்று செங்கல்பட்டில் அமைக்க ஆலோசித்து வருகிறது.

நிதி நிலைமை

இந்நிறுவனம், 31.3.1994 முடிய ரூ.147.96 இலட்சங்கள் (உத்தேசமான) நட்டமடைந்து உள்ளது. அதற்கான முக்கிய காரணங்கள்:

1) திறன் அளவுக்கு தீவனக் கலவை நிலையங்களை பயன்படுத்தாதது.

2) குஞ்சு பொரிப்பின் விழுக்காடு குறைவு, மற்றும் உற்பத்தி விலை அதிகரிப்பு

3) தேவையான அளவுக்கு விற்பனை நிலையங்கள் விற்பனை செய்யாதது.

4) தலைமை மற்றும் பிரிவு அலுவலகங்களுக்குள்ள தேவைக்கு அதிகமான ஊழியர்கள் மற்றும் ஊதிய செலவுகள்.

ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்க டாப்கோ 'தன்னிச்சை ஓய்வு திட்டத்தை' அமுல்படுத்த பரிசீலனை செய்து வருகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆசியாவிலேயே முதல் முறையாக 20-09-1989 அன்று உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

அ. கால்நடை மருத்துவம், விலங்கு அறிவியல் மற்றும் மீன் வளத்திலுள்ள பல்வேறு கிளைகளில் சிறந்த கல்வியை அளித்திடுவது;

ஆ. கால்நடை மருத்துவம், விலங்கு அறிவியல் மற்றும் மீன் வளத்தில் ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவது;

மற்றும்

இ. அரசு மற்றும் பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக அறிவியல் நுட்பங்களை வழங்குவது;

இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல், மீன் வளம் மற்றும் அடிப்படை அறிவியல் ஆகிய மூன்று புலங்களைக் கொண்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகம் மூன்று கல்லூரிகளையும் (இரண்டு கால்நடை மருத்துவம் மற்றும் ஒரு மீன் வள கல்லூரி), ஆறு ஆராய்ச்சி நிலையங்களையும், ஒரு மைய பல்கலைக்கழக ஆய்வகம், பறவையின் நோய்க்கான் ஆய்வகம், கால்நடை தீவன ஆராய்ச்சி ஆய்வகம், 16 பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் மற்றும் ஒரு வேளான் அறிவியல் நிலையத்தையும் கொண்டுள்ளது.

கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் மூன்று கல்லூரிகள் முறையே சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் மற்றும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி முதலியவை செயல்பட்டு வருகின்றன.

1995 ஏப்ரல் 19]

இப்பல்கலைக் கழகத்தில் இரண்டு இளம் அறிவியல் பாடங்கள் முறையே இளங்கலை கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் இளங்கலை மீன் வள அறிவியல். 21 துறைகளில் கால்நடை மருத்துவ அறிவியல் பட்ட மேற்படிப்பும் ஆறு துறைகளில் மீன்வள அறிவியல் பட்ட மேற்படிப்பும், முனைவர் பட்டப் படிப்புகள் 19 துறைகளில் கால்நடை மருத்துவ அறிவியலிலும், மூன்று துறைகளில் மீன்வள அறிவியலிலும் அளிக்கப்பட்டு வருகின்றனது. இதைத் தவிர கால்நடை மற்றும் மீன் வள வணிகம் மற்றும் மேலாண்மையில் பட்டயப் படிப்பும் அளிக்கப்பட்டு வருகின்றன. இளங்கலை கால்நடை மருத்துவ அறிவியலில் 226 மாணவர்களும் இளங்கலை மீன்வள அறிவியலில் 25 மாணவர்களும், முதுகலை கால்நடை மருத்துவ அறிவியலில் 151 மாணவர்களும், முதுகலை மீன்வள அறிவியலில் 15 மாணவர்களும், கால்நடை மருத்துவ அறிவியலில் முனைவர் பட்டப் படிப்பிற்கு 97 மாணவர்களும் மீன்வளத் துறையில் 13 மாணவர்களும் படிப்பதற்கான வசதிகள் உள்ளன. 944 மாணவர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும், 484 மாணவர்கள் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லிலும், 98 மாணவர்கள் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியிலும் கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்களுள் 638 மாணவர்கள் தமிழ்நாடு அரசு, இந்திய அரசு மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். மொத்தம் 1,526 மாணவர்களுள் 324 பேர் மாணவியர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இனிவரும் ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையில் மாணவியர்கள் சேர்ந்து படிப்பதற்கு வகை செய்யும் பொருட்டு மாணவியர்களின் சேர்க்கை எண்ணிக்கை 25லிருந்து 30 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. தற்பொழுது 324 மாணவியர்கள் பல்வேறு பிரிவுகளில் பயின்று வருகின்றார்கள். இவர்களுக்கென்று போதுமான அளவு மாணவியர்கள் விடுதி கட்டுவதற்கு கடந்த நிதியாண்டில் (1994-95ல்) அரசால் ரூ. 10.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியில் உள்ள மாணவியர்கள் விடுதியில் இன்னும் கூடுதலான ஒரு மேல்தளம் அமைக்கப்படுகிறது. மேலும் நடப்பு நிதியாண்டில் (1995-96ல்) மாணவியர்கள் விடுதி கட்டுவதற்கு அரசால் ரூ. 18.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி

தமிழ்நாடு அரசு, இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி

கழகங்கள் மூலம் நிதி உதவி பெற்று பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை இப்பல்கலைக் கழகம் செயல்படுத்தி வருகின்றது. இந்த் ஆராய்ச்சித் திட்டங்களின் முக்கியமான குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) தற்போது உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்தி புதிய இனங்களை உருவாக்குதல்.

(ஆ) புதிய தரமான தீவன வகைகளை கால்நடைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காகக் கண்டறிதல்.

(இ) நவீன தடுப்பூசி மற்றும் நோய் காரணிகளின் மூலம் கால்நடைகளின் நலத்தைப் பேணுதல்.

(ஈ) கால்நடை விளைபொருள்களின் சேமிப்பு காலத்தை புதிய பின் அறுவடைத் தொழில் நுட்பங்களின் மூலம் அதிகரித்தல்.

(உ) கால்நடை கழிவுப் பொருட்களை கால்நடை மற்றும் மீனகளுக்கு தீவனமாக மாற்றுதல்.

(ஊ) மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்வது இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆராய்ச்சிகள் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன:

(1) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லி

இந்த ஆராய்ச்சிக் கழகம் 11 ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கின்றது. அவையாவன:

(அ) நாமக்கல்லில் காங்கேய இன மாடுகளை பாதுகாப்பது பற்றிய ஆராய்ச்சி.

(ஆ) தோடர் இன எருமைகளை பாதுகாப்பது பற்றிய ஆராய்ச்சி.

(இ) பன்றி இறைச்சி மற்றும் இறைச்சி பொருட்களில் நுண்ணுயிரிகளைப் பற்றி ஆராய்வதன் மூலம் அவற்றின் தரத்தை உயர்த்தி நுகர்வோர் விருப்பத்திற்கேற்ப அளிப்பது.

(ஈ) வேளாண் காடுகளில் காணப்படும் தேவையற்ற விதை மற்றும் இலைகளை கோழிகளுக்கு தீவனமாக அளிப்பது பற்றிய ஆராய்ச்சி.

(உ) வேளாண் காடுகளில் காணப்படும் மரங்களின் மருத்துவ

உபயோகம் பற்றிய ஆராய்ச்சி.

(ஊ) தமிழ்நாட்டில் பல்வேறு தட்பவெப்ப நிலைக்கேற்ப கால்நடை உற்பத்தியில் வேளாண் காடுகளின் பங்கு பற்றி திறனாய்வு.

(எ) தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டம் (பகுதி 2 திட்டங்கள்)

(ஏ) அறுவை சிகிச்சையின்றி மாடுகளில் கரு மாற்றம் செய்வதற்கான இணைத் திட்டம்.

(ஐ) செம்மறி ஆடுகளின் உயர் தர இனங்களைக் கண்டறிந்து அவைகளை உற்பத்தி செய்வதற்கான இணைத் திட்டம்.

(ஒ) அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தியப் பன்றிகளின் இறைச்சி உற்பத்தியை அவைகளுக்குத் தகுந்த கொட்டில் அமைப்பு, தீவனம் மறறும் இனச் சேர்க்கைகளின் மூலம் பெருக்குவது.

(ஓ) கால்நடை தீவனங்களில் நுண்ணூட்டச் சத்துக்களைப் பற்றி ஆராய்ந்து கால்நடைகளின் உற்பத்தியை பெருக்குவது பற்றிய இணைத் திட்டம்.

(2) உயிர் தொழில் நுட்பவியல் துறை

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் அங்கமான உயிர் தொழில் நுட்பவியல் துறை எட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகின்றது. அவையாவன:

(அ) உயிர் தொழில் நுட்பவியல் தகவல் அமைப்பின் உபயோகிக்கும் நிலையத்தை நிறுவி அதன் மூலம் தேசிய இணைப்பின் மூலம் கணிப்பொறி தகவல் கூறுதிரள் (data base) உருவாக்குவது மற்றும் அறிவியல் தகவல்களை பெறுவது மற்றும் மற்றவர்களுக்கு அளிப்பது.

(ஆ) இறைச்சிக் கோழி உற்பத்தி தொழில் நுட்ப பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணையாளர்களை புதிய முறைகளைக் கடைபிடிக்கச் செய்து, தீவன மாற்று விகிதத்தை 2:1:1:–ல் இருந்து 18:1 ஆக குறைத்து கறிக் கோழிகளின் எடையை 18ல் இருந்து இரண்டு கிலோவாக ஏழாவது வாரத்தில் உயர்த்துவது மறும் பெண் பண்ணையாளர்களை கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் விற்பனை

உத்திகளை பெருக்குவது.

(இ) சில முக்கியமான கோழி நோய்களுக்குத் தடுப்பூசி மற்றும் நோய் காணும் சாதனங்களை தயாரித்து அளிப்பது.

(ஈ) நாய்களில் காணப்படும் நச்சுயிரி நோய்களை கண்டறிவதற்கு நோய் காண் சாதனங்கள் தயாரிப்பது.

(உ) மாட்டின் அசை உண் வயிற்றிலுள்ள நுண்ணுயிரிகளை தகுந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது.

(ஊ) உயிர் தொழில் நுட்பவியல் மூலம் தாவர திசு வளர்ச்சியின் மூலம் வேளாண் காடுகளில் வளர்க்கப்படும் மரங்களைப் பெருக்குவது பற்றிய ஆராய்ச்சி.

(எ) இறால் மீன்களில் காணப்படும் நச்சுயிரி நோய்களை கண்டறிவதற்காக ஒரு நோய் காண் சாதனம் தயாரித்தல்.

(ஏ) இறால்களில் காணப்படும் நுண்ணுயிரி நோய்களை ஆராய்ந்து அவைகளை தடுப்பதற்கான முறைகளைக் கண்டறிதல்.

(3) அணு எரிசக்தித் துறை, இந்திய அரசு, பம்பாய்.

இந்தத் துறை மூன்று ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது. அவையாவன:

(அ) கால்நடைகளில் காணப்படும் வெக்கை நோய் மற்றும் பிபிஆர் நச்சுயிரிகளின் புரதங்களை ஆராய்தல்.

(ஆ) மாடுகளின் வளர்ச்சி நாளமில்லா சுரப்பிக்கு ஓரின எதிர் காரணி தயாரித்தல்.

(இ) மனிதன் மற்றும் ஆட்டின புரோலக்டின் (சிசுச்நூஹஷபீகூபி) சுரப்பிற்கு ஓரின எதிர்காரணி தயரித்தல்.

(4) தேசி பட்டு வாரியம்

இந்த வாரியம் பட்டுப் பூச்சி கூடு மற்றும் பட்டு வளர்ப்பியல் உப பொருட்களை கோழிகளுக்கு தீவனமாக அளிப்பதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிவதற்காக நிதியுதவி அளிக்கிறது.

1995 ஏப்ரல் 19]

(5) தேசிய தரிசு நில அபிவிருத்தி வாரியம்

இந்த வாரியம் மூன்று திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது. அவையாவன:

(1) வேளாண் காடுகளின் தொழில் நுட்ப விரிவாக்கம். கால்நடை மற்றும் மீன்வளம் பற்றிய செயல் ஆராய்ச்சி திட்டம்.

(2) வேளாண் காடுகளின் தொழில் நுட்ப விரிவாக்கம் வாத்து, கினி கோழி, வான்கோழி மற்றும் மீன் பற்றிய செயல் ஆராய்ச்சித் திட்டம்.

(3) வேளாண் காடுகள் வளர்ச்சபு செயல் ஆராய்ச்சித் திட்டம் மறறும் பயிற்சி.

(6) பல்கலைக் கழக மானியக் குழு.

பல்கலைக் கழக மானியக் குழு பால், தாய்ப்பால் மற்றும் குழந்தை உணவில் காரீயத்தை கண்டறிவதற்கான திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது.

(7) இந்திய அரசு அறிவியல் மறறும் தொழில் நுட்ப அமைச்சகம்

விவசாயிகளுக்கு தேசிய தட்பவெட்ப நிலை முன்னறிவிப்பு நிலையம் அமைப்பதற்காக நிதியுதவி அளிக்கின்றது.

(8) தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கழகம்.

இந்த கழகம் மூன்று திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது. அவையாவன:

(அ) செயற்றை முறை இனவிருத்தி மூலம் ஆடுகளின் உபயோகத்தை அதிகரிக்கும் செயல் ஆராய்ச்சித் திட்டம்.

(ஆ) சத்துள்ள விலை குறைந்த பாலை தயாரிக்கும் முறைகளை கண்டறிவதற்காக.

(இ) மீன்களில் காணப்படும் 'epizootic ulcerative syndrome' என்ற நோயைக் கண்டறிந்து அவற்றின் தடுப்பு முறையை கண்டறிவதற்காக.

(9) மீன்வளத்துறை தமிழ்நாடு அரசு

கழிவு நீரில் மின் வளர்க்கும் திட்டத்திற்காக இந்தத் துறை நிதியுதவி அளிக்கின்றது.

(10) சுற்றுப்புறச்சூழல் மற்றும் காடுகள்

அமைச்சகம்-இந்திய அரசு

திமிங்கலம், கடல்பன்றிகளின் உயிரியல் வேறுபாடுகளை கண்டறிவதற்கான திட்டத்திற்கு இந்த அமைச்சகம் நிதியுதவி அளிக்கின்றது.

(11) பெருங்கடல் வள மேம்பாட்டுத் துறை இந்திய அரசு

தென்கிழக்கு கடற்கரையோரப் பகுதிகளில் பெருங்கடல் நண்டு பற்றிய (lobster) ஆராய்வதற்காக நிதியுதவி அளிக்கின்றது.

12) தேசிய பால் வள அபிவிருத்தி வாரியம்

பாலில் பூஞ்சகாளான் (aflotoxin m.1) நஞ்சை கண்டுபிடிப்பதற்காக இந்த வாரியம் நிதியுதவி அளிக்கின்றது.

13) அமெரிக்க அரசின் வேளாண்மை துறை

எதிர்காரணிகள் ஊக்குவிக்கும் டஃப்ட்சின் (பீயுகிபீசூகூபி) மற்றும் ஆர்.என்.ஏ.வி.யின் செயல்திறனை கோழிகளில் கண்டறிவதற்காக அமெரிக்க அரசின் வேளாண்மைத் துறை நிதியுதவி அளிக்கின்றது.

14) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

வங்காள விரிகுடா திட்டத்தின் கீழ் கட்டு மரங்களில் மீன்களை ஏற்றி வருவதற்கு தகுந்த முறையில் பதனம் செய்யப்பட்ட பெட்டிகளை உருவாக்குவதற்கு நிதியுதவி அளிக்கின்றது.

15) ஆசிய மீன் வளக் கழகம்

இறால்களில் காணப்படும் Vibrios என்ற நுண்ணுயிரியை கண்டறிவதற்காக நிதியுதவி அளிக்கின்றது.

16) உலக நல கழகம்

வெறி நோய்க்கு வாய் மூலம் அளிக்கப்படும் தடுப்பு மருந்திற்கான தகுந்த கவர்ச்சிப் பொருளை (bait) கண்டறிவதற்கான திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது.

17) சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் (SPIC)

தன்னுடைய தொழிற்சாலையில் இருந்து கடலில் விடப்படும் மாசு பொருள்களின் காரணமாக ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் மாற்றங்களைக் கண்டறிவதற்கான திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது.

18) இந்தியன் வங்கி

தான் தத்தெடுத்துள்ள கிராமப்புறங்களில் கால்நடை இன அபிவிருத்திக்கான திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கின்றது.

19) பல்கலைக்கழக திட்டமிடப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள்

இந்தப் பல்கலைக்கழகம் கல்வி, கால்நடை, உற்பத்தி, கால்நடை நலம், மீன் உற்பத்தி, மீன் நலம், மீன் தொழில்நுட்பம், பின் அறுவடை தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் 94 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது. இந்த ஆராய்ச்சித் திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவையாவன:

(அ) கால்நடை மற்றும் விலங்கு அறிவியல்

கல்விக்கான திட்டங்களைத் தவிர இப்பல்கலைக்கழகத்தில் காளைகளில்ன் ஆண்மை குறைவு. கதிரியக்க ஐசோடோப்புகள், திசுவியல் மற்றும் திசு வேதியியல், சைனஸ் புற்றுநோய், மாடுகளில் தைலேரியா நோய், ஒட்டுண்ணி நோய்கள் பரவும் முறை, இறைச்சியில் தரக் கட்டுப்பாடு, பால் நிலையம், தீவன தரக்கட்டுப்பாடு நிலையம், இறைச்சி முயல் வளர்ப்பு, செல்லுலோஸ் கழிவுப் பொருட்களை உபயோகப்படுத்துவது மற்றும் வேளாண்மைத் தகவல் தொடர்பகம் அமைப்பது ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) மீன்வள அறிவியல்

கல்வித் திட்டங்களைத் தவிர, புகை மூலம் பதப்படுத்தப்பட்ட மீன்களைத் தயாரித்தல், மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்வது, கோழியுடன் மீன் வளர்ப்பு, மீன்களை பதப்படுத்துதல், மீன் பண்ணை மேம்பாடு, நன்னீர் இறால் குஞ்சு பொறிப்பகம், உவர் நீர் சிப்பி மீன் வளர்ப்பு மற்றும் உற்பத்தி, கெண்டை மீன் உற்பத்தி, மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விரிவாக்கக் கல்வி

பதினாறு பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள், நான்கு மீன் வள மையங்கள் மூலம் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் பண்ணையாளர்களுக்கும் புதிய தொழில் நுட்ப முறைகளானது அவர்களின் முன்னேற்றத்திற்காக அளிக்கப்பட்டு வருகின்றது. மற்றும் இந்த நிலையங்களில் நல்ல ஆய்வக வசதி இருப்பதன் காரணமாக தீவனங்களை பகுப்பாய்வதற்கும், பல்வேறு சோதனைகள் நடத்துவதற்கும், கொடிய நோய்களைக் கண்டறிவதற்கும் முடிகின்றது. பண்ணையாளர்களின் அறிவைப் பெருக்குவதற்காக பல்வேறு பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்த்தித்தாள்களின் மூலம் புதிய தொழில்நுட்பங்கள் ஆய்வகத்திலிருந்து பண்ணையாளர்களைச் சென்று அடைகின்றது. பண்ணையாளர்களை மாணவர்களாகக் கொண்டு பண்ணை வானொலி பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பண்ணையாளர்கள், மாணவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்களுக்காக கால்நடைக் கதிர், பல்கலைக்கழக செய்தி மடல், ஆங்கிலத்திலும், தமிழிலும் மற்றும் ஐைகுக்கூசுச்பிை எனப்படும் அறிவியல் ஆராய்ச்சி இதழ்களும் வெளியிடப்படட்டு வருகின்றன.

கடந்த வருடத்தில் 9,326 பண்ணையாளர்களுக்கு (5,891 ஆண்கள் மற்றும் 3,435 பெண்கள்) பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கோழி உற்பத்தியில் ஒரு பயிற்சி முகாம் படித்த வேலையிலுள்ள வேலையற்றவர்களுக்காக நடத்தப்பட்டது. 304.52 ஹெக்டேர் தனியார் மற்றும் பொது நிலங்களில் வேளாண் காடுகள் வளர்க்கப்பட்டன. வேளாண் காடு வளர்ப்பில் 2,507 பண்ணையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திட்டம் மற்றும் வளர்ச்சி

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ.29.45 கோடி அளிக்கப்பட்டுள்ளது. ரூ.93.15 இலட்சம் புது ஆராய்ச்சித் திட்டங்களுக்காக அளிக்கப்பட்டது. 1995-96ல் ரூ.20.45 இலட்சம் புது ஆய்வுத் திட்டங்கள் தொடங்குவதற்காக மற்றும் மாணவியர்களின் விடுதி தொடங்குவதற்காக மற்றும் மாணவியர்களின் விடுதி கட்டுவதற்காக பகுதி-2 திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

சாதனைகளும் ஆய்வு முடிவுகளும்

காட்டுப்பாக்கம் சிகப்பு எனப்படும் ஒரு புதிய ஆட்டினம் வெளியிடப்பட்டது. இந்த ஆட்டினம் கறி உற்பத்தி செய்யும் வகையைச் சார்ந்தது ஆகும். மற்றும் இந்த ஆட்டினம் 12 மாத காலத்தில் 21.57 கிலோ எடையை அடையத்தக்கதாகும்.

காட்டுப்பாக்கம் வெள்ளை எனப்படும் ஒரு பன்றியினம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பன்றியினம் 75 கிலோ எடையை 210 நாளில் அடையும். மற்றும் இதன் இறைச்சியானது உயர்ந்த தரமுள்ளதாக இருப்பதால் ஏற்றுமதிக்குத் தகுதியானது.

பளபளக்கும் உயரின சண்டை மீன் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த மீன் மின்னும் பச்சை ஊதா மற்றும் கருநீல நிறங்களைக் கொண்டது.

கோழிகளில் காணப்படும் கும்போரா நோயைக் கட்டுப்படுத்த செலவு குறைந்த எண்ணெய் ஊக்கிப் பொருள் கொண்ட ஓர் தடுப்பு மருந்து வெளியிடப்பட்டுள்ளது. இந்த தடுப்பு மருந்திற்கான நச்சுயிரி, நாமக்கல்லிலிருந்து பெறப்பட்டது.

நாய்களில் வெறி நோயைக் கண்டறிவதற்காக ஒரு நோய்காண் சாதனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மீன் ஓமப்பொடி மற்றும் **மீன்** பிஸ்கெட் போன்ற சத்துள்ள உணவுப் பொருட்கள் தேவையற்ற மீன்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளன.

கறவை மாடு வளர்ப்பு மற்றும் ஊறுகாய் புல் தயாரிப்பு பற்றிய ஒலி ஒளிப் பேழைகள் பண்ணையாளர்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

சிறுநீரக மாற்று சிகிச்சை நடத்தப்பட்ட நோயாளியிடமிருந்து மஞ்சள் காமாலை உருவாக்கும் கக்சிபீச்சூசிகூசுஹ என்ற நுண்ணுயிரியானது சிறுநீரகம் தானம் செய்வதரிடமிருந்து வந்தது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

உயர்தர ஆராய்ச்சி மையம் ஒன்று கோழி அறிவியலில் நாமக்கல் கால்நலை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

உயர்தர ஆராய்ச்சி மையம் ஒன்று நோய் தீர்ப்பியல் துறையில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் தொடங்கப்பட்டுள்ளது.

APHCA எனப்படும் சர்வதேச அமைப்பு இந்தப் பல்கலைக்கழகத்தை அங்கீகரித்து ஒரு சர்வதேசக் கருத்தரங்கை கோழி நோய்களைக் கண்டறிதல், குறிப்பாக கும்போரா நோயைக் கண்டறிய நடத்தும் வாய்ப்பை அளித்துள்ளது.

ரிஃப்ட் பள்ளத்தாக்கு காய்ச்சல் எனப்படும் நோய் முதன்முறையாக கண்டறியப்பட்டுள்ளது.

பாக்குலோ நச்சுயிரி பண்ணையில் வளர்க்கப்படும் இறால் மீன்களில் இருந்து ஏற்பட்ட நோயிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

வெக்கை நோய் முதன்முறையாக வெள்ளைப் பன்றிகளில் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

வெக்கை நோய்க்கான தடுப்பூசி போடப்பட்ட சிறிய அசைபோடும் விலங்கினங்கள், **வெக்கை நோய் தடுப்பூசிக்கு பயன்படுத்தப்படும் நச்சுயிரியை வெளியேற்றுவது** முதன்முறையாக கண்டறியப்பட்டுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

(அ) கல்வி

உயிர் தொழில் நுட்பவியல் துறையில் பட்ட மேற்படிப்பு இந்திய அரசாங்கத்தின் உயிர் தொழில் நுட்பவியல் துறையிடமிருந்து நிதியுதவி பெற்று துவங்கப்பட உள்ளது. மற்றும் இந்த பட்ட மேற்படிப்பிற்கு அனைத்திந்திய அளவில் நுழைவுத் தேர்வும் நடத்தப்படவுள்ளது. இந்தியாவிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக அமைப்புகளிலே முதன் முறையாக இத்தகைய படிப்பு இந்தப் பல்கலைக்கழகத்தில் துவங்க இருப்பது சிறப்பு அம்சமாகும்.

வன விலங்குப் பராமரிப்பில் பட்ட மேற்படிப்பு துவங்கப்பட உள்ளது.

கால்நடை மருந்தியல் மற்றும் பால்பொருள் தொழில்நுட்பத்தில் பட்டயப் படிப்பு துவங்குதல்.

(ஆ) ஆராய்ச்சி

(1) கால்நடை மற்றும் கோழிகளைத் தாக்கும் நச்சுயிரினகளின் அணுத்திரள் சார்ந்த உயிரியல்.

(2) மீன்களில் நோய்களை உருவாக்கும் நுண்ணுயிரிகளை பகுத்து ஆராய்வது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(3) புது வகையான பால் மற்றும் பால் பொருட்களை உற்பத்தி செய்வது.

(4) தற்போதுள்ள தீவனப் பயிர்களின் தரத்தை உயர்த்துவதன் மூலம் தீவன உற்பத்தியைப் பெருக்குவது.

(இ) விரிவாக்கம்

(1) மாடு, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி பராமரிப்பு பற்றிய ஒலி ஒளிப்பேழைகள் வெளியிடுவது.

(2) வேளாண் அறிவியல் மையங்கள் தொடங்குவது.

உலக வங்கி நிதியுதவி

மனித வள மேம்பாட்டிற்காக உலக வங்கியிடம் நிதியுதவி பெறும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்ட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் கல்லூரி ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்கும் மற்றும் கல்லூரியிலுள்ள வசதிகளைப் பெருக்கவும் ரூ.23,89,16,600.00 செலவிடப்பட உள்ளது. இத்திட்டம் அரசு வேளாண்மைத் துறை மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்த்'ன் பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS